# மாவடியான் திரு



மீசாலை - திருநீல கண்ட

வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில்

# கும்பாபிஷேக மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLI LIBRARY
JAFFNA

3 1 DEC 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



மீசாலை

திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில்

# மாவடியான் திரு

# கும்பாபிஷேக மலர் - 2010

தொகுப்பாசிரியர்:

கனகலிங்கம் சோமசேகரம்

வெளியீடு:

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில்
தர்மகர்த்தா சபையினர்

**05.11.2010**


6098(P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **'மாவடியான் திரு'** |
| | | மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில், 'கும்பாபிஷேக மலர் - 2010' |
| நூலின் தன்மை | : | ஆலய விடயங்கள், கும்பாபிஷேகம், கட்டுரைகளின் தொகுப்பு. |
| தொகுப்பாசிரியர் | : | கனகலிங்கம் சோமசேகரம் |
| | | (நிர்வாக உறுப்பினர், தர்மகர்த்தா சபை) |
| நூலின் பருமன் | : | B4 |
| பக்கங்கள் | : | xxxii + 300 |
| தாளின் தன்மை | : | 100gsm மற் ஆட் பேப்பர் |
| வெளியீடு | : | தர்மகர்த்தா சபையினர் |
| மலருக்கான படப்பிடிப்பு | : | வே.தர்சகுகன், 'ஸ்ரார் டிஜிற்றல் வீடியோ அன் போட்டோ' |
| | | அல்லாரை வீதி, மீசாலை. |
| பிரதிகள் | : | 1000 |
| அச்சுப் பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ், கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| | | தொ.பே.இல. 0094 21 222 2717 |
| பதிப்புரிமை | : | தர்மகர்த்தா சபை, மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் |
| விலை | : | 1000/= |
| *ISBN* | : | 978-955-0414-00-0 |
| Magazine Title | : | **'Mavadiyan Thiru'** |
| | | Meesalai Thiruneelakanda Vellai Mavadi Pillaiyar Kovil |
| | | 'Kumbabiseka Malar - 2010' |
| Type of Magazind | : | Temple details, Kumbabisekam, Essays collection |
| Editor | : | Kanagalingam Somasegaram |
| | | *(Admistative Member, Tharmakartha Sabai.)* |
| Book Size | : | B4 |
| Pages | : | xxxii + 300 |
| Paper Weight | : | 100gsm Art Mat Paper |
| Publication | : | Tharmakartha Sabai |
| Magazine Photographer | : | V.Tharsakugan, 'Star Digital Vedio & Photo' |
| | | Allarai Road, Meesalai. |
| Copies | : | 1000 |
| Printers | : | Harikanan Printers, K.K.S. Road, Jaffna. |
| | | T.P.No: 0094 21 222 2717 |
| Copyright | : | Tharmakarthasabai, Meesalai, Thirunelakanda Vellai Mavadi Pillayar Kovil |
| Prize | : | 1000/= |
| ISBN | : | 978-955-0414-00-0 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02.06.2010 எண்ணெய்க்காப்புத் தினத்தன்று பெறப்பட்ட மூலவரின் திருவுரு.



**வெள்ளை மாவடியின் முதல்வனே திருநீலகண்டப்**
**பிள்ளையா ரேகள்ளமிலா மெய்யடியார் - அல்லலெலாம்**
**களைந்தாட் கொண்டருளும் கற்பகமே பிறவித்**
**தளையறுத்துக் காத்தருள்வாய் கனிந்து.**

பொதுசன நூலக
யாழ்ப்பாணம்.

*- பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை*

மூலவரின் தொன்மை பற்றிய ஆரம்பக்கட்ட ஆய்வில் (பல்லவர்காலம்) கி.பி 7 - கி.பி 9 நூற்றாண்டைச் சேர்ந்த விக்கிரகம் எனத் தெரிய வந்துள்ளது. இவ்வாய்வினை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா அவர்கள் தந்துதவி யுள்ளார்கள்.

*ஆய்வு விபரம் பக் : 41*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவின் கரு



**க. சோமசேகரம்**
தொகுப்பாசிரியர்
"மாவடியான் திரு"
கும்பாபிஷேக மலர் - 2010

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயக் கும்பாபிஷேக மலருக்கான பணி என்னைப் பொறுத்தவரை ஓர் உயரிய, அருள் நிறைந்த, மனதுக்கு இதமான, திருப்தி தருகின்ற ஒன்றாகும். ஆலயத்தின் அனைத்துப் பரிமாணங்களையும் இந்து சமயம் சார்ந்த ஆக்க முயற்சிகளையும், ஆவண, ஆய்வுக் கட்டுரைகளையும் பெற்று இந்நூலில் தொகுக்கக் கிடைத்தது எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

எமது ஆலய இராஜகோபுர (2006) கும்பாபிஷேக நிகழ்வை ஒட்டி ஒரு தொகுப்பை வெளியிட ஆரம்ப முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போது சில தடங்கல்களால் அக்கைங்கரியம் நிறைவேறாமற் போனமையானது எனது மனதை உறுத்தும் விடயங்களில் முதன்மை வகித்ததாக இருந்து வந்துள்ளது. "எல்லாம் நன்மைக்கே" என்பதற்கிணங்க இராஜகோபுர விடயங்கள் சிலவற்றையும் இணைத்து இக் கும்பாபிஷேக மலரை வெளிக்கொணர கிடைத்த சந்தர்ப்ப மானது வெள்ளைமாவடியான் திருவருள் என்றே திடமாக நம்புகிறேன்.

04.06.2010இல் இனிதே நடந்தேறிய கும்பாபிஷேக தினத்தன்று கும்பாபிஷேக மலரொன்றை உருவாக்கி மாவடியான் திருப்பாத கமலங்களில் சமர்ப்பிப்பதற்கான எண்ணம் என்னுள் முனைப்புப்பெற்று செயலுருவம் பெற்று "மாவடியான் திரு" வாக மலராகி இருக்கின்றது.

உலக வரைபடத்தில், ஏன் இலங்கை வரைபடத்திற்கூட பிரத்தியேகமாகக் குறிக்கப் படாத ஓர் ஊர் முகமாலை. இன்று உலகின் நன்கு அறியப்பட்ட ஊராக மாறிவிட்டிருக்கிறது. தென்னந் தோட்டங்களும், பனைவளங்களும், மாஞ்சோலைகளும், கூடவே பற்றைக் காடுகளும் நிறைந்து இயற்கை சேர்ந்த அமைதியான முகமாலை இக்கணம்வரை எம்மிடம் இல்லை. ஆனால் முகமாலையில் இருந்து மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு வந்து வழிபாடியற்றிய அந்தச் சுகமான நினைவுகள் மட்டும் இன்றுவரை என்மனதிற் பசுமையாய் நிலைத்திருக்கின்றது. மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்துக்கும், முகமாலைக்கும் உள்ள வரலாற்றுத் தொடர்பைச் சரித்திரம் எடுத்து இயம்புகிறது.

எனது சிறு பராயத்தில் தந்தையாரின் பெற்றோர் காலத்தில் இருந்து ஊட்டி வளர்க்கப்பட்ட எமது குலதெய்வ வழிபாடு இன்று எனது மனம் முழுவதும் வியாபித்து விருட்சமாகியதைப் போன்றே மாவடியான் ஆலயமும் அன்றிருந்த நிலையில் இருந்து படிப்படியாகக் கும்பாபிஷேகங்களையும், புனருத் தாரணங்களையும் கண்டு ஒரு நிறைந்த நிலையில் இராஜ கோபுரத்துடன் நிமிர்ந்து எங்கள் யாவருக்கும் அருளாட்சி வழங்கிக் கொண்டு இருப்பதானது எம் யாவருக்கும் மகிழ்வுதரும் ஒரு இதமான விடயம் என்பதில் ஐயமில்லை.

மாவடியான் பாதத்தில் மணியகாரனாக, முகாமையாளராக, சேவையில் பொன்விழாக் கண்ட எனது பாட்டனார் அமரர் மணியகாரன் வி. சபாரத்தினம் அவர்கள் காலத்தே நான்பெற்ற ஆலய வழிபாட்டு முறைகள், அனுபவங்கள் இந்த மலர்த் தொகுப்பைச் சிறப்புடன் மேற்கொள்ள என்னை உந்தி இருப்பதாக நான் நம்புகின்றேன்.

மேலும் எனது தந்தையார் கனகலிங்கம் அவர்கள் காலத்தே ஆலயதர்மகர்த்தா சபையில் இணைந்து 1997 கும்பாபிஷேக, புனருத்தாரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணிச் சபையிலும், கும்பாபிஷேக மலர் உருவாக்கத்திற்கும் பங்காற்ற கிடைத்த வாய்ப் புக்கள் மூலம் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள் இக்கும்பாபிஷேக மலர் உருவாக்கம் பற்றிய என் கனவுக்கு உரமூட்டி இருக்கின்றன.


இம்மலர் காத்திரமான ஓர் ஆவணமாகத் திகழ வேண்டும் என்ற நோக்கிற் புதிதாக இணைக்கப்பட்ட விடயங்களையும், கடந்த கால நிகழ்வுகளையும், எதிர்கால எதிர்பார்ப்புக் களையும் உள்ளடக்கி என்னால் இயன்ற முயற்சிகள் செய்து தொகுத்துள்ளேன். எம்பெரு மான் அடியார்கள், மாணவர்கள், புலம்பெயர் வாழ் எம் உறவுகள், ஏனையோருக்கும் இம் மலரானது திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் அருட்டிறன்களை, செயற்பாடுகளை விபரிக்கும் ஒரு பொக்கிஷ மாகத் திகழும் என்பது நம்பிக்கை.

பெருத்த வேலைப் பழுக்களுக்கு மத்தியிலும் "மாவடியான் திரு" என்ற கும்பா பிஷேக மலர் உருப்பெறுவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி இன்று வரை மாவடியான் திருப்பணியே தங்கள் முழுமையான வாழ்வாகக் கொண்டு சேவைபுரியும் திரு.திருமதி இராமலிங் கம் தம்பதியர் எனது சிறப்பான நன்றிக்கும், மதிப்பிற்கும் உரியவர்கள். எம்பெருமானின் மேலான ஆசிகள் அவர்களுக்கு என்றும் கிட்டும்.

செயலூக்கம் கொண்டு சேவையாற்றும் தற்போதைய முகாமையாளருடன் எதிர்காலத் திலும் தோள்நின்று நாங்கள் யாவரும் கருத்தொரு மித்து ஆன்மீக, சரீர, நிதி உதவிகளை வழங்கி அன்புடன் இணைந்து மாவடியான் பாத சேவை செய்வதன்மூலம் எமது ஆலய வளர்ச்சிக்கு மட்டுமன்றி நாம் சார்ந்த சமூகத்திற்கும் பங்காற்ற முடியும்.

ஏதோ ஒரு வகையில் எங்களில் பெரும் பான்மையானோர் இடப்பெயர்வின் இன்னல் களை அனுபவித்தவர்கள். சிலருக்கு இதன் பரிமாணம் கூடிக் குறையலாம். அண்மைய அனர்த்த நிகழ்வுகளால் ஏங்கும் விழிகளுடன், ஏதிலிகளாக வாழும் எமது உடன்பிறப்புக் களையும் கவனத்தில் எடுப்போம். எதிர் காலத்தில் ஆலயப் பணியுடன் சமாந்தரமாக சமூகப் பணியையும் கவனங்கொண்டு செயலாற்ற மாவடியான் சந்நிதியில் திடசங்கற்பம் கொண்டு கைகோர்ப்போம். குறைந்தது எம்மாலியன்ற உதவிகளுடன் அவர்களின் வாழ்வு மீட்சி பெற எம்பெருமானை உள்ளன்போடு துதிப்போம்.

அன்பர்களே, சிறார்களே, இளைஞர்



களே, யுவதிகளே, அடியார்களே இக்கும் பாபிஷேக மலர் "மாவடியான் திரு" வெளிவரும் இத்தருணத்தில் அனைவரும் சமூகப்பணியே இறைபணி என்பதை மனதில் இருத்திப் பய னுடை வாழ்வை வாழத் தலைப்படுவோம்.

குடாநாட்டின் பால் அருள்புரிகின்ற அன்னதான, அபிஷேக, அலங்கார வேலவர்கள் போன்று இம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்று அருட் செறிவுடன் விளங்கும் மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயம் அடியவர்களுக்கு அற்புதமான அருமருந் தாக என்றும் நிலைத்திருக்கும் நீண்ட நாட்களாக என் கனவிலிருந்த கரு ("மாவடியான் திரு") கும்பாபிஷேக மலரூடாக இன்று உருவாகி இருக் கின்றது. மாவடியான் பாதக் கமலங்களுக்கு இந்நூலை அர்ப்பணஞ் செய்து அவரின் இஷ்ட சித்திகளைப் பெறுவோமாக.

*"வேழமுகத்தவனாம் வெள்ளை மாவடியான்*
*வெற்றிகள் தந்திடுவான், விக்கினங்கள் தீர்த்திடுவான்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுந்தருளி விநாயகர்...



பஞ்சமுக விநாயகர்...



வள்ளி, தெய்வானையுடன் சுப்பிரமணியர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**சமர்ப்பணம்**

**கனவின் கரு**

**ஆசிச் செய்திகள்** iii-xii

**சிவஸ்ரீ சி -சிதம்பரநாதக்குருக்கள்**
கல்வயல்.சாவகச்சேரி

**ஆலயப் பிரதம சிவாச்சாரியார் "கிரியா வித்தகர்"**
**சிவஸ்ரீ சி. கிருபாகரக்குருக்கள்**

**சிவத்திரு. பால.சிவலிங்கம் ஐயா.**
நித்திய அர்ச்சகர்.
மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலயம்.

சிவஸ்ரீ. க. கிருபானந்தக் குருக்கள்
தலைவர். அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபை

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

ஆறு.திருமுருகன்
தலைவர். ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம். தெல்லிப்பழை.

"கிரியா சிரோமணி"
சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக் குருக்கள்
சரசாலை. சாவகச்சேரி

**வாழ்த்துச் செய்திகள்** xv -xxxii

**பேராசிரியர். கலாநிதி நா.சண்முகலிங்கன்**
துணைவேந்தர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர். இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம்.

**செல்லமுத்து ஸ்ரீநிவாசன்**
பிரதேசசெயலாளர். தென்மராட்சி. சாவகச்சேரி.

**செல்வி வீ. சிவக்கொழுந்து**
செயலாளர். நகரசபை. சாவகச்சேரி.

**பேராசிரியர். க. கந்தசாமி**
பௌதிகவியற்றுறை. யாழ். பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர். என். ஞானக்குமரன்
பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சிற்பாசாரியார்
கந்தசாமி கோபாலசிங்கம்

திரு. ச. சந்திரகுமாரன்,
பொருளாளர், தர்மகர்த்தாசபை

தம்பு செல்வராசா குடும்பத்தினர் (லண்டன்)

சின்னத்தம்பி இராமலிங்கம்
முகாமையாளர்,
மீசாலை திருநீலகண்டவெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்.

சு. அருளானந்தசிவம்
தலைவர், தர்மகர்த்தாசபை.

சி. செல்வராசா
செயலாளர், தர்மகர்த்தாசபை.

மாணிக்கம் சிவசுப்பிரமணியம்,
செயலாளர், வழிபடுவோர் சபை.

மு. ஆறுமுகம்
இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபர், பௌராணிக வித்தகர்

**பாகம் 1**
**ஆலய விடயங்கள்**


விநாயகர் அநுபூதி 03-12

ஆலய மான்மியம் 13-16

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் - ஆலயத் தொடர்புகளுக்கு 17

ஆலய அமைவிட கோட்டு வரிப்படம் 18

நித்திய, நைமித்திய பூஜை, திருவிழாக்கள் மற்றும் பெருமான் திருவீதி உலா வரும் விபரங்கள் 19

வருடாந்த விஷேட உற்சவ தினங்கள் 20-21

மீசாலை, ஸ்ரீ திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
மஹா கும்பாபிஷேகம் 2010 22

மாவடியான் சேவையில் பொன்விழாக்கண்ட மணியகாரன்
அமரர் விநாசித்தம்பி சபாரத்தினம் (மணியப்பா, சின்னையா) 23-24

ஆலய இராஜ கோபுரம் 25-26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை
அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி 27

ஜே.வீராசாமி (ஸ்தபதி) இந்தியா 28

இராஜகோபுரமும் அதன் மகிமையும் 29-30

ஆலய நிர்வாக முகாமையாளர் வரிசையில்
அமரர் தம்பு தம்பிராசா அவர்கள் 31

மஹோற்சவ விழா விபரம் 32

ஆலய வளர்ச்சியிலும் புனருத்தாரணப் பணிகளிலும் பங்காற்றிய கடந்தகால
செயற்குழுக்களும் திருப்பணிச் சபைகளும் 33-35

சமூக நற்பணியில் ஆலயம் .. 36

வழிபடுவோர் சபை 37

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில்
புனருத்தாரண கும்பாபிஷேக வரவு செலவு கணக்கு - 2010 38

**பாகம் 2**
**ஆலய ஆய்வும்; பிறவும்**

பல்லவர் காலம் 41-43

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய
வளர்ச்சியும் அதன் இன்றைய செயற்பாடுகளும் - ஒரு நோக்கு 45-54

யாழ் மாவட்டம், தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவிலுள்ள
இந்து ஆலயங்களின் விபரம் 55-64

மாவடியான் சந்நிதியில் கணபதி ஹோமம் 65-70

மாவடியானும் அறுகம்புலத்தானும் 71-72

ஈழத்துச் சைவத்தமிழ் எழுச்சியின் பின்னணியில் பெரியபுராணம் 73-86

யாழ்ப்பாணத்தினதும், தென்மராட்சியின் இடங்கள் சிலவற்றினதும பெயர் ஆய்வு 87-100

சக்தி வழிபாட்டுத் தலமாய் மீசாலை மண்டுவில் இலஞ்சியாரணியம் சோலையம்மன் ஆலயம் 101-103

இந்து அறிவியல் சிந்தனைகளில் வானியலும் சோதிடமும் 104-116

**பாகம் 3**
**விநாயகர்: தத்துவம், வழிபாடு, பெருமை, ஆயுதங்கள்**

த்வஜஸ் தம்பத்தின் முக்கியத்துவம் 119-128

விநாயகர் 129-130

விநாயகர் வழிபாடு 131-132

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்முகமைந்துளான் 133-136
விநாயக வழிபாட்டின் தொன்மை 137-142
விநாயகர் தத்துவமும் வழிபாடும் 143-162
விநாயகர் பெருமை 163-166
முழுமுதற்பொருளானவர் கணபதி 167-168
புராணங்களில் வழிபடப்படும் புண்ணியன் விநாயகன் 169-170
கணபதி வழிபாட்டு நெறி 171-182
பிள்ளையாரின் மகத்துவம் 183-188
விநாயகரின் திருக்கரங்களில் விளங்கும் ஆயுதங்கள் 189-191
தென் - தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும் 193-200
விநாயக வழிபாட்டின் தொன்மை 201-208
அறுவகைச் சமயங்களில் காணாபத்தியம் 209-218

**பாகம் 4**
**பொது**

சைவத் திருமுறைகளும் நம்மவர் செல்நெறியும் 221-226
இந்துப் பண்பாட்டு மரபில் பசுவின் பெருமை 227-232
ஆலயங்களில் இசை 233-236
ஞானத்தின் படிநிலைகள் - தசகாரியம் 237-244
உள நெருக்கீட்டுக்கான பரிகாரங்களில் ஆலயங்கள் 245-246
பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டில் குடும்பங்களின் பங்களிப்பு 247-252
திருவும் தமிழும் பரதமும் 253-254
வடமொழியும் தென்தமிழும் 255-258
மனித வாழ்வியலில் இந்துமதம் ஒரு குறிப்பு 259-260
யாழ்ப்பாணத்தில் மரபுவழித் தமிழ்க்கல்வி - சில குறிப்புகள் 261-266
வீரசைவ மரபில் பசவண்ணர் 267-272
பக்தி இலக்கியம் 273-276

**பாகம் 5**
**பாடல்கள், தோத்திரங்கள்**

"வாழ்த்துப்பா" 279-281
தோத்திரப் பாடல்கள் 282-292
"தும்பிக்கையானை நம்பிக்கையுடன் தொழு" 293-294
திருவூஞ்சல் 295-300
நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum

**"Kalabooshanam, Vethagama Sothida booshanam,
Sivacharyathilakam, Sivagama booshanam
Vethagama Viththakar"**

# S. Sethambaranaatha Kurukkal

Hindu chief Priest, Editor and Publisher of Thirukkanitha Almanac Astrologer

Phone :
021 321 3472

Old School Lane,
Kalvayal, Chavakachcheri,
**Sri Lanka.**



## ஆசியுரை



எங்கும் பரந்து வியாபித்திருக்கின்ற இறைவன் ஆன்மாக்களுக்கு திருவருள் பாலிக்கும் பொருட்டு உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கின்ற இடமே ஆலயமாகும். ஒருருவம் ஒருநாமம் அற்ற இறைவனை உருவத்திருமேனியுடன் (விக்கிரக வடிவில்) விளங்கச் செய்து ஆகம முறைப்படி ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. இவ்வாறு உருவத்தில் மந்திரங்கள் மூலம் உருவேற்றி அக்கினியிலும், கும்பத்திலும் பூஜிக்கப்பட்ட மந்திர நீரை உருவத்திருமேனியில் அபிஷேகம் செய்வதையே **"கும்பாபிஷேகம்"** என்று அழைக்கின்றோம்.

தென்மராட்சியின் வடபால் மீசாலையில் வெள்ளைமாவடி என்னும் திவ்விய ஸ்தலத்தில் விளங்கும் வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயம் தனிச்சிறப்பு வாய்ந்தது. இந்த ஆலயம் ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததற்கு சான்றுகள் உள்ளன. வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் ஈந்தருளும் விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமான் நூற்றாண்டு காலமாக அருளாட்சி புரிகின்றார்.

தென்மராட்சியில் எவ்வளவோ ஆலயங்கள் இருந்தபோதும் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் பக்தர்களின் பெருக்கத்தாலும் நித்திய, நைமித்தியச் சிறப்புக்களாலும் பெருமை வாய்ந்தது என்று கூறினால் மிகையாகாது. அழகான பஞ்சதள கோபுரம் கம்பீரமாக நின்று எல்லோரையும் வரவேற்கின்றது. உள் பிரகாரத்திலும் அழகான மண்டபமும், சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த பரிவாரமூர்த்திகள் ஆலயங்களும் அமைந்துள்ளன. இவைகள் முன்னரிலும் பார்க்க அழகாகவும் கவர்ச்சியாகவும் விளங்குகின்றன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை மக்கள் விநாயகப் பெருமானை வணங்கி நேர்த்திக் கடன் செய்தே தமது பணிகளைத் தொடங்குவார்கள். அதனால் அவை யாவும் இனிதாக அனுகூலமாகும். நாட்டில் எத்தனையோ அனர்த்தங்கள் ஏற்பட்ட போதும், விநாயகப் பெருமான் ஆலயமும், மீசாலைக் கிராமமும், மக்களும் எவ்வித இடர்பாடுகளு மின்றிக் காப்பாற்றப்பட்டமை விநாயகரின் திருவருளன்றோ! அதனால் மீசாலை மக்கள் மேலும் மேலும் வாரி வழங்கி விநாயகப் பெருமானின் ஆலயத்தை கவர்ச்சிகரமாகச் செய்துள்ளார்கள். விநாயகர் திருவருளாலும், மக்கள் செய்து கொண்ட புண்ணியப் பேறினாலும் 04.06.2010 இல் குடமுழுக்கு விழாவை காதலாகி கசிந்து கண்ணீர் மல்க தரிசிக்க முடிந்துள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வுகளை மனதிலே நிலைநிறுத்தும் வண்ணம் மலர் வெளியிட உள்ளதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். இம்மலர் என்றும் வாடாமலராக நல்ல விஷயங்களாகிய நறுமணத்தைப் பரப்பி என்றும் அடியார் கரங்களில் தவழ வேண்டும்.

மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெற வேண்டிய நித்திய, நைமித்தியங்களை சிறப்பாக நிகழவைக்கும் ஆற்றலை அடியார்களுக்கு நல்க வேண்டும் என்றும் ஆலயத்திருப்பணிகளுக்கு வாரி வழங்கிய வள்ளல்கள், பொருட்களைச் செவ்வனே செலவு செய்த முகாமையாளர், சரியைத் தொண்டு புரிந்தவர்கள், வாகன உதவி செய்தவர்கள், இன்னும் பல வகையிலும் உதவி புரிந்த அன்பர்கள், ஆலயத்தைச் செவ்வனே அழகுற அமைத்த ஸ்தபதிகள், வர்ணந்தீட்டியோர் ஆகிய எல்லோருக்கும் நிறைந்த திருவருள் வாரி வழங்க வேண்டும் என்றும், "வாழ்க சீரடியாரெல்லாம்" என விதந்து கூறப்படும் இவ்விழாவைத் தரிசித்ததுடன் அருள்பிரவாகத்தில் நனைந்திருக்கும் மீசாலை வாழ் மக்கள் எல்லோருக்கும் என்றும் எப்பொழுதும் மாவடியான் திருவருள் துணைநிற்க வேண்டுமென்றும் அவனுடைய திருப்பாதங்களை வழுத்தி எல்லோருக்கும் நல்லாசி கூறி அமைகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து"

**சிவஸ்ரீ சி -சிதம்பரநாதக்குருக்கள்**

கல்வயல்.சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

சாவகச்சேரி, மீசாலை சைவம் வளர்ந்தோங்கும் பதியில் திருநீலகண்ட வெள்ளை மாவடி விநாயகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் ஆனி மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை சதய நட்சத்திரத் தினத்தன்று சகல தெய்வீகச் சிறப்போடு குடமுழுக்கு விழா நடைபெற்றது. எல்லாவற்றிலும் முதன்மை யானவருமாகிய விநாயகப் பெருமான் எத்தகைய இடையூறுகளையும் நீக்கி நமது கருமங்களை இனிதாக அனுகூல மாக்குவார். மேலாக, வெள்ளை மாவடி விநாயகப் பெருமான் தனிச் சிறப்புப் படைத்தவர். அவரின் திருவிளையாடல்கள் எத்தனையோ எண்ணில் அடங்காது. எல்லா அடியவர்களுக்கும் அவரிடம் ஒரு பக்தி உண்டு. அவரை வணங்காமல் ஒரு கருமங்களும் நிறைவேற்ற மாட்டார்கள்.



அத்துடன் இக்கும்பாபிஷேக விழாவிற் கலந்து சிறப்பித்த ஏனைய சிவாச்சாரிய குருமணிகள் அனைவருக்கும், மேலாக; கோவில் நிர்வாகஸ்தர், நித்தியார்ச்சகர், தர்மகர்த்தா ஆகியோருக்கும் விநாயகப் பெருமானின் அருளாசியும், எமது நல்லாசிகளும் பெற அவனருளாலே அவன்தாள் வணங்குகிறேன்.

நல்லாசிகள் வழங்கி நெறிப்படுத்திய மூத்த குருமணிகளின் பாதங்களை மனத்தால் வழுத்தி அப்பெரும் சிவப்பணியை நிறைவுசெய்து மகா கும்பாபிஷேகத்தை நடத்திய அனைவருக்கும், தரிசிக்கும் பேறுபெற்ற அடியார்களுக்கும் சகல நலம்பெற வாழ்த்துவதோடு, கும்பாபிஷேகத் தையும், அதன் திருக்காட்சிகளையும் பெருமானின் திவ்விய பிரபந்தங் களையும் திரட்டி ஒரு தனிச் சிறப்பு மலராகக் கும்பாபிஷேக மலர் இன்று வெளிவருவது மிகவும் சிறப்பம்சமாகும். இம்மலர் நினைக்கும் தோறும், பார்க்கும்தோறும் அடியார்களுக்கு நல்ல புத்துணர்வைக் கொடுக்கவேண்டு மென்று விநாயகப்பெருமானைத் துதித்துத் திருப்பாதங் களை வழுத்து கின்றேன்.

வாழ்க வளர்க வணக்கம்

ஆலயப் பிரதம சிவாச்சாரியார் "கிரியா வித்தகர்"
சிவஸ்ரீ சி. கிருபாகரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
ஓம் கணபதி துணை

## ஆலய நித்திய அர்ச்சகரின்

# ஆசியுரை

ஓங்கார வடிவினராகவும், நாதப்பிரம்ம ரூபராகவும், மும்மூர்த்திகளும் சேவிக்கும் சர்வலோக நாயகருமான எமது திருநீலகண்டப் பிள்ளையாருக்கு, ஆலயத்தைப் புதுப்பொலிவு பெறவைத்து, மகா கும்பாபிஷேகம் நடந்ததையிட்டு, மட்டற்ற மகிழ்ச்சியும், பேரானந்தமுமடைகிறேன். எமது முன்னோர் செய்த புண்ணியத்தால், இன்று யாம், மூன்று காலமும் பிள்ளையாரின் திருமேனி தீண்டி, அவருக்கு நித்திய கைங்கர்யங்களைச் செய்கின்ற, பெரும்பாக்கியத்தைப் பெற்றுள்ளேன். எமது பிள்ளையாரின், அற்புதங்கள் சொல்லிலடங்காதவை. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதாகவுடையவர். எல்லா உயிர்களிற்கும் வேண்டுபவற்றைக் கொடுப்பவர். இவரைப் பூசித்துவரும் நாம் "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே"... என்ற தேவாரத்தினைத்தான் நினைக்க வைக்கின்றது.

எமது ஆலயம், சைவக்குருமார் மரபில் நீண்டகாலம் பூசை செய்யப்பட்ட சிறப்பைப் பெறுகின்றது. இன்னொரு பெரும் சிறப்பாக, ஈழத்திலேயே, நித்திய பூசைகளை, சைவக்குருமாரும், நைமித்தியக் கிரியைகளைப் பிராமணக்குருமாரும் இணைந்து, மகிழ்ச்சியாக, பக்குவமாகச் செய்துவருதல், ஐங்கரன் அருளாட்சியேயாகும். முன்னைய காலங்களில், நித்திய பூசை ஆற்றிவந்த சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களும், பாரியாரும் தமக்கு உதவியாக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, அருணாச்சலம் பாலசுந்தரக் குருக்கள் குடும்பத்தினரை, அப்போது முகாமையாளராக இருந்த, திரு. வி. சபாரத்தினம் அவர்களுடைய அனுசரணையோடு, 1958ஆம் ஆண்டு, இங்கு அழைத்து வரப்பட்டனர். குமாரசாமிக்குருக்களது காலம் நிறைவுற்றதும், எமது தந்தையார் பாலசுந்தரக்குருக்கள், நித்திய பூசையைச் செய்து வந்தார். அவர்கள் 1991இற் காலமாக, அவர்களது மக்களான அண்ணன்மார் கணேசலிங்கக்குருக்களும், அவரைத் தொடர்ந்து, கந்தவேள்குருக்களும் நித்திய கிரியைகளைச் செய்தனர். அவர்களது மறைவைத் தொடர்ந்து, அடியேன் 15 ஆண்டுகளாக நித்திய கிரியைகளைச்செய்து வருகின்றேன். எமக்கு உதவியாக, தம்பி உமாமகேஸ்வரன் ஐயா அவர்கள் இருந்து வருகின்றார். இவ்வாறு தந்தை வழியுரிமையைக் கைவிடாது மாவடியானைப் பூசித்து வருகின்றோம். நாம் வேண்டுபவற்றையும், அடியார்கள் வேண்டுபவற்றையும் பிள்ளையார் தப்பாது தந்து வருகின்றார். அவரின் அருளால், அவருக்கு நேரம் தவறாது நித்திய பூசைகளையும், ஒவ்வொருநாளும் மோதக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைவேத்தியமும் செய்து வருகின்றேன். மேலும், இங்கு பூசை செய்யும் நாமே, மந்திரங்களை மட்டுமல்ல, ஓதுவாராக திருமுறைகளையும் பூசையின்போது ஓதும் நியதியைப் பெருமான் தந்துள்ளமை, மிகப் பெரும் பேறாகும்.

எம்மையும் வாழ வைத்து, எல்லோரையும் வாழ வைக்கும் மாவடியான் ஆலயத்திற்குரிய எல்லா அம்சங்களும் பெற்று, கும்பாபிஷேகம் கண்டுள்ளார். அத்துடன், மண்டலாபிஷேகப் பூர்த்தியில், ஆலய வரலாறுகளை ஆவணப்படுத்தும் வகையில், கும்பாபிஷேக மலரை, முகாமையாளரும் பரிபாலன சபையினரும் இணைந்து வெளியிடுவது, காலமறிந்துசெய்யும் பெருங்கைங்கரியமாகும். இம்மலர் சிறப்புற வெளிவர, எனது மனம் நிறைந்த ஆசீர்வாதங்களைத் தெரிவிக்கின்றேன். எமக்கு அல்லும் பகலும் சகல உதவிகளையும் செய்துவரும், முகாமையாளர் திரு. சி. இராமலிங்கம் வாத்தியாருக்கும், பாரியாருக்கும் நீண்ட ஆயுள் கிடைக்கப்பெற்று மாவடியானுக்கு சேவை செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். மேலும் அடியார்கள், தொண்டர்கள் எல்லோரும் இன்புற்று வாழ எல்லாம்வல்ல திருநீல கண்ட வெள்ளை மாவடியானைப் பிரார்த்தித்து ஆசி கூறியமைகின்றேன்.

சுபம்

**சிவத்திரு. பால.சிவலிங்கம் ஐயா.**
நித்திய அர்ச்சகர்.
மீசாலை திருநீலகண்ட வெள்ளை
மாவடிப்பிள்ளையார் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயம்

(சோலையம்மன்)

ශ්‍රී ඉලන්චියාරණියම් මණ්ඩුවිල් අම්මන් කෝවිල්

(සෝලෙයම්මන්)

**SRI ILLANCHIYARANIYAM MANDUVIL AMMAN KOVIL**

**(SOLAYAMMAN)**

Reg. No. HA/JA/5/312

Trustee:
Chief Prest & Secretary
Sivasri K. Kirupanantha Kurukkal

Temple Priest: Sivasri K. Thanapathy Kurukkal

Tressurer Sri K. K. Yoganathan

Fax: 021 321 2300
T.P: 021 321 9129
T.P: 021 300 7650
T.P: 021 300 2300
*Manduvil*
*Chavakachcheri North*
*Meesalai.*



## ஆசியுரை

மீசாலை மாவடியில் பல்லாண்டு காலமாக வீற்றிருந்து அருள்பாலித்து வரும் விநாயகப்பெரு மானிற்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றமையை யிட்டும் அதன் நிமித்தமாக கும்பாபிஷேகமலர் வெளியிடுவது பற்றியும் நாம் மட்டில்லா மகிழ்ச்சியை அடைகின்றோம். இவ்வூர் மக்கள் அனைவரும் பெரும் பங்களிப்புச் செய்து புனருத்தாரணப் பணிகளை பூரணமாக நிறைவு செய்துள்ளமை போற்றப்படத் தக்கதான விடயம்.

இந்தியாவிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும், இலங்கையிலும் புராதன காலம் தொட்டு இந்து சமயம் தொடர்ந்து வளர்ந்து நிலவிவந்து கொண்டிருக்கிறது. மேலும் உட்சமயங்கள் ஆறிலும் காணபத்தியம் முன்னி லைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் கணபதி முழுமுதற் கடவுளாகக் காட்டப் படுகின்றார். தனக்கு மேலான ஒரு தலைவன் இல்லாதவனாக "விநாயகன்" என்னும் நாமம் பெற்றுள்ளார். கணபதி, விநாயகப்பெருமானுடைய பெருமைகள் யாவையும் விநாயகபுராணத்திற் காணலாம். மூலாதார சக்தியாக விளங்கும் இவரை வணங்குவதால் இடையூறுகள் அனைத்தும் நீங்குவதுடன் எய்தும் பலன்கள் அளவற்றவையாகும். அதனாலேயே கபிலதேவநாயனார் இவ்வாறு பாடியுள்ளார்.

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் 106 ஆம் பாடலிலும் கபிலர் எருக்கலம் பூ தொடர்பாகவும் ஓர் பாடல் பாடியுள்ளார் அதில்:-

"நல்லவுந் தீயவுமல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்கிமாயினு முடையவை
கடவுள் பேனே மென்னா வாங்கு
மடவர் மெல்லியா செல்லினும்
கடவன் பாரி கை வண்ணமே"

இப்பாடல் எருக்கலம் பூவை கடவுளுக்கு ஏற்கும் மலராகக் குறிப்பிட்டுள்ளது. கணபதிக்கு ஏற்புடைய மலராகவும் எருக்கலை விளங்குவதால் இங்கு கடவுள் என்னும் சொல் கணபதியையே சுட்டி நிற்கும். மேலும் வெள்ளெருக்கம் வேரில் கணபதி உறைகிறான் என ஐதீகம் உண்டு. எருக்கம் வேரிலிருந்து உருவாக்கப்படும் விநாயகர் மிகவும் பேறளிப்பவர் எனவும் கூறப்படுகிறது. மேலும் கும்பாபிஷேகம் நன்கு நிறைவுற்று விநாயகப் பெருமானின் திருவருளால் நாடும், மக்களும், சிறப்புற்று சாந்தி சமாதானம், நீடு நிலைத்து சகல வளங்களும் பெருகி அனைவரும் நோயற்ற நீண்ட வாழ்வு வாழ வாழ்த்தி, ஆசிகூறி, அமைகின்றேன்.

**" சர்வே ஜநகா சுகினோ பவந்து"**

**சிவஸ்ரீ. க. கிருபானந்தக் குருக்கள்**
தலைவர்
அகில இலங்கைச் சைவக்குருமார்
அர்ச்சகர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

தொலைபேசி: 021 222 2870



## அருளாசிச் செய்தி



விநாயகர் அடியார்களுக்கு :

சாவகச்சேரி பிரதேசத்தில் மீசாலை பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சிபுரியும் நீலகண்ட வெள்ளைமாவடி விநாயகனுக்கு சிறப்பாக நடைபெற்ற மகா கும்பாபி ஷேகத்தை அனைவரும் அறிந்துகொள்ளும்வகையில் மலர் வெளியிடுவதை யிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பல சிறப்புக்களைக்கொண்ட இவ்வால யம் நீண்ட பழம் பெயர் வரலாற்றைக்கொண்டது. அந்நியருடைய ஆட்சிக் காலம்தொடக்கம் இன்றுவரை பல அற்புதங்களைகொண்ட ஆலயமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புக்களைக் கொண்ட இவ்வாலயம் இன்று சூலலிங்கமாகிய இராஜகோபுரத்துடன் பல வளர்ச்சிகளைக் கண்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி. எவ் ஆலயத்திலும் இல்லாதவாறு மூல மூர்த்தி மிகச் சிறிய அளவில் அமைக்கப்பட்டிருப்பது வரலாற்றுச் சிறப்பாகும். இவ்ஆலயத்தில் நித்தியவழிபாடு, மாதாந்த, வருடாந்த வழிபாடு என்பன சிறப்புடையதாகும். திருமுறை பாராயணம், புராண படனம், வருடாந்த வேள்வியாகம் மக்களுடைய சமயவளர்ச்சிக்கு உதவியாக அமைந்துள்ளன. இவ்வாலயம் இன்னும் பல வளர்ச்சிகளைக் காண இறையருளைப் பிராத்திக்கின்றோம். இன்று வெளிவரும் கும்பாபி ஷேக மலர் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையட்டும். இம்மலரை வெளியிடும் தர்மகர்த்தாவையும், நூலாசிரியரையும் வாழ்த்திப் பாராட்டு கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய
ஸ்வாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

*Sri Durgadevi Devasthanam*

Tellippalai, Sri Lanka.

T.P. No. 0602 - 213151 திகதி: ........................



## செஞ்சொற்செல்வரின்
## ஆசியுரை

அற்புதம் நிறைந்த வெள்ளை மாவடிப் பிள்ளையார் திருக்கோவில் மகாகும்பாபிஷேக மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். 1995 ஆம் ஆண்டு இடப் பெயர்வில் பல லட்சம் மக்களை அரவணைத்து பாதுகாத்த தென்மராட்சி திருநகரையும் அங்குள்ள திருத்தலங்களையும் நாம் மறந்துவிடமுடியாது. மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் எத்தனை மக்கள் தஞ்சமடைய ஏதுவாய் இருந்தது. இங்கு இருக்கும் பிள்ளையார் பேசும் தெய்வம். இத்திருக்கோவிலை பலதடவை தரிசிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. பிள்ளையாரின் திருவருளால் பலதடவை இவ்வாலயத்தில் சொற்பொழிவாற்றும் வாய்ப்பும் யான்பெற்றேன். மாவடியாரின் மோதகச் சுவையை பேசாத நாளில்லை. நினைத்தால் இனிக்கும் நாட்கள். சைவப் பண்பாட்டுப் பாரம்பரியம் காக்கும் மீசாலை மக்களின் வாழ்வை ஆற்றுப்படுத்தும் நாயகனாக திருநீலகண்டப் பிள்ளையார் விளங்குகிறார்.

"அத்தி முகவனை நித்தம் நினைப்பவர் சித்த மகிழ்வோடு வாழ்ந்து முத்தி பெறுவர்" என்பது எம் முன்னோர் நம்பிக்கை. தங்கள் குல தெய்வத்தின் திருப்பணியில் ஆர்வம் காட்டிய பக்தர்களுக்கும், தர்மகர்த்தா சபையினர்களுக்கும், நேர்த்தியாக நித்திய பூசை ஆற்றி நியமம் தவறாமல் காக்கும் பூசகர்களுக்கும் நல்வாழ்த்துக்கூறி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

ஆறு.திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றார் ஔவையார். அவரின் கூற்றுக்குத் தென்ம ராட்சியில் முக்கனிகளும் நிறைந்து விளங்குகின்ற மீசாலை வெள்ளை மாவடிப்பதியில் வழிபடும் அடியவர்களின் துயர் துடைத்து அருளுகின்ற திருநீலகண்ட விநாயகருடைய பஞ்சகுண்ட பக்ஷ குடமுழுக்குவிழா கடந்த 04/06/2010 வெள்ளியன்று மிகச் சிறப்பாக நடந்தேறியது.

இப் பெருவிழாவினைச் சிறப்புற நடாத்துவதற்கு வழி அமைத்த ஆலயத் தர்மகர்த்தா சபையினருக்கும், நிதியினை வாரி வழங்கியவர்களுக்கும், ஆலயத் தொண்டர்களுக்கும், வழிபடுவோர் சபையினருக்கும், ஆலயம் சிறப்புற அமைத்த கலைஞர்களுக்கும், சரியைத் தொண்டுகள் புரிந்தோருக்கும், மற்றும் அனைவருக்கும் வேழமுகத்தவன் விக்கின விநாயகரின் அருள் கிடைக்க நல்லாசிகள் கூறுகின்றேன்.



"லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து"

"கிரியா சிரோமணி"
**சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக் குருக்கள்**
சரசாலை, சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Professor N. Shanmugalingan, Ph.D
Vice Chancellor.

මගේ අංකය / என் இல. / My Number ..........  ඔබේ අංකය / உங்கள் இல. / Your Number ..........



# துணைவேந்தரின் வேண்டுதல்

எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களாய் ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயங்களைப் புதுக்கும் அபிஷேக ஆராதனைகளின் வழி அனைத்து மனங்களும் மேன்மைப்படுகின்றன. கூட்டு வாழ்வுக்கான சமூக விழுமியங்களும் உறுதி பெறுகின்றன.

இந்தவகையில் எங்கள் மரபுவழிக் கிராமமான மீசாலையில் விளங்கும் திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையாருக்குக் குடமுழுக்கு எனும் செய்தியிலே மனது மிகவாய் நிறைகிறது.



விக்கினங்களுக்குள் வீழ்ந்துகிடந்த மக்கள், மீளவும் எழுந்து நிமிர்ந்து, தங்களுக்கான வாழ்வினைக் கட்டமைக்கும் இன்றைய காலத்து, பெரிதும் வேண்டப்படுகின்ற ஆத்மபலத்தினை வெள்ளை மாவடிப் பிள்ளையார் வசமாக்குவார்.

மேன்மைப் படுவாய் மனமே கேள்
விண்ணினிடிமுன் விழுந்தாலும்
பான்மை தவறி நடுங்காதே
பயத்தாலேதும் பயனில்லை
யான்முன்னுரைத்தேன் கோடிமுறை
இன்னும் கோடி முறை சொல்வேன்
ஆன்மாவான கணபதியின்
அருளுண்டு அச்சமில்லையே.

-பாரதி

பேராசிரியர். கலாநிதி நா.சண்முகலிங்கன்
துணைவேந்தர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
**Department of Hindu Religious and Cultural Affairs**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂක பணிப்பாளர் Director | 2552643 | ෆැක්ස් தொலைநகல் Fax | 2552825 | ඊමේල් மின் அஞ்சல் E-Mail | hindudir@yahoo.com |
| පොදු பொது General | 2552641 | | | වෙබ් අඩවිය இணையதளம் Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය எனது இல. My No. | | ඔබේ අංකය உமது இல. Your No. | | දිනය திகதி Date | 24.06.2010 |



## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தென்மராட்சி சாவகச்சேரியில் அமைந்துள்ள திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகம் 04.06.2010 ஆம் நாளில் தெய்வத் திருவருள் கைகூடி இனிதே நிறைவேறியமையை அறிந்து மகிழ்வடைகின்றேன்.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' எனவும் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனவும் வலியுறுத்தி நமது முன்னோர்கள் இளம் பருவத்திலேயே தெய்வ உணர்வைப் பதிய வைத்த மக்களை மக்கள் நிலையுடையவராய் வாழ வைத்தனர். அவர்கள் பெரியவர்களாய்ச் சீவன் முக்தி நிலையில் வாழ்பவராயினும் அவர்களுக்கும் ஆலய வழிபாடு அவசியம் என்பதோடு சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரப்பகுதியில் " ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" என ஸ்ரீ மெய்கண்டதேவர் கூறிச் சென்றமை நினைவுகூரத் தக்கது.
திருவள்ளுவரும் இதனை வலியுறுத்தி உள்ளார்.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்கு மேல் வானோர்க்கும் ஈண்டு

கோயிற் பூசனை முட்டின்றி நடைபெறுமாயின் மக்களும் எல்லா உயிர்களும் செழித்து வாழ்வர். பூசனைகள் யாவும் மந்திரலோபம், தந்திரலோபம், திரவியலோபம், கிரியாலோபங்களின்றி நடைபெறுதல் வேண்டும். நாட்பூசனைகளில் உண்டாகும் குற்றங்கள் நீங்கும் பொருட்டே சிறப்புப் பூசனைகள் செய்யப்படுகின்றன. அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்வதும் அதன் பொருட்டே ஆகும். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாவது அஷ்டபந்தனம் செய்து மகாகும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பது விதி. மகாகும்பாபிஷேக தரிசனம் செய்த நன்மக்கள் அனைவரும் இம்மை, மறுமைப் பேறுகளையும் பெற்று வாழ்வர்.

எமது நாடும், மக்களும் சிறப்புற இத்தனை பெரிய கைங்கரியம் ஒன்றை மேற்கொண்ட நீல கண்ட வெள்ளைப் பிள்ளையார் ஆலய நிர்வாக உறுப்பினர்களுக்கும் மற்றும் பொருளுதவி, சரீர உதவி செய்த மெய்யன்பர்களுக்கும் விக்னேஸ்வரப் பெருமானின் அருள் கிட்டப் பிரார்த்திக்கின்றேன். இதனை நினைவுகூரும் முகமாக வெளிவரும் கும்பாபிஷேகமலர் சிறந்து யாவர் கையிலும் மணம்வீச நான் மனமார வாழ்த்துகின்றேன்.

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இல. 248-1/1, காலி வீதி, கொழும்பு-04.

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தென்மராட்சிப் பிரதேச செயலரின்

# வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் முடி எனத்திகழும் யாழ் குடா நாட்டின் வளம் நிறைந்த தென்மராட்சிப் பகுதியிலே எழில்கொஞ்சும் மீசாலைக் கிராமத்தின் மத்தியிலே அமைந்துள்ள வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் மகத்துவம் தாங்கி வெளிவரும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் அகமிக மகிழ்வெய்துகின்றேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வெள்ளைமா அடியிலேகொள்ளு விதைத்துக் கொத்திக் கொண்டிருந்த முத்தன் என்ற பக்தனின் கண்ணுக்குத் தென்பட்ட திருநீலகண்டத்தை வெளியே எடுக்க முற்பட்டபோது அவ்விடத்திலிருந்து இரத்தம் பெருகியதும் திருநீல கண்டம் மறைந்ததாகவும், அன்றிரவு அவரது கனவிலே விநாயகர் உருவத்திலே தோன்றியவர் அவ்விடத்திலே விநாயகர்சிலை இருப்பதாகக் கூறியதை அடுத்து காணிச் சொந்தக்காரரும் சேர்ந்து அவ்விடத்திலேயே சிறு வீடு அமைத்து அந்தச் சிலையை வைத்துப் பிரதிட்டை செய்து அந்த ஆலயத்திற்குத் "திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்" என அர்த்தமிகு பெயரிட்டதாகவும் வரலாறு உண்டு. அற்புதம் மிகுந்த இவ்ஆலயத்தில் பிற்பட்ட காலத்திலும் பற்பல அற்புதங்கள் நிகழ்ந்த வரலாறு உள்ளதை நான் அறிவேன்.



நாட்டில் யுத்தம் ஓய்ந்து சுமுகநிலை நிலவுகின்ற இக்கால கட்டத்திலே, பஞ்சமா பாதகச் செயல்களும், கடத்தல்களும் என அராஜகங்கள் நிறைந்துள்ளதுடன், பாவச் செயல்களிலும், கலாசாரச் சீரழிவுகளிலும் எம் இளம் சமுதாயத்தினர் ஈடுபடுகின்றனர். இந்த நிலை மாறி நல்லதோர் சமுதாயம் எமது தேசத்திலே மலர்ந்திட இது போன்ற ஆலயங்கள் உதவ வேண்டும். இவ்வாலய நிர்வாகத்தினர் ஆலயத்தினூடாக ஆன்மீக வளர்ச்சியுடன், சமூக மேம்பாட்டு உயர்வுக்கும் தங்களாலான உதவிகளைச் செய்து வருகின்றமை பாராட்டுதற்குரியது.

இம்மலர் பக்திமணம் கமழ, யாபேர்க்கும் பயன்மிக்கதாக அனைவரது கரங்களிலும் தவழ எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இதன்மூலம் யாபேரும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் வரலாற்றை அறிந்திட வழிகோலிய ஏற்பாட்டுக் குழுவினருக்கும் எனது நன்றிகளையும், நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"வெள்ளைக் கொம்பன் விநாயகன் வீற்றிருக்கும் திருநீலகண்ட
வெள்ளை மாவழப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக நாளில்
தொல்லை வினைகள் நீங்கி யாபேரும்
நல்வாழ்வு வாழ பிள்ளையார் அருளாசி துணையாகட்டும்"

**செல்லமுத்து ஸ்ரீநிவாஸன்**
பிரதேசசெயலர்,
தென்மராட்சி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி நகர சபை

**CHAVAKACHCHERI URBAN COUNCIL**

எனது இல. / My No. ..........................

தங்கள் இல. / Your No. ..........................

நகர சபை அலுவலகம், சாவகச்சேரி.
*Urban Council Office, Chavakachcheri.*

021-222-3293, 5741

20.07.2010




## சாவகச்சேரி நகரசபைச் செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி

மீசாலை மாவடிப்பிள்ளையார் தர்மகர்த்தா சபையினரால் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.



ஆண்டவன் எழுந்தருளியுள்ள இடம் ஆலயம் அவ்வாறே நூலகம் அமைந்துள்ள இடம் அறிவாலயம்.

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் அமைத்தல்
அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

இது மகாகவி பாரதியாரின் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் பாடலாகும்.

இவ்வாறு மக்களுக்கு அறிவினை அள்ளி வழங்கும் மீசாலை நூலகம் அமைப்பதற்குப் பெரும் வள்ளன்மையோடு தாமாகவே முன்வந்து 8 பரப்புக் காணியை எமக்கு வழங்கியுதவிய தர்மகர்த்தாசபையினருக்குச் சாவகச்சேரி நகரசபையின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு வளம்மிக்க ஏனைய தர்மகர்த்தா சபையினரும் இம்முன்மாதிரியைப் பின்பற்றி "மக்கள் பணி மகேசன் பணி" என எண்ணிப் பொதுபணிகளுக்கு தன்னை அர்ப்பணிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன் இவ்வாலய நிர்வாகம் பலதுறைகளிலும் சிறப்புற்றோங்க வாழ்த்துகின்றேன்.

"நன்றி மறப்பது நன்றன்று
நன்றல்லது அன்றே மறப்பது நன்று"


**செல்வி வீ. சிவக்கொழுந்து**
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

தென்மராட்சியின் பழச்சோலையெனப்படும் மீசாலையில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் கலையம்சங்கள் நிறைந்ததாகப் புனருத் தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது எமது பிரதேசம் செய்த பாக்கியமாகும். **"வேழமுகத்து விநாயகரைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்", "திருவும் கல்வியும் சீரும் தம் பிள்ளைகளுக்குச் சிறக்கும்"** என்ற சொற்பதங்களில் கூறப்பட்டவற்றை தமது வாழ்வில் அனுபவித்து அறிந்த மீசாலை வாழ் மக்கள் கோவிலின் புனருத்தாரணத்தில் பங்குதாரரானமை அவர்கள் பெற்ற பாக்கியமே என்று கூறலாம். எமது முன்னோர் கும்பாபிஷேக நிகழ்வைக் காண்பதையே பேறெனக் கூறுவர். பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை கோவில்களில் கும்பாபிஷேகம் செய்வது அக்கோவில்சார் மக்களின் கடமையென சைவமக்கள் எண்ணிச் செயற்படுவர். மீசாலை மக்கள் தமது இக்கடமையை இனிதே நிறைவேற்ற இறைவன் அருள் பாலித்துள்ளார்.



கோவில்களை ஸ்தாபிப்பதும் திருவிழாக்களைச் சிறப்பாக நடாத்துவதுடனும் மட்டும் எமது சமயம்சார் கடமைகள் நிறை வேற்றிவிட்டதென எண்ணலாகாது. கோவிலைச் சார்ந்த சமூகத்தை நல்ல தோர் சமூகமாக வளர்த்தெடுப்பதும் கோவில்களைக் கட்டுவதின் முக்கிய நோக்கமாக எமது முன்னோர் கொண்டிருந்ததற்குப் பல உதாரணங்கள் காட்டலாம். சமயக் கல்வியின் பிரதான நோக்கம் நற்பிரசைகளை உருவாக்கு தலாகும். சிறப்பாகக்கூறின் இளம்பராயத்தினரை நல்ல உளவளம் கொண்ட வர்களாக உருவாக்குவதாகும். உளவளம் கொண்டதாக இளம்சமுதாயத்தை உருவாக்கக் கோவில்கள் செயல்முறைக் கூடங்கள் போன்றவையெனக் கூறின் மிகையாகாது. இன்றைய இளம்சமூகம் கோவில்களில் இருந்து விலகிச் செல்வது பொதுவாகக் காணக்கூடியதோர் நிகழ்வாக உள்ளது. சமூக விழுமியங்களைப் பேணும் சமுதாயத்தை உருவாக்க இந்நிலை மாற்றப்பட வேண்டும். இளவயதினரை ஈர்க்கக்கூடிய சமய செயற்பாடுகளை கோயிற் சமூகம் முன்னெடுக்க வேண்டும். கோவில்களின் இன்றைய சமூகம்சார் முக்கிய செயற்பாடாக இதுவுள்ளதென நான் நம்புகின்றேன். வரும் காலங் களில் எமது சமூகம் சைவநெறியில் இருந்து வழுவாத சமூகமாக மிளிர திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் அருள்வேண்டி நிற்கின்றேன். **வாழ்க நம் சமூகம் வளத்துடன்.**

**பேராசிரியர். க. கந்தசாமி**
பௌதிகவியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல
මගේ අංකය
My Number

உமது இல
ඔබගේ අංකය
Your Number

යාපනය විශ්ව විද්‍යාලය - ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
UNIVERSITY OF JAFFNA - SRI LANKA
කලා පීඨය
கலைப்பீடம்
Faculty of Arts

Prof.N.Gnanakumaran
Dean,
Faculty of Arts.

த.பெ. எண்.57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

තැ. පෙ. අංකය 57
තිරුනෙල්වේලි
යාපනය

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.

தொலைபேசி / Telephone 021 2223091

மின்னஞ்சல் / E.Mail deanarts@sltnet.lk

29.07.2010



# வாழ்த்துச் செய்தி

திருநீலகண்ட வெள்ளைமாவடிப்பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலரையிட்டு வாழ்த்துச் செய்தியினை அளிப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கோவில் கும்பாபிஷேகமானது இறையாட்சியின் மகிமைக்கும் அவ்வூர் மக்களின் இறைவாழ்வின் உயர்வுக்கும் கட்டியம் கூறுவதாக அமைகின்றது. மீசாலையையும் அதனைச் சார்ந்த அயலூர் பக்தர்கள் பலரின் அருட்தேடலுக்கும் பன்னெடுங்காலமாக சாட்சியாக விளங்கும் அருள் விநாயகரின் ஆட்சி சிறந்தோங்க மனதார வாழ்த்துகின்றேன். இவ்விறைபணியில் ஈடுபடுகின்ற அனைத்து உள்ளங்களுக்கும் மட்டில்லாத இறைவன் கருணை கிடைக்க வேண்டிப் பிரார்த்தித்து அவர்தம் வாழ்வு சிறக்கவேண்டுகின்றேன்.

**பேராசிரியர். என். ஞானக்குமரன்**
பீடாதிபதி,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார்**
**ஆலய கும்பாபிஷேக மலர் வெளியீட்டிற்கான**

# வாழ்த்துச் செய்தி

"மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமண ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே"

ஓங்கார ரூபியாய் எத்தகு இடையூறுகளை இல்லாது விலக்கி அவற்றை செம்மையுற நடத்தி வைக்கும் சக்தியுள்ளவரே விநாயகப் பெருமான் என்பதை உணர வைத்துள்ளார் நம் திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார். வரலாற்றுப் புகழ்மிக்க பழமை பொருந்திய இவ்வாலயம் இன்று குடமுழுக்கு இடம்பெற்று கம்பீர தோற்றமளித்து உளங்குளிர வைக்கிறது.



இவ்வாலயம் இருநூற்றைம்பது ஆண்டு காலத்திற்கு முற்பட்ட வரலாற்றைக்கொண்டது. இந்துக் கோயில்களுக்கெல்லாம் பேரழிவை ஏற்படுத்திய டச்சுக்காரரின் காலத்திலே எம் பெருமான் தன் அரிய சக்தியை உலகிற்கு புகட்டும் வண்ணம் ஓர் வெள்ளை மாமரத்தின் அடியில் பாதுகாப்பாக மறைந்து பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியதும் உலகிற்கு தன் அருள் மீண்டும் கிடைக்கப்போவதை ஓர் விவசாயிக்கு உணர்த்தி அவர்மூலம் உருவக்காட்சி தந்து இன்று புணருத்தானம் பெற்று இராஜகோபுரம், மணிமண்டபம் என அழகுற மிளிர்கிறது. அன்றைய மூலமூர்த்தியான வெள்ளைமாவடியான் பழமை மாறாது புதுமைகள் பலவற்றை தன்னகத்தே கொண்டு யாவரும் வியக்கும் வண்ணம் அழகுற தொனிப்பது எம் பெருமானின் அருட்கடாச்சமே ஆகும்.

இவ்வாலயம் இத்தகு மேன்மையுற உழைத்த திருப்பணிச் சபையினருக்கும், உதவிகள் செய்து தந்த அன்பர்கள், அடியார்களுக்கும் எம்பெருமானின் அருளாசி கிடைக்க வேண்டும் என வேண்டுவதோடு மேலும் இவ்வேலைகள் யாவும் சிற்பமுறையிலும் ஆகமவிதிப்படியும் செம்மையுற நிறைவேற எமது குழுவினருக்கு வேண்டிய ஆசிகளை வழங்கியதும் எம்பெருமானின் சிறப்பையே எடுத்தியம்புகிறது.

இக்கும்பாபிஷேகத்தை ஒட்டி தர்மகர்த்தா சபையினரால் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலரானது இனிது மலர்ந்து நறுமணம் கமழவும் மிகுதியாக உள்ள திருப்பணிகள் அனைத்தும் எளிதில் புதுமை பெறவும் நித்திய, நைமித்திய பூஜைகள் எல்லாம் சிறப்புற நடைபெறவும் திருவருள் பாலிக்க எல்லாம் வல்ல விக்கினேஸ்வரப் பெருமானின் திருவடிகளை வேண்டி நிற்கிறேன்.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

நன்றி.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை

சிற்பாசாரியார்
கந்தசாமி கோபாலசிங்கம்
0777111121



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தர்மகர்த்தாசபை பொருளாளரின்

# வாழ்த்துச் செய்தி

இந்த வருடம் வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் இராஜகோபுரம் அமைத்து, பின்னர் மூலஸ்தானம் புனரமைக்கப்பட்டு கும்பாபி ஷேகம் செய்யப்பட்டது. பல்வேறு மக்களினதும் உடல் உழைப்பினாலும் பிள்ளையார் அடியார்கள் மனமுவந்து தொகை தொகையாக பணம் அள்ளி வழங்கியதாலும், இவ்வாறு எமது வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் பெருவளர்ச்சி அடைந்து அனைவரது உள்ளங்களிலும், உணர்வுகளிலும் நிறைந்து தித்திக்கும் தேனாக அருள் பாலித்து வருவது அனைவரும் அறிந்ததே!

இதனை முன்னிட்டு இம்மலர் வெளியிடப்படுகின்றமைக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இம்மலர் பல நல்ல தகவல்களை தன்னகத்தே கொண்டு இக்கோவில் சரித்திரத்தை ஆவணப்படுத்தியும் யாழ்ப்பாணத்திலுள்ள மூத்த அறிஞர்க ளால் வரையப்பட்ட பல கட்டுரைகளைத் தாங்கியும் அனைவருக்கும் மிகவும் பயன் உள்ளதாக அமையும் என்பது திண்ணமாகும்.



இம்மலரை தொகுத்து சிறப்பாக வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற திரு. க. சோமசேகரம் அவர்களுக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்து ஆண்டுகளிற்கொருமுறை இக்கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்று வருகிறது. 2000 ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்து பல இன்னல்களின் மத்தியில் மீள்குடியமர்ந்தார்கள்.

தற்போது புதிய பிறவி எடுத்ததுபோல மக்கள் எல்லோருக்கும் வெள்ளை மாவடியான் அருள்பாலிக்கும் வண்ணம் பல செயற்திட்டங்களை ஆரம்பித்து அர்ப்பணிப்புடன் சேவை செய்கின்ற திரு. சி. இராமலிங்கம் அவர்கள் மிகவும் போற்றப்பட வேண்டியவராவார்.

கோவில் திருப்பணிவேலைகளுடன் ஆலயச் சூழலில் பாலர் பாடசாலை ஒன்று அமைக்கும் வேலைகளும் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு மக்களின் நலன்காக்கும் பல செயற்திட்டங்கள் இக்கோவில் சூழலில் ஆரம்பித்து வைக்கவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இத்தகைய வளர்ச்சிக்கு பக்த அடியார்கள் பல வழிகளில் உதவி செய்து உறுதுணையாக நிற்கின்றார்கள். அவர்களுக்கும் அனைத்து மக்களுக்கும் வெள்ளை மாவடிப்பிள்ளையார் அருள்பாலிக்க வேண்டு மென்றும் அத்துடன் நலிவுற்ற மக்களின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக சிறந்த செயற்திட்டங்களை வழங்கி புகழ் பரப்ப வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

**திரு. ச. சந்திரகுமாரன்,**
பொருளாளர், தர்மகர்த்தாசபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

04.06.2010 அன்று இடம்பெற்ற எம்பெருமான், பாதுகாவலன் மாவடியான் குடமுழுக்கை நேரில் பார்க்கவில்லையே என்ற ஆதங்கம் என்னுள் இருக்கிறது. இருப்பினும் மாவடியானின் அருட் கடாட்சங்களை நிறையவே பெற்றவன் என்ற வகையில் இச் செய்தியை கும்பாபிஷேக மலரில் எழுதக் கிடைத்ததானது நான் பெற்ற பேறுகளில் சிறப்பானதாகக் கருதுகின்றேன்.

கும்பாபிஷேக தினத்தன்று இங்கிருந்தபடியே எம்பெருமானை நெஞ்சாரத் துதித்தேன். இப் பிரார்த்தனையானது இயந்திர மயமான சூழலுக்குள் உழலும் எனக்குப் பேராறுதலாய் இருந்தது எனக் கூறினால் மிகையில்லை.

மீசாலையில் வாழ்ந்த காலத்தில் தர்மகர்த்தா சபையில் இடம்பெற்று எம்பெருமானுக்குப் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பமானது எனது பூர்வ ஜன்ம புண்ணியம் என்றே கூறவேண்டும்.



அடியார்கள், அன்பர்கள் புடைசூழ வெள்ளைமாவடியானுக்கு இடம்பெறும் மஹோற்சவ நிகழ்வுகள் அற்புதமானவை. அவை மாற்றீடற்ற பக்திப் பிரவாகம் நிறைந்த சுகானுபவங்கள் என்பது எனது கருத்து.

திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயம் காலத்திற்கேற்ப புதுப்பொலிவுடன் மெருகுபெற்று கும்பாபிஷேகங்கள் கண்டு அருளாட்சி புரிவதானது என்னைப் போன்ற மாவடியான் பக்தர்கள் அனைவருக்கும் இதம் தரும் செய்தியாகும்.

எமது ஆலயமானது முன்னைப்போல தொடர்ந்தும் ஆன்மீக, சமய, சமூக வளர்ச்சிக்கு உதவி மேலும் பொலிவுபெற திருநீல கண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையாரின் பாதங்களைப் பணிந்து தொடர்ந்தும் பணி செய்வதற்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் எங்கள் எல்லோருக்கும் திருவருள் புரிய துதிப்போம்.

சுபம்.

தம்பு செல்வராசா குடும்பத்தினர்
(லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலய முகாமையாளரின் செய்தி

எல்லாம் வல்ல எம்பெருமான் மாவடியான் பாதார விந்தங்களைப் பணிந்து இச்செய்தியை எழுதுவதில் மகிழ்வடைகின்றேன். எமது ஆலய சந்நிதானத்தில் வணங்கும் பாக்கியத்தைப்பெற்று அவனது பாதசேவையில் இன்று முகாமையாளராகச் சேவையாற்றுவதானது எம்பெருமான் அருளாட்சி மட்டுமன்றி எனது பூர்வ புண்ணிய பாக்கிய மாகவே கருதுகிறேன்.

எனது சேவையில் எமது ஆலயம் கண்ட இரண்டாவது மஹா கும்பாபிஷேகம் 04.06.2010 வெள்ளி அதிகாலை 5.50-6.38 இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் இனிதே நடந்தேறியமை மாவடியான் அருளாட்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டு. இத்தருணம் எனது நினைவில் நான் சிறுவனாக இருந்தபோது தந்தையாருடன் இணைந்து, வெள்ளி மாலை இடம்பெறும் பஜனை, பூசைகளிற் பங்குபற்றி வீடு திரும்பும்போது தபாற் புகையிரதம் மீசாலையிற் புறப்படுவது நினைவில் நிழலாடுகிறது.



27.01.2010இற் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மேற்குறித்த நாளில் தடங்கல்கள், தாமதங்கள் எதுவுமின்றித் திருப்பணிப் புனருத்தாரண வேலைகள் நடந்தேறியுள்ளன. தொடர்ந்து மண்டலாபிஷேகம் 48 தினங்கள் நடந்தேறி பூர்த்தி 21.07.2010ல் சஹஸ்ர சங்காபிஷேக நிகழ்வுடன். நிறைவேறியுள்ளது.

எமது ஆலயம் பாலஸ்தாபனம் இடம்பெற்ற காலம்தொட்டு மண்டலாபிஷேக பூர்த்திவரை உரிய கிரியைகள், அபிஷேகங்கள் சீருடன் சிறப்புற நடந்தேற உதவிய வணக்கத்துக்குரிய அந்தணப் பெருமக்கள், குருக்கள்மார், ஆலய அர்ச்சகர் தலைமைதாங்கி நடாத்திய சிவஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் அனைவரும் நினைவிற் கொள்ளத்தக்கவர்கள்.

மேலும் இப்புண்ணிய கைங்கரியம் நிறைவேற ஆலயத்துடன் ஒன்றிப் பணியாற்றிய அடியார்கள், தொண்டர்கள், உபயகாரர்கள், வழிபடுவோர் சபையினர், புனருத்தாரண வேலைகளுக்குக் கடனடிப்படையிற் பொருட்களைத் தந்துதவிய வர்த்தகப் பெருமக்கள் மற்றும் சரீர, நிதி உதவி வழங்கிய அனைவருக்கும் எம்பெருமான் அருளாட்சி கிடைக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலைவாழ் எம்பெருமான் அடியவர்கள் மட்டுமன்றி, இலங்கைவாழ் எம்பெருமான் அடியார்களும், புலம்பெயர்வாழ் அடியார்களும் வழங்கிய ஆன்மீக, நிதி உதவிப் பலமானது இக்கைங்கரியம் சிறப்புற நடந்தேற உதவியது என்றால் மிகையாகாது.

எம்முடன் கைகோர்த்து எம்பெருமான் சேவையில் இணைந்த அனைவருக்கும் மாவடியான் அனுக்கிரகமும், ஆசியும் வேண்டுவதுடன் அல்லலுறும் எமது உடன்பிறப்புக்களுக்கு அமைதி, நல்வாழ்வு கிடைக்க மாவடியானைத் துதித்து நிறைகின்றேன்.

**சின்னத்தம்பி இராமலிங்கம்**
முகாமையாளர்,
மீசாலை திருநீலகண்டவெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தர்மகர்த்தாசபைத் தலைவரின் செய்தி

## மாவடியான் பாதம் பணிந்து

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற் கிணங்க, எமது தென்மராட்சி மக்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் ஆலயமாக திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் அமைந்துள்ளது.

வேண்டுபவர்க்கெல்லாம் வேண்டுபவற்றைக் கொடுத்தருளு கின்றபடியால்தான் எம் மக்கள் எல்லோரினதும் மனதில் பிள்ளையார் குடிகொண்டுள்ளார். இதன் நிமிர்த்தம் எமது ஆலயம் படிப்படியாக வளர்ச்சி கண்டு வருவது அனைவரும் கண்கண்ட உண்மையாகும்.

இம்முறை (04 . 06 . 2010) நடைபெற்ற குடமுழுக்கானது, பாலஸ்தா பனம் செய்யப்பட்டு ஐந்துமாதக் காலப்பகுதிக்குள் பல லட்சம் ரூபா பெறுமதியான திருப்பணிவேலைகள் நிறைவுசெய்யப்பட்டு நடந்தேறி யுள்ளது. மக்களின் மனதில் மாவடியான் மகிமை எவ்வளவு ஆழமாகப் பதிந்து உள்ளது என்பதை குறுகிய காலத் திருப்பணி நிறைவுடன் கும்பாபிஷேக நிகழ்வு கண்டதானது எடுத்துக் காட்டுகின்றது.



மேலும் இவ்ஆலயத்தை சிறப்புற்று செயற்பட செயலாற்றிக் கொண்டிருக்கும் மாவடியான் அடியார் அனைவரையும், தொண்டர்களை யும், அவர்களை ஊக்கமுறச்செய்து செயற்படும் திரு. சின்னத்தம்பி இராமலிங்கம் தம்பதிகளையும் என்றும் மாவடியான் காப்பான் என்பது திண்ணம். திரு. சி. இராமலிங்கம் தம்பதிகளின் நேரகாலம் பாராத உழைப்பாலும், சுமார் ஐம்பது வருடங்களாக எமது ஆலயத்திற்கு கிரிகைகளை எல்லாம் ஆற்றி வந்த பிரம்மஸ்ரீ சிதம்பரக் குருக்கள் அவர்களின் ஆசியாலும் மாவடியான் குடமுழுக்கு இனிதே நிறைவேறியதானது, மனதுக்கு இதம் தரும் பெரும் செயல். இவை யாவும் மாவடியான் கருணையே அன்றி வேறில்லை.

நன்றி

சு. அருளானந்தசிவம்
தர்மகர்த்தாசபை தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தர்மகர்த்தாசபை செயலாளரின் செய்தி

## துன்பங்கள் தீர்க்கும் விநாயகர்

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் இவை ஆன்றோர் மொழிகளாகும். ஆன்மாக்கள் லயித்து ஒன்றுபடும் இடமே ஆலயம். எங்கும் அருவமாய் வியாபித்துள்ள இறைவனை உருவத் திருமேனியிற் கண்டு வணங்கி திருவருள்பெற்று உய்வதற்குரிய இடம் ஆலயமாகும்.



சைவமும் தமிழும் செழித்தோங்கும் இலங்கைமணித்திருநாட்டில் வடபாகமாம் யாழ்ப்பாணத்தின்கண் சகல வளத்தையும் தன்னகத்தே கொண்ட பார்போற்றும் தென்மராட்சியின் சிகரமாய் விளங்கும் மீசாலைப் பகுதியிலே அமர்ந்திருந்து அருளாட்சி புரிகின்ற திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயிலின் மஹா கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளின் பின் நடைபெறுவது எம் கிராம மக்களின் ஆன்மீக எழுச்சியை வளர்க்கும். மாவடிப்பிள்ளையாரின் ஆலயம் உயர்ந்த கோபுரத்துடன் புதியதொரு பரிமாணத்தைப்பெற்று வருகின்றது. குறிப்பிட்ட கால கட்டத்தில் ஆலயம் வளர்ச்சி கண்டிருக்கின்றது. இவ்ஆலயத்தில் தொண்டர்களின் பங்கு சொல்லில் அடங்கா. இப்பாரிய திருப்பணியில் பங்கேற்ற யாவருக்கும் அருள்பாலித்தருள வேண்டும் என வேண்டி இக் கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவுபெற வேண்டுமென திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**சி. செல்வராசா**
செயலாளர்.
தர்மகர்த்தாசபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வழிபடுவோர் சபைச் செயலாளரின் செய்தி

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"



பல நூற்றாண்டுகட்கு முன்பே வழிபட்டு வந்த எமது ஆலயமானது காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப தன்னையும் மாற்றி இன்று தென்மராட்சியிலேயே ஓர் பெயர் சொல்லக்கூடிய விதத்தில் தனது செழுமையை பரப்பி நிற்கின்றது. இவ் ஆலயத்தின் தொன்மையான ஸ்தல விருட்சமான வெள்ளைமாவின் காணிச் சொந்தக்காரரும், முதலியார் என அறியப்பட்டவருமாகிய முகமாலையில் வசித்த அவர் குடும்பத்தினர் உட்பட ஒருசில அடியார்களுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆலயம் இன்று மீசாலை ஊரில் இருக்கக்கூடிய அத்தனை பெருமக்களினதும் நிலம், பொருள், தொண்டு என்பவற்றால் தனக்கேயுரித்தான ஓர் விசாலமான இடத்தினைப் பெற்றுள்ளது. முதலியார் வழித்தோன்றல்கள் என்று கூறத்தக்க கூடிய தர்மகர்த்தா சபையினர் பராமரிப்பில் சிறப்புற யாவும் நடைபெற்றுவந்தாலும் காலத்தின் தேவைக்கு ஏற்ப சிறப்புற வளர்ச்சிகாண வேண்டி மெய்யடியார்கள் பொருள், பண உதவிகளுடன் வளர்வதற்கும் இன்னும் பல்தொண்டினை அடிப்படையாகக்கொண்ட சேவையைச் செய்வதற்கும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட குழுவாக செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆலய முகாமையாளர் அமரர் திரு. த. தம்பிராசா அவர்கள், ஆலய நித்திய அர்ச்சகர் திரு. பா. கணேசலிங்கம் அவர்களும் மற்றும் அமரர் திரு. கந்தையா வேதநாயகம் அவர்களும் இச் சபையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியவர்களாவார்கள்.

*08/05/1991* ஆம் திகதி செயற்குழுக் கூட்டத்தில் சபைக்கு ஓர் உபவிதி (யாப்பு) தயாரிக்க வேண்டும் என்றும் அதற்கு உறுப்பினர்கள் மூவரும் தெரிவு செய்யப்பட்டு கடமையைச் செய்தார்கள். இருந்தும் எமது சபையின் யாப்பை அங்கீகரிப்பதற்கு தர்மகர்தா சபையினரையும் எமது கூட்டத்திற்கு வரவழைத்து அவர்களினதும் அனுசரணையுடன் பொதுச் சபையினர் இவ் உபவிதியினை (யாப்பை) அன்று தீர்மானித்தனர். இரு சபையினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட யாப்பு செயற்படத் தொடங்கியது. சாவகச்சேரி மக்கள் வங்கியில் *14801* என்ற இலக்கமுடைய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. மேலும் எமது சபை இந்து கலாசார அமைச்சினால் பதியப்பட்டுள்ளது. பதிவிலக்கம்: HA/4/J/165

இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் வெள்ளை மாங்காய் காய்க்கும் மரம் இருந்ததா? அல்லது இல்லையா? என்பது தெரியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம். ஆனால் தற்பொழுது வெள்ளை மாங்காய் காய்க்கும் மரம் ஒன்று ஆலய முன்பக்கத்தில் உண்டு. அதன் பழம் மிகவும் இனிமையானதாகும். இதனால் இப்பெயர் தொடர்ந்தும் எங்கும் வியாபித்திருக்கும்.

ஆலய உற்சவ காலங்களில் தேர், தீர்த்தம் போன்ற நாட்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது உற்சவ காலம் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கான பண உதவி, பொருள் உதவி, சரீர உதவிகளை அடியார்கள் வழங்கிவருகின்றனர். இவ்வாறு கிடைக்கும் மீதிப்பணம் அவ்வப்போது மக்கள் வங்கியில் இடப்பட்டு வருகின்றது. தற்போது நடைபெற்ற (2010) மகா கும்பாபிஷேகத்திற்கும் வழிபடுவோர் சபையினால் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

வழிபடுவோர் சபையால் அறநெறிப் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டு ஆரம்ப காலத்தில் 60 மாணவர்கள் கல்வி கற்றார்கள். அதற்கு ஆறு ஆசிரியர்கள் கல்வி கற்பித்தார்கள். அங்கு சமயம், கணிதம், ஆங்கிலம், தமிழ் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டது. பின் 34 மாணவர்கள் கல்வி கற்றார்கள். 3 ஆசிரியர்கள் கடமையாற்றினர். பெரும்பாலான ஆசிரியர்கள் இலவசமாகவும் சில ஆசிரியர்கள் மிகக்குறைந்த வேதனத்துடனும் கடமையாற்றினர். இதற்குரிய பணத்தை சிலர் வழங்கினர். இவ் அறநெறிப்பாடசாலை பதியப்பட்டு அரச அங்கீகாரமும் பெற்றுள்ளது. இவ் அறநெறிப்பாடசாலை அன்னதான மண்டபத்தில், ஆரம்பகாலத்தில் சனி, ஞாயிறு நாட்களில் காலை 8.30 தொடக்கம் 12.00 மணிவரை நடைபெற்றுள்ளது. 2009 தொடக்கம் மாலை 2.00-5.00 நடைபெறுகின்றது.

அறநெறிப் பாடசாலை மாணவர்களிற்கு சமய அறிவு சம்பந்தமான போட்டிகள் வைக்கப்பட்டு அதில் வெற்றியீட்டிய முதல் மூன்று மாணவர்களுக்கும் பரிசில்கள் ஆலய முன் மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன. அத்துடன் இப்பகுதியில் புலமைப் பரிசில் கிடைத்த மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு முகாமையாளர் சி.இராமலிங்கம் உட்படப் பலர் பங்குபற்றினர்.

எல்லாம் வல்ல மாவடி விநாயகன் திருவருளால் எமது ஆலயம் மேலும் சிறப்புறவும், அடியார்கள் நலங்கள் பல பெற்று நற்கதி அடையவும், என்றும் சேவையே கண்ணாக செயற்படவும் எமக்கு அருள் தர வேண்டி நிற்கும் வழிபடுவோர் சபை.

மாணிக்கம் சிவசுப்பிரமணியம்.
செயலாளர்.
வழிபடுவோர் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில்

கையிலை மலையில் உள்ள நந்தவனத்தில் உலாவச் சென்ற உமாதேவியார் பிரணவ சொரூபமாக உள்ள இறைவனைக் கண்டு பிடி அதன் உரு உமை கொள யானை முகத்தையுடைய பிள்ளையார் தோன்றினார் என்பது உலகமறிந்த உண்மை. சிவபிரானைக் கண்டவர்கள் அவர் எவர் என்று கூறியதில்லை. ஆனால் காணாதவர்கள் எம்பிரான் தோடுடைய செவியன் விடையேறி தூவெண் மதி சூடி காடுடைய சுடலை பொடி பூசியவன் உள்ளம் கவர் கள்வன் என்று பரிதவிக்கின்றார்கள் இதைத்தான் கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்பது உண்மை.



1995ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30$^{th}$ திகதி அன்று சூரசம்ஹார தினம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் யாழ் நகரில் உள்ள மக்களை வெளியேறச் செய்தார்கள். அவர்களில் ஒருவன் யாழ் நகரை விட்டு சாவகச்சேரி, சங்கத்தானை பகுதியை அடைந்து அடைக்கலம் தேடி அலைந்த காலத்தில் வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலில் கந்தபுராண படலம் நடைபெறுவதாக அறிந்து அங்கு சென்று புராண படலத்தில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த சந்தர்ப்பம்தான் இந்த பிள்ளையார் கோவில் 2010ஆம் ஆண்டு நடந்த கும்பாபிசேகத்தைப்பற்றி எழுதவேண்டி வந்தது.

ஈழவள நாடானது பல்வேறு புண்ணிய ஷேத்திரங்களால் சிறப்புப் பெற்றதுடன் திருமூலரால் சிவபூமி என்று போற்றப்பட்டதாகும். சைவமும் தமிழும் தளைத்தோங்கி கந்தபுராண கலாச்சாரம் தவழும் திருநாடு. சித்தர்களும், யோகிகளும் அருளாளர்களும் வாழ்ந்து சிவப்பொலிவு பெற்ற தேசம்.

இதிலே பூர்வீக காலம் தொட்டு வரலாற்றுப் பழமை மிக்க சைவப் பலம் பதியாக தென்மராட்சி விளங்குகின்றது. 60 பதிற்கும் கூடிய கிராம சேவையாளர்களைக் கொண்ட பிரதேசம். இதில் ஒன்றுதான் மீசாலை. அங்குதான் திருநீலகண்டப் பிள்ளையார் வெள்ளைமாவடியில் தோன்றி மக்களுக்கு திருவருள் பாலித்து வருகிறார். மீசாலை மா, பலா, வாழை, தோடை, எலுமிச்சையுடன் முருங்கைக் காய்க்கும் பெயர் போன இடம் மாத்திரமன்றி நீர்வளம், நிலவளம் பொருந்திய கிராமமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கோவிலில் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் (வேதாகம சோதிட பூஷணம், கலாபூஷணம்) அவர்கள் பிரதம குருக்களாக வீற்றிருந்து ஆகமவிதி முறைப்படி நித்திய பூஜை,அலங்கார பூஜை, துவாராபனம் ஆகியவற்றை சிறப்பாக நடாத்தி வருவதுடன் புராண படனம், திருமுறை ஓதல் ஆகிய சிவ தொண்டுகளையும் தொண்டர்களின் உதவியுடன் நடைபெற்று வருவது கண்கூடு.

கும்பாபிஷேகம் 12 வருடங்களுக்கு ஒரு முறை திருக்கோவிலை புனிதமாக்கும் கைங்கரியம். இது சிறப்புற நடைபெற தொண்டர் நாள்தோறும் துதி செய்யும் வெள்ளை மாவடிப் பிள்ளையார் திருவருள் புரிவர் என்பது சொல்லவும் வேண்டுமா?

மு. ஆறுமுகம்
இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபர்
பௌராணிக வித்தகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பாகம் 1

# ஆலய விடயங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அநுபூதி

*(மூலமும் உரையும்)*

காசியப்ப முனிவர் அருளியது

### நூற் சிறப்பு

காசிப முனிவரால் அருளப்பட்ட இவ் விநாயகர் அநுபூதி இலகுவாகப் பாராயணம் செய்யக்கூடிய எளிய நடையிலும், பொருள் உணர்ந்து தாளக்கட்டுக்கு அமைவாகவும், இசையோடும் பாடுவதற்கும் சிறப்புடையதாகும்.

மேலும், இந் நூலை நாள்தோறும் பாராயணம் செய்பவர்கள் அத்தியாவசிய சிறப்புக்களான நாநலம் பெற்று, சொல்வன்மை அடைந்து, கீழ்மைப் பண்புகளை அழித்து, முழுமுதலை உணர்ந்து பேரின்பம் பெறுதல் போன்ற வேண்டுதல்களையும் பெறுவர் என்பதில் சந்தேகமில்லை. எனவே, விநாயக அடியார்களுக்கு இந்நூல் ஓர் வரப்பிரசாதமாகும்.

### நாநலம் பெற

1. *பூவார் புனிதா! புவனத்தலைமைத்*
*தேவா! கரியின் சிரமே உளவா!*
*மூவாத் தமிழால் முறையே உனைஎன்*
*நாவால் புகழும் நலமே அருள்வாய்.*

**பொழிப்பு:**

அழகு பொருந்தியவனே! ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் தலைவன் ஆனவனே! யானையின் முகத்தைக் கொண்ட வனே! நான் உன்னைப் பழமையான தமிழால் புகழ்ந்து பாடும் வலிமையை எனக்கு அருள்வாய்.

### சொல்வன்மை பெற

2. *வில்லாண் மையரும் விரிமா தமிழில்*
*வல்லாண் மையரும் வளமாய்ப் புகழும்*
*நல்லாண் மையது நனியே மிளிரும்*
*சொல்லாண் மைகொடு எந்துரியப் பொருளே!*



**பொழிப்பு:**

துரியப் பொருள் ஆனவனே! தோள் வலிமை மிக்கவரும், தமிழில் புலமை மிக்கவர்களும் உன்னைப் புகழ்வார்கள். அவ்வாறே நானும் உன்னைப் பாட சொல்வன்மையை எனக்குக் கொடுப்பாயாக!

### கீழ்மைப் பண்புகள் அழிய

3. *காமா திகளாம் கயமைப் பிணிகள்*
*போமா(று) அருள்வாய் புரைதீர்த்து எனைஆள்*
*கோமா! கருணைக் குகனார் தமையா!*
*பூமா! பொலமார் புலவா! வருவாய்!*

**பொழிப்பு:**

தலைவனே! முருகனின் சகோதரனே! பூவுலகுக்குத் தலைவனே! ஞான வடிவான புலவனே! காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் கீழ்த்தரமான பண்புகள் என் உள்ளத்திலிருந்து போகும்படி அருளி, என் குற்றம் தவிர்த்து என்னை ஆட்கொள்வாயாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழு முதலை உணர

4. அத்தே வர்களும் அயன், மால் அரனும்
சுத்தாத் துவிதத் துறைநின் றவரும்
"கத்தா கரிமா முகத்தான்" எனவே
வித்தா ரமொடு விளம்பும் இறையே!

பொழிப்பு:

தேவர்கள், திருமால், நான்முகன், சிவபெருமான், சைவ சித்தாந்திகள் போன்றவர்களால் "வழிபடுவதற்கு உரிய முழுமுதற் கடவுள் விநாயகனே ஆவான்" என்று புகழப்படும் விநாயகனே!

குருவாய் வந்து அருளுவான்

5. காவா எனைஐங் கரனே! மதுரப்
பாவா ணர்புகழ் பரமென் குருவே!
நீவா விரைவாய் நிமலன் புதல்வா!
தாவா கருணைத் தளிர்சே வடியே!

பொழிப்பு:

ஐந்து கைகளை உடையவனே! என்னைக் காப்பாய். இனிமையாகப் புலவர்களாற் பாடப்படும் குருவே! தூய்மையான வடிவுடைய சிவபெருமானின் மைந்தனே! நீ வருவாயாக. குற்றமில்லாத கருணையைப் பொலியும் தளிர் போன்ற செம்மையான அடிகளை உடையவனே!

பேரின்பம் பெறுக

6. ஒருகொம் புடையான்; உயர்மோ தகமே
விரும்பும் பெருமான்; விடையோன் குமரன்,
கரும்பார் தொடையன்; சுகமா குமெலாம்
அருள்வான்; அருள்வான்; அடியார் அவர்க்கே!

பொழிப்பு:

ஒற்றைக் கொம்பை உடையவன்; மோதகத்தை விரும்பும் பெருமான்; சிவபெருமானின் மைந்தன்; வண்டுகள் மொய்க்கும் மாலையை உடையவன்; அடியவர்களுக்கு இன்பங்களை அருள்வான்.

விதியினால் வரும் வேதனை நீங்க

7. பேழ்வாய்ப் பெரியோன் பெரும்பூங் கழலைச்
சூழ்வார், பணிவார், துதிப்பார் அவர்க்கே
ஊழ்வே தனைதீர்(து) உளமே மகிழ
வாழ்வே தரும்வல் லபைநா தனரே!

பொழிப்பு:

சிறப்புப் பொருந்திய வாயினை உடைய விநாயகனின் மலர்போன்ற திருவடிகளை அணுகுபவர், பணிந்து வணங்குபவர், புகழ்ந்து பாடுபவர் ஆகியவர்களின் முன்வினைப் பயனைத் தீர்த்து, நல்ல வாழ்வைத் தருபவன் வல்லபையின் நாதனே ஆவான்.

பேய், பூதம், பில்லி, சூனியங்களால் வரும் துன்பங்கள் அகல

8. பேய்பூ தமொடு பில்லிசூ னியமும்,
பாய்வேங் கையதும் பரையின் அருமைச்
சேய்வா ரணனார் திருப்பேர் புகலப்
போய்மாய்ந் திடுமே புனிதம் வருமே!

பொழிப்பு:

பராசக்தியின் புதல்வனாகிய விநாயகனது திருப்பெயரைச் சொல்பவருக்குப் பேய், பூதம், பில்லி, சூனியம் போன்றவற்றாலும், வேங்கை முதலிய விலங்குகளாலும் விளையும் தீமைகள் போகும், தூய்மையும் வந்தடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்ல புலமை பெற

9. பல்காப் பியங்கள் பகரும் திறமும்
ஒல்காப் புகழும், உயிர்செல் வமதும்
நல்காய் நலமாய்; நளின மலர்த்தாள்
செல்வா! திகழ்ச்சித் திவிநா யகனே!

பொழிப்பு:

அழகான மலர் போன்ற அடிகளை உடைய செல்வனே! சித்தி விநாயகனே! நான் பல்வகைக் காப்பியங்கள் இயற்றும் திறமைமையும், அழியாத புகழையும், சிறந்த செல்வத்தையும் பெற அருள்வாய்!

சிறியவனும் அருள் பெற

10. பூந்தார் குழல் வில் புருவம், தளிர்போல்
ஆந்தே கம்மிளிர் அணியார் இருவர்
சார்ந்தே விளங்கும் தனிமா முதலே!
தேர்ந்தே தொழுதேன் சிறியேற்(கு) அருளே!

பொழிப்பு:

மாலையை அணிந்த கூந்தலையும், வில்போன்ற புருவங்களையும், இளந்தளிர் போன்ற உடலினையும் பெற்றிருக்கும் சித்தி, புத்தி என்ற தேவிமார் இருவரையும் பெற்று எழுந்தருளியிருக்கும் ஒப்பில்லாத முதல்வனே! உன்னைத் தொழுதேன், சிறியவனாகிய எனக்கும் அருள் செய்வாயாக!

புலன்களை அடக்க

11. வஞ்சப் புலன்என் வசமாய் நிசமாய்க்
கொஞ்சிக் குலாவிக் குணமாய் மிளிர
எஞ்சித் தமதில் இனிதே உனது
கஞ்சக் கழல்வை கணநா யகனே!

பொழிப்பு:

தேவர்களுக்கெல்லாம் தலைவனே! என்னை வஞ்சித்துத் தீய வழியில் சேர்க்கும் ஐம்புலன்களும் என் அறிவுக்கு உட்பட்டு நல்ல செயல்களைச் செய்பவையாய் மாறி ஒளி விடுவதற்கு, என் சித்தத்தில் உனது தாமரை போன்ற அடிகளை வைப்பாய்!

வறுமை நீங்கிச் செல்வம் பெறுக

12. பொல்லா வறுமை, புரைசால் கொடுநோய்
எல்லாம் ஒழித்தே எனைஆண் டிடவே
வல்லாய் வருவாய்; வளமே தருவாய்;
உல்லா சமிளிர் ஒருகை முகனே!

பொழிப்பு:

அழகான துதிக்கையை உடையவனே! பாவங்களைச் செய்யத் தூண்டும் வறுமையையும், கொடிய நோய்கள் எல்லாவற்றையும் அழித்து என்னை ஆண்டுகொள்ள வல்லமை பெற்றவன் நீ ஒருவனே! எனக்கு வளங்களைத் தருவாய்.

இப்பிறவிப் பயன் பெற்று வீடுபேறு பெற

13. மகத்தாய், அணுவாய், மதியாய்க், கதிராய்,
செகத்தாய், அறிவாய்த் திகழ்சாட் சியதாய்
அகத்தும், புறத்தும் அகலாப் பொருளாய்,
இகத்தும் பரத்தும் இருக்கும் பரமே!

பொழிப்பு:

பெரிதாயும், அணுவாயும், சந்திரனாயும், சூரியனாயும், சகமாயும், அறிவாயும், நல்வினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவினைகளுக்குச் சாட்சியாயும், அகத்திலும் புறத்திலும் அகலாத பொருளாயும் இம்மைப் பயனாயும், மோட்சமாயும் திகழும் விநாயகனே!

#### நிறைந்த அருளைப் பெற

14. *கருணைக் கடலைங் கரனே! கபிலர்க்(கு)*
*அருளே கொடுத்தாய் அபயம் அளித்தாய்!*
*தருவே அனையாய்! தமியன் தனைஆள்*
*குருவே பொறுமைக் குணநா யகனே!*

**பொழிப்பு:**

கருணைக் கடலாகத் திகழும் ஐந்து கரத்தானே! கபிலருக்கு அருளைக் கொடுத்து, அடைக்கலம் தந்தாய். கற்பக மரம் போன்றவனே! தனியான என்னை ஆளும் குருவே! பொறுமை மிக்க குணங்களுக்கெல்லாம் தலைவனே!

#### அருட்பாடல்கள் இயற்ற

15. *கற்பார் இதயக் கமலத்(து) உறையும்*
*அற்பார் ஒளியே! அழகுஆ னைமுகா!*
*பொற்பாய் உனது பொலந்தாள் மலர்க்கே*
*நற்பா கொடுத்தேன் நனிஏற்(று) அருளே!*

**பொழிப்பு:**

கற்பவர்கள் உள்ளத் தாமரையில் ஒளியாக எழுந்தருளுபவனே! அழகிய ஆனை முகத்தவனே! உன் பொன்போன்ற திருவடிகளுக்கு நல்ல பாமாலையை நான் கொடுத்தேன். இதை நீ ஏற்றுக்கொண்டு அருள் புரிவாயாக!

#### செய்த பிழைகள் எல்லாம் தீர

16. *ஆற்றல் அறியேன் அடிசெய் பிழைதீர்*
*சீற்றம் தவிர்வாய் திகழ்சிற் பர! யான்*
*சாற்றும் தமிழ்மா லைதனைத் துதிக்கை*
*ஏற்றே அருள்வாய்! அருள்வாய் இனிதே.*

**பொழிப்பு:**

உன் கருணைத் திறம் அறியாத நான் உன் திருவடிகளிற் செய்த பிழைகளைத் தீர்ப்பாய்! கோபம் தவிர்ப்பாய்; பரம்பொருளானவனே! நான் இயற்றிய தமிழ் மாலையை உனது துதிக்கையில் ஏற்று அருள்வாய்.

#### எல்லாப் பிறவிகளிலும் இறை எண்ணம் பெருக

17. *எந்தப் பிறப்பை எடுத்தா லும்உனைச்*
*சொந்தத் தமிழால் துதிசெய் திடவே*
*கொந்தே அலர்தார்க் குழல்வல் லபையாள்!*
*சிந்தைக்(கு) உகந்தாய்! சிறப்பாய் அருளே!*

**பொழிப்பு:**

மணம் வீசும் மலர் மாலைகளை அணிந்த வல்லபையின் மனத்திற்கு உகந்தவனே! நான் எந்த வகையான பிறப்பினை எடுத்தாலும் உன்னை என்னுடைய தமிழ்மொழியாற் போற்றி வழிபட எனக்கு அருள் செய்வாய்.

#### பழைய பாவங்கள் தீர

18. *சிந்தா மணிதான் திகழ்மார் புடையாய்!*
*முந்தை வினையை முழுதும் தொலைத்(து) ஆள்*
*எந்தாய்! எளியேன் எனைநீ எழிலாய்*
*வந்துஆள்! உயர்ஓம் வடிவப் பொருளே!*

**பொழிப்பு:**

என் தந்தையே! பிரணவத்தின் வடிவாகவும், பொருளாகவும் விளங்குபவனே! சிந்தாமணி விளக்கும் மார்பை உடையவனே! முற்பிறப்பு வினைகளை முழுதும் தொலைத்து எளியவனான எனக்கு முன் அழகாகத் தோன்றி வந்து ஆள்வாயாக!

#### வலிமை பெற

19. *பகையார் அவர் முப் புரமே பொடியா*
*நகைசெய் தபிரான் நலமாம் கனியை*
*வகையாய் அருள வலம்வந் தவனே!*
*தகையாய்! திடம்நீ தருவாய் மணியே!*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு:

முப்புரங்களையும் தன்னுடைய சிரிப்பினால் பொடிசெய்த சிவபெருமான், ஞானப் பழத்தை உனக்கே கொடுக்கும்படி, அவனையும், உமையம்மையையும் வலம் வந்தவனே! சிறந்த பண்பை உடையவனே! எனக்கு வலிமையை தந்தருள்வாய்.

எல்லாச் செல்வங்களும் பெற

20. சீரோங் கிடும்; நல் திறமும் பெருகும்;
ஏரோங் கிடுமே; இனிதாம் திடமே
பேரோங் கிடும்; நல் பெரும்வே ழமுகன்
தாரோங் கடியைத் தொழுவார் தமக்கே!

பொழிப்பு:

யானை முக விநாயகனின் திருவடிகளைத் தொழுபவர்களுடைய புகழ் ஓங்கும். நன்மைகள் பெருகும். அழகு மிகும்; வலிமை மிகுதியாகும் என்பது உறுதி.

குழந்தைப் பேறும் செல்வமும் பெற


21. மகப்பே(று) அருள்வான்; மகிழ்வாய் நிதியை
அகத்தே தருவான்; அணியன்; கரிமா
முகத்தான் அடியை முறையாய் நிறையாய்ச்
செகத்தீர் தொழுமின்! தொழுமின்! தினமே!

பொழிப்பு:

விநாயகன் குழந்தைப் பேற்றினை அருள்வான்; இல்லங்களில் எல்லாம் மகிழ்ச்சியுடன் செல்வத்தைத் தருவான்; அவன் அருகிலேயே இருப்பான்; விநாயகனின் திருவடியை முறையாக நாள் தோறும் தொழுவீர்களாக.

நவக்கிரகங்களும் நல்லருள் புரிய

22. பெருமைப் பரிதி, பிறை, இத் தரைசேய்,
அருமால், குருவே, அசுரர் குரவன்,
கருமை அரவு கள்இவை நலமாம்
ஒருகை முகன்பேர் உரைப்பார் அவர்க்கே!



பொழிப்பு:

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கிரகங்களும், விநாயகருடைய திருப் பெயரை உச்சரித்தவர்களுக்கு எப்பொழுதும் நன்மைகளையே செய்யும்.

மன அமைதி பெற

23. ஓடித் திரிவாய் உலகுஏ ழும்மிக
வாடித் திரிவாய் மனனே! தகுமோ
கூடிக் குலவா ஒருகோ டனைநீ
பாடிப் பணிவாய் பணிவாய் நலமே!

பொழிப்பு:

என் மனமே! அமைதியைத் தேடி ஏழு உலகங்களிலும் திரிந்தாய். இது உனக்குப் பொருத்தமுடையது அன்று. ஒற்றைக் கொம்பை உடைய விநாயகனைக் கூடுவாய்! பாடிப் பணிவாய்.

பயமின்றி வாழ

24. ஏகாக் கரனை எழில்ஐங் கரனைப்
பூகாப் பவனைப், பொறுமைக் குணனை,
மாகா ளியவள் மகனை, மனனே
நீகா எனவே நிதமும் பணியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொழிப்பு:

மனமே ஓங்கார வடிவை உடையவனை, அழகிய ஐந்து கரங்களை உடையவனை, உலகைக் காப்பவனை, அடியார்கள் செய்யும் பிழைகளைப் பொறுப்பவனை, சக்தி மகனாகிய விநாயகனை அடைந்து, "நீ காப்பாய்" என்று நாள்தோறும் பணிவாயாக!

நலங்கள் பல வந்து சேர

25. *தேடிப் பணிவார் சிலபேர்; சிறப்பாய்*
*ஆடிப் பணிவார் சிலபேர்; அணியாய்ப்*
*பாடிப் பணிவார் சிலபேர்; அவரை*
*நாடித் தருவான் நலம்ஐ முகனே!*

பொழிப்பு:

விநாயகப் பெருமானைச் சிலர் தலங்கள் தோறும் தேடிச் சென்று பணிவார்கள்; சிலபேர் அவனைப் பாடி, ஆடிப் பணிவார்கள். சிலபேர் கூட்டம் கூட்டமாய் கூடிப் பாடிப் பணிவார்கள். இவ்வாறு பத்தி செய்பவர்களைத் தேடிப்போய் விநாயகன் நலன்கள் பலவற்றைத் தருவான்.

பகை நீங்க

26. *துட்டர் குதர்க்கர் தொலைந்தே பொடியாய்ப்*
*பட்டே இரியப் படையை விடுவாய்!*
*சிட்டர் புகழும் திறமே! வளரும்*
*மட்டில் மதமார் மழலைக் களிறே!*

பொழிப்பு:

பொல்லாதவர்களும், முறையில்லாமல் வாதம் செய்பவர்களும் பொடிப் பொடியாகப் போகும்படி, தன் திருக்கரத்தில் உள்ள படைக் கலத்தை விடுபவனே! நல்லவர்கள் புகழும் உறுதிப் பொருளே! அளவில்லாமற் கருணை யாகிய மதநீர் பொழியும் அழகிய விநாயகரே!

இதமான வாழ்வு பெற

27. *விண்நீ; உடுநீமிளிர்வா யுவும்நீ;*
*மண்நீ; அனல்நீ; புனல்நீ; மதிநீ;*
*கண்நீ; மணிநீ; கவினார் ஒளிநீ;*
*எண்நீ; உனைஆள் இதம்செய் பவனே!*

பொழிப்பு:

வானும் நீ; அதில் விளங்கும் விண்மீன் களும் நீ; சந்திரனும் நீ; இவற்றைக் காணும் கண் நீ; கண்ணினுள் மணி நீ; அதில் ஒளிரும் ஒளி நீ; எண்ணப்படுகின்ற பொருள் நீ; என்னை ஆட்கொண்டு நன்மை செய்பவனே!

நல்ல வழியில் செல்ல

28. *தீய நெறிநாத் திகத்தில் திளைத்தே*
*ஆய நெறியை அறியா திருந்தேன்*
*தூய நெறியின் தொடர்காட் டினைநீ*
*ஆயும் நெறியும் அறிவித் தனையே!*

பொழிப்பு:

விதி வசத்தால் நாத்திகத்தில் உழன்றேன்; உன் அருளைப் பெறும் சன்மார்க்க வழியை அறியாமற் காலம் கழித்தேன்; தூய்மையான பக்தி வழியைக் காட்டினாய்; நான் உய்யும் நல்ல வழியை அறிவித்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவித் துன்பம் நீங்க

29. தொல்லைப் பிறவித் துயர்மா கடலுள்
அல்லல் வழியில் அழுந்தல் முறையோ!
செல்வா! பிரமச் செழுமா மணியே!
நல்லாய் கரையேற் றிடும்ஐங் கரனே!

பொழிப்பு:

நான் தொடர்ந்து வரும் பிறவியாகிய துன்பக் கடலில் மூழ்கி அழுந்திக் கிடப்பது முறையோ? செல்வனே! பிரமனும் போற்றும் மணியே! நன்மை புரிபவனே! என்னைக் கரை ஏற்றிடும் ஐந்து கரமுடையவனே!

அறியாமை அழிய

30. மாயை எனும்கார்த் திரையைத் தெரித்துஎன்
பேயை விரட்டும் பெருமான் ஒருவன்!
தாயை நிகர்த்த தனிமா முதல்வன்;
காயைக் கனிஆக் குவன்கண் ணியனே!

பொழிப்பு:

உயர்ந்தவனே! நீ மாயை என்னும் கரிய திரையைக் கிழித்து, என் மனதில் தோன்றும் அச்சமாகிய பேயை விரட்டக் கூடிய பெருமான். தாயைப் போன்ற ஒப்பற்ற முதல்வனே! காயையும் கனி ஆக்குவது போல், பக்குவம் இல்லாத என்னையும் பக்குவப் படுத்துபவனே!

நன்மைகள் பெற

31. அயில்கை உளநம் அறுமா முகற்கே
மயிலூர் திதனை மகிழ்ந்தே அளித்தான்;
செயிர்தீர் அடியார் சிறப்பாம் வகையில்
ஒயிலாய் நலம்தந்(து) உயர்த்தும் அவனே.

பொழிப்பு:

அடியார்கள் சிறப்படையும்படி நன்மைகளைச் செய்து, அவர்களை உயர்த்துபவன் விநாயகப் பெருமானே ஆவான். அவன் வேலைத் தாங்கிய முருகனுக்கு மயிலை வாகனமாக மகிழ்ந்து அளித்தான்.

அர்ச்சித்து அருளைப் பெற

32. கரிமா முகனின் கருணை அறியார்
எரிவாய் நரகில் இடரே படுவார்;
விரிமா தவரும் விரும்பும் பெரியோன்
அரிதா அருச்சித்(து) அவனைப் புகழே.

பொழிப்பு:

யானை முகத்தவனின் கருணைத் திறத்தை அறியாதவர்கள் வெம்மையான நரகத்தில் துன்பப்படுவார்கள். தவத்தை விரும்பிச் செய்யும் தவசிகள் விரும்பும் விநாயகனை வழிபட்டு அவனைப் புகழுங்கள்.

எண்வகைச் சித்திகளைப் பெற

33. இருநான்(கு) அவதா னம்எண்சித் திகளும்
பெருமான் உமையின் பெரும்பிள் ளையவன்
தருவான்! தருவான்! தரவே விரைவாய்
வருவான்! வருவான்! வழுத்தாய் மனனே!

பொழிப்பு:

உமையம்மையின் மைந்தனாகிய விநாயகன் எட்டு அவதானங்களையும், எட்டுச் சித்திகளையும் விரைவாக வந்து அருளுவான். அத்தகையவனை, மனமே! போற்றுவாயாக!

பிரணவப் பொருளை உணர

34. கருமால் வினையைக் களைந்தே அருளும்
திருவைந் தெழுத்தும், திகழா றெழுத்தும்,
இருநான் கெழுத்தும் எமதுஐங் கரனார்
ஒருபேர் எழுத்தே; உணர்வாய் மனனே!

பொழிப்பு:

இரு வினைகளையும் போக்கும் நமசிவாய என்னும் ஐந்தெழுத்தும், நம குமராய என்னும் ஆறெழுத்தும், ஓம் நமோநாராயணாய என்னும் எட்டெழுத்தும், விநாயகருக்குரிய ஓம் என்னும் ஒரே எழுத்தில் அடக்கம் என்பதை, மனமே! உணர்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை எண்ணம் பெற

35. அளவைக் கடந்தான்; அகிலம் கடந்தான்;
உளதத் துவத்தின் உயர்வைக் கடந்தான்;
வளமாய் நிலைமேல் வகிப்பான் பெரியோன்
உளமே அறிந்துஇன் புறவே வருவாய்!

பொழிப்பு:

விநாயகன் பிரமாண அளவைகளுக்கு அப்பாற்பட்டவன்; இவ்வுலகைக் கடந்து நின்றவன்; முப்பத்தாறு தத்துவங்களின் உச்சியில் நின்று கடந்து நிற்பவன். அத்தகையவன் என் மனமாகிய இருப்பிடத்தை அறிந்து நான் இன்புறும்படி வரவேண்டும்.

பழித்தோர் துன்பம் நீங்க

36. கத்தும் தரங்கக் கடல்சூழ் புவியில்
தித்தித் திடும்செந் தமிழ்மா லைசெயும்
வித்தர் களின்தீ வினையை விலக்கும்
அத்தித் தலைவன் அருட்பார் வையதே!

பொழிப்பு:

கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தில், இனிமையான செந்தமிழாற் பாமாலை புனையும் கவிஞர்களின் தீவினைகளை எல்லாம் யானை முகத்தவன் அருட்பார்வை நீக்கிவிடும்.

நல்ல கவி பாட

37. ஆரா அமுதம் எனஆ சுகவி
சீராப் புகலும் திறமே அருள்வாய்!
தீராக் கலைகள் திகழ்வா ரிதியோ!
வாராய்! வளமே வளர்வா ரணனே!

பொழிப்பு:

வளமெல்லாம் அளிக்கும் யானை வடிவானவனே! முடிவில்லாத கலைகளால் நினைந்த கடலே! தெவிட்டாத அமுதம் போன்று ஆசு கவிகளை உன் புகழுக்காக நான் பாடும் ஆற்றலை அருள்வாய்!

விநாயகனைக் கண்டு மகிழ

38. வேதா கமமே மிகவும் புகழும்
பாதாம் புயனே! பணிசெய் அடியேற்(கு)
ஆதா ர!நின(து) அருட்காட் சிதர
வாதா எழில் "ஓ" வடிவா னவனே!

பொழிப்பு:

வேதங்களும், ஆகமங்களும் புகழும் திருவடிகளை உடையவனே! தொண்டு செய்பவர் களுக்கு ஆதாரமானவனே! அழகான ஓங்கார வடிவானவனே! உனது அருட் காட்சியை எனக்காக வந்து தருவாயாக!

விநாயகனின் அருளைப் பெற

39. உம்பர் புகழும் உறுதிப் பொருளே!
தும்பிச் சிரனே! தொழுதேன்; தொழுதேன்;
நம்பும் எனைநீ நழுவ விடாமல்
அம்பொன் கரத்தாய் எனைஆண்(டு) அருளே!

பொழிப்பு:

தேவர்களெல்லாம் புகழ்ந்து பேசும் உறுதிப் பொருளே! யானை வடிவானவனே! உன்னைத் தொழுதேன். உன்னையே நம்பும் என்னைக் கைவிட்டுவிடாமல் உன் அழகிய பொற்கரத்தால் ஆண்டு கொண்டு அருளுவாய்!

குறை தீர

40. கவிஞன் புகலும் கவின்ஆர் தமிழ்உன்
செவிஏ றியும்நீ திருகல் சரியோ
புவிதான் புகழும் புழைக்கைய! கரம்
குவிவேன்; மகிழ்வேன்; குறைதீர்த்தருளே!

பொழிப்பு:

கவிஞர்களால் புகழ்ந்து பேசப்படும் அழகிய தமிழ்ப் பாக்கள் உன் செவிகளில் விழுந்தும் நீ அருளாமல் இருப்பது சரியாகுமோ? உலகத்தார் புகழும் தும்பிக்கையை உடைய வனே! என் இரண்டு கைகளையும் குவித்தேன்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் மகிழ்ந்தேன்; என் குறைகளைத் தீர்த்தருளுவாயாக!

அருள் மழையில் நனைய

41. மங்கை வலபை மணவா என்அருள்
பொங்கும் புனல்போல் பொழிந்தே புவனம்
எங்கும் நிறைந்தே இருக்கின் றதுகண்!
துங்கக் குணத்தீர் புசிமின் தொழுதே!

பொழிப்பு:

வல்லபையின் கணவனாகிய விநாயகனின் அருள் பொங்கி வெள்ளம்போல் இவ்வுலக மெல்லாம் நிறைந்து காணப்படுகின்றது. விநாய கனின் குணங்களைப் பாடுபவர்களே! அவன் கருணை வெள்ளத்தை வழிபட்டு அனுபவி யுங்கள்.

ஆணவம் அகல

42. மூல மலவா தனைதீர் முதல்வா!
சீல செழும்செம் சடையன் சிவனார்
பால! உயர்தற் பரனே! அருள்தா!
கோலம் மிளிரும் குணமார் பொருளே!

பொழிப்பு:

மூல மலமாகிய ஆணவ மலத்தைத் தீர்க்கும் முதல்வனே! அற வடிவான சிவபெரு மானுடைய மைந்தனே! உயர்ந்த பரம் பொருளே! அழகொளி வீசும் குணங்களால் நிறைந்த பொருளே! அருள் தருவாயாக!

பக்குவம் பெற

43. சித்தி தரும்சத் திநிபா தமதே
எத்தி னமதில் எனைவந்(து) உறுமோ!
அத்தி முகவா! அருமைத் தலைவா!
சத்தி தனையா! தமியற்கு உரையே!

பொழிப்பு:

யானை முகத்தவனே! பெருமை மிக்க தலைவா! பராசக்தியின் மைந்தனே! பக்குவ ஆன்மாக்களிடம் திருவருள் பற்றுவதாகிய தன்மை எந்த நேரத்தில் என்னிடம் வந்து சேருமோ? எனக்கு சக்திபாதம் வாய்க்கும் நாளை உரைப்பாயாக.

துயரம் நீங்க

44. முதல்வா படவே முடியா(து) இனிநோ
இதமே அருளா(து) இருத்தல் எனை? பொற்
பதமே உடையாய்! பணிந்தேன்! பரையின்
புதல்வா அருளாய்! புரைதீர்ப் பவனே!

பொழிப்பு:

பொற்பாதங்களை உடையவனே! பராசக்தியின் மைந்தனே! அருள்வாய்! குற்றங் களைத் தீர்ப்பவனே! தலைவா! என்னால் இனித் துன்பப்பட இயலாது. என்ன காரணத்தினால் எனக்கு இன்னமும் அருள் புரியாமல் இருக்கி றாய்?

பேரருள் பெற

45. சீலன் துதிக்கைச் சிரனை அனவே
ஞாலத் தினிலே நலம்ஈ வர்எவர்!
கோலச் சிகிவா கனனாம் குகனும்
சாலப் புகழும் தனிமன் அவனே!

பொழிப்பு:

யானை முகத்தனைப் போல உலகத்தில் இனி நன்மைகளை அருளுபவர் யார் உள்ளார்கள்? மயில் வாகனனாகிய முருகனாலும் மிகவும் ஒப்பற்ற தலைவன் விநாயகனே ஆவான்.

கவலைகள் ஒழிய

46. திண்தோள் சதுரும், திகழ்ஐங் கரமும்,
வண்டார் குழலார் மகிழ்ந்தே மருங்கில்
பண்டே வளர்கோ லமதைப் பணிவாய்க்
கண்டேன்; களித்தேன்; கவலை இலனே!

பொழிப்பு:

திண்மையான நான்கு தோள்களையும், ஐந்து கரங்களையும், இரண்டு பக்கங்களிலும் சித்தி புத்தியாகிய தேவிமார் இருவரையும் பெற்ற விநாயகனுடைய அழகிய கோலத்தைக் கண்டேன்; மகிழ்ந்தேன்; கவலைகள் எல்லாம் என்னை விட்டு நீங்கி விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெற

47. மோன நிலையில் முழுசித் திபெறும்
ஞானம் தருவாய்! நலமார் பெரியோய்!
தீனன் எனைஆள் திருமன் கருணைத்
தேனம் எனவே திகழ்கின் றவனே!

பொழிப்பு:

அருள்நலம் மிக்க பெரியவனே! அருளாகிய கடல் போன்று திகழ்பவனே! நான் மௌனத்தில் மூழ்கி முழுமையான பரஞானம் பெற அருள்வாய்! அறிவிலியாகிய என்னை ஆள்வாயாக!

பிறவி அச்சம் நீங்க

48. அச்சம் விடுத்தேன் அரனார் முதலோர்
மெச்சும் படியாய் மிளிர்ஐங் கர! நின்
பச்சைத் தளிராம் பதமே பலமாய்
இச்சை யுடனே பிடித்தேன் இதமே!

பொழிப்பு:

சிவன் முதலானவர்கள் புகழும் ஐந்து கரத்தை உடையவனே! உன்னுடைய தளிர் போன்ற திருவடிகளை விருப்பத்துடன் பிடித்துக் கொண்டேன். அதனாற் பிறவி அச்சத்தை விட்டேன்.

சகல சித்திகளும் பெற

49. பக்தி நெறியில் பலமாய் உறைவார்
அத்தி முகனின் அடியைப் பணிவார்;
முக்தி பெறுவார்; முதன்மை உறுவார்;
சித்தி அடைவார்; திடமே! திடமே!

பொழிப்பு:

பக்தி மார்க்கத்தில் ஈடுபடுபவர்கள் யானை முக விநாயகனின் திருவடிகளிற் பணிவார்கள். அதனால் முக்தியைப் பெறுவார்கள். எண் வகைச் சித்திகளையும் பெறுவார்கள். இது உறுதி.

புகழைப் பெறுவதற்கு

50. தாதா சரணம்; சரணம் தளிர்த்தாள்
நீதா சரணம் சரணம்; நிகர்இல்
வேதா தரனே சரணம்; மிளிர்ஐம்
பூதா சரணம்! புகழ்நாற் புயனே!

பொழிப்பு:

தலைவனே! வேதங்களின் பொருளாக விளங்குபவனே! ஐம்பூதங்களானவனே! நான்கு தோள்களை உடையவனே! விநாயகனே! உனது தளிர் போன்ற பாதங்களை நான் சரணடைவதற்கு தந்தருள்வாயாக.

உலகம் வாழ

51. ஊழி முதல்வன் உயர்வே ழமுகன்
வாழி! திருசத் திகளும் அணியாம்
வாழி! கவினார் வாச மலர்த்தாள்
வாழி! அடியார் வளம்வா ழியவே!

பொழிப்பு:

உலகத்திற்கு முதல்வனான யானை முகன் வாழ்க! சித்தி, புத்தி தேவிகள் வாழ்க! அழகு நிறை அவனுடைய மலர்ப் பாதங்கள் வாழ்க! அடியார்கள் செல்வங்கள் பலபெற்று வாழ்க!

திருப்புகழ்

பக்கரைவி சித்ரமணி பொற்கலனையிட்டநடை
பட்சியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடுபட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும்ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்விருப்பமொடு
செப்பெனஎ னக்கருள்கை மறவேனே

இக்கவரை நற்கனிகள் சர்க்கரைபருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை யிளநீர்வண்
டெச்சல்பய றப்பவகை பச்சரிசிபிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பக்ஷணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனு மருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மான்மியம்



அமரர் நமசிவாயம் ஏரம்பமூர்த்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



**நண்ணிப் பணிமின் நயந்து**

உலகெல்லாம் நன்கு உவந்து புகழும் ஈழவள நாடு வளம்பல நிறைந்து, வானுயர் மா, பலா, வாழை, தென்னை, பனை போன்ற பயன்தரு மரங்கள் ஏராளமாய் எழிலுற வளர்ந்து, வருவார் போவோரை வியந்திடச் செய்யும் நாடு. ஈழவள நன்நாட்டின் சிரசெனத் திகழ்வது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் மிகப் புகழ்பெற்ற ஊர் மீசாலை. இவ்வூர் மாசாலை என அழைக்கப் பட்டிருத்தல்கூடும். ஏனெனில், மீசாலை மாஞ்சோலை நிறைந்த பூமியாக இன்றும் கவினுற விளங்குகின்றது. மீசாலை மாம்பழங்கள் இனிமை சொட்டும் சுவை மிகுந் தது, ஈடிணையற்றவை.

முகமாலைக் கிராமத்தில் வசித்தவரான திரு. கேயரத்தின முதலியாருக்கு மீசாலையில் ஒரு காணிநிலம் இருந்தது. அக்காணியருகே முதிர்ந்த இறைபக்தியுடையவனான முத்தன் என்பவன் வாழ்ந்து வந்தான். கேயரத்தின முதலியார் ஒருநாள் முத்தனை அழைத்து தன்காணியிற் கொள்ளுச் செய்கை மேற்கொள்ளுமாறு கேட்டதற் கிணங்க முத்தனும் கொள்ளு விதைக்க முதலில் அந்த நிலத்தினைக் கொத்திப் பதப்படுத்த ஆரம்பித்தான். தொடர்ந்து கொத்தும்போது திருநீலகண்டம் ஒன்று மாமரமொன்றருகே இருந்த புற்றில் நுழைந்து உட்சென்றதை அவதானித்தான். "இது விடப்பிராணி, இதை விடக்கூடாது, கொன்றொழிக்க வேண்டும்" என எண்ணி அத் திருநீலகண்டம் புகுந்த புற்றதனை ஆழத் தோண்ட அவ்விடத்தில் இரத்தம் கசிந்தது. இரத்தம் கசிந்த இடத்தைப் பார்த்தபோது அங்கே விநாயகர் சிலையொன்று அவன் கண்ணிற் பட்டது. முத்தன் பயந்து, வியர்க்க; தன் குடிசை சென்று கண்ணயரும்போது அவனது கனவிலே விநாயகப் பெருமான் தோன்றி, "பயப்படாதே! என்னை நீ எடுத்து நீராட்டி; நீ உண்ணப்போகும் உணவை என்முன் நிவேதித்தபின் எடுத்து உண்பாயாக" எனத் திருவாய் மலர்ந்தார். இவ்வியத்தகு விடயத்தை முத்தன் கேயரத்தின முதலியாருக்குத் தெரியப்படுத்த அவரும் மீசாலை வந்து விநாயகரை எடுத்து முத்தனுடன் சேர்ந்து கொட்டில் ஒன்று அமைத்து அதனுள்ளே விநாயகரை வீற்றிருக்கச்செய்து வழிபட்டனர்.

இவ்வற்புத நிகழ்வுக்குப் பலகாலம் முன்பு, மேற்குறித்த காணியில் முனிபுங்கவர் ஒருவர் முத்தன் கண்டெடுத்த விநாயகரை வைத்து வணங்கியுள்ளார். அக்காலத்தே டச்சுக் காரர் ஈழநாட்டினை ஆக்கிரமித்திருந்த தோடு பல அட்டூழியங்களையும் செய்தனர். சைவ ஆலயங்களை இடித்தழித்தும், அவற்றிலிருந்த திருவுருவங்களை அடித்து நொருக்கி உருக் குலைத்தும் வந்ததைக் கேள்வியுற்ற முனிவர் தன்னால் வழிபடப்பட்ட விநாயகரை "வெள்ளை மா" என அழைக்கப்பட்ட மாமரத்தடியில் மறைத்துப் புதைத்துவிட்டார். எனினும் அம் முனிவர் அவ்விடத்திலேயே வதிந்து காலவோட் டத்தில் ஆண்டவன்தாள் சேர்ந்துவிட்டார்.

முனிவராலும் முத்தனாலும் வணங்கப் பட்ட விநாயகருக்குக் கோயில் ஒன்றை அமைக்க விநாயகரின் ஆலயச் சூழலில் வாழ்ந்த அன்பர்கள், அடியார்கள் விரும்பி அதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்தனர். கோயில் அமைக்கக் காட்டினிலே மரந்தறிக்க கேயரத்தின முதலியார் முயன்ற போது காட்டு இலாகா அதிகாரிகள் முதலி யாரைப் பிடித்து நீதிபதி முன் நிறுத்த, நீதிபதியும்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க உடைமையான மரங்களைத் தறித்த குற்றத்திற்காய் அவருக்குச் சிறைத்தண்டனை விதித்தபோது, முதலியார் நீதிபதியைப் பார்த்து, "ஐயா, நீதிபதியவர்களே, காட்டுமரங்களை யான் தறித்தது விநாயகருக்கோர் ஆலயம் அமைத்திடவே" என்றபோதும் முதலியார் கூற்றை அலட்சியம்செய்து முதலியாரைச் சிறையிலிட்டார்.

முதலியார் சிறைப்பட்ட இரவே நீதிவானின் மனைவிக்கு தாங்கொணா மிடற்று (தொண்டை) நோய் ஏற்பட்டது. அதை மாற்றிட திறமைமிகு வைத்திய நிபுணர்கள் பலர் செயற்பட்டனர். அப்பர் சுவாமிகளின் சூலை நோய் போல நீதிவானின் மனைவியின் மிடற்று நோயும் வைத்தியத்தினால் கூடிற்றே தவிர சற்றும் தணியவில்லை.

நீதிபதி அன்று கேயரத்தின முதலியாருக்கு வழங்கிய சிறையை நினைவு படுத்திய போது, "கோயில் திருப்பணிக்கே காட்டு மரத்தைத் தறித்தேன்" என்ற முதலியாரின் கூற்றை ஏற்காது தண்டனை விதித்தது தப்பே என எண்ணி முதலியாரைச் சிறையினின்றும் விடுவித்து முதலியாரைக் கொண்டே விபூதியை மனைவிக்கு இடச்செய்ய அவரின் மிடற்றுநோய் இருந்த இடம் தெரியாமல் உடனே நீங்கிவிட்டது. நீதிவான் விநாயகப்பெருமானின் வியத்தகு திருவருளை நினைந்து விநாயகருக்குப் பட்டுக் குடையுடன் ஆலயத்திற்கான வேறு பொருட்களையும் உபகரித்ததோடு பணிந்து வணங்கி வருவாராயினர்.

முதலியார் காலமானதும் அவரது மகனான கணபதிப்பிள்ளை மணியகாரன் ஆலய முகாமையாளராகப் பொறுப்பேற்று ஆலயத்தை நிர்வகித்து வந்தார். கணபதிப் பிள்ளை மணியகாரனும் காலமாகிய பின்னர் அவருடைய மகன் சரவணமுத்து நொத்தாரிசு ஆலய நிர்வாகத்தரானார். இவருடைய காலத்தில் "அம்பலவாணி" என்றோர் அந்தண ஆலயக் கள்வன் கோயிலினுட் புகுந்து பெறுமதிமிக்க பொருட்களை எடுத்து வெளியே வரும்போது அவனுடைய கண்கள் பார்வையை இழந்தன. செய்வதறியாது அவன் தட்டுத்தடுமாறி ஆலயத் துக்கு அண்மையில் நின்ற சண்பக மரத்தில் ஏறியிருந்தான். (இச் சண்பகமரம் ஆலயத் திருப்பணிகள் விஸ்தரிக்கப்பட்டபோது அண்மை யிலேயே அகற்றப்பட்டது). அன்றிரவு முகாமையாளரான சரவணமுத்து நொத்தாரிசு அவர் களுக்கு விநாயகப் பெரு மான் கனவிலே தோன்றி, "கள்வன் ஒருவன் சண்பக மரத்திலே இருக்கிறான். நீ அவ்விடம் சென்று அவனிடமுள்ள பொருட்களை வாங்கிக்கொண்டு அவனுக்கு விபூதி கொடுத்துவிடு. அவனை ஒன்றும் செய்யாதே" என்று திருவாய் மலர்ந்து அருளினார். மாவடியான் திருவாக்குப்படி முகாமையாளர் சரவணமுத்து நொத்தாரிசு ஆலயம் வந்து கள்வனை மரத்திலே கண்டு அவனை இறக்குவித்து விபூதி கொடுக்கவும் அவனது கண்பார்வை மீண்டது. அவன் கோயிலை வலம் வந்தான். வாயினில் நின்று "நான் இனிக் களவு செய்யமாட்டேன்" என்று சத்தியம்செய்தான். பின்பு ஒருநாள் ஒரு வில்வ மாலையை பிள்ளையாருக்குக் காணிக்கையாகக் கொடுத்தான்.

இதன்பின் சரவணமுத்து நொத் தாரிசு காலமானதும் அவரது மகன் ஏரம்பு என்பவர் ஆலய நிர்வாகத்தை ஏற்று முகாமையாள ரானார். இவருக்கு இவரது பேரனான இளமையும் துடிப்பும் மிகுந்த இளைஞர் விநாசித்தம்பி சபாரத்தினம் என்பவர் நிர்வாக வேலைகளில் உதவிகள் புரிந்து வந்தார்.

ஏரம்பு முகாமையாளருக்குப் பின் அவருடைய மகன் விநாசித்தம்பி தனது பொறுப்பைத் தனது இளைய மகனான "சின்னையா" என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட திரு. வி. சபாரத்தினம் அவர்களிடம் ஒப்படைத்தார்.

திரு. வி. சபாரத்தினம் அவர்கள் இக்கோவிலின் நிர்வாகத்தைச் மிகச்சிறப்பாக, மிக நீண்ட காலமாக அதாவது சுமார் ஐம்பது வருடகாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்திய பெருமைக்குரியவர். மிகவும் கஷ்ட மான பொருளாதார நிலையிலும் மிகச் சிறப் பாகக் கோவிலை நிர்வகித்து வந்தவர். இவருக்கு இவரது மிக நெருங்கிய நண்பராக விளங்கிய சுப்பிரமணியம் என்பார் வலதுகரமாகச் செயற்பட்டு உதவி ஒத்தாசை புரிந்துவந்தார். வி.சபாரத்தினம் அவர்களே ஆலயத்திற்கு "தர்ம கர்த்தா சபை" ஒன்றை உருவாக்கியவர். இன்று இயங்கி மிகத் துடிப்போடு செயற்படும் தர்ம கர்த்தா சபையில் இருப்பவர் திரு. சுப்பிரமணியத் தின் ஏகபுத்திரரான திரு. சு. அருளானந்த சிவம் ஆவார்.

அருளானந்தசிவமே "சின்னையா"வின் இறுதிக்காலத்தில் அவர் நோயுற்று படுக்கையில் இருந்த சிறிது காலத்தில் அவருக்கு ஆவன செய்து சாந்துணையும் பேருதவிகள் புரிந்தவர். பற்று, பாசம், பணிவு ஆகியவை அமைந்த மகனொரு வன் தன் தந்தைக்காற்றும் கடமைகளைப்போல மணியப்பா, சின்னையா விற்கு அந்திம காலத்தில் செய்த உதவிகள் இன்றும் என் கண்முன் நிழலாடு கிறது. திரு. சின்னையாவிற்கு ஒரேயொரு பிள்ளை பிறந்திருந்தாலும் அப்பிள்ளை மிக இள வயதினிலேயே காலமாகிவிட்டது. "அருள்" என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் அருளானந்தசிவமே மணியப்பாவிற்கு மகன் ஆற்றும் கடமைகளைச் செய்து வந்தவர்.

திரு. சபாரத்தினம் தன்னுடைய அந்திம காலத்தில் தர்மகர்த்தா சபையில் இருந்த இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தரான திரு. த.தம்பிராசாவை முகாமையாளராக நிய மித்து நிர்வாகத்துக்கு வழிகாட்டியாகவும் இருந்து காலமானார்.

திரு. தம்பிராசா முகாமையாளராகச் செயற் பட்ட காலத்தில் ஆலயத்தின் செயற்பாடு களில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு:

நித்திய பூசைகளுக்கு நேர நிர்ணயங்கள் குறித்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆலயத்தில் உட் பிரகார மண்டபங்கள் யாவும் ஓட்டினால் வேயப்பட்டன.

உட்பிரகாரத்தில் விஷ்ணு, முருகன் ஆகிய தெய்வங்களுக்கு தூபியுடன் கூடிய சுற்றுப் பிரகார ஆலயங்கள் அமைக்கப்பட்டன.

உட்பிரகாரச் சுவர்களில் புராண. இதிகாச விடயங்கள் ஓவியங்களாக வரையப் பட்டன.

இவரின் காலத்திலே - 28.06.1987 அன்று இம் மாவடியான் ஆலயத்தில் நாட்டின் அமைதி, நலன்கள் வேண்டி "கணபதி ஹோமம்" ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை ஆண்டு தோறும் இது நடாத்தப்பட்டு வருவது சிறப்பான தாகும். (ஆயினும் நாட்டின் போர்ச் சூழல் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்ததன் விளைவாக 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் ஹோமம் செய்ய இயலவில்லை).

இத்துடன், சதுர்த்தி தினங்களிலும், வெள்ளிக்கிழமைகளிலும் விஷேட பூசைகள் ஆராதனைகளுடன் சுவாமி உள்வீதி திருஉலா வருதல் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை மிகவும் ஒழுங்காகவும், பக்திசிரத்தையுடனும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

திரு. தம்பிராசாவின் காலத்திலேயே இவ் வாலயத்திற்கென ஒரு வழிபடுவோர் சபை அமைக்கப்பட்டது.

திரு. தம்பிராசா சற்றுக் குறுகிய காலமான சுமார் ஐந்து ஆண்டுகளே முகாமை யாளராகத் தொண்டாற்றி இப் பூவுலக வாழ்வை நீத்தார்.

திரு. தம்பிராசாவின் மறைவின் பின் காலஞ் சென்ற திரு. சின்னத்தம்பி நல்லாசான் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அவர்களின் பிள்ளைகளில் ஒருவரான திரு. சி. இராமலிங்கம் ஆலய முகாமையாளராக நியமிக்கப்பட்டு இன்றுவரை ஆலயத்தை மிகச் சிறப்புற நிர்வகித்து வருவதும் மாவடியான் பேரருளே. ஆண்டில் சிறியவரெனினும் செயற் பாடுகளில் நேர்மையுடனும் பக்தி சிரத்தை யுடனும் ஆலயத்தை நிர்வகித்து வருவதும் மாவடியான் பேரருளே. ஆறாவது முகாமையாள ராகிய திரு. சின்னையாபோல் இவருக்கும் ஒரு மகவு கிடைத்து மிக இளவயதிலேயே அதைக் காலன் கவர்ந்துள்ளான். இவரது குடும்பம் இறையருளால் குறையேதுமின்றி மிக நிறைவுடன் ஓரளவு பொருளாதாரத்துடனும் வாழ்வதால் இவரும் இவரது துணைவியாரும் தங்கள் முழு கால நேரங்களையும் மாவடியான் சேவடிக்காய்ச் சேவை செய்கின்றனர்.

திரு. சி. இராமலிங்கம் முகாமையாளரான காலம்முதல் ஆலயத்தில் அரும்பெரும் திருப் பணிகள் நிறைவுற்றுள்ளன. தொடர்ந்தும் நடை பெற்று வருகின்றன. இதுவரை அவர் காலத்தில் நிறைவுற்ற திருப்பணிகளில் குறிப்பிடத்தக்கவை சில:

தேர் தரிப்பிடத்திற்கு இரு புறமும் கதவுகள் அமைத்தமை.

அன்னதான மடம் மக்களின் தேவை யறிந்து விஸ்தரிப்புச் செய்யப்பட்டமை கோயிலின் வட பால் ஒரு கல்யாண கொட்டகை அமைத் தமை.

முகாமையாளருக்கான வதிவிட இல்லம் அமைத் தமை.

மிகப்பெரும் பணியாக, இற்றைவரை தென்மராட்சிப் பகுதியில் வேறு எங்கும் இல்லாத பஞ்ச தள இராஜகோபுரம் பல இலட்சக்கணக் கான ரூபாய்கள் செலவுசெய்து நிர்மாணிக்கப் பட்டு 16.06.2006 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நிறை வேற்றப்பட்டுள்ளது .

திரு. சின்னத்தம்பி இராமலிங்கம் மற்றும் அவர்தம் துணைவியார் ஆகியோருக்கு இவ் ஆலய தொண்டினைத் தொடர்ந்து செய்திட நல்ல உடல் உள ஆரோக்கியத்தை நல்கிட வேண்டி மாவடியான் பாத கமலங்களைப் பிரார்த்தித்து அடியேன் அமைகின்றேன்.

மேலதிகமாக இவ் ஆலயத்தில் நிகழ்ந்த, நிகழ்வுறும் நல்ல சம்பவங்களைத் தொகுத்துத் தருதல் ஆலய வரலாறுகளை ஆய்வுசெய்யும் மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் ஆவணச் சான்றாக அமையலாம் என்பது எனது எண்ண மாகும்.

இவ் ஆலயத்தில் கணபதி ஹோமம் 28.06.1987 அன்று முதன் முதலாகத் தொடங்கப் பட்டது. இன்று வரை 17 ஹோமங்கள் நிறைவு பெற்றுள்ளன. (நாட்டில் நிலவிய யுத்த அனர்த்த சூழ்நிலை காரணமாக மக்களின் இடப்பெயர்வு கள் ஏற்பட்டு இடையில் மூன்று ஆண்டுகள் ஹோமம் நடைபெறவில்லை).

**குறிப்பு:**

எமது ஆலய மான்மிய, தொகுப் பாசிரியர் அவர்கள் 11. 06. 2006 இல் நடந்தேறிய இராஜ கோபுர நிகழ்வின் தொகுப்பு நூல் ஒன்றுக்கு வரைந்த மான்மியமே தரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 10.05.1939ல் மண்ணில் அவதரித்த அவர்கள் 22.11.2008 இல் அமரத்து வம் அடைந்தார்கள். அமரர் அவர்களின் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல மாவடியானை வேண்டு கின்றோம்.

அன்னாரது மான்மிய தொகுப்பில் இடம் பெறாத சில விடயங்கள் மலரின் வேறு பகுதி களில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும் அமரர் நமசிவாயம் ஏரம்பமூர்த்தி அவர்கள் 05.08.1981 மண்ட லாபிஷேக பூர்த்தி வெளியீடாக வெளிவந்த கும்பாபிஷேக மலருக்கான ஆலய மான்மியத்தை வரைந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வரலாறு ஓவிய, சிற்ப வடிவங்களில்...



விநாயகப் பெருமானை ரிஷிகள் வழிபடுகிறார்...



போர்த்துக்கேயர் இந்து ஆலயங்களை அழிக்க வருதல்



ரிஷிகள் வெள்ளை மாவடியில் விநாயகப் பெருமானைப் புதைத்து வைத்தல்



முகமாலையைச் சேர்ந்த கேயரத்தின முதலியார் தனது காணியில் கொள்ளுப் பயிரிட முத்துவைப் பணித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவடி விநாயகர் வெளிப்பாடு...



கேயரத்தின முதலியாரிடம் முத்து நடந்தவற்றைக் கூறல்...



கேயரத்தின முதலியார் முகமாலையிலிருந்து
மீசாலை செல்கிறார்...



கேயரத்தின முதலியார் இந்த ஆலயத்தைப் புதிதாக அமைத்துக்
கும்பாபிஷேகத்தை இனிதே நிறைவேற்றினார்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

## ஆலயத் தொடர்புகளுக்கு...

**முகாமையாளர்**

*திருநீலகண்ட வெள்ளைமாவடி*
*பிள்ளையார் கோவில்,*
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை,*
*இலங்கை.*

**தர்மகர்த்தா சபை பதிவிலக்கம் :**
HA/ 5/ JA/ 263

**கிராம சேவையாளர் பிரிவு:**
*மீசாலை கிழக்கு- ஜே/ 318*

**பிரதேச செயலாளர் பிரிவு:**
*தென்மராட்சி*

**மாவட்டம்:**
*யாழ்ப்பாணம்*

**வங்கியாளர்:**
தேசிய சேமிப்பு வங்கி,
சாவகச்சேரி, இலங்கை

**கணக்கு இல:** 1-0073-01-8367-9

## For Contacts ...

**The Manager**
**Thiruneelakanda Vellaimavadi**
**Pillaiyar Temple**
Meesalai East
Meesalai
Sri Lanka

**Registration Number of the Management Board :**
HA/ 5/ JA/ 263

**Village Head-Man Division:**
Meesalai East - J/ 318

**Divisional Secretariat :**
Thenmaradchi

**District:**
Jaffna

**Bankers :**
National Savings Bank
Chavakachcheri, Sri Lanka

Account No: 1-0073-01-8367-9

**ஏனைய தொடர்பு சாதனங்கள் –** Other contact Means


**தொலை பேசி** / Telephone: +94(0)21 321 8037

**e-mail: mtvpillaiyar@gmail.com**

**Web: www.mavadipillaiyar.org**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மீசாலை திருநீல கண்ட
வெள்ளைமாவடிப் பிள்ளையார்
கோவில் அமைவிட வரிப்படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வெளிப்புறத் தோற்றங்கள்...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதமகுரு சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள்



நித்தியகுரு சிவஸ்ரீ சி.கிருபாகரக் குருக்கள்



நித்திய அர்ச்சகர் சிவத்திரு. பாலசிவலிங்க ஐயா



ஆலய ஆஸ்தான மங்கள வாத்தியக் கலைஞர் சுப்பிரமணியம் அவரது புதல்வருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
நடைபெறும்



# நித்திய, நைமித்திய பூஜை, திருவிழாக்கள் மற்றும் பெருமான் திருவீதி உலா வரும் விபரங்கள்

(1) நாளாந்த நித்திய பூசை – மூன்று காலப் பூசைகள் நடைபெறும் நேரங்கள்

| | | |
|---|---|---|
| காலை | - | 7.30 மணி |
| மதியம் | - | 12.00 மணி |
| மாலை | - | 5.00 மணி |

**குறிப்பு:** 1. மார்கழி மாதம் நடைபெறும் காலைப் பூசை தைப்பொங்கல் தினம் வரை காலை 6.00 மணிக்கு நடைபெறும்.

2. தீபாவளி தினத்தன்று காலைப்பூசை 6 மணிக்கு நடைபெறும்.

(2) விஷேட பூசை அபிஷேகங்கள்:

1. மாதாந்த கார்த்திகைத் திருநாள் தினங்களில் முருகப் பெருமானுக்கு விஷேட பூசை நடைபெறும்.
2. மார்கழி மாதம் விநாயகர் ஷஷ்டி விரத காலத்தில் மாலை அபிஷேகம், பிள்ளையார் கதை படிப்பு நடைபெறும்.
3. திருவெம்பாவை நாள்களில் அதிகாலை அபிஷேகம், திருவிழாவின் பின் திருவாதவூரடிகள் புராண படனம் நடைபெறும்.

(3) உள்வீதி உலா நடைபெறும் தினங்கள்:

1. வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் மாலை உற்சவம்
2. சதுர்த்தி உற்சவ தினங்களில் மாலை உற்சவம்
3. தைப் பூசம்.

(4) வெளிவீதி உலா நடைபெறும் தினங்கள்:

1. ஆவணி மாத சதுர்த்தி உற்சவம்
2. மணவாளக் கோலம் (கும்பாபிஷேக தினம்)
3. வருடாந்த மஹோற்சவ தினங்கள் மற்றும் பூங்காவனத் திருவிழா
4. கஜமுக சம்கார தினம்
5. மார்கழித் திருவாதிரைத் தீர்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

# வருடாந்த விஷேட உற்சவ தினங்கள்

**தை மாதம்**

தைப்பொங்கல்

பன்னிருதிருமுறை ஓதுதல் ஆரம்பமும், பூர்த்தியும்.

புதிர்ப் பூசை

பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை

திருவாசக முற்றோதல்

கார்த்திகை விசேட பூசை

சதுர்த்தி உற்சவம்

தைப்பூசம், அபிஷேகம் பூசை, காவடி

சண்டேஸ்வரர் பூசை

**மாசி மாதம்**

பெரிய புராண படனம் ஆரம்பம்

பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை

சதுர்த்தி உற்சவம்

கார்த்திகை விசேட பூசை

மகாசிவராத்திரி 4 சாமமும் அபிஷேகம், புராண படனம்.

மாசி மகம் - அபிஷேகம் பூசை.

**பங்குனி**

பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை.

சதுர்த்தி உற்சவம்.

கார்த்திகை விசேட பூசை.

பங்குனி உத்தரம் அபிஷேகம் பூசை.

**சித்திரை**

சித்திரை வருடப்பிறப்பு, அபிஷேகம் பூசை.

பெரிய புராண படனம் பூர்த்தி.

பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை.

சதுர்த்தி உற்சவம்.

கார்த்திகை விசேட பூசை.

சித்திரைப்பரணி, வைரவர் அபிஷேகம் பூசை.

காலை அபிஷேகம் பூசை, கந்தபுராணபடனம் ஆரம்பம்.

**வைகாசி**

மகேந்திர படனம்

பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை

சதுர்த்தி உற்சவம் - தண்டிகை உற்சவம்

கார்த்திகை விசேட பூசை

சூரபன்மன் வதைப் படலம் மற்றும் தெய்வானையம்மன் திருமணப் படலம்

வைகாசி விசாகம் அபிஷேகம் பூசை

மணவாளக்கோலம் - கும்பாபிஷேக தினம்.

**ஆனி**

கணபதி ஹோமம்

வள்ளியம்மன் திருமணப் படலம்.



பூர்வ, அபரபட்ச ஏகாதசி விசேட பூசை.

சதுர்த்தி உற்சவம்.

கார்த்திகை விசேட பூசை.

கந்தபுராண படனம் பூர்த்தி.



வைரவர் மடை.

ஆனி உத்தரம் அபிஷேகம் பூசை.

**ஆடி**



பூர்வ, அபரபட்ச ஏகாதசி விசேட பூசை.

சதுர்த்தி உற்சவம்

கார்த்திகை விசேட பூசை

வருடாந்த மஹோற்சவம் ஆடி மாத பூர்வ பட்ச ஷஷ்டியில் ஆரம்பமாகி பூரணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தினத்தன்று தீர்த்தோற்சவம் இடம் பெறும்.
விசேட தினங்கள்:

கொடிப்படம் வீதிவலம்
கொடியேற்றம்
வேட்டைத் திருவிழா
சப்பறத் திருவிழா
தேர்த் திருவிழா
தீர்த்தத் திருவிழா
பூங்காவனத் திருவிழா
வைரவர் மடை

**ஆவணி**

பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை
விநாயகர் சதுர்த்தி விரத அபிஷேகம் விசேட உற்சவம்
கார்த்திகை விசேட பூசை
ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விசேட பூசை

**புரட்டாதி**

பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை
சதுர்த்தி உற்சவம்
கார்த்திகை விசேட பூசை
திருவிளையாடல் புராண படனம் ஆரம்பம்

**ஐப்பசி**

கந்த ஷஷ்டி விரத விசேட உற்சவம்
பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை
சதுர்த்தி உற்சவம்
கார்த்திகை விசேட பூசை
ஐப்பசி பரணி வைரவர் அபிஷேகம் பூசை
தீபாவளி

**கார்த்திகை**

திருவிளையாடல் புராண படனம் பூர்த்தி
பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை
சதுர்த்தி உற்சவம்
திருக்கார்த்திகை சர் வாலய தீபம் உற்சவம்
விநாயகர் விரதாரம்பம், காப்புக் கட்டுதல்
(திதியைக் கொண்டு கணிக்கப்படுமிடத்து)

**மார்கழி**

பூர்வ, அபர பட்ச ஏகாதசி விசேட பூசை
சதுர்த்தி உற்சவம்
கார்த்திகை விசேட பூசை
கஜமுகாசுர சங்காரம் - மாலை
விநாயக ஷஷ்டி உற்சவம் - மாலை
சந்தான கோபாலர் 4 சாமம் அபிஷேகம்
பூசை, புராண படனம்.
திருவெம்பாவை உற்சவம்
வைகுண்ட ஏகாதசி உற்சவம்
திருவாதிரைத் தீர்த்தோற்சவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீசாலை
# ஸ்ரீ திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
# மஹா கும்பாபிஷேகம் 2010



விகிர்தி வருடம் வைகாசி மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை (04.06.2010) அன்று காலை மணி 5.50 முதல் காலை மணி 6.38 வரையுள்ள இடப லக்கின சுப முகூர்த்தத்தில் நடந்தேறிய எம்பெருமானின் மஹா கும்பாபிஷேக விழா நிகழ்வில் பங்கேற்ற கிரியா கர்த்தர்களான சிவாச்சாரியார்கள், அர்ச்சகர்கள் மற்றும் உதவியாளர்கள்:

அருளாசி வழங்கல்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

நல்லை ஆதீனம்

பிரதம பிரதிஷ்டாகுரு
கலாபூஷணம், வேதாகம சோதிட பூஷணம்,
சிவாச்சார்ய திலகம், வேதாகம வித்தகர்
**சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள்**
(கல்வயல்)

ஆலயநித்திய குருக்கள்
கிரியா வித்தகர்
**சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள்**
(கல்வயல்)

இணைந்து பங்கேற்ற சிவாச்சாரியர்கள் :

கிரியா கலாபமணி **சிவஸ்ரீ சி. கிருஷ்ணசாமிக் குருக்கள்** (அச்செழு, புன்னாலைக்கட்டுவன்)
பால குருமணி, கிரியா வித்துவஜோதி **சிவஸ்ரீ செ. பரராஜசேகரக் குருக்கள்** (மீசாலை, சிவன் கோவில், சாவகச்சேரி)
கிரியா சிரோன்மணி **சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக் குருக்கள்** (சரசாலை, சாவகச்சேரி)
**சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள்** (கோப்பாய்)
**சிவஸ்ரீ இ. பரமேஸ்வரக் குருக்கள்** (மட்டுவில்)

இவர்களுடன், ஆலய நித்திய அர்ச்சகர்களான,
**பா. சிவலிங்கம் ஐயா**
உதவி: **பா. உமாமகேஸ்வர ஐயா** மற்றும் **சசிதரன் ஐயா** (வரணி)

## யாக சமரக்ஷகர்கள்

**பிரம்மஸ்ரீ ப. சோமாஸ்கந்தசர்மா** (சரசாலை)
**பிரம்மஸ்ரீ இ. சுந்தரேஸ்வரசர்மா** (சரசாலை)
**பிரம்மஸ்ரீ பா.பத்மநாபசர்மா** (வத்தளை)
**பிரம்மஸ்ரீ கு. ஜெயானந்தசர்மா** (யாழ்ப்பாணம்)
**பிரம்மஸ்ரீ கு. ஹரிஹரசர்மா** (மீசாலை)
**பிரம்மஸ்ரீ தினேஷ்சர்மா**
**பிரம்மஸ்ரீ பிரணவன்சர்மா**

சர்வ சாதகர்கள் (பத்ததி)
**பிரம்மஸ்ரீ சனாதனசர்மா** B.B.A (Spl) (கல்வயல்)
**பிரம்மஸ்ரீ க. கேசவசர்மா** (தாவடி)
**பிரம்மஸ்ரீ லோகேஸ்வரசர்மா [ரவி ஐயா]** (நுணாவில்)

மங்கள வாத்தியம்:
**திரு. S. சுப்பிரமணியம் குழுவினர்**
(சங்கத்தானை)
ஆசாரியார்:
**திரு. முருகமூர்த்தி குலநாதன்** (மீசாலை)


ஆலய நிர்மாணம்
**திரு. கந்தசாமி கோபாலசிங்கம் குழுவினர்**
அராலியூர்


சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27.01.2010 பாலஸ்தாபனத்தின்பின் ஆலயத்தின் புனருத்தாரணக் காட்சிகள் சில...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04.06.2010 மஹாகும்பாபிஷேகக் காட்சிகள்
### அபிஷேக கும்பங்கள் திருவீதி உலாவின்போது...


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04.06.2010இல் மஹா கும்பாபிஷேகக் காட்சிகள்...



மூலஸ்தான கும்பாபிஷேகம்



பங்கேற்ற சிவாச்சாரியார்கள் சிலருடன் நல்லை ஆதீனம் இரண்டாவது குருமகா சன்னிதானம் அவர்கள்...



பங்கேற்ற சிவாச்சாரியார்களில் சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21.07.2010 அன்று இடம்பெற்ற மண்டலாபிஷேக பூர்த்தியும், சங்காபிஷேகமும்...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழிபாட்டில் நல்லை ஆதீன முதல்வர் அடியார்களுடன்...



வழிபாட்டில் அடியார்கள் சிலர்



முகாமையாளர் தம்பதியருக்கு அபிஷேகம்



முகாமையாளர் தம்பதியருக்கு கௌரவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவடியான் சேவையில் பொன்விழாக்கண்ட மணியகாரன்

### அமரர் விநாசித்தம்பி சபாரத்தினம் (மணியப்பா, சின்னையா)

– தொகுப்பாசிரியர்–



அமரர் விநாசித்தம்பி சபாரத்தினம் அவர்கள் திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலின் முகாமைச் சேவையில் ஐம்பது வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் கோவில் நிர்வாகம், பூசைகள், விழாக்கள் ஆகியவற்றை சிறப்பாக நடாத்திச் சென்ற பெருமகனாவார்.

தற்காலம் போன்றல்லாது வளங்கள், வாய்ப்புக்கள், வசதிகள் குறைந்த காலத்தே ஆலய நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெறுவதற்கும், அபிஷேகங்கள் தடங்கலின்றி நடைபெறவும், மஹோற்சவங்கள் சிறப்பாக இடம்பெறுவதற்கும், உபயகாரர்களைத் தேடிக் கொணர்ந்து மாவடியான் ஆலயத்தே சேர்த்ததில் இவரது பங்களிப்பு மகத்தானது. மாவடியான் சந்நிதியே சரணம் என ஆலயமருகே சிறு வீடமைத்து முகாமைச் சேவையில் மாவடியானுடன் இணைந்திருந்தார்.

ஆலய ஸ்தாபகர் கேயரத்ன முதலியார் பரம்பரையில் ஆறாவது தலைமுறையினராக தோன்றிய இவர், திரு. விநாசித்தம்பி அவர்களின் இளைய மகனாக அமரர் திருமதி கனகசபை சரஸ்வதி (ஆச்சிமுத்து) அவர்களுடன் இணையாக வந்துதித்தார்.

அடியவர்களை ஆலயத்தின்பால் ஒன்று கூட்டி, விநாயகப் பெருமானுக்கு வேண்டிய பணிகளை எவரெவர் சிறப்பாக புரிபவர்கள் என்பதை இனங்கண்டு அவற்றை அவர்களிடம் வழங்கி ஆலயமானது விருத்தியுறச் செயலாற்றும் சிறந்த தலைமைத்துவ, ஆளுமைப் பண்பு இவரிடத்தில் காணப்பட்டது. அடிய வர்கள் இவரின்பால் மிகுந்த மதிப்பும், அவரது வார்த்தைக்குக் கட்டுப்படுகின்ற உளப்பாங்கையும் கொண்டவர்களாக இருந்தமையானது இவரது செயற்றிறனுக்குச்சிறந்த எடுத்துக் காட்டாகக் கூறமுடியும்.



இவரது இணைச் சகோதரியான சரஸ்வதி (ஆச்சி முத்து) அவர்கள் முகமாலையில் வதிந்துவந்தார். அமரர் சபாரத்தினம் அவர்களுக்கு முதுசமான நிலபுலன்களும் அவ்வூரில் இருந்தன. இவற்றின் காரணமாக முகமாலைக்கு இவர் அடிக்கடிச் சென்று வருவது வழக்கம். அவ்வாறு சென்று வரும்போதெல்லாம் ஆலய பூசைகளுக்கு வேண்டிய சமித்து வகைகளையும், தேங்காய் முதலியவற்றையும் ஆலயத்தின் வேறு தேவைகளுக்கான தென்ஒலைகள், மரங்கள் முதலானவற்றையும் பெற்று வருவார். சுவையான "குழைசாதம்" தயாரித்தல், தோசை, சம்பல் பொடி தயாரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போன்ற வற்றில் கைதேர்ந்தவர். அதுமட்டுமன்றி, அவர் வதிந்த வீட்டிற்கு வருவோர்க்கும், கோவில் தொண்டு செய்வோர்க்கும் உணவளித்து இன் புறுவது அவருக்கு மிகவும் உவப்பானதாகவும் இருந்து வந்தது.

அமரர் சபாரத்தினம் அவர்களின் பணிகளுக்கு அமரர்களாகிவிட்ட சின்னத்துரை (செட்டியார்) அவர்களும், கணபதிப்பிள்ளை (குஞ்சையா) அவர்களும் உதவியவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். இவர்களில் சின்னத்துரை அவர்கள் தீவட்டி தொடர்பான விடயம் முதற்கொண்டு ஏனைய சரீர தொண்டு களையும் ஆலயத்துக்கு ஆற்றினார். இதே போன்று கணபதிப்பிள்ளை அவர்களும் ஆலய சரீரத் தொண்டுகளைச் சிறப்பாக மேற்கொண்ட துடன் சண்டேசுவரப் பெருமானுக்கு ஆலயத்தை யும் அமைத்தவராவார். இவர்களோடு ஆனந்தி என்பாரும், வேறு பல அடியார்களும் அமரர் திரு. சபாரத்தினம் அவர்களின் நெறிப் படுத்தலில் ஆலயப் பணிகளில் சிறப்பாக இன்றும் ஈடுபட்டிருக்கின்றனர். இன்றுவரை சபாரத் தினம் அவர்கள் ஆரம்பித்துவைத்த ஆலயப் பணிகள் உயிர்ப்புடன் செயல்நிலையில் இருப்பதானது அவரின் தீர்க்கதரிசனமான நோக்கை பறை சாற்றுவனவாக உள்ளன.

அமரரவர்கள் 22.05.1991 (வைகாசி) புதன்கிழமை பிற்பகலில் வெள்ளைமாவடியான் பாதம் சென்றடைந்தார். இவரது இறுதிக் கிரியைகளில் பங்கேற்று இரங்கலுரையாற்றிய அப்போதைய சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள் கோடிட்டுக்காட்டிய விடயத்தை இங்கு குறிப் பிடுவது சாலவும் பொருந்தும்.

"நாம் ஒரு நிர்வாக அலகை செயல் முனைப்புடன் நடாத்திச் செல்வதற்கு பல்வேறு பட்ட சிரமங்களை எதிர்கொண்டு வருகின் றோம். ஆனால் இப்பெருமகனார் ஐம்பது வருடங்களுக்கு மேலாக தொய்வின்றிச் சிறப் புடன் ஆலயத்தை நிர்வகித்து விருத்தியுறச் செய்திருப்பதானது அவர்பால் எமக்கு இருக்கும் மதிப்பை மேலும் உயர்த்துவதாக உள்ளது"

அமரர் சபாரத்தினம் அவர்கள் ஆற்றிய ஆலயப்பணி இன்று விரிவடைந்திருக்கின்றது. அத்தோடு ஆலயமும் வளர்ச்சி பெற்று அடியவர் களுக்கு அருளாட்சியும் வழங்கிக் கொண்டிருக் கின்றது. மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் வரலாறு என்பது அமரர் திரு. சபாரத்தினம் அவர்களின் வாழ்க்கைக் காலத்தை யும் உள்ளடக்கியதாகவே என்றும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலய இராஜ கோபுரம்

-தொகுப்பாசிரியர்-

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய இராஜ கோபுரத்துக்கான அடித் தளம் ஏற்கனவே இடப்பட்டிருந்தது. இவ் அடித்தளம் சிவசங்கர நமசிவாயம் அவர்கள் பரம்பரையில் வந்த கொடுக்கன் விதானை என அழைக்கப்படுபவரின் இளைய மகனான தங்கமுத்து என்பவரால் இடப்பட்டிருந்ததாக அறிய முடிகின்றது. இராஜ கோபுர திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது முதல் அடி எடுப்பாக ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த அடித்தளத்தின் உறுதித் தன்மை பொறியிய லாளரின் உதவியுடன் பரிசீலிக்கப்பட்டது. அவரது ஆலோசனைக் கமைய 7 அடி ஆழமும் 3 அடி அகலமும் கொண்ட அகழி சுற்றிவர வெட்டப்பட்டு அத்திபாரத்திற்கு ஆதாரமாகச் செய்யப்பட்டு மேலும் அதனை உறுதியானதாக்க காட்டுக்கற்கள் சேர்ந்த "கொங்கிறீட்" இட்டுப் பலப்படுத்தப்பட்டது.

19.09.2003இல் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் விய வருடம் ஆனி மாதம் 2ஆம் நாள் **(16.06.2006) வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணி தொடக்கம் 10.24 மணி வரையான** சுபவேளை யில் கலாபூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் இனிதே நடந்தேறியது. இதன் மூலம் மாவடியான் அடியார்கள் மனத்திருந்த பெரு விருப்பொன்று நனவாகியது. இராஜ கோபுர நிர்மாணம் அராலி யூர் சிற்பாசாரியார் திரு.கந்தசாமி கோபலசிங்கம் குழுவினரால் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

இந்த இராஜ கோபுரத்தில் அமைந்துள்ள சிற்பங்களின் மொத்த எண்ணிக்கை 286 ஆகும். விநாயகர், முருகன், தட்ஷணா மூர்த்தி, துவார பாலகர்கள், நவக்கிரகங்கள், அட்டலட்சுமி வடி வங்கள், (லட்சுமி, சரஸ்வதி) என்பன உள்ளடக் கப்பட்டுள்ளன.

**கோபுரத்தில் அமைக்கப்பட்ட சிற்பங்களில் குறிப்பிடத்தக்கவை:**

| | | |
|---|---|---|
| முதலாவது தளத்தில் | - | நவ கணபதி சிற்பங்கள் |
| இரண்டாவது தளத்தில் | - | நவக்கிரகங்கள் |
| மூன்றாவது தளத்தில் | - | அட்டலட்சுமி வடிவங்கள் |
| நான்காவது தளத்தில் | - | அட்ட திக்குப் பாலகர்கள் |
| ஐந்தாவது தளத்தில் | - | மகாநாசிக்குள் தெற்கில் லட்சுமியும் வடக்கில் சரஸ்வதியும். |

கோபுரத்தின் தாங்கிகள் குறவன், குறத்தி வடிவங்கள் என்ற வகையில் அமைக்கப் பட்டுள்ளன. அத்துடன் வேடன் (சிவன்) புலியுடன் சண்டையிடும் காட்சியும் வடிவமைக் கப்பட்டு உள்ளது. மேலும் தட்ஷணாமூர்த்தி, பிரம்மா ஆகியோரின் திருவுருவங்களும் இணையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இதில், 5ம் தளம் உட்பட கோபுரத்தின் வடபுறம் பூராவும் பிரம்மாவின் வடிவங்களும், தென்புறம் பூராவும் தட்ஷணாமூர்த்தியின் வடிவங்களும் காட்சி தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகப்புப் பக்கமான கிழக்கில் வலது பாகத்தில் பால கணபதி, நடன கணபதி, நிருத்த கணபதி, பஞ்சமுக விநாயகர், சித்தி, முத்தி விநாயகர் என விநாயகர் வடிவங்களும், இடது பாகத்தில் பாலமுருகன், சுப்பிரமணியர், பழநி திருக்கோலமுருகன், ஆறுமுக வடிவம், வள்ளி தேவசேனா சமேத முருகன் என முருகனது வடிவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்குப்புறம் உள்ள கோபுரத்தின் அபர பாகத்தில் விஷ்ணு, பைரவர் ஆகியோரின் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**(இத் தகவல்கள் சிற்பாசாரியர் க. கோபாலசிங்கம் அவர்கள் உதவியது).**

வெள்ளை மாவடியான் ஆலய பஞ்சதள இராஜகோபுர நிர்மாணியான சிற்பாசாரியார் க. கோபாலசிங்கம் அவர்களுடனான **நேர் காணலில் இருந்து :**

1. மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய பஞ்சதள இராஜ கோபுரம் இவரால் பூர்த்தி செய்யப்பட்ட கோபுர நிர்மாணிப்புப் பணிகளில் **பதின்மூன்றாவது** ஆகும்.
2. இவர் 1969ஆம் ஆண்டில் தனது பன்னிரண்டாவது வயதிலேயே ஆலயத் திருப்பணிசார் சிற்பாசாரியர் பணிகளில் ஈடுபட ஆரம்பித்தவராவார். இவரது முதலாவது ஆலய புனருத்தாரண பணி வேலைகள் கோணாவளை பைரவர் ஆலயத்தில் ஆரம்பித்தது.
3. இவர் தனது முழுமையான பொறுப்பின்கீழ் முதலாவது ஆலய புனருத்தாரண வேலையாக காரைநகர் சயம்பு வீதி கண்ணகை அம்மன் கோவில் திருப்பணியை நிறைவேற்றினார்.
4. நல்லூர் சிவன் ஆலய இரட்டை இராஜ கோபுரப் பணியையும் இவரே மேற்கொண்டு நிறைவேற்றி உள்ளார்.

உ
விநாயகர் துணை

## மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

### ஆலய நித்திய அர்ச்சகர்கள் வரிசைக் கிரமம்


**சைவக் குருமார்கள்**

உடுவில் குருக்கள்
குமாரசாமிக் குருக்கள்
நடேசையர்
கணபதிப்பிள்ளை ஐயர்
பாலசுந்தரக் குருக்கள்
கந்தவேள் குருக்கள்
(வேலுப்பிள்ளை ஐயர்
பால சிவலிங்கம் ஐயர் (தற்போது பணியில்)
உமாமகேஸ்வர ஐயர் (தற்போது பணியில்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆலய பஞ்சதள இராஜகோபுரத் தோற்றம்...**

**இராஜகோபுரக் கும்பாபிஷேகம் 16.06.2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜகோபுரத்தின் நான்குதிசைத் திருக்காட்சி...




கிழக்கிலிருந்து...



மேற்கிலிருந்து...



வடக்கிலிருந்து...



தெற்கிலிருந்து...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை

*Sri Durgadevi Devasthanam*

Tellippalai, Sri Lanka.

திகதி: 05.08.2006



### மீசாலை, திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் இராஜகோபுரக் கும்பாபிஷேகம்

## ஆசியுரை

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது சைவப் பெருமக்களின் காலங்காலமான நம்பிக்கையாகும். மூலலிங்கம் பத்திரலிங்கம், தூலலிங்கம் என்பன ஆலயத்தின் மூன்று முக்கிய இடங்களாகும். இராஜகோபுரத்தை தூலலிங்கம் என்று குறிப்பிடுவர். தூலம் என்பது எல்லார்க்கும், எந்த நேரத்திலும் காட்சி தருவதாகும். கோயிற் கதவுகள் பூசை நேரங்களில் மாத்திரம் திறக்கப்படும். ஆனால் இராஜகோபுரத்தின் காட்சி எந்த நேரத்திலும் தென்படுவதாகும். பின்வரும் பாடலைக் கருத்தில் இருத்துவோம்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

என்பது திருமூலர் வாக்காகும். இதிற் குறிப்பிட்டபடி ஆலயங்களுக்கு கோபுரம் அமைப்பது முக்கிய திருப்பணியாகும். மீசாலை மக்களால் அல்லும் பகலும் வழிபாடு செய்யுமிடம் வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயமாகும். இங்கு பணியாற்றும் அந்தணர்கள், அடியார்கள், அனைவரும் சேர்ந்து இத்திருப்பணியை நிறைவேற்றியிருப்பது பாராட்டுக்குரியது. 16 - 06 - 2006 புதன்கிழமை நடைபெற்ற இக்குடமுழுக்கு விழாவை வணங்குகிறேன், வாழ்த்துகிறேன், ஆசிகூறுகிறேன்.

வணக்கம்.

அமரர் கலாநிதி. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
முன்னாள் தலைவர். துர்க்காதேவி தேவஸ்தானம்.

**குறிப்பு:** மேற்படி ஆசியுரை அமரர் அவர்களால் இராஜகோபுர கும்பாபிஷேகத்தின்போது வழங்கப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





094439099788
0779520102

Madurai Veeran Thunai

**Govt. Approved Sthabathy**
**J. VEERASAMY**
Regd. No. 3975/ 1998-2, Y2, Dt: 02-01-2009
A.Puthur, Akkur Post.
Tharangambadi Taluk, Nagai Dist- 609 301.
Tamil Nadu. S. India.





"ஓம் வக்ர துண்ட மஹாஹாய
சூர்ய கோடி சமப்பிரவ
நிர்விக்ணம் குருமே தேவ
சர்வகார்யேஹி சர்வதா"

இந்தியாவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நான் 2006 ம் ஆண்டு இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிக்கு உட்பட்ட பிரதேசத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற மீசாலை என்ற இடத்தில் உள்ள ஸ்ரீ வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு விக்ரவேலை செய்வதற்காக திரு.கந்தசாமி கோபாலசிங்கம் என்பவர்மூலம் கோவில் நிர்வாகத்தினர் என்னை வரவழைத்தார்கள். இலங்கையின் அந்த குழப்பமான நேரத்தில் இத் திருக்கோயிலை மிகவும் சிரமத்திற்கிடையே கோவில் நிர்வாகத்தினர் இராஜகோபுரவேலைகளை செய்துவந்தனர். எனக்கும் பல சோதனைகள் வந்தன. இந்த வெள்ளைமாவடிப் பிள்ளையார் மிகவும் சக்தி வாய்ந்தவர். நாங்கள் எங்களது கற்பனைகளை ஒன்று திரட்டி இந்தக் கோவிலின் விக்ரகங்களை அமைத்தோம். அது நாங்கள் எதிர்பார்த்ததை விட மிகவும் நன்றாக அமைந்தது. இது எங்களுடைய திறமை என்பதை விட இந்த பிள்ளையாரின் மகிமை என்றுதான் சொல்ல வேண்டும். இத் திருக்கோவிலின் திருப்பணி வேலைகளை நிர்வாகத்தினர் எங்களுடைய திறமைகளைப் பயன்படுத்தி மிகவும் சிரமத்திற்கிடையில் விடாமுயற்சியுடன் முடித்து கும்பாபிஷேகம் செய்து முடித்துள்ளனர். இந்த மாவடிப் பிள்ளையார் மிகவும் சக்தி வாய்ந்தவர், இவர் இந்த தேசத்தையும், இந்த தேசமக்களையும் நல்ல முறையில் வழிநடத்தி நாட்டில் அமைதியும், சமாதானத்தையும் கொண்டுவர எல்லாம்வல்ல மாவடிப் பிள்ளையாரை மனதாரப் பிரார்த்திக்கிறேன்.

**ஜே.வீராசாமி (ஸ்தபதி)**
இந்தியா.

**குறிப்பு:-**

ஆலய இராஜகோபுர அமைப்பு வேலைகளை பொறுப்பேற்று நிறைவேற்றிய அராலியூர் சிற்பாசாரியார் கோபாலசிங்கம் குழுவினரில் ஒருவராக இந்தியாவில் இருந்து வருகை தந்து பணியாற்றியவருள் ஸ்தபதி திரு. ஜே.வீராசாமி குறிப்பிடத்தக்கவராவர். இவர் இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்டு பல நாடுகளில் ஆலய நிர்மாண புனருத்தாரண வேலைகளை பொறுப்பேற்று நடாத்தி ஒப்பேற்றிய பேறு பெற்றவர்.

தனது பதினாறாவது வயதில் இக் கலையில் பிரவேசித்த இவர் இந்திய ஸ்தபதி ஜி.கே.மணியன் அவர்களை குருவாகக் கொண்டு அவரது வழிகாட்டலில் ஆகம விதிப்படி விக்ர அமைப்பு, கோவில் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டு அனுபவம் பெற்றார்.

தொடர்ந்து தனது முதல் பொறுப்பேற்ற வேலையாக இந்தியா ஆக்கூர் தான் தோன்றீஸ்வரர் ஆலய வேலைகளை மேற்கொண்டார். சிங்கப்பூரில் "சிரங்கா கோட்" வட பத்திர காளி அம்மன் ஆலயம், மலேசியா "புக்கித்தம்போ" மகாமாரி அம்மன் ஆலயம் (சிற்ப, பொம்மை, வேலைகள்) என்பனவும், அரபு நாடுகளிலும், இலங்கை கொள்ளுப்பிட்டி காளிகோவிலின் இராஜகோபுர நிர்மாணம், தெகிவளை விஷ்ணு "ஆலய ரதசாரதி அமைப்பு" என்பன இவரது கலைத்திறமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

மேலும் அண்மையில் (2010) பாணந்துறை ஸ்ரீ கதிர்காமர் கோவில் புணர்நிர்மாணம், சிற்பவடிவங்கள், பொம்மை வேலைகளில் ஈடுபட்டு நிறைவேற்றியுள்ளார். சுமார் 25 வருட அனுபவம்வாய்ந்த ஸ்தபதி திரு.ஜே.வீராசாமி அவர்கள் வெள்ளைமாவடியான் ஆலய இராஜகோபுர 286 சிற்ப, பொம்மை வேலைகளை செவ்வனே கலை நயத்துடன் பக்தி பூர்வமாக நிறைவேற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இக் கைங்கரியத்தில் ஈடுபடுங்கால் ஏற்பட்ட போர்சூழல் அசௌகரியங்கள் யாவும் மாவடியான் திருக்கருணையால் எவ்வித தீங்குமின்றி நீங்கியதை மெய்சிலிர்க்க நினைவு கூர்ந்தார் ஸ்தபதி வீரசாமி அவர்கள்.

**- தொகுப்பாசிரியர்**

(ஸ்தபதி திரு. J. வீராசாமி அவர்களின் நேர்காணலில் இருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜகோபுரமும் அதன் மகிமையும்

சு.பரம்சோதி,
சமாதான நீதிவான், முன்னாள் பரிபாலன சபைத் தலைவர்
கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில்.
16.06.2006



"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கிணங்க ஓர் ஆலயத்தின் பிரதான அங்கமாக அமையும் இந்த இராஜ கோபுரம் சகல விதிகளுக்கும் அமைய சகல சிறப்புகளையும் தன்னகத்தேகொண்டு **மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்தில்** எல்லாம்வல்ல விநாயகப்பெருமான் பேரருளினால் அராலியூர் க. கோபாலசிங்கம் சிற்பாசாரியரின் குழுவினரால் மிக அழகாக நிர்மாணிக்கப்பட்டு கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

ஆலயங்களிலே கோபுரம் அந்தந்த மூர்த்திகளின் பாதரூபமாக வணங்கப்படுகிறது. கோயில்அழகும், ஆகமநெறிமுறை நிறைவும் பெற கோபுரம் அவசியமாகும். வானளாவ அழகுற எழுந்துநின்று பக்தர்களை வரவேற்கும் கோபுரத்தை **"தூலலிங்கம்"** என அழைப்பர். "கோபுர தரிசனமே எந்தன் பாப விமோசனம்" என அழகாகக் கூறினார் கோபாலகிருஷ்ண பாரதியார்.

இராஜகோபுரத்தில் எம்பெருமான் அருள்பாலிக்கும் திருக்காட்சியும் அதர்மம் உடையவர்களை சங்காரம் செய்கின்ற காட்சியும் சிற்பியினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆலய தரிசனத்திற்கு வருகின்ற அடியவர்கள் அதன் பொருளை விளங்கி, ஆணவத்தை நீக்கி, புலன்களை அடக்கி வழிபாடுசெய்வதற்கு கோபுர தரிசனம் கைகொடுக்கின்றது.



*"பிறையணிசிகரம் தூரஎல் பிறங்கிடத் தரிசித்*
*- தோர்கள்*
*அறைகழல் கமல பாதத்து அடிகள் ஆலயத்துள் ஏகி*
*முறையுறப் பணிந்தோர் முன்னம் முற்றிய*
*- உடலுந் தோறும்*
*சிறையுறப் புரிந்த பாவம் தீர்தல் அக்கணத்தில்*
*- திண்ணம்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் கோண்டாவில் நெட்டிலிப் பாய் பிள்ளையார் கோவில் பரிபாலனசபைத் தலைவராக இருந்த காலப்பகுதியில் எமது ஆலயத்திற்கு விநாயகப்பெருமான் பேரருளி னால் பஞ்சதள இராஜகோபுரம் நிர்மாணிப் பதற்கு பேரருள் கிடைக்கப் பெற்றேன். ஓராண்டு காலப்பகுதிக்குள் அக்கோபுரத்தைப் பூர்த்தி செய்து கும்பாபிஷேகமும் நடந்தேறியது. இதைக் கேள்வியுற்று அடியேனை அணுகிய மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகிகளின் வேண்டுகோளுக்கிணங்க அந்த ஆலயத்தின் இராஜகோபுர நிர்மாணத்திற்கு சிற்பாசாரியார் அராலியூர் க. கோபாலசிங்கம் அவர்களை ஒழுங்குசெய்து கொடுக்கவும், சில ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கவும் எம்பெருமான் திருக்கடாட்சம் கிடைக்கப்பெற்ற தையிட்டு மன மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மாபெரும் திருப்பணியைச் செய்வதற்கு முன் னின்று உழைத்த ஆலய நிர்வாகத்தினர் களுக்கும் ஏனைய உதவிகள் புரிந்த அடியவர்கள் அனை வருக்கும், இந்த இராஜகோபுரத்தை வெகு அழகாக, முறைப்படி நிர்மாணித்த அராலியூர் க. கோபாலசிங்கம் சிற்பாசாரியரின் குழுவினர்க் கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் திருவருள் பாலிப்பாராக.

**குறிப்பு:**

ஆலய தர்மகர்த்தா சபைத் தீர்மானத்தின் படி குடாநாட்டில் இராசகோபுரம் அமைக்கப் பட்டுள்ள கோவில்களின் நிர்வாகிகள் சிலருடன் தொடர்பை மேற்கொண்டோம். அச்சமயம் என்னுடன் பணிபுரியும் இருவரின் உதவிகள் கிடைத்தன. அவர்களில் ஒருவரான திரு. ப. அரியரத்தினம் அவர்கள் கோண்டாவில் நெட்டி லிப்பாய் பிள்ளையார் ஆலய இராஜகோபுரப் பணிகளில் பெரும் பங்காற்றிய திருவாளர் சு. பரம்சோதி அவர்களைத் தொடர்பு படுத்தி யிருந்தார். திரு. பரம்சோதி அவர்கள் விரிவாக இராஜகோபுர பணிபற்றித் தொடர்ந்து எமது சபையினருடன் உரையாடியதுடன் உகந்த ஆலோசனைகளையும் அவ்வப்போது தந்து பொருத்தமான சிற்பாசிரி யார் அவர்களுடனும் தொடர்பை ஏற்படுத்தித் தந்தார். மேலும் நேரடியாக வருகைதந்து ஏலவே இருந்த இராஜ கோபுர அமைவுக்கான அடித்தளத்தை யும் பார்வையிட்டார். கந்தர்மடத்தைச் சேர்ந்த உகந்த சிவில் பொறியியலாளரின் ஆலோசனைக் கேற்ப சிற்பா சாரியாருக்கு வழிகாட்டி அடித் தளத்தைப் பலமாக்கியபின் இராஜகோபுர மேல்தள வேலைகள் ஆரம்பமாகின. வேலைகள் நடைபெறுங்கால் அன்னார் இடையிடையே வந்து தகுந்த ஆலோசனைகளும் வழங்கி வழி காட்டி உதவினார். எதுவித பிரதி உபகாரமும்



எதிர்பாராத அவர்கள் ஒரு சமயம் இத்தொடர்பு பற்றிக் குறிப்பிடுகையில் என்னுடனான முதல் தொடர்பில் தற்செயலாக ஆலயம்பற்றிக் குறிப் பிட்டபோது, அமரர் வி. சபாரத்தினம் மணிய காரன் அவர்களின் உடன் பிறந்த அவரின் தமைய னாரான ஓய்வுபெற்ற இலங்கை துறைமுக அதிகாரசபை சிறாப்பரான வி. பெரியதம்பி அவர்கள் தனக்கு மிகவும் அறிந்தவர், தனக்கு மிகவும் வேண்டியவர் என்றும், திரு. பெரியதம்பி அவர்கள் தனது சொந்த ஊரான கரம்பனிலேயே தம் திருமணபந்தத்தைக் கொண்டவர் என் பதையும் அவரின் இக்கோயிலுடனான தொடர் பையும் அறிந்து மிகவும் மெய்சிலிர்த்தார். இவ்வாறான ஒரு ஆலயத்துக்கு இப்பணியில் பங்காற்றக் கிடைத்த சந்தர்ப்பமானது தெய்வ சங்கல்ப்பம் எனத் திரு. பரம்சோதி அவர்கள் குறிப்பிட்டிருந்தார். இராஜகோபுர கும்பா பிஷேக தினமான 16.06.2006 அன்று வருகை தந்து, நிகழ்வுகளில் பங்கேற்று வழிபாடாற்றிச் சென்றார். அவர்களுக்கு எமது தர்மகர்த்தா சபையினர் சார்பான நன்றிகள் கூறி, மாவடியான் அனுக்கிரகம் அவருக்கு என்றும் கிட்ட வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

**நன்றி,**

**–தொகுப்பாசிரியர்–**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜகோபுரத்தில் அமைந்துள்ள சிற்பங்களிற் சில...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜகோபுரம் கும்பாபிஷேக நிகழ்வுகளிற் சில....


சிற்பாசாரியார் குழுவினர் இராஜகோபுர முடிகளுடன்...


பிரதான சிற்பாசாரியார் க.கோபாலசிங்கம் இராஜகோபுரமுடியை நித்திய சிவாச்சாரியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளும்போது...


திரு.ஐ.பரஞ்சோதி அவர்களுக்கான கௌரவிப்பு


பிரதான சிற்பாசாரியார் க. கோபாலசிங்கம் ஆலய முகாமையாளர் சி.இராமலிங்கம் அவர்களால் கௌரவிக்கப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆலயத்தில் புதிதாக
பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள
துவார பாலகர்கள்...

ஆலய பணிகளில் காவற் தூண்களாய்
திரு.திருமதி இராமலிங்கம் தம்பதிகள்...



ஆலய தர்மகர்த்தா சபையினர்...

இடமிருந்து வலமாக

1. திரு. சபாரத்தினம் சந்திரகுமாரன் - பொருளாளர் (முகாமையாளர், இலங்கை வங்கி, சாவகச்சேரி)
2. திரு. கனகலிங்கம் சோமசேகரம் - நிர்வாக உறுப்பினர் (பதவிநிலை தொழிநுட்ப உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
3. திரு. சுப்பிரமணியம் அருளானந்தசிவம் - தலைவர் (உரிமையாளர், சங்கரன்ஸ், நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி)
4. திரு. சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் - பிரதமகுரு
5. திரு. சின்னத்தம்பி இராமநாதன் - முகாமையாளர்
6. திரு. வேலுப்பிள்ளை சடாச்சரமூர்த்தி - கணக்காய்வாளர் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர், இலங்கை மின்சார சபை)
7. திரு. சின்னத்துரை செல்வராசா - செயலாளர் (பிரதேச உள்ளகக் கணக்காய்வாளர், இலங்கை போக்குவரத்துச் சபை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



விநாயகர் துணை

# ஆலய நிர்வாக முகாமையாளர் வரிசையில்

## அமரர் தம்பு தம்பிராசா அவர்கள்

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய முகாமையாளராக அமரர் தம்பு தம்பிராசா அவர்கள் 1981 - 1994 காலப் பகுதியில் சேவை புரிந்துள்ளார். அமரர் சபாரத்தினம் மணியகாரன் காலத்தே தன்னை மாவடியானுடன் இணைத்துக் கொண்ட இவர் 24.05.1919இல் இப்பூவுலகில் தோன்றினார்.

முகமாலை கேயரத்தின முதலியார் பரம்பரையில் வந்துதித்த அமரரவர்கள் ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஆவார். இவரது சேவைக் காலத்திலேதான் ஆலயத்தில் குறிக்கப்பட்ட நேரத்தில் பூசைகள் நடைபெறும் வழக்கம் கொண்டுவரப்பட்டது. உட்பிரகாரம் முழுவதும் ஓட்டினால் வேயப்பட்டது. முருகன் விஷ்ணு மூர்த்திகளுக்கு தூபியுடன்கூடிய ஆலயங்கள் அமைக்கப்பட்டன. உட்பிரகாரத்தில் புராண இதிகாச சம்பந்தமான ஓவியங்கள் வரையப்பட்டன. வருடாந்த கணபதி ஹோமமும் இவரது காலத்திலேதான் நடைபெற ஆரம்பமாகியது.

மேலும் கந்தபுராணப் படிப்பு, சிவராத்திரி புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பன இடம்பெற்று வந்தாலும், இவரது காலத்தில் பன்னிரு திருமுறை ஓதல், திருவிளையாடற் புராணம், ஏகாதசி புராண படனம், பெரிய புராணப்படிப்பு என்பன ஆரம்பிக்கப்பட்டதுடன், வெள்ளிக்கிழமை உற்சவம், பிள்ளையார் கதை நாட்களில் அபிஷேகம், ஏகாதசியில் சந்தானகோபாலருக்கு விசேட பூசை, மாதாந்த கார்த்திகை, கந்தஷஷ்டி காலம் போன்ற தினங்களில் முருகனுக்கு விஷேட பூசை என்பன ஆரம்பமாகின. திருவெம்பாவை உற்சவம் ஏற்கனவே நடைபெற்று வந்தாலும் இவரது காலத்தே அபிஷேகத்துடன் மேலும் சிறப்புறத் திருவருள் கூடியது.

அமரரவர்களின் சேவைக்காலத்திலேயே அடியேன் மாவடியான் சேவையில் என்னை ஈடுபடுத்திக்கொள்ள வாய்ப்புக் கிட்டியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பல்வேறுபட்ட ஆலய வளர்ச்சிப் பணிகளில் பங்கேற்ற தம்பு தம்பிராசா அவர்கள் 05.05.1995ல் இறைவனடி சேர்ந்தார். அமரர் அவர்களின் பணிகள் ஆலய வளர்ச்சிக்கு காத்திரமான பங்கை நல்கி இருக்கின்றன என்பதில் எதுவித ஐயமுமில்லை.

சுபம்!

**சி. இராமலிங்கம்**
முகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

# மஹோற்சவ விழா விபரம்

அருள்மிகு மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலய மஹோற்சவம் ஆண்டுதோறும் ஆடி மாதம் பூர்வபட்ச ஷஷ்டித் திதி அன்று கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி பூரணை தினத்தில் தீர்த் தோற்சவத்துடன் நிறைவுறுமாறு மிகவும் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற்று வருகிறது. இவ்வுற்சவங்கள் யாவும் அவரவர்க் கென ஒதுக்கப்பட்ட வகையில் விநாயகரின் அருள்பெற்றமைக்குச் சமமானநிலை எனக் கூறக்கூடியதாக உபயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அப்பெரியார்களின் பெயர்விபரம் வருமாறு:

**மஹோற்சவ உபயகாரர்கள் விபரம்**

கொடிச் சீலை (துவசப்படம்) உபயம் திரு.ச. ஆ. கோபாலமூர்த்தி

| நாள் | திருவிழா | உபயகாரர் |
|---|---|---|
| முதலாம் நாள் | கொடியேற்றம் | திரு. க.கனகலிங்கம் குடும்பம். |
| இரண்டாம் நாள் | 2 ஆம் திருவிழா | திரு. ஆ. சின்னையா. |
| மூன்றாம் நாள் | 3 ஆம் திருவிழா | திருமதி. சச்சிதானந்தம். |
| நான்காம் நாள் | 4 ஆம் திருவிழா | திருமதி. ஞா. வாரித்தம்பி. |
| ஐந்தாம் நாள் | 5 ஆம் திருவிழா | திரு. த. இராசநாயகம். |
| ஆறாம் நாள் | 6 ஆம் திருவிழா | திரு. கு. குலசிங்கம். |
| ஏழாம் நாள் | வேட்டைத் திருவிழா | திருமதி. புஷ்பா கணேசலிங்கம். |
| எட்டாம் நாள் | சப்பறத் திருவிழா | திரு. ச. தாமோதரம்பிள்ளை. |
| ஒன்பதாம் நாள் | தேர்த் திருவிழா | திரு. க. சுரேசன். |
| பத்தாம் நாள் | தீர்த்தத் திருவிழா | திரு. பி. கனகநாயகம். |
| பதினோராம் நாள் | பூங்காவன திருவிழா | திரு. கி. விசுவநாதன் குழுவினர். |

**மஹோற்சவ காலத்தில் தினமும் ஆலயச் சூழலில்...**

- ❋ சமயப் பெரியார்களினால் இறைவன் புகழ், சமய ஒழுக்கம் இதிகாச புராண வரலாறுகள்போன்ற அம்சங்கள் உள்ளடங்கிய தான சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும்.
- ❋ தினமும் அன்னதானம் இடம்பெறும்.
- ❋ விநாயகர் அடியார்கள் ஆலயத்தினை அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருப் பதிலும் வேண்டிய திரவியங்களைத் திரட்டுவதிலும் ஈடுபட்டிருப்பார்கள்.
- ❋ மாவடி விநாயகர் பஜனைக் குழுவினர் மற்றும் சுயவிருப்பில் கலந்துகொள்ளும் அன்பர்கள் ஆகியோரின் கூட்டுப் பிரார்த் தனையும் பஜனையும் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990இல் ஆலய மஹோற்சவக் காட்சிகள்...





2009 இல் ஆலய மஹோற்சவக் காட்சிகள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2010இல் ஆலய மஹோற்சவக் காட்சிகள்...





வேட்டைத்திருவிழா...



தேர் புறப்படல்



தேர் திருவீதி உலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய பரிவார மூர்த்திகள்...



சந்தான கோபாலர்



சுப்பிரமணியர்



பைரவர்




சண்டேஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடித்தம்பப் பிள்ளையார்



தேரடி பைரவர்



நாகதம்பிரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்தில் புராண படனக் காட்சி...



ஆலய வரலாற்றில் இடம்பெற்ற அமரர் சரவணமுத்து அவர்களால்
உபகரிக்கப்பட்ட சகடை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடிமரம்



கொடிச்சேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

# ஆலய வளர்ச்சியிலும், புனருத்தாரணப் பணிகளிலும் பங்காற்றிய கடந்தகால செயற்குழுக்களும், திருப்பணிச் சபைகளும்

**(1) தேர்த் திருப்பணிச் சபை**

தலைவர்: திரு.மு.தா. சுப்பிரமணியம்
[சமாதான நீதிவான்]

செயலாளர்: திரு. சி. செல்லையா
[இளைப்பாறிய ஆசிரியர்]

பொருளாளர்: திரு. க. சதாசிவம்
[இளைபபாறிய கிராமசேவகர்]

இவர்களுடன் இணைந்ததாக ஒரு செயற் குழு உறுப்பினர்கள் குழுவும் இருந்தது.

❄❄❄

**(2) தேர்முட்டிச் சபை**

தலைவர்: திரு. மு. தா. சுப்பிரமணியம்
[சமாதான நீதிவான்]

செயலாளர்: திரு. க. குமாரசாமி
[சங்கீத ஆசிரியர்]

பொருளாளர்: திரு. க. சங்கரப்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)

❄❄❄

**(3) 3.1 திருப்பணிச்சபை 1979ம் ஆண்டு**

காப்பாளர்:

திரு. வி. சபாரத்தினம்
ஷெ ஆலய முகாமையாளர்

ஆலோசகர்கள்:

திரு. க. சதாசிவம்
[இளைப்பாறிய கிராமசேவையாளர்]

திரு. சி. செல்லையா
[இளைப்பாறிய ஆசிரியர்]

தலைவர்

திரு. மு. தா. சுப்பிரமணியம்
[சமாதான நீதிபதி]

உப தலைவர்கள்

திரு. சு. கனகரத்தினம்
[மாஜித் தலைவர், சாவகச்சேரி நகர சபை]

திரு. பி. தம்பிப்பிள்ளை
[மாஜி அங்கத்தவர், சாவகச்சேரி நகர சபை]

செயலாளர்:

திரு. க. குமாரசாமி
[சங்கீத ஆசிரியர்]

உப செயலாளர்:

திரு. த. குணநாயகம்
[அரசாங்க எழுது வினைஞர்]

பொருளாளர்:

திரு. க. சங்கரப்பிள்ளை
[இளைப்பாறிய அதிபர்]

உதவிப் பொருளாளர்:

திரு. வ. சுப்பிரமணியம்
[இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்]

பிரசாரச் செயலாளர்:

திரு. கு. வி. மகாலிங்கம் [சைவப் புலவர்]

**நிர்வாக உறுப்பினர்கள்**

திரு. த. சிதம்பரப்பிள்ளை [இலிகிதர்]
திரு. ச. ஆறுமுகம்
திரு. க. இராமலிங்கம் [ரயில்வே ஊழியர்]
திரு. க. உமாமகேஸ்வரன் [இளைப்பாறிய அதிபர்]
திரு. வே. கந்தையா
திரு. இ. க. சுப்பிரமணியம்
திரு. பொ. விநாயகமூர்த்தி [ஆசிரியர்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வி. தம்பிப்பிள்ளை
திரு. ஆ. சுப்பிரமணியம் [ஆசிரியர்]
திரு. வே. யோகராசா [விவசாய திணைக்களம்]
திரு. இ. கந்தையா [வானொலி அறிவிப்பாளர்]
திரு. ந. கந்தையா [ஆசிரியர்]
திரு. ஆ. வேலாயுதபிள்ளை [ரயில்வே, மீசாலை]
திரு. க. பெ. மார்க்கண்டு
[அதிபர், பனிக்கன் குளம் அ.த.க.பாடசாலை]
திரு வை. கோவிந்தசாமி [ஆசிரியர்]
திரு. பொ. கனகநாயகம்
[விவசாயபோதனாசிரியர்]
திரு. சு. அருளானந்தசிவம்
[காங். சீமேந்துக்கூட்டுத்தாபனம்]
திரு. க. வேதநாயகம் [சாவ. நகரசபை உறுப்பினர்]
திரு. முத்து பொன்னையா [மனேஜர், ப.நோ.கூ.ச]
திரு. ந. ஏரம்பமூர்த்தி [ஆசிரியர்]
திரு. ம. வாரித்தம்பி
[கூட்டுறவு திணைக்கள பரிசோதகர்]
திரு. சி. செல்வரத்தினம்
திரு. சி. நவரத்தினம் [நெசவு ஆசிரியர்]
திரு. வ. செல்லையா
திரு. பூ. சுந்தரம்பிள்ளை
திரு. பொ. கிருஷ்ணசாமி
திரு. வ. கிருஷ்ணசாமி

3.2. 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில் மகா கும்பா பிஷேக நிகழ்வு சிறப்பாக நடந்தேறியது.

3.3. ஷெ கும்பாபிஷேக நிகழ்வில் பங்கேற்ற பிரதிஷ்டா சிவாச்சாரியார்கள்:

சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் [மட்டுவில்]
சிவஸ்ரீ க. நடராஜக் குருக்கள் [சரசாலை]
சிவஸ்ரீ ச. வரதராஜக் குருக்கள் [சுன்னாகம்]
சிவஸ்ரீ இ. குமாரசாமிக் குருக்கள் [அரியாலை]
சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள் [இரத்தினபுரி]

**சர்வ சாதகர்கள்:**

பிரம்மஸ்ரீ சி. சதாசிவ சர்மா [மட்டுவில்]
பிரம்மஸ்ரீ ச. ஞான சர்மா [நுணாவில்]

**நித்திய அர்ச்சகர்கள்:**

கு. பாலசுந்தரக் குருக்கள்
வேலுப்பிள்ளைக் குருக்கள்

❄❄❄

**3.4. கும்பாபிஷேக மலர் வெளியீடு:**

**மலர் ஆசிரியர் :** பண்டிதர் ந. கந்தையா அவர்கள்
**வெளியீடு :** மண்டலாபிஷேக பூர்த்தி தினமான 05. 08.1981.

**4. திருப்பணிச் சபை 05.01.1997 அன்று கடமைப் பொறுப்பேற்றது.**

| | |
|---|---|
| **தலைவர்:** | திரு. ஐ. மாணிக்கவாசகர் [இளைப்பாறிய அதிபர்] |
| **செயலாளர்:** | திரு. அ. கயிலாயபிள்ளை B.A. (Hons), Dip.in Ed., S.L.P.S.I [கோட்டக்கல்வி அலுவலர் – பளை, அதிபர், பளை மத்திய கல்லூரி] |
| **பொருளாளர்:** | திரு. க. சோமசேகரம் [தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்] |
| **உப தலைவர்:** | திரு. சோ. கணேசலிங்கம் (மலர் ஆசிரியர்) [இளைப்பாறிய அதிபர்] |
| **ஏனையோர் :** | திரு. சி. இராமலிங்கம் - ஆலய முகாமையாளர் |
| | திரு. சு. அருளானந்த சிவம் [வர்த்தகர்] |
| | திரு. த. செல்வராசா |
| | திரு. ச. சந்திரகுமார் (துணை முகாமையாளர், இலங்கை வங்கி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வாகனங்கள்...















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வெளிவீதியைச் சூழவுள்ள மடங்கள்...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்தின் தேர்த் தரிப்பிடம்



தீர்த்தக்கேணியும், இளைப்பாற்று மண்டபமும்





தண்ணீர்ப்பந்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய உட்பிரகார ஓவியங்களிற் சில...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் அன்றும்...


ஆலயம் இன்றும்...




1990களில் ஆலயமுகப்புத்தோற்றம்...



2010இல் ஆலயமுகப்புத்தோற்றம்...



1981இல் மூலஸ்தான தோற்றம்...



2010இல் மூலஸ்தான தோற்றம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய மண்டப முகப்பு மூர்த்தங்கள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசந்த மண்டப முன்னைய விமானத் தோற்றம்...





தற்போது வசந்த மண்டப விமானத்தின் புதிய அலங்காரத் திருக்காட்சிகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4.1. பாலஸ்தாபனம் 09.02.1997 ல் நடை பெற்றது.**

4.2 எண்ணெய்க் காப்பு 07.06.1997ல் நடை பெற்று, மறுநாள் 08.06.1997, ஞாயிற்றுக் கிழமை காலை மணி 5-30 முதல் காலை மணி 06-16 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறி 21.07.1997 அன்று மண்டலாபி ஷேகத்துடன் நிறைவெய்தியது.

4.3 ஷெ கும்பாபிஷேக நிகழ்வில் பங்கேற்ற பிரதிஷ்டா சிவாச்சாரியார்கள்:

சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் (பிரதம குரு)
சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள்
சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள்
சிவஸ்ரீ க. பரராசசேகரக் குருக்கள்
சிவஸ்ரீ ப. பாலசுப்பிரமணியக் குருக்கள்
சிவஸ்ரீ பா. பாலமுரளீதரக் குருக்கள்
சிவஸ்ரீ த. இராஜேஸ்வரக் குருக்கள்

**சாதகாசிரியர்:**

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

**ஏனைய அந்தணப் பெருமக்கள்:**

சிவஸ்ரீ. சி. நீலகண்டக் குருக்கள்
சிவஸ்ரீ. சி. வேலுப்பிள்ளைக் குருக்கள்
பா. சிவலிங்கம் ஐயா

**4.4. கும்பாபிஷேக மலர் வெளியீடு:**

16. 08. 1997

**மலர் ஆசிரியர்:** திரு. சோ. கணேசலிங்கம்.
[உபதலைவர், இளைப்பாறிய அதிபர்]

**5. பாலஷ்தாபனம்:** 27.01.2010

விகிர்தி வருஷம் வைகாசி மாதம் 21ஆம் நாள், இடப லக்கினம்.

**கும்பாபிஷேகம்:** 04.06.2010 வெள்ளிக்கிழமை அதிகாலை 05.50 - 6.38 வரை.

**மண்டலாபிஷேகப் பூர்த்தி:** 21.07.2010

### ✧ நாற்பாதங்கள் :-

ஆன்மா முத்தியடைவதற்கு வேண்டிய நான்கு மார்க்கங்கள் - சரியை, கிரியை, யோகம், ஞானம் ஒன்றுடன் ஒன்று ஆதாரமானவை. இவற்றுக்கு அடிப்படையாக விளங்குவது பக்தி.

### ✧ ஞானம் மூவகைப்படும்.

பதிஞானம், பசுஞானம், பாசஞானம்

### ✧ விநாயகர் நான்மணிமாலை

இந் நூலைப் பாடியவர் மகாகவி பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நற்பணியில் ஆலயம் ..



1. மஹோற்சவ மற்றும் விழாக் காலங்கள், விசேட உற்சவங்கள் ஆகிய தினங்களில் அடியார்கள் பயன்பெறும் பொருட்டு சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்தல்.
2. அடியார்களுடன் இணைந்த பஜனை, புராண படன நிகழ்வுகள்
3. தற்போது மடத்தில் தற்காலிக வாசிகசாலையொன்று அமைக்கப்பட்டுள்ளமை.
4. சாவகச்சேரி நகரசபையின், மீசாலை நூல் நிலையத்திற்கான நிலம் வழங்கி தற்போது அந்நூல் நிலையம் செயற்பட்டு வருகின்றமை.
5. கமத்தொழில் திணைக்களம் அமைக்கவிருக்கும் பழ விற்பனை நிலையத்திற்கான கட்டடத்திற்கு காணி வழங்கப்பட்டு தற்போது பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
6. சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான மீசாலை "மினி கூட்டுறவு நகர்" இயங்குவதற்கான இடவசதி / கட்டடம்.
7. அறநிதியம் - பரோபகாரிகளின் உதவியுடன் வசதி குறைந்த மாணவருக்கான கல்வி மாதாந்த உதவு தொகை தற்போது மூவர் பெறுகின்றனர். இதில் இருவர் பல்கலைக்கழக மாணவர்கள். இந்நிதியானது அவர்கள் ஊதியம் பெறுதல் தொடங்கும்போது மீளப் பெறப்படும்.
8. ஆலயமானது வெறுமனே வழிபாட்டுத் தலமாக மட்டுமன்றி, அறிவாலயச் செயற்பாடுகளின் இடமாகவும் செயற்படுகின்றது. 1927 ஆம ஆண்டுக் காலப் பகுதியில் "விளக்கேற்றும் விளக்கேற்ல்" எனும் கல்வி அறிவூட்டும் திட்டத்தை மீசாலையைச் சேர்ந்தவரான அமரர் தசாவதானி சரவணமத்து ஆறுமுகம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். "விளக்கேற்றும் விளக்கேற்றல் (Each One Teach One) என்பது ஏற்றப்பட்ட ஒரு விளக்கு தான் மட்டும் எரிந்து வெளிச்சத்தைக் கொடுப்பதுடன் நின்றுவிடாது எரியாதிருக்கும் விளக்குகளையும் ஏற்றி எரியச் செய்யும் விளக்கைக் குறிக்கும். கற்றவர்கள் தாம் கல்வியறிவு பெறுவதுடன் நின்றுவிடாது, பிறருக்கும் கல்வி அறிவூட்டும் திட்டம் என்பது இதன் உட்பொருளாகும். இத்திட்டமானது ஆலயத்தில் 1927 இல் அவ்வாண்டு விநாயக நோன்பு நிறைவன்று ஆரம்பிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. (ஆதாரம்: "தினக்குரல்" 17 அக்டோபர் 2004) இத்திட்டம்மூலம் அக்காலத்தில் வீட்டைவிட்டு வெளியேறாத பல பெண்கள் கல்வி பெறுவதற்கு வழிபிறந்தது. இத்திட்டப் பிதாமகரான அமரர் ஆறுமுகம் அவர்களே ஆலய கொடிப்பட உபயகாரர் என்பது குறிப்பிடத்தக்கது.

   இத்திட்டம் பரிணாம வளர்ச்சி கண்டு இன்று அறநெறிப் பாடசாலை மாணவருக்கான சமய அறிவூட்டல் நிகழ்வுகள், அறிவுப் போட்டிகள் என விரிவுபட்டு ஆலயத்தே நிகழ்ந்து வருகின்றது.

## எதிர்கால நோக்குகள்...

(i) குறைநிலையில் உள்ள கணபதி படிப்பகத்தை நிறைவு செய்தல்.
(ii) கணபதி பாலர் பாடசாலையை அமைத்தல்.
(iii) A 9 வீதியை அண்மித்ததாக நுழைவாயில் ஒன்று அமைத்தல்.
(iv) கல்யாண மண்டபம் ஒன்று அமைத்தல்.
(v) 32 விநாயகர் சிற்பங்கள் கோவில் பிரகாரத்தில் உருவாக்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08.06.1997இல் நடந்தேறிய மஹாகும்பாபிஷேகக் காட்சிகள்



மஹா அபிஷேகத்தில் திருப்பணிச்சபைத் தலைவர்
ஐ.மாணிக்கவாசகர் பிரதம குருவுடன்...



மஹா அபிஷேக சங்கர்ப்பத்தில்
திருப்பணிச் சபைத் தலைவர்
ஐ.மாணிக்கவாசகர்
பிரதமகுரு சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள்
அவர்களுடன்...





நல்லை ஆதீன முதல்வருடன் அடியார்கள்...





கும்பநீர் ஆசீர்வாதம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மூலஸ்தான ஸ்தூபி அபிஷேகம்...**



**கும்பநீர் ஆசீர்வாதம்...**



**நாதஸ்வர வித்துவான் எம்.பஞ்சாபிகேசன் குழுவினரின் மங்களவாத்தியம் கும்பாபிஷேகத்தின்போது...**

(ஆலயத்தின் முன்னைநாள் ஆஸ்தான மங்களவாத்தியக் கலைஞர் முருகப்பா அவர்கள் நாதஸ்வர வித்துவான் கலாநிதி பஞ்சாபிகேஷன் அவர்களின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்**

# வழிபடுவோர் சபை



**பதிவு இலக்கம்:** HA/4/J/165
*மீசாலை கிழக்கு, மீசாலை*

**வங்கியாளர்:** *மக்கள் வங்கி, சாவகச்சேரி*

**கணக்கு இல:** *14801*

**நிர்வாக சபை உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| போஷகர்: | *திரு. செ. ஸ்ரீநிவாசன்.* *பிரதேச செயலர், தென்மராட்சி.* |
| தலைவர்: | *திரு. அ. கயிலாயபிள்ளை.* |
| உபதலைவர்: | *திரு. சி. கணேசன்.* |
| செயலாளர்: | *திரு. மா. சிவசுப்பிரமணியம்* |
| உபசெயலாளர்: | *திரு. ப. பாலசுப்பிரமணியம்* |
| பொருளாளர்: | *திரு. ம. குமாரவேல்ராசா* |

**செயற்குழு உறுப்பினர்கள்:**

*திரு. செ. பரமலிங்கம்*
*திரு. த. சிதம்பரப்பிள்ளை*
*திரு. மு. இராசநாயகம்*
*திரு. மு. மகேஸ்வரன்*
*திரு. கு. நவரத்தினம்*
*திரு. க. கிருஷ்ணசாமி*
*திரு. இ. கந்தையா*
*திரு. வா. கணபதிப்பிள்ளை*
*திரு. க. தவயோகராஜா*
*செல்வி ச. வளர்மதி*
*திரு. வேதநாயகம்*
*திரு செ. நவரத்தினம்*
*திரு. சி. நகுலநந்தீசன்*
*திரு. நா. நடராச சுந்தரம்.*

**கணக்குப் பரிசோதகர்:**
*திரு. வே. பூபாலசிங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில்
# புனருத்தாரண கும்பாபிஷேக வரவு செலவு கணக்கு - 2010

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| பற்றுச்சீட்டு | 3,808,360.00 | கிரேசர் டஸ்ட் | 150,000.00 |
| வங்கியில் எடுத்தது | 1,050,000.00 | பாலியாற்று மண் | 30,000.00 |
| பற்றுச் சீட்டு வரவு | 300,000.00 | நாகர்கோவில் மண் | 32,400.00 |
| மண்டலாபிஷேக வரவு | 35,500.00 | கச்சாய் மண் | 63,000.00 |
| | 5,193,860.00 | கிரேசர் கல் | 16,000.00 |
| | | உபகரணப் பொருட்கள் | 1,400.00 |
| | | வைரக் கல் | 18,400.00 |
| | | கிடுகு | 8,000.00 |
| | | மூலஸ்தானத்து எவர் சில்வர் | 21,000.00 |
| | | மின் பிறப்பாக்கி பற்றரிகள் | 10,400.00 |
| | | மின் பிறப்பாக்கி கூலிகள் | 6,000.00 |
| | | ரெராஸ்கோ பதித்த கூலி | 600,000.00 |
| | | மணிமண்டப கொங்கிறீற் | 265,000.00 |
| | | மேசன் தட்சணை | 28,000.00 |
| | | தச்சுவேலை பலகை உட்பட | 61,500.00 |
| | | கட்டிடச் சில்லறைச் செலவு | 22,350.00 |
| | | மின்சார சாமான், கூலி | 146,770.00 |
| | | இரும்புவேலை மூர்த்திகூலி | 147,000.00 |
| | | சாரம் மரம் | 7,000.00 |
| | | கட்டு மண் வேலைகள் | 1,011,000.00 |
| | | சார மரம் பலிபீட வேலைகள் | 344,025.00 |
| | | பொம்மைகள் கூலி | 1,096,000.00 |
| | | பெயின்ட் கூலி | 1,118,500.00 |
| | | கும்பாபிஷேக சாமான் | 51,885.00 |
| | | அபிஷேகப் பொருட்கள் | 29,485.00 |
| | | புடைவைகள் | 117,000.00 |
| | | நோட்டீஸ் | 17,750.00 |
| | | ஐயர் ஆச்சாரி சகலவிதமான தட்சணைகள் | 202,500.00 |
| | | கணேச கடை சீமெந்து, கம்பி, பெயின்ற் | 898,413.00 |
| | | யசோ கடை சீமெந்து, கம்பி | 262,720.00 |
| | | சாத்துப்படி. | 5,000.00 |
| | | | |
| மீ.கீ. கொ. செ. | 1,594,638.00 | | |
| | 6,788,498.00 | | 6,788,498.00 |

தலைவர் | செயலாளர் | முகாமையாளர் | பொருளாளர் | கணக்காய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை

# திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார்

## அருளாசி வேண்டும்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.





**கு.வி.மகாலிங்கம் குடும்பத்தினர்**

மீசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீசாலை திருநீலகண்ட
## வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
## கும்பாபிஷேக மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# PCST PC SOLUTIONS
## TECHNOLOGIES (PVT) LTD

**305, Kasthuriyar Road, Jaffna.**
Tel :- 021 222 1101

**M.M.V Road, Nelliady**
Tel :- 021 2264999




Available Multi HighSpeed Dongle

3.5 Mbps High Speed Dialog BroadbandOnly Rs 690/= Per Month

High Speed Net Browsing

## Also Dialog Broadband Available

| Package | Month Rent |
|---|---|
| 2GB | Rs690/= |
| 4GB | Rs990/= |
| 7GB | Rs1490/= |
| 15GB | Rs2990/= |

Experience Better Quality Mobile Broadband

**PCST I**
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kington 1GB Ram
DVD Writer,Atx Casing
15' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

**3 Year's Warranty**

**PCST II**
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
320GB Harddisk
Kington 2GB Ram
DVD Writer,Atx Casing
15' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

**3 Year's Warranty**

**PCST III**
Intel Core 2 Duo 2.93Ghz
Intel Mother Board
500GB Harddisk
Kington 2GB Ram
DVD Writer,Atx Casing
15' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

SAVE MONEY!!!

PCST

SAVE MONEY!!!

PCST

**PCST IV**
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kington 1GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

**3 Year's Warranty**

**PCST V**
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
320GB Harddisk
Kington 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

**3 Year's Warranty**

**PCST VI**
Intel Core2Duo 2.93Ghz
Intel Chipset Mother Board
500GB Harddisk
Kington 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகம் 2

## ஆலய ஆய்வும்; பிறவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் திருக்கோவில்

(தோற்றமும் தொன்மையும்)

# பல்லவர் காலம்

(கி.பி. 7ஆம் நூற்றாண்டு - கி.பி. 9 ஆம் நூற்றாண்டு)

பேராசிரியர் செல்லையா கிருஸ்ணராசா
தொல்லியல் - வரலாற்றுத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி . யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான ஐதீகங்கள் பெருமளவிற்கு சமயச்சார்புடையவையாகவே இருந்து வருவதைக் காண்கின்றோம். அவை பெரும்பாலும் தலபுராணங்களுடன் இணைக்கப்பட்டவையாகக் காணப்படுவதும், பேசப்படுவதும் எமது பாரம்பரியத்தின் தொன்மையை நிலைநிறுத்துவதற்கு பேருதவியாகவுள்ளது. காலநிகழ்வுகளின் அடிப்படையிலும், உள்ளூர் வெளியூர் அரசவம்சங்களின் அடிப்படையிலும், மேலைத்தேயத்து ஆதிபத்தியத்துடன் - குடியேற்ற நாட்டாட்சி முன்னெடுக்கப்பட்டகால நிகழ்வுகளுடன் அல்லது சம்பவங்களுடன் இணைக்கப்பட்ட முறையிலும் இவ்வகையான தலபுராணச் செய்திகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இற்றைவரைக்கும் மக்கள் சிந்தனை மரபில் இடம் பிடித்து வருவதனைக் காணலாம். உதாரணமாக நாகர்கோவில் கப்பற் திருவிழா பற்றிய கதைகள், கண்ணைக் கொத்திய காக்கைப் பிள்ளையார் கதை, வாயிலை மாற்றிய பிள்ளையார் (மேற்கு வாசல் பிள்ளையார்) கதைகள் எனப் பலவகையான ஐதீகங்கள் இன்று திருத்தல வரலாறாக நின்று நிலைத்து வருவதனைக் காண்கின்றோம். மாருதப்புரவீக வல்லிபற்றிய கதை, யாழ்பாடி பற்றிய ஐதீகம், இராமர் வில் ஊன்றிய நிகழ்வுகள் என ஐதீகங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்களது சமயச்சிந்தனை மரபில் நின்று நிலைத்து விட்டிருந்தமையைக் காண முடிகின்றது. இவற்றினூடாக யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் உருவாகி வளர்ச்சிபெற்று வந்த பண்பாட்டு உருவாக்கத்தையும், சமய வாழ்வில் மக்கள் ஈடுபட்டு வந்திருந்த வரலாற்றையும், வாணிபத்தில் மக்கள் ஈடுபட்டுவந்த முறையையும் தெளிவான வரலாற்று உருவாக்கமாக பாரம்பரியப் பதிவுகளாக ஆக்கிக்கொள்ளமுடிகின்றது. இத்தகைய ஒரு மரபின் வளர்ச்சியின் தொடர்ச்சியாகவே **மீசாலை தெற்கிலுள்ள திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் திருக்கோவிலின் தோற்றமும் தொன்மையும் அமைந்து கொண்டமையைக் காணமுடிகின்றது.** இத்தலத்தைப் பற்றிய வரலாற்று செய்திகள் தென்மராட்சியின் வரலாற்றுப்பாரம்பரிய முறைமையொன்றின் வளர்ச்சியை இனங்காணத்தக்க வகையில் இப்பொழுது அடையாளம் காணப்பட்டுள்ளது.

போர்த்துக்கேயரது ஆட்சிக்காலத்தில் பின்பற்றப்பட்ட கலையழிவுக் கொள்கைக்குள் அகப்பட்ட இக்கோயிலை தென்மராட்சியில் வாழ்ந்த வாணிபத்துறை மக்கள் அழியவிடாது காப்பாற்றிக் கொணர்ந்ததோடு, ஆங்கிலேயரது பரிபாலனத்தின் கீழ் மீண்டும் இக்கோயிலை ஒரு முழுமையான நிலைக்கு வளர்த்தெடுத்து, புதிய சந்ததியிடம் அதனை ஒப்படைத்தும் விட்டிருந்தனர். மிகத்தொன்மையான ஒரு பண்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பாரம்பரியம் இக்கோயில் தொடர் பாக உணரப்பெற்றும், பேணிவரப்பெற்றும் இருந்தமையே இன்று இக்கோயிலின் வியக்கத் தக்க புதியதொரு தோற்றப்பாட்டிற்குக் காரண மாக அமைந்தது எனலாம். இப்பின்னணியிலே இவ்வாலயம் தொடர்பாக இதுவரையில் கிடைக் கப்பெற்ற புறச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, அதன் வரலாற்றுத் தொன்மையை இனங்காணவேண்டிய தேவை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இச்சிறிய குறிப்புரையில் இவ் வாலயத்தின் மூலமூர்த்தியாக வீற்றிருந்து அருள் பாலிக்கும் விநாயகரது சிற்பவியல் முறைமையை வெளிக்கொணருவதன் ஊடாக இக்கோவிலின் தொன்மை வரலாற்றினைக் காணமுடியும்.

இருக்கும்நிலையில் அமைந்துள்ள இக் கணபதி வடிவம் போன்றதொரு பிறிதொரு வடிவம் இலங்கையின் எப்பாகத்திலும் காணப் பட்டிருக்கவில்லை என்பதனை இங்கு முதலில் குறிப்பிட்டாக வேண்டும். உயர்புடைப்புச் சிற்ப முறைமையில் உருவாக்கப்பட்ட இக்கண பதியின் ஒத்த வடிவம் தென்னிந்தியாவில் தமிழகத்தில் பிள்ளையார் பட்டிக் கிராமத்திலேயே காணப் படுகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனுடைய தோற்றப்பொலிவு முற்றுமுழுவது மாக பல்லவர்கால சிற்பவனப்பினை எமக்கு மீட்டுத் தருவதாக அமைந்துள்ளது. கருங் கல்லிலே உருவாக்கப் பட்டிருந்த இச்சிற்பத்தில் இப்பொழுது அதன் உறுப்புக்கள் மெல்ல மெல்ல சிதிலமடைந்து கொண்டு செல்வ தாகவும் குறிப்பிடப்படுகின்றது. அவ்வகையில் இம்மூல மூர்த்தி மக்கள் வழிபாட்டில் மிகவும் தொன மையான கால எல்லையிலிருந்து விளங்கிக் கொண்டு வருவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

இருக்கின்ற நிலையில் (Sitting posture) வடிவமைக்கப்பட்டுள்ள இவ்விநாயகர் சிற்பம் உயர்புடைப்பு முறையில் (High Relief sculpture) உருவாக்கப்பட்டுள்ளமை அதன் தொன்மையை எடுத்துகாட்ட உதவும் ஓரம்சமாகும். தலையலங் காரத்தினைப் பொறுத்தவரையில் முடி அல்லது கிரீடம் என்ற அலகினை இச்சிற்பத்தில் காண முடியவில்லை. பதிலாக சற்சதுர நெற்றிப்பட்டத் திற்குரிய தலையமைப்பில் மிக நீண்ட தும்பிக்கை யொன்றுடன் வலது பக்கம் நோக்கி தும்பிக்கை வளைந்திருக்கின்ற நிலையில் கணபதியின் முற்பக்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வலது பக்கத் தோற்பட்டை சற்றுத்தாழ்ந்தும், இடது பக்கத் தோற்பட்டை சற்று உயர்ந்தும் காணப் படுவது பல்லவ மரபினை எமக்கு மிக இலகுவாக அடையாளம் காட்டும் அம்சமாக உள்ளது. நான்கு கரங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இடது முன்பக்கக் கரம் முத்துமாலையொன்றை அல்லது தண்டை ஒன்றைக் கொண்டிருக்க, மேல் இடது கரம் அங்குசத்தினைத் தாங்கியுள்ளது. முன்பக்க கீழ் வலதுகரம் அபய ஹஸ்த நிலையிலும் மேல் வலது கரம் தெளிவற்ற நிலையில் காணப் படுகின்றது. நெற்றிப்பட்ட வெட்டும், தும் பிக்கையில் கொம்புக்கண்மித்தான வெட்டும் மிகத்தெளிவாக இச்சிற்பத்தில் புலப்படுத்தப் பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் சிற்ப வனப்பு முழுவதுமே பிள்ளையார் பட்டிக்கிராமத்தி லுள்ள பல்லவர் காலத்திற்குரிய கலையம்சங் களைத் தாங்கியிருப்பது எளிதில் புலப்படுகிறது. அந்தவகையில் பல்லவப் பண்பாட்டினைப் பறைசாற்றும் மூலமூர்த்தியாகிய விநாயகரைக் கொண்டு எழுந்தருளியுள்ள இவ்வாலயம் தென்மராட்சிப்பரப்பில் வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்ததாக உள்ளது.

இவ்வாலயத்தின் தோற்றம் தொடர்பான சான்றுகளின் தொன்மையை எடுத்துக்காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு சான்று மூலமூர்த்தியின் பீடக்கல்லில் வரையப்பட்டுள்ள பல்லவ கிரந்த வரிவடிவங் களாகும். இவற்றைப் படியெடுப்பதற்குரிய முயற்சியில் சிவஸ்ரீ கிருபானந்தக் குருக்கள் ஐயா அவர்கள் முயற்சி எடுத்திருந்தும், அம்முயற்சி பலனளிக்கவில்லை. ஐயா அவர்கள் சந்தனக்காப் பிட்டு அவ்வரிவடிவங்களை இனங்காண்பதற்கு எடுத்த முயற்சியில் வரிவடிவங்கள் தெளிவு நிலையை இழந்து, வெறும் கீறுகளாகத் தோற்றமளிக்க ஆரம்பித்தன. உண்மையில் வரி வடிவம் வரையப்பட்ட பீடத்தின் மீது ஈரமான வெள்ளைத் தாள் இட்டு அத்தாளின் மேற்பரப்பு வரிவடிவங்களுக்குள் செலுத்தப்பட்ட பின்னர், அத்தாளின் மேற்பரப்பின் மீது மிகவும் மிருது வாகப் பூசப்படும் பசைக்கரி மூலமாகவே அத் தாளின்மீது வரிவடிவங்களைப் பதித்துக்கொள்ள முடியும். எவ்வாறெனினும் இக்குறிக்கப்பட்ட மூலமூர்த்தியை பலகோணங்களில் எடுத்த படங் களில், அப்பீடத்தில் வரையப்பட்டுக் காணப் படுகின்ற கிரந்தவரிவடிவங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்தில் நல்ல சந்தர்ப் பம் ஒன்றுகூடிவரும் சமயத்தில் அக்கிரந்த எழுத்துக்களைப் படியெடுப்பதன்மூலம் இத் திருத்தலத்தின் வரலாற்றுத் தொன்மையை நாம் விளங்கிக்கொள்ள முடியும்.

**பிற்குறிப்பு :**

I. மாவடி, மாவிலாறு, பெரியமாவில், சின்னமாவில் என்ற பெயர்கள் பல்லவர், சோழர்காலத்து இடப்பெயர்களாகும்.

II. திருநீலகண்ட(ர்) பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயனார். அப்பெயர் காரண இடுகுறிப்பெயராக மாவடிப்பிள்ளை யாருக்கு வழங்கப்பட்டிருப்பது பல்லவப் பண்பாட்டுச் செல்வாக்கினை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

III. அனுராதபுரத்திலுள்ள இசுருமுனிய விகாரையிலுள்ள சிற்பத்தொகுதிகள் பல பல்லவப்பண்பாட்டுக்குரியவையாகும். அங்குள்ள சிற்பலட்சணங்களுடன் மாவடிப் பிள்ளையாரது மூலமூர்த்தியை ஒப்பிடும் போது **பல்லவப்பண்புகள்** தெளிவாகத் தெரிவதனைக் காணமுடியும்.

**தீட்சை:-** நயனதீட்சை, ஸ்பரிசதீட்சை, வாசகதீட்சை, மானசதீட்சை, சாத்திரதீட்சை, யோகதீட்சை, ஔத்திரிதீட்சை.

1. நயனதீட்சை:- ஞானாசிரியரின் அருள் நோக்கால் நிகழ்த்தப்படுவது.
2. ஸ்பரிசதீட்சை:- ஆசிரியன் மாணவனை தொடும் அளவில் நிகழ்வது.
3. வாசகதீட்சை:- ஞானாசிரியர் திருவைந்தெழுந்து முதலிய மந்திரங்களை மாணாக்கனுக்கு உபதேசிப்பதன் மூலம் நிகழ்வது.
4. மானசதீட்சை:- ஞானாசிரியர் யோகமுறையிலே மாணவனது ஆன்மாவைச் சிவமயமாக்கி நிகழ்வது.
5. சாத்திரதீட்சை:- குரு மாணவனுக்கு ஞானநூல்களை உரைத்து முப்பொருள் இயல்பை உணருமாறு செய்து அகவிருள் தீர்ப்பது.
6. யோகதீட்சை:- ஞானாசிரியர் மாணவருக்கு ஆதாரயோகம், நிராதர யோகம் என்பனவற்றினைப் பயிற்றுவிப்பதன் மூலம் நிகழ்வது.
7. ஔத்திரி தீட்சை:- ஞானாசிரியன் மாணவனிடத்தில் ஞானம் உண்டாகுவதற்கு தடையாய் உள்ள சஞ்சித வினைகளை அக்கினி காரியத்தால் போக்குதல் மூலம் நிகழ்வது.

*இந்துக்கலைக் களஞ்சியம் தொகுதி 6*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம்புல்

விநாயக வழிபாட்டுக்கு மிகவும் உகந்த புல்லினம் கணபதிக்கு மிகவும் பிடித்தமான புல்.

தேவர்களுக்கு தொல்லை கொடுத்து வந்த அலைசுரனை பிள்ளையார் அவனைத் தப்பியோட விடாது தும்பிக்கையினால் வளைத்துப் பிடித்து விழுங்கி விட்டாராம். இதனால் அவருக்கு வயிறு தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தது. வயிற்றினுள் கடுமையான எரிப்பு உணர்வு உண்டாக்கியதும் பிள்ளையார் பலவித சிகிச்சைகளை மேற்கொண்டும் எதுவும் பலனளிக்கவில்லை.

இறுதியில் அறுகம்புல்லை உண்டதும் அது பூரணகுணமாகி விட்டது. எனவே தான் இந்து மதத்தவர்கள் அறுகம்புல்லுடன் தான் கணபதியை வழிபடுகின்றனர் என இந்துசமய புராண இதிகாசங்கள் சான்று பகர்கின்றன.

அறுகம்புல்லின் தாவரவியற்பெயர்:- சைனடான் டாக்டிலான்.
அறுகம்புல்லை பெர்முடா புல் (Berma da grass) என அமைரிக்கர்கள் அழைக்கின்றனர். அறுகம்புல் சாறு காரத்தன்மை உடையது. மருத்துவக் குணம் நிரம்பியது.

அறுகம் புல்லிலுள்ள காரத்தன்மை வஸ்துக்கள்:-

| | | |
|---|---|---|
| தாய்மையற்புரதம் | - | 40 % |
| ஈதர் வடிசாறு | - | 1.8 % |
| தூய்மையற்றநார்ப்பொருள் | - | 28.2 % |
| சாம்பல் உள்ளடக்கம் | - | 11.08 % |
| என்ஃபிரி வடிசாறு | - | 45.08 % |
| கல்சியம் | - | 0.77 % |
| பொஸ்பரஸ் | - | 0.59 % |
| பொட்டாஸ் | - | 2.08 % |

லண்டனைச்சேர்ந்த ஆன்விக்மோர் என்ற அம்மையார் அறுகம்புல் சாறு கொண்டு பல ஆய்வுகளை மேற்கொண்டு அதன் மருத்துவக் குணங்களை Be your Doctor என்று சஞ்சிகையில் வெளியிட்டுள்ளார்.

நன்றி:
(தினகரன் - 2010 - 04 - 20)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வளர்ச்சியும், அதன் இன்றைய செயற்பாடுகளும் ஒரு நோக்கு

திரு. அ. கயிலாயபிள்ளை. B.A. (Hons), PGDE, MEd., S.L.E.A.S
அதிபர், யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
தலைவர் வழிபடுவோர் சபை,
மீசாலை வெள்ளைமாவடிவிநாயகர் கோவில்.

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயம் இயற்கை வளம் நிறைந்த இலங்கையின் வடமாகாணத்தின் யாழ்குடா நாட்டின் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மா, பலா, தென்னை, போன்ற மரங்களால் சூழப்பட்ட மீசாலைக் கிராமத்தில் A9 வீதிக்கண்மையில் மீசாலை அல்லாரை வீதியில் அமைந்துள்ளது.

**ஆலய வரலாறு:**

ஐரோப்பிய நாட்டவரான போர்த்துக்கேயரின் இலங்கை வருகைக்கு முன்னரே கிட்டத்தட்ட ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இக்கிராம வாசிகளின் வழிபாட்டுக்குட்பட்ட ஆலயமாக விளங்கியுள்ளது. இதன் வரலாற்றை கர்ணபரம்பரை தகவல்கள் வாயிலாகவும், தற்போது இப்பிரதேசத்தில் வாழ்கின்ற பெரியோர்களின் வாய்வழி நேர்காணல் மூலமும், கோவில் தொடர்பான உறுதிகள், நீதிமன்று ஆவணங்கள், ஆலயத்தினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட சிறப்பு மலர்களாலும் அறிய முடிகிறது. கடந்த அரை நூற்றாண்டுக்கு பிற்பட்ட வரலாறு ஆதார பூர்வமானதாக உள்ளது.

இவ் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற கோவிலுக்கு சிறப்பம்சம் மிக்கது. ஆலய மூலமூர்த்தியான விநாயகர் மிகவும் சிறியது. ஆனால் கீர்த்திமிக்கது. கத்தோலிக்கர்களான போர்த்துக்கேயர் தமது மதத்தைப் பரப்புவதற்காக இந்துசமய செயற்பாடுகளை முடக்கி ஆலயங்களை இடித்து வருவதை அறிந்த இவ்வூர் மக்கள் வெள்ளை மாமர அடியில் மூலலிங்கமாகிய விநாயகரைப் புதைத்துவிட்டனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என அந்நியர் ஆட்சி தொடர்ந்ததால் இரண்டு நூற்றாண்டுக்குமேல் கவனிக்கப்படாது ஆலயம் இருந்த இடம் தெரியாது போய்விட்டது.

முகமாலையைச் சேர்ந்த கேகயர்த்தன முதலியார் என்பவர் தனது காணியில் கொள்ளு பயிரிடும்படி முத்தன் என்னும் விவசாயிக்குப் பணித்தார். முத்தன் நிலத்தை கொள்ளு விதைப்பதற்காக தரையைப் பண்படுத்த கொத்தினார். கொத்தும் போது வெள்ளை மாமரத்தின் அடியில் திருநீலகண்டம் என்னும் விஷ ஐந்து புகுந்தது. அதை தேடி முத்தன் ஆழமாக கொத்தும்போது மண் வெட்டி ஒரு பொருளில் பட்டு சத்தம் கேட்டது. திருநீலகண்டம் மறைந்து விட்டது. அவ்விடத்தில் இரத்தம் பெருகியது. அதைக் கண்ட முத்தனின் மனநிலை மாற்றம் ஏற்பட்டு மயக்கம் ஏற்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன் இரவு படுக்கையில் இருக்கும்போது கனவில் விநாயகர் உருவத்தில் தோன்றி "துன்பப் படாதே, அவ்விடத்திலே ஒரு விநாயகர் சிலை இருக்கிறது. அதை எடுத்து நீராட்டி அந்த மாவின் அடியில் வைத்து பூசிப்பாயாக. நீ உண்ணும் உணவில் ஒரு பகுதியை எனக்குப் படைத்துவிடு" என்று கூறினார். விடிந்ததும் அந்த அடியார் விநாயகர் சிலையைத் தோண்டி எடுத்து அந்த மரத்தடியில் வைத்து அமுது செய்து வணங்கினார்.

பின்பு முகமாலையைச் சேர்ந்த கேகயர்த்தன முதலியாருக்கு நடந்தவற்றைக் கூறினார். அவர் மாட்டு வண்டியிலே மீசாலைக்கு குடும்பத்தினருடன் வந்து சிறு கோவில் மண்டபம் அமைத்து அவ் விநாயகர் சிலையை பிரதிட்டை செய்து பூஜை நடைபெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்வித்தார். இவ் ஆலயமே மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயமாக விளங்குகிறது. அன்று கிடைத்த மூர்த்தியே இன்றும் ஆலய மூர்த்தியாக விளங்கு கின்றது. மண்வெட்டி பட்ட வடு இன்னும் மூர்த்தியில் இருப்பதை அவதானிக்கலாம். இது கர்ண பரம்பரைக் கதைமூலம் அறியக்கூடிய ஆலய வரலாறாக உள்ளது. ஆலயத்தின் மூர்த்தியாக விநாயகரும், தலவிருட்சமாக வெள்ளை மாவும் விளங்குகிறது.

ஆண்டார் பரம்பரையினரால் உருவாக்கப் பட்ட வைரக் கல்லால் அமைக்கப்பட்ட பாரிய தீர்த்தக்கேணி இவ்ஆலயத்துக்கு அழகைச் சேர்க்கின்றது. இக்கேணியானது ஊற்றுத்திறனுள்ளதாகவும் நிலப்பரப்பு முழுவதும் கற்களினால் ஆனதாகவும் காணப்படுகின்றது. ஊரில் உள்ள தோட்ட உரிமையாளர்கள் வருடந் தோறும் தீர்த்த திருவிழாவிற்கு முன்னர் கேணியை இறைத்து தீர்த்தத்திற்கு தயார்செய்வர். ஆலயத்தின் திருமஞ்சனக் கிணறும் அயலில் உள்ள கிணற்று நீரிலும் பார்க்க சிறப்பானதாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

சரவணமுத்து எனும் விநாயகர் அடியார் நேர்த்திக் கடனுக்காக வழங்கிய "சகடை" மாவடி விநாயகன் திருவிழாக் காலங்களில் வீதியுலா வருவதற்கு பயன்பட்டு வருவதை அவதானிக்கலாம். ஆலயத்தின் சப்பறம் ஆண்டார் பரம்பரையைச் சேர்ந்தவர்களால் கோவிலுக்கு வழங்கப்பட்டது. மிகவும் அழகானதாகவும், உயரமானதாகவும் திருவிழாக் காலத்தில் இச் சப்பறம் கட்டப்படும். இன்றும் ஆண்டார் பரம்பரையைச் சேர்ந்தவர்களால் இச் சப்பறம் கட்டும் செயற்பாடு நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

**கோவில் முகாமை**

ஆரம்ப கோவில் முகாமையாளர் கேகயரத்தின முதலியாரின் தனிப்பட்ட முகாமையின் கீழ் ஆலயம் இருந்துள்ளது. கோவிலுக்கு இரு மண்டபங்களை ஆக்கி நித்திய பூசை நடைபெறுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்துள்ளார். இக்கோவில் கிரியைகள் சரிவர நடை பெறுவதற்காக ஊரிலுள்ள அடியார்கள் பலர் பல கிராமங்களில் நிலங்களைத் தருமசாதனம் செய்துள்ளனர்.

கேயக முதலியாரின் மறைவைத் தொடர்ந்து அவரின் மகன் கணபதிப்பிள்ளை மணிய காரனும் அவருக்குப் பின் அவருடைய மகன் சரவணமுத்து நொத்தாரிசும் முகாமைப் பொறுப்பை ஏற்று நடாத்தியதாக அறியமுடிகின்றது. இவரது காலத்தில் ஆகம விதிப்படி மண்டபங்கள் அமைக்கப்பட்டதுடன் மூன்று கால நித்திய பூசையும் நைமித்திய பூசைகளும் நடைபெற ஆரம்பித்தன என்பதை அறிய முடிகின்றது.

நொத்தாரிசு சரவணமுத்து அவர்களின் பின்னர் அவரின் மகன் எரம்பு அவர்களும் அவரின் பேரன் வி. சபாரத்தினம் அவர்களும் ஆலயத்தை முகாமை செய்தனர். ஏரம்புவின் பின்னர் அவரின் மகன் வினாசித்தம்பி தனது பொறுப்பை தனது இளைய மகனான சின்னையா என்று அழைக்கப்படும் சபாரத்தினத்திடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வழங்கினார். திரு. சபாரத்தினம் அவர்கள் கஷ்டமான பொருளாதார நிலையிலும் 50 ஆண்டுகள் ஆலயத்தை சிறப்புற நடாத்தினார். மூன்றுகால நித்திய பூசையும் மஹோற்சவமும் சிறப்பாக நடைபெற்றது. இவரது காலத்தில் ஆலயம் பிரதான மண்டபங்களுடன் மடைப் பள்ளி, களஞ்சியம், குருக்கள் அறை, வாகன சாலை உள்வீதி மண்டபத்தில் ஒருபகுதி அமைக்கப்பட்டது. இம்மண்டபங்கள் மீசாலை ஊர் பெரியவர் வேலுப்பிள்ளை அப்பாவின் நிதி உதவியுடன் செய்யப்பட்டது. சபாரத்தினம் அவர்களது காலத்தில் 1954 இல் தர்மகர்த்தா சபை சட்டபூர்வமாக ஏற்படுத்தப்பட்டது.

திரு. வி. சபாரத்தினம் அவர்களின் பின்னர் தர்மகர்த்தாசபை உறுப்பினர்களில் ஒருவரான இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் திரு. தம்பிராசா அவர்கள் முகாமைப் பொறுப்பை ஏற்றார். குறிப்பிட்ட நேரத்தில் பூசைகள் ஒழுங்காக நடைபெற வழிவகுத்தார். இவரது காலத்தில் ஆலயத்தின் உட்பிரகாரம் முழுவதும் கொட்டகை அமைக்கப்பட்டதுடன் முருகன், சந்தான கோபாலர் ஆலயங்களும் அமைக்கப் பட்டது. வெள்ளிக்கிழமைத்திருவிழா விசேட தினங்களுக்கான உற்சவங்கள் நடைபெறுவதற்கு உதவிய சிறந்த முகாமையாளராகத் திகழ்கின்றார். இவரது காலத்தில் ஆலய வழிபடுவோர்சபை 1991 இல் ஆரம்பிக்கப்பட்டது.

திரு. தம்பிராசா அவர்களைத் தொடர்ந்து திரு. சி. இராமலிங்கம் அவர்கள் ஆலய முகாமைப் பொறுப்பை தொண்ணூறுகளின் நடுப்பகுதி களில் ஏற்றார். தர்மகர்த்தா சபை வழிபடுவோர் சபை ஆகியவற்றின் அனுசரணையோடு மிகச் சிறப்பாக ஆலய பரிபாலனத்தைச் செய்து வருகின்றார். இவரது காலத்தில் இரண்டு கும்பாபிடேகங்கள் நடைபெற்றுள்ளது. வசந்த மண்டபம் யாக மண்டபம் வைரவர் ஆலயம் சண்டேஸ்வரர் ஆலயம், கோவில் சுற்று மதில், இராஜகோபுரம் மணிமண்டபம் ஆகியன அமைக்கப்பட்டு ஆலயம் முழுநிறைவு பெற்றுள்ளது. இவரும் இவரது துணைவியாரும் முழுமையாக விநாயகர்பணி செய்து வருவது பாராட்டுதற்குரியது. தென்மராட்சியில் மிகப் பெரிய ஆலயமாகவும் குறிப்பிட்ட நேரத்தில் பூசைகள் மஹோற்சவம் ஆகியன நடை பெறு கின்ற ஆலயமாகவும் மீசாலை மாவடி விநாயகர் ஆலயம் விளங்குகின்றது.

**ஆலய வளர்ச்சிக்கு உதவிய பெரியவர்கள்**

சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள பெரியவர் களும், புலம் பெயர்ந்து வெளிநாடுகளிலுள்ள பெரியோர்களும் அடியார்களும் ஆலய வளர்ச் சிக்கு உதவி வருகின்றனர். ஆலய வளர்ச்சிக்காக நிலபுலம், திருப்பணி, திருவிழா முதலிய உபயங்களை தனித்து நின்று சிலர் உதவியுள் ளனர்.



ஆண்டார் பரம்பரையினர் ஆலய ஆரம்ப காலம் முதல் உதவி வருகின்றனர். கோவிலுக்கு காணிகளை வழங்கியதுடன், சப்பறம். தீர்த்தக் கேணி, இளைப்பாறு மண்டபம் ஆகியவற்றை வழங்கியுள்ளதுடன் இன்றுவரை அவற்றைப் பராமரித்து வருகின்றனர்.

றங்கூன் சுப்பிரமணியம் அவர்கள் ரங்கூனில் இருந்து பெருந்தொகைப் பணம் அனுப்பியதனால் தீர்த்தக்கேணி புனரமைக்கப் பட்டதுடன் திருமஞ்சனக் கிணறு, வடக்குப் பக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதில் ஆகியன அமைக்கப்பட்டதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வேலுப்பிள்ளை அப்பாவும் அவரது துணைவியும் தமது சொத்துக்களை விற்று உட்பிரகாரத்தின் ஒருபகுதி, வாகனசாலை, மடப்பள்ளி, களஞ்சிய அறை, குருக்கள் அறை ஆகியன அமைக்க உதவிபுரிந்துள்ளனர்.

சிதம்பரநாத தேசிகர் அவர்கள் கோவில் வீதியில் மடம் அமைத்து நாயன்மார் நால்வரினதும் குருபூசை சிறப்புற நடைபெற உதவியுள்ளார்.

சிவசங்கர நமசிவாய பரம்பரையினர் ஆலய வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். இவரும் இவரது இளையமகன் தங்கமுத்து என்பவரும் கோயிலுக்கு நிலம் வழங்கியதுடன் தங்கமுத்துவினால் ஆரம்பிக்கப்பட்ட இராஜகோபுரத்துக்கான அடித்தளம் தற்போது நிறைவுபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த திரு. கந்தையா அவர்கள் ஆலயத்துக்கு நீர்த்தாங்கி ஒன்றை அமைத்து வழங்கியுள்ளார். இந்நீர்த் தாங்கியூடாக பெறும் நீரினை குடிநீருக்காக மீசாலைப் பகுதி மக்கள் பெற்றுச்செல்வதை அவதானிக்க முடிகின்றது.

**தேர் திருப்பணிச் சபை**

1968ம் ஆண்டில் மாவடி விநாயகருக்கு புதிய சித்திரத்தேர் செய்வதற்காக தேர்திருப் பணிச்சபை உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக கொடைவள்ளலும் வர்த்தகருமான எம்.ரி.சுப்பிரமணியம் அவர்களும், செயலாளராக ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் திரு. க. சதாசிவம் அவர்களும், பொருளாளராக ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. கி. செல்லையா அவர்களும் சேவையாற்றினர். மீசாலை வாழ்மக்களின் நிதி பொருள் உதவியோடு அழகான சித்திரத்தேர் திருநெல்வேலி ஆ. சீவரத்தினம் அவர்களால் செய்யப்பட்டு 1971ம் ஆண்டிலே வெள்ளோட்டம் விடப்பட்டது.

தேர்திருப்பணிச்சபை தேர் முட்டித் திருப் பணிச்சபை ஆக மாற்றப்பட்டு தேர் நிறுத்துவதற்கு தேர்முட்டி ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. தேர்முட்டி இருந்த இடத்தில் இருந்த மடம் உடைக்கப்பெற்று முருகையா மடத்திற்கு அருகில் நிறுவப்பட்டது. அதன் பணிகள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாமல் உள்ளது. அதனைப் பூரணப்படுத்தவேண்டியது அடியவர் களின் கடமையாகும்.

கோவில் திருப்பணி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1979ம் ஆண்டில் திருப்பணிச் சபை உருவாக்கப்பட்டது. இச்சபையின் தலைவராக திரு.மு.தா. சுப்பிரமணியம் அவர்களும் செயலாளராக திரு.க.குமாரசாமி ஆசிரியரும் பொருளாளராக திரு. க. சங்கரப்பிள்ளை ஆசிரியர் அவர் களும் கடமையாற்றினர்.

**கும்பாபிடேகங்கள்**

உலகத்தில் நாம் உய்வதற்காக பார்க்கும் இடம் எல்லாம் நீக்கமற நிறைந்துள்ள இறைவனை ஆலயத்தில் எழுந்தருளச் செய்து வழிபடுவதே கும்பாபிடேகமாகும். இறைவன் பஞ்சபூதங்கள் முதலிய எட்டு இடங்களில் வியாபிக்கின்றார். அவை பின்வருமாறு நிலம், நீர், காற்று, ஆகாயம், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டுமாம். இது குடமுழுக்கு அல்லது பெருஞ் சாந்தி எனப்படும்.

கும்பாபிடேகம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்படுகின்றது. இதைக்கண்டு கழிப்பது 12 ஆண்டுகள் தினந்தோறும் ஆலயம் சென்று வழிபடுவதற்குச் சமமாகும். கும்பாபி டேகம் காண்பது கோடி புண்ணியமாகும். அக்கினி, நீர், குரு ஆகிய மூவரும் கும்பாபிடேகத்தில் முக்கியம் பெறுகின்றனர். 1981ம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற கும்பாபிடேகங்களுக்கு எமது ஆலயத்தில் எழுத்து மூலமான சான்றுகள் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய மூத்தோரின் கூற்றுப்படி 1947ஆம் ஆண்டிலும் 1957ம் ஆண்டிலும் கும்பாபிடேகங்கள் நடந்துள்ளதாகக் கருதப்படுகின்றது.

**கும்பாபிடேகம் 1981**

திரு.மு.தா. சுப்பிரமணியம் அவர்களது தலைமையில் செயலாற்றிய திருப்பணிச்சபை 1980.01.28 திங்கள் அன்று மாவடி விநாயகருக்கு பாலஸ்தாபன கும்பாபிடேகத்தை நடாத்தி திருப்பணிச் சேவைகளை ஆரம்பித்தது. மூலஸ்தானம் உட்பட நான்கு மண்டபங்களையும் வைரக் கல்லால் அமைத்து ஏனைய பகுதிகளையும் புனரமைத்தனர். 1981.06.22 திங்கள் மகாகும்பாபிடேகம் நடைபெற்றது. எமது ஆலயப் பிரதம குரு கலாபூசணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர்கள் பிரதம குருவாகச் செயற்பட்டு கும்பாபிடேகத்தை இனிதே நிறைவேற்றினார். 45 நாட்கள் எம்பெருமானுக்கு மண்டலாபிடேகம் சிறப்புற நடைபெற்று 1981.08.05 புதன்கிழமை மண்டலாபிடேகம் பூர்த்தி விழா கொண்டாடப்பட்டது. சங்காபிடேகத்தினைத் தொடர்ந்து கும்பாபிடேகச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. பண்டிதர் ந. கந்தையா ஆசிரியர், மலராசிரியராகச் செயற்பட்டார். இக்காலப்பகுதியில் திரு. வி. சபாரத்தினம் முகாமையாளராகச் செயற்பட்டார்.

**கும்பாபிடேகம் 1997**

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புனராவர்த்தன கும்பாபிடேகம் நடைபெற வேண்டும். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக கும்பாபிடேகம் நடைபெறவில்லை. திரு. ஐ. மாணிக்கவாசகரைத் தலைவராகவும் திரு. சி. இராமலிங்கம் அவர்களை முகாமையாளராகவும் கொண்ட தர்மகர்த்தா சபை வழிபடுவோர் சபையினருடன் இணைந்து திருப்பணிச்சபை செயற்குழுவை உருவாக்கியது. திருப்பணித் தலைவராக திரு.ஐ. மாணிக்கவாசகரும் செயலாளராக திரு.அ. கயிலாயபிள்ளையும், பொருளாளராக திரு.க. சோமசேகரமும் செயற்பட்டனர்.

இத்திருப்பணிச் சபையினால் 1997.02.09 ஞாயிறு அன்று ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. ஆலயம் நான்கு மாதங்களில் மிகத் துரிதமாகப் புனரமைக்கப்பட்டது. ஆகம விதிப்படி வசந்த மண்டபம், யாக மண்டபம், வைரவர் ஆலயம், சண்டேஸ்வரர் கோவில், சுற்று மதில் என்பன அமைக்கப்பட்டன. வசந்த மண்டபத்தினை திருப்பணிச் சபைத் தலைவர் திரு.ஐ.மாணிக்கவாசகர் குடும்பத்தினரும், சண்டேஸ்வரர் ஆலயத்தை சோ. கணபதிப்பிள்ளை (குஞ்சையா) குடும்பத்தினரும் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. பொதுமக்களின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு ஆலயத்தின் மகா கும்பாபிடேகம் 1997.06.08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய பிரதமகுரு கலாபூசணம் சிதம்பரநாதக் குருக்கள் அவர்களால் சிறப்புற நடாத்தப்பட்டது. இது குருக்கள் அவர்கள் நடாத்திய இரண்டாவது மகா கும்பாபிடேகம் என்பதுடன், ஆதார பூர்வமான இரண்டாவது கும்பாபிடேகமுமாகும்.

நாற்பத்தைந்து தினங்கள் தொடர்ச்சியாக மண்டலாபிடேகம் நடைபெற்று 1997.07.22 செவ்வாய்க்கிழமை சங்காபிடேகத்துடன் மண்டலாபிடேகப் பூர்த்தி நடைபெற்றது. கும்பாபிடேக மலரும் இத்தினத்தில் வெளியிடப்பட்டது. மலராசிரியராக இளைப்பாறிய கொத்தணி அதிபர் சோ. கணேசலிங்கம் அவர்கள் செயற்பட்டார்கள். இம்மலர் ஆலய வரலாற்றை ஆவணப்படுத்த உதவியது.

**பிராயச்சித்த கும்பாபிடேகம்-2002**

தென்மராட்சிப்பிரதேசம் 2000ஆம் ஆண்டு சித்திரையில் பெரும் இராணுவ மோதலுக்கு உட்பட்டது. மக்களின் குடியிருப்பு, ஆலயங்கள் போர்ப்பாதிப்புக்கு உட்பட்டன. மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப்பிள்ளையாரின் அருளினால் மீசாலைப் பிரதேசத்திற்கோ, ஆலயத்திற்கோ, மக்களின் வீடுகளுக்கோ அழிவு ஏற்படவில்லை. ஆயினும் மக்கள் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் தமது வீடுகளைவிட்டு இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்து வடமராட்சி வலிகாமம் பகுதி களில் வாழ்ந்தனர். இடப்பெயர்ச்சி காரணமாக விநாயகருக்கு இக் காலப்பகுதியில் பூசை நடை பெறவில்லை. அன்றைய இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் நடைபெற்ற சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மக்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள்குடியேறினர்.

2002.01.28ஆம் திகதி எம்பெருமானுக்கு பிராயச்சித்த கும்பாபிடேகம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து மூன்றுவேளை பூசையும் ஏனைய உற்சவங்களும் வழக்கம் போல நடை பெற ஆரம்பித்தது.

**இராஜ கோபுரக் கும்பாபிடேகம் 2006**

ஒரு மனிதனின் உடலமைப்பை ஒத்ததாக ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. இராஜ கோபுரம் மனிதனின் பாதங்களுக்கு ஒப்பானது. இராஜ கோபுரத்தின் வடிவம் லிங்கம் போலுள்ள தால் இதனை "ஸ்தூலஇலிங்கம்" என அழைப் பர். இராஜகோபுரத்தில் பிரபஞ்சத்திலுள்ள அனைத்து அம்சங்களும் உள்ளடக்கப்படும். மீசாலைவாழ் மக்களின் நீண்ட காலக் கனவாக மாவடி விநாயகரின் இராஜகோபுர திருப்பணி இருந்தது. ஊர்மக்களின் ஆதரவுடன் ஆலய தர்மகர்த்தா சபையினரும் முகாமையாளர் திரு. சி. இராமலிங்கம் அவர்களும் இத் திருப்பணிக்கு செயல்வடிவம் கொடுத்தனர்.

2003.09.19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவடி விநாயகரின் இராஜகோபுரத் திருப் பணிக்காக நடுகல் நாட்டப்பட்டது. ஊரிலுள்ள அடியார்களும் புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழ்கின்ற எமது உறவுகளினது உதவியுடன் அழகான சிற்பங்களுடன் கூடிய இராஜகோபுரம் உருவாக்கப்பட்டது. பல்வேறு வரலாறுகளைக் கூறும் பஞ்சதள இராஜகோபுரத்தின் கும்பாபி டேகம் 2006.06.16ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடை பெற்றது. அத்துடன் அழகிய மணி மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டு ஆலயத்திற்கு புதுப் பொலிவை ஏற்படுத்தியது.

**கும்பாபிடேகம் 2010**

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புனராவர்த்தன மகாகும்பாபிடேகம் செய்ய வேண்டுமென ஆகமங்கள் கூறுவதற்கேற்ப தர்மகர்த்தா சபையினர் 2010ம் ஆண்டில் மகாகும் பாபிடேகம் செய்வதற்குத் தீரமானித்தனர். 2010.01.27ம் திகதி புதன்கிழமை பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 127வது நாள் அதாவது 2010.06.04 வெள்ளிக் கிழமை கும்பாபிடேகம் செய்வதாகவும் நாள் குறிக்கப்பட்டது. உற்சவ மூர்த்திகள் மண்டபம், மகா மண்டபம், ஸ்நபந மண்டபம், வசந்த மண்டப விமானம் என்பன மிகச் சிறந்த முறையில் கொங்கிறீற்றினால் அமைக்கப்பட்டது. சிற்ப வேலைகள் செய்யப்பட்டன. நிலங்கள் புனர மைக்கப்பட்டன. ஆலயக் கட்டடங்கள், சுற்று மதில், இராஜகோபுரம் என்பன அழகுறு வண்ணத்தில் நிறந்தீட்டப்பட்டது. கொடிக் கம்பத்திற்கருகில் தம்பப்பிள்ளையார் ஸ்தாபிக்கப் பட்டது. மணிமண்டப வாயிலில் அழகிய இரு புதிய துவாரபாலகர்கள் உருவாக்கப்பட்டன. மணிமண்டபத்தின் மேற்புறத்தில் அழகிய சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் ஆலய வரலாறு சித்தரிக்கப்பட்டுள்ளது. மிகக்குறுகிய காலத்தில் திருப்பணி வேலைகள் நிறைவு பெற்றது.

2010.06.02 புதன்கிழமை காலை பத்துமணி முதல் 2010.06.03 வியாழன் மாலை நான்குமணி வரை எண்ணை காப்பு சாத்தப்பட்டது. ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் அவரது மகன் கிருபாகரக்குருக்கள், ஏனைய அந்தணப் பெருமக்களின் துணையுடன் ஆலயத்தின் மூன்றாவது கும்பாபிடேகம் சிறப்புற நடை பெறுவதற்கான கிரியைகள் நடந்தேறின. 2010.06.04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதி காலை 05.50 மணிமுதல் 06.38 வரை மஹாகும் பாபிடேகம் நடைபெற்றது. நாற்பத்தைந்து நாட்கள் மண்டலாபிடேகத்துடன் 2010.07.18ம் திகதி சங்காபிடேகத்துடன் பூர்த்தி விழா நடை பெறவுள்ளது. கும்பாபிடேகம், சங்காபிடேகம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆகியனவற்றிற்கு மாவடிப் பிள்ளையார் ஆலய வழிபடுவோர் சபையினர் அன்னதானம் வழங்கிச் சிறப்பித்தனர்.

**ஆலயத்திருப்பணிகளும் வளர்ச்சியும்**

ஆலய வரலாற்றின் உற்சவ மூர்த்திகள் மஹோற்சவ காலத்தில் மட்டும் வசந்த மண்டபத்திலும் ஏனைய காலங்களில் ஆலயத்தின் உட்பகுதியில் அடியார்கள் வணங்கமுடியாத இடத்தில் வைக்கப்பட்டிருந்தன. 1985.08.21 புதன்கிழமை மகாமண்டபத்தில் உற்சவ மூர்த்திகளுக்கான ஆலயம் உருவாக்கப்பட்டு அடியவர்கள் உற்சவ மூர்த்தியை வணங்குவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது.

1985ஆம் ஆண்டு முதல் 1988ஆம் ஆண்டு வரை பல்வேறு மக்களின் நிதியுதவியுடன் உள் வீதி மதில் அமைக்கப்பட்டதுடன் உள்வீதி மண்டபங்களுக்கும் சீமெந்திலான நிலம் போடப்பட்டது. மாவடி விநாயகர் ஆலயத்தின் அடையாளத்திற்காக 1988.03.26ம் திகதி கண்டி வீதியில் விநாயகர் சிலை திறக்கப்பட்டது. ஆலயத்தின் உட்பிரசாரத்தின் சாவகச்சேரி வடக்கு மடத்தடி வீதியில் வசித்தவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமான திரு. சரவணமுத்து அவர்களின் திருப்பணியாக முருகன் ஆலயம் அமைக்கப்பட்டது. 1989.04.24 ஆம் திகதி காலை 05.38 மணிக்கு முருகனாலய குடமுழுக்கு சிறப்புற நடந்தேறியது.

மீசாலைப் பகுதியில் கிருஷ்ணருடைய ஆலயம் இல்லாத குறை இருந்தது. ஆலய முகாமையாளராக அக் காலப்பகுதியில் விளங்கிய திரு.தம்பிராசா அவர்களின் முயற்சியால் சந்தான கோபாலர் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு 1990.06.03ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 06.27 மணிக்கு சந்தான கோபாலருக்கு குடமுழுக்கு நடாத்தப்பட்டது.

சிவபெருமான் ஐந்து திருமுகங்களுடன் விளங்குவது போலவே விநாயகரும் பஞ்சமுக விநாயகராக காட்சி தருகின்றார். விநாயகரின் திருவுருவத்திலே யானைத்தலை, விலங்கு உருவத்தையும், இரு கால்கள் மனித உருவத்தையும், நான்கு கரங்கள் தேவ உருவத்தையும் காட்டி நிற்கின்றன. விநாயகன் விலங்காய், மனிதனாய்த் தேவராய் விளங்குகின்றார் என்னும் தத்துவத்தை பஞ்சமுக விநாயகர் விளக்குகின்றார். பஞ்சமுக விநாயகர் மாவடியான் ஆலயத்தில் 2003.07.02 ஆம் திகதி புதன்கிழமை பிரதிஷ்டை நடைபெற்றது. இத் திருப்பணியை மாவடியான் அடியவர் திரு. வே. திருநாவுக்கரசு அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

**நித்திய பூசைகள்**

இவ் ஆலயத்தின் காலைப் பூசை காலை 07.30 மணிக்கும் நண்பகல் பூசை 12.00 மணிக்கும் மாலைப் பூசை 05.00 மணிக்கும் நேரம் தவறாது நடைபெறுகின்றது. உற்சவ நாட்களிலும் விஷேட தினங்களிலும் முன்னறிவித்தலுடன் பூசை நேரங்களில் மாற்றம் செய்யப்படும்.

**நைமித்திய கிரிகைள்.**

விஷேட காலங்களில் நடைபெறுகின்ற பூசை நைமித்திய பூசைகள் என்றழைக்கப்படும். வெள்ளிக்கிழமை தோறும் விசேட பூசையுடன் விநாயகர் வீதியுலா வருவார். மாதந்தோறும் சதுர்த்தி தினத்தில் விசேட பூசையும் உள்வீதியுலாவும் நடைபெறுகின்றது. திருவெம்பாவை தினங்களில் பத்து நாட்கள் விசேட பூசையும் (அதிகாலை) திருவிழாவும் நடைபெறுகின்றது. தைப்பொங்கல், தைப்பூசம், ஏகாதசி தினம், கார்த்திகை மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, ஆனி உத்தரம், தீபாவளி, திருக்கார்த்திகை, விநாயகர்விரதம், விநாயகர் சஷ்டி, ஆவணி சதுர்த்தி, ஆகிய தினங்களில் விசேட பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

**மஹோற்சவம்**

மாவடியானின் மஹோற்சவ தினம் இப் பிரதேச மக்களின் சந்தோஷத்திற்குரிய தினமாகும். காலையும் மாலையும் நடைபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாவிற்கு பெருமளவு மக்கள் வருகை தருவார்கள். ஆரம்பகாலத்தில் பதினைந்து தினங்கள் மஹோற்சவம் நடைபெற்றது. இவ் ஆலயத்தில் திருவிழா ஆரம்பமாகி ஒரு நூற்றாண்டு கடந்துவிட்டது. 1981ம் ஆண்டு கும்பாபிடேகத்தைத் தொடர்ந்து பத்து நாட்கள் மஹோற்சவம் நடைபெறுகின்றது. அமரர் திரு. க. ஆறுமுகம் குடும்பத்தினர் கொடி ஊர்வலத்திற் கான ஒழுங்குகளைச் செய்கின்றனர். முகமாலை கனகலிங்கம் குடும்பத்தினர் கொடியேற்றத் தினையும் திரு.சோ. கணேசலிங்கம் குடும்பத்தி னர் வேட்டைத் திருவிழாவினையும் திரு. எம்.ரி சுப்பிரமணியம் குடும்பத்தினர் தேர்த்திருவிழா வினையும் செய்து வருகின்றனர்.

**கோயில் பூசகர்கள்**

அமரர் அ. பாலசுந்தரக்குருக்கள் குடும் பத்தினர் சுமார் அரை நூற்றாண்டு காலமாக நித்திய பூசைகளை செய்துவருகின்றனர். தற் போது பா.சிவலிங்கம் ஐயா நித்திய அர்ச்சகராக கடமையாற்றுகின்றார்.

சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் கடந்த முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஆலயத் தின் பிரதம குருக்களாக கடமை யாற்றி மஹோற்ச வங்கள் அபிடேகங்கள், கும்பாபிடேகம், கணபதி ஹோமம் ஆகியவற்றை நடாத்தி வந்துள்ளார். தற்போது அவரது மகன் சி. கிருபாகரக்குருக்கள் பிரதமகுருக்கள் பொறுப்பை ஏற்று நடாத்தி வருகின்றார்.

**புராணபடனத்தொண்டு**

சிவபூமி என திருமூலரால் குறிப்பிடப் பட்டுள்ள ஈழத்திலே தொன்றுதொட்டு இன்று வரை சைவப்பண்பாடுகள் வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றன. இம் மரபுகளில் புராணபடனம், சிறப்பு பெறுகின்றது. புராணங்கள் சமய உண்மையை உணர்த்தும் பொருட்டு தோற்றம் பெற்றன. புராணம் ஒன்றை ஒருவர் இசையோடு வாசிக்க இன்னொருவர் இசையோடு பொருள் விரித்து உரைக்கும் சைவசமயம் சார்ந்த ஒரு பண்பாட்டு மரபே புராணபடனம் என அழைக்கப்படுகின்றது. புராணத்திற்கு பொருள் கூறுவதைப் பயன் சொல்வதென்று அழைப்பர். இந்த வகையிலே மாவடி விநாயகராலயத்தில் புராணபடனம் என்கின்ற சைவத்தமிழ் மரபு பின்பற்றப்பட்டு வருகின்றது.

**பன்னிருதிருமுறை ஓதல்**

1992ஆம் ஆண்டு முதல் பன்னிரு திருமுறை ஓதுகின்ற செயற்பாடு இவ்வாலயத்தில் நடை பெற்று வருகின்றது. தேவார திருவாசககங்கள் சம்பந்தமான அறிவினையும் சமயப் பெருமை களையும் அறியச்செய்யும் தமிழ்ப்பணியாக இது இடம்பெறுகின்றது. ஒவ்வொரு வருடமும் தைப் பொங்கலன்று ஆரம்பமாகும் பன்னிரு திருமுறை ஓதல் தைமாத இறுதியில் பூர்த்தி செய்யப் படுகின்றது.

**பெரியபுராணபடனம்**

இறைவனால் "உலகெலாம்" என அடி யெடுத்துக்கொடுக்க சேக்கிழாரால் பாடப்பெற்ற நூலே பெரிய புராணமாகும். இது தமிழில் எழுந்த முதற்காப்பியமாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களது சிறப்புக்களையும், வரலாறு களையும், ஒன்பது தொகையடியார்களது வரலாற்றையும் கூறுகின்றது. 1991ஆம் ஆண்டு முதல் மாசிமாதத்தில் ஆரம்பித்து சித்திரை மாதம் 15ம் திகதி வரையில் எமது ஆலயத்தில் பெரிய புராணம் நிறைவு செய்யப்படுகின்றது. கிட்டத் தட்ட 60 நாட்களில் இப்புராண படனம் நிறைவு செய்யப்படுவதை அவதானிக்க முடிகிறது.

**கந்தபுராண படனம்**

யாழ்ப்பாணக் கலாசாரமே கந்தபுராணக் கலாசாரம் எனக் கூறும் அளவுக்கு பிற சமயங் களில் மக்கள் மூழ்காதிருக்க அன்று ஆறுமுக நாவலரால் தொடங்கப்பட்ட புராணப் படிப்பு முறை இன்றும் தொடர்கின்றது. சமய உண்மை களையும் தத்துவங்களையும் விளங்கிக் கொள் வதற்கு புராணப்படிப்பு பெரிதும் உதவுகின்றது. மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் மிக நீண்ட காலமாக கந்தபுராணப்படனம் நடைபெற்று வருகின்றது. 60ம் ஆண்டுகளில் ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி அப்பா அவர்கள் கந்தபுராணத்திற்கான பயன் சொல்வதை நேரில் அறியக்கூடியதாக இருந்தது. தற்போது சித்திரை மாத இறுதியில் அபிடேகத்துடன் இவ்வாலயத்தில் கந்தபுராண படலம் ஆரம்பிக்கப்படுகின்றது. ஆனிமாத நடுப்பகுதியில் வள்ளியம்மன் திருமண படனத்துடன் கிட்டத்தட்ட இரண்டு மாத காலத்தில் நிறைவு செய்யப்படுகின்றது. வருடந்தோறும் கந்தபுராண நிறைவின் மறுதினம் கணபதி ஹோமம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

### திருவிளையாடற் புராண படனம்

1991ஆம் ஆண்டு முதல் இவ்வாலயத்தின் திருவிளையாடல் புராண படனம் நடைபெற்று வருகின்றது. கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் இப்படிப்பு இடம்பெறுகின்றது. புரட்டாதி மாதத்தில் ஆரம்பிக்கப்படுகின்ற இப்படனம் கார்த்திகை மாதத்தில் நிறைவு செய்யப்படுகின்றது.

### திருவாதவூரடிகள் புராணம்

திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலையில் அபிடேகம் விசேட பூசைகளுடன் திருவிழாவும் நடைபெறுகின்றது. காலைப் பூசையைத் தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்படுகின்றது.

### ஏனைய புராணங்கள்

மாசிமாத சிவராத்திரி தினத்தில் சிவராத்திரி புராணம் முற்றோதப்படுகின்றது. ஏகாதசி தினத்தில் ஏகாதசி புராணம் படிக்கப்படுகின்றது. விநாயகர் விரதாரம்பத்தில் அடியார்கள் காப்புக் கட்டி விரதம் இருப்பர். இருபத்தொரு தினங்கள் பிள்ளையார் கதை மாலைவேளையில் படிக்கப்படும். இத் தினங்கள் 21 நாளும் விசேட அபிஷேகத்துடன் கூடிய பூசை நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும். கந்தசஷ்டி காலத்தில் முருகனுக்கு சிறப்புப் பூசை நடைபெறுகின்றது.

### தண்ணீர்ப் பந்தல்.

மாவடி விநாயகரின் திருவிழாக் காலங்களில் அடியவர் திருநாவுக்கரசு அவர்களினால் தாகசாந்தித் தண்ணீர்பந்தல் அமைத்து மோர், சர்க்கரைத்தண்ணீர் என்பன நீண்ட காலமாக வழங்கப்பெற்று வருகின்றது. தேர், தீர்த்தத் திருவிழாக்களில் வேறு அடியவர்களும் தண்ணீர்ப் பந்தல் அமைப்பது வழக்கமாக உள்ளது.

### வழிபடுவோர் சபை

1992. 02. 23ஆம் திகதி தொடக்கம் இந்து கலாசார அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட (பதிவு இல: HA/4/J/165) ஒரு அமைப்பாக மாவடிப் பிள்ளையார் கோவில் வழிபடுவோர் சபையிருந்து வருகின்றது. இச்சபை சமய அனுட்டானங்களை ஊக்குவிப்பதிலும், கலாசார விழுமியங்களை வளர்ப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது. இச்சபை வெள்ளிக்கிழமைகளிற் கூட்டுப்பிராத்தனை நடாத்துதல், ஆலய புராண படன நிகழ்வுகளுக்கு உதவுதல், திருவாசக முற்றோதல், தேவாரமுற்றோதல் ஆகியவற்றிற்கு உதவுதல் மாணவரிடையே சமய சம்பந்தமான பேச்சுப்போட்டிகளை நடாத்துதல், திருமுறைப் போட்டி, கோலப்போட்டி, சமயப் பொது அறிவுப் போட்டிகளை நடாத்துதல், மாலை கட்டுதல் போட்டிவைத்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு செய்துவந்தது. நாட்டிலேற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் தற்காலிக மாக இச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. இனிவரும் காலங்களில் செயற்பாடுகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### அன்னதான நிகழ்வு

மாவடிப்பிள்ளையார் கோயில் வழிபடுவோர் சபையினரால் மஹோற்சவ காலம் பத்து நாட்களும் அடியவர்களுக்கு மிகச்சிறப்பாக அன்னதானம் வழங்கப்படுகின்றன. மக்களின் நிதியுதவியுடனும், வர்த்தகர்கள், வெளிநாடுகளில் வதிவோரின் அனுசரணையுடனும் அன்னதானச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவடி விநாயகரின் அடியார்கள் அன்னதானத் துக்கான உதவிகளைச் செய்து வருகின்றனர். கும்பாபிடேகத்தினத்தையொட்டிய மணவாளக் கோலத்தில் நடைபெறும் சங்காபிடேகத்துக்கும் அன்னதானம் நடைபெறுகின்றது.

**அறநெறிப்பாடசாலை வாசிகசாலை**

மாணவர்களின் அறநெறிவளர்ச்சிக்காக இந்து கலாச்சார அமைச்சின் அனுசரணையுடன் அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அறநெறி சார்ந்த ஆர்வம் மாணவரிடையே குறைவாகவுள்ளது கவலைக்குரியது. தினசரிப் பத்திரிகைகளையும், சில அறிவு நூலையும் கொண்ட வாசிகசாலை கோவில் நிர்வாகத்தி னால் நடாத்தப்பட்டு வருகின்றது. தொடர்ச்சி யாகப் பத்திரிகைகள் வாசிக்க மக்கள் வருவது பாராட்டுக்குரியது.

**முடிவுரை**

இவ் ஆலயம் கடந்த ஐந்நூறு ஆண்டுகளில் பெருவளர்ச்சி அடைந்துள்ளது மகிழ்ச்சிக் குரியது. ஆலயம் சைவப்பணியுடன் சமூகப் பணியும் செய்யவேண்டும். கோயிற் காணியிற் கூட்டுறவு நகர் (Co.op. City) நூலகம், பழத் தொழிற்சாலைக்கான கட்டிடம் போன்ற சமூகப் பாங்கான சிந்தனைகள் ஏற்பட்டிருப்பது வர வேற்கக்கூடியதாகும். மீசாலை ஊர் மக்களுக்குப் பயன்படக் கூடிய அழகிய கல்யாண மண்டபம் ஒன்றை ஆலயச் சூழலில் அமைப்பது பயனுள்ள தும் வருமானத்தைத் தேடுவதற்குரியதுமாகும். இதற்கு அடியவர்கள் பல வழிகளிலும் உதவி செய்ய வேண்டும். இவ்வூர் மக்களைக் காத்து வாழ வழிகாட்டும் மாவடி விநாயகன் இந்நோக் கத்தை நிறைவேற்ற வேண்டும் என வணங்கு வோம்.

**உசாத்துணை நூல்கள்**


1. கந்தையா. ந, மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய மான்மியம், திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் குட முழுக்கு மலர், மீசாலை-1997.
2. கலாநிதி க.குணராசா, நல்லைநகர் நூல், யாழ்ப்பாணம் - 1987
3. கைலாசநாதக்குருக்கள். கா, சைவத்திருக்கோவிற் கிரியை நெறி, இந்து கலாவிருத்திச் சங்கம், கொழும்பு -1963.
4. சிறப்பு மலர், இரண்டாவது உலக இந்து மாநாடு, இலங்கை -2003.
5. செ.சத்தியதாசன் "மஹோற்சவ விளக்கம்" மகாகும்பாபிடேக சிறப்பு மலர்- 2009, இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில்
6. வேதநாதன் .மா, "ஈழத்தில் புராணபடன மரபு" இரண்டாவது இந்து மாநாட்டுசிறப்பு மலர்- 2003.
7. கும்பாபிடேக மலர்-1981, மீசாலை திருநீலக்கண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலயம் மீசாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ் மாவட்டம்
# தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவிலுள்ள
# இந்து ஆலயங்களின் விபரம்



## விநாயகர் ஆலயங்கள்

| இல. | ஆலயத்தின் பெயர் | கி.சே.பிரிவு | அமைந்துள்ள இடம் |
|---|---|---|---|
| 1 | ஒக்கலை விநாயகர் கோயில் | ஜே/291 | கைதடி தெற்கு, கண்டி வீதி |
| 2 | கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோவில் | ஜே/292 | கைதடி தென்கிழக்கு |
| 3 | கைதடி தெற்கு குட்டிப்பிள்ளையார் கோவில் | ஜே/292 | கைதடி தென்கிழக்கு |
| 4 | சித்தி விநாயகர் ஆலயம் | ஜே/294 | நாவற்குழி, கைதடி |
| 5 | தெருவடிப் பிள்ளையார் கோவில் | ஜே/295 | நாவற்குழி கிழக்கு |
| 6 | பிள்ளையார் கோவில் | ஜே/296 | கோவிலாக்கண்டி |
| 7 | தோப்பு பிள்ளையார் கோவில் | ஜே/298 | மறவன்புலோ மேற்கு |
| 8 | சாலபள்ளம் பிள்ளையார் கோவில் | ஜே/298 | மறவன்புலோ மேற்கு |
| 9 | வள்ளக்குளம் பிள்ளையார் கோவில் | ஜே/298 | மறவன்புலோ மத்தி |
| 10 | காரயன் தூவிற்பிள்ளையார் கோயில் | ஜே/298 | மறவன்புலோ வடக்கு |
| 11 | சேதுகாவலர் பிள்ளையார் கோவில் | ஜே/298 | மறவன்புலோ வடக்கு |
| 12 | பனங்காய்க்குளம் பிள்ளையார் கோவில் | ஜே/299 | தனங்கிளப்பு |
| 13 | மகாவில் குளம் பிள்ளையார் கோவில் | ஜே/299 | தனங்கிளப்பு |
| 14 | அறுகுவெளிப்பிள்ளையார் கோவில் | ஜே/299 | அறுகுவெளி |
| 15 | காரத்தூர் பிள்ளையார் கோவில் | ஜே/299 | தனங்கிளப்பு |
| 16 | செருக்கல் பிள்ளையார் கோயில் | ஜே/300 | செருக்கல் வீதி, சாவகச்சேரி |
| 17 | உழுத்தம்புலப் பிள்ளையார் கோவில் | ஜே/301 | கோயில் குடியிருப்பு, கச்சாய் வீதி |
| 18 | நாவலடிப் பிள்ளையார் கோவில் | ஜே/301 | கோயில் குடியிருப்பு, 1ம் கட்டை |
| 19 | வித்தகப்பிள்ளையார் கோயில் | ஜே/301 | கோயில்குடியிருப்பு, சப்பச்சிமாவடி |
| 20 | பெரும்படைப்பிள்ளையார் கோயில் | ஜே/301 | கோயில் குடியிருப்பு, கச்சாய் வீதி |
| 21 | சங்கத்தானை இத்தியடிப்பிள்ளையார் கோவில் | ஜே/302 | சங்கத்தானை |
| 22 | சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோயில் | ஜே/302 | சப்பச்சிமாவடி |
| 23 | கருக்குவாச்சிப் பிள்ளையார் கோயில் | ஜே/302 | பெரியமாவடி |
| 24 | இலுவத்துப் பிள்ளையார் கோயில் | ஜே/304 | மருதடி |
| 25 | பெருங்குளம் அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலயம் | ஜே/305 | கல்வயல் |
| 26 | விளைவேலி மருதடி வீரகத்திவிநாயகர் ஆலயம் | ஜே/305 | நுணாவில் மேற்கு |
| 27 | புலுட்டையன் ஆயிலடிப் பிள்ளையார் ஆலயம் | ஜே/305 | கல்வயல் |
| 28 | வேதவனப் பிள்ளையார் ஆலயம் | ஜே/305 | கல்வயல் |
| 29 | சித்தன் மாவடிப் பிள்ளையார் ஆலயம் | ஜே/305 | கல்வயல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 30 | மணங்குளம் பிள்ளையார் கோவில் | ஜே/308 | நுணாவில் மேற்கு, மணங்குளம் |
| 31 | கொல்லங்கிராய் பிள்ளையார் கோயில் | ஜே/308 | நுணாவில் மேற்கு,கொல்லங்கிராய் |
| 32 | மதவடி விநாயகர் ஆலயம் | ஜே/311 | மட்டுவில், நுணாவில் |
| 33 | கல்வம் பிள்ளையார் கோயில் | ஜே/312 | மடடுவில் தெற்கு |
| 34 | மருதடிப் பிள்ளையார் கோவில் | ஜே/313 | மட்டுவில் வடக்கு |
| 35 | செல்லப்பிள்ளையார் கோவில் | ஜே/315 | சந்திரபுரம், மட்டுவில் வடக்கு |
| 36 | கல்வம் பிள்ளையார் கோவில் | ஜே/315 | சந்திரபுரம், மட்டுவில் வடக்கு |
| 37 | பனையடிப்பிள்ளையார் கோவில் | ஜே/315 | சந்திரபுரம், மட்டுவில் வடக்கு |
| 38 | சிறீ வீரகத்திப் பிள்ளையார் கோவில் | ஜே/316 | சரசாலை தெற்கு |
| 39 | சினகைப் பிள்ளையார் கோவில் | ஜே/316 | சரசாலை தெற்கு |
| 40 | நுணுவில் பிள்ளையார் கோவில் | ஜே/317 | சரசாலை வடக்கு |
| **41** | **திருநீலகண்ட மாவடிப் பிள்ளையார் கோவில்** | **ஜே/318** | **மீசாலை கிழக்கு** |
| 42 | பாலையடிப் பிள்ளையார் கோயில் | ஜே/318 | மீசாலை கிழக்கு |
| 43 | கந்தன் பிள்ளையார் கோயில் | ஜே/319 | மீசாலை மேற்கு |
| 44 | பிள்ளையார் கோயில் | ஜே/320 | மீசாலை வடக்கு, கொடிகாமம் |
| 45 | தட்டாங்குளம் அருள்மிகு நீலகண்டப் பிள்ளையார் ஆலயம் | ஜே/321 | மீசாலை வடக்கு, கொடிகாமம் |
| 46 | நடராச வீரகத்திப்பிள்ளையார் ஆலயம் | ஜே/321 | டச்சுவீதி, மீசாலை வடக்கு கொடிகாமம் |
| 47 | கலட்டிப் பிள்ளையார் ஆலயம் | ஜே/321 | வேம்பிராய், மீசாலை வடக்கு, கொடிகாமம். |
| 48 | சிமியாந்தாழ்வு பிள்ளையார் கோயில் | ஜே/322 | அல்லாரை வடக்கு, கொடிகாமம் |
| 49 | பண்டாரி தரைப்பிள்ளையார் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 50 | அறுகம்புலம் பிள்ளையார் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 51 | ஆத்திக்காட்டு வீரகத்திப் பிள்ளையார் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 52 | மருதடிப் பிள்ளையார் கோயில் | ஜே/323 | வெள்ளம்போக்கட்டி |
| 53 | இலுப்பையடிப் பிள்ளையார் கோயில் | ஜே/323 | வெள்ளம்போக்கட்டி |
| 54 | சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் | ஜே/323 | வெள்ளம்போக்கட்டி |
| 55 | புங்கடிப் பிள்ளையார் ஆலயம் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 56 | மாவடிப் பிள்ளையார் கோவில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 57 | ஆலடிப் பிள்ளையார் கோவில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 58 | ஒட்டங்கேணி பிள்ளையார் கோயில் | ஜே/324 | கச்சாய் வடக்கு |
| 59 | பாலாவி தெற்கு ஆலடிப் பிள்ளையார் கோவில் | ஜே/325 | பாலாவி தெற்கு |
| 60 | பிள்ளையார் கோயில், கும்பாவெளி | ஜே/326 | கொடிகாமம் |
| 61 | பிள்ளையார் கோவில் | ஜே/326 | கொடிகாமம் |
| 62 | மகாகணபதிப்பிள்ளையார் தேவஸ்தானம் காளி அம்மன் | ஜே/327 | மீசாலை வடக்கு, கொடிகாமம் |
| 63 | ஆத்தியடி பிள்ளையார் கோயில் | ஜே/328 | தவசிக்குளம், மிருசுவில் |
| 64 | செல்லப்பிள்ளையார் கோயில் | ஜே/328 | தவசிக்குளம், மிருசுவில் |
| 65 | உசன் தெற்கு பிள்ளையார் கோயில் | ஜே/329 | உசன் தெற்கு |
| 66 | கரம்பகப் பிள்ளையார் கோயில் | ஜே/330 | கரம்பகம், எழுதுமட்டுவாள் |
| 67 | சிராவில் பிள்ளையார் கோவில் | ஜே/330 | கரம்பகம், மிருசுவில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 68 | விடத்தற்பளை சம்பாவெளிப்பிள்ளையார் கோயில் | ஜே/331 | விடத்தற்பளை |
| 69 | கெற்பெலி உச்சிட்ட கணபதி ஆலயம் | ஜே/332 | கெற்பெலி மேற்கு |
| 70 | கெற்பெலி பழம் பிள்ளையார் ஆலயம் | ஜே/332 | கெற்பெலி கிழக்கு |
| 71 | பெரிய கேணிப்பிள்ளையார் கோவில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 72 | மகிழடி விநாயகர் கோயில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 73 | மருதங்குளம் ஸ்ரீ மகா கணபதி ஆலயம் | ஜே/334 | எழுதுமட்டுவாள் வடக்கு |
| 74 | கல்யாணக்குளம் பிள்ளையார் ஆலயம் | ஜே/334 | எழுதுமட்டுவாள் வடக்கு |
| 75 | அரசடிப் பிள்ளையார் கோயில் | ஜே/335 | மிருசுவில் வடக்கு, மிருசுவில் |
| 76 | ஆலடிப் பிள்ளையார் கோவில் | ஜே/336 | கண்டி வீதி, மிருசுவில் |
| 77 | தச்சன் துரவுப் பிள்ளையார் கோயில் | ஜே/337 | குடமியன், வரணி |
| 78 | குடலை கூறிப் பிள்ளையார் கோயில் | ஜே/337 | குடமியன், வரணி |
| 79 | மடத்துப் பிள்ளையார் கோயில் | ஜே/337 | குடமியன், வரணி |
| 80 | மூன்றாம்பள்ளம் பிள்ளையார் கோயில் | ஜே/338 | நாவற்காடு |
| 81 | தனிவழைப் பிள்ளையார் கோயில் | ஜே/338 | நாவற்காடு |
| 82 | பெட்டையர் குளம் பிள்ளையார் கோயில் | ஜே/338 | குடமியன், |
| 83 | கும்பிட்டான்புலம் கற்பக விநாயகர் ஆலயம் | ஜே/339 | வரணி வடக்கு |
| 84 | கறுக்காய் சித்தி சிநாயகர் ஆலயம் | ஜே/339 | வரணி வடக்கு |
| 85 | பொற்பத்தங்கேணி வீரபத்திரப்பிள்ளார் கோயில் | ஜே/340 | மாசேரி, வரணி |
| 86 | விக்கிரமாகுலத்துப் பிள்ளையார் கோவில் | ஜே/340 | மாசேரி, வரணி |
| 87 | பூவரசடிப்பிள்ளையார் கோயில் | ஜே/341 | இடைக்குறிச்சி கிழக்கு |
| 88 | துவரங்கரைப் பிள்ளையார் கோயில் | ஜே/341 | இடைக்குறிச்சி கிழக்கு |
| 89 | தவசியாகுளம் பிள்ளையார் கோயில் | ஜே/341 | இடைக்குறிச்சி கிழக்கு |
| 90 | கயிலிகுளம் பிள்ளையார் கோயில் | ஜே/341 | இடைக்குறிச்சி கிழக்கு |
| 91 | பழங்கமத்து பிள்ளையார் கோயில் | ஜே/343 | வரணி இயற்றாலை |
| 92 | கல்வளை பிள்ளையார் கோயில் | ஜே/344 | கல்வளை |
| 93 | தெருவாரம் பிள்ளையார் கோயில் | ஜே/345 | மந்துவில் கிழக்கு |
| 94 | தாழையடிப் பிள்ளையார் கோயில் | ஜே/345 | மந்துவில் கிழக்கு |
| 95 | நந்திவளைப் பிள்ளையார் கோயில் | ஜே/345 | மந்துவில் கிழக்கு |
| 96 | கும்பாவெளி பிள்ளையார் கோயில் | ஜே/346 | மந்துவில் மேற்கு, மந்துவில் |
| 97 | அரியங்காட்டுப் பிள்ளையார் கோயில் | ஜே/346 | மந்துவில் மேற்கு, மந்துவில் |

**ஏனைய இந்து ஆலயங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | கயிற்றசிட்டி கந்தசாமி கோயில் | ஜே/288 | கைதடி வடக்கு |
| 2. | வாலாம்பிகை அம்மன் கோயில் | ஜே/288 | கைதடி வடக்கு |
| 3. | குருநாதர் கோயில் | ஜே/288 | கைதடி வடக்கு |
| 4. | அண்ணமார் கோயில் | ஜே/288 | கைதடி வடக்கு |
| 5. | சோழங்கன் ஞானவைரவர் கோயில் | ஜே/288 | கைதடி வடக்கு |
| 6. | முள்ளவெட்டி முனியன் கோயில் | ஜே/288 | கைதடி வடக்கு |
| 7. | காளிகோயில், மணியம்பத்தை | ஜே/288 | கைதடி வடக்கு |
| 8. | வயிரவர் கோயில், மணியம்பத்தை | ஜே/288 | கைதடி வடக்கு |
| 9. | வயிரவர் கோயில், போக்கத்தை | ஜே/288 | கைதடி வடக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 10. | நாச்சிமார் கோயில் | ஜே/288 | கைதடி வடக்கு |
| 11. | துர்க்கை அம்மன் ஆலயம் | ஜே/289 | கைதடி கிழக்கு, நவபுரம். |
| 12. | கரவுடை அண்ணமார் ஆலயம் | ஜே/289 | கைதடி கிழக்கு, செம்பாடு |
| 13. | சிவபூதவராயர் ஆலயம் | ஜே/289 | கைதடி வடக்கு |
| 14. | பூதவராயர் ஆலயம் | ஜே/289 | கைதடி வடக்கு |
| 15. | காளி அம்மன் ஆலயம் | ஜே/289 | கைதடி கிழக்கு, கள்ளிக்காடு |
| 16. | வைரவர் ஆலயம் | ஜே/289 | கைதடி கிழக்கு |
| 17. | அண்ணமார் ஆலயம் | ஜே/289 | கைதடி வடக்கு |
| 18. | முனியப்பர் ஆலயம் | ஜே/289 | கைதடி கிழக்கு |
| 19. | நவனியாவத்தை ஞானவைரவர் ஆலயம் | ஜே/290 | நவனியாவத்தை கைதடி மத்தி |
| 20. | இயத்தை அண்ணமார் கோயில் | ஜே/291 | கைதடி தெற்கு, கண்டி வீதி |
| 21. | கைதடி தெற்கு ஞானவைரவர் கோயில் | ஜே/291 | கைதடி தெற்கு, கைதடி |
| 22. | கைதடிச்சந்தி அண்ணமார் கோயில் | ஜே/291 | கைதடி தெற்கு, கைதடி |
| 23. | தக்கடியன்புலம் ஞானவைரவர் கோயில் | ஜே/291 | கைதடி தெற்கு, கைதடி |
| 24. | கைதடி தெற்கு சுப்பிரமணியர் கோயில் | ஜே/291 | கைதடி தெற்கு, கைதடி |
| 25. | ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் | ஜே/291 | கைதடி தெற்கு, கைதடி |
| 26. | கைதடி கிழக்கு குத்துவைரவர் கோயில் | ஜே/292 | கைதடி தென்கிழக்கு |
| 27. | கைதடி கிழக்கு வாலாம்பிகை அம்மன் கோயில் | ஜே/292 | கைதடி தென்கிழக்கு |
| 28. | கைதடி தெற்கு அம்மன் கோயில் | ஜே/292 | கைதடி தெற்கு |
| 29. | கைதடி மத்தி மூர்த்தியாவத்தை கந்தசாமி கோவில் | ஜே/292 | கைதடி மத்தி |
| 30. | கைதடி தெற்கு காக்கையார் வைரவர் கோயில் | ஜே/292 | கைதடி தெற்கு |
| 31. | கைதடி தெற்கு நாச்சிமார் கோயில் | ஜே/292 | கைதடி தென்கிழக்கு |
| 32. | இணுங்கித்தோட்டம் கந்தசாமி கோயில் | ஜே/293 | கைதடி மேற்கு |
| 33. | பெரியதம்பிரான் கோயில் | ஜே/293 | கைதடி மேற்கு |
| 34. | அண்ணமார் கோயில் | ஜே/293 | ஊரியான் கைதடி |
| 35. | எட்டுவாரக்கலட்டி வயிரவர் கோயில் | ஜே/293 | கைதடி மேற்கு |
| 36. | நாச்சிமார் கோயில் | ஜே/293 | கல்லாகம் கைதடி |
| 37. | முதலியார் கோயில் | ஜே/293 | ஊரியான் கைதடி மேற்கு |
| 38. | கல்லாகம் ஆதிவீரபத்திரர் கோயில் | ஜே/293 | கல்லாகம் கைதடி |
| 39. | கல்லாகம் ஞானவைரவர் கோயில் | ஜே/293 | கல்லாகம் கைதடி |
| 40. | பொன்னாகூடல் வைரவர் கோயில் | ஜே/293 | கைதடி மத்தி, கைதடி |
| 41. | சித்திரவேலாயுதர் ஆலயம் | ஜே/294 | நாவற்குழி, கைதடி |
| 42. | பேத்தியம்மன் ஆலயம் | ஜே/294 | நாவற்குழி, கைதடி |
| 43. | ஐயனார் ஆலயம் | ஜே/294 | நாவற்குழி, கைதடி |
| 44. | வயிரவர் ஆலயம் | ஜே/294 | நாவற்குழி, கைதடி |
| 45. | நாவற்குழி சந்தி வயிரவர் ஆலயம் | ஜே/294 | நாவற்குழி, கைதடி |
| 46. | வீரபத்திரர் ஆலயம் | ஜே/295 | நாவற்குழி, கைதடி |
| 47. | நெணியன் வயிரவர் ஆலயம் | ஜே/295 | நெணியவயல்வெளி |
| 48. | பெரியதம்பிரான் ஆலயம் | ஜே/295 | பாடசாலை வீதி, நாவற்குழி |
| 49. | காளி கோயில் | ஜே/295 | நாவற்குழி தெற்கு |
| 50. | முருகன் கோயில் | ஜே/295 | தச்சன்தோப்பு |
| 51. | காளிகோயில் | ஜே/295 | தச்சன்தோப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 52. | புவனி கோயில் | ஜே/295 | தச்சன்தோப்பு |
| 53. | ஞானவைரவர் கோயில் | ஜே/295 | நாவற்குழி, கைதடி |
| 54. | அம்மன் கோயில் | ஜே/296 | வேலம்பிராய் |
| 55. | கிருஷ்ணன் கோயில் | ஜே/296 | கோவிலாக்கண்டி |
| 56. | ஐயனார் கோயில் | ஜே/296 | கோவிலாக்கண்டி |
| 57. | முருகன் கோயில் | ஜே/296 | கோவிலாக்கண்டி |
| 58. | நாச்சிமார் கோயில் | ஜே/296 | கோவிலாக்கண்டி |
| 59. | வைரவர் கோயில் | ஜே/296 | தச்சன்தோப்பு |
| 60. | அண்ணமார் கோயில் | ஜே/296 | கோவிலாக்கண்டி |
| 61. | வைரவர் கோயில் | ஜே/296 | வேலம்பிராய் |
| 62. | வைரவர் கோயில் | ஜே/296 | கோவிலாக்கண்டி |
| 63. | சிவன் கோயில் | ஜே/296 | கோவிலாக்கண்டி |
| 64. | முருகன் கோயில் | ஜே/297 | கைதடி, நாவற்குழி |
| 65. | வள்ளி அம்மன் கோயில் | ஜே/297 | கைதடி, நாவற்குழி |
| 66. | அண்ணமார் கோயில் | ஜே/297 | கைதடி, நாவற்குழி |
| 67. | வைரவர் கோயில் | ஜே/297 | கைதடி, நாவற்குழி தெற்கு |
| 68. | பெரும்படை அம்மன் கோயில் | ஜே/297 | கைதடி, நாவற்குழி |
| 69. | கண்ணன் கோயில் | ஜே/297 | கைதடி, நாவற்குழி |
| 70. | சின்னத்தம்பிச் சாமியார் சமாதிமடம் | ஜே/297 | கைதடி, நாவற்குழி |
| 71. | வைரவர் கோயில் | ஜே/297 | கைதடி, நாவற்குழி |
| 72. | மணற்காட்டு கந்தசாமி கோயில் | ஜே/298 | மறவன்புலோ கிழக்கு |
| 73. | பழைய முத்துமாரி கோயில் | ஜே/298 | மறவன்புலோ மத்தி |
| 74. | புதிய முத்துமாரி கோயில் | ஜே/298 | மறவன்புலோ மத்தி |
| 75. | புலோக்கட்டு வைரவர் கோயில் | ஜே/298 | மறவன்புலோ கிழக்கு |
| 76. | கறையான் பிட்டி முருகன் கோயில் | ஜே/298 | மறவன்புலோ வடக்கு |
| 77. | ஒழிசுட்டான் வைரவர் கோயில் | ஜே/298 | மறவன்புலோ கிழக்கு |
| 78. | காளி கோயில் | ஜே/298 | மறவன்புலோ கிழக்கு |
| 79. | தனங்கிளப்பு முருகன் கோயில் | ஜே/298 | மறவன்புலோ கிழக்கு |
| 80. | பூதவராயர் கோயில் | ஜே/298 | மறவன்புலோ கிழக்கு |
| 81. | புளியடி வைரவர் கோயில் | ஜே/298 | மறவன்புலோ கிழக்கு |
| 82. | சவரியன் குண்டு பூதவராயர் கோயில் | ஜே/298 | மறவன்புலோ கிழக்கு |
| 83. | நாகதம்பிரான் கோயில் | ஜே/298 | மறவன்புலோ வடக்கு |
| 84. | தோப்பு வைரவர் கோயில் | ஜே/298 | மறவன்புலோ மேற்கு |
| 85. | தோப்பு அண்ணமார் கோயில் | ஜே/298 | மறவன்புலோ மேற்கு |
| 86. | மறவன்புலோ வடக்கு வைரவர் கோயில் | ஜே/298 | மறவன்புலோ வடக்கு |
| 87. | வீரபத்திரர் கோயில் | ஜே/298 | மறவன்புலோ வடக்கு |
| 88. | சேதுகாவலர் வைரவர் கோயில் | ஜே/298 | மறவன்புலோ வடக்கு |
| 89. | கடற்கரை அம்மன் கோயில் | ஜே/299 | தனங்கிளப்பு |
| 90. | முனியன் கோயில் | ஜே/299 | தனங்கிளப்பு |
| 91. | வைரவர் கோயில் | ஜே/299 | தனங்கிளப்பு |
| 92. | பெரும்படை அம்மன் கோயில் | ஜே/299 | தனங்கிளப்பு |
| 93. | ஸ்ரீபழனியாண்டவர் கோயில் | ஜே/300 | டச்சு வீதி, சாவகச்சேரி |
| 94. | வைரவர் சுவாமி கந்தசாமி கோயில் | ஜே/300 | சங்கத்தானை வீதி, சாவகச்சேரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 95. காளி கோயில் | ஜே/300 | காளிகோயில் வீதி, சாவகச்சேரி |
| 96. ஆவரஞ்சாட்டி முருகமூர்த்தி கோயில் | ஜே/300 | புகையிரத வீதி, சாவகச்சேரி |
| 97. விறுமர் கோயில் | ஜே/300 | புகையிரத வீதி, சாவகச்சேரி |
| 98. வீரபத்திரர் கோயில் | ஜே/301 | கோயில் குடியிருப்பு, கச்சாய் வீதி |
| 99. முருகமூர்த்தி கோயில் | ஜே/301 | கோயில் குடியிருப்பு, கச்சாய் வீதி |
| 100. முருகன் கோயில் | ஜே/301 | கோயில் குடியிருப்பு, பெரியமாவடி |
| 101. கண்ணன் கோயில் | ஜே/301 | கோயில்குடியிருப்பு, வீரசிங்கம் வீதி |
| 102. சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயில் | ஜே/302 | சங்கத்தானை |
| 103. முருகன் கோயில் | ஜே/302 | சாவகச்சேரி வடக்கு |
| 104. படையாண்டான் தோட்ட கந்தசாமி கோயில் | ஜே/303 | கிராம்புவில் |
| 105. இராக்கச்சி அம்மன் கோயில் | ஜே/303 | சங்கத்தானை |
| 106. இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் கோயில் | ஜே/304 | மண்டுவில் |
| 107. இலஞ்சியாரணியம் குமரகோட்டம் முருகன் ஆலயம் | ஜே/304 | மண்டுவில் |
| 108. பெரியதம்பிரான் ஆலயம் 1 | ஜே/304 | கெருடாவில் |
| 109. ஆதிசிவவீரபத்திரர் கோயில் | ஜே/304 | மருதடி |
| 110. ஞானவீரபத்திரர் கோயில் | ஜே/304 | மருதடி |
| 111. வீரபத்திரர் கோயில் | ஜே/304 | கெருடாவில் |
| 112. பத்திரகாளி அம்மன் கோயில் | ஜே/304 | டச்சு வீதி, |
| 113. பெரியதம்பிரான் ஆலயம் 11 | ஜே/304 | |
| 114. பூரணபுஷ்கலா சமேத ஐயனார் ஆலயம் | ஜே/305 | விளைவேலி |
| 115. கெருடாவில் கந்தசாமி கோயில் | ஜே/305 | கெருடாவில் |
| 116. ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் | ஜே/305 | நுணாவில் மேற்கு |
| 117. முத்துமாரி அம்மன் கோயில் | ஜே/305 | கல்வயல் |
| 118. சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் கோயில் | ஜே/306 | சாவகச்சேரி |
| 119 வாரிவனநாதர் சிவன் கோயில் | ஜே/306 | சாவகச்சேரி |
| 120. முத்துமாரி அம்மன் கோயில் | ஜே/306 | சாவகச்சேரி |
| 121. கற்குழி கந்தசாமி கோயில் | ஜே/306 | சாவகச்சேரி |
| 122. ஞானவைரவர் கோயில் | ஜே/306 | சாவகச்சேரி |
| 123. வீரபத்திரர் கோயில் | ஜே/306 | கற்குழி, சாவகச்சேரி |
| 124. பெரியதம்பிரான் கோயில் | ஜே/306 | கற்குழி, சாவகச்சேரி |
| 125. நுணாவில் மத்தி கந்தசாமி (வைரவர்)ஆலயம் | ஜே/307 | கண்டி வீதி, நுணாவில் மத்தி |
| 126. நுணாவில் மத்தி வீரபத்திரர் ஆலயம் | ஜே/307 | வேலாயுதம் வீதி, நுணாவில்மத்தி |
| 127. நுணாவில் மத்தி காளி கோயில் | ஜே/307 | வேலாயுதம் வீதி, நுணாவில்மத்தி |
| 128. காளியாமூலை பேச்சி அம்மன் கோயில் | ஜே/308 | நுணாவில் மேற்கு, காளியாமூலை |
| 129. ஞான வைரவர் கோயில் | ஜே/308 | நுணாவில் மேற்கு, நுணாவில் |
| 130. காண்டைக்காட்டு வைரவர் கோயில் | ஜே/308 | நுணாவில் மேற்கு, காண்டைக்காடு |
| 131. அண்ணமார் கோயில் | ஜே/308 | நுணாவில் மேற்கு, வயல்கரை |
| 132. வீரபத்திரர் கோயில் | ஜே/308 | நுணாவில் மேற்கு,வீரபத்திரர் வீதி |
| 133. காளி கோயில் | ஜே/308 | நுணாவில் மேற்கு, கொல்லங்கிராய் |
| 134. விளாத்தியடி வைரவர் கோயில் | ஜே/308 | கைதடி நுணாவில் |
| 135. அக்கினி வைரவர் கோயில் | ஜே/308 | மட்டுவில் தெற்கு |
| 136. வேரற்கேணி கந்தசாமி கோயில் | ஜே/308 | மட்டுவில் தெற்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 137. முத்துமாரி அம்மன் கோயில் | ஜே/308 | நுணாவில் மேற்கு |
| 138. வீரபத்திரர் ஆலயம் | ஜே/309 | கைதடி நுணாவில், சாவகச்சேரி |
| 139. பூதவராயர் ஆலயம் | ஜே/309 | கைதடி நுணாவில், சாவகச்சேரி |
| 140. ஞானவைரவர் ஆலயம் | ஜே/309 | கைதடி நுணாவில், சாவகச்சேரி |
| 141. அண்ணமார் ஆலயம் | ஜே/309 | கைதடி நுணாவில், சாவகச்சேரி |
| 142. நாச்சிமார் ஆலயம் | ஜே/309 | கைதடி நுணாவில், சாவகச்சேரி |
| 143. முருகன் ஆலயம் | ஜே/309 | கைதடி நுணாவில், சாவகச்சேரி |
| 144. நுணாவில் குளம் கண்ணகை அம்மன் ஆலயம் | ஜே/309 | கைதடி நுணாவில், சாவகச்சேரி |
| 145. கண்ணன் ஆலயம் | ஜே/310 | தென்மட்டுவில் |
| 146. முதலியார் தோட்ட அண்ணமார் ஆலயம் | ஜே/310 | கிராஞ்சி, தென்மட்டுவில் |
| 147. வைரவர் ஆலயம், வாகையடி கிழக்கு | ஜே/310 | வாகையடி கிழக்கு, தென்மட்டுவில் |
| 148. மருதங்குளம் வைரவர் ஆலயம் | ஜே/311 | மட்டுவில் நுணாவில் |
| 149. குறுமுனி ஆலயம் | ஜே/311 | மட்டுவில் நுணாவில் |
| 150. பெரியதம்பிரான் ஆலயம் | ஜே/311 | மட்டுவில் நுணாவில் |
| 151. ஆலையடி அண்ணமார் ஆலயம் | ஜே/311 | மட்டுவில் நுணாவில் |
| 152. கல்வம் சிவன் கோயில் | ஜே/312 | மட்டுவில் தெற்கு |
| 153. கொட்டையடி வைரவர் கோயில் | ஜே/312 | மட்டுவில் தெற்கு |
| 154. பெரியதம்பிரான் ஆலயம் | ஜே/312 | மட்டுவில் தெற்கு |
| 155. அண்ணமார் ஆலயம் | ஜே/312 | மட்டுவில் தெற்கு |
| 156. ஞான வைரவர் ஆலயம் | ஜே/312 | மட்டுவில் தெற்கு |
| 157. ஸ்ரீ வைரவர் ஆலயம் | ஜே/312 | மட்டுவில் தெற்கு |
| 158. ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் | ஜே/313 | மட்டுவில் வடக்கு |
| 159. பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில் | ஜே/313 | மட்டுவில் வடக்கு |
| 160. புவனேஸ்வரி அம்மன் கோயில் | ஜே/313 | மட்டுவில் வடக்கு |
| 161. கந்தசாமி கோயில் | ஜே/313 | மட்டுவில் வடக்கு |
| 162. ஞான வைரவர் ஆலயம் | ஜே/314 | மட்டுவில் கிழக்கு |
| 163. வேம்படி கந்தசாமி கோயில் | ஜே/315 | சந்திரபுரம், மட்டுவில் வடக்கு |
| 164. கல்வம் காளி கோயில் | ஜே/315 | சந்திரபுரம், மட்டுவில் வடக்கு |
| 165. சண்முக வைரவர் ஆலயம் | ஜே/315 | சந்திரபுரம், மட்டுவில் வடக்கு |
| 166. காளி கோயில் | ஜே/315 | சந்திரபுரம், மட்டுவில் வடக்கு |
| 167. நரசிங்க வைரவர் கோயில் | ஜே/315 | சந்திரபுரம், மட்டுவில் வடக்கு |
| 168. இலந்தைத்திடல் வீரமாகாளி அம்மன் கோயில் | ஜே/316 | சரசாலை தெற்கு |
| 169. முத்துமாரி அம்மன் கோயில் | ஜே/316 | சரசாலை தெற்கு |
| 170. முத்துமாரி அம்மன் கோயில் | ஜே/317 | சரசாலை வடக்கு |
| 171. ஐயனார் கோயில் | ஜே/317 | சரசாலை வடக்கு |
| 172. அண்ணமார் கோயில் | ஜே/317 | சரசாலை வடக்கு |
| 173. பொய்க்கால்புலம் நாகதம்பிரான் கோயில் | ஜே/317 | சரசாலை வடக்கு |
| 174. பன்றிக்கேணி கந்தசாமி கோயில் | ஜே/318 | மீசாலை கிழக்கு |
| 175. சித்திரவேலாயுதர் கந்தசாமி கோயில் | ஜே/318 | மீசாலை கிழக்கு |
| 176. வைரவர் கோயில் | ஜே/318 | மீசாலை கிழக்கு |
| 177. காட்டுவளவு கந்தசாமி கோயில் | ஜே/318 | மீசாலை கிழக்கு |
| 178. தெய்வ கோயில் | ஜே/318 | மீசாலை கிழக்கு |
| 179. நரசிங்க வைரவர் கோயில் | ஜே/319 | மீசாலை மேற்கு |
| 180. கரும்பிமாவடிக் கந்தசாமி கோயில் | ஜே/319 | மீசாலை மேற்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 181. கங்காணியார் கந்தசாமி கோயில் | ஜே/319 | மீசாலை மேற்கு |
| 182. அம்மன் கோயில் | ஜே/319 | மீசாலை மேற்கு |
| 183. கோணர் கோயில் | ஜே/319 | மீசாலை மேற்கு |
| 184. அண்ணமார் கோயில் | ஜே/319 | மீசாலை மேற்கு |
| 185. அம்மன் கோயில் | ஜே/319 | மீசாலை மேற்கு |
| 186. இராமாவில் கந்தசாமி கோயில் | ஜே/320 | இராமாவில், கொடிகாமம் |
| 187. கோயிலாமனை வீரபத்திரர் அம்மன் கோயில் | ஜே/320 | கோயிலாமனை, கொடிகாமம் |
| 188. மருதடி கிரான் கோயில் | ஜே/320 | கோயிலாமனை, கொடிகாமம் |
| 189. வீரபத்திரர் கோயில் | ஜே/320 | இராமாவில் மீசாலை, கொடிகாமம் |
| 190. முருகன் கோயில் | ஜே/320 | மீசாலை வடக்கு, கொடிகாமம் |
| 191. அண்ணமார் கோயில் | ஜே/320 | கோயிலாமனை, கொடிகாமம் |
| 192. தெருவாரம் வைரவர் கோயில் | ஜே/321 | மீசாலை வடக்கு, கொடிகாமம் |
| 193. தெருவாரம் முத்துமாரி அம்மன் கோயில் | ஜே/321 | மீசாலை வடக்கு, கொடிகாமம் |
| 194. பூதவராயர் கோயில் | ஜே/321 | டச்சு வீதி, மீசாலை வடக்கு |
| 195. காளி கோயில் | ஜே/321 | வயற்கரை, மீசாலை வடக்கு, கொடிகாமம் |
| 196. நெல்லியடி கந்தசாமி கோயில் | ஜே/322 | அல்லாரை வடக்கு, கொடிகாமம் |
| 197. தாளையடி அம்மன் கோயில் | ஜே/322 | அல்லாரை வடக்கு, கொடிகாமம் |
| 198. பண்டாரி தரை வைரவர் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 199. நாச்சிமார் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 200. பனையடி சுட்டதிவு அம்மன் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 201. அண்ணமார் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 202. வைரவர் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 203. நாச்சிமார் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 204. முத்துமாரி அம்மன் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 205. சோலைவளவு நாச்சிமார் கோயில் | ஜே/322 | அல்லாரை தெற்கு, மீசாலை |
| 206. முடநாவலடிக் கந்தசாமி கோயில் | ஜே/323 | வெள்ளம்போக்கட்டி |
| 207. அண்ணமார் கோயில் 1 (பூசாரி) | ஜே/323 | வெள்ளம்போக்கட்டி |
| 208. அண்ணமார் கோயில் 11 (காந்தன்) | ஜே/323 | வெள்ளம்போக்கட்டி |
| 209. காட்டுவைரவர் கோயில் | ஜே/323 | வெள்ளம்போக்கட்டி |
| 210. கோற்புலோ முருகன் கோயில் | ஜே/323 | வெள்ளம்போக்கட்டி |
| 211. கச்சாய் கண்ணகை அம்மன் ஆலயம் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 212. புது அம்மன் கோயில் | ஜே/324 | கச்சாய் வடக்கு |
| 213. பாதாள வைரவர் கோயில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 214. காளி கோயில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 215. முத்துமாரி கோயில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 216. ஐயன் கோயில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 217. நரசிங்க வைரவர் கோயில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 218. வீரபத்திரர் கோயில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 219. முருகன் கோயில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 220. சாளம்பை பெரும்படை அம்மன் கோயில் | ஜே/324 | கச்சாய் தெற்கு |
| 221. விறுமர் கோயில் | ஜே/324 | கச்சாய் வடக்கு |
| 222. துர்க்கை அம்மன் கோயில் | ஜே/324 | கச்சாய் வடக்கு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 223. பாலாவி தெற்கு கந்தசாமி கோயில் | ஜே/325 | பாலாவி தெற்கு |
| 224. பாலாவி தெற்கு சிவன் கோயில் | ஜே/325 | பாலாவி தெற்கு |
| 225. பாலாவி தெற்கு வைரவர் கோயில் | ஜே/325 | பாலாவி தெற்கு |
| 226 பாலாவி தெற்கு கறுப்பி அம்மன் கோயில் | ஜே/325 | பாலாவி தெற்கு |
| 227. பாலாவி தெற்கு நாச்சிமார் கோயில் | ஜே/325 | பாலாவி தெற்கு |
| 228. பாலாவி தெற்கு புட்டி அம்மன் கோயில் | ஜே/325 | பாலாவி தெற்கு |
| 229. பாலாவி தெற்கு நரசிம்மன் கோயில் | ஜே/325 | பாலாவி தெற்கு |
| 230. பாலாவி வடக்கு சக்தி மாதா கோயில் | ஜே/325 | பாலாவி வடக்கு |
| 231. பாலாவி வடக்கு வைரவர் கோயில் | ஜே/325 | பாலாவி வடக்கு |
| 232. பாலாவி வடக்கு முருகன் கோயில் | ஜே/325 | பாலாவி வடக்கு |
| 233. பாலாவி வடக்கு வைரவர் கோயில் | ஜே/325 | பாலாவி வடக்கு |
| 234. பாலாவி வடக்கு பூதவராயர் கோயில் | ஜே/325 | பாலாவி தெற்கு |
| 235 ஐயனார் கோயில் | ஜே/326 | கொடிகாமம் |
| 236. காளி கோயில் | ஜே/326 | கொடிகாமம் |
| 237. சிவன் கோயில் | ஜே/326 | கொடிகாமம் |
| 238. வைரவர் கோயில் | ஜே/326 | கொடிகாமம் |
| 239. வல்லி கந்தசாமி கோயில் | ஜே/327 | ஸ்ரேசன் வீதி, கொடிகாமம் |
| 240. ஞான வைரவர் கோயில் | ஜே/327 | பெரிய நாவலடி, கொடிகாமம் |
| 241. சிவகாமசுந்தரி அம்மன் கோயில் | ஜே/327 | பெரிய நாவலடி, கொடிகாமம் |
| 242. கண்ணகை அம்மன் கோயில் | ஜே/327 | தவசிக்குளம், கொடிகாமம் |
| 243. முருக மூர்த்தி கோயில் | ஜே/327 | கச்சாய் வீதி, கொடிகாமம் |
| 244. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் | ஜே/327 | தவசிக்குளம், கொடிகாமம் |
| 245. பெரிய தம்பிரான் கோயில் | ஜே/327 | நாகநாதன் வீதி, கச்சாய் வீதி, கொடிகாமம் |
| 246. நாச்சிமார் அம்மன் கோயில் | ஜே/328 | தவசிக்குளம், மிருசுவில் |
| 247. போக்கட்டி அம்மன் கோயில் | ஜே/328 | தவசிக்குளம், மிருசுவில் |
| 248. ஐயனார் கோயில் | ஜே/328 | தவசிக்குளம், மிருசுவில் |
| 249. உசன் கந்தசாமி கோயில் | ஜே/329 | உசன் |
| 250. ஆலடி முருகன் கோயில் | ஜே/329 | உசன் தெற்கு |
| 251. வீரபத்திர கோயில் | ஜே/330 | கரம்பகம் |
| 252. வைரவர் கோயில் | ஜே/330 | கரம்பகம் |
| 253. தச்சன் காட்டு வயிரவர் கோயில் | ஜே/330 | கரம்பகம் |
| 254. வைரவர் கோயில் | ஜே/330 | கரம்பகம் எழுதுமட்டுவாள் |
| 255. விடத்தற்பளை வயற்கரை முருகன் கோயில் | ஜே/331 | விடத்தற்பளை |
| 256. விடத்தற்பளை புதுக்குளம் அம்மன் கோயில் | ஜே/331 | விடத்தற்பளை |
| 257. கெற்பெலி கலிங்கம்சாட்டி முருகன் கோயில் | ஜே/332 | கெற்பெலி மத்தி |
| 258. கெற்பெலி காளி அம்பாள் ஆலயம் | ஜே/332 | கெற்பெலி மத்தி |
| 259. கெற்பெலி பரமசிவன் ஆலயம் | ஜே/332 | கெற்பெலி மேற்கு |
| 260. கெற்பெலி சாணன்சாட்டி வீரபத்திரர் ஆலயம் | ஜே/332 | கெற்பெலி கிழக்கு |
| 261. கெற்பெலி தரவை வீரபத்திரர் ஆலயம் | ஜே/332 | கெற்பெலி கிழக்கு |
| 262. சிவன் கோயில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 263. விழுபளை கண்ணகை அம்மன் கோயில் | ஜே/333 | விழுபளை தெற்கு |
| 264. நாச்சிமார் கோயில் | ஜே/333 | செட்டிகேணி தெற்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 265. மாதா கோயில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 266. நாச்சிமார் கோயில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 267. நாராயணன் கோயில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 268. காளி கோயில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 269. வயிரவர் கோயில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 270. சத்தி கோயில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 271. வெற்றியா வயிரவர் கோயில் | ஜே/333 | எழுதுமட்டுவாள் தெற்கு |
| 272. துர்க்கை அம்மன் ஆலயம் | ஜே/334 | படித்தமகளிர் திட்டம், மிருசுவில் |
| 273. ஒட்டுவெளி முருகன் ஆலயம் | ஜே/334 | ஒட்டுவெளி, மிருசுவில் |
| 274. ஒட்டுவெளி நாச்சிமார் ஆலயம் | ஜே/334 | ஒட்டுவெளி, மிருசுவில் |
| 275. ஒட்டுவெளி வீரபத்திரர் ஆலயம் | ஜே/334 | ஒட்டுவெளி, மிருசுவில் |
| 276. குருக்கள் மாவடி கந்தசாமி கோயில் | ஜே/335 | குருக்கள்மாவடி, மிருசுவில் வடக்கு |
| 277. மன்னங்குறிச்சி கந்தசாமி கோயில் | ஜே/335 | மன்னங்குறிச்சி, மிருசுவில் வடக்கு |
| 278. கொட்டிகை அம்மன் கோயில் | ஜே/335 | கொட்டிகை, மிருசுவில் வடக்கு |
| 279. கொட்டிகை அம்மன் கோயில் | ஜே/336 | வடக்கு வீதி, மிருசுவில் |
| 280. சிட்டிவேரம் கண்ணகை அம்மன் கோயில் | ஜே/337 | குடமியன், வரணி |
| 281. ஆதி வைரவர் கோயில் | ஜே/337 | குடமியன், வரணி |
| 282. எருவன் வைரவர் கோயில் | ஜே/337 | எருவன், கொடிகாமம் |
| 283. கறுக்காய் கந்தப்பெருமாள் ஆலயம் | ஜே/339 | வரணி வடக்கு |
| 284. கிமிளி கண்ணகை அம்மன் கோயில் | ஜே/339 | வரணி வடக்கு |
| 285. பழம் முருகையன் கோயில் | ஜே/339 | வரணி வடக்கு |
| 286. குருநாதர் கோயில் | ஜே/340 | மாசேரி, வரணி |
| 287. உதிரமாகாளி அம்மன் கோயில் | ஜே/340 | மாசேரி, வரணி |
| 288. சாவிலிப்பிட்டி கந்தசாமி கோயில் | ஜே/341 | இடைக்குறிச்சி கிழக்கு |
| 289. நீலாத்தை உடையார் மடத்துக் கோயில் | ஜே/341 | இடைக்குறிச்சி கிழக்கு |
| 290. மயிலியா வைரவர் கோயில் | ஜே/341 | இடைக்குறிச்சி கிழக்கு |
| 291. திக்கில் கந்தசாமி கோயில் | ஜே/342 | கரம்பைக்குறிச்சி மத்தி |
| 292. வயிரவர் கோயில் | ஜே/342 | கரம்பைக்குறிச்சி கிழக்கு |
| 293. கொற்றாளை வயிரவர் கோயில் | ஜே/342 | கரம்பைக்குறிச்சி கிழக்கு |
| 294. கொட்டிக்கியான் கந்தசாமி கோயில் | ஜே/343 | வரணி, இயற்றாலை |
| 295. உடையார் பள்ளம் காளி கோயில் | ஜே/343 | வரணி இயற்றாலை |
| 296. ஞானியாவளவு கந்தசாமி கோயில் | ஜே/343 | வரணி இயற்றாலை |
| 297. நாகதம்பிரான் கோயில் | ஜே/343 | வரணி இயற்றாலை |
| 298. கொப்பிணி வைரவர் கோயில் | ஜே/343 | வரணி இயற்றாலை |
| 299. ஆலமடம் கந்தசாமி கோயில் | ஜே/344 | தாவளை இயற்றாலை |
| 300. சக்தி கோயில் | ஜே/344 | சின்ன எருவன் |
| 301. கோலம் இராசேஸ்வரி அம்பாள் ஆலயம் | ஜே/346 | மந்துவில் மேற்கு, மந்துவில் |
| 302. வலத்தி வைரவர் ஆலயம் | ஜே/346 | மந்துவில் மேற்கு, மந்துவில் |
| 303. கேலம் அம்மன் கோயில் | ஜே/347 | கேலம் வீதி, மந்துவில் |
| 304. புளியந்திடல் கந்தசாமி கோயில் | ஜே/347 | குடியிருப்பு, மந்துவில் |
| 305. குடியிருப்பு முத்துமாரி அம்மன் கோயில் | ஜே/347 | குடியிருப்பு, மந்துவில் |

***ஆதாரம்: தென்மராட்சிப் பிரதேச செயலகப் பதிவேடுகள்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் குருநாதா துணை



# மாவடியான் சந்நிதியில் கணபதி ஹோமம்

சைவப்புலவர், திருவருள்வாசகர்,
சி.கா. கமலநாதன் J.P., B.A. (Hons), P.G.D.E.M.A.(Jaffna)
ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**வை**தீக வழிபாட்டின் உயிர்நாடியாக விளங்குவது யாகமாகும். இதனை வேள்வி என்றும் அழைப்பர். இந்துக்களின் மூலப் பிரமாணநூல்கள் வேதமும் ஆகமமுமாகும். இதனாலேயே "வேதமொடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்று குறிப்பிடப்பட்டது. இவை இரண்டும் வலியுறுத்தும் பொது வழிபாடு யாகமாகும். வடமொழியிலே "யக்ஜ்" என்ற அடியாக வந்தது யாகம் என்ற சொல்லாகும். இதன் பொருள் விஷேடமாகக் கொடுத்தல் என்பதாகும். ஓம குண்டத்திலே அக்கினியை வளர்த்து அதிலே இறைவனுக்கு ஆகுதிகளைக் கொடுத்தலை இது குறிக்கின்றது. இதனை அக்கினிகாரியம், எரியோம்பல் வழிபாடு என்றும் குறிப்பிடுவர். வேதங்கள்கூறும் பிரதான வழி பாடே இதுவாகும். பொதுவாக நால்வேதங் களும் யாகத்தினைப் பற்றிக்கூறும்போதும் யசுர்வேதமும், பிராமணங்களும் விசேடமாக இதனைப்பற்றிக் கூறுகின்றன.

அக்காலத்தில் அக்கினியிலேயே சகல வழிபாடுகளும் நடைபெற்றன. விதிகளிற்கு ஏற்ப யாக குண்டம் நிர்மாணித்து அதிலே அந்தணர் கள் முறைப்படி அக்கினியை வளர்த்து தெய்வங் களிற்கு ஆகுதி சொரிவார்கள். ஓம குண்டத்தின் முன்பு தர்ப்பையால் செய்யப்பட்ட ஆசனம் இடப்பட்டு மந்திரங்களால் தேவர்களைக் கூவியழைத்து அதில் அமரச்செய்து அதன்பின் அவர்களைத் திருப்திப்படுத்த ஆகுதிகளை வழங்குவர். மூன்று உலகங்களிற்கும் சென்று வரக்கூடிய அக்கினி பகவானைப் பிரார்த்தித்து அவரது சக்தி "சுவாஹா" தேவியையும் வேண்டி ஆகுதிகளை வழங்க அக்கினி பகவான் உரியவர் களிடம் அவற்றைச் சேர்ப்பிக்கி றார். உதாரண மாக "ஓம் கணபதியே சுவாஹா" என்றால் விநாயகப் பெருமானே அக்கினி மூலம் இந்த தூய்மையான ஆகுதியைத் தருகிறேன் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பயபக்தியுடன் வேண்டப் படுதலாகும். இவ்வாறான வேளையில் தெய்வங் களும் ஆகுதிகளைப்பெற்று மகிழ்ந்தபின் வேண்டிய வரங்களை மகிழ்வுடன் வழங்கினர். உதாரணமாக இருக்கு வேதத்திலே "நான் உனக்கு பால், தயிர், நெய்போன்ற ஆகுதிகளைத் தருகி றேன் நீ எனக்கு வீரம் செறிந்த ஆண்மகப் பேற்றையும் பசுக்களையும் நீண்ட ஆயுளையும் தா" என்று பிரார்த்தித்ததைக் காண்கிறோம். எனவே யாகங்கள் வேண்டும் வரத்தினைக் கொடுத்தன. வேத அடிப்படையில் எழுந்த சிரௌத சூத்திரம், கிருஹ்ய சூத்திரம், தரும சூத்திரம் என்பவற்றிலும் யாகாதி கிரியைகள் பற்றி விபரித்துக் கூறப்பட்டுள்ளது.

வேத காலங்களில் சாதாரணமாக எல்லா வீடுகளிலும் நித்தியாக்கினி வளர்க்கப்பட்டது. இன்றும் புகழ்மிக்க சில ஆலயங்களில் நித்தி யாக்கினி காரியம் நடைபெற்று வருவதைக் காண்கிறோம். வேதங்களில் விசேடமாக வாஜ பேஜம், இராஜசூயம், அஸ்வமேதகம், சதுர் மாஸ்யம், பிண்டமுத்துரு யக்ஜம் போன்ற பல யாகங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. புகழ்மிக்க

PUBLIC LIBRARY




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜாக்கள் பிரமாண்டமாக யாகங்களைச் செய்து வெற்றியையும் சுபீட்சமான வாழ்வையும் பெற்று குடிகளைக் காத்ததையும் அறிய முடிகிறது. அந்த வழியிலே யாகம் காலாதி காலமாக நடைபெற்று வருகிறது. தீமைகளை நீக்கவும், பாவங்களை நீறாக்கவும், நன்மையை மேலோங்கச் செய்யவும் தேவர்களை மகிழ்வித்து மழையைப் பொழிவிக்கவும் பூமியை வாழ வைப்பதற்கும் யாகங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

வேதங்கள் உருவமற்ற மந்திரபூர்வமான அருவநிலைப்பட்ட வழிபாட்டினையே முக்கியப் படுத்துகின்றன. ஆனால் ஆகமங்கள் திருவுருவ வழிபாட்டினை முக்கியப்படுத்துகின்றன. இதனால் சிவாகம அடிப்படையில் ஆலய வழிபாடு வளர்ச்சியடைந்தது. ஆயினும் இந்த இருவழிபாட்டு மரபுகளிற்கும் பொதுவாக அமைவது யாக வழிபாடாகும். வேதங்களில் யாகம் இன்றியமையாததுபோல் ஆகம வழி பாட்டிலும் பல கிரியைகளில் யாகம் முக்கியம் பெறுகிறது. கும்பாபிஷேகத்திலே 33,25,17,9,5,1 என்றவாறு வசதிக்கேற்ப ஓம குண்டங்களை நிர்மாணித்து சூரியனிலிருந்து சிவாக்கினியை எடுத்து யாகம் வளர்க்கப்பட்டு ஆகுதி கொடுத்து அக்கினி முகதரிசனத்திலே கும்பஸ்தாபனம் நடைபெறுவதனைக் காண்கின்றோம். ஆகாயத் திற்கப்பால் உள்ள இறைவனை வாயு மண்டலத் திற்குக்கொண்டுவந்து பின்பு அக்கினியிலே எழுந்தருளச்செய்து பூசித்து ஆகுதி கொடுத்து பின்பு கும்பத்திலுள்ள நீரிலே எழுந்தருளச்செய்து பூர்த்தியில் பிருதுவி அம்சமான விக்கிரகத்திலே இறைவனை ஆவாகனம் செய்து குடமுழுக்கு நடைபெறுகிறது. இதனைவிட கும்பாபிஷேகத் தின்போது கணபதிஹோமம், கிராமசாந்தி ஹோமம், திசாஹோமம், இரட் சோக்கிர ஹோமம், (இராக்கதர், பேய், பிசா சுகளை அகற்றல்) நவக்கிரகஹோமம், வாஸ்த்து சாந்தி ஹோமம்போன்ற நன்மை விளைவிக்கக்கூடிய பல யாகங்கள் நடைபெறுவதைக் காண லாம். பூர்த்தியில் அக்கினிகாரியத்தில் தவறு இருந்தால் மன்னித்தருளும்படி வேண்டும் பிராயச்சித்த ஆகுதியும் வழங்கப்படுகின்றது. எனவே கும்பாபி ஷேகத்தில் யாகம் அதிமுக்கியம் பெறுகின்றது.

மஹோற்சவத்தின்போது ஸ்நபன அபிடேக வேளையிலும் யாக சாலையில் காலை, மாலை இருவேளையிலும் அக்கினி வளர்க்கப் பட்டு உரிய மூர்த்திகளிற்கும் ஏனைய தேவர்களிற் கும் ஆகுதிகள் கொடுக்கப்பட்டு இறைவன் பூசிக்கப்படுகின்றார். தீர்த்தோற்சவத்தின் போது பூர்ணாகுதி வழங்கப்பட்டு அக்கினியில் இருக்கும் இறைவனை கும்பத்தில் எழுந்தருளச் செய்து மூலமூர்த்திக்கு அபிடேகம் செய்யும்போது தெய்வ அருள் எத்தனையோ மடங்கு பெருகு கிறது. எங்கும் சர்வமங்களத்தை உண்டாக்கு கிறது. இதேபோல் அலங்கார உற்சவங்களின் போதும், நைமித்திய காலங்களிலும் ஸ்நபன, சங்காபிஷேகங்களின் போதும் யாகம் செய்யப் படுகின்றது.



இவற்றைவிட விஷேடமாக இக்கலி காலத்தில் துன்பத்திலிருந்து விடுபட கணபதி ஹோமம், சண்டிஹோமம், கந்தயாகம் போன்ற பிரமாண்டமான யாகங்கள் விரிவான திட்டமிட லுடனும் ஆயத்தங்களுடனும் செய்யப்படுகின் றன. அந்த வகையில் மாவடியான் சந்நிதியில் இடம் பெறும் கணபதிஹோமம் சொல்லால் வர்ணிக்க முடியாத அற்புதங்கள் நிறைந்ததாகும். எமது ஆலயமானது புராணபடன மரபில் ஈழத்திலே தலைசிறந்ததாகும். பன்னிருதிரு முறைகள் ஓதுதலுடன் எல்லாப் புராணங்களும் படித்து பயன் சொல்லப்படும் தனிச் சிறப்பைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றது. அந்த வகையில் கந்தபுராணப் படிப்பு திருக்கல்யாணத்துடன் பூர்த்தி யடைந்த தும் கணபதிஹோமம் செய்யப்பட்டு வருகிறது. மாவடியானின் மீளா அடியவர்கள் சிலரின் சிந்தனையில் இந்த யாகம் பற்றி ஊற்றெடுக்க ஊர்ப்பொது நன்மைக்காக 1987ஆம் ஆண்டு முதல் கணபதிஹோமம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது.


சூரியனுக்குரியநாள் ஞாயிற்றுக்கிழமை அத்துடன் வாரத்தின் முதல் நாளும்கூட. இதனால் கந்தபுராணப் படிப்பு பூர்த்தியைத் தொடர்ந்து தெய்வீகஒளி பொருந்திய ஞாயிற்றுக் கிழமை ஊர்ப்பொது உபயமாக இந்த யாகம் இடம்பெற்று வருகிறது. மீசாலையின் நான்கு கிராமசேவையாளர் பிரிவுகள், மற்றும் சாவகச் சேரி வடக்கு, சங்கத்தானை, அல்லாரை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கணபதி பக்தர்கள் இந்த யாகத்திற்கான பணம், பொருள், சரீர உதவிகளை பக்தி பூர்வமாகச் செய்கின்றார்கள். அத்துடன் யாகத்தன்று எல்லா அடியவர்களும் திரண்டு வந்து கோயிலின் உள்வீதி, வெளிவீதி யெங்கும் நிரம்பிவழிவது கண்கொள்ளாக் காட்சியாகும். யாகப்புகை எல்லோரது உடலையும் தழுவி, அவர்களது பாவங்கள், வினைகள், நோய்கள், தீமைகள், துன்பங்கள் எல்லாவற்றையும் நீறாக்கி புனிதப்படுத்தி பக்தியை மேலோங்கச் செய்வது அற்புத காட்சியாகும். அவ் வேளை,

*"கற்றாங் கெரியோம்பி கலியை வாரமே*
*செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பல மேய*
*முற்றா வேண்டிங்கண் முதன்வன் பாதமே*
*பற்றா நின்றாரைப் பற்றா பாவமே"*

என்ற திருஞான சம்பந்தக் குழந்தையின் தேவாரத்தை சிந்திக்க வைக்கின்றது. இந்த யாகத்திற்கு தென்மராட்சியின் புகழ் பூத்த திருக்கணித பஞ்சாங்க அதிபரும், கலாபூஷணமு மான சிவஸ்ரீ. சிதம்பரநாதக் குருக்கள் வேதசிவா கமங்களை கற்றதற்கேற்ப பிரதமகுருவாக இருந்து இன்றுவரை நடாத்திவருகின்றார். யாக குண்டத் தைச்சூழ 5 குருமார் இருக்க அவர்களிற்கு உதவியாக பல அந்தணர்களும், அர்ச்சகர்களும் விளங்க முறைப்படி பத்ததி ஓத யாகக் கிரியைகள் நடைபெறுதல் சிறப்பிற்குரியது. இதனால் கலி என்ற துன்பம் நீங்குகிறது.

இந்த யாகம் நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே ஆலய முகாமை யாளர், பரிபால சபையினர், தொண்டர்கள் எல்லோரும் சேர்ந்து சுத்தமான சமித்துக்களைச் சேகரிக்கத் தொடங்கிவிடுவார்கள். யாகத்திற்கு வேண்டிய திரவியங்கள் எல்லாம் நிறைவாகச் சேகரிக்கப் படும். பலவிதமான சமித்துவகைகள், தானிய, கிழங்குவகை, பழவகை, உணவுவகை, உப சாரங்கள் என்று பலவகையான அம்சங்கள் சேர்கின்றன. அவை பின்வருமாறு அமையும்.

அறுகு
வன்னி
வெள்ளெருக்கு
வெள்ளறுகு
தர்ப்பை
அரசு
ஆல்
நாயுருவி
அத்தி
இத்தி
கடம்பு
மூங்கில்
பலாசு
கருங்காலி
சந்தணம்
தேவதாரு
அகில்
இலாமிச்சை
நெற்பொரி
நவதானியம்
கரும்பு
தேன்
வில்வம்பழம்
தாமரைப்பூ
மாதுளம் முத்து
பழவகை
இளநீர்
பால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரைச்சாதம்
ஏனைய சாதவகைகள்
மோதகம்
லட்டு
பலகாரவகைகள்
கிழங்குவகைகள்
எள்ளுருண்டை
சுவர்ணம்
பட்டாடை
உத்தரியம்
பூநூல்
பூமாலை
தாம்பூலம்
நெய்
தேங்காய் சொட்டு
காணிக்கை

இவ்வாறு நிறையப் பொருட்கள் ஆகுதி செய்யப்படும். கொடித்தம்பத்திற்கு முன்பு 5 அடிவரையான விட்டமும் 6அடி வரையான ஆழமுமுடைய பெரும் யாக குண்டம் அமைக்கப் பட்டு இவ் யாகம் நடைபெறுவது தனிச் சிறப்புடையதாகும்.

இந்த யாகத்தின்போது அடியார்கள் சங்கற்பம் செய்து தமது கரங்களால் பிள்ளை யாருக்கு ஆகுதி கொடுத்து மகிழ்வார்கள். மேலும் பிள்ளையாருக்கும் ஏனைய பரிவாரமூர்த்தி களுக்கும் கும்பம் வைத்து பூசிக்கப்படும். 5 குருக்கள்மாரும் ஆகுதிகள் கொடுத்த பின் பிரதம குருக்கள் தாராஹோமம் (பெரிய சிருக்குச் சிருவத்தால் நெய்வார்த்தல்) மகாபூர்ணாகுதி, தீபாராதனை, சோடச உபசாரங்கள், அர்ச்சனை, விசேட பஞ்சாரத்தி, வேதம், கீதம், கணபதி தாளம், நிருத்தியம், ஆசீர்வாதம், தேவாரபா ராயண தோத்திரம் என்பன முறைப்படி நடைபெறும். பின்பு யாக அக்கினியில் இருக்கும் திருநீலகண்டப் பிள்ளையாரை கும்பத்திலே ஆவாகனம் செய்து பூசைகள் நடைபெற்ற பின் சர்வமங்கள வாத்தியம் சகிதம் உள்வீதி வலம் வந்து மூலவிக்கிரகத்திலே யாக கணபதியை ஆவாகனம்செய்து கும்பாபிஷேகம் நடை பெறும். மாவடியான் தெய்வ அருள் எங்கும் பரவும். அடியார்கள் தீர்த்தம் பருகி பக்தி வயப் பட்டுத் திகழ்வர். இந் நாளில் விசேட நாம பஜனையும், மகேஸ்வர பூசையும் இடம்பெறு தலும் மிகவும் சிறப்பானதாகும்.

கணபதி ஹோமத்தில் ஆகுதிகளாகப் பயன்படுத்தப்படும் பொருட்களால் ஏற்படும் காரிய சித்திகள் பற்றி "மந்திரத்ன மஞ்ரஜூஷை" என்ற மந்திர நூலில் கூறப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு.

1) நாரிகேளை: க்ருதோ ஹோம:
சதுர்த்யாம் ஸ்ரீப்ரதோ பவேத்
பொருள்:- சதுர்த்தியில் தேங்காய்களால் ஹோமம்செய்வது ஐஸ்வரி யத்தைத் தரும்.

2) ஸ்திலைஸ் தண்டுலைர் ஹோம:
லக்ஷ்மீவஸ்ய ப்ரதோபவேத்
பொருள்:- எள்ளுடன் கூடிய அக்ஷதை களை ஹோமம் செய்வதால் லக்ஷ்மியை வசமாகச்செய்யும்.

3) லாஜெ ஸ்திரி மதுரோ பேதை:
சதுஸ்ஸ ஹஸ்ர ஹோமம் கண்யாம் ப்ரயச்சேத்
பொருள்:- தேன், பால், சக்கரை இம் மூன்றையும் கலந்த பொரியி னால் நான்காயிரம் ஹோமம் செய்ய நல்ல உத்தம கன்னி கிடைப்பாள்.

4) தத்னாவிலோடி தைர் லோணை:
ஹோமோ நிசி சதுர்த்தினம்
ஸ்ம்வாதம் குருதே வஸ்யம்
ததாந்யதபி மந்த்ரிண:
இத்யாதி சம்பவேத் ஸர்வம்
பொருள்:- லவணம் (உப்பு) கலந்த தயிரை நான்கு தினம் இரவில் ஹோமம் செய்வதால் சபையில் நன்கு பேசுவான் இந்த மந்திரத்தை ஜபம், ஹோமம் செய்கின்ற வனுக்கு இது போன்ற எல்லா சித்திகளும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) மோதகைர் ஜுஹயாத் ஷஷ்ட்யாம்
சதுஸ்ஸ ஹஸ்ரம் சதுச்சதம் வா
பொருள்:- சஷ்டித் திதியில் நாலாயிரம் அல்லது நானூறு மோதகங் களை ஹோமம் செய்வதால் சகல சித்தியும் ஏற்படும்.

6) அஷ்டம்யாம் குமுதை:
சதுர்த்தச்யாம் அபூபெர்
ஜுஹுயாதிஸ்ட ஸித்தயெ
பொருள்:- அட்டமியில் ஆம்பல் புஸ்பங் களை ஓமம் செய்வதாலும் சதுர்த்தியன்று அப்பத்தை ஓமம் செய்வதாலும் இஷ்ட சித்திகள் ஏற்படும்.

7) ஆஜ்யாந்நைர் ஜுகுயாந் நித்யம்
அந்நவாந்வத் ஸராத்பவத்
பொருள்:- ஒருவருட காலம் தினந்தோறும் நெய்கலந்த அன்னத்தை ஓமம் செய்தால் குறைவற்ற அன் னத்தை அடைவான்.

8) பாயசேனக்ருதோ ஓம:
ஸமக்ராம் ஸ்ரிய மாவஹேத்
பொருள்:- பாயாசத்தை ஹோமம் செய்வ தால் நிரம்பிய ஐஸ்வர்யத்தை அடைவான்.

9) நாளிகேர பலம் பக்குவம்
லோஷ்டவர்ச ஸமந்விதம்
ஜுஹுயாத ப்ரத்ய ஹமந்த்ரீ
வாஞ்சிதம் மண்டலாத பவேத்
பொருள்:- நன்கு முற்றிய தேங்காயின் கீறுகளையும் அதன் மட்டை கொட்டாங்கச்சிகளையும் தனித் தனியாக மந்திரத்துடன் ஓம குண்டத்தில் இட்டால் உபாசகன் விரும்பிய பொருள் களை அடைவான்.

10) ஜுஹுயாத் அண்ட பிர்த்ரவ்யை:
மதுதரய ஸமயுதை
வசயேத பார்த்திவான் சர்வான்
தத் பதனீ ரமி நிச்சயம்.
பொருள்:- பால், தேன், சக்கரை இவை களுடன் சேர்ந்த அஷ்டத்ரவ் யங்களை ஹோமம் செய்வதால் எல்லா அரசர்களுடையதும் அவர்கள் குடும்பத்தினர்களு டையதும் அன்புக்கு பாத்திர மாவான்.

11) லக்ஷத்ரயம் ஜபேந் மந்த்ரம்
இக்ஷு கண்டைர் தசாம் சத.
அபூபை: ராஜ்ய யுக்தைர் வா
ஜுஹுயாத் மந்த்ர ஸித்தயே
பொருள்:- ஸ்ரீசக்திகணபதி மகாமந்தி ரத்தை மூன்றுலட்சம் ஆவர்த்தி ஜபம் செய்து அதில் பத்தில் ஒருபாகம் கரும்புத்துண்டு களால் அல்லது நெய்யோடு கூடிய வெல்லப்பத்தினால் ஹோமம் செய்வதால் மந்திர சித்தி ஏற்படும்.

இவ்வாறு ஆகுதிகளின் பலன்களை அறிந்து யாகம் செய்வது சிறப்பு மிக்கதாகும். எமது ஆலயத்தில் நடைபெற்ற கணபதி ஹோமம் பற்றிய திகதிகளை வரலாற்றைச் சான்றாக ஆவணப்படுத்தும் வகையில் தருகின்றோம்.

01. 28. 06. 1987
02. 19.06.1988
03. 1989 நடைபெறவில்லை
04. 07 .10.1990
05. 16.06 .1991
06. 12.07.1992
07. 19.06.1993
08. 10. 07. 1994
09. 18.06 .1995




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. 23.06.1996
11. 21.09.1997
12. 13.09.1998
13. 04.07.1999
14. 2000 } இடப்பெயர்வால்
15. 2001 } நடைபெறவில்லை
16. 2002
17. 22.06.2003
18. 20.06.2004
19. 03.07.2005
20. 18.06.2006
21. 17.06.2007
22. 29.06.2008
23. 21.06.2009

(ஆதாரம் : திரு. சி கணேசன் அவர்களின் குறிப்பேடு)

இவ்வாறு தொடர்ந்து நடைபெற்று வரும் கணபதி ஹோமத்திற்கு அளவு கடந்த ஆற்றலும் மகிமையும் உண்டு என்பதை நாம் நன்குணர வேண்டும். இந்தியாவிலே போபால் நச்சுவாயுக் கசிவு ஏற்பட்ட போது பல்லாயிரக் கணக்கானவர்கள் உயிரிழந்தனர். ஆனால் தினமும் நித்தியாக்கினி வளர்த்து யாகம்செய்து வந்த பிராமணக் குடும்பத்தினர் உயிர் பிழைத் தனர். எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. விஞ்ஞானிகள் ஆராய்ந்தபோது யாகப்புகையும் யாகத்தினால் ஏற்பட்ட சக்தியும் தெய்வீக அருளும் நச்சுவாயுவை அவ்வீட்டில் செல்ல விடாமல் தடுத்துள்ளது என்ற உண்மையைக் கண்டறிந்தனர். அப்போது உலகம் பூராவும் யாகத்தின் மகிமை பத்திரிகைகளில் விரிவாக எழுதப்பட்டது. எமது கணபதி ஹோமத்தாலும் வட பகுதியில் கொடூரமான பல யுத்த அனர்த் தங்கள் ஏற் பட்டபோதும் மீசாலைப் பிரதேசமும் அயற்பிர தேசமும் எந்தவித அழிவுகளுமின்றிக் காப் பாற்றப்பட்ட அற்புதத்தை நாம் உணர வேண்டும். அத்துடன் எமது ஆலயமும் தொடர்ந்து பல வளர்ச்சிகளைக் கண்டு வருகின்றது. யாகத்தின் பின்பு நீறாகிய யாக விபூதியை பக்குவப்படுத்தி அடியார்களுக்கு வழங்கப் பட்டு வருவதும் சிறப்பிற்குரியது. அது துஷ்ட தேவதைகளை நீக்கவல்லது. தீராத நோய்களையும் பாவங்களையும் தீர்க்க வல்லது. திருவருட் சித்தர், புராண வித்தகமாமணி,



செல்லையா- சகராச சேகரம் (புன்னையடி சாஸ்த்திரியார்) அவர்கள் எமது பிள்ளையாரின் திருவருள் பற்றிக் கூறும் போது **"தென்மராட்சியைக் காத்து வரும் அற்புதப் பிள்ளையார் மாவடியான்"** என்று அடியேனுக்கு கூறியிருந் தார். எனவே கணபதி ஹோமத்தினை தொடர்ந்து செய்வோம் மாவடியான் திருக்கழல் பணிந்து தொண்டுகள் செய்து வாழ்வோம்.

சுபம்


## ஆடிப்பூரம்

ஆடிமாதத்திலே பூர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் போது கொண்டாடப்படுவது ஆடிப்பூரம் எனும் விழா. இது தேவிக்குரிய திருநாள். மானிடத்தை இன்னல்களில் இருந்து மீட்பதற்கு உலகண்னை இப்பூவுலகிலே தோன்றிய நாள் ஆடிப்பூரம் என்று கருதுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவடியானும் அறுகம்புலத்தானும்

திரு. வேலுப்பிள்ளை சடாட்சரமூர்த்தி
ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்



மாவடி விநாயகர் ஆலயம்



அறுகம்புல விநாயகர் ஆலயம்

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு வடகிழக்குத் திசையில் அறுகம்புலவயல் வெளியில், அல்லாரை தெற்கு, மீசாலையில் வீற்றிருந்து, அறுகம்புல மகாகணபதிப் பிள்ளையார் அருளாட்சி புரிகின்றார். அடியவர்களுக்கு அருமருந்தாய் அமைந்து கேட்ட வரங்களை நல்கும் அருட் பெருமைகொண்ட ஆலயமாக இவ்வாலயம் விளங்குகிறது.

கி.பி. 1790ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்தில் காலிங்க ராயர் என்பார் முதலியார் எனும் அரச அதிகாரி யாகப் பணியாற்றிவந்தார். இவர் கச்சாய் கோவில் பற்றைச்சேர்ந்த அல்லாரை தெற்கில் வசித்தவர். இவரது இருப்பிடம் அறுகம்புலம் ஆலயத்துக் குப் பின்புறமாக இருந்தது. தம்மிடம் இருந்த மாடுகளை அடம்பிக்குளம் வயல் வெளியில் பட்டியாக கட்டி வந்தார். அதிகாலையில் எழுந்து பட்டிக்குச்சென்று அங்குள்ள பசுக்களில் பால் கறந்து அறுகம்புலம் ஊடாக வீட்டுக்கு கொண்டு செல்வது வழமை. இவ்வாறு செல்லும்போது ஒரு அறுகம் கற்றையில் கால் இடறிப் பால் சிந்துவது வழக்கமாக நிகழ்ந்து வந்தது.

ஒருநாள் முதலியார் பால்கறந்து வீடு நோக்கிச் செல்லும்போது அறுகம் கற்றையில் கால்தடக்கி விழ, பாற்குடம் உடைந்து பால் முழுவதும் அறுகம் கற்றையின்மேல் கொட்டி யது. இதனால் கோபமுற்ற காலிங்கராஜ முதலி யார் இளையமகனை வரவழைத்து அறுகங் கற்றையை வெட்டி அகற்றுமாறு பணித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனும் அறுகங்கற்றையை வெட்ட அதன்கீழ்க் கல்லொன்று தெரிந்தது. முதலியாரும் மகனும் சேர்ந்து அதைத் தோண்டி எடுத்தனர். அது விநாயகர் உருவம் பொறிக்கப்பட்ட கற்சிலையாக இருந்தமையைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

அன்று முதற்கொண்டு அவ்விடத்தில் ஒரு சிறிய குடிசையை அமைத்து அவ்விநாயகரை வைத்து வழிபாடியற்றி வந்தனர். பலகாலமாக விநாயகருக்குச் சிறிய குடிசையே ஆலயமாக வாய்க்கப் பெற்றிருந்தது. காலிங்கராயர் பரம்பரையில் வந்த "சின்னத்தம்பி அப்புா" என அழைக்கப்படும்' திருவாளர் விநாசித்தம்பி கந்தையா என்பவர் ஊர் மக்களின் உதவியைப் பெற்று அறுகம்புலத்தானுக்கு கற்கோவில் அமைத்தார். 1954ஆம் ஆண்டு ஆவணி மாதம் 7ஆம் திகதி (24.08.1954) மிருகசீரிட நட்சத்திரத்தில் முதன்முதலாகக் கும்பாபிஷேகம் இடம் பெற்றது.

மாவடியான் மண்ணில் இருந்து வெளித் தோன்றியதைப் போன்றே, அறுகம்புல விநாயகரும் வெளித்தோன்றியுள்ளார். திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய ஸ்தாபகர் கேயரத்தின முதலியார் அவர்களும் அறுகம்புல மகாகணபதிப் பிள்ளையார் ஆலய ஸ்தாபகர் காலிங்கராஜ முதலியார் அவர்களும் மிக நெருங்கிய உறவினர்கள் (ஆண் - பெண் பரம்பரை)என்பதும் வரலாற்று ஆதாரங்கள் மூலம் காணக்கிடக்கிறது.



அறுகம்புல மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம் இன்று அல்லாரை அடியவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து இந்து அடியவர்களுக்கும் அருள் சுரக்கும் அமுதமாக நிலைபெற்று இருக் கிறது.

ஆதாரம்:
**அறுகம்புல மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வரலாறு.**

### சோடச கணபதிகள்

ஆகமங்களில் முப்பத்திரண்டு விநாயகர் திருவுருவங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் பதினாறு வகையான திருவுருவங்கள் குறிப்பிடத்தக்ன. வக்ரதுண்டகணபதி, சிந்தாமணி கணபதி, விக்னராஜகணபதி, பாலச்சந்திரகணபதி,கஜானர், மல்லாலர், மத்தமயுரேசர், கணேசன், கணபதி, மாறுநேரர்துமைகேது, துண்டிராஜர், மகோற்கட கணபதி, வல்ல கணபதி, சித்திபுத்தி கணபதி

- சோடா கணபதி வடிவங்கள் பிறிதொருநூலில்.

பாலகணபதி, தருணகணபதி, பக்திகணபதி, வீரகணபதி, சக்திகணபதி, துவிஜகணபதி, பிங்களகணபதி, உச்சிஷ்டகணபதி, விக்னகணபதி, சாரப்பிரகணபதி, ஏரம்பகணபதி, லட்சிமிகணபதி, மஹகணபதி, புவனேககணபதி, நிருத்தகணபதி, ஊர்த்துவகணபதி.

- இந்துக்கலைக் களஞ்சியம் தொகுதி 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்துச் சைவத்தமிழ் எழுச்சியின் பின்னணியில் பெரியபுராணம்


ஈஸ்வரநாதபிள்ளை குமரன் (B.A.Hons,M.Phil)
சிரேஸ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

(2010 ஆம் ஆண்டு மாசிமாதம் புதுச்சேரியில் நடைபெற்ற பெரியபுராண ஆய்வு மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை)

**ஈழமும் பெரியபுராணமும்**

ஈழமும் தமிழகமும் பண்டைக்காலம் முதற் கொண்டே அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு ரீதியில் மிக நெருக்கமான தொடர்பினைப் பேணிவந்துள்ளன. தமிழகத்தில் ஏற்படும் மாற்றங்களும், தாக்கங்களும், வளர்ச்சிகளும் ஈழத்தை நேரடியாகவோ மறைமுகவோ பாதித்து வந்ததை இவ்விரு நாடுகளின் வரலாற்றையும் தொடர்புறுத்தி நோக்குவோர் கண்டு கொள்வர். குறிப்பாக கி.பி 13ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தமிழரசின் உருவாக்கமும் தமிழ் வன்னிமைகளின் தோற்றமும் ஏற்பட்ட மையைத் தொடர்ந்து தமிழக - ஈழ உறவில் மிக நெருக்கமான பிணைப்பு ஏற்படத் தொடங்கியது. தமிழகத்திலிருந்து ஏராளமான குடியேற்றங்கள் ஈழத்தின் வடக்கிலும் கிழக்கிலும் நடை பெற்றமை குறித்துச் சமகாலத்தில் ஈழத்தில் தோன்றிய வரலாறுசார் படைப்புகள் வாயிலாக அறியமுடிகின்றது. இங்ஙனம் குடியேறியோர் தமிழக - ஈழ பண்பாட்டுப் பாலத்தை மேலும் பலப்படுத்தியிருந்தனர். தமிழ்நாட்டிற்கும் ஈழத் திற்குமிடையே நிகழ்ந்து வந்த தடையற்ற போக்கு வரத்தும், அரசுகளுக்கிடையில் காணப்பட்ட நல்லிணக்கமும், வர்த்தக அடிப்படையிலான உறவுகளும் பண்பாட்டுறவினை மேலும் பலப் படுத்திய விடயங்கள் எனச் சுட்டலாம்.

இத்தகைய பண்பாட்டுறவின் பின்னணியிலே பெரியபுராணமும், பெரியபுராணக் கதைகளும் ஈழத்துக்கு அறிமுகமாயின. யாழ்ப் பாணத்தரசர் காலம் முதற் கொண்டே ஈழத்திலக்கியங்களில் பெரியபுராணக் கதைகளின் செல்வாக்கை மிகத் தெளிவாகக் கண்டுகொள்ள முடியும். பெரியபுராணக் கதைகளை எடுத்தாளுதல், பெரியபுராணப் பாடல்வரிகளை அடியொற்றியோ இணைந்தோ கவி புனைதல், நாயன்மார்களையும் ஏனைய மெய்யடியார்களையும் வழுத்திப் பாடல்களை யாத்தல் என்பன பரவலாகக் காணப்பட்டன. இவற்றை நோக்கும் போது ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்தில் பெரிய புராணம் பெற்றிருந்த முதன்மையும் மதிப்பும் புலனாகின்றன. தட்சிண கைலாயபுராணம், திருக் கரசைப்புராணம், கண்ணகி வழக்குரை எனும் யாழ்ப் பாணத் தமிழரசர் காலத்து இலக்கியங்களின் கடவுள் வாழ்த்துப் பாக்களில் சிவன டியார் வணக்கமும் இடம் பெறுகின்றது. சிவனடியார் களின் பெருமை, அவர்கள் செய்த அற்புதங்கள் என்பன அங்கே சுருக்கமாகச் சுட்டிக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டப்படல் நோக்கத்தக்க தாகும். தட்சிண கைலாச புராணத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றில் சமய குரவர்கள், தண்டியடிகள் என்போரைப் பெயர்சுட்டியும் ஏனைய மெய்யடியார்களைப் பொதுவாகச் சுட்டியும் வணக்கம் செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். அதேபோல திருக்கரசைப் புராணத்தின் ஐந்து பாடல்களில் சிவனடியார் வணக்கம் அமைந்துள்ளது. சம்பந்தர், அப்பர், மாணிக்க வாசகர் என்னும் நால்வருக்கும் தனித்தனியே ஒவ்வொரு பாடலை ஒதுக்கும் ஆசிரியர் மற்றொரு பாடலில் பொதுவாகச் சிவனடியார்கள் எல்லோரையும் வழுத்துவதைக் காணமுடியும். கண்ணகி வழக்குரையின்[3] கடவுள் வாழ்த்தில் கண்ணப்பரின் கதையும், சுந்தரருக்காக இறைவன் பரவையாரிடம் தூது சென்ற கதையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவற்றால் ஈழத்தில் பெரியபுராணக் கதை பெற்றிருந்த மதிப்பும் செல்வாக்கும் புலனாகின்றன.

**ஈழத்தில் ஐரோப்பியராட்சியும் சைவமும்**


கி.பி 17ஆம் நூற்றாண்டிலிருந்து ஈழம் ஐரோப்பியரின் ஆளுகைக் கீழ் வந்தது. போர்த்துக்கேயர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எனும் ஐரோப்பிய தேசத்தவர்கள் ஒருவர் பின் ஒருவராக ஈழத்தைத் தம் ஆளுகைக்கீழ் வைத்திருந்தனர். இவர்களின் ஆட்சி தமிழர் பண்பாட்டிற்கும் சைவ சமயத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருந்ததை காணலாம். குறிப்பாக ஈழத்திற்கு முதலில் வந்த ஐரோப்பியரான போர்த்துக்கேயர் (கி.பி 1621-1658) சுதேச மதவழிபாடுகளுக்குத் தடை விதித்திருந்தனர். இதனால் சைவசமயத்தின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டதோடு அது பெரும் பின்னடைவைச் சந்திக்கவும் காரணமாக அமைந்தது. இவர்கள் காலத்தில் சைவசமய வழிபாட்டிடங்கள் பல அழிக்கப்பட்டன. சைவசமய சடங்காசாரங்கள், விழாக்கள், பண்டிகைகள் என்பன கைவிடப்பட்டன. பல மறக்கப்பட்டும்போயின. பல தசாப்தங்களாகத் தொடர்ந்த இந்நிலை ஈழத்தில் சைவசமயத்தின் இருப்பினையே கேள்விக்குறியாக்கியது.

எனினும் போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஈழத்துக்குவந்த ஒல்லாந்தர்கள் (கி.பி 1658-1796) சுதேசமதங்கள் தொடர்பாகப் பின்பற்றிய நெகிழ்ச்சித் தன்மையானது மீண்டும் சைவம் தன்னை கட்டியெழுப்ப வாய்ப்பைத் தந்தது. இக்காலப்பகுதியில் வாழ்ந்த புலவர்களும் சைவசமய அபிமானிகளும் சைவத்தை மீண்டும் செல்வாக்குறச் செய்யப் பல முயற்சிகளை எடுத்தனர். குறிப்பாக, இக்காலப்பகுதியில் பாடப்பட்ட பிரபந்தங்கள் பலவற்றில் சமயமே உள்ளடக்கமாகவிருந்ததைக் காணலாம். நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், வரதபண்டிதர், கணபதி ஐயர், வீரக்கோன்முதலியார், இணுவில் சின்னத்தம்பிப் புலவர் முதலானோர் தமது சமகாலப் பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்த பல திருத் தலங்கள்மீது பாடல்களைப் பாடினர். ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்யத் தூண்டுவதும், புனரமைத்த ஆலயங்கள் மீது மக்களைப் பக்தி கொள்ளச் செய்வதும், மக்கள் மறந்துபோய் விட்ட சடங்காசாரங்கள், விழாக்கள், விரதங்களை ஞாபகப்படுத்துவதும் இக்காலப் புலவர்களின் பெரும் பணியாக விருந்தது. வரதபண்டிதர் ஆக்கிய சிவராத்திரிபுராணம், ஏகாதசிப் புராணம், பிள்ளையார்கதை, கிள்ளைவிடுதூது என்பன இத்தொடர்பில் வகை மாதிரியாகச் சுட்டிக்காட்டத்தக்கவையாகும். இங்ஙனம் ஒல்லாந்தர் காலப்பகுதியில் கருக்கொண்ட சைவத்தமிழ் எழுச்சியின் மற்றொரு பரிணாமத்தினை ஆங்கிலேயர் காலத்தில் காணமுடிந்தது.

ஆங்கிலேயர்கள் (கி.பி 1796-1948) சுதேச மதங்களைத் தடைசெய்யவில்லை எனினும் அவர்கள் காலத்தில் ஈழத்திற்கு வருகைதந்த கிறிஸ்தவமிஷன்கள் சைவசமய வளர்ச்சிக்கு பெருஞ்சவாலாக அமைந்தன. ஆங்கிலேயர் ஆட்சிச் சூழலில் தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களையும், வசதிகளையும் சாதகமாக்கிக் கொண்ட மிஷன்கள் தமது மதப்பிரசாரத்தை முடுக்கி விட்டிருந்தன. மிஷனரிமார் கல்விவாய்ப்பு, தொழில்வாய்ப்பு, சலுகைகள் என்பவற்றைக் காட்டிச் சுதேசிகளை கிறிஸ்தவத்தின்பால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைதிருப்பத் தொடங்கினர். இதனால் சுதேசிகளுள் பலர் கிறிஸ்தவத்தின் பால் கவரப் படுவாராயினர். இச்சூழலில் மிஷனரிமாரின் மதமாற்ற முயற்சிகளுக்கு எதிர்வினையாக சைவத் தமிழ் எழுச்சியினை சைவசமயிகள் முன்னின்று நடாத்தினர். நாவலரைத் தலைமையாகக் கொண்டெழுந்த இச்சைவத்தமிழ் எழுச்சி ஈழத்து வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வெறுமனே சமயநோக்குடன் மட்டுமன்றி இந்துக்கல்வி, சமூகச்சீர்திருத்தம், சமூகமேம்பாடு, அரசியல் முதலான பல கோணங்களிலும் சைவத்தமிழ் எழுச்சியில் தம்மை இணைத்துக்கொண்டோர் ஆர்வங்காட்டத் தொடங்கியிருந்தனர்.



**சைவத் தமிழ் எழுச்சியும் நாவலரும்**

சைவத்தமிழ் எழுச்சியைக் கொண்டு நடாத்த நாவலரும் அவர் பரம்பரரையினரும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்த நடவடிக்கைகளை இரண்டு வகைப்படுத்தி நோக்கமுடியும்.

i. கிறிஸ்தவ மதப்பிரசாரத்துக்கு எதிரான நடவடிக்கைகள். கண்டனப் பிரசுரங்களை வெளியிடல், பிரச்சாரங்களைச் செய்தல், முதலானவை இவ்வகை சார்ந்தனவாகும்.

ii. சைவசமயம் பற்றிய நம்பிக்கையுணர்வினை மக்கள்மத்தியில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள். சமய அறிவினை மேம்படுத்துவதற்கான நூல்களை எழுதுதல், பிரசங்கங்களைச் செய்தல், பழைய சமய சாஸ்திரங்களுக்கும் இலக்கியங்களுக்கும் புத்துயிர்ப்புத் தருதல், சமய விழாக்கள் சடங்காசாரங்கள் பற்றிய தேவையினையும் தெளிவினையும் மக்களுக்கு எடுத்து விளக்குதல் முதலான நடவடிக்கைகள் இவ்வகை சார்ந்தனவாகும்.

மேலே விதந்துரைக்கப்பட்ட எழுச்சிசார் நடவடிக்கைகள் ஆய்வுநோக்கிற்காகத் தனித்தனியே பிரித்து நோக்கப்பட்டிருப்பினும் அவையடிப்படையில் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதை மனங்கொள்வது அவசியமாகும்.

பொதுசன நூலகம்

மக்களுக்குச் சமயம்பற்றிய நம்பிக்கையையும் பற்றுணர்வினையும் வளர்க்கும் நோக்கங்களுள் ஒன்றாகவே சைவசமய சாஸ்திர நூல்களுக்கும், இலக்கியங்களுக்கும் புத்துயிர்ப்பு தரும் முயற்சி நடைபெற்று வந்ததைக் காண முடிகின்றது. சைவசமய சாஸ்திர நூல்கள் எல்லோராலும் எளிதில் விளங்கிகொள்ளத் தக்கவையல்ல. அவற்றை விளங்கிக்கொள்வதற்குப் பக்குவமும், அடிப்படைச் சமய அறிவும் தேவையானதாக இருந்தது. ஆனால் சமய ரீதியான இலக்கியங்கள் அப்படிப்பட்டவையல்ல. அவை எளிதில் எல்லோராலும் விளங்கிக் கொள்ளவும், ரசிக்கத்தக்கதாகவும், இலகுவில் படனமரபில் அல்லது பாராயணமரபில் மக்கள் மத்தியில் கொண்டுசெல்லக்கூடியனவாகவும் அமைந்தன. ஆதலால் சைவத்தமிழ் எழுச்சியிலீடுபட்டோர் சமய சம்பந்தமான இலக்கியங்களுக்குப் புதுமெருகூட்டி மக்கள்மத்தியில் அவற்றைக் கொண்டுசெல்ல விழைந்தனர். கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்

புராணம், திருவாதவூரர்புராணம், திருச்செந்தூர்ப்புராணம், மயூரகிரிப்புராணம், தேவாரத் திருப்பதிகங்கள் முதலானவை மக்களின் பக்தியுணர்வை வளர்தெடுக்கும் நோக்குடன் படனம், பாராயணம் செய்யப்பட்டு வந்ததை அவதானிக்கமுடிகின்றது. யாழ்ப்பாணக் கலாசாரத்தினை "கந்தபுராண கலாசாரம்" என்று விதந்து கூறத்தக்க வகையில் கந்தபுராணம் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையில் பெற்றிருந்த மதிப்புச் சுட்டிக்காட்டத்தக்கதாகும். கந்தபுராணததிற்கு அடுத்தபடியாகப்பட்டன, பாராயண மரபில் தனிச் செல்வாக்கினைப் பெரியபுராணம் பெற்றிருந்தது.

**பெரியபுராணமும் சைவத்தமிழ் எழுச்சியும்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுக நாவலர் சைவத்தமிழ் எழுச்சியைத் தூண்டுதற்கும் சரியான நெறியில் அதனை வழிப்படுத்துதற்கும் பெரியபுராணத்தைச் சாதுரியமாகப் பயன்படுத்தியுள்ளார். பெரியபுராணத்தை மையப்படுத்தி அவரால் செய்யப்பட்ட

i. பெரியபுராண வசனம்

ii. பெரியபுராண சூசனம்

எனும் இருபடைப்புக்களும் இந்தவகையில் கவனத்தை ஈர்ப்பனவாகவுள்ளன. ஈழத்தில் பெரியபுராணம் பெற்றிருந்த முதன்மையும் சைவத்தமிழ்க் கல்விப்பாரம்பரியத்தில் அப்புராணத்துக்குக் கிடைத்துவந்த வரவேற்புமே பெரியபுராணத்தை அடியொற்றிய இருவேறு படைப்புக்களை ஆறுமுகநாவலர் வெளிக்கொணரக் காரணமாயிற்று. இவற்றுள் பெரிய புராண வசனம் சாதாரண கல்வியறிவு கொண்ட மக்களைக் கருத்திற் கொண்டு செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. செய்யுள்களைப் படித்துப் பொருளும், நயமும் காண்பதற்கு ஆற்றலில்லாதவர்களுக்கு அப்புராணக் கதையையும் அக்கதையின் ஊடாக வெளிப்படும் செய்தியையும் அறிய வைப்பதாக இந்நூல் அமைந்துள்ளதைக் காணலாம். பெரியபுராண சூசனம் அடிப்படைச் சமய, சாஸ்திர அறிவுகொண்டோரைக் கருத்திற் கொண்டு செய்யப்பட்டதாகும். பெரியபுராணக் கதைகளின் உட்பொருள், அவற்றினூடாக மேற்கிளம்பும் செய்திகள், சமயசாஸ்திர நூல்களுக்கும் அதற்கும் உள்ள தொடர்பு என்பனவற்றைத் தெளிவுபடுத்தும் வகையில் பெரிய புராணசூசனம் எழுதப்பட்டுள்ளது. பெரிய புராணவசனம் நாவலரின் வசனநடையின் திறத்தினை உணர்த்துகின்றது என்றால் பெரியபுராண சூசனம் அவரின் சமயசாஸ்திர அறிவினையும், பரந்த சமயப் புலமையையும் வெளிக்கொணர்கிறது எனலாம். சேக்கிழாரின் உள்ளக் கிடக்கைகளை அவர் பெரியபுராணக் கதைகளினூடாகச் சொல்லவிழைந்ததை துருவித் துருவிப் பெரிய புராணசூசனமூடாக நாவலர் வெளிக்கொணர்ந்திருக்கும் சிறப்பு நோக்கத்தக்கதாகும்.

**நாவலரின் நோக்குநிலை**

நாவலர் பெரியபுராணம் சார்ந்த படைப்புக்களை இருவேறு நோக்கங் களின் அடிப்படையில் எழுதியுள்ளார் போலத் தெரிகின்றது.

i. சைவசமயிகளுக்குத் தமது சமயம் சார்ந்த பற்றுணர்வினையும், நம்பிக்கையினையும், மனஉறுதிப்பாட்டினையும் ஏற்படுத்துதல்.

ii. சமய அடிப்படையிலான சீர்திருத்தத்தையேற்படுத்தி சைவசமயிகளுக்கிடையில் காணப்படும் உள்முரண்பாடுகளையும் புரிந்துணர்வின்மையினையும் நீக்குதல்.

என்பனவே அவையாகும். மேலே கூறப்பட்ட இவ்விரு நோக்கங்களும் அவரது படைப்புக்களில் துலாம்பரமாக வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடியும். அவற்றுள்ளும் பெரிய புராண வசனத்தில் நாவலர் தனது நோக்கங்களை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். அந்நூலுக்குத் தரப்பட்டிருக்கும் நீண்ட முகவுரை பெரியபுராணத்தினை மக்கள் மயப்படுத்துவதில் அவர் காட்டிய அக்கறையை எமக்குணர்த்துகின்றது. அம்முகவுரையில் சைவசமயி என்றால் யார்? அவர்களால் ஓதத்தக்க பக்தி இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவை? அவற்றுள் பெரியபுராணத்தின் இடம் என்ன? அப்புராணத்தினைக் கத்திய ரூபமாகச் செய்யவேண்டிய காரணம் யாது? பெரிய புராணத்தை ஓதுவோர் செய்யவேண்டியவை எவை? விலக்க வேண்டியவை எவை? அந் நூலினை ஓதுதலால் கிடைக்கக் கூடிய நன்மை கள் எவை? என்பனவற்றை மிக விலாவரியாக நாவலர் சுட்டுவதைக் காணலாம்.

இம் முகவுரையில் சைவர்கள் யார் என்ப தற்கு நாவலர் தரும் விளக்கம் மிக முக்கிய மானதாகும்.

> "சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்த வர்களாய், கொலை, களவு, கள்ளுண் ணல், புலாலுண்ணல், பிறன்மனை விழைதல், வரைவின்மகளிர் விழைதல், பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவங் கள் இல்லாதவர்களாய் இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங் களை உடையவர்களாய், குருலக்கணங் குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து சிவதீட்சை பெற்றுக்கொண்ட வர்களாய், விபூதி ருத்திராக்கதாரணம், சந்தியாவந்தனம், ஸ்ரீபஞ்சாட்சர ஜபம், சிவத்தியானம், சிவாலயசேவை, சிவலிங்க பூசை, குருவாக்கிய பரிபாலனம், மாகேசுர பூசை முதலியனவற்றைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்பவர்க ளாய் உள்ளவர்களே சைவர்கள் என்று சொல்லப்படுவார்கள்."

மேற்போந்த கூற்றில் சைவசமயிகள் செய்ய வேண்டியவை எவை, செய்யக் கூடாதவை எவை என்பதை நாவலர் தெளிவாக எடுத்துக் காட்டி யுள்ளார். தனது பாலபாடங்களிலும், பிரசுரங் களிலும் சைவசமயிகள் எப்படி இருக்கவேண்டும் என நாவலர் கூறிவந்த கருத்துக்களின் திரட்டாக இக்கூற்று அமைந்துள்ளதைக் காணலாம். சமய அடிப்படையில் சைவசமயிகள் மத்தியில் சீர் திருத்தத்தை ஏற்படுத்த முயலும் போக்கையும் இதன்மூலம் கண்டுணர முடிகின்றது.

**பஞ்சபுராண வரிசையில் பெரியபுராணம்**

சைவசமயிகளின் சமய உணர்வை வலுப் படுத்துவன என்ற வகையில் பஞ்சபுராணத்தின் முக்கியத்துவத்தினை நாவலர் பெரியபுராண முகவுரையில் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின் றார்.

> "சைவர்கள் ஓதி உணர்தற்கு அத்தியா வசியமாய் இருக்கும் நூல்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் பெரியபுராணம் என்பவைகளாம். இவைகள், சிவபிரானது திருவருளி னாலே பாடப்பட்டமையால் அருட் பாவென்றும் சொல்லப்படும். இவை களுள், முன்னைய நான்கும் பதி, பசு, பாசமென்னுந் திரிபதார்த்தங் களின் இலக்கணத்தை உணர்ந்துஞ் சைவசித் தாந்த சாத்திரத்தின் அனுபவப் பய னாகிய தோத்திர ரூபமாய் இருக் கும். பின்னையதாகிய திருத்தொண் டர் பெரியபுராணம் சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்து முத்தி பெற்ற மெய்யடியார்களுடைய அடிமைத்திறத்தை விளக்கும் சரித்திர ரூபமாய் இருக்கும். ஆதலாற்றானே, இவைகளைந்தும் சைவத்துக்கும், சிவாலய நித்திய நைமித்திகங்களுக் கும், சிவபூசைக்கும், சிவதரிசனத் துக்கும், மாகேசுர பூசைக்கும் நியம மந்திரங்களாய் அந்தச் சைவர்களுக்கு இன்றியமையாப் பெருஞ் சிறப்பின வாயின."

நாவலரின் மேற்போந்த கூற்று பெரிய புராணம் சைவத்தமிழ் உலகில் பெற்றிருந்த பெருமதிப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. சைவ நாயன்மார்களின் தேவாரத் திருப்பாடல்களுடன் சேர்த்து வைத்துப்பார்க்கும் அளவு பெரிய புராணம் பக்தியனுபவம் மிகுந்தது என்பதை நாவலர் வலியுறுத்திச் செல்கின்றார். மெய்யடி யார்களின் வரலாற்றைச் சரித்திரபூர்வமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும்நூல் எனினும் தோத்திரநூல் வரிசையில்வைத்து நாள்தோறும் பாராயணம் செய்யத்தக்க சிறப்பினைப் பெரியபுராணம் பெற்றிருப்பதை மேற்போந்தவரிகள் எமக் குணர்த்துகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் சிவாலயங்களிலும், சைவசமயக் கிரியை களிலும், சடங்காசாரங்களிலும் தமிழ்மந்திரமாய் ஓதற்குரிய சிறப்பினைப் பெரியபுராணம் பெற்றிருக்குமாற்றை நாவலர் உணர்த்திச் செல்லுந்திறன் நோக்குதற்குரியது.

இன்னும் ஓதற்கும், பொருள் உணர்தற்கும் எளியதாய் பெரியபுராணம் விளங்கும் சிறப்பை அவர் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்.

> "திருத்தொண்டர் பெரியபுராணமானது தன்னை உணர்ந்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்குத் தேவாரத்தின் வரலாறும் மகிமையும் ஒரே விடயங்களில் அதன் பொருளும் விளங்குதல் கூடாமையானும், தன்னை அத்தியந்த ஆசையுடன் ஓதுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பக்திவைராக்கிய ஞானங்களைப் பலிப்பிக்குங் கருவியாய் இருத்தலாலும், சிவஞானசித்தியார், திருக்களிற்றுப்படியார் முதலாகிய சைவசித்தாந்த நூல்களினும் உரைகளினும் சிவாநுபவத்துக்குத் தான் கூறும் நாயன்மார் பலருடைய சரித்திரங்களில் உதாரணங் காட்டுதலாலும், சர்வாதிகாரிகளாகிய ஆதிசைவருக்கும் பிறருக்கும் தான் அதிகரித்த தனியடியார் அறுபத்து மூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய சரித்திரங்களையும் உணர்ந்து அவர்கள் மகிமையைத் தெளிந்தாலன்றிச் சிவாலயங்களெங்கும் முறையே அவர்களுக்குப் பிரதிட்டைபூசை திருவிழாக்கள் செய்தற்கண்ணும் அவைகளைச் சேவித்தற் கண்ணும் ஊக்கமும் அன்பும் நிகழாமையானும் யாவரும் முன்னர் முக்கியமாகக் கற்றுணர வேண்டும் நூலாம்"

பெரியபுராணத்தைச் சைவசமயிகள் நிச்சயங் கற்றிருக்கவேண்டும் என்பதற்கு நான்கு காரணங்களை நாவலர் இங்கு எடுத்துரைத்திருப்பதைக் காணலாம்.

i. தேவாரத் திருப்பதிகங்களின் பொருளை, அவை பாடப்பட்ட சந்தர்ப்பங்களை அவற்றின் மகிமைகளை தெளிவுற விளங்கிக்கொள்வதற்கு பெரியபுராணம் தரும் நாயன்மார்களின் வரலாறு மிக அவசியமானது.

ii. பெரியபுராணம் தன்னை விருப்புடன் கற்பவர்களுக்கு பக்தி வைராக்கியத்தைத் தரவல்லது.

iii. சித்தாந்த சாஸ்திரங்களிலும் அவற்றின் உரைகளிலும் எடுத்துக்காட்டுகளாக நாயன்மார்களின் வரலாறுகள் தரப்பட்டிருப்பதால் அதனை விளங்கிக்கொள்ள பெரியபுராண அறிவு தேவை யானது.

iv. திருக்கோவில்களில் நாயன்மார்கள் வழிபாடு (சங்க வழிபாடு), குருபூசை என்பன நடைபெறுங் காலங்களில் நாயன்மார்களின் வரலாறுகள், பெரு மைகள் என்பன மக்களுக்கு விளங்கியிருப்பின் அவர்களின் பக்தி உணர்வும் ஆன்மீக நாட்டமும் அதிகரிக்கும்.

என்பனவே அக்காரணங்களாகும். இக் காரணங்களையே பெரியபுராண சூசனத்தி லும் அவர் மேலும் அழுத்தமாகக் கூறியுள்ளார் ஆறுமுகநாவலரின் கூற்று பொதுவாக சைவத் தமிழ் உலகில் பெரியபுரணத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் அதேவேளை சமகாலத்தில் ஈழத்துச் சைவத்தமிழ் எழுச்சியில் அதன் தேவை எந்தளவுதூரம் உணரப்பட்டிருந்தது என்பதற்கும் மிகச் சிறந்த சான்றாகும்.

**பெரியபுராண வசனத்தின் தேவை**

அத்தகைய சிறப்புக்கள் பொருந்திய பெரிய புராணத்தினை உரைநடைப்படுத்த வேண்டியதன் சமகாலத்தேவை குறித்தும் நாவலர் விரிவாகக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவ்வகைப்பட்ட பெருஞ்சிறப்பின தாகிய அந்நூலானது பத்தியரூபமாய் இருத்தலால் நிகண்டு கற்று இலக்கிய ஆராய்ச்சிசெய்து இலக்கண நூல் களிலே பயின்ற வித்துவான்களுக்கே யன்றி மற்றவர்களுக்குச் சிறிதும் பயன் படாமையாலும் அவ்வித்துவான்களுக் கும் நோய், கவலை, முதலிய ஏதுக்க ளால் விவேகங் கிளராக் காலத்துப் பயன் படாமையாலும் நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும் குறைந்த கல்வி யுடைய பிறரும் ஆகிய யாவரும் எக் காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும் கல்வியில்லாத ஆடவர் களும் பெண்களும் பிறரைக்கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும் வாசிப்பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கும்படி பதிப்பித்தேன்."

என்கிறார்.

இதனையே பெரியபுராண வசனத்திற்குச் சிறப்புப்பாயிரம் எழுதிய சுன்னாகம் சங்கர பண்டிதரும்.

"மிகலறு மிலக்கண விலக்கியப் பயிற்சியின்
வல்லோர்க் கல்லது மற்றையோ ருணர்ந்திட
வொல்லா தன்றியு முரைத்தவல் லோர்க்கு
மிடர்நோய் முதலிய வேதுவான் விவேகம்
படர்தலில் லாவழிப் பயன்படா தாதலி
னெல்லார் தமக்கு மெக்கா லத்தினு
நல்லுப யோகமா நலந்தரற் பொருட்டுத்
திப்பிய மாகுமத் திருப்புரா ணத்தைத்
தப்பிலா யுத்திகள் சால்புற வேற்றியும்
வைத்திடும் புனைந்துரை வகைபல மாற்றியும்
கத்திய ரூபமாக் கருணையி னியற்றிப்
பாவலர் வியப்புற யாவரு நயப்புறப்
பூவுல கனைத்தினும் பொலிந்திட வருளினன்"

எனக்குறிப்பிடுதல் காண்க.

தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் உள்ளிட்ட பக்திப் பனுவல்கள் சிவானுபூதி பெற்ற பெரியவர்களால் அருளிச் செய்யப்பட்டவைகள். தமிழ் மந்திரங்கள் எனச் சிறப்பித்துக் கூறத் தக்கவைகள். பாராயணம் அல்லது படனம் செய்யுந்தோறும் புதிது புதிதாக மெய்ஞானக் கருத்துக்களை அள்ளித்தந்தவண்ணம் இருப் பவை. அப்படிப்பட்ட நூல்களுக்கு உரையோ உரை விளக்கங்களோ எழுதலாகாது அங்ஙனம் செய்யின் அது பாவகாரியமாகும் எனும் கருத்து இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்கள் வரை இருந்துவந்தது. இக்கூற்றில் நியாயமில்லா மலுமில்லை. எனினும் சாதாரண மக்கள்மத்தி யில் பக்தியுணர்ச்சியைக் கொண்டுசெல்ல வேண்டுமாயின் - சமயஅறிவு, சமயம நம்பிக்கை, பக்தி வைராக்கியம் என்பவற்றை வளர்க்க வேண்டுமாயின் - ஒரே வழி அந்நூல்களை எளிமைப்படுத்துதலாகும். அதனை நாவலர் துணிந்து செய்தார். நாவலரின் சமகாலத் தேவை யும் அம்முயற்சியை மேலும் நியாயப்படுத்திற்று.

ஒருபுறத்தில் மிசுஷனரிகள் எளிமையான பிரசாரங்கள், எளிய நடையிலமைந்த துண்டுப் பிரசுரங்கள், சிறு சிறு வசன வடிவிலமைந்த நூல்கள் என்பவற்றுக் கூடாகத் தமது பிரசாரங் களை முன்னெடுத்தன. கிறிஸ்தவர் அல்லா தோரை அஞ்ஞானிகள் என அவை வர்ணித்தன. கல்விவாய்ப்பு, தொழில்வாய்ப்பு, சலுகைகள் முதலானவற்றைக் காட்டி சுதேசிகளைத் தம்வயப் படுத்த முயன்றன. மிசுஷனரிகளின் இத்தகைய மதமாற்ற முயற்சிகளில் அதிகம் எடுபடுபவர்க ளாகச் சாதாரண மக்களே விளங்கினர். சமூகத் தின் அடிநிலையிலுள்ளோரும், கல்வியறிவற்ற வர்களுமே ஒப்பீட்டளவில் மதமாற்றத்துக்குள் ளாகியோரில் அதிகமானவர்களாகும். இச்சூழ லில் சைவசமயத்துக்குள்ளும் முரண்பட்ட கருத்துநிலை விவாதங்கள் தொடர்ந்த வண்ண மிருந்ததைக் காணலாம். புரியாத மொழியில் நிகழ்த்தப்படும் பூசைகள், ஒப்புக்காகச் செய்யப் படும் சடங்காசாரங்கள், விளங்கிக்கொள்ள முடி யாத விழாக்கள் பண்டிகைகள் என்பன மக்கள் மத்தியில் தமது மதம் பற்றிய நம்பிக்கையையும் தெளிவையும் குறைத்து வந்ததுடன் பிறசமயங் களில் குறிப்பாக மிஷனரியினரின் கவர்ச்சியான பிரசாரங்களில் எடுபடவும் வைத்தது. இச் சூழலில்தான் நாவலர் சமய இலக்கியங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமைப்பாடுபற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். சமய இலக்கியங்கள் தொடர்பாக இருந்துவந்த பொதுவான கொள்கைகளை மறுதலித்து அவற்றை வசனநடையில் கொணர்ந்தமைக்கு நாவலருக்குக் காலமிட்ட கட்டளையும் ஒரு காரணம் எனலாம்.

"நாயினுங் கடையனாகிய என்னை ஒருபொருளெனக் கருதி ஆட்கொண்டருளிய கிருபாசமுத்திரமாகிய ஸ்ரீமத் குருமூர்த்தியுடைய திருவடிகளைச் சிந்தித்துத் துதித்து வணங்கி அவரது திருவருளினாலே... எளிதில் பொருள் விளங்கும்படி... அச்சில் பதிப்பித்தேன்."[11]

என அவையடக்கமாக நாவலர் தரும் விளக்கம் கூர்ந்து நோக்கப்பட வேண்டியதாகும். நாவலரின் தன்னடக்கமும் குருபக்தியும், பெரிய புராணத்தை உரைநடைப்படுத்துங்கால் அவர் கொண்டிருந்த மேலான அவதானமும் இதனால் புலனாகின்றன. திருவிளையாடற் புராணத்தையும் நாவலர் வசனநடைப்படுத்தி எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சைவசமயங்களின் தோத்திர வரிசையில் சேர்க்கப்பட்டுள்ள பெரியபுராணத்தை பாராயணமோ அல்லது படனமோ செய்யும்போது எங்ஙனம் செய்தல்வேண்டும் என்பதுபற்றியும் நாவலர் கூறுகின்றார்.

"சிவபெருமானது மகிமையைப் பேசும் நூல்களுள் யாதொன்றை ஓத விரும்புகின்றவர்கள் சரீரசுத்தி செய்து அநுட்டானம் பண்ணியபின்னரே சுத்தஸ்தானத்திலே பீடம்இட்டு அது எழுதப்பட்ட திருமுறையை அதன்மேல் வைத்து அதனையும் அதனைப் போதிக்கும் ஆசாரியாரையும் அருச்சித்து வணங்கி இருந்து, மனங்கசிந்துருகி மெய்யன்போடு ஓதல்வேண்டும். ஓதும்போது கேட்க விரும்புகின்றவர்களும் அவ்வாறே கேட்டல்வேண்டும் அப்படியே ஓதாதவர்களும் கேளாதவர்களும் அதனாலே பெறப்படும் பயனைப் பெறார்கள்... இப் பெரியபுராணமும் அந்நூல்களுள் ஒன்று ஆதலால், இதனையும் அவ்விதிப்படியே ஓதல், கேட்டல் செய்ய வேண்டும்" என்கிறார்.

பெரியபுராணத்தின் சிறப்பும், பெருமையும், புனிதமும் இதனால் புலனாகின்றன. அகத்தூய்மை, புறத்தூய்மை இரண்டும் ஒருங்கே ஏற்படும் பட்சத்தில்தான் திருவருள் சித்திக்கும். திருவருள் சித்திபெறக் கருவிகளாக அமையும் சமய சாஸ்திரங்களும் தோத்திரங்களும் புனிதம் பெற்றவை யாதலால் அவற்றைத் தொடுவதற்கும், படிப்பதற்கும்கூடத் தனிப்பக்குவம்வேண்டும் என நாவலர் குறிப்பிடுவது இதனால் புலனாகின்றது. பெரிபுராணத்தைச் சிவபுராணங்களுள் ஒன்றாக நாவலர் பிறிதோரிடத்தில் சுட்டிக் காட்டுவதும் இவ்விடத்தில் நோக்கத்தக்கதாகும். இதனால் இதனைக் கற்போரும் கேட்போரும் மது மாமிச போசனத்தை நீக்க வேண்டியதன் அவசியங் குறித்தும், பஞ்சமா பாதகங்கள் செய்வதை நிறுத்த வேண்டியதன் தேவை குறித்தும் நாவலர் வலியுறுத்துகின்றார். சிவதீட்சை பெற்று அதன்வழி ஒழுகுபவர்களே சமய இலக்கியங்களைக் கற்று தமது பக்தியுணர்வை வளர்த்துக்கொள்ளத்தக்கவர்கள் எனப் பலநிலைகளிலும் அவர் வலியுறுத்துவதைக் காணலாம்.

இங்ஙனம் பக்தி சிரத்தையுடன் பெரிய புராணத்தைப் பாராயணமோபடனமோ செய்பவர்கள் அடையக்கூடிய நன்மைகள் யாவை என்பதுபற்றியும் நாவலர் கூறியிருப்பவை மனங்கொள்ளத்தக்கவை.

"கிருபா சமுத்திரமாகிய பரமசிவனைத் தியானித்துத் தோத்திரம் பண்ணி மனங்கசிந்து உருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரிய இந்தப் பெரிய புராணத்தை அத்தியந்த ஆசையுடன் ஓதுகின்றவர்களும் கேட்கின்றவர்களும் குரு லிங்க சங்கம பக்தி பிரபஞ்ச வைராக்கியம் சிவஞானம் என்பவைகளைப் பெறுமாறு அறிந்து பெற்று முக்தியை அடைவார்கள்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்புகள்**

பெரியபுராண வசனத்துடன் இணைப்பாக நாவலர் தந்துள்ள பலவிடயங்களும் கவனத்திற் குரியனவாகவுள்ளன.

i. தேவார, திருமுறைகளைத் தேடித் தொகுத்து இவ்வுலகிற்களித்த நம்பி யாண்டார் நம்பியின் திவ்யசரிதம்.

ii. பெரியபுராணத்தினை யாத்தளித்த சேக்கிழார் சுவாமிகளின் சரிதம்.

iii. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இயற்றிய திருத்தொண்டர்தொகை.

iv. திருவாவடுதுறை சிவஞானசுவாமிகள் அருளிய திருத்தொண்டர் திருநாமக் கோவை.

v. திருத்தொண்டர்களின் குருபூசைத் தினங்கள் அடங்கிய நீண்ட பட்டியல்

vi. திருத்தொண்டர்களின் வருணம் (ஜாதி) பற்றிய தகவல்கள்.

vii. தேவாரத் திருப்பதிகங்களின் அட்ட வணை.

viii. திருப்பதிகங்கள் பாடப்பட்ட திருத்தலங் கள் அவை அமைந்துள்ள இடங்கள் பற்றிய அட்டவணை.

என்பனவே இணைப்பில் சேர்க்கப் பட் டுள்ளன. வெறுமனே பெரியபுராணக் கதை யினைமட்டும் விதந்துரைக்காதுகூடவே அப் புராணத்துடன் தொடர்புபட்ட பல்வேறு விட யங்களையும் மக்களுக்கு வெளிப்படுத்த வேண் டுமென்ற ஆர்வமே இவ்இணைப்புக்களை நாவலர் வசன காவியத்துடன் இணைத்தமைக்குக் காரணமாக இருக்க வேண்டும். பெரிய புராணத் தைப் பாராயணம் செய்பவர்கள் அதன் முதன் னூலான திருத்தொண்டத் தொகையினையும் பாராயணம் செய்வது பயன்மிக்கது எனக் கருதிப் போலும் திருத்தொண்டத்தொகையை முழுமை யாக நாவலர் இணைத்துள்ளார். அதேபோல அறுபத்து மூன்று தனியடியார்களதும் ஒன்பது தொகையடியார்களதும் பெயர்களை மக்கள் ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு வசதியாக சிவஞான சுவாமிகளின் "திருநாமக்கோவை" நூலில் சேர்க்கப்பட்டுள்ளமை நோக்குதற்குரியது.

> "சைவசமயிகள் நாடோறும் சூரியோத யத்துக்கு முன்னே நித்திரை விட்டெழுந்து இயன்ற சுத்திசெய்து விபூதிதரித்து சிவ பெருமானைத் தியானித்துத் தோத்திரஞ் செய்துகொண்டு திருத்தொண்டர் தொகையையேனும் திருத்தொண்டர் நாமக் கோவையையேனும் பாராயணம் செய்துவருதல் உத்தம புண்ணியமாகும்"

எனும் நாவலர் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது. அவை போலவே பெரியபுராணம் கூறும் வகையடியார்கள் அறுபத்துமூவரதும் மாணிக்கவாசகர், சேக்கிழார், மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்போரதும் குருபூசைத் தினங்களை ஒரே பார்வையில் நாவலர் தந்திருப் பதானது சங்கம வழிபாட்டில் ஈடுபடுவோருக்குச் சிறந்த அநுகூலமாக அமையும் எனக் கருதலாம். குருபூசைத் தினத்தினை ஞாபகப்படுத்தும் நோக் கிலும், சமயகுரவர் நால்வரினதும் வயதினை நினைவுகூரும் நோக்கிலும் வழங்கிவந்த தனிப் பாடல்கள் சிலவற்றை நாவலர் பதிவுசெய்திருப் பதும் நோக்கத்தக்கதொரு விடயமாகும். அறு பத்துமூன்று வகையடியார்களையும் அவர்களின் வருண அடிப்படையில் (ஜாதி) பகுத்துத் தந்திருப் பதும், அவரவர் நின்ற வழிபாட்டு நிலைகளின் (குரு, லிங்க, சங்கம) அடிப்படையில் பாகுபடுத்தி வெளிப்படுத்தியிருத்தலுங்கூட பெரியபுராணத் தினை நுணுகிப் படிப்போருக்குச் சிறந்த கைவிளக் காக அமையும் எனலாம்.

பெரியபுராணத்தைத் தோத்திர நூலாகவும் நாவலர் நோக்கியிருந்தார் என முன்னர் கண் டோம். அந்தவகையில் தோத்திர வரிசையில் அடங்கும் தேவார திருப்பதிகங்கள்பற்றிய பல தகவல்களையும், அவற்றின் வகுப்புமுறை, அவற்றை அருளியோர், ஒவ்வொரு திருப்பதிகங் களிலும் உள்ள பாடல்களின் மொத்த எண் ணிக்கை என அவர் தரும் தகவல்கள் ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கில் தேவார திருப்பதிகங்களை நுணுகி நோக்குவோருக்கும் ஆர்வத்துடன் அவற்றைப் படிப்போருக்கும் மிகச்சிறந்த வழிகாட்டியாக உள்ளன. அதுபோன்றே பாடல்பெற்ற திருத் தலங்கள் அவையமைந்துள்ள இடங்கள் குறித்த தகவல்கள் ஆய்வாளர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளதைக் காணலாம். ஒட்டுமொத் தத்தில் பெரியபுராண வசனஇலக்கியம் சைவ சமயிகளுக்கு மிகச்சிறந்ததொரு சமயக் கையே டாக அல்லது களஞ்சியமாக அமைவதை ஒப்புக் கொண்டேயாதல் வேண்டும்.

**சங்கமர் சரிதை**

இந்நூலில் இணைப்பாகத் தரப்பட் டிருக்கும் "குருபூசை" என்னும் பகுதியிலும் "உண்மை நாயன்மார் மகிமை" என்னும் பகுதியிலும் நாவலர் தந்துள்ள விடயங்கள் நுனித்து நோக்கப்பட வேண்டிய முக்கியத் துவத்தைப் பெற்றுள்ளன. இப்பகுதிகளில் மூன்று முக்கியமான விடயங்களை நாவலர் சுட்டிக் காட்டியுள்ளார்.

i. சிவனடியார்களின் பெருமை
ii. சங்கம வழிபாட்டின் சிறப்பும் அதனைச் செய்யும் முறையும்
iii. பெரியபுராணத்துக்கும் அது விதந்து பேசும் சங்கம் வழிபாட்டுக்கும் அவதூறாக பேசுவோருக்கு எதிரான கண்டனம்.

என்பனவே அவையாகும். பெரியபுராணம் கூறும் நாயன்மார்கள் எல்லோருமே செயற்கரிய செய்தவர்கள். இறைவனால் அருட்காட்சி தந்து அருளப்பட்டவர்கள். அப்படிப்பட்ட நாயன் மார்களின் வரலாறு பெரியபுராணமாக உருப் பெறுவதற்கு முன்னமேயே - ஏன் அவர்கள் இவ்வுலகில் பிறப்பெடுப்பதற்கு முன்னமேயே - பரமோதிகாசமாகிய சிவரகசியத்திலே ஒன்பதாம் அம்சத்திலே சொல்லப்பட்டுள்ளதாக நாவலர் எடுத்துக்காட்டுகின்றார். "அங்ஙனம் நாயன் மார்களின் வரலாற்றினைச் சிவரகசியத்திலே எடுத்துரைத்தவர் பரமபதியாகிய சிவபெருமான் அதனைக் கேட்டவர் உலக மாதாவாகிய பார்வதி அம்மையார்" எனப் பெரியபுராணக் கதைக்குப் பழமையும் சிறப்பும் கற்பிக்கக் கருதி நாவலர் நாயன்மார்களின் வரலாற்றைச் சிவரகசியத்துடன் இணைக்கும்போக்கு நோக்கத்தக்கது. இவ்வழக் கத்தினைத் தலபுராணங்களை எழுதிய ஆசிரியர் களிடமும் பரவலாகக் காணமுடியும். தாம் கூறும் புராணக்கதைக்கு உயர்வுகற்பிக்கும் பொருட்டு அல்லது மக்கள் மத்தியில் அதற்கு வரவேற்பினைப் பெற்றுத்தரும் பொருட்டு அப்புராணக்கதை பதினெண் புராணங்களில் அல்லது சிவரகசியத்தில் இன்ன காண்டத்தில் இன்ன சங்கிதையில் சொல்லப்பட்டுள்ளது எனக் கூறுவது வழமை. அங்ஙனம் பதினெண் புராணங் களில் அல்லது சிவரகசியத்தில் அக்கதை சொல் லப்பட்டுள்ளதா இல்லையா எனப் படிப்பவர்கள் பார்த்ததுமில்லை பார்க்க எத்தனித்ததுமில்லை. ஆக, புராணக்கதையில் நம்பிக்கையையும் பக்தி யையும் ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகவே இது அமைந்துள்ளது. இதே முறையை நாவலரும் இங்கு கையாண்டு பெரியபுராணக்கதைக்கு சிவ ரகசியத் தொடர்பு காட்டுகின்றார்.

நாயன்மார்களின் சரிதம் கையளிக்கப்பட்டு வந்த முறையும் தெய்வ சம்பந்தம் நிறைந்தது என்பதையும் நாவலர் நிரூபிக்க முயன்றுள்ளதைக் காணலாம்.

i. பெரிய புராணத்தில் ஓதப்படும் மெய்யடி யார்களின் வரலாற்றினை முதன் முதலாக திருத்தொண்டர் தொகையாகப் பாடிய வர் சுந்தரர். இவர் சிவனின் பிரதிவிம்ப மாகத் தோன்றியவர். திருக்கைலையிலே பிரம விஷ்ணுக்களாலும் தொடமுடியா திருந்த ஆலாகல விக்ஷத்தினைக் கையி லேற்றுச் சிவனுக்குக் கொடுத்தவர். ஆலாலசுந்தரர் என்ற பெயருடன் கைலை யில் சிவனுடன் நெருங்கிய அன்பு பூண்டு வாழ்ந்தவர்.
ii. திருத்தொண்டத் தொகையில் கூறப் பட்ட நாயன்மார்களின் சரிதத்தையும் கூடவே சுந்தரரின் வரலாற்றையும் இருடி களுக்கு எடுத்து மொழிந்தவர் உபமன்யு முனிவர். இவர் சிவனின் பாகத்தே நீங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதிருக்கும் வரம்பெற்ற வியாக்கிரபாத முனிவரின் மகன். திருப்பாற்கடலை உண்டவர். கிருஷ்ணருக்குச் சிவதீட்சை அளித்தவர்.

iii. திருத்தொண்டர்களின் வரலாற்றை திருவந்தாதியாகப் பாடும்படி நம்பி யாண்டார் நம்பிக்கு அருளியவர் திரு நாரையூரிலே எழுந்தருளியுள்ள பொல் லாப்பிள்ளையார்.

iv. மெய்யடியார்களின் வரலாற்றைப் பாட விழைந்த சேக்கிழாருக்குச் சிதம்பரத் திலே அந்தணரும் அடியாரும் கேட்கும் படி "உலகெலாம்..." என அடியெடுத்துத் தந்தவர் சிவபெருமான்.

v. அப்புராணத்தினைக் கேட்கும்படி அநபாயனுக்குக் கட்டளையிட்டவரும் சிவனே.

vi. பெரியபுராணம் செய்த சேக்கிழார்மீது புராணம் பாடியவர் தில்லைவாழ் அந் தணர்களுள் ஒருவரும் திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவர்களுள் ஒருவரு மாகிய உமாபதி சிவாச்சாரியார்.

இவை பெரியபுராணம் என்பது ஒரு திவ்யசரிதை என்பதற்குப் போதுமான ஆதாரங் கள் என்கிறார் நாவலர் பெருமான்.

**குருபூசை**

சிவ சிந்தையுடன் தாமும் வாழ்ந்து இவ்வுல கினையும் உய்யச் செய்தவர்கள் மெய்யடி யார்கள். அவர்களாலே தான் சைவமும் சைவத் தமிழ் பண்பாடும் செழித்தோங்கியது எனக் குறிப் பிடும் நாவலர் அத்தகைய நாயன்மார்களை நினைவுகூருதல் சைவசமயிகளது கடன் என்கி றார். நாயன்மார்களை நினைவு கூருதற்கு அவர் களது குருபூசைத் தினங்களே சிறந்த நாட்கள் எனச் சுட்டிக்காட்டும் நாவலர் அறுபத்து மூன்று வகையடியார்களுடன் கூடவே சந்தான குரவர் நால்வருக்கும், மாணிக்கவாசகருக்கும், மெய்யடி யார்களின் திவ்ய சரிதத்தை உலகுக்களித்த சேக்கிழாருக்கும் குருபூசை செய்தல்வேண்டும் என வலியுறுத்துகின்றார். குருபூசை செய்வது எப்படி என்பது பற்றிய நீண்ட வியாக்கியானம் ஒன்றை அவர் தன் நூலில் இணைத்துள்ளமை நோக்குதற்குரியது.

"அந்த அந்த நாயனாருக்கு அவரவர் முத்திபெற்ற திருநட்சத்திரத்திலே, திருக் கோயிலிலே விசேஷ பூசையும் வேதபாரா யண, தேவாரபாராயணங் களோடு உற்சவ மும் செய்வித்தல் வேண்டும். திருமடத்திலா யினும், தங்கள் தங்கள் வீடுகளிலாயினும்... மகேசுரர்களை அழைத்துவந்து... அத்திரு நட்சத்திரத்திலே முத்திபெற்ற நாயனா ராகப் பாவித்து, பத்திர புஷ்பங்களால் அருச்சனை செய்து, தூப தீபங் கொடுத்து, கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப்பண்ணி, மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் நமஸ்கரித்து திருவமுது செய்வித்தல் வேண்டும்..."

குருபூசை செய்வதற்குப் பொருளில் லாதவர்கள் தங்களாலியன்ற பதார்த்தம் யாதாயினுங் கொண்டுபோய்க் குருபூசை நடக்கும் தானத்திற் சேர்த்தல் வேண்டும். அதுவும் கூடாதாயிற் கறிதிருத்துதல் முதலிய கைத்தொண்டுகளேனும் செய்தல் வேண்டும்..." என்கிறார்.

பெரியபுராணத்தினூடாக சங்கவழி பாட்டையும் அதனூடாக சைவத்தமிழ் பண்பாட்டையும் மீள்கட்டுருவாக்கம் செய்ய நாவலர் முனைவதை இதனூடாகக் கண்டுகொள்ளமுடியும்.

**கண்டனம்**

பெரியபுராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களின் குருபூசை வழிபாடுகளுக்கு எதிராகக் கிளம்பிய எதிர்ப்புக் குரல்களைக் கண்டித்து நாவலர் பிரசாரம் செய்வதை இங்கு காணமுடிகின்றது. நாயன்மார்களை வழிபடு வதற்கு எதிராகக் கலகக்குரல் எழுப்பியோர் பிராமணர்கள். இவர்களைப் "பிரக்ஞையில்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணர்கள்" என நாவலர் சாடுவதைக் காணமுடிகின்றது. நாயன்மார் வழிபாட்டுக்கு எதிராகப் பிராமணர்கள் கூறிய ஒரே கருத்து மெய்யடியார்கள் வேறு வேறு வருணங்களைச் (சாதியைச்) சேர்ந்தவர்கள் என்பதாகும். இதனை நாவலர் ஏற்றுக் கொள்ளவில்லை. மெய்யடியார்களாய் வாழ்ந்து சிவனின் அன்புக்குப் பாத்திரமாகி அவராலே தடுத்தாட்கொள்ளப் பட்ட அடியவர்களிடத்தில் சாதி பார்ப்பது எந்தளவு பொருத்தமானது எனக் கேள்வி எழுப்புகின்றார். "நாயன்மார்களின் வரலாற்றைப் புராணமாகப் பாடிய வேளாள குலத்தைச் சேர்ந்த சேக்கிழாரை சைத்திரியரான அநபாய சோழ மகாராஜா யானை மீதேற்றித் தானே வெண் சாமரம்வீசி வீதியுலாக் கொணர்ந்ததாகவும் அவ்வேளை தில்லைவாழ் அந்தணர்கள் வேதபாராயணம் செய்து சேக்கிழாரை வாழ்த்தியதாகவும் பிராமணரான உமாபதி சிவாசாரியார் சேக்கிழார் புராணத்தில் பாடியிருப்பதைச் சுட்டிக் காட்டும் நாவலர் சாதி, வருணப் பாகுபாடு அன்று பார்க்கப்படாத நிலையில் ஏன் இன்று தூக்கிப் பார்க்கப்பட வேண்டும்" என வாதிடுகின்றார்.

> "இக்காலத்து ஸ்மார்த்தப் பிராமணருள்ளே பலர் அவ்வறுபத்து மூன்று நாயன்மாரை வழிபடக் கூசுகின்றார்கள் அவர்களுடைய உற்சவங்களிலே வேதபாராயணஞ் செய்யாது மறுக்கின்றார்கள் அவர்களுடைய அருமை பெருமைகளைச் சிறிதும் சிந்தியாது அவர்களை வேண்டியவாறே நிந்திக்கின்றார்கள். ஐயையோ இது எவ்வளவு அதிபாதிகம்!... பெரிய புராணத்திற் கூறப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய உற்சவங்களிலே வேதபாராயணஞ் செய்யலாகாதென்று சிறிதும் பழிபாவங்கட்கு அஞ்சாது பிதற்றுதல் எவ்வளவோரறியாமை"
> என்கிறார்.

தனது நீண்ட கண்டனத்திலே சங்கம வழிபாட்டை இகழ்ந்த பிராமணரைக் கடுமையாகச் சாடும் நாவலர் சங்கராச்சாரியார் முதலானோர் சாதிக்கு மேலாகச் சிவதொண்டையே மதித்து நாயன்மார்களைத் தம் நூல்களில் போற்றுவதை எடுத்துக் காட்டுகின்றார். ஈற்றிலே

> "சைவசமயிகளே நீங்கள் இவ்வுண்மைகளெல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்தறிந்து சிவபெருமானிடத்தும் உண்மை நாயன்மாரிடத்தும் சிவாகம விதிப்படி பக்தி செய்தொழுகக் கடவீர்கள். இவ்வுண்மைநிலைக்கு மறுதலைப்பட்டவர்களைக் கண்டால் அவர்கள் பொருட்டிரங்கி அவர்களுக்கு நல்லறிவுச் சுடர் கொழுத்தக் கடவீர்கள். குருநிந்தை, சங்கமநிந்தை முதலியவற்றைக் கேட்டு எரிவாய் நரகத்துக்கு இரையாகா வண்ணம் அவர்கள் கூட்டத்தை ஒழித்துவிடக் கடவீர்கள். இப்படிச் செய்யாது மதிமயங்கி அவ்வதி பாதகர்களைப் பெரியோர்களெனக் கொண்டு வழிபட்டொழுகுவது பாவம்! பாவம்!"

என நாயன்மார்களை நிந்தனை செய்வோரைக் கடுஞ்சொற்களால் நாவலர் சாடுவதைக் காணலாம். பெரியபுராண சூசனத்திலும் இக்கண்டனத்தினை இன்னொருவகையாக நாவலர் செய்திருப்பதை அந்நூலில் கண்டுணர்க.

### முடிவுரை

சைவத்தமிழ் மக்களின் பெருஞ் சொத்தாக விளங்கும் பெரியபுராணம் அது தோன்றிய காலத்திலிருந்து இற்றைவரை சமய உணர்வையும் பண்பாட்டுப் பெருமையினையும் மக்கள் மத்தியில் ஊட்டி வந்திருப்பதைக் காணலாம். இதனால் தான் தமிழ்நாட்டில் மட்டுமன்றி சைவத் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் பெரியபுராணம் தன் செல்வாக்கை நிலைநாட்டியுள்ளது. ஈழமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஈழத்தமிழர்கள் வரலாற்றையும் அவர்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய வரலாற்றையும் தெளிவாக அறியக்கூடிய காலம் முதற்கொண்டு பெரியபுராணத்தின் செல்வாக்கைப் பலநிலைகளிலும் அவதானிக்க கூடியதாக இருந்தது. குறிப்பாக, அதன் தேவையும் பயன்பாடும் ஈழத்தில் சைவத்தமிழ் எழுச்சி மேற் கிளம்பிய காலங்களில் வெகுவாக உணரப் பட்டு வந்ததைக் காணலாம்.

காலத்தின் தேவை அந்நூலை மையப் படுத்தி - ஒரு வகையில் அதனை எளிமைப்படுத்தி - நூல்களையாக்க நாவலரைத் தூண்டிற்று. தன் நூல்களில் பெரியபுராணத்தை, அதையாத்த சேக்கிழாரை விதந்தும் வணங்கியும் நாவலர் கூறும் கருத்துக்கள் நோக்கத்தக்கவை. பெரிய புராண உட்பொருளை அதன் முக்கியத்துவத்தை கற்றோரும் மற்றோரும் புரிந்துணரச்செய்ய வேண்டும் எனும் ஆர்வ மிகுதி நாவலரின் படைப்புக் களினூடாக இளையோடுவதைக் கண்டுகொள்ளலாம். பெரியபுராணத்தை அதில் போற்றப்படும் நாயன்மார்களை நிந்திப்போரை அல்லது அவர்களைப் புறந்தள்ளுவோரைக் கண்டு நாவலர்கொள்ளும் சீற்றமும் அதனடிப் படையில் செய்யும் கண்டனப் பிரசாரமும் கவனத்திற் கொள்ளவேண்டியவை.

அவைதிகப் பிடிப்புக்குள் மீண்டும் மக்கள் சென்று விடக்கூடாது என்ற நோக்குடன் கால மறிந்து சேக்கிழார் தந்த செல்வமே பெரிய புராணம் என்பது உலகறிந்த உண்மை. அப் பெரியபுராணம் அவைதிக இருளையும் அஞ்ஞான மூட்டத்தினையும் அகற்றும் ஆற்றல் படைத்தாயினும் காலத்தின் தேவைக்கேற்பவும் மக்களின் விருப்புணர்வு, ஏற்புணர்வு என்பன வற்றிற்கும் ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டியதாயமைந்தது. நாவலர் இதனையே செய்தார். செய்யுள் நடையிலமைந்த பெரிய புராணம் ஒரு சிலரால் மட்டும் படனம், பாரா யணம் செய்யப்பட்டு வருவதை அவர் விரும்ப வில்லை. அது பெரும்பான்மையான சைவத் தமிழர்களின் கைகளுக்குச் செல்ல வேண்டும் என விரும்பினார். காலத்தின் தேவையாகவும் அது இருந்தது. இதனால் பெரியபுராணத்தினை உரைநடையிலாக்கினர்.

எனினும், பெரியபுராணம் எனும் கடலை கற்றுணர்வதற்குரிய ஒரு வழிகாட்டியே தனது உரைநூல் என்பதை அவர் ஒருபொழுதும் மறந்துவிடவில்லை. தனது நூலின் முகவுரையில் பரவலாக இக்கருத்தை அவர் பதியவைத்துச் செல்வதைக் காணலாம். தனது இத்தகைய முயற்சிகளினூடாகப் பெரியபுராணத்துக்குப் புதிய பரிமாணத்தை, புதிய சிறப்பை, புதிய செல்வாக்கைத் தேடித்தர நாவலர் முயன் றுள்ளார். அவரது முயற்சி ஈழத்தில் பெரிய புராணப் படிப்புக்கும் பாராயணத்திற்கும் புதுவாழ்வைத் தேடித்தந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இற்றைவரை ஈழத்தில் பெரியபுராணம் ஆலயங்களிலும், மடங்களிலும், பாராயணம், படனம் செய்யப்படுவதற்கு நாவலரின் பெருமுயற்சி வழிவகுத்தது எனலாம்.

நாவலரின் அடியொற்றி பெரியபுராணத் தினை மக்கள் மத்தியில் புதிய வடிவில் பிரசித்தப்படுத்த வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டுள்ளது. சமூகமாற்றமும், சைவம் இன்று புதிதாக எதிர்கொள்ளும் சவால்களும், சமய இலக்கியங்கள் தொடர்பான மக்களின் ஏற்புணர் வின் மாற்றமும் இத்தகைய சிந்தனையைத் தூண்டி நிற்கின்றன. சைவத்தமிழ் இலக்கியங் களை இகழ்பவர்கள் ஒருபுறமிருக்க அவற்றைப் படிப்பவர்களும் அருகிப்போயுள்ளனர். பலர் சைவத்தமிழர்களாய் வாழ்ந்தும் பெரியபுராணம் முதலான இலக்கியங்களை அறியாதவர்களாய் உள்ளனர். அவர்களுக்கு சைவத்தின் சிறப்பை, சைவத்தமிழ் பண்பாட்டின் பெருமையை எடுத்துக்காட்ட வேண்டியது மிக அவசியமான தாகும். நாவலரின் வழிநின்று பெரிய புராணத் தைப் பிரசித்தப்படுத்தும் புதிய வழிகளைத் தேடவேண்டிய தேவையைக் காலம் இன்று திணித்துள்ளது. அத்தகைய வழிமுறைகளை இம்மகாநாடும் தேடும் என எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்:

1. தட்சிணகைலாச புராணம், (பதி) பத்மநாதன். சி, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1995, கடவுள் வாழ்த்து, பாடல்: 07
2. திருக்கரசைப்புராணம், (பதி) அகிலேசபிள்ளை, கோணேஸ்வரா பதிப்பகம், திருகோணமலை, 1952, கடவுள் வாழ்த்து, பாடல்கள்: 5-9
3. கண்ணகி வழக்குரை, (பதி) கந்தையா, வீ. சி., காரைதீவு இந்துசமய கலாசார அபிவிருத்திச் சங்கம், மட்டக்களப்பு, 1968, கடவுள் வாழ்த்து, பாடல்: 02
4. கணபதிப்பிள்ளை, சி., கந்தபுராண கலாசாரம், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1999, பக்கம்: 18
5. ஆறுமுகநாவலர், பெரியபுராண வசனம், வித்தியாநுபாலனயந்திரசாலை, சென்னை, ஆண்டு இரௌத்திரி, 12 ஆம் பதிப்பு, பக்கம்: 01
6. பெரியபுராண வசனம், பக்கம்: 02
7. பெரியபுராண வசனம், பக்கம்: 02
8. பெரியபுராண வசனம், பக்கம்: 02
9. ஆறுமுகநாவலர், பெரியபுராண சூசனம், வித்தியாநுபாலனயந்திரசாலை, சென்னை, 1949, பக்கம்: 09-10
10. பெரியபுராண வசனம், பக்கம்: 10
11. பெரியபுராண வசனம், பக்கம்: 03
12. பெரியபுராண வசனம், பக்கம்: 04-05
13. பெரியபுராண வசனம், பக்கம்: 03
14. பெரியபுராண வசனம், பக்கம்: 05
15. பெரியபுராண வசனம், பக்கம்: 26
16. பெரியபுராண வசனம், பக்கம்: 27
17. பெரியபுராண வசனம், பக்கம்: 27-28
18. பெரியபுராண வசனம், பக்கம்: 32-33
19. பெரியபுராண சூசனம், பக்கம்: 08
20. பெரியபுராணவசனம், பக்கம்: 28-31
21. பெரியபுராண வசனம், பக்கம்: 28
22. பெரியபுராண வசனம், பக்கம்: 31
23. பெரியபுராண சூசனம், பக்கம்: 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தினதும், தென்மராட்சியின் இடங்கள் சிலவற்றினதும் பெயர் ஆய்வு

(கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம் அவர்களின்
நன்றி: *ஈழத்து இடப்பெயர்வு ஆய்வு* எனும் நூலிலிருந்து)

**யாழ்ப்பாணம்**

யாழிசைப்பாணர் மரபினனான யாழ்பாடி என்பவன் நரசிங்கராசனைப் பாடி மணற்றியைப் பரிசாகப் பெற்றான் என்பதும், அவ்விடமே பின்னாளில் யாழ்ப்பாணம் என வழங்கப்படுமிடம் என்பதும் மரபுவழியாக வழங்கி வரும் செய்திகளாகும். இதுபற்றி யாழ்ப்பாண வரலாற்றுத் தமிழ் நூல்களும் மரபுக்கதைகளும் விளக்கம் கூறுகின்றன. கைலாயமாலை இந்நிகழ்வுபற்றிக் கூறும் பகுதி ஈண்டு நோக்கத்தக்கதாம்:


*"பாவலர்கள் வேந்தன் பகருமியாழ்ப் பாணன்*
*காவலன்றன் மீது கவிதைசொல்லி நாவலர்முன்*
*ஆனகவி யாழி னமைவுற வாசித்திடலும்*
*மானபரன் சிந்தை மகிழ்வாகிச் - சோனைக்*
*கருமுகி னேருங் கரன் பரிசிலாக*
*வருநகர மொன்றை வழங்கத் - தருநகரம்*
*அன்றுமுதல் யாழ்ப்பாண மானபெரும் பெயராய்*
*நின்ற பதியி னெடுங்காலம்..."*

(கைலாயமாலை: 59 - 67)

இந்நூற் செய்திகளை அடியொற்றி எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலையிலே (பக்: 23 - 24) இக்கதை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"அக் காலத்தில் சோழ நாட்டிலிருந்து இரண்டு கண்ணும் குருடனாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கடக நகரிலிருந்து அரசாட்சி செலுத்தும் வாலசிங்க மகாராசன் பேரிற் பிரபந்தம் இயற்றி, யாழ் வாசித்துப் பாடினான். அரசன் அதைக் கேட்டு மகா சந்தோஷமாய் அவனுக்கு பரிசிலாக இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடர் என்னும் இந்நாட்டைக் கொடுத்தான். யாழ்ப்பாணன் இதற்கு யாழ்ப்பாணம் என்று பெயரிட்டு இவ்விடத்தில் வந்திருந்து, வடதிசையில் சில தமிழ்க் குடிகளை அழைப்பித்துக் குடியேற்றினான்.

"மணற்றிடர்" என்ற பெயர் யாழ்பாடி என்ற கதையுடன் தொடர்புடையது. இக் கதை மிகப் பிந்திய காலத்தது என்கிறார் சுவாமி ஞானப்பிரகாசர். அந்தக்கவி வீரராகவக்கவியையும் பாணர் வழிவந்த யாழ்பாடியையும் ஒருவராகக் கருதியதாலேயே அவர் இவ்வாறு கூறினார். மேலும் செங்கடகல நகரின் தோற்றமும் பிற்காலத்ததாக இருப்பதும் அவர் கூற்றுக்குத் துணையாகலாம். பண்டைக் காலம் முதலாகத் தமிழ் நாட்டிலிருந்து பல் வேறு குலத்தினரும் தொழில் துறை மாந்தரும் ஈழத்தில் குடியேறியுள்ளனர் என்பது வரலாற்றுச் செய்தி. அவ்வகையில் "யாழ்ப்பாணர்" என்ற பிரிவினர் மணற்றிடர் என்ற பகுதியில் குடியேறி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து, தம் குலப்பெயரையே இவ்விடத்திற்கு இட்டு வழங்கியிருத்தல் இடப்பெயர் ஆய்வு வழியாகப் பெறப்படும் உண்மையாகும். எனவே யாழ்ப் பாணர் + அகம் = யாழ்ப்பாணம் என மக்கட் பெயரடியாக இவ்விடப்பெயர் தோற்றம் பெற்ற தென்பது பொருத்தமாகும்.

இவ்வாறாக யாழ் + பாணர் அகம் + என்னும் தனித் தமிழ்ச் சொற்கள் இணைந்து ஆக்கம் பெற்ற தூயதமிழ்ப் பெயரை சுவாமி ஞானப்பிரகாசர் (1928:17 - 18) சிங்களச் சொல்லாகிய "யாப் பாபட்டுன" என்பதன் திரிபென்று கூறினார். இதே கருத்துடையவரே பரணவிதான (S.Paranavithana: 1961:202) என்பது குறிப்பிடத் தக்கது. இது பற்றி கா. இந்திரபாலா (1970: 101) கூறும் கருத்து ஈண்டுப் பொருத்தமாகிறது.

> "யாழ்ப்பாணம் என்னும் பெயர் சிங்களப் பெயர் ஒன்றின் திரிபு என்று திட்ட வட்டமாக நிறுவுவதற்குச் சான்றுகள் போதா. வெறும் வெளித்தோற்ற ஒன்றுமையைக் கொண்டு இரு இடப் பெயர்களுக் கிடையில் தொடர்பினை ஏற்படுத்தி, ஒன்றிலிருந்து மற்றது பெறப்பட்டது என்று கூறுவது, இடப்பெயர் ஆராய்ச்சி முறைக்கு மாறானதாகும். ஓர் இடப் பெயருக்குச் சரியான விளக்கத்தைக் கொடுப்பதற்கு அப்பெயரின் மிக முற்பட்ட வடிவங்களைப் பழைய ஆதாரங் களில் இருந்து பெற்றுக்கொள்வது அவசியமாகும். தற்காலத்தில் ஒரு வடிவத்தை அடைந்துள்ள பெயர் ஆரம்பத்திலும் அதே வடிவத்துடன் இருந்திருக்க வேண்டுமென்று பொதுவாகக்கொள்ளமுடியாது".

யாழ்ப்பாணத்திற்கு "மணவை" என்ற பெயரும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. கி.மு பதினைந்தாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலே நாகர்களுடைய அரசு இருந்தமைக்குச் சான்றாகப் பாரதக் கதையைத் தொடர்புபடுத்துகின்றார் செ. இராசநாயகம் (1926: 33). இவர் தம் நூலிற் கலிங்கத்திற்கு அப்பாலுள்ள மணிபுரம் என்னும் இடத்தில் வசித்த இளவரசி ஒருத்தியை அருச்சுனன் மணம் புரிந்த செய்தியைச் சான்றாகக் கொண்டு மணிபுரத்தை யாழ்ப்பாணம் என அடையாளம் காட்டியுள்ளார். கி.பி 14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட செகராசசேகர மாலை என்ற சோதிட நூலிலே "மணவை" என்ற பெயர் வருமாறு கூறப்படுகின்றது.



*"மன்னர்மன்னு செகராசசேகரன் மணவையாரிய வரோதயன்"*

(பழவினைப் படலம்: 10)

*"தென்டிரைசூழ் மணவையர்கோன் செகராச சேகரமன்"*

(யாத்திரைப் படலம்: 31)

இந்த மணவை மணிபுரத்தினின்று தோன்றியது என்றும், புலவர்கள் மலிபுரம் அல்லது மணவூர் என்னும் பெயரை மணவை எனச் சுருக்கினர் என்றும் இராசநாயம் (1926: 7) கூறுவதும் நோக்கத்தக்கது. ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்குணகரைநாடு, ஏழ்குறும் பனைநாடு என்பன கடற்கோள்களால் அழிந்த தமிழகத்தின் பகுதிகள் எனக் கருதப்படுகின்றன. இவற்றில் வரும் "பனைநாடு" என்பது யாழ்ப் பாணத்தைக் குறித்தது என்ற கருத்தும் நிலவு கிறது. பழந்தமிழ் நாகரிகத்தில் குமரிக் கண்டம் 49 நாடுகளைக் கொண்டிருந்ததென்றும், பின்னாளில் அவை கடற்கோள்களால் அழியுண்டு போயின என்றும் இறையனார் அகப்பொருளுரை கூறுகின்றது. அவற்றுள் இடம் பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழ்குறும்பனைநாடு" என்பதன் ஒரு பகுதியே பனைநாடு. பனைநாடு ஏழு பெரும் மாநிலங்க ளாக இருந்தது. அதில் ஒரு நிலமே யாழ்ப் பாணத்தை உள்ளடக்கிய நிலப்பரப்பாகும். இதன் சுற்றாடலைக் கடல் கொண்டதால் அஃது அழிந்துவிட்டது. பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள..." (சிலப்பதிகாரம்: காடு காண்காதை: *19 - 20*) என்ற பாடலாற் கடற்கோள் பற்றிய செய்தியும் அறியப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைச் சிலர் "ஏழ்ப்பாணம்" என உச்சரிக்கக் கேட்கலாம். "ஏழ்பனைநாடு" என்பதிற் சுட்டப்படும் ஏழ் என்பது ஈழத்துடன் தொடர்புடையதாகலாம். ஏழ்பனைநாடு என்ற தொடர் யாழ்ப்பாணத்தையே குறிக்கின்றது என்ற கருத்தும் உள்ளது (A. Veluppillai: 1980:62-63) ஏழ்பனை என்பதே யாப்பானே எனச் சிங்களத்தி லாகி, அதனிலிருந்து யாழ்ப்பாணம் எனத் தமி ழாக்கப்பட்டிருக்கலாம் எனவும் சிலர் கருதுவர். கடற்கோள்களால் அள்ளுண்ட பஃறுளியாறும், குமரிக்கோடும் அவற்றிடைப்பட்ட குமரி நிலப் பரப்பும்போக, எஞ்சிய பகுதியே ஏழ்பனை நாடாம் யாழ்ப்பாணமும் அதனோடொட்டிய தென்னிலங்கையுமாகும். தென்னிலங்கை இடப் பெயர்கள், அங்கு வாழ் மக்களின் ஆட்பெயர்கள் ஆகியவற்றை ஆராயும்போது இவ்வுண்மை புலப்படுகின்றது.

யாழ்ப்பாணம் என்ற பெயர் பற்றி ஆராயும் போது "நாகதீவு" என்ற பெயரையும் நோக்குதல் வேண்டும். "இலங்கையின் பண்டைக் காலக் குடிகளான நாகர் நாக வழிபாட்டை மேற் கொண்டிருந்தனர். மகாவம்சத்திலோ அல்லது வேறு எந்த ஒரு நூலிலோ நாகர் எப் பகுதியில் வாழ்ந்தார்கள் எனக் கூறப்படவில்லை. நாக அரசர்களிடையே நடைபெற்ற இரத்தின அரசிருக்கை தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் புத்தர் நாகதீவுக்கு வந்தார் என மகாவம்சம் (*1:47 - 70*) கூறுகிறது. நாகர் வாழ்ந்த இடம் நாகதீவு என்கிறார் எச்.பாக்கர் (H. Parker 1909:14) ஆயினும் நாகதீவு என்பது எந்த இடத்தைக் குறித்தது என்பது எவருக்கும் திட்ட வட்டமாகக் கூற முடியாதிருப்பதால் அதனைப் பயன்படுத்திக்கொண்டு பலரும் பலவித கருத்துக்களைத் தெரிவித்தனர். நாகதீவு என்பது யாழ்ப்பாணக்குடா நாட்டைக் குறித்தது என்கி றார் நிக்கலஸ் என்ற அறிஞர் (C.W Nicholas: 1959: 83).

யாழ்ப்பாணம் என்பது தனித்தமிழ்ப் பெய ரென்பதும், அதன் பெயர்த் தோற்றத்தில் மணற்றிடர், மணவை, யாழ்பாடி, ஏழ்பனைநாடு ,நாகதீவு என்ற பெயர்களுடனான விளக்கங்கள் சேர்த்துக் கூறப்படுகின்றன என்பதும், சிலர் "யாழ்ப்பாணம்" என்ற பெயர்த்தோற்றத்திற்குச் சிங்கள மூலம் கற்பிக்க முயன்றதும் மேலே விளக்கப்பட்டன.

**அல்லாரை**

அல் +ஆரை = அல்லாரை. இது கச்சாய்ப் பகுதியில் அமைந்துள்ளது. கச்சாயில் கோட்டை யும் துறையும் அமைந்திருந்தன. அத்தோடு கச்சாய் தொல்லியற்றளமாகவும் கருதப்படுகின் றது (இரகுபதி: *1983*). இப்பின்னணியில் அதன் அயற்பதியாகிய அல்லாரை என்பது கோட்டை (ஆரை) அல்லது பாதுகாப்பு அற்ற இடம் என்ற பொருளில் இப்பெயர் வழக்குப் பெற்றிருக்கலாம்.

அல்லாரை = ஒருவகை மரம். எனவே பெயரடியாகவும் இவ்விடப் பெயர் ஆக்கம் பெற்றிருக்கலாம். மல்லாகம் என்ற ஊரிலும் அல்லாரை என்ற குறிச்சிப் பெயருண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

**பாலாவி**

கச்சாய் பகுதியிலும், பூநகரிப் பகுதியிலும் பாலாவி என்ற இரு இடங்களுள. கச்சாய் ஊருக்குக் கிழக்கே பாலாவி என்ற இடம் அமைந் துள்ளது. பால் + ஆவி = பாலாவி. இங்கு மந்தை வளர்ப்பு பெரிதும் காணப்படுகின்றது. ஆனால் குளம் எதுவும் இங்கில்லை. பண்டைநாள் முதலாக இங்கு பால் மாடுகள் நிறைந்து காணப் பட்டதால் இப்பெயரேற்பட்டதென்பர். இவ் வூருக்குத் தெற்கே கடற்பகுதி உள்ளது. சூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பத்தினால் கடல் நீரானது ஆவியாகி மேலெழுகின்ற காட்சி மாலை வேளையிலே தினமும் இங்கு இடம்பெறும். பால் போன்ற ஆவி மேலெழுமிடம் என்ற காரணப் பெயராக பாலாவி என்ற இடப்பெயர் தோற்றம் பெற் றிருக்கலாம்.

**தனங்களப்பு > தனங்கிளப்பு**

தனக்காரர் + களப்பு = தனங்களப்பு > தனங்கிளப்பு. களப்பு > கிளப்பு என மாற்றம் பெற்றுள்ளது. தனக்காரர் என்போர் யானை கட்டுவோர் ஆவர். ஆனையிறவிலிருந்து பத்து மைல் தூரத்தில் இவ்விடம் அமைந்திருப்பதும், பண்டை நாளில் இங்கு யானை வணிகம் நடைபெற்றமையும் கருத்திற் கொள்ளத்தக்கன. களப்பு என்ற பெயரீறு பெற்றிருப்பதற்கு ஏற்ப இவ்வூரில் நீர்நிலைகளும் அமைந்து காணப் படுகின்றன. S. W குமாரசுவாமி (1917:67) இவ் விடப்பெயருக்குச் சிங்கள மொழி வழி விளக்கம் வருமாறு கூறுவர்.

> சிங்களத்தில் "தண" என்பது புல், குழை என்பனவற்றையும், "தன்" என்பது நாவல் மரத்தையும் சுட்டும் சொற்களாகும். இவ்விடப் பெயர் சிங்கள "தன்" என்ற சொல்லடியாகப் பிறந்ததென்றும், தன் + கலப்பு என்ற சிங்களப் பெயருக்குப், பண்டைத்தமிழ் மக்கள் தம்மொழி முறைமைபற்றி அம் சாரியை பெய்து தனங்கலப்பு என்னும் நாமரூபத்தைப் பிறப்பித்து, பின்னர் அதனை தனங்களப்பு அல்லது தனங்கிளப்பு எனத் திரித்து வழங்குவராயினர் போலும்.

இடப்பெயர்களின் தோற்றத் தன்மையை யும், அப் பெயர்களின் சொற்பொருள், இடச் சூழல் என்பன பற்றியும் அறியாதார் கருத்து இவ்வாறமைதல் இயல்பே.

**தவசிகுளம்**

இது கொடிகாமம் பகுதியிலுள்ள ஒரு சிறு பகுதியாகும். தவசி என்ற பெயரினர் ஒருவர் இங்கு வாழ்ந்து, குளம் ஒன்றை வெட்டுவித்தார். அவர் பெயரால் இடமும் குளமும் வழங்குவதாயின. ஞானவைரவர் கோயில் ஒன்றும் இங்குள்ளது.

**கெருடாவில்**

கருடன் > கெருடன் > கெருடா + வில் = கெருடாவில். கருடப் பறவையை வழிபட்ட இடம், பின்னாளில் கெருடாவில் எனப் பெயர் பெறுவதாயிற்று. வடமராட்சியிலும் தென்ம ராட்சியிலும் கெருடாவில் என்ற இரு இடங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. பண்டைநாள் முதலாக வடஇலங்கையில் பொன்னாலை கிருஷ்ணன் கோயிலும், வல்லிபுர ஆழ்வார் கோயிலும் புகழ்பெற்று விளங்கலாயின. அப் பின்னணியில் கருடன் முதன்மைபெற்று, இவ் விடங்கள் கருடன்வில் எனப் பெயர்பெற்று, பின்னாளில் கெருடாவில் எனத் திரிபடைந்து வழங்கியிருக்கலாம். பருத்தித்துறையிலிருந்து கடற்கரையோரமாய் பொன்னாலைக்குச் செல் லும் வழியில் வல்வெட்டித்துறைக்கு மேற்கே இரண்டு மைல் தொலைவில் கெருடாவில் அமைந்துள்ளது.

சாவகச்சேரிப் பகுதியிலுள்ள ஒரு குளத்தி னருக்கே கருடப் பறவை ஒன்று வாழ்ந்து வந்த தென்றும், அதனை அப் பகுதி மக்கள் வழிபட்டு வந்தனர் என்றும், அதனால் அவ்விடமும் கருடாவில் எனப்பெயர் பெற்று, பின்னர் கெருடாவில் என மருவிற்றென்பர்.

**நுணாவில்**

நுணா + வில் = நுணாவில். நுணா = மஞ்சணாறி மரம், தணக்கு மரம். நுணல் = தவளை நுணவை = எண்ணோலை, மா (துரைத்தமிழ்ப் பேரகராதி: 2: 74). சாவகச்சேரி நகரின் மேற்குப் புறமாக நுணாவில் அமைந்துள்ளது. இங்கு நுணாமரங்கள் பெரிதும் காணப்பட்ட நிலையில் இப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. மறவர் நுணாவில் என்ற குறிச்சிப் பெயரும் இங்கு உள்ளது. மறவன் புலத்து மறவர்கள் சென்று குடியேறி வாழ்ந்த பகுதி, இப்பெயரைப் பெற்றிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணாவை என்பது எள் எனும் தானியத்தைக் குறிக்கும் சொல்லாகவும் வழங்குகின்றது. நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நுணாவில், எள்ளுக்கும் நல்லெண்ணெய்க்கும் பெயர்பெற்றிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில், சுத்தமான நல் லெண்ணெய் நுணாவிலிலிருந்து பெறப் பட்டது எனப் போர்த்துக்கேயர் குறிப்பிட்டி ருந்தனர். காலப்போக்கில் இவ்விடப்பெயர் "நுணாவை" எனத் திரிபடைவதாயிற்று. எனவே இது காரணப் பெயர் என்கிறார் கவிஞர் வி. கந்தவனம் (1971:11).

**மட்டுவில்**

நீர்மட்டமாக அல்லது மட்டுமட்டாக (சிறிதளவு) நிறைந்து நிற்கும் குளம் என்ற பொருள் விளக்கமும் இப்பெயருக்குக் கூறலாம். சிறுசிறு குளங்கள் பல இங்குக் காணப்படுதலும் குறிப்பிடத்தக்கது. மட்டு = தேன். இவ்வாறே மட்டக்களப்பு என்பதற்கும் மட்டு + களப்பு எனப் பிரித்து தேன்பாயும் களப்பு, மட்டமான களப்பு எனப் பெயர் விளக்கம் கூறப்படுவதும் நோக்கத் தக்கது. மட்டுவில் முன்னர் பெருங் காடாக இருந்த வேளையில், இங்கு பெரிய அளவிலே தேன் சேகரிக்கப்பட்டதென்றும், அதனால் தேன் நிறைந்த இடம் என்ற பொருளில் மட்டுவில் பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர்.

சாவகச்சேரியை அடுத்து நுணாவில், மந்துவில், சரசாலை, கைதடி, கல்வயல் ஆகிய இடங்களுக்கு இடையே அமைந்துள்ள தோட்டப் பயிர் வளங்களுடைய குடியிருப்புப் பகுதியே மட்டுவில் ஆகும். இவ்வூரின் கிழக் கெல்லையில் ஐஞ்சந்தி ஒன்றுள்ளது. இதனைக் கனகம்புளி யடிச் சந்தி என்றும் வழங்குவர். அச்சந்தியி லிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித் துறை, சுன்னாகம், நுணாவில் ஆகிய ஊர்களுக் குத் தெருக்கள் செல்கின்றன.

"சந்திரபுரம்" என முன்னர் இவ்வூர் வழங்கி யிருக்க வேண்டும் என்பது மட்டுவில் ம. க. வேற்பிள்ளை பாடிய "ஈழமண்டல சதகம்" என்ற நூலால் அறியப்படுகிறது. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தின் பின்னரே இவ்விடத்திற்கு மட்டுவில் என்ற பெயர் நிலைபெற்றதென்ற கருத்தும் நிலவுகிறது. சோழர்காலத்தில் "மட்டுவாள்" என்ற பெயரால் இவ்விடம் வழங்கப்பட்டமை 3ஆம் இராஜராஜசோழனின் கல்வெட்டொன்றினால் அறியப்படுகின்றது. இங்கு சோழரின் படைகள் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன எனவும் அக்கல்வெட்டுக் கூறுகின்றது. சோழர் காலத்தில் இப்பகுதியில் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வுகள்பற்றி ஆராய்ந்தறியத் தக்க சான்றுக ளுண்டா என்பதும் அறியப்பட வேண்டியதாகும். மட்டுவிலின் வடக்கு எல்லையில் "ஆயம்" என்ற ஓரிடமுண்டு. போர்த்துக்கேயர் காலத்தில் இவ்விடத்தில் வரி (ஆயம்) அறவிடப்பட்டது. இதனால் ஆட்சியாளரின் தொடர்பினால் ஆயம் என்பது காரணப் பெயராயிற்று. ஆயத்தடி என்னுமிடத்தில் சுமைதாங்கிக் கட்டிடம், கேணி என்பனவும் உள்ளன. இதுபோன்றே இவ்வூரின் வடபாலுள்ள வங்களாவடி, தோப்பு என்ற இடங் களும் ஆட்சியாளருடன் தொடர்புடையன வாகும்.

இங்கே குட்டிச்சிதம்பரம், கல்லுமூலை, கப்பல் தோட்டம் முதலிய குறிச்சிகளுமுள. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் போர் வான்ஊர்தி ஒன்று பழுதடைந்து இவ்வூரில் வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அவ்வான் ஊர்தி வீழ்ந்த இடம் கப்பல் தோட்டம் என வழங்கு கிறது. இவ்வூரிலுள்ள பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தின் பெருமையை விளக்கும் வகையில் பல்வேறு நாட்டார் கதைகள் வழங்குகின்றன. மேலும் இங்கே உப்புக்கிராய், முதலைக்கிராய், பெரியகிராய், சின்னக்கிராய், மருதங்குளம் முதலான இடங்களுமுள்ளன. கிராய் என்பது நீர் நிலையைக் குறிக்கும் சொல் ஆகும். தமிழகத்துச் சிதம்பரக் கோயிலுக்குக் கொடையாக வழங்கப் பட்ட கோயிற் காணிகள் இவ்வூரிலுள்ளன. அக் காணிகள் உள்ள பகுதி குட்டிச் சிதம்பரம் என வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில் + நுணாவில் ஆகிய ஊர் களுக்கு இடைப்பட்ட பகுதி "மட்டுவில் நுணாவில்" என்றபெயரில் கிராமசேவகர் பிரிவாக இடம் பெற்றுள்ளது. இங்கு வேரக்கேணி என்ற குறிச்சி காணப்படுகிறது. வேரல் என்பது மூங்கில். எனவே வேரக்கேணி என்பது மூங்கிற் செடிகள் செறிந்த குளம் என்பது பொருளாகும். இங்கு பெரிய மூங்கில் காடுகள் முன்னர் இருந்ததாகக் கூறுவர். மருதமரமும் குளமும் உள்ள இடம் "மரதங்குளம்" எனப் பெயர் பெற்றுள்ள இடமும் இங்கே உள்ளது.

**மந்துவில்**

மந்து + வில் = மந்துவில். மந்து என்பது ஒரு வகைப் புல், பற்றைக் காடு என்பது பொருள். மந்து ஒருவகைச் செடி. காவிளா, மந்துச்செடி என்பவற்றைப் புகையிலைப் பயிர்ச் செய்கை தொடங்க முன்பு தோட்ட நிலத்தில் புதைத்து செயற்கைப் பசளை உண்டாக்குவது யாழ்ப் பாணத் தோட்டக்காரரின் வழக்கம். அந்த மந்துச் செடிகள் இங்கே மிகப் பெரிய அளவில் வளர்ந்து காணப்பட்ட தன்மையினால் இவ்விடத்திற்கு மந்துவில் என்ற பெயர் ஏற்பட்டதென்பர்.

சிலர் மந்துவில் என்பதை மந்தை + வில் எனப் பிரித்து மந்தைகள் பெரிதும் வளர்க்கப் பட்ட இடம் எனக்கொண்டு, இவ்விடப் பெயர் மந்தைவில் என வழங்கி, மந்துவில் என மருவிற் றென்பர். இவ்விடம் பழைமைவாய்ந்த குடி யிருப்புப் பகுதியாக விளங்கிற்று என்பதற்கு ஆங்காங்கே கிடைத்திருக்கும் தொல் பொருட் கள் சான்று பகர்கின்றன. இங்கேயுள்ள வீரக்காடு என்ற இடத்தில் 25அடி உயரமான கட்டிட அழிபாடுகளைக் கொண்ட மணற்குன்று காணப் படுகிறது. சுவாமி ஞானப்பிரகாசர் (1921:119) இதனை நேரிற் பார்வையிட்டு தனது கருத்துக் களை வெளியிட்டுள்ளார். குவைறோஸ் பாதிரி யார் (1930), இங்கே கோட்டை ஒன்று அமைக்கப் பட்டிருந்தமையும், அது யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் கரந்துறையும் கோட்டையாக இருந்தது என்றும், சங்கிலி மன்னன் கோப்பாயில் நடைபெற்றபோரில் தோற்றதும் இங்கே வந்து மறைந்திருந்தான் எனவும் குறிப் பிட்டுள்ளார்.

மிகப் பழங் காலத்தில் இப்பகுதி குடியிருப் பிடமாக இருந்து பின்னாளில் கைவிடப்பட்டி ருக்கவேண்டும் எனவும் ஊகிக்க இடமுண்டு. இதன் வடபால் தாழ்வளை என்ற குறிச்சியும், அப்பெயரால் ஒரு பிள்ளையார் கோயிலும் காணப்படுகின்றன. கொடிகாமத்திற்குத் தென் மேற்கே இவ்வூர் அமைந்துள்ளது.

**ராமாவில்**

இராமர் + வில், ராமவில் எனத் திரி படைந்துள்ளது. தென்மராட்சிப் பகுதியிலுள்ள மீசாலை ஊரின் ஒரு பகுதியாகவே ராமாவில் அமைந்துள்ளது. இங்கு ராமாவில் என்ற பெய ருடைய குளம் ஒன்றும் உள்ளது. இப்பெய ருடன் இரா மாயணக் கதை தழுவிய வாய் மொழிக்கதை ஒன்றும் இங்கே வழங்குகிறது. இராம, இரா வணப் பெரும்போர் முடித்துத் தாயகம் திரும்பும் வழியில் தாகசாந்தி செய்யவிரும்பிய இராமர் தனது அம்பை நிலத்தில் ஊன்ற நீர் பெருக் கெடுத்து அவ்விடத்தில் குளம் ஏற்பட்டதாகக் கதை கூறுகிறது. இதே கதைப் பின்னணியில் "வில்லூன்றி" என்ற இடப்பெயருக்கு விளக்கம் கூறப்படுதலும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

**கல்வயல்**

கல், வயல் என்ற இரு முரண்பட்ட பொருள் களைக் கொண்ட சொற்களின் இணைப்பால் இவ்விடப் பெயராக்கம் அமைந்துள்ளது. இது சாவகச்சேரி பட்டினசபை எல்லைக்குட்பட்ட ஓரிடமாகும். கற்பாராக இருந்த இப்பகுதியை இங்கு வாழ் மக்கள் கற்களைத் தோண்டி எடுத்து, நிலத்தை வளமாக்கி தோட்டங்களாகவும், வயல்க ளாகவும் பயன்படுத்தி வருகின்றனர். இங்கு சிறப்பாக் கத்தரி பயிரிடப்படுகிறது.

**கற்குழி**

கல் + குழி = கற்குழி. (குழி = கிடங்கு). சாவகச்சேரியின் தென்பகுதியாக அமைந்துள்ள இவ்விடத்தின் நிலம் கற்பாறைகளைக் கொண்ட தாகும். இங்கு மக்கள் நிலத்தைத் தோண்டிக்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லைக் குழிபறித்தெடுத்து விற்பனைசெய்து வருகின்றனர். இதனால் ஏற்பட்ட கற்குழிகள் பலவற்றை இங்கு காணலாம்.

**கோயிலாக்கண்டி**

தென்மராட்சியில் நாவற்குழியை அடுத் துள்ள பகுதி கோயிலாக்கண்டியாகும். இதனைக் கோ + இலாக்கண்டி எனவும்: கோயில் + ஆர் + கண்டி எனவும் பிரித்துப் பொருள் கூறப்படுகி கின்றது. கோ + இலாக்கண்டி என்பதற்கு அரசனில்லா ஊர் என்றும், அரசாட்சி நாட்டில் நடைபெற்றபோதிலும் இங்கு அரசர் ஆட்சி நடக்கவில்லை என்றும் கூறுவர். இங்கு கோயி லும் பசுக்களும் நிறைந்து காணப்பட்டமையால் (கோயில் + ஆ + கண்டி) கோயிலாக்கண்டி என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கருதப்படுகின்றது. இங்கு அம்மன் கோயில், காளிகோயில், கந்த சுவாமி கோயில், நாகதம்பிரான் கோயில், கிருஷ்ணன் கோயில், அண்ணமார் கோயில், பிள்ளையார் கோயில், நாச்சிமார் கோயில், வைரவர் கோயில், ஐயனார் கோயில் எனப் பல கோயில்கள் காணப்படுதல் மேற்காட்டிய ஊர்ப்பெயர் விளக்கத்திற்குச் சான்றாகிறது. தென்மராட்சிப் பகுதியில் "கண்டி" என்ற ஈற்றுப் பெயர்கள் பெரிதும் காணப்படுகின்றன. இங்கு பல கோயில்கள் உள்ளமையால் கோயில் வழிபாட்டிலும் கோயில் தொண்டிலும் ஈடு பாடுடையோர் அதிகமாக வாழுமிடம் என்ற பொருளில் இப்பெயர் ஏற்பட்டிருக் கலாம்.

**கொடிகாமம்**

தென்மராட்சிப்பகுதியிற் சாவகச்சேரிக் குக் கிழக்கே 6 மைல் தொலைவில் கொடிகாமம் அமைந்துள்ளது. இதனூடாக யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ்சாலையும், கச்சாய் + பருத்தித் துறைத் தெருவும் செல்கின்றன. தென்னந்தோப் புக்களும், மாஞ்சோலைகளும், பனந்தோட்டங் களும் நிறைந்த மணற் பூமியாக இவ்வூர் காணப் படுகின்றது. இதன் எல்லைப்புறங்களில் வயல் வெளிகள் உள்ளன. திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்கள்கூடும் பெரிய சந்தையும், பேருந்து தரிப்பு நிலையம், புகையிரத நிலையம், அஞ்சல் அலுவலகம் முதலான பல வசதிகளும் அமைந்துள்ளன.

இப்பகுதியிலே முன்பு பெருந்தொகையாகக் கமம் செய்யப்பட்டமையினால் எண்ணிக்கை யடிப்படையில் கோடிகமம் என்ற பெயர் ஏற்பட்டு காலப்போக்கில் கோடிகமம் > கொடி காமம் ஆயிற்று என்பாருமுளர். கூட்டமாகச் சேர்ந்து (கோஷ்டியாக) கமஞ் செய்த இடம் கோஷ்டி + கமம் > கோடிகமம் > கொடிகாமம் ஆயிற்று என்றும் விளக்கம் கூறப்படுகின்றது. கொடிகாமத்தின் எல்லைப் புறங்களில் பெரும் பனஞ்சோலைகளும், அவற்றைத் தாவிவளர்ந்த பெரும் கொடிப் பற்றைகளும் இன்னும் காணப்படுகின்றன. அந்நிலையில் கொடிகள் நிறைந்த இடம் (காமம் = இடம்) கொடிகாமம் என்ற பெயரைப் பெற்றிருக்கலாம். தென்ம ராட்சிப் பகுதியில் மாரிகாலத்திற் பெரிதும் வெள்ளந் தேங்கிநிற்குமிடம் இதுவாதலாலும், இங்கு கமம் செய்வதற்கு ஏற்ற வாய்ப்பு இருப்ப தாலும், கமத்தை அடிப்படையாகக்கொண்ட கோடிகமம் > கொடிகாமம் ஆயிற்று எனப் பொருள் கொள்வார் வாதம் வலுப்பெற்றுக் காணப்படுகிறது. தமிழகத்திற் பேராவூரணியி லுள்ள கொடிவயல் என்ற இடப்பெயரும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலது. எனவே கமம் காமம் ஆயிற்று எனலாம்.

கோடு = வரம்பு , கோடு > கொடி. எனவே வரம்புகளாற் சூழப்பட்ட நிலங்கள் உள்ள இடம் என்ற நிலையிலும் கொடிகாமம் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறலாம். கொடிகள் நாட்டப் பட்ட இடம் கொடிகாமம் என்ற கருத்தும் கூறப்படுகிறது. முதலாம் சங்கிலி மன்னன் தெற்கே படை எடுத்துச்சென்று வெற்றியுடன் மீண்டு வரும்போது, அவனது படைவீரர்கள் சிற்சில இடங்களிலே தமது வெற்றிக் கொடிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிவந்தனர் என்றும், அவற்றில் பல கொடிகள் நாட்டப்பட்ட இடம் கொடிகாமம் என்ற பெயரைப் பெறுவதாயிற்று எனவும் கூறப்படு கிறது. பண்டை நாளிற் கொடிகாமத்தின் அயற் பகுதிகளிற் கல்வியிற் சிறந்த பலர் வாழ்ந்தனர் என்றும், அவர்களது கோஷ்டி விரும்பி வந்து இவ்வூரிற் கூடிக் கலந்துரையாடுவர் என்றும், அதனாலேயே இப்பெயரேற்பட்டது என்றும் கூறுவர். (தகவல்: பண்டிதர் க. கந்தையனார்- ஓய்வுபெற்ற அதிபர்: கொடிகாமம்) அவ்வகை யில் கோஷ்டி கொடி என மாறிற்று: காமம் - விரும்பி வந்து கூடுமிடம் எனப் பொருள் தருதல் நோக்கற்பாலது. கொடிகாமம் கிராமசேவகர் பிரிவின் கீழ் ஆர்த்தியடி, செட்டியாவெளி, சாண்டான் போக்கட்டி, தவசிக்குளம், வேலில் காடு என்ற பகுதிகள் அமைந்துள்ளன.

**சரசாலை**

சரசு +ஆலை=சரசாலை. இவ்வூர் சாவகச் சேரியிலிருந்து வடகிழக்கே மூன்று மைல் தொலைவிலுள்ளது. இராமாயணத்துடன் தொடர்புபடுத்தி இவ்விடப்பெயருக்கு விளக்கம் கூறுவர். இராம, இராவணப் பெரும் போரின் போது இராமனுடைய படைகள் சரங்களைச் சேகரித்து வைத்த சாலையாக இவ்விடம் விளங்கி யமையாற் சரசாலை எனப் பெயர் ஏற்பட்ட தென்பர். மேலும், இங்கு மரங்கள் செறிந்து சருகுகள் பெருகிக் காணப்பட்டதால் "சரசர" என்ற ஒலி நிலையிற் இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர்.

பருத்தித்துறை, சுன்னாகம், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய ஐந்து இடங் களிலுமிருந்து வரும் பெருஞ்சாலைகள் சரசாலை - கனகம்புளியடிச் சந்தியில் ஒன்று சேர்கின்றன. சரசாலையில் விநாயகர், ஐயனார், காளி முதலிய கடவுளரின் கோயில்களும் அமைந்துள்ளன. இங்கே குறிச்சிப் பெயர்களாக பாலைநகர், கனகம்புளியடிச் சந்தி, கள்ளியந்துரவு, நடுக் கிணறு, ஊரிக்காடு, தில்லங்குழி, அம்மன்வீதி நாவலடி, சங்கக்கிணறு, அருமத்துரவு, பறங்கி வாய்க்கால், கட்டைகாடு, இல்லாரை, மாத்த ளாய், நுணவில் என்பன வழக்கிலுள்ளன. தில்லை மரங்கள் நிறைந்து காணப்பட்ட இடம் தில்லங் குழி என வழங்கிற்று. கிராமச் சங்கத்தால் கட்டப் பட்ட கிணறு அமைந்த இடம் சங்கக்கிணறு எனவும், அருமந்தவர் என்பவரால் வெட்டப் பட்ட துரவு அருமந்தவர் துரவு > அருமத்துரவு எனவும் வழங்கலாயின. இவ்வூரிலுள்ள பறங்கி வாய்க்கால், மாத்தளாய் என்ற சிறு குளத்தி லிருந்து செல்கிறது. இவ் வாய்க்கால் போர்த்துக் கேயரால் வெட்டப்பட்டதெனக் கூறப்படுகிறது.

**மீசாலை**

மீ + ஆலை = மீயாலை > மீசாலை. சாவகச்சேரிக்குக் கிழக்கே மீசாலை அமைந் துள்ளது. மீசு + ஆலை = மீசாலை. உயர்ந்த மரச்சோலைகள் உள்ள இடம் என்றும், (மீசாலை, மாசாலை) மாசாலை மாமரச் சோலைகள் நிறைந்து காணப்படும் இடமென்றும் விளக்கம் கூறப்படுகின்றது. இக் கருத்துக்களைச் சான்று படுத்தும் வகையில் தென்மராட்சிப் பகுதியிலே மா, பலா, தென்னை முதலிய மரங்கள் இன்றும் சோலையாக வளர்ந்து காட்சி தரும் இடமாக மீசாலை விளங்குவதைக் குறிப்பிடலாம். இங்கு மாவடிப்பிள்ளையார் கோயில் ஒன்றுமுள்ளது. இங்கு ஒவ்வொரு காணியிலும் மாமரம் நிற்கக் காணலாம். மாம்பழமும் அதிகம் பெறப் படுகிறது. வெள்ளை மாவடி, கறும்பு மாவடி பாண்டிக்கேணி (பாண்டி = ஒரு வகை மாமரம்) ஆகிய குறிச்சிப் பெயர்கள் மாமரத்தை முதனிலை யாகக் கொண்டு பெயர் பெற்றிருப்பது நோக்கற் பாலது.

மீ + ஆலை = மீயாலை, மீ = இலுப்பை. மீசாலையில் இன்றும் இலுப்பை மரங்கள் செறிந்து காணப்படுகின்றன. பண்டை நாளில் இங்கு இலுப்பை எண்ணெய் தயாரிக்கும் ஆலைகள் இருந்தபடியால் மீசாலை என்ற இடப்பெயர் எற்பட்டதோ எனவும் கருதலாம். சோழர் காலத்துக் கல்வெட்டுக்களில் இடம் பெறும் மீசாலை, மீயாட்சி முதலான சொற் றொடர்கள் இவ்விடப் பெயருடன் ஒப்பிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்தக்கன. இவ்வூர்த் தலைவனாக மீகாமன் என்போன் இருந்தான் என "வெடியரசன் பாடல்" கூறுகிறது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத் தில் மீசலூர் என்ற ஊர்ப் பெயரும் வழக்கி லுள்ளது. மீசாலை வடக்கில் தெருவாரம் என்ற குறிச்சி காணப்படுகின்றது. டச்சுக்காரர் காலத் தில் சாவகச்சேரியிலிருந்து மந்துவில் ஊடாக ஒரு பெரிய தெரு அமைக்கப்பட்டபோது, அதன் அருகில் வாழ்ந்த பகுதியினரை தெருவோரத் தினர் என்றனர். அப்பகுதி தெருவோரமாக இருந்து பிற்காலத்தில் தெருவாரமாக மாறி யுள்ளது.

மீசாலை வடக்கில் சோனகன்புலம் என்ற குறிச்சியும், சோனகன்புலவு என்ற பெயரில் சுடலையும் உள்ளன. இப்பகுதியில் முன்பு சாவகர் தொடர்பால் வந்த முஸ்லீம்கள் வாழ்ந்தனர். ஆனால் தற்போது தோட்ட நிலங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. மீசாலை வடக்கின் இன்னொருபுறத்தில் மருதடி என்ற குறிச்சியுள்ளது. இங்கு மருதமரம் பெரிதும் காணப்பட்டமையால் இப்பெயர் ஏற்பட்டி ருக்கலாம், இங்குள்ள மருதடிப்பிள்ளையார் கோயில் முன்பு கிழக்கு நோக்கியிருந்ததென்றும், பின்பு மேற்கு நோக்கித் திரும்பியது என்றும் கூறப் படுகின்றது. மீசாலையின் வடக்கே "கட்டைப் பறித்தான்" என்ற குறிச்சியுள்ளது. மாரிகாலத்தில் இங்குள்ள குளக்கட்டு நிரம்பி கட்டை உடைத் துப் பாயும் நிலை ஏற்படுவதால் "கட்டுப்பறித் தான்" என்ற காரணப் பெயர் ஏற்பட்டு, அது காலப்போக்கில் கட்டைப் பறித்தான் என வழங் கிற்று. அதற்கு அப்பால் புத்தூர்ச் சந்தி என்ற இடத்தைக் குறித்து வழங்குகின்றது. வேம்புகள் சோலையாகக் காணப்பட்ட ஓரிடம் வேம்பிராய் என அழைக்கப்படுவதாயிற்று. வேம்பு + பாராய் > வேம்பிராய். இவ்விரு மரங்களும் இணைந்து காணப்பட்ட நிலையில் இக்குறிச்சிப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். மேலும் நீராவரங்கேணி, பாலையடி முதலான குறிச்சிப் பெயர்களும் இங்கு வழங்குகின்றன. மேய்ச்சல் நிலப் பகுதி வெள்ளை யன்வாரி, வேலைக்காடு எனப் பெயர்பெறும் (தகவல்: சி. வடிவேல் மீசாலை).

**கோயில்குடியிருப்பு**

சாவகச்சேரி நகரசபைப் பகுதிகளில் கோயில் குடியிருப்பும் ஒன்றாகும். சாவகச்சேரிச் சிவன் கோயிலுக்கு உரித்தான காணிகளே இங்கு பெரிதும் உள்ளன. இக் கோயிலுக்குப் பணிபுரிந்த மக்களே பண்டைநாளில் அங்கு குடியிருந்தமை யாற் காரணப் பெயராய் கோயில்குடியிருப்பு எனப் பெயர் பெறுவதாயிற்று. கோயிலுக்கு உரிமையான குடியிருப்பு பகுதி என்பது இதன் பொருளாகும்.

**சாவகச்சேரி**

சாவகர் + சேரி > சாவகச்சேரி. சாவகம்> சாவகர். சாவகம் என்பது யாவா, சுமத்திரா ஆகிய இடங்களைக் குறிக்கும் வரலாற்றுச் சொல்லாட்சி யாகும். பண்டைய வரலாறு பற்றி எழுதிய தொலமி (Ptolemy கி.பி 150), யாவாவைச் சிறிய சாவகம் என்றும், சுமத்திராவைப் பெரிய சாவகம் என்றும் குறிப்பிட்டுள்ளார். மலாயக் குடா நாட்டுத் தீபகற்பங்கள் அனைத்தும் பண்டு "சாவகம்" என அழைக்கப்பட்டன. சாவக நாட்டிலே பண்டைத் தமிழர் பண்பாடு நன்கு நிலையூன்றியிருந்தமையை அங்குள்ள மொழி, சமயம், கட்டிடம் முதலிய கூறுகள் வெளிப் படுத்துகின்றன. அரசியல் - வணிகம் என்பவற்றி னால் இத்தகைய தொடர்புகள் ஏற்பட்டிருக் கலாம் (O.W.Wolters, 1967). முற்காலத்தில் சாவகர் வந்து குடியேறிச் சேரியாக வாழ்ந்த இடம் சாவகச்சேரி ஆயிற்று. சாவகர் பற்றி யாழ்ப்பாண வைபவ கௌமுதி வருமாறு குறிப்பிடுகிறது.

தமிழகத்தோடு வணிகஞ் செய்த சாவகர் இரத்தின துவீபமென விளங்கிய ஈழத் தேயத்தை யும் நன்கறிந்தவராய் ஆங்கும் பண்டைக் காலத்தே பண்டமாற்றஞ் செய்து வந்திருத்தல் சாத்தியமே. அம் மக்களது குணா குணங்களைச் செவ்வனேயறிந்த தமிழ் வேந்தரும் சிங்கள வேந்தரும் அவரைத் தம் படைவீரராய் அமைத் துக் கொண்டனர். யாழ்ப்பாணத்தை யாண்ட தமிழ் அரசராலே சாவகர் தென்மராட்சி யிலே குடியேற்றப்பட்டிருத்தலுங் கூடும். தற்காலத் தமிழ் வழக்கிலே யாவகர் எனப்படு வோர் இச் சாவகரேயாம் (குமாரசுவாமி *1918:12)*.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஏற்பட்டிருந்த சாவகர் குடியிருப்புப் பற்றி ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடும் போது, குலோத்துங்க சிங்கையாரியன் (கி.பி 1256 1279) யாப்பகூவாவை அழித்த பொழுது சிறை யாகப் பிடிபட்ட யாவகர்களே இங்கு வாழ்ந் தார்கள் என்கிறார் (யாழ்ப்பாணச் சரித்திரம்: 86). சங்கிலிமன்னன் (கி.பி 1519 1564) சாவாங் கோட்டை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளிலிருந்து சாவகர்களைத் துரத்தினான் என யாழ்ப்பாண வைபவமாலை (பக்.60) குறிப்பிடுதல் நோக்குக. சாவகரை யாழ்ப்பாணப்பகுதிக்கு போர்வீரர் களாகக் கொண்டு வந்தவன் விஜயபாகு என்ற மன்னன் (கி.பி1271) எனக் கூறப்படுகின்றது. சாவகர் போர்வீரர்களாக இருந்தமையால் அவர் கள் அரசவெறுப்புக்கு ஆளாகி, அவர்களது தொகையும் அருகி வந்தது. எஞ்சியோர் சாவகச் சேரி, சாவாங்கோடு ஆகிய இடங்களிற் குடிய மர்ந்தனர் என வரலாறு கூறுகிறது. 13 ஆம் நூற் றாண்டில் சாவக மன்னன் சந்திரபானுவின் ஆட்சி வடஇலங்கையில் இருந்ததன் தொடர்பாகச் சாவகச்சேரி, சாவகன்சீமா, சாவாங் கோட்டை என்ற இடப்பெயர்கள் அமையலாயின (கா. இந்திரபாலா 1972:44 - 46). போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் வடமாகாணத்திற் கத்தோலிக் கக் கோயில்கள் பல அமைக்கப்பட்டன. அவற்றில் சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட தேவாலயம் மிகப் பெரியதாகக் காணப்பட்டது என்கிறார் பால்தேயஸ். இந்துக் கோயில் ஒன்று அழிக்கப்பட்ட இடத்திலேயே இக் கோயில் கட்டப்பட்டதாக சுவாமி ஞானப்பிரகாசர் (1921: 118) குறிப்பிட்டுள்ளார். டச்சுக்காரர் ஆட்சியை நினைவூட்டுவதாக இங்கு "டச்சு வீதி" அமைந் துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் முதன்மையான நகரங்களிலொன்றாக விளங்கும் சாவகச்சேரி யானது, பூநகரி, பருத்தித்துறை, ஆனையிறவு, யாழ்ப்பாணம் ஆகிய நாலா பக்கங்களிலிருந்தும் வரும் முதன்மையான பெருஞ்சாலைகள் சேரும் நடு நிலையமாகத் திகழ்கிறது. யாழ்ப்பாணம் + கண்டி நெடுஞ்சாலையும் இதனூடாகவே செல்கிறது. அரசினர் மருத்துவமனை, தொடர் வண்டி நிலையம், பேரூந்து நிலையம், பெரிய சந்தை, நகரசாலைகள், அஞ்சல் நிலையம், கல்லூரிகள் முதலான பல வசதிகளும் பொருந்திய ஒரு நகரமாக இது திகழ்கின்றது. இதன் வடக்குப் பகுதியில் கல்வயல், குசவன்மடம், கிராம்புவில், கெருடாவில், மண்டுவில், பெருங்குளம்சந்தி, சங்கத்தானை, பெரிய அரசடி, இல்லாரை, முதலியாவெளி, மருதடி முதலியன அமைந் துள்ளன. இப்பகுதிகளை உள்ளடக்கிய பெருநக ராக சாவகச்சேரி திகழ்கின்றது. இதன் தென் பகுதியில் கற்குழி, கண்டுவில், கோயிற் குடி யிருப்பு, மகிழங்கேணி, பெரியமாவடி, சப்பச்சி மாவடி, சிவன்கோயிலடி முதலிய இடங்களும் அடங்குகின்றன.

இதன் குறிச்சிப் பெயர்களில் மண்டுவில் என்பதை நோக்கும்போது மண்டு என்பது ஒருவகை மரத்தைச் சுட்டி, அது குளப் பெயராகி (மண்டு +வில்), பின்பு குளப்பெயர் இடத்தையும் குறிப்பதாயிற்று. அதேபோன்றே மந்துவில் என்பது இடப்பெயரும், செடிப்பெயரும், குளப் பெயரும் இணைந்த நிலையில் காணப்படு கின்றது. மந்து = காவிளாச்செடி. பெருங்குளம் சந்தி என்ற இடத்தில் அப்பெயருடைய குளமும் நாற்சந்தியும் அமைந்துள்ளன. இதன் அயற் பகுதிகளாகிய கிராம்புவில், இல்லாரை என்ற இடங்களிலுள்ள குளங்களைவிட இக்குளம் பெரிதாகக் காணப்பட்டமையால் பெரியகுளம் எனக் காரணப் பெயர் பெறுவதாயிற்று.

"கண்டுவில்" என்பது குளப்பெயரால் அமைந்த குறிச்சிப் பெயராகும். கண்டு + வில் > கன்று+வில். இது தோட்டப்பயிர் செய்யும் பகுதி யாகும். நாற்று நடுகைக்குரிய பயிர்க் கன்றுகளை உண்டாக்கி விற்பனை செய்த இடம் என்ற பொருளிலும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். குளத்தைச் சூழ மகிழ மரங்கள் காணப்பட்ட பகுதி மகிழங்கேணி என்ற பெயர் பெற்றுள்ளது. "மண்டுவில்" என்ற ஓர் இடப்பெயரும் இங் குள்ளது. மண்ணெடுத்த பள்ளம் நீர் நிறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளமாகவுள்ளது. இக்குளத்தைச் "சின்ன மண்டுவில்" என்றழைப்பர்.

சாவகச்சேரியில் இரு சிவன்கோவில் களுள்ளன. இவற்றில் மிகத் தொன்மையானது வாரிவனநாதசிவன் கோயிலாகும். போர்த்துக் கேயர் இதனை அழித்தனர். பின்னாளில் வயல் உழும்போது சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டு கோயில் அமைக்கப்பட்டது. அரசடிப்பகுதியி லுள்ள சப்பச்சி மாவடி என்ற இடத்தில் "சப்பச்சி மாவடி விநாயகர் ஆலயம்" அமைந்துள்ளது. கந்தபுராணப் புகழ்பெற்ற தமிழ்நாட்டு காஞ்சி மாவடி என்ற தலத்து மாவிதை கொண்டு வரப்பட்டு இங்கு நாட்டப்பட்ட மரத்தடியி லேயே கோயில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படு கின்றது. இம்மாவின் கனி விதையின்றி இருப்ப தால் "சப்பச்சி" எனப்பெயர் பெற்ற தென்பர். மேலும் "பெரியமாவடி" என்ற வட்டார மும் இங்குள்ளது. இங்குள்ள பெரிய மாவடிக் கந்தசாமி கோயில் மரப் பெயரால் வழக்குப் பெற்றுள்ளது. இங்கு இன்றும் ஒரு பெரிய மாமரம் காணப்படுகின்றது. இதன் தென்கிழக்கே கடலும், அதனையடுத்த பகுதியிற் தென்னந் தோப்புக்களும் அமைந்துள்ளன.

**கைதடி**

தென்மராட்சிப் பகுதியில் கைதடி மிகவும் பரந்த பெரிய ஊராகும். இதன் வடக்கே புத்தூர், கிழக்கே நுணாவில், தெற்கே நாவற்குழி, மேற்கே புத்தூர், கோப்பாய் என்பன எல்லைகளாக அமைந்துள்ளன. இந்நான்கு திசைகளிலும் இவ்வூர் எல்லைகள் கடலாற் பிரிக்கப்பட்டி ருக்கின்றன. கடற்கரையோரங்களிலே செறிந்து காணப்படும் தாழைமரங்களின் காரணமாகவே இயற்கைநிலையில் இவ்விடப் பெயர் தோற்றம் பெற்றுள்ளது. தாழையின் பெயர்களாகச் சூடாமணி நிகண்டில் *(349)* கைதை, முண்டகம், முடங்கல், முசலி, மடி, கண்டல், கேதகை ஆகிய பெயர்கள் தரப்பட்டுள்ளன. இவற்றிற் கைதை என்ற சொல் கைதகி என மருவி, நாளடைவில் கைதடியாயிற்று. இவ்வூரின் எல்லைகள் கைதை யாற் சூளப்பட்டிருந்தமையால் அம்மரப் பெயரே (கைதை) இடப்பெயராகி காலப்போக்கில் அது கைதை> கைதடி ஆயிற்று.

தாழை = கைதை. இது நெய்தல் நிலத்துச் செடியாகும். சங்க இலக்கியங்களிலே தாழை என்பது தென்னைமரத்தைச் சுட்டிற்று. பிற் காலத்தில் அது தாழையைச் சுட்டுவதாக மரு விற்று. ஆயினும் துளுமொழியில் இன்றும் தாழை என்பது தென்னையையே குறிப் பிடு கின்றது என்பர்.

இவ்விடப் பெயருக்கு வேறு பல விளக்கங் களும் கூறப்படுகின்றன.

1. கைதடி என்பதை இவ்வூரினர் கரம் தண்டம் என்றும் கூறுவது, அது கரம் + தண்டம் = கை + தடி எனப் பொருள் படும்.
2. ஒற்றை மருப்புடைய விநாயகரது கை இவ்விடத்தில் தறிக்கப்பட்ட இடமாத லால் இவ்விடம் கைதறி என வழங்கிப் பின்னால் கைதடி என மருவிற்றென்பர். (தகவல்: ஆர் நாகேஸ்வரி லோகநாதன், கைதடி).

இது தொடர்பாகப் பின்வரும் நாட்டார் கதை வழங்குவதாயிற்று.

> "போத்துக்கேயர் ஆட்சிக் காலத்தின்போது அவர்கள் மேற்கொண்ட மத எதிர்ப்பு நடவடிக்கைகளால் நூற்றுக்கணக்கான சைவக் கோயில்கள் அழிக்கப்பட்டன. அப் போது கோயில் அந்தணர்கள் கோயிற் சிலை களைக் கிணற்றுக்குள், இட்டும் நிலத்துள் புதைத்தும், பாதுகாப்புச் செய்தனர். பின்னாளில் இங்கு வயல் வேலையின் பொருட்டு மண்வெட்டியபோது மண் ணுட் புதைக்கப்பட்டிருந்த பிள்ளையார் கையொன்று தறிக்கப்படுவ தாயிற்று. அதனால் இவ்விடம் கைத்தறி என வழங்கி காலப்போக்கில் கைதடி ஆயிற்று".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கதையின் தொடர்பாகப் பெயர் பெற்றதே "கைத்தறி விநாயகர்கோயில்" ஆகும். மேலும் வைரவர்கோயில், அண்ணைமார் கோயில் மற்றும் பல சிறுசிறு கோயில்களும் இங்கே அமைந்துள்ளன. "சைவ அனாதைச் சிறுவர் இல்லம்" "கைதடி முதியோர் இல்லம்" நவீல்ட் நிறுவனத்தால் நடாத்தப்படும் கட்புலன், செவிப்புலன் இழந்தோருக்கான பாடசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் என்பன இங்கே சிறப்பாக இயங்குகின்றன. இங்கு அரசினர் பொது மருத்துவமனை, அரசினர் ஆயுள்வேத மருத்துவமனை என்பனவும் அமைந் துள்ளன.

இங்கே ஆயத்தடி, குமாரத்திபட்டி, உவரி முதலான பல குறிச்சிப் பெயர்கள் வழக்கி லுள் ளன. ஆயம் வசூலிக்கப்பட்ட இடம் ஆயத்தடி யாகும், சோழர் காலத்தில் மத்திய அரசுக்கும் ஊர் சபைகளுக்கும் மக்கள் பல் வகை வரிகளைச் செலுத்தினர் என்பது கல்வெட்டுச் செய்தி. இவ்வரிகள் நெல்லாகவும் பணமாகவும் ஊழிய மாகவும் செலுத்தப்பட்டன. அவ்வரிகளில் ஆயம் என்பதும் ஒன்றாகும்.

ஐம்பெருங்குழு என்பேராயம் என்போர் சங்ககாலத்து அரசியல் இயக்குனர்களாக நிர் வாகத்திலிடம்பெற்ற செய்திகள் அறியப்படுகின் றன.

*"பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்*
*நா அல் வேதம் நெறிதி ரியினும்*
*திரியாச் சுற்றம்......"*

(புறநானூறு-2)

என்ற பாடல் வரிகளால் அவர்களது திறன் அறியப்படுகிறது. இத் திரியாச் சுற்றத்தின் ஒரு பகுதியினரே ஆயம் ஆகும். இவை பற்றிய விளக்கம் வருமாறு அமைகின்றது.

இத் திரியாச் சுற்றம் குழு எனவும் ஆயம் எனவும் இரண்டாக வகுக்கப்பட்டு, குழு மேற்சபையாகவும், ஆயம் கீழ்ச் சபையாகவும் இயங்கின. இரண்டு சபைகளும் நகர அரசின் அதிகாரச் சுற்றமேயாகும். "குழு" சட்ட அமைப்பு நோக்கிலும் "ஆயம்" சட்டக் கருமம் ஆற்றும் அமைப்பிலும் ஆக்கப்பட்டன எனலாம். குழுவில் அமைச்சர், அந்தணர், படைத்தலைவர், தூதர் ஒற்றர் என்ற ஐந்து மக்களும், ஆயத்தில் கரணத்தலைவர், கருமவிதிகர், கருமச்சுற்றம், கடைகாப்பாளர், நாரமாந்தர், படைத்தலைவர், யானைமறவர், இவுளிமறவர் என்ற எட்டு மக்களும் பொருந்துவர்

(நா. சிவபாத சுந்தரனார்.1972:340)

**வேம்பிராய்**

இது மீசாலை வடக்கிலுள்ள ஓரிடம். இங்கு வேம்பு மரங்களும் பராய் மரங்களும் பண்டை நாள் முதலாக நிறைந்து காணப் படுகின்றன என்றும் அம்மரங்களின் காரண மாகவே வேம்பு + பராய் > வேப்பம்பராய் > வேம்பராய் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது. இவ்விரு மரங்களும் புனிதத் தன்மை கொண்டவை. வேப்பிலை நோய் தீர்க்கும் தன்மை வாய்ந்தது என்பது இந்துக்கள் நம்பிக்கை அறிவியலும் அதனை ஏற்றுக் கொள்கிறது. அத்துடன் பராய் மர இலைகளைக் கண்ணூறு கழிக்கும் போது பயன்படுத்தும் நம்பிக்கையையும் இங்கு காணக்கூடியதாக இருக்கிறது. இப்பகுதி கல் நிலமாதலால் "கற்காடு" எனவும் இவ்வூர் வழங்கப் படுகிறது.

**வேலம்பிராய்**

இது கோயிலா கண்டிப்பகுதியில் அமைந் துள்ளது. வேல்+அம்+பராய்>வேலம்பராய்> வேலம்பிராய் எனப் பெயராக்கம் பெற்றுள்ளது. வேலமரமும் பராய்மரமும் சேர்ந்த நிலையில் இவ்விடப் பெயர் அமைவதாயிற்று. இங்குள்ள வேலம்பிராய்க் கண்ணகி அம்மன் கோயில் மிகப்பழைமை வாய்ந்ததாகும். வேல் முருகனுக் குரிய சின்னம், பராய் அம்மனுக்குரிய மரம். இவ்விரு கோயில்களும் இங்குள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கத்தானை**

சங்கம் +அத்து +ஆனை = சங்கத்தானை. இது சாவகச்சேரி நகரின் கிழக்கே அமைந்துள்ள பகுதியாகும். இவ்விடம் பண்டை நாளிற் பெருங்காடாக இருந்தது என்றும், யானைகள் (சங்கம் = கூட்டம்) கூட்டமாக இங்கு வந்து மேய்ந்தன என்றும், அதனாலேயே இப்பெயர் வழங்கிற்றென்றும் கூறப்படுகிறது. பூநகரிக் காட்டுப்பகுதி யானைகள் யானையிறவுக் கடல் வற்றுங் காலங்களில், அதனைக் கடந்து வந்து சங்கத்தானையில் மேய்ந்தன எனவும் கதைகள் கூறப்படுகின்றன. ஆனையிறவு ஊடாக வணிக நோக்கோடும் அல்லது அரசபடைக் காகவும் யானைகளை நடாத்தி வந்து, பெரிய சோலை யாகத் திகழ்ந்த இந்த இடத்திற் சேர்த்துக் கட்டி வைத்திருந்தனர் எனவும், கூட்டமாக யானைகள் தரித்து நின்ற இடம் என்ற நிலையிற் சங்கத் தானை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. பின்னர் இங்கிருந்து ஆனைக் கோட்டை, ஆனைப்பந்தி முதலிய இடங்களுக்கு யானைகளை நடாத்திச் சென்றுள்ளனர்.

**கச்சாய்**

கச்சு + ஆய் = கச்சாய். கச்சு என்பது பொதி எனப்பொருள்படும். ஆய் = ஆராய்தல். தமிழரசர் காலத்திலும் டச்சுக்காரர் காலத்திலும் கச்சாயில் துறைமுகம் செயற்பட்டிருக்கிறது. எனவே பொதிகள் ஆராயப்பட்டு (Custom Checking) கடவைச் சீட்டுகள் வழங்கப்பட்ட இடம் என்ற நிலையில் கச்சாய் என்ற பெயர் ஏற்பட்டிருக்க லாம்.

பண்டைநாளில், கச்சாயை மையமாகக் கொண்டு பச்சிலைப்பள்ளிப் பகுதியில் தென்னிந் தியாவிலிருந்து வன்னியர் குடியேற்றங்கள் இடம் பெற்றுள்ளன. காலிங்கர், மலையாளத்தார், கன்னார் முதலியோர் கச்சாயிற் குடியேறியதாக வையாபாடல் (செய் - 44) கூறுகிறது. கைலாய மாலையிலும் (பக்.12.15) வட இலங்கையில் ஏற்பட்ட தென்னிந்தியக் குடியேற்றம்பற்றிக் கூறப்படுகிறது. கச்சூர் என்ற இடத்திலிருந்து நீலகண்டன் என்ற தலைவன் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் குடியேறியபோது தனது அடிமை குடிமைகளையும் அங்கு குடியேற்றினான். இப் பகுதிக்கு அணித்தாயுள்ள கச்சாய் என்பது கச்சூர் என்பதன் திரிபு என்றே கருத வேண்டும்.

கொடிகாமத்திற்குத் தெற்கே கடற்கரை யோரமாகக் கச்சாய் அமைந்துள்ளது. இங்கு மன்னவராயன்காடு, கோட்டைப்பட்டி, துறை முகம், கச்சான்தரவை, கோண்டாமூலை, கொக் கட்டிச்சோலை (கொக்கட்டியன் காடு), ஆலடி, புங்கடி, பறையன் தென்பு முதலிய குறிச்சிப் பெயர்கள் வழங்குகின்றன.

பண்டைநாளிற் கச்சாய்ப் பகுதியில் பெருங் காடுகள் இருந்திருக்கின்றன. தமிழரசர் தம் காலத்தில் இங்கு வேட்டைக்குச் சென்றிருக்கி றார்கள். எனவே மன்னன் வேட்டைக்குச் செல்லும் காடு என்ற நிலையில் இப்பகுதிக்கு மன்னவராயன்காடு என்ற பெயர் ஏற்பட்டிருக்க லாம். தற்போது பெருங்காடுகள் யாவும் அழிக்கப் பட்டு இங்கு சிறு பற்றைகளே காணப்படுகின்றன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலே கச்சாய்த் துறையில் ஒரு கோட்டைகட்டியிருந்தனர். கச்சாய்துறைக்கு அணித்ததாகக் கோட்டைப் பிட்டி என்ற இடமுள்ளது. இதனைப் பாதிரித் தோட்டம், மணியன்காடு என்றும் வழங்குவர். கோட்டைப் பகுதியை அடுத்து துறைமுகம் அமைந்திருந்தது. இங்கு முன்பிருந்த கலங்கரை விளக்கம் இன்று இடிந்த நிலையிற் காணப் படுகிறது. டச்சுக்காரர் காலத்தில் மரம், உப்பு, யானை முதலியன கச்சாய்துறைமுகம் மூலமாக வும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அன்று சிறப் போடு விளங்கிய கச்சாய் வணிகத்துறை இன்று மீன்பிடித்துறையாக மட்டுமே பயன்படுகிறது. இன்றும் இப்பகுதி "துறைமுகம்" என்ற பெயரு டன் வழங்குகிறது. தமிழ் மன்னர் காலத்தில் கச்சாய் பெருந்துறைமுகமாகப் பயன்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளமையைச் செகராசசேகரமாலை (கி.பி. 1380-1417) என்ற சோதிட நூற்பாயிரமும் (செய். 8) சான்றுபடுத்துகிறது.

தமிழகத்தில் கச்சி, கச்சியம்பதி என்னும் பெயர்கள் வழக்கிலுள்ளன. சுமாத்திராதீவிலே இந்தியக் குடியேற்றம் ஏற்பட்டபோது அங்கு கச்சா என ஓரிடத்துக்குப் பெயர் வைத்தனர். தமிழக கச்சியம்பதியே அம்மொழியில் கச்சா என்றாயிற்று. 13ஆம் நூற்றாண்டில் யாவா, சுமத்திரா ஆகிய இடங்களிலிருந்து சாவகர், வட இலங்கையிலே குடியேறியபோது சாவகச்சேரியில் அவர்கள் குடியிருப்புக்கள் பெரிதும் ஏற்படலாயின. எனவே "கச்சா" என்ற இடத்திலிருந்து வந்து குடியேறியோர், தாம் குடியேறி வாழ்ந்த இடத்திற்குக் "கச்சா" எனப் பெயரிட்டு வாழ்ந்திருக்கலாம். காலப்போக்கில் கச்சா> கச்சாய் என நீண்டொலிப்பதாயிற்று.

# சிந்தாமணிவிநாயகர்:

சிந்தாமணியைப் போன்று தன்னை நினைத்தவர்களுக்குப் பேரருள்புரியும் விநாயகர் சிந்தாமணி விநாயகர். சிந்தாமணி என்னும் தெய்வீக மணியைத் தரித்துக் கொண்டவர், ஆதலால் சிந்தாமணி விநாயகர் எனப் போற்றப்பெற்றார்.

அபிஜித் என்பவனுக்கும் குணவதி என்பவளுக்கும் பிறந்தவன் "கணன்" என்றும் அசுரன் இவன் காட்டில் வேட்டையாடச் சென்றபோது கபில முனிவர் சிந்தாமணியின் உதவியால் கணனுக்குப் பெரிய விருந்து அளித்தார். சிந்தாமணியின் அளவற்ற பெருமையை நேரில் அறிந்து கொண்ட அவ்வசுரன் கபிலமுனிவரிடமிருந்து அந்த சிந்தாமணியை பறித்துக்கொண்டு வந்துவிட்டான். கபிலன் விநாயகரை எண்ணியாகமியற்ற அதிற் சித்திரபுத்தி தேவிகளுடன் தோன்றிச் சிங்கவாகனத்தில் எழுந்தருளித் தனது பாசத்தால் அரக்கன் தலையை அறுத்துச் சிந்தாமணி ரத்தினத்தை மீட்டார். அதனால் சிந்தாமணி விநாயகர் என்னும் திருநாமத்தைப் பெற்றார்.

(திருமறைக்காட்டில் எழுந்தருளி இருக்கும் விநாயகர் சிந்தாமணி விநாயகர்.)

**இந்துக்கலைக் களஞ்சியம் தொகுதி 6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாட்டுத் தலமாய் மீசாலை மண்டுவில் இலஞ்சியாரணியம், சோலையம்மன் ஆலயம்

திருமதி சோ. வளர்மதி
ஆசிரியர். யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.




சோலை அம்மன் ஆலயம்

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு மேற்குத் திசையில் அமைந்து மண்டுவில் கிராம சேவையாளர் பிரிவில் (ஜே.304) வீற்றிருந்து சக்தியா னவள் ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் சோலைஅம்மன் என்னும் நாமம்பெற்று அரு ளாட்சி புரிகிறாள். தென்மராட்சிவாழ் அடியவர் களின் பிரதான சக்தி வழிபாட்டுத் தலமாக சோலைஅம்மன் ஆலயம் வரலாற்றுத் தொன்மை யுடன் அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புக் கொண்ட இவ்வாலயம் சைவ, சாக்த, ஆகம மரபுகளுக்கேற்ப ஆலய அமைப்பையும் பரிவார மூர்த்திகளையும் கொண்டுள்ளது. ஆலய அமை விடமும், தலம், தலவிருட்சம், மூர்த்தி, கீர்த்தி, தீர்த்தம் இவைகளின் சிறப்பும், இவ் வாலயத்தின் பெருமைக்கு மெருகூட்டுகின்றன.

சோலை அம்மன் ஆலய வரலாற்றை கி.பி. 1600ம் ஆண்டிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது. போர்த்துக்கீசருடைய ஆட்சிக் காலத் தில் மராமத்து அதிகாரியாக விருந்த "வான்டி வாற்" என்ற அதிகாரி வீதி அமைப்பு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அவர் ஏறிவந்த குதிரை சோலை அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் வந்தபோது நோய் கண்டு வீழ்ந்து விடுகிறது. அக்காலத்தில் ஆலய அர்ச்சகராக இருந்த கந்தரென்பார் இலஞ்சி தீர்த்தத்தை அக் குதிரைக்குத் தெளித்து விபூதியிட்டு சுகப்படுத்தி வைத்ததன் காரணமாக அவ்வதிகாரி அம்பாளை வணங்கி ஆலயத்துக்கு நிலத்தையும் ஒதுக்கி, மானியமும் செய்து கொடுத்ததுடன் வீதி அமைப் பையும் செய்து வைத்ததாக வரலாறு கூறுகி றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தைச் சூழ மரங்கள் சோலையாய் அமைந்து காணப்படுகின்றன. இம்மரங்களில் மருத்துவ மூலிகைகள் வகைத்தான மகிழ மரங்களும், கருநாவல், காஞ்ஞா, கிஞ்ஞா, குரவம், கொன்றை, கூகைமா, கொக்கட்டி, நாதஸ்வரம்



செய்யப்பயன்படும் ஆச்சா என்னும் சடவக்கு, சாளம்பை, சுரப்புன்னை, தாழை, கறுவிலி, நுணாபரா பாதிரி, புங்கு, புரசு, மருது, மாவிலங்கை, வெண்நாவல், வேம்புபோன்ற மருத்துவக் குணங்கொண்ட விருட்சங்களும், கொடி வகை மூலிகைகளும் காணப்படுகின்றன. இவ் ஆலய தலவிருட்சமாக மகிழ மரத்தையும், தீர்த்தமாக வற்றாத நீரூற்றையும் தன்னகத்தேகொண்டு அமைந்திருக்கிறது. (இலஞ்சி என்பது மகிழ் அல்லது வற்றாத நீரூற்று என்ற அர்த்த பரிமாணத்தைத் தரும்). சோலையின்பால் அமைந்துள்ள **"பாவநாசினி"** என்னும் வற்றாத நீர் நிலையில் நீராடுபவர்களுக்கு மனநோய்களும், சொறி, சிரங்கு, பார்வைக் குறைவு முதலிய பல ரோகங்களும் நீங்கப்பெறுதல் பலன் உண்டாம். மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தைய கற்கட் டினைக் கொண்ட இந்த நீர்நிலையைப் பார்த் தால் ஒரு சிறு குன்றினுள் ஒரு சில வாளிகள் நீரே உள்ளது போல் தெரியும். ஆயினும் அள்ள, அள்ள வற்றாது இருக்கும். உத்தராயண கால ஆரம்பத்தில் இப் "பாவநாசினி" தீர்த்தத்தில் பல வர்ண மீன்கள் தோன்றி மறையும். இது தலத்தின் தீர்த்த விசேடமாகும்.

ஆகம நெறிகட்கு அமைவாக அமைந்துள்ள இவ்வாலயம் பரிவார மூர்த்திகளாக விநாயகர், கண்ணகி, மஹமாரி, பைரவர், முனீஸ்வரர், மற்றும் காளியம்மன் ஆகியோர் வீற்றிருக்கின்றனர். காளி அம்மன் ஆலயம் சுமார் 500 மீட்டர் தொலைவில் சோலைக்கு வெளியே தனியான ஆலமரச் சூழலில் அமைந்து விளங்குகின்றது.

ஆலய கர்ப்பக்கிரகத்தில் மனோன்மணி அம்பாள் நான்கு திருக்கரங்களுடனும் தாமரைப் பூவையும், ஜபவடமும், அபய வரத கரங்களுமாக அமைந்து அழகுற வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றார். பண்டு தொட்டு வழங்கிவரும் சமய வழிபாட்டு மரபுகள், கண்ணகி வழிபாட்டு மரபுகள், ஆகம வழிபாட்டு முறைகளுடன் இணைந்து செல்லுகின்ற ஒரு தனித்துவமான தன்மையை இங்கு காணலாம். புராதன வழிபாடுகள் கண்ணகி வழிபாடாக அமைந்து விளங்கி வந்ததுடன், மனோன்மணி யந்திரமே மூல விக்கிரக தானத்தில் வைத்து வணங்கப்பட்டு வந்தது.

ஆலயத்தின் வடபால் "குமர கோட்டம்" எனும் நாமம் கொண்ட முருகன் ஆலயம் அமையப் பெற்றுள்ளது. நித்திய நைமித்திய பூசைகள் சோலை அம்மன் ஆலயத்தே கிரமமான முறையில் நடைபெறுகின்றன. தினமும் காலை, மாலை பூசைகளும், வெள்ளி, திங்கள் கிழமைகளில் மூன்றுகாலப் பூசைகளும் இடம் பெறுவதுடன் வைகாசி விசாகதினப் பொங்கலும், ஏக தின காவடி விழாவும் இவ்வாலயத்தின் சிறப்புமிக்க விழாக்களாக அமைந்துள்ளன. **ஆனிமாத பூர்வபக்க ஷஷ்டியில்** கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி பௌர்ணமி தினத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் தீர்த் தோற்சவத்துடன் நிறைவுபெறும். தவிர, பங்குனித்திங்கள், ஆடிப்பூரம், நவராத்திரி போன்ற நைமித்திய விழாக்கள் ஆலயத்தில் மிகச் சிறப்பாக இடம்பெறுகின்றன. இத்தினங்களிலும் அடியார்கள் பொங்கல் செய்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றனர்.

இலஞ்சியாரணியம் சோலையில் வானரங்களும், புள்ளினங்களும், புனுகுப்பூனை, மற்றும் சில ஊர்வனவகைப் பிராணிகளும் காணப்படுகின்றன. இவற்றைக் காணப் பலர் இவ்வாலயத்துக்கு வருவதும் உண்டு.

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு முருகைக் கற்களாலும் சுண்ணாம்பு கலவையாலும் கட்டப்பட்டிருந்த இவ்வாலயம் 1971இல் பொழிகற்களால் புதுப்பிக்கப்பட்டு அவ் வருடம் **ஆனி உத்தர நட்சத்திரத்திலும்** பின்னர் 1986இல் திருப்பணி வேலைகள் நடை பெற்ற பின்னரும் என கும்பாபிஷேகங்கள் நடந்தேறின. கடந்த **2004 தை மாத புநர்பூச நட்சத்திர** சுபவேளையில் இடம்பெற்ற கும்பாபிஷேகம் **சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள்** தலைமையில் அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையைச் சேர்ந்த குருமார்களால் சிறப்பாக நடந்தேறியது. மேலும் ஆலய அனுசரணையுடன் பாலர் பாடசாலை நடைபெறுவதுடன் ஆலயத்தில் அன்னதான திருப்பணிகளும் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

ஆலயத்தின் வரலாறு தோம்பு சாதனங்களின்படி 1741இல் கந்தசாலி என்ற அர்ச்சகர் முதற்கொண்டு 1986இன் பின்னர் மேற்படி அர்ச்சகர் பரம்பரையின் வழித்தோன்றிய - **சிவஸ்ரீ கந்தையா கிருபானந்தக் குருக்கள்வரை சிறப்பான பூசை வழிபாடுகள் ஆற்றப்பட்டு வருகின்றன. சிவஸ்ரீ க. கிருபானந்தக்குருக்கள் அவர்கள் ஆலயத்தின் சிறப்பிற்கும் கீர்த்திக்குமாக இன்று வரை அயராது உழைத்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.**

எல்லாம் வல்ல இலஞ்சியாரணியம் மண்டுவில் சோலை அம்மன் திருவருட் கடாட்சம் சகல ஜீவராசிகளுக்கும் என்றும் கிட்டியபடி இருக்கும். தென்மராட்சியின் மீசாலைப் பதியிலே காண பத்திய வழிபாட்டிற்கு திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயம் மையமாக இருப்பதைப்போன்று சக்தி வழிபாட்டிற்கு சோலை அம்மன் ஆலயம் அமைந்து காணப்படுகிறது.

"சக்தியைத் தொழுதால் சித்திகள் சேரும்"

நன்றி.

**குறிப்பு:**

சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள் அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஆவணத் தகவல்களை ஆதாரமாகக்கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டது.

**மோதகத்தின் தத்துவம்**

மோதகத்தின் வெளியில் மாப் பண்டமும் அதனுள்ளே பூரணமும் உண்டு. பூரணம் இல்லாமல் மாப்பண்டம் சுவைப்பதில்லை. அதேபோல பூரணப் பிரமத்தை அறியாத மனித வாழ்வில் சுகமில்லை; அர்த்தமில்லை. இந்தத் தத்துவத்தின் சின்னமாகத் தான் மோதகம் விளங்குகிறது.

"எம்பெருமானே வெளியே நான் காட்சியளித்தாலும் என்னுள்ளே பூரணமாக இருந்து என்னைப் புனிதப்படுத்துவது நீயன்றோ! என்னையே நான ஆத்ம நிவேதனம் செய்கிறேன்" என்பதுவே மோதகத்தின் தத்துவவிளக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அறிவியல் சிந்தனைகளில் வானியலும் சோதிடமும்

திரு. க. ஈஸ்வரன், B.A,(Hons) Dip.in Ed,
ஆசிரியர்.
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்.

இந்துநாகரிக வரலாற்றில் பல்வேறு சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் இந்து அறிவியல், இந்து ஒழுக்கவியல் என்பவை குறிப்பிடத்தக்கன. இந்து அறிவியல் சிந்தனைகள் இந்து நாகரிக ஆரம்ப காலத்தி லிருந்தே முளைகொள்ளத்தொடங்கி இன்று பலகிளைகளாகப் பரந்து விரிந்து காணப்படுகின் றன. அக்கிளைகளில் வானியல், சோதிடம் என் பன மிகவும் காத்திரமான சிந்தனைக ளாகவும் மிக வும் பழைமைவாய்ந்த சிந்தனைகளாகவும் விளங்குவதோடு, இந்து ஒருவனது வாழ்க்கையை வளம்படுத்துவதாகவும், இது ஒருவனது ஒவ் வொரு செயற்பாட்டிற்கும் ஆதாரமாகவும் விளங்கி வந்திருக்கின்றன எனில் அது மிகையா காது.

இந்துநாகரிக வரலாற்று நோக்கிற் பார்க் கும்போது சிந்துவெளி மக்களிடையே காணப் பட்ட சமய நம்பிக்கைகள் சோதிடச் சிந்தனைக ளோடு ஒப்புநோக்கத்தக்கன. அவ்வாறே பின்வந்த வேத காலத்திலும் வானில் நிகழும் இயற்கை நிகழ்வுகள், பூமியில் நிகழும் கால மாற்றங்கள் என்பனவற்றில் ஆரியர் கொண்ட நம்பிக்கைகள் என்பனவற்றில் சோதிடம் பற்றிய சிந்தனை களுக்கு அணிசெய் கின்றன. யசுர் வேதகாலத்தில் யாகங்களில் நாள், கோள் குறித்தமை பற்றிய சிந்தனைகளையும், வேதாங்கத்தில் சோதிடம் இணைவு பெற்றமையும் அக்காலத்து மக்களி டையே சோதிடம் பெற்றிருந்த செல்வாக்கைப் பிரதிபலிக்கின்றது எனலாம்.

பின்னர் இதிகாச புராணங்களிற் சோதிடத் தின் செல்வாக்கை மிகவும் துல்லியமாக அறிய முடிகின்றது. நகுலசகாதேவர்கள் சோதிடத்தில் வல்லுநர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளமையும், யுத்தத்திற்கு நாள் குறித்தல், பட்டாபிஷேகத்திற்கு நாள் குறித்தல் போன்றவையும் கிருஷ்ணபர மாத்மாவே சோதிடத்தில் முக்கிய கவனம் செலுத்தியமையையும் இதிகாசங்களிற் கண்டு தெளியலாம். அவ்வாறே புராணங்களில் வரும் பல்வேறு செய்திகளும் சோதிட சிந்தனைகளை முன்னிறுத்தியே தேவர்கள், அசுரர்கள் செயற் பட்டமையைக் காணமுடிகின்றது. இவ்வாறே இன்றுவரை சமயபேதம் இன்றி சோதிடம் வளர்ந்த வரலாற்றை நாம் அறியலாம்.



மக்கள் தம் வாழ்வைச் செப்பனிட வானி யலும் சோதிடமும் பெரிதும் துணைபுரிந்து வந்துள்ளன. வேதாங்கங்களில் ஒன்றான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடத்தின் துணைகொண்டு வானவீதியில் வலம் வரும் கோள்கள், நட்சத்திரங்களின் இருப்புகள், அசைவுகள் என்பனவற்றை அறிந்து அவற்றின் இயக்கங்கள் எவ்வாறு பூமியோடு தொடர்புபடுகின்றன என்பதையும், அந்தத் தொடர்புகள் மானிட வாழ்வில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதையும் அறிந்து அதன்மூலம் மக்கள் செயற்பட்டுத் தீமைகளைக் குறைத்து நன்மையடைய முற்பட்டனர். அதன் பேறாக சோதிடத்தின் முக்கியத்துவம் உணரப் பட்டது. காலம் செல்லச்செல்லச் சோதிடம் பற்றிய ஆய்வு மேலும் விரிவுபட்டது. ஆராய்ச்சி கள் நடந்தன. அதன்பேறாக வானியல் வல்லு நர்கள் பலர் தோன்றித் தம் தவவலிமையின் பேறாகப் பல்வேறு சிந்தனைகளை வெளியிட் டனர். இச் சிந்தனைகள் மனப்பதிவு செய்யப் பட்டு இன்றும் பேணப்பட்டு வருவதும் சோதிட மேன்மைக்கு ஒரு உந்துசக்தியானது.

வேதங்கள் எவ்வளவு பழைமையுடையன வோ அவ்வளவு பழமையுடையது சோதிடம். சோதிடம் என்பது வடமொழியில் "ஜ்யோதிஷம்" எனக்கூறப்பட்டது. இதன் பொருள் "ஒளியுடைய சாத்திரம்" என்பதாகும். அந்த வகையில் "ஜயோதிஷம்" என்பதற்கு ஞானத்தை அல்லது அறிவைத் தரும் ஒளி என்று பொருள் கூறலாம். சோதிட சாத்திரம் ஒளியைப் பற்றியதேயாகும். இன்னொரு வகையில் "நட்சத்திரங்களின் தூதுச் செய்தி" என்றும் கொள்ளப்படுகின்றது.

சோதிடம் வானவியற்படி அமைகின்ற கோள்களின் நிலையைச் சார்ந்துள்ளது. விண் வெளியில் நடைபெறும் அரிய நிகழ்ச்சிகளையும் அதற்கு ஒப்ப பூமியில் ஏற்படும் நிகழ்ச்சிகளையும் விளக்குகின்றது. வானவியற்படி அமைகின்ற கோள்களின் நிலையைச் சார்ந்த சோதிடத்தின் விளக்கமான விதிகளைப் பயன்படுத்தி அனை வரின் நன்மை தீமைகளுக்கான நிகழ்ச்சிகளையும் உய்த்துரைக்க முடியும். இவ்வகையில் இதனை நாம் இயற்கையை விளக்கும் பயனுள்ள அறிவி யல் எனலாம்.

ஒரு வேகத்தை ஒட்டி இன்ன நேரத்தில் வளிமண்டலத்திற் கற்பிக்கப்பட்டுள்ள ராசி எல்லையின் கீழ் இன்ன இடத்தில் ஒரு கோள் உலாவிக்கொண்டேயிருக்கும் என்பதற்கான கணக்கைத்தான் வானசாஸ்திரம் என்கின்றோம். குறிப்பிட்ட ஒரு கோள் இன்ன இடத்தில் நிற்கின் றது என்ற கணக்கைத்தான் சோதிடசாஸ்திரம் என்கின்றோம். "உலகம் தோன்றிய பொழுது நீர், அனல், காற்று, பூமி, ஆகாயம் ஆகிய பஞ்ச பூததத்துவத்தைக் கொண்டே அவரவர் கர்மாவை நிர்ணயம் செய்கின்றனர். இந்தக் கர்மவினையை ஒரளவேனும் அறிந்து கொள்வதற்கே ஜோதிட சாத்திரம் தோன்றியது" என்பது அறிவியலின் அடிப்படையாகும்.

சோதிடம் அநாதியானது இறைவனுடைய அருள்வாக்காகிய நான்கு வேதங்களையும் அவற்றை நாம் கற்றுணர்ந்து தெளியத்துணை யாகவுள்ள உரைநூல்களையும் இறைவன் தாமாகவும் தமது அருட்பேறு பெற்ற அவதார புருஷர்கள் மூலமாகவும் ஆக்கி அருளினார். அநாதியான வேதங்களுக்கு அங்கங்களாக அமைந்துள்ளவை பல. அவையாவன சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்பனவாம். வேதபேதங்களின் அஸ்திவாரத்தின் மீதே இந்துதத்துவ வேதங் களும், சநாதன இந்துசமயக் கோட்பாடுகளும் சம்பிரதாயங்களும், சோதிட சாஸ்திரமும் தோன்றின. சோதிட சாஸ்திரக் கலையே இன்று எமது நல்வாழ்வுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந் துள்ளது எனலாம்.

சோதிட வரலாறு உலக மக்கள் தோன்றிய காலந்தொட்டுத் தொடங்குகின்றது. மக்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்த இச்சோதிட வரலாறு குறிப்பிடத்தக்கதாகும். "கார்க்கி" என்ற முனிவர் உலகத்தைப் படைத்த பிரம்மாவிடம் இச் சோதிடத்தைக் கற்றதாகவும், தன்னிட மிருந்து மற்ற முனிவர் அதனைக் கற்றுக் கொண்ட தால் பரவலாயிற்று என்றும் கூறியிருக்கிறார் எனச் சோதிட நூல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைநாட்டுச் சோதிட நூல்கள் கி.மு. *3769*இல் இருந்து சேத் (Seth) என்பவரால் முதலாவது சோதிட நிபுணர் என்றுரைக்கின்றன. இவர் கதிரவனின் பாதையைக் கண்டுணர்ந்து இராசிமண்டலத்தைப் பன்னிரெண்டு பாகங்க ளாகப் பிரித்தார். மேலும் இங்கிலாந்து நாட்டுக் காட்சியகத்திலுள்ள பாபிலோனியச் சோதிடச் சின்னங்களில் சில 5000 ஆண்டுகளுக்கு முந்தி யவையாகக் கருதப்படுகின்றன. அலெக்சாண்டர் கிரேக்க நாட்டுச் சோதிடரைப் பெருமதிப்புடன் வைத்திருந்தார் என்றும் தான் நாடு பிடிக்கச் செல்லும் போது தன்னுடன் "கலிஸ்தெனிஸ்" என்ற சோதிட நிபுணரை அழைத்துச் சென்றா ரென்றும் வரலாறு கூறுகின்றது. சீன நாட்டவர் தங்கள் அரசரைச் சோதிடரை நாடித் தேர்ந் தெடுத்து வந்தாரென்றும் வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன.

இந்துப் பண்பாட்டு வரலாற்றிலே காலத் துக்குக் காலம் பல அறிஞர்கள் அறிவியல் துறையின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பு நல்கியுள்ளனர். சாஸ்திரங்களைத் தெய்வீக மரபின் அடிப்படையில் நோக்கும்நிலையும் இந்துப் பண்பாட்டில் உள்ளது. சாஸ்திரங்களுக்கு மூலமாக விளங்கும் வேதம், ஆகமம் ஆகிய வற்றை இறைவன் நூல்கள் எனக்கொள்ளும் மரபுள்ளது. அறிவியலும், ஆன்மீகமும் இந்துப் பண்பாட்டில் காலந்தோறும் வளர்ச்சிகண்டன. அறிவியலும், நம்பிக்கையும் ஒன்றிணையும் துறையாகச் சோதிடம் வளர்ச்சி கண்டது. அறிவியல்துறை ஒவ்வொன்றும் இந்துக்களின் வாழ்வியலோடு தொடர்புற்றுக் காணப்பட்டன.

பண்டைய இந்தியர்கள் வானியல்துறை சார்ந்த விடயங்களில் நிரம்பிய அறிவுடை யோராய் இருந்தனர். இந்திய வானியல் மிகவும் பரந்தது. மராட்டிய ஆசிரியர் S.B. தீக்ஷித் என்பவர் இவ்விடயம்பற்றி விரிவான நூலொன்றை எழுதி யுள்ளார். வானியல் தொடர்பான அறிவியற் சிந்தனைகள் இந்தியாவைப் பொறுத்தவரை பின்வரும் தலைப்புக்களில் ஆராயலாம் என்பர். பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ணஜயர் அவை

*1.வேதகாலம் :*

மண், விண், இடைவெளி பற்றியும், சூரியன், சந்திரன் பற்றியும் நாள், சந்திரமாதம், சூரியவருடம் பற்றியும், குறிப்புக்கள் காணப் படுகின்றன. பிராமணங்களில் சூரியனின் காலம் பற்றியும், ஐந்து முதல் ஆறு காலங்கள்பற்றியும், பன்னிருமாதங்கள், இருபத்தேழு நட்சத்திரங்கள் பற்றியும் சில கிரகங்கள் பற்றியும் குறிப்புள்ளது.

**2. வேதாங்கங்கள் :**


சந்திரமாதம்பற்றியும், சூரிய வருடம்பற்றி யும்கூறும். அதர்வவேதம் சோதிடத்தின் தொடக் கம் பற்றிக்கூறும். மகாபாரதத்தில் யுகங்கள், மாதங்கள், ருதுக்கள் பற்றியும் கூறும்.

***3. பண்டைய வானியற்கோட்பாடு : (கி.மு 500 கி.பி 500)***

i. பிதாமஹ கோட்பாடு: வருடம் 365 நாட்கள் கொண்டது.

ii. புளிஷ கோட்பாடு: நீள் வட்டப்பாதை பற்றிய விபரம், நட்சத் திரங்களின் தோற்றம், மறைவு நாட்கணிப்பு

iii. சூரியக்கோட்பாடு : கிரகங்களின் அசைவு கணிப்பு



**4. வராகமிகிரர் முதல் கணேஷ் தைவஞ்ஞன் வரை (கி.பி 500- கி.பி1500)**

வானியலில் துறைபோன அறிஞர்களில் வராகமிகிரர், புளிசர், ஆரியபட்டர், பிரம்ம குப்தர், லாடதேவர் போன்றோர் குறிப்பிடத் தக்கவர். வராகமிகிரர் ஐந்து சித்தாந்தி களைக் குறிப்பிடுகின்றார். பௌலீசர், ரோமகர், வாசிஷ்டர், சௌரர், பைதா மகர் போன்றோரையும் மேலும் சிம்ஹாசாரியார், ஆரியபட்டர், யவனர் ஆகி யோரையும் குறிப்பிடுகின் றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராகமிகிரர் கி.பி.6ஆம் நூற்றாண்டில் உஜ்ஜைனியில் வாழ்ந்தவராகக் கருதப்படுபவர். கி.பி.587 இல் மறைந்தார். வராகமிகிரர் வானியற் சாஸ்த்திரத்தைவிடச் சோதிடத்திற் சிறந்தவராக



விளங்குகின்றார். "பிருகத்சம்ஹிதை" என்ற நூல் இவரது சிறந்த படைப்பு. இதிற் சோதிடம் பற்றிய பரந்த விடயங்கள் உண்டு. சோதிட நூல்களாக பிருகத்ஜாதக, யோகயாத்திரா போன்றவற்றையும் எழுதியுள்ளார். இவரது பிருகத்ஜாதகம் என்ற நூலுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பும், சிறந்த குறிப்புரையும் பேராசிரியர் சூரியநாராயணராவ் எழுதியுள்ளார். இந்நூல் சோதிட நூல்களின் வரிசையிற் சிறந்தது. சோதிட அறிவுக்கடலைக் கடப்பதற்கு இது ஓடம் போன்று விளங்குகின்றது என்பர்.

சோதிடக்கலைச் சொற்கள் பற்றிய விளக்கம் பல்வேறு கிரகங்கள் பற்றிய விளக்கம், பல்வேறு பிறப்புக்கள் பற்றிய விளக்கம், பாலரிஷ்டம் எனப்படும். இளமையில் இறப்பு, நீண்ட ஆயுளைத் தீர்மானித்தல், கால ஒழுங்குகள், கிரகபலன், துரதிர்ஷ்டம், மாரகம் ஏற்படுதல் போன்ற விடயங்களுள. வானவியலுக்குப் பயன்படும் பஞ்சசித்தாந்திகை என்ற நூலையும் இவர் வெளியிட்டுள்ளார்.

இந்து வானியல் முறையில் இந்தியர்கள் சூரியனது பரிமாணம், சந்திரனது பரிமாணம், அவற்றின் தூரம், கிரகணங்கள் போன்றவை பற்றியும் கூறுகின்றனர். வானியற் கருவிகள் பற்றியும் குறிப்புக்கள் உண்டு. நீர்க்கடிகாரம் சங்கு, சக்கரம், அரைவட்டம், வில் போன்ற வற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு இந்து வானியல் அறிஞர்கள் பரந்த அறிவு பெற்றவர்களாக விளங்கினர்.

**ஈழத்திற் சோதிடக்கலை**

ஈழத்தில் சோதிடக்கலை உருவான காலம் இன்னது எனச் சரியாக வரையறுத்தல் கடினம். எனினும், ஈழத்துச் சமய வரலாற்றில் பிராமணர்களின் வருகையோடு சோதிடக் கலை தோன்றியிருக்க வேண்டும் என்பதை நிரூபிக்க முடிகின்றது. அக்கால சமூகத்தின் முக்கிய அம்சங்களாய்ப் பிறப்பு, திருமணம், இறப்பு என்பன இடம்பெற்றன. இதிற் குடிமக்களின் பங்கு முக்கியமாக காணப்பட்டது. இவை சம்பந்தமாக நடைபெற்ற கிரியைகள், நெறிமுறைகள், பிராந்தியத்திற்குப் பிராந்தியம் வேறுபட்டுக் காணப்பட்டாலும் இவற்றுள்ளே ஒரு பொதுப்பண்பு இருந்திருக்கிறது. அரசியல் தாக்கங்களினால் நெறிமுறை மாறுபட்ட போதிலும் பிள்ளையைக் கர்ப்பத்தில் தாங்கிய நாளிலிருந்து தொடர்ச்சியாக அனுட்டிக்கப்பட்டு வந்த பழக்கங்கள் இன்றும் தொடர்வதை அவதானிக்க முடிகிறது. பிள்ளைப்பேறு தொட்டு இறக்கும்வரை பல கிரியைகளும் இடம்பெறலாயின. பிள்ளை பிறந்தவுடன் அதற்குப் பெயர்சூட்டல் (நாமகரணம்) சோறூட்டல் (அன்னப்பிர சாரணம்), காதுகுத்தல் அல்லது தோடுபோடுதல் (கர்ணவேதனம்) ஏடு தொடக்குதல் (வித்தி யாரம்பம்) ஆகியன அவற்றுள் சிலவாகும். பெண் பருவமெய்தியவுடன் நடத்தும் கிரியைகள் ருதுசாந்தி எனப்பட்டன. இவை நடைபெறும்போது சோதிடர்களின் நல்லாலோசனைப்படியே நடப்பது வழக்கம். பொதுவாகச் சோதிடம் ஒரு முக்கிய பங்கினை வகித்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களின் திருமணத்திற் சோதிடம் முக்கியமான பங்கை வகித்திருக்கின்றது. ஜாதகம் பார்த்தல், பொருத்தநிச்சயம், கிரியைகள் என்பன சோதிட முறைப்படியே நடைபெற்றன. அத்தோடு கோவிற்கிரியைகள் அனைத்தும் சோதிடத்தாற் கட்டுப்படுத்தப்பட்டவையாகவே நிகழ்ந்து வந்திருக்கின்றன.

ஈழத்திலேயும் இந்தியாவைப் பின்பற்றிப் பல சோதிட நூல்களும், சோதிட வல்லுநர்களும் எழுந்திருக்கின்றமையைக் காணமுடிகின்றது. ஈழத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சி புரிந்த காலத்திலேயே புகழ்பெற்ற சோதிட நூல்களின் தோற்றத்தை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையிற் **சரசோதிமாலை, செகராசசேகரமாலை** என்பன சோதிட இலக்கியங்களின் முதன்மையைக்காட்டி நிற்கின்றன. இவை வடமொழி நூல்களின் பெயர்ப்பு எனக்கூறப்பட்ட போதும் தமிழில் எழுந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றோடு சந்தானதீபிகை, இலகுசாதகம், சந்தானமணி, பரகிதம், விதானமாலை என்பனவும் மற்றும் பல சோதிட சஞ்சிகைகளும் ஈழத்தில் எழுந்துள்ளன.

**சரசோதிமாலை**

ஈழத்தின் மத்திய பகுதியிலுள்ள குருநாகல் என்னும் நகரத்தின் அருகில் சிங்கள மன்னரின் இராசதானியாக விளங்கிய தம்பதெனியாவை ஆண்ட மூன்றாம் பராக்கிரமவாகுவின் அவைக்களப்புலவரால் 1310 ஆம் ஆண்டு இயற்றி அரங்கேற்றப்பட்டது சரசோதிமாலை எனும் சோதிட நூல். இப்புலவரின் பெயர் தேனுவரைப் பெருமாள் என்னும் பண்டித போசராசன் என இந்நூற்பாயிரங்கள் மூலம் அறியமுடிகின்றது. இவர் ஒரு வைணவ அந்தணர். இவரது தந்தையார் பெயர் "சரசோதி" எனவேதான் இந்நூலுக்குச் சரசோதிமாலை எனப்பெயரிடப்பட்டுள்ளது.

சரசோதிமாலை 934 விருத்தப்பாக்களால் ஆனது. 12 படலங்களிற் பாடப்பட்டது என அந்நூலின் நூல்முகச் செய்யுள் கூறுகின்றது. அக்கால மன்னர்கள் சோதிடத்தில் பெருவிருப்புக் கொண்டனர் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டே சரசோதிமாலை. சோதிடமும் வைத்தியமும் இக்காலத்தில் ஒன்றோடொன்று ஊடுருவியிருந்தது. அவை இரட்டை அறிவியல்கள் எனப்பட்டன. வைத்தியத்திற்குச் சோதிட அறிவு மிகவும் இன்றியமையாதது என்பதினாலேயே இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கலாம். நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கும்போது அவரது சாதகத்தினையும் வைத்தியர் பார்த்துச் சிகிச்சையளித்தல் வழக்கம். குறிப்பிட்ட நோய்களுக்கும் கிரகங்களுக்கும் தொடர்பிருப்பதாகக் கருதப்பட்டது.

சரசோதிமாலையில் வரும் செய்யுள்களை நோக்கும்போது சமூகத்தில் மக்களின் வாழ்க்கையோடு சோதிடக்கலை நன்கு ஊடுருவியிருந்தது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. விவாக கால நியதி, அக்கினி ஆதனம், நெல்விதைத்தல், ஆயுர்வேதம், குணாதீகம் முதலிய செய்திகள், கூறும் செய்யுள்கள் 3ஆம் பராக்கிரமபாகுவைப் புகழ்வதாகவும் காணப்படுகின்றதோடு சோதிட சிந்தனைகளையும் முன்வைக்கின்றன.

"அக்கினி ஆதனம்" எனவரும் செய்யுள் சரசோதிமாலையின் உள்ளடக்கமே. மேலோட்டமாகக் கூறுவதாக அமைகின்றது. கருப்பாதானம் முதலியனவுள்ள கருமங்கள் எல்லாம் சிந்தித்துச் செயற்படவேண்டும் என்பதை அச் செய்யுள் வலியுறுத்துகிறது. இத்தோடு அபரக்கிரியை வரையான விடயங்கள் பலவும் விரித்துப் பேசப்பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறினால் சரசோதிமாலையில் மனித வாழ்வின் பல்வேறு படிநிலைகளும் விரித்துப் பேசப்பட்டுள்ளமை தெளிவாகும்.

சரசோதிமாலையின் மனைச்செய்யுள் பாடலத்தின் வாயிற் பொருத்தம் கூறும் பாடல் குறிப்பிடத்தக்கதாகும். வாழ்வு சிறக்கவேண்டுமாயின் இல்லம் சிறப்பாக அமையவேண்டும். அவ்வில்லமானது அவரவர் பிறந்த இராசிக்கேற்ப வகுக்கப்படுவது நற்பலனையும் செல்வத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் கொடுக்கும் என்பது பொதுவான பண்பாடு. அதன்படி கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளிற் பிறந்தோர்க்கு மேற்கு, வடக்கு இடபம், மிதுனம், கற்கடகம் ஆகிய இராசிகளிற் பிறந்தோருக்கு கிழக்குத் தெற்கு வாயில்களும் விருச்சியம், தனுசு, மகரராசியிற் பிறந்தோருக்கு தெற்கு, மேற்கு அமைந்த வாயில் வீடுகளை அமைத்தல் பொருத்தமுடையதாகும். எனவரும் கருத்துக்கள் சரசோதிமாலை சமூகத் தில் பெறும் முதன்மையை எடுத்துக் கூறும்.

**செகராசசேகரமாலை**

சரசோதிமாலையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் எழுதப்பட்ட சோதிட நூலாக செகராசசேகரமாலை எனும் சோதிடநூல் விளங்குகின்றது. "சிங்கை நகர்" எனும் நல்லூரி லிருந்து ஆட்சி செய்த செகராசசேகரனின் ஆதர விலே சோமசன்மா எனும் புலவன் இதனை இயற்றினான் என அறியப்படுகின்றது. இப்புல வனின் தந்தை இராமேசன்மா என்று நூற்சிறப் பாயிரம் கூறுகிறது.

நூலாசிரியராகிய சோமசன்மா என்பவர் இராமேஸ்வரத்தில் அரசுரிமை கொண்ட சேதுபதிகளின் வழித்தோன்றலாகிய செகராச சேகரமன்னனின் உறவினருள் ஒருவர் என்பது தெரிகிறது. செகராசசேகரமாலை என்னும் நூல் வடமொழி நூலொன்றின் மொழிபெயர்ப்பு எனக்கருதப்படுகின்றது. இது மகளிர் வினைப் படலம் தொடக்கம் மனைவினைப்படலம் வரையான 9 படலங்களாக வகுக்கப்பட்டுள்ளது. எல்லாமாக 290 விருத்தச் செய்யுள்களையும் கொண்டது. இதன் காலம் கி.பி 1380-1414 ஆகும்.

செகராசசேகரமாலையில் வரும் அவை யடக்கப்பாடல் காசிபர், வசிட்டர், அத்திரி, பைலர், கௌதமர், இறுசீகர் முதலிய முனிவர் பெருமக்களால் அலங்கரித்துச் சொல்லப்பட்ட வடமொழி சோதிட நூல்களின் பொருளுடைய தாக தென்மொழியில் இயற்றப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது.

ஈழத்தில் இருபதிப்புக்களாக இந்நூல் வெளிவந்துள்ளது. முன்னையது வி. சபாபதி ஐயரவர்களாற் பரிசோதிக்கப்பட்டது. 1902 இல் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீபாஸ்கர இயந்திரசாலையில் பதிக்கப்பட்டது. பின்னையது, 2ஆம் பதிப்பாக இ.சி.இராகுநாதையர் அவர்களால் உரை எழுதப் பட்டுக் கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திர சாலையில் 1942இல் அச்சிடப்பட்டது. இரு பதிப்புக்களின் பொருளடக்கமும் ஒரே அம்ச மாகவே அமைந்துவிடுகின்றன.

1. மகளிர் வினைப்படலம்
2. மைந்தர் வினைப்படலம்
3. மணவினைப்படலம்
4. சூழ்வினைப்படலம்
5. பலவினைப்படலம்
6. வேந்தர் வினைப்படலம்
7. கோசாரப்படலம்
8. யாத்திரைப் படலம்
9. மனைவினைப்படலம்

என்பனவே அவையாகும்.



**சந்தான தீபிகை**

ஈழத்தில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் போது எழுந்த சோதிட நூலாகக் கொள்ளப் படுவது சந்தானதீபிகை என்பதாகும். யாழ்ப் பாணத்து அராலியைச் சேர்ந்த இராமலிங்க முனிவர் என்பவரால் இந்நூல் எழுதப்பட்டது. இது கி.பி. 1713 இல் இயற்றப்பட்டதாகும்.

மேலே சொல்லப்பட்ட இரு சோதிட நூல்களும் மக்களுக்கு வேண்டிய நற்கருமங்கள் ஆற்றும் நாளும், கோளும், பலனும் கூறுகையிற் சந்தான தீபிகை சந்தான விருத்திக்கேற்ற சோதிட விடயங்களை மட்டும் கூறும். சோடச கருமத்தில் பஞ்சாயுதந் தரித்தல், கர்ண வேதனம், அரை ஞாண் ஆடை தரித்தல், சௌளச கருமம், வித்தி யாரம்பம் என்பன போன்றனவும், பல கருமப் படலத்தில் பசு வாணிகம், எருமை கொள்ளல், ஆடு கொள்ளல், ஆபரணம் பூணல் என்பனவும் பிறவும் அக்காலச் சோதிடக் கொள்கைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி ஈழத்து அன்றைய சமுதாய நிலையினையும் எடுத்துக்காட்டி நிற்பன வாகும்.

வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகக் கூறப்படும் தமிழ் நூலாகிய சந்தான தீபிகையிற் சுமார் 122 விருத்தப்பாக்கள் அமைந்துள்ளன.

**இலகுசாதகம்**

சந்தான தீபிகையின் பின்னர் எழுந்த சோதிட நூலாகக் கூறக்கூடியது. பண்டிதர் ச.அம்பலவாணபிள்ளையவர்களாலும் ஆசிரியர் இடைக்காடர் அவர்களாலும் இயற்றப்பட்ட "வானசேகர சோடச பாவனா சோதிடம்" என்னும் "இலகு சாதகம்" ஆகும். இது கி.பி. 1929 இல் இயற்றப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஏற்கனவே வெளிவந்த சோதிட நூல்களின் கடினமான விடயங்களையும் கடினமான செய்யுள்களையும் இலகுவாகப் பொருளறிந்து விளங்கக்கூடியவகையில் இந்நூல் செய்ததாக முகவுரையிற் கூறப்படுகின்றது.

சோதிடமானது மானிடர்களுக்கு மட்டுமா? என்ற வினாவை எழுப்பி அதற்கு விடை கூறுமுகமாக மானிடர்க்கு மட்டுமன்றிப் பூமியிற் பிறந்த அனைத்து ஜீவராசிகளுக்கும் சோதிட சாஸ்திரம் செய்யப்படுவதாக அதன் பாயிரம் கூறும்.

சோதிடத்தால் அடையும் பயன்பற்றி அந்நூலின் பாயிரம் பின்வருமாறு கூறுகின்றது. "நாம் நோய்கொள்ளும்போது சிகிச்சை செய்வித்து அதைச் சுகப்படுத்துவதற்கு வைத்திய சாஸ்ரம் உபயோகமாய் இருப்பதுபோல் கிரகங்களால் ஏற்படும் கஷ்டங்களுக்கு வேண்டிச் சாந்தி செய்து கிரகபாவ நிவர்த்தி செய்வதற்குச் சோதிட சாஸ்திரம் உபயோகமாய் உள்ளது. மேலும் வெப்பம், குளிர் என்பனவற்றிலிருந்து உடலைப் பாதுகாக்க எத்தகைய சட்டைகளைப் பாவிக்கிறார்களோ அவ்வாறே கிரக சாந்தியும் நோயிலிருந்து குணமடைவதற்கு உதவுகின்றது" என்பதையும் இந்நூல் மூலம் அறிய முடிகின்றது.

இந்நூலானது திசைகளில் கால அளவை திரிகோணம், கேந்திரம், விக்கிரம், சட்வர்க்கம், வர்க்கோத்தமம், அட்டவர்க்கம், விந்துபாவம் போன்ற பல்வேறு விடயங்களைச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அத்தோடு சோதிட அறிவு அற்றவர்களுக்கும் சோதிட அறிவை ஊட்டவும், சோதிடக் கருத்துக்களை உணர்ந்து செயற்படுவதற்கும் உதவுகின்றது.

**சந்தானமணி**

அச்சுவேலி தெற்கு செகநாதசோதிடரின் புத்திரன் சபாபதி சோதிடர் அவர்களால் இயற்றப்பட்டுப் பருத்தித்துறை கலாநிதி அச்சியந்திர சாலையில் 1935 இல் பதிப்பிக்கப்பட்ட சோதிட நூலாக அமைவது "சந்தானமணி" இந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய அச்சுவேலி பிரம்மஸ்ரீ ச.குமாரசாமிக் குருக்கள் சோதிடம் பற்றிய பல விடயங்களை விளக்கிக் கூறியுள்ளார். சந்தான விருத்திக்கான நல்வழி முறைகளைக் கூறும் நூலாக இந்நூல் விளங்கு கிறது.

**பரகிதம்**

"பரகிதம்" என்ற பெயரில் இருவகை நூல்கள் இலங்கையில் வெளிவந்துள்ளன. முன்னையது யாழ்ப்பாணம் அராலி நாராயண சாஸ்திரிகள் இயற்றிய கணித சிந்தாமணியின் ஸ்புடகணிதப் பாடமாகிய பரகிதத்தை யாழ் கொக்குவில் சோதிட பரிபாலினி ஆசிரியர் இ.சி. இரகுநாதையரவர்கள் புதிதாக எழுதிய உதாரண விளக்கங்களுடன் சோதிடப் பிரகாசயந்திர சாலையில் பதிக்கப்பட்டதாகும். இதன் மூன்றாம் பதிப்பு 1939 ஆம் ஆண்டு மேற்படி யந்திர சாலையில் பதிக்கப்பட்டது. மற்றையது சு. நடராச ஐயரால், ஸ்ரீமத்.சந். இராகுநாதையர் அவர்களின் முன்னிலையில் பரிசோதித்தது. இது 1951இல் சோதிடப் பிரகாசயந்திரத்திரசாலையில் அச்சிடப்பட்டதாகும்.

இந்நூலின் முகவுரையில் பின்வரும் விடயங்கள் கூறப்படுகின்றன. "சோதிடம், சிந்தாந்த - ஸ்கந்தம், ஹோராஸ்கந்தம், ஹிதாஸ்கந்தம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மூன்று ஸ்கந்தங்களை உடையது. இவற்றுள் கிரக நட்சத்திராதிகளின் கதிகளைக் கூறுவது சித்தாந்த ஸ்கந்தம், ஜனனகால கிரகநிலையைக்கொண்டு மக்களின் சுபாசுப பலன்களைக்கூறுவது ஹோரா ராஸ்கந்தம், மனைவிதி, சகுனம், நிமித்தம், ஆரூடம், பஞ்சபட்சி முதலியவற்றைக் கூறுவது ஸம்ஹி தாஸ்கந்தம். இவை மூன்றும் ஒன்றிற் கொன்று தொடர்புடையனவாய் முக்காலமும் உணர்ந்த தத்துவ ஞானிகளாகிய தேவர் முனிவர் களால் மக்கள் உய்யும்பொருட்டு விதித்துரைக் கப்பட்டுள்ளனவாம் எனக் கூறப்படுகின்றது.

**விதானமாலை**

வடமொழி, தென்மொழிச் சோதிட நூல்களில் மகாவல்ல சாஸ்திரியுமாகிய கடுவை காவலன் நாராயண சுவாமிகள் இயற்றியது. "விதானமாலை மூலமும் உரையும்" இது கொழும்பு சரஸ்வதி புத்தகசாலையில் 1958இல் பதிப்பிக்கப்பட்டதாகும். இந்நூலில் வரும் நூற்பயன் என்ற பகுதியில் ஜனனம் முதலிய மரணாந்தமாகச் சொல்லப்பட்ட இந்த விதான சாஸ்திரத்தை "யாவனொருவன் கடைப் பிடிக்கின்றானோ அவன் இப் பூலோகத்திற் சுத்தனாகப் புருடார்த்தங்களை அனுபவித்துக் கொண்டிருப்பான் என்றனன் வியாழ பகவான்" எனக் கூறப்பட்டுள்ளமையால் மனித வாழ்வுக்குத் தேவையான விதானங்கள், வழிமுறைகள், கிரகநிலைகள் என்பன எடுத்துக்கூறப்பட்ட ஒரு நூல் என்பது தெளிவாகின்து.

**வாக்கிய பஞ்சாங்கம்.**

ஈழத்தில் இற்றைக்கு 352 வருடங்களுக்கு முன்னே கி.பி. 1667 இல் நிகழ்ந்த பிலவங்க வருடம் வைகாசி மாதம் 18ஆம் திகதி முதன்முதல் பிரம்மஸ்ரீ இராமலிங்க முனிவரால் வாக்கிய முறைப்படி பஞ்சாங்கம் கணித்து வெளியிடப் பட்டுவந்தது. இவருக்குப் பின்னர் இவரின் தௌகித்திரர் (பேரன்) வெங்கடேச சாஸ்திரிக ளாலும், பின் சந்ததி சந்ததியாக அகிலேச சாஸ்திரிகளாலும், கோணேசசாஸ்திரிகளாலும், இரகுநாத சாஸ்திரிகளாலும், நடராஜ சாஸ்திரிக ளாலும், நாராயண சாஸ்திரிகளாலும், சந்ததி சேகர சாஸ்திரிகளாலும், கங்காதார சாஸ்திரிக ளாலும், நான்காம் ஜோர்ஜ் வேந்தரால் இராஜாங்க பஞ்சாங்க கணிதர் எனும் பட்டம் பெற்ற விமலநாத சாஸ்திரிகளின் புத்திரர் நடராஜ சாஸ்திரிகளாலும் அவர் மகன் சிதம்பரநாத சாஸ்திரிகளாலும் கணித்து வெளியிடப்பட்டு வந்தது.



இச் சிதம்பரநாத சாஸ்திரிகளே 1856இல் பிலவங்க வருட பஞ்சாங்கத்தை இலங்கையில் முதன்முதல் காகிதத்தில் அச்சிட்டுப் புத்தக ரூபமாக வெளியிட்டவராவார். தொடர்ந்து சந். இரகுநாதக்குருக்கள் வாக்கிய பஞ்சாங்கத்தை வெளியிட்டார். இது தமிழர்களால் விசேட மாகப் பயன்படுத்துவதாகும்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

ஆகாயத்தில் கிரகங்கள் நிற்கும் நிலையை அப்படியே ஸ்புடத்தில் பிரதிபலிக்கச் செய்து அதற்கேற்பத் திதி முதலிய மற்ற விஷயங்களையும் தரும் பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எனப்படும். இதற்கு வேண்டிய துல்லியமான கிரக ஸ்புடங்களை "நாட்டிக்கல் அல்மனாக் (Nautical Almanac) முதலிய மேல் நாட்டுப் பஞ்சாங்கங்களிலிருந்து எடுத்துக்கொண்டு இந்தியாவில் வேண்டிய மத்திய ஸ்தானத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைத் தேசாந்திர சம்ஸ்காரம் செய்து கொண்டு திருக்கணிதப் பஞ்சாங்கத்தைக் கணிப்பர்.



"திருக்" என்றால் தெளிவான பார்வையைக் குறிக்கும். சூரியகிரகணம், சந்திரகிரகணம் உட்பட்ட விண்ணுலகத் தோற்றங்களை வான சாஸ்திரிகள். நுட்பமாக ஆராய்ந்து கிரகங்களின் நிலைகளைக் கணக்கிட்டு இயற்றப்பட்டதே திருக்கணிதம் ஆகும். திருக்கணிதக் கணிப்பு முறையோடு எழுந்தவையே "பிருகத்ஜாதகம், பிருகத் சம்ஹிதை" என்பனவாகும்.

இத்திருக்கணித பஞ்சாங்கம் தி.சிதம்பர நாத சாஸ்திரிகள் அவர்களின் மருகர் ஹோ. கார்த்திகேய ஐயர் அவர்களால் 1888இல் இலங்கையில் திருக்கணித பஞ்சாங்கம் வெளியிடப்பட்டது. இன்று வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்களால் சாவகச்சேரி, மட்டுவில் திருக்கணித நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டு வருகின்றது.

**ஈழத்தில் எழுந்த ஏனைய சோதிட நூல்கள்:**

1. சோதிடத்திறவு கோல் -
   ஆசீர்வாதம் வெளியீடு.
2. சோதிட மலர் (மாத சஞ்சிகை) திருக்கணித நிலைய வெளியீடு.
3. சோதிட பரிபாலினி (மாத சஞ்சிகை) சோதிடப் பிரகாச யந்திரசாலை.
4. சோதிடவாசகம் - அளவெட்டி.
   சின்னத்தம்பிப்புலவர்.
5. சாத்திரி சோதிநாதன் - கொழும்பு.
6. திருக்கணித பஞ்சாங்க அநுபந்தம் -
   திருக்கணித நிலையம்.
7. திருமணத்திற்கு எண் -
   திரு. கே.என். நவரத்தினம், யாழ்ப்பாணம்.
8. நீங்களும் முகூர்த்தம் வைக்கலாம் -
   கே. சுப்பிரமணிய சாஸ்திரி.
9. நீங்களும் முகூர்த்தம் பார்க்கலாம் -
   கே. சுப்பிரமணிய சாஸ்திரி.
10. விவாகப் பொருத்தம் -
    சங்கரப்பிள்ளை, கொழும்பு.
11. திருக்கணித பஞ்சாங்கக் கையேடு
    திருக்கணித நிலையம்.
12. வருஷப்பெயர் விளக்கம் - இரகுநாதையர்.
13. சாதக பாஸ்கரன்.
14. பத்திரிகை வீரகேசரி, இந்து சாதனம், உதயன்
15. Thirukkanitha Ephemeris Thirukkanitha Nilaiyam.
16. The key span of life V.Kovinthapillai, Point Pedro - 1967.

**பஞ்சாங்கம்**

இந்துசமூகத்தில் நிலவிவரும் சடங்கு, சம்பிரதாயங்கள், திருமணம் முதலிய நிகழ்ச்சிகள் கால நேரம் பார்த்து சுபமுகூர்த்தவேளைகளிலேயே நடைபெறுவது தொன்றுதொட்டு நிலவிவரும் வழக்கமாகும். இவை இந்து சமூகத்தின் உயிர்நாடியாக விளங்கிவிடுகின்றன. இந்த உயிர் நாடியான விடயங்களை மக்கள் மத்தியில் எடுத்துக்கூறி விளக்கிச் சமூகத்தைச் செம்மைப் படுத்தும் முயற்சியின் விளைவே பஞ்சாங்கம்.

குப்தப்பேரரசு காலத்தில் வாழ்ந்த ஆரிய பட்டர் என்பவர் வானசாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கோள்களின் நிலையைக் கண்டறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திலேயே முதன்முதலிற் பஞ்சாங்கம் போடும் முறையைத் தோற்றுவித்து வெளியிட்டார். இவருடன் கூடியிருந்து செயல் புரிந்தவர்களாகிய வராகமிஹிராச்சாரியார் தான் பிருகத் ஜாதகம் என்ற ஜோதிட சாஸ்திர நூலை வெளியிட்டார் எனப்படுகிறது. அந்த வகையில் நோக்கும்போது வான சாஸ்த்திரம் பஞ்சாங்கம் போன்ற துறைகளுக்கு ஆரியபட்டர் உண்மையி லேயே ஒரு வழிகாட்டியாக இருந்தார். இதனாலேதான் இந்தியா பறக்கவிட்ட முதல் விண்வெளிக்கப் பலுக்கு "ஆரியப்பட்டா" என்ற பெயர்சூட்டினார்கள் என்பர்.

இன்று இந்தியாவிலும் இலங்கையிலும் நூற்றுக்கணக்கான பஞ்சாங்கங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. தென்னிந்தியாவில் மூன்று வகையில் பஞ்சாங்கங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அவை வாக்கிய பஞ்சாங்கம், சித்தாந்த பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் என்பவையாகும்.

வாக்கியபஞ்சாங்கம் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மட்டும் வெளியிடப்பட்டு விஷேடமாகத் தமிழர்களாலேயே பயன்படுத்தப் பட்டு வருகின்றது. கணிதத்தை எளிதில் செய்வதற்கு வாக்கியங்களின் உருவத்தில் பதங்களைத் தரும் வாக்கியகரணம் (வாக்கிய பஞ்சாத்தியாயீ) என்ற நூலை முதனூலாகக் கொண்டு செய்யப்படுவதால் வாக்கிய பஞ் சாங்கம் என்று பெயர் வழங்கப்பெறும். இதில் தமிழ் எழுத்துக்களுக்குக் குறிப்பிட்ட இலக்கங்களைக் குறிப் பதன்மூலம் இக்கணிப்பீடு சிறப்புறுகிறது. அந்த வகையில் அ 1, ஆ 2, இ - 3, ஈ - 4, உ - 5, ஊ - 6, எ - 7, ஏ - 8 ஐ - 9, ஒ , ஓ, ஔ- 0 என்பனவாகும். இவ்வுயிர் எழுத்துக்களைக் கொண்டே வாக்கியங்கள் அமைக்கப்படுகின்றன. உதாரணம், கைநீதி என்ற வாக்கியத்தை இலக்கத் தில் குறித்தால் (கை 9, நீ 4 , தி 3 ) இதைக் கடைசியில் இருந்தே எண்ணுதல் வேண்டும். அதாவது 349 என்பதைக் குறிக்கும். இதுவே வாக்கியம் எனப்படும்.

சோதிட சித்தாந்த நூல்களைப் பின்பற்றுவதாகக் கருதிக்கொண்டு, சௌரசந்திரமானத்தை முக்கியமாகப் பயன்படுத்திக்கொண்டு, மேற்படி சந்திரமானத்தை உபயோகிக்கும் ஆந்திரர், கன்னடியர், மகாராஷ்டிரர் முதலியோருக்குத் தேவையான விஷயங்களைப் பிரதானமாகக் கூறும் பஞ்சாங்கம் சித்தாந்த பஞ்சாங்கமாகும்.

ஆகாயத்தில் கிரகங்கள் நிற்கும் நிலையை அப்படியே, ஸ்புடத்தில் பிரதிபலிக்கச் செய்து அதற்கேற்ப திதி முதலிய மற்றைய விடயங் களைத்தரும் பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எனப்படும். இதற்குத் தேவையான துல்லியமான கிரகஸ்புடங்களை நாட்டிக்கல் ஆல்மனாக் (Nautical Almanac) முதலிய மேனாட்டுப் பஞ்சாங்கங்களிலிருந்து இந்தி யாவில் வேண்டிய மத்திய ஸ்தானத்திற்கு அவற்றைத் தேசாந்திர சம்ஸ்காரம் செய்துகொண்டு இத்திருக்கணித பஞ்சாங்கத்தைக் கணிப்பீடு செய்வர்.

பஞ்சாங்கம் என்றால் ஐந்து அங்கங்கள் கொண்டது என்பது பொருள். வாரம் அல்லது கிழமை, திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்து அங்கங்களையும் முக்கியவுறுப்புக்களாக வுடையது பஞ்சாங்கம். தொடக்க காலத்தில் மூன்று அங்கங்கள் அதாவது திதி, வாரம், நட்சத் திரம் என்பனவே முக்கியத்துவம் உடையன வாகக் காணப்பட்டன. இதைத் "திரியங்கம்" என அழைத்தனர். பிற்பட்ட காலங்களிலேயே கரணம், யோகம் என்பன சேர்க்கப்பட்டுப் பஞ்சாங்கமானது.

ஐந்து அங்கங்களில் வாரம் என்ற கிழமை நாளுக்கு ஒன்றாக அடுத்து அடுத்து வருமாதலின் அது முதலில் இடம்பெறும். அவ்வங்கம் இதிகாச காலத்திற்குப் பின்னரே தோன்றியது என்பர். அதற்குமுன் கிழமை என்பது இந்தியாவிலோ இலங்கையிலோ வழக்கிலில்லை.

வாரத்திற்கு அடுத்தாற் போல் பஞ்சாங் கத்தில் இடம்பெறுவது திதியாகும். திதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்பிறையாகிய சுக்லபட்சத்தில் பிரதமை முதல் பூரணை ஈறாகப் பதினைந்தும் தேய்பிறையாகிய கிருஷ்ணபட்சத்தில் பிரதமை முதல் அமாவாசை வரை பதினைந்துமாக முப்பது திதிகள் கூறப் படுகின்றன. திதி என்பது வானவீதியில் சூரியன் நிற்குமிடத்திலிருந்து சந்திரன் நிற்கும் இடத்தின் தூரத்தைக் குறிக்கும். அத்தூரத்தில் ஒவ்வொரு பன்னிரண்டு பாகைக்கும் ஒருதிதி வீதம் கணக் கிடப்படும். பஞ்சாங்கத்தில் போடப்படும் நாழிகை குறிப் பிட்ட திதியின் முடிவாகும்.

திதிக்கு அடுத்தபடியில் இடம்பெறுவது நட்சத்திரமாகும். இது சந்திரனைக் கொண்டு கணிப்பீடு செய்யப்படுகின்றது. சந்திரஸ்புடத்தை வைத்துப் பதின்மூன்று பாகை இருபது கலைக்கு ஒன்றாக அஸ்வினி முதல் ரேவதி ஈறாகவுள்ள இருபத்தேழு (27) யோகங்களும் கணக் கிடப்படும். பஞ்சாங்கத்திற் குறிக்கப்பெறுவது குறிப்பிட்ட யோகத்தின் முடிவுக்காலம். ஐந்து அங்கங்களிலும் யோகமே காலத்தில் மிகக் கடைசியில் உண்டானது.

ஐந்தாவதாகக் குறிக்கப்படும் அங்கம் கரணம் ஆகும். திதியை அனுசரித்துத் திதியின் முதற்பாதிக்கு ஒரு கரணமும் இரண்டாம் பாதிக்கு அடுத்த கரணமுமாக முப்பது (30) திதிகளும் அறுபது கரணங்களும் வரும். எல்லாமாகப் பதினொரு கரணங்கள் உள்ளன. பஞ்சாங்கத்தில் குறிக்கப்பெற்றிருப்பது அன்று முதலில் முடிவு பெறும் கரணமும் அதன் நாழிகையுமாகும்.

தினந்தோறும் தினசுத்தியை பஞ்சாங்கத் திலிருந்து இவ்வைந்து அங்கங்களுடன் அறிந்து கொள்வோர் ஆயுளையும், செல்வத்தையும் பாவநிவிர்த்தியையும், ஆரோக்கியத்தையும் காரிய சித்தியையும் அடைவர் என்று சாத்தி ரங்கள் கூறும்.

## முக்கியமான பஞ்சாங்க சோதிட விடயங்கள்

**வாரம் – 7**

1. திங்கள்
2. செவ்வாய்
3. புதன்
4. வியாழன்
5. வெள்ளி
6. சனி
7. ஞாயிறு

**திதிகள் – 15**

1. பிரதமை
2. துவிதியை
3. திருதியை
4. சதுர்த்தி
5. பஞ்சமி
6. சஷ்டி
7. சப்தமி
8. அட்டமி
9. நவமி
10. தசமி
11. ஏகாதசி
12. துவாதசி
13. திரயோதசி
14. சதுர்த்தசி
15. பௌர்ணமி/ அமாவாசை

**நட்சத்திரங்கள் – 27**

1. அசுவினி
2. பரணி
3. கார்த்திகை
4. ரோகிணி
5. மிருகசீரிடம்
6. திருவாதிரை
7. புனர்பூசம்
8. பூசம்
9. ஆயிலியம்
10. மகம்
11. பூரம்
12. உத்தரம்
13. அத்தம்
14. சித்திரை
15. சுவாதி
16. விசாகம்
17. அனுஷம்
18. கேட்டை
19. மூலம்
20. பூராடம்
21. உத்தராடம்
22. திருவோணம்
23. அவிட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. சதயம்
25. பூரட்டாதி
26. உத்தரட்டாதி
27. ரேவதி

**யோகம் – 27**

1. விஷ்கம்பம்
2. பிரீதி
3. ஆயுஷ்மான்
4. சௌபாக்கியம்
5. சோபனம்
6. அதிகண்டம்
7. சுகர்மம்
8. சுருதி
9. சூலம்
10. கண்டம்
11. விருத்தி
12. துருவம்
13. வியாகாதம்
14. ஹர்சணம்
15. வச்சிரம்
16. சித்தி
17. வியதிபாதம்
18. வரியான்
19. பரீகம்
20. சிவம்
21. சித்தம்
22. சாத்தியம்
23. சுபம்
24. சுப்பிரம்
25. பிராம்மம்
26. மாகேந்திரம்
27. வைதிருதி

**கரணம் – 11**

| | | | |
|---|---|---|---|
| 1. | பவம் | - | சிங்கம் |
| 2. | பாலவம் | - | புலி |
| 3. | கௌலவம் | - | பன்றி |
| 4. | தைதுலை | - | கழுகு |
| 5. | கரசை | - | யானை |
| 6. | வணிசை | - | எருது |
| 7. | பத்திரை | - | யானை |
| 8. | சகுனி | - | காக்கை |
| 9. | சதுஷ்பாதம் | - | நாய் |
| 10. | நாகவம் | - | பாம்பு |
| 11. | கிம்ஸ்துக்னம் | - | புழு |

**கிரகங்கள் – 09**

1. சூரியன்
2. சந்திரன்
3. செவ்வாய்
4. புதன்
5. குரு
6. சுக்கிரன்
7. சனி
8. ராகு
9. கேது

**யுகங்கள் – 04**

1. கிரேதயுகம்
2. திரேதயுகம்
3. துவாபரயுகம்
4. கலியுகம்

**ருதுக்கள் – 06**

| | | | |
|---|---|---|---|
| 1. | சந்தருது | - | சித்திரை, வைகாசி |
| 2. | கிரிஷ்மருது | - | ஆனி, ஆடி |
| 3. | வருஷருது | - | ஆவணி, புரட்டாதி |
| 4. | சரத்ருது | - | ஐப்பசி, கார்த்திகை |
| 5. | ஹேமந்தருது | - | மார்கழி, தை |
| 6. | சிசிரருது | - | மாசி, பங்குனி |

**தமிழ் வருஷங்கள் – 60**

1. பிரபவ
2. விபவ
3. சுக்கில
4. பிரமோதூத
5. பிரஜோற்பத்தி
6. ஆங்கீரச
7. ஸ்ரீமுக
8. பவ
9. யுவ
10. தாது
11. ஈஸ்வர
12. வெகுதானிய
13. பிரமாதி
14. விக்கிரம
15. விஷு
16. சித்திரபானு
17. சுபானு
18. தாரண
19. பார்த்தீப
20. விய
21. சர்வஜித்து
22. சர்வதாரி
23. விரோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. விக்ருதி
25. கர
26. நந்தன
27. விஜய
28. ஜய
29. மன்மத
30. துன்முகி
31. ஹேவிளம்பி
32. விளம்பி
33. விகாரி
34. சார்வரி
35. பிலவ
36. சுபகிருது
37. சோகிருது
38. குரோதி
39. விசுவாவசு
40. பராபவ
41. பிலவங்க
42. கீலக
43. சௌமிய
44. சாதாரண
45. விரோதகிருது
46. பரிதாபி
47. பிரமாதீச
48. ஆனந்த
49. ராக்ஷஸ
50. நள
51. பிங்கள
52. காளயுக்தி
53. சித்தார்த்தி
54. ரௌத்திரி
55. துன்மதி
56. துந்துபி
57. ருதிரோற்காரி
58. ரத்தாக்ஷி
59. குரோதன
60. அக்ஷய

## கால அளவுகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 60 | தற்பரை | - | 1 | விநாடி | | |
| 60 | விநாடி | - | 1 | நாழிகை | | |
| 60 | நாழிகை | - | 1 | நாள் | | |
| 60 | விகலை | - | 1 | கலை | | |
| 60 | கலை | - | 1 | பாகை | | |
| 30 | பாகை | - | 1 | இராசி | | |

| | | |
|---|---|---|
| கிரேதயுகம் | - | 17,28,000 வருடங்கள் |
| திரேதயுகம் | - | 12,96,000 வருடங்கள் |
| துவாபரயுகம் | - | 8,64,000 வருடங்கள் |
| கலியுகம் | - | 4,32,000 வருடங்கள் |
| சதுர்யுகம் | - | 43,20,000 வருடங்கள் |
| 7 சதுர்யுகம் | - | 1 மன்வந்தரம் |
| 1000 சதுர்யுகம் | - | 1 கற்பம். |

### வேளைகள் /குணங்கள் 03

1. சாத்வீகம்
2. தாமசம்
3. இராஜசம்

### வருஷங்கள் – 07 (தேசங்கள்)

1. பாரதவருஷம்
2. கிம்புரு வருஷம்
3. ஹரிவருஷம்
4. இளாவர்தவருஷம்
5. ரம்யத வருஷம்
6. ஜரணவத வருஷம்
7. குருவருஷம்

### சகாப்தம் – 8

1. பாண்டவ சகாப்தம்
2. சாலிவாகன சகாப்தம்
3. விக்கிரம சகாப்தம்
4. போஜராய சகாப்தம்
5. கொல்ல சகாப்தம்
6. இராமதேவ சகாப்தம்
7. பிராதபருத்ர சகாப்தம்
8. கிருஷ்ணதேவராஜ சகாப்தம்

### அயனங்கள் – 02

1. உத்தராயணம் (தை முதல் ஆனி வரை)
2. தஷிணாயனம் (ஆடி முதல் மார்கழிவரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியத்துவம் வாய்ந்த விநாயகரின் 16 வடிவங்கள்

விநாயகரின் 32 வடிவங்களுள் 16 வடிவங்கள் மிகவும் பிரசித்தமானவையாகக் காணாபத்தியம் கூறுகிறது. விநாயகரின் குணநலங்களுக்கேற்ப இப் பதினாறு வடிவங்களும் சித்திரமாகவும், சிலைகளாகவும் காணப்படுகின்றன. இவற்றின் வடிவங்கள் கீழே தரப்படுகின்றன. இவற்றுள் **ஊர்த்துவ கணபதி** தவிர ஏனைய ஒவ்வொரு வடிவமும் **ஒவ்வொரு திதியில்** வணங்குவதற்கு ஏற்றவையாக காணாபத்திய வழிச் செல்வோர் முறைப்படுத்தியுள்ளனர். இது **சோடச விநாயக வழிபாடாகக்** கூறப்படுகிறது. எனவே, சைவப் பெருமக்கள் விநாயகப் பெருமானை இம்முறைப்படி வணங்கி அருள்பெறும் வகையில் அவற்றை இங்கே தருகின்றோம்.


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசமி



ஸ்ரீ க்ஷிப்ரகணபதி

ஏகாதசி



ஸ்ரீ ஹேரம்ப கணபதி

துவாதசி



ஸ்ரீ லக்ஷ்மி கணபதி

திரயோதசி



ஸ்ரீ மகா கணபதி

சதுர்த்தசி



ஸ்ரீ விஜய கணபதி

அமாவாசை/பௌர்ணமி



ஸ்ரீ நிருத்த கணபதி

தினமும் இந்த சோடச கணபதி வழிபாட்டை செய்வதனால் நீண்ட காலமாக ஏற்பட்டிருந்த துன்பங்கள், தடைகள் ஆகியனவற்றை எதிர்கொண்டு அவற்றைத் தைரியமாக முறியடிக்கக் கூடியதான ஆத்ம பலம் கிடைக்கும். ஒரு விடயத்தைத் தொடங்குவதற்கு ஏற்படக்கூடிய தடைகளும் இந்த சோடச கணபதி வழிபாட்டினால் நீங்கப்பெற்று அந்த விடயம் மிகச் சுலபமாக நிறைவேறிடும்.

**சோடச கணபதி தோத்திரம்:**

01. பிரதமம் (B) பால விக்னேசம், 02. த்விதம் (Dh)தருணம் (Bh)பவேத்:
03. த்ரிதியம் (B) பக்தி விக்னேசம், 04. சதுர்த்தம் வீர விக்னம்:
05. பஞ்சமம் சக்தி விக்னேசம், 06. ஷஷ்டம் த்விஜ (G)கணாதிபம்:
07. ஸப்தமம் பிங்களம் தேவம், 08. அஷ்டமோஷிஷ்ட நாயகம்:
09. நவமம் விக்ன ராஜம் (ஸ்)யாத், 10. (Dh)தசமம் க்ஷிப்ர நாயகம்:
11. ஏகாதசந்து ஹேரம் (B) பம், 12. (Dh)த்வாதசம் லக்ஷ்மி நாயகம்:
13. த்றயோதசம் மஹாநக்நம், 14. (B)புவனேசம் சதுர்த்தசம்:
15. நிருத்தார்க்கியம் பஞ்ச தசமம், 16. ஷோடசோர்த்த (G)கணாதிபம்.

மேற்படி பதினாறு நாமங்களையும் அந்தந்தத் திதிக்குரிய நாட்களிற் பாராயணம் பண்ணுதலும், விக்னேஸ்வரப் பெருமானை வணங்குதலும் சித்தர்கள் முறையாகும். இது விநாயகப் பெருமானை மனம்மகிழச் செய்வதாகும் என அச் சித்தர்கள் கூறியுள்ளார்கள்.
நன்றி: அகத்திய விஜயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

கும்பாபிஷேக மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# ஸ்ரார் டிஜிற்றல் விஷன் ஸ்ரூடியோ

* தேசியஅடையாள அட்டை
* கடவுச்சீட்டு
* வாகனஅனுமதிப்பத்திரம்

*ஆகியவற்றுக்கான நிழற்படங்களை டிஜிற்றல் முறையிற் படம் பிடித்தல்*

※ நிழற்படங்களுக்கு டியூறோ பிறேம்போடுதல்

※ மங்கல நிகழ்வுகளுக்கு வீடியோ, போட்டோ படப்பிடிப்புச் செய்தல்

※ வீடியோ, போட்டோ மிக்சிங் செய்தல்

※ அல்பம் வடிவமைத்தல்

*ஆகியவை சிறந்த முறையிற் செய்து தரப்படும்.*



**அல்லாரை வீதி, மீசாலை தொ.பேசி : 077 1102810**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

மீசாலை திருநீலகண்ட
வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேக மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# முருகன் மணப்பந்தல் சேவை



## Murugan Manappanthal Service

## MURUGAN IRON WELDING WORKS

உரிமையாளர் : சி.முருகமூர்த்தி





**சேவைகள் (1)**

இயந்திரவியல்

(1)மின் ஒட்டு வேலைகள்

யன்னல் கிறில், கூரைதாங்கி, இரும்புக்கதவுகள், சுருக்குக்கதவுகள், காய்ச்சி அடிப்பு வேலைகள், கோயில் நிலை அச்சு கதவு வேலைகள் (கம்மாலை வேலைகள்) உழவு இயந்திர புதிய இழுவைப்பெட்டி வேலைகள் ஏனைய அனைத்து பிரதான இரும்பு வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**சேவைகள் (2)**

திருமணம், மற்றும் சுபகாரிய பந்தல் சேவைகள்

(a) முத்து மணவறை.


(b) பூ மணவறை.

(c) நவீன முறையிலமைந்த அலங்காரப் பந்தல்

(d) சமையல் உபகரணங்கள்

(e) ஊர்த்தியுடன் இணைந்த நீர்த்தாங்கி

(f) வீடியோ, படப்பிடிப்பு ஒழுங்குகள்



**சேவைகள் (3)**

உழவு இயந்திர, பாரஊர்த்தி வாடகை சேவைகள்

**மீசாலை கிழக்கு, மீசாலை**

**தொ.பேசி : 021 321 5854, 077 1130333**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பாகம் 3

# விநாயகர்:

## தத்துவம், வழிபாடு, பெருமை, ஆயுதங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# த்வஜஸ் தம்பத்தின் முக்கியத்துவம்

சைவசித்தாந்த பண்டிதர்,
சைவப்புலவர், இந்து தர்மாசிரியர்,
**சிவநெறித்தொண்டன் குமாரசாமி சுமுகலிங்கம், J.P.**
B.A. (தமிழ்) M.A. (சைவசித்தாந்தம்) ஆசிரியர், அறநெறிக்குழு)

கொடிகளும் கொடிக்கம்பங்களும் அரசுகள், அரசர்கள், தலைவர்கள் பெருமையை, உரிமையைப் பறைசாற்றுவன. இறைவனின் புகழை, பெருமையைப் பறைசாற்றி நிற்கும் ஆலய த்வஜஸ்தம்பங்களே அவற்றிற்கு முன்னோடி என்றால் அது மிகையாகாது.

உற்சவங்கள் அல்லது விழாக்கள் கொண்டாடுவதென்பது நமது பாரம்பரியத்தோடு இணைந்த ஒன்று. சங்ககாலத்திற்கூட பல வகையான விழாக்கள் நாட்டின்கண் நடைபெற்றதை அக்கால இலக்கியங்களால் அறிகிறோம். விழாக்கள் எல்லாம் உயிர்களுக்கு இன்பம் நல்குதற் பொருட்டே செய்யப்படுகின்றன என்கின்றது பதிற்றுப்பத்து (15). விழா எடுப்பதற்கு முன், விழா இனிது நடைபெறவேண்டி இறை வழிபாடு செய்வர். அவ்வமயம் கால்கோள் செய்யப்பட்டு வந்திருக்கிறது. சிவபிரானது குமாரனாகிய முருகப் பெருமானுக்கு விழா எடுப்பதற்குக் கால்கோள் செய்யப்பட்டதைக் கலித்தொகை (83:14-95) கூறுகிறது. கொடிக்கம்பம் நட்டுக் கொடியேற்றி, இறை வழிபாடு செய்து விழாவைத்துவக்கும் முறையே கால்கோள் எனப்பட்டது.

அவ்வகையாகவே இந்நாட்களிலும், ஆலய உற்சவங்களிலும், தொடக்கத்திற் கொடி யேற்றுதல் (த்வஜாரோஹணம்) நிகழ்கிறது. உற்சவத்தின் நிறைவு நாளன்று அவ்வாறு ஏற்றப்பட்ட கொடிகள் இறக்கப்படுகின்றன. எனவே, த்வஜஸ் தம்பம் உற்சவங்களுக்கு இன்றியமையாத தாகின்றது.

உற்சவ காலங்களிற் கொடி ஏற்றும் போது கொடிமரத்திற்கு வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், பாற் சாதம் ஆகியவற்றை நைவேத்தியம் செய்து பலியாக இடவேண்டும், பின்னர் அந்த பலிச்சோற்றை பிரசாதமாக அன்பர்களுக்கு விநியோகிக்க வேண்டும். அதனைப் பெற்று உண்பவர்களுக்குப் பிள்ளை இல்லாக்குறை நீங்கும் என்கின்றது. மகுடா கமத்தின் சிவோத்ஸவ விதி படலத்திலுள்ள 94 ஆவது சுலோகம். இதே விவரத்தை பூர்வகாரண ஆகமம். மஹோற்சவ விதி படலம் 69 ஆவது சுலோகம் உறுதி செய்கிறது.




எங்கு த்வஜயஸ்டி வைக்கப்படுகிறதோ அங்கு (1) அகாலமரணம் ஏற்படாது, (2) செல்வம் பெருகும், (3) திருட்டு-பயம் ஒழியும், (4) அவமானம், கலகம் ஏற்படாது, (5) பிணக்குகள் தீரும், (6) நோய்கள் அகலும், (7) நல்ல மழை பொழியும், (8) எல்லா உயிரினங்களுக்கும் சுபீட்ஷம் உண்டாகும், (9) பசுக்கள் நன்கு பால் கொடுக்கும், (10) கொடியேற்றத் தைப்பார்ப் பவர்கள் அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் செய்த பாவச் செயல்களின் தாக்கத்தி லிருந்து விடுபடுவர். என்கின்றன உத்தரகாமிக ஆகமம், ஆறாவது படலமான மஹோத்ஸவ விதிப் படலம், சுலோகங்கள் *93-96.*



ஆலய த்வஜஸ்தம்பங்களில் ஏற்படும் கொடிகள் அனைத்து உயிர்களுக்கும் இன்ப மளிப்பன. ஆன்மாக்கள் முத்தியின்பம் பெற வேண்டியே இறைவன் கொடி கட்டி உற்சவம் கொண்டாடுகிறார். எனவேதான் ஆலயக் கொடிக் கம்பங்கள் காரண லிங்கங்கள் எனப் படுகின்றன. கொடிகள் ஒரு காரணத்துடன் ஏற்றப்படுவன. உறுதி, ஒற்றுமை, ஒன்றுபட்ட முயற்சி இம்மூன்றின் சின்னமே கொடி. அது ஏற்றப்படும் த்வஜஸ்தம்பம், ஆன்மாக்கள் மேல் இறைவன் கொண்டுள்ள வெற்றியின் சின்னம்.

த்வஜஸ்தம்பத்தில் ஏற்படும் கொடியின் அமைப்பு, ஆலயத்தின் மூல தெய்வத்தைப் பொறுத்தது. கொடிகளில் வரையவேண்டிய இலச்சினைகளும் அவை எந்தெந்த வண்ணங் களில் வரையப்பட வேண்டும் என்ற குறிப்பு களும்கூட ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

சிவாலயங்களில் வ்ருஷபக் கொடி ஏற்று விக்கப்படும். வ்ருஷபம் தர்மத்தைக் குறிக் கின்றது. இறைவன் அறமே வடிவானவன். ஆகவே, தர்மத்தைக் குறிப்பிடும் வ்ருஷபக் கொடி அவனுடையது. வினையின் பயனை நுகர்வித்து, உண்மை ஞானம் கூடச் செய்து, உயிர்களின் குற்றங்களினை மாற்றி, குணங்களை ஓங்கச் செய்வதற்கே இறைவன் காத்திருக்கின்றான் என்பதை உணர்த்துவதற்காகவே அவனது கொடி அசைந்தாடுகிறது.

உற்சவ ஆரம்பத்திற் கொடி ஏற்றப்பட்ட உடன் முதன்முதலாக அது எந்தத் திசையை நோக்கிப் பறந்தாடத் துவங்குகிறது என்பதைக் கொண்டு பலாபலன்களை அறியலாம். (உத்தர காமிக ஆகம, மஹோத்சவ விதிப் படலம், சுலோகம் 85,86)

**வ்ருஷபக் கொடியின் அமைப்பு**

தூன் எனப்படுவது பகைவரைத் திடுக்கிட வைப்பது, பறக்கும் கொடி, நாம் ஞானம் பெறத் தடைகளாக இருக்கும் ஐம்புலன்கள் என்னும் பகைவர்களைத் திடுக்கிடச் செய்தவாறு பரஞான வெளியில் பறப்பதே இறைவனின் வ்ருஷபக் கொடி.

ஆலயம் புகும்போது, இறை உருவ வடிவ மான கோபுரத்தை முதலில் வணங்குகிறோம். பிறகு கொடிமரத்தை வணங்குகிறோம். அதில் பறக்கும் அல்லது பறக்கவிருக்கும் கொடி நம்முள் உள்ள பகைவர்களான ஐம்புலன்களையும் திடுக் கிடச்செய்து அடக்கவிருப்பதை உணர்ந்து புலனடக்கம் வேண்டி நின்று இறைவனைப் பிரார்த்தித்துச் சரணாகதியாக விழுந்து கும்பிட வேண்டும். சிவாலயத்தில் வேறு எந்த இடத் திலும் விழுந்து கும்பிடக்கூடாது.

த்வஜஸ்தம்பத்தின் அருகில் உள்ள பலி பீடத்தில் ஆணவ மலத்தைப் பலியாக இடு வதாகச் சிந்தையில் கொள்ளுதல் வேண்டும். அதாவது, அகந்தை, மமதை, ஆசை, கோபம். மயக்கம், அஞ்ஞானம் இவற்றைப் பலியாக இட்டு, அதை ஏற்குமாறு இறைவனை வேண்டிக் கொள்ள வேண்டும். அத்துடன், அவனை வழி படுவதற்கு ஞானஒளியைத் தருமாறு அவனிடமே பிரார்த்திக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்வஜஸ்தம்பத்தை அடுத்து, இறைவனை நோக்கியவாறு இருப்பது ஐயனின் விருஷப வாகனம். அது தர்ம தேவதையின் உரு. அதன் பின்னால் நின்ற வண்ணம், மூலலிங்கத்தை நோக்கி அறத்தின் பின்னின்று ஒழுகி, அறம் காட்டும் வழிநடந்து உன்னை அடைய அருள் வாயாக என்று வேண்டிக்கொள்ளல் வேண்டும். அந்த விருஷப தேவரை தொடுவதோ, அவரது காதுகளில் நம் குறைகளை ஓதுவதோ தோஷம் விளைவிக்கும் செய்கைகள். நமது குறைகளை அறியாதவனா இறைவன்? அறவிடையின் பின் நின்று, அறவழி ஒழுகி உன்னை அடைய அருள் செய் என்று வேண்டிக் கொண்டாலே நம் குறைகளைக் களைந்து வாழ்வை நிறைவாக்க மாட்டாதவனா சிவபிரான்?

"குறிகளும், அடையாளமும், கோயிலும், நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும் அறிய ஆயிரம் கரணம் ஓதினும் போதாது" என்கின்றார் திருநாவுக்கரசர். உருவமற்ற இறைவனை உணர் வதற்கு உருவத்துணை வேண்டும். உருவம் உள்ளத்தில் பதிவது போல் அருவம் உள்ளத்தில் பதிவதில்லை. உள்ளத்தில் பதியும் உருவமாக, ஆனால், உறுப்புகளற்ற குறியாக (அடையாள மாக) விளக்கி நமக்கு அருள்பாலித்து வருவதே சிவலிங்கம்.

"லய" என்ற வினைச் சொல்லுக்கு லயித்தல், அதாவது ஒன்றுபடுதல் அல்லது மறைந்திருத்தல் என்பது பொருள். அந்த வினைச்சொல்லில் இருந்து தோன்றிய சொற்களே ஆலயம், லிங்கம் ஆகிய வழக்கில் உள்ள இரு சொற்களும். எனவே, லிங்கம் என்ற சொல்லுக்கு தன்னுள் லயித்திருக் கும் அதாவது மறைந்திருக்கும், ஒரு பொருளைக் குறிக்கும் குறி அல்லது அடையாளம் என்பதே பொருள். அதுபோன்ற பல லிங்கங்களைத் தன்னுள் கொண்ட காரணத்தினால் இறைவனின் திருக்கோவில்களும் ஆலயங்கள் எனப்படுகின் றன. ஆலயங்கள் என்பதற்கு ஆன்மா லயிக்க வேண்டிய இடம் என்பதாகவும் பொருள்.

நடைமுறையிலே ஆகமங்கள், ஆலயங் கள் பற்றி நாம் பேசும்போது, லிங்கம் என்ற சொல்லால், ஒருதனிப்பட்ட உருவம் அல்லது அமைப்பு, அதிலும் குறிப்பாகக் கருவறை மூர்த்தம் என்பதைக் குறிப்பிடுவதற்கு உபயோகிக் கின்றோம்.

சொல்லாராட்சி (etymology) விளக்கத்தைப் பார்ப்போமானால், லிங்கம் என்ற சொல் எல்லா மும் எதனுள் ஒடுங்குமோ, எதிலிருந்து அவை எல்லாம் மீண்டும் தோன்றுமோ அந்த மூலப் பொருட்களுக்கு லிங்கம் என்று பெயர் என்ற விளக்கம் புலனாகின்றது.

*"லயம் கச்சந்தி பூராதி ஸம்ஹாரே ரிகிலாறி க !*
*நிர்க்கச் யதப்பரசாடி லிங்கோத்திஸ்தே ஹேதுரா!!"*

என்கிறது அஜிதாகமம் (கிரியா, 3, 17, 18).


கருவறையிற் சிவனின் சின்னம் ஆவுடை யார்மேல் பதிக்கப்பெற்ற பாணமாக அமைந் துள்ளது. அந்த மூலலிங்கம் சூட்சுமலிங்கம் எனப் படுகின்றது. கருவறையின்மேல் உள்ள ஸ்தூபி ஸ்தூல லிங்கம் எனப்படுகின்றது. இங்கு கோபுர கலச வடிவாக சிவனின் சின்னம் அமைந் துள்ளது. கருவறைமுன் த்வஜஸ் தம்பத்தின் அருகே உள்ள பலிபீடம் பத்ரலிங்கம் எனப்படுகின்றது. இந்த இடத்தில் பலியிடும் கல்போல சிவனின் சின்னம் அமைந்துள்ளது. பத்ரம் என்றால் மங்களம். ஆணவ மலத்தைப் பலியாக ஏற்றுக்கொண்டு, பதிலுக்கு மங்களங்களை அருளுவது பத்ர லிங்கம். கொடிக்கம்பம் காரணலிங்கம் எனப்ப டுகின்றது. காரண லிங்கத்தில் நெடிதுயர்ந்த த்வஜஸ்தம்பத்தின் தண்டமே சிவனின் சின்னமாக அமைந்துள்ளது. லிங்கம் என்று நாம் சாதாரண மாகக் குறிப்பிடும்போது, "கர்பக்ருஹத்தில் ஆவுடையார்மேல் பதிந்திருந்து அருளும் பாணம்" என்ற உருவகத்தை அச்சொல் சுட்டிக் காட்டி நம் உள்ளத்தில் பக்தி உணர்வினைத் தட்டி எழுப்பிடினும் லிங்கம் என்ற சொல்லாற் குறிப் பிடுவது ஒரு சின்னம். குறி அல்லது அடையாளம் என்பதைத்தான் எனக் கொண்டு நோக்கினால், ஸ்தூல பத்ர காரண லிங்கங்களின் பெயர் விளக்கம் புலனாகும்.

ஆன்மா சென்று லயிக்க வேண்டிய ஆலயத் தினுள் இறைவன் சிவத்தைச் செய்வதற் காக ஐந்து இடங்களில் உருவம்தாங்கி நின்று, அதாவது சின்னங்களாக இருந்து அருள்பாலிக்கின்றார் என்பர். அந்த பஞ்சலிங்கங்களாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலலிங்கம் (கருவறையினுள்) இதுவே ஸீஷ்மலிங்கம் உடலுக்கு உயிர்போன்றது.



ஸ்தூலலிங்கம் என்ற விமானக் கலசம் (உடலை எடுத்துச்சென்று கரைசேர்ப்பது ஆகாய விமானம், ஆன்மாவை எடுத்துச்சென்று கரை சேர்ப்பது ஆலயவிமானம்), ஸ்விபம் என்பது உயிரைத் தாங்கிநிற்கும் உடல்போன்றது, விமானம் காணும் உடலாகவும், கருவறை லிங்கம் உள்ளுறை உயிராகவும் இருக்க, முதலில் விமானத் தைத் தரிசித்து வணங்கியபிறகே உள்ளேயுள்ள லிங்கத்தைத் தரிசிப்பது முறை. ஸ்தூலலிங்கம் நமஸ்கருத்ய சாலயம்து ப்ரவேயத், ஸ்தூலலிங்க விமானம் ஸ்யாத், ஸீஷ்மலிங்கம் ஸ்தாபம், பலிபீடம் பத்ரலிங்கம் லிங்கத்ரயமி ஹோச்யதே என்கிறது.

கொடிக்கம்பத்தின் அருகே உள்ள பத்ர லிங்கம் என்ற பலிபீடம், காரணலிங்கம் என்ற கொடிக்கம்பம்.

சிவோகம் பாவனை செய்து நிற்கும் சிவாச்சாரியார் எல்லா ஆகமங்களை அறிந்த வனும், அமைதியானவனும், சிவலிங்க வழி பாட்டில் ஈடுபட்டவனும், நித்ய ஹோமத்தோடு கூடியவனும் சிவபெருமானுக்கு நிவேதனம் தயார் செய்பவனும் கிரஹபலி முதலியவைகளைச் செய்பவனும் பிஷைஅளிப்பவனும் நிந்தனை இல்லாதவனுமான சிவாச்சாரியாரை சிவனாகவே அறிய வேண்டும். உத்தரகாமிக ஆகமம் மஹோற் சவ விதிபடலம், சுலோகங்கள்.


"கோயில் என்பது இறைவனின் உறை விடம் என்பதை விடக் கோயிலே இறைவனின் சொரூபம் என்று கொள்ளவேண்டும்" என்கிறார் திருகணபதி ஸ்தபதி "ப்ராஸாதம் புருஷம் மர்வா பூஜயேத் மந்த்ரவித்தமஹ" என்ற உபநிஷத் வாக்கியம் மந்திரங்களை நன்கு கற்றுணர்ந்த பூசாரி கோயிலையே இறைவன் என்று உணர்ந்து அதற்கு மரியாதை செய்து பூஜிக்க வேண்டும் என்று ரைக்கின்றது.

அன்றியும் கருவறையை முதலாகக் கொண்டு கோவிலை நாம் நீட்டமைப்பில் நோக்கினாலும், நெட்டமைப்பில் ஆராய்ந் தாலும் மனிதஉடலில் தலை, பாதம் முதலிய உறுப்புக்களும் ஆறு சக்கரங்களும் குறிப்பிடப் படுவது விளங்கும். உதாரணமாக ஒரு யோகி அல்லது இறைவன் காலை நீட்டித் தலை நிமிர்ந்து படுத்திருக்கும் முறையாகக் கோயில் அமைந் துள்ளதாக உருவகித்து நோக்கினால் பாதம் போன்றது முன்கோபுரம். விரல்கள் போன்றவை அதன் சிகரக் கலசங்கள். மூலாதாரத்தை ஒத்தது கொடிக்கம்பம் சிரசுபோன்றது கருவறை சிரசின் மத்தியை ஒத்தது கருவறையில் எரியும் தீபம் அந்தத் தீபஒளி இறைவனின் அருவுரு வத்தை நினை வூட்டுகின்றது. புறக்கோவில் அமைப்பு உடற் கோயிலின் பரிணாமம் என் பதற்கு திருநாவுக்கரசரின் காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக என்ற தேவாரமும், உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம் என்ற திருமூலரின் திருமந்திரமும் சான்றாகும்.

கோயில்களிற் கோபுரம் கடவுளின் விராட் சொரூபம். ஸ்தூபி (கருவறை, விமானக்கலசம்) இறைவனுடைய ஸ்தூல ரூபம். கருவறையுள் இருக்கும் திருமேனி சூக்குமலிங்கம், கற்பக்ருஹ மண்டபம், அர்த்த மண்டபம், மஹாமண்டபம் ஸ்நாந மண்டபம் அலங்காரமண்டபம், சபா மண்டபம் ஆகிய ஆறு முக்கியமான மண்ட பங்களும் முறையே மூலாதாரம், சுவாதிஷ்டாநம், மணிபூரகம், அனாகதம் விசுத்தி ஆக்ஞை ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொடி மரம்
**Flag Staff**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு ஆதாரங்களைக் குறிக்கும். மூலமூர்த்தி, நந்தி பலிபீடம் ஆகியவை முறையே பதி, பசு, பாசத்தைக் குறிக்கும். சரீரம் நேராக இருந்து அசையாது தியானத்தில் பரமானந்த சொரூபி யாகிய பரமசிவம் தரிசனமாகும் என்ற தத்து வத்தை மூலமூர்த்திக்கு நேராக நின்றுகொண்டி ருக்கும் கொடிக்கம்பம் குறிப்பிட்டு உணர்த்தும். இவ்வாறும் ஒரு விளக்கம் உண்டு.

த்வஜஸ்தம்பங்களைப் ப்ரதிஸ்ட்டை செய் வதிலும், பராமரிப்பதிலும், போற்றுவதிலும் மிகுந்த கவனம் தேவை என்பதும் ஆலயத்தின் பிரகாசம் மேலும் மேலும் ஓங்கி நின்று அன்பர்களுக்கு அருள் செய்வதிலும் த்வஜஸ் தம்பங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்ப தும் மேற்கூறியனவற்றால் புலனாகும்.

**சைவ சித்தாந்தத்தில் த்வஜஸ்தம்பம்**

கொடியேற்றம் என்பது பொதுவாக ஆலயங்களிற் கும்பாபிஷேகங்களின்போதும், மற்றத் திருவிழாக்களின்போதும் நடைபெறு கின்ற ஒரு முக்கிய சடங்கு. இச்சடங்கின் உட் பொருளை மிக அழகாகச் சைவ ஆகமத் தத்துவங் களைப் புகுத்தி ஐந்தே பாடல்களில் **கொடிக்கவி** என்ற நூலில் விளக்குகிறார். அதன் நூலாலாசிரி யரும் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த வருமான **உமாபதி சிவாச்சாரியார்.**

இந்நூல் எழக் காரணம் குறித்து ஒரு சுவையான வரலாறும் உண்டு. தில்லை மூவாயிர வரில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார், சிதம்பரத் திற்கு அருகில் உள்ள கொற்றவன்குடி என்னும் ஊரில் மடம் அமைத்து வாழ்ந் திருந்தவர். ஒரு சமயம் மற்ற தில்லைவாழ் அந்தணர் கொடியேற்றத் தொடங்கியபோது கொடிக்கம்பத்தில் கொடி மேலெழாமலேயே இருந்தது. மனக் கவலை கொண்ட அவர்களுக்கு "உமாபதி வந்தால் கொடி ஏறும்" என்ற வானில் எழுந்த திருவாக்கு வகை கூறிற்று. அவர்களும் உமாபதி சிவாசாரியாரை அணுகி வேண்டினர். சிவாசாரி யார் தில்லைக்குச் சென்று "ஒளிக்கும் இருளுக்கும்" எனத் தொடங்கும் கட்டளைக் கலித்துறைப் பாடலைப் பாடிய உடன் கொடி தானாகவே மேலே ஏறிற்று. அப்பாடல் கொடிக் கவி என்னும் நூலுக்கு முதல் பாட லாயிற்று. பின்னர் சிவாசாரியார் அடுத்து வரும் நேரிசை வெண்பாப் பாடல்களைப் பாடி நூலை நிறைவு செய்தார். இந்நூல் வடிவில் சிறிதாக இருப்பினும் சைவ சித்தாந்தத்தின் மூலக்கருத்துக் களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்து பெருமை சேர்க்கின்றது. கடவுளுக்கும் ஆன்மாக் களுக்கும் உள்ள தொடர்பை பதி-பசு-பாசம் என்ற தத்து வத்தால் விளக்குபவர்கள் சைவசித்தாந்திகள். சைவ சித்தாந்தம் கடவுள் ஒருவரே என்று வலியுறுத்துகின்றது. அவரே மங்களங்களைச் செய்யும் செய்விக்கும் சிவபிரான். அந்த சிவம் எனப்படுவது எல்லாவற்றிற்கும் மேலான தாய் அருவம், உருவம் இல்லாததாய குணம், குறிகள் அற்ற தனித்தியங்கவல்ல, என்றும் இருக்கவல்ல ஒன்று. அதுவே பதி எனப்படுவது, அது எண்ணி றைந்த ஆன்மாக்களுக்கும் அறிவாகி, அகலமாய், அகண்டிதமாய், ஆனந்த உருவாய், மலங்களால் கட்டுண்டவர்களுக்கு எட்டாததாய், அணுவும் ஆகி, அண்டமும் ஆகி விளங்குவது. பாசத்தால் கட்டுண்டு உழல்வதால், ஆன்மாக்கள் பசு என்று பெயர் பெறுகின்றன. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் பாசம் எனப்படும். பசுக்கள் பதியின் அருளுடன் பாசத்திலிருந்து விடுபட்டு முத்தி அடைய வேண்டும். இதற்கான உத்திகள், இடைப்பட்ட நிலைகள், அவற்றின் தன்மைகள் ஆகியவற்றை விளக்குவனவே சைவ சித்தாந்தக் கோட்பாடுகள். தமிழர்களின் முதிர்ந்த சிந்தனைச் செறிவு, நாகரிக முதிர்ச்சி, ஆழ்ந்த சமய உணர்வு போன்றவற்றிற்கு சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் சான்றுகளாக விளங்குகின்றன. சைவ சித்தாந்தத்தை விளக்கும் ஆதாரபூர்வ சாத்திர நூல்களாக 14 நூல்கள் போற்றப் படுகின்றன. இவை அனைத்தும் 12,13.14 ஆம் நூற்றாண்டிலே தோன்றியவை. சைவசித்தாந்த நூல்கள் மெய்கண்டசாத்திரம் அல்லது சைவ சித்தாந்த சாத்திரம் என்று வழங்கப் படுகின்றன. பதின்நான்கு சைவசித்தாந்தசாத்திர நூல்களுள் கொடிக்கவி பதினொன்றாவது கொடிக்கவியி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள பாடல்கள் கொடி ஏற்றுதலின் பெருமை பகர்கின்ற தோடு, சைவசித்தாந்தத் தத்துவச் செறிவு மிக்கதாகவும் உள்ளன. ஆகம முறைப்படி நடைபெறும் கொடியேற்றுவிழா தொடர்பான நிகழ்ச்சிகள், அக்கருத்துக்களை வெளிப்படுத்திக் காட்டுவனவாக அமைந்துள்ளதை இன்றும் காணலாம். இறையாகிய பதியும், ஆசைகளுக்கு மூலமான பாசமும் சேர்ந்து இருக்கும் இடம் பசுவாகிய (ஆன்மாக்கள் என்றழைக்கப்பெறும்) உயிர்களிடத்திற்றான், அப்படிப் பதியும் பாசமும் ஒன்று சேர்ந்து இருந்தாலும் இறை சக்தியானது உயிரைப் பாசங்கள் தாக்கா வண்ணம் அருள் புரிந்து கொண்டே இருக்கின்றது. நாம் உணர வேண்டும், உயிர் உலகியல் இன்பங்களால் ஈர்க்கப்பட்டுக் கீழ்நோக்கிச் செல்லாமல், பதியை நோக்கி மேலே செல்லவேண்டும் என்பதை உணர்த்த கொடி கட்டப்படுகின்றது என்பதை கொடிக்கவியின் முதல் மூன்று பாடல்கள் தெளிவாக உணர்த்துகின்றன. "ஓம்" என்னும் மூலமந்திரத்திலிருந்து எழுகின்ற ஐந்தெழுத்து மந்திரமாகிய "நமசிவாய" மற்றும் அவ்வைந்து எழுத்துக்களிலிருந்து எழுகின்ற பல மந்திர அஷரங்கள், அவற்றிலிருந்து உருவாகும் ஒலி அலைகள், அவ்வொலி அலைகளைத் தாங்கி நிற்கும் மொழிகள், இவை அனைத்திற்கும் அப்பாற்பட்ட மௌனநிலை ஆகிய அனைத்துமே உயிரோடு கலந்திருக்கின்ற பரம்பொருளையே உணர்த்துகின்றன. இறைசக்தி எல்லையற்ற கருணைகொண்டது. உயிர்கள் (பசுக்கள்) மலங்களிலிருந்து (பாசத்திலிருந்து) நீங்கித் தெளிவுபெற்று, அந்தத் தெளிந்த அறிவுடனே, மாறாமல் இருக்கின்ற நிலையே சிவப்பேறு. அல்லது முத்திநிலை. இக் கருத்துக்களை இந் நூலின் (4,5) வது பாடல்கள் விளக்குகின்றன.

இவ்வகையாக கொடி ஏற்றுதலும், கொடிக் கம்பமும் சைவசித்தாந்தக் கோட்பாடுகளை நிலை நிறுத்திக் காட்டுதற்கு எத்துணை இன்றியமையாததாக உள்ளது என்பது வெளிப்படும்.

உமாபதி சிவம் அருளிய கொடிக்கவி

**கட்டளைக் கலித்துறை**

*ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்ஒன்று மேலிடில்*
*ஒன்(று)*
*ஒளிக்கும் எனினும் இருள்அட ராதுஉள் உயிர்க்(கு)*
*உயிராய்த்*
*தெளிக்கும் அறிவு திகழ்ந்(து) உள தேனும்*
*திரிமலத்தே*
*குளிக்கும் உயிர்அருள் கூடும் படிகொடி கட்டினனே.*
*- (01)*

**உயிரின் குறிக்கோள் கூறும் பாடல். இதன் உரை:**

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்"- "ஆணவத்துக்கும் ஞானத்திற்கும் இடம் ஒன்றே" - "ஒன்றுமேலிடில் ஒன்றுஒளிக்கும்"- "ஞானம் மேலிட்ட காலத்து ஆணவம் ஒளிந்து நிற்கும்"- "ஆணவம் மேலிட்டகாலத்து ஞானம்ஒளிந்து நிற்கும்" எனினும் இருள் அடராது - ஒன்று மேலிட்ட காலத்திலே ஒன்று ஒளிந்து நின்றாலும் ஞானத்தை ஆணவம் பொருந்தாது. உள்ளுயிர்க்கு உயிராய்த் தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும் திரிமலத்தே குளிக்கும் - முற்பிறவிப் பயன்களாலே நம் உள்ளே சிறிது சிவஞானம் விளங்கினாலும் நாம் மும்மலங்களால் மூழ்கித் தான் கிடப்போம். உயிர் அருள் கூடும்படி கொடி கட்டினனே- இப்படி மும்மலங்களிலே மூழ்கிக் கிடக்கின்ற நம் ஆன்மாவுக்கு அருள் கூடுவதற்காகக் குருவருளால் மலங்கள் நீங்கித் திருவருள் கிடைப்பதற்காக தீஷரக்ரமங்களில் ஒன்றான கொடியைக் கட்டினேன்.

**நேரிசை வெண்பா**

*பொருளாம் பொருள்ஏது போ(து) ஏது கண்ஏது*
*இருளாம் வெளிஏது இர(வு)ஏது - அருளாளா*
*நீபுரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன்*
*கோபுர வாசற் கொடி.*
*-(02)*


**உயிருக்கு அருளும் முறைமை கூறும்பால்**
**இதன் உரை:**

"பொருளாம் பொருள் ஏது"- பொருளிலே அழியாத பொருள் எது? (கர்த்தா எது? அது சிவ பரம்பொருள்). "போது ஏது"- கிரணமாகிய சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏது? (சூரியன் இது எனக் காட்ட, கதிர்கள் இருப்பது போல, சிவம் இது என உயிர்களுக்குக் காட்டும் சக்தியே திருவருள்). "கண் ஏது"- கண் போன்ற ஆன்மா ஏது? (திருவருள் எனும்



சக்தியால் சிவத்தைப் பார்க்கும் பொழுது கொண்டதுதான் ஆன்மா). "இருளாம் வெளி ஏது"- அறியாமையால் மும்மலங்களில் உழலும் "சகலநிலை ஏது?"- "இரவு ஏது"- "கேவல நிலை ஏது?" இவற்றை எல்லாம் விளக்க அருளாளா- அருளுடையவனே. நீ புரவா வையமெல்லாம் "நீ அறிய"- வையகமாகி மும்மலங்களிலே பொருந் தாமல் ஆன்மாக்களிடமாகப் பொருந்தி இருக் கின்ற தேவரீர் சாட்ஷியாக. கோபுரவாசற் கொடி கட்டினேன்- "கோபுரவாசலிலே கொடிகட்டி னேன்".

**கட்டளைக் கலித்துறை**

*வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்*
*தாக்கா(து) உணர்(வு) அரிய தன்மையனை -*
*நோக்கிப்*
*பிறித்(து) அறிவு தம்மில் பிரியாமை தானே*
*குறிக்கும் அருள் நல்லக் கொடி.*

-(03)

**திருவருளை வேண்டும் பாடல்**

**இதன் உரை:**

"வாக்காலும் - தன்மையனை"- வாக்கால், மனத்தால், எக்காலத்திலும் அறிதற்கு ஒண்ணாத தன்மை உடையவனை. "பிறித்து" - பாசம், பசு ஆகியவற்றினின்றும் பிரித்து. "நோக்கி"- ஆராய்ந்து ஒன்றும் புலப்படாமல். "அறிவு" கொடி- அறிவுக்கு அறிவாய், பதி பற்றிய ஞானம் உள்ளவரோடு, கூடியிருந்தே அறிய முடியும் என்பதை உணர்ந்து உலகினோர் அதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டிக் கொடி கட்டினேன்.

**கட்டளைக் கலித்துறை**

*அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும்*
*நாலெழுத்தும்*
*பிஞ்செழுத்தும் மேலைப் பெரு எழுத்தும் -*
*நெஞ்(சு) அழுத்திப்*
*பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்*
*கூசாமற் காட்டக் கொடி.*

-(04)

**இதன் உரை:**

"அஞ்செழுத்தும் - நாலெழுத்தும்"- சிவாய நம என்ற ஐந்தெழுத்தும், ஓம் ஆம் ஔம் சிவாய நம என்ற எட்டெழுத்தும் "ஓம் நமசிவாய என்ற ஆறெழுத்தும் ஓம் சிவாய என்ற நாலெழுத்தும் விதிப்படி உச்சரித்து. "பிஞ்செழுத்தும் - நெஞ்சழுத்தி"- "வ" என்ற பிஞ்சு எழுத்தாகிய சக்தியையும், "சி" என்ற பெருவெழுத்தாகிய சிவனையும் இதயத்தில் வைத்தால். "பேசும் - கொடி"- "வா" என்ற பேசும் எழுத்தாகிய திருவருள் எனும் சக்தி, "சி" என்ற பேசா எழுத்தாகிய சிவத்தினோடு இரண்டறக் கலக்கும்படி செய்து, மோஷம் அளிக்கும் என்று உலகுக்கு உணர்த்த வேண்டி கொடி கட்டினேன். இந்தப் பாடலில் ஸ்தூல, ஸூக்ஷ்ம, அதி ஸூக்ஷ்ம, ஸூக்ஷ்ஷீட பஞ்சாக்ஷரங்கள் என்ற நான்கு வகை பஞ்சாட்ஷரங்களையும், அவற்றை உச்சரிக்கும் முறைப்படி உச்சரித்தாற் பெறக்கூடிய பேறு விளக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேரிசை வெண்பா**

*அந்தமலம் அறுத்திங்(கு) ஆன்மாவைக் காட்டி*
*அதற்(கு)*
*அந்த அறிவை அறிவித்(து) அங்(கு) - இந்(த)*
*அறிவை*
*மாறாமல் மாற்றி மருவுசிவப் பேறு என்றும்*
*கூறாமற் கூறக் கொடி.*

த்வஜாரோஹண காலத்தில் த்வஜத்தை ப்ரதிஷ்டை செய்யும் சடங்குகளைக் கவனித்தால் த்வஜஸ்தம்ப தத்துவம் வெளிப்படையாகின்றது. ஆகமங்களின் கூற்றுப்படி த்வஜஸ்தம்பத்தின் அதிதேவதை சிவன். அந்த ஸ்தம்பமே சிவனைக் குறிப்பதாகும்.

நெடிதுயர்ந்த கொடிமரம் மூன்று பகுதி களைக் கொண்டது.

அவையாவன:

1. சதுரமான அடிப்பகுதி (பிரம்ம பாகம்).
2. எண்கோண கட்டிட அமைப்பு (பீடம் அல்லது வேதிகை) விஷ்ணு பாகம்.
3. வட்டமான நீண்ட மரப்பகுதி (தண்டம்) ருத்ரபாகம்.

த்வஜாரோஹண காலங்களில் த்வஜதண்டம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முறையே, அப்பகுதிகளில் ஆத்மதத்துவம், வித்யா தத்துவம், சிவதத்துவம் ஆகியவை மந்திரங்களால் நியாசம் செய்யப்படுவது, இதை ஊர்ஜிதம் செய்கின்றது. த்வஜஸ்தம்பமும் கருவறை லிங்கத் தைப் போலவே ஸகல, நிஷ்கல சதாசிவனை அவரு டைய பஞ்சக்ருத்தியங்களைக் குறிக்கும் என்பது இவ்வகையாகப் புலனாகின்றது.

கருவறைச் சிவலிங்கத்தைவிட த்வஜஸ் தம்பம் ஒரு வகையில் வேறுபட்டு நிற்கின்றது. த்வஜஸ்தம்ப தண்டத்தின் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதியாகிய மேற்பகுதி, சிவனின் எல்லையற்ற விஸ்தாரத்தை அடையும் சக்தியைக் குறிப்ப தாகும் என்பதே அது.

உடலாக உருவகப் படுத்தப்படும் த்வஜஸ் தம்பத்தின் உச்சியிலுள்ள குவிந்த பகுதியைத் தலையுச்சி எனக் கொள்ளல் வேண்டும் என்கிறது உத்தர காரண ஆகமம். தண்டம் - முகம், கொடியின் இரு புறக் கயிறுகளும் - இரு கைகள், தர்ப்பைக் கட்டு அல்லது கூர்ச்சம் என்பது சடைமுடி, கொடியின் துணி - தோல், தண்டத் தின் அடியில் உள்ள மேடை - ஐயனின் பீடம், கொடியிற் காணப்படும் ரிஷபம் - மும்மலங் களும் கூடிய ஆத்மா, கொடியை ஏற்ற உபயோகப் படுத்தப்படும் கயிறு - அரனிடமிருந்து பிரியாத திருவருட்சக்தி. கயிறு இல்லாமற் கொடி ஏறாது. அதுபோல, திருவருட் சக்தியின் கருணை யாலல்லாது ஆத்மா உயர்ந்துசென்று சிவத்தின் பக்கத்தை அடைந்து ஞானவெளியில் மகிழ்ந் தாட இயலாது. த்வஜ தண்டத்தைச் சுற்றிக் கட்டப்படும் தர்ப்பைக் கயிறு மும்மலங்களாகிய பாசத்தை முக்கியமாக ஆணவமலத்தைக் குறிக் கும்.

மேற்கூறியவாறு த்வஜஸ்தம்பத்தின் உருவ அமைப்பும், அதில் ஆண்டு தோறும் நிகழும் கொடியேற்ற விழாச் சடங்குகளும், கொடிமரத் திற்கும் கருவறையிலுள்ள மூலலிங்கத்திற்கும் அமைப்பிலும் செயலிலும் உள்ள ஒற்றுமையைக் காட்டுவனவாம். மூலலிங்கத்தின் சூஷ்மம் காரண லிங்கத்தில் தெளிவாகின்றது. த்(து)வஜாரோ ஹணம் என்னும் நிகழ்ச்சி த்வஜா படத்தி லுள்ள ரிஷபம் ஆறு சக்கர வளையங்கள் ஊடே மேலே சென்று அமர்வதுமூலம் பசுக்களான ஆத்மாக்கள் பராசக்தியின் உதவியால் மேலேசென்று உய் வடைவதைக் காட்டுகின்றது.

சைவசித்தாந்தத்தின்படி பசுவான ஆத்மா சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை உபாயங்களால் பாசங்களை விட் டொழிந்து, படிப்படியாக ஸாலோக்கியம், ஸாமீப்யம், ஸாரூப்யம் ஆகிய நிலைகளைக் கடந்து சிவஸாயுஜ்யத்தை அடைவதே மோஷம் அல்லது முக்திநிலை அல்லது சிவப்பேறு எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. இதற்கு இன்றியமையாதது தீஷை. அந்த வகையிலே கொடியேற்றி நிகழ்த்தப்பெறும் மஹோற்சவமே சாம்பவீ தீஷை எனப்படுகின்றது. அதாவது பசுக்களான ஜீவர்கள்பால் கருணை கூர்ந்து பதியாம் ஐயனே இறங்கி வந்து அவர் களை உய்விக்கின்றான் என்கின்றன சாத்திரங்கள். தீக்ஷை என்ற சடங்கிற்கு பத்துக் க்ரியங்கங்கள் சொல்லப்பட்டுள்ளன. மஹோற்சவ காலத்தில் நிகழும் யாகம், வாகன ஊர்வலம்போன்ற பத்து வகைக் கிரியைகள் சாம்பவி தீக்ஷா கிரியைகளே என்கின் றது யோஜதந்த்ரம். யோஜ தந்த்ரமுறை முழுவதுமே த்வஜஸ்தம் பத்தில் அடங்கியுள்ள தாகக் கொள்ளப்படுகின்றது. தவஜஸ்தம்பமே ஸூக்ஷூம் நா நாடி. அதன் அடியிலுள்ள பீடம் குண்டலினீ ஸ்தம்பத்திலுள்ள ஆறு வளையங்கள் இக்குறிப் பீட்டை உறுதிப்படுத்துவன.

பாக்கு மரம், பலாசுமரம், கருங்காலி மரம், அரசமரம், ஆலமரம், சந்தன மரம், சாலவிருக்ஷம் (தேக்குமரம்), இலுப்பைமரம், மாமரம், மூங்கில் இனத்தைச் சார்ந்த மரங்கள், வன்னிமரம், வில்வமரம் ஆகிய மரங்களை த்வஜஸ்தம்பம் செய்ய உபயோகிக்கலாம். (உத்தர காமிக ஆகமம் ஆறாவது படலமான மஹோத்சவ விதிப் படலம்) முற்றாத மரங்கள் (பாலவிருக்ஷம்) த்வஜஸ்தம்பம் செய்யப்பயன்படா. தென்னைமரம், பனைமரம், மருதமரம் ஆகியவற்றையும் பயன்படுத்தலாம் (குமார தந்திரம்). தேவதாருமரம் பயன்படுத்த லாம் (ஸூப்ரபேத ஆகமம்).

## துணை நூல்கள்


1. தமிழ் இலக்கிய வரலாறு, மு.வரதராசன்
2. இறையியல் தத்துவமும் வழிபாட்டு முறைகளும் - சிதம்பரம் திருநாவுக்கரசு
3. "சைவ சித்தாந்தம்" இரத்தின விளக்கம் - சி. இராம. நாகப்பச் செட்டியார்
4. மெய் கண்ட சாத்திரம் (சைவ சித்தாந்தம்) - ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் (தருமபுர ஆதீனம்)
5. "மஹோற்சவ விளக்கம்" குமாரசாமிக் குருக்கள்.
6. "சைவக்கிரிகை விளக்கம்" சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் (B.A)
7. "மஹோற்சவ விளக்கம்" சிவத்திரு. சிவபாத சுந்தரக் குருக்கள்.
8. "இந்துப்பாரம்பரியம்" கொழும்பு மகளிர் இந்து மன்றம்.
9. கும்பாபிஷேகம் - ஆர். ஸ்ரீதரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர்

கிரியாகால கலாமணி, வேதாகம ஜோதி
**சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் J.P.**
மட்டுவில்,
(42. அவிசுத்தாரம றோட், வெள்ளவத்தை, கொழும்பு-06)

*விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கசிந்து.*

இந்துமதத்தில் உருவ வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்து மதத்தில் தெய்வத் திருவுருவங் களைக் கடவுளாகக் கொண்டு கடவுளின் தத்துவரீதியாகிய சின்னங்களை நினைந்து அத்திரு வுருவங்கள்மீது எமது மனத்தை ஒருமுகப்படுத்தி லயிக்கவிட்டு இறை வன் அருள் வேண்டி வணங்குகின் றோம். எமது மனத்தில் விநாயகரோ முருகனோ அம்பிகையோ வைரவரோ எந்தத் தெய்வம் எமது மனதில் பதிந்து அந்தத் தெய்வத்தின்மூலம் நாம் வணங்கும் தன்மையின் படி திருவருள் கிடைக்கிறது. எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் இறைவன் அத்தெய்வத்தின் மூலம் எமக்குத் திருவருள் பாலிப்பான். இது ஆத்மீகமான உண்மை. இதையே "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" எனும் நூற்றுணிபு விளக்குகிறது. இந்து மதத்தில் முக்கியத்துவம் வாய்ந்த உருவவழி பாட்டில் விநாயகர் முதலிடத்தைப் பெறுகிறார். எந்தக் காரியமாக இருந்தாலும் விநாயகரைப் பிரார்த் தித்துச் சங்கல்பம் செய்தே எதனையும் செய்ய ஆரம்பிக்கின்றோம். நாம் எதையும் எழுதத் தொடங்குமுன் பிள்ளையார் சுழிபோட்டு எழுதத் தொடங்குகின்றோம். விநாயகரைப் போற்றும் ஆன்மாக்களுக்கெல்லாம் பிறஉயிர்களால் ஏற் படும் இடையூறுகளை விக்கினங்களை நீக்கு வதுதான் விநாயகரின் அவதார நோக்கம்.

விநாயகரின் யானைவடிவம் ஓங் காரத்தை நினைவூட்டுகிறது. இவர் ஞானசொரூபி இடைக் குக்கீழே மனிதசொரூபம், இடைக்குமேல் தேவ உருவம் கழுத்தின்மேல் யானையின் உருவம் இது பிரணவத்தை வலியுறுத்துகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களுக்கு அவர் நாயகர் என்பதை ஐந்து கரங்களும் உணர்த்துகின்றது. சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய மூவரும் மூன்று நயனங்களாக அமைந்துள்ளன. அகன்ற இரு செவிகளும் ஆன்மாக்கள் மலவாதனை ஆட்கொள்ளாமல் வினை வெப்பத்தைப்போக்கி அருளக்கூடிய திறன் பெற்றவை. விநாயகர் பெருவயிறு தமது சக்தியால் அண்டங்களையும் உயிர்களையும் தன்ன கத்தே அடக்கியிருக்கும் அவரது பேராற் றலைக் குறிக்கும். விநாயகரின் நான்கு திருக்கரங் களில் அமைந்திருக்கும் அங்குசம் ஆன்மாக் களைத் தன் கருணையினால் நல்வழிப்படுத்து வதைக் குறிக்கிறது. பாசம் தீவினையாளர்களைத் துன்பத்திலிருந்து மீட்பதைக் குறிக்கின்றது. தந்தம் கல்வி, திறமை என்பவற்றை உணர்த்து கின்றது. மோதகம் அமிர்தம்போன்ற உணவை யுண்டு உயிர் வாழ்வதைக் குறிக்கிறது. தமது துதிக்கையால் மோதகத்தைத் தொட்டுக்கொண் டிருப்பது அமிர்தத்தை ஆன்மாக்களுக்கு அள்ளி வழங்குவதைக் குறிக்கின்றது. இவ்வண்ணம் விளங்கும் விநாயகரின் திருவருட்கருணையோ அளவிறந் தது. இந்துமதக் கோட்பாட்டின்படி விநாயகர் இல்லாத இடமே கிடையாது. அரச மரத்தின் கீழுமிருப்பார், ஆற்றங்கரையிலு மிருப்பார், வீடுகளில் மங்கல கருமங்கள் நடை பெறும்போது மஞ்சள் மாவிலோ அல்லது சாணத்திலோ பிள்ளையார் பிடித்து அறுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லைச் சாத்திவிட்டால் கணப்பொழு தில் அவ்விடத்திலும் வந்தருளுவார். எமது நாட்டில் விநாயகர் ஆலய மில்லாத இடமே கிடையாது. யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி சைவத்திற்கும் தமிழுக்கும் பக்தி மார்க்கத்திற்கும் முதன்மைத் துவம் வாய்ந்த பகுதியாகும். எத்தனையோ புராணிகர்கள் கலைஞர்கள், குருமார்கள் சிறந்த ஆசிரிய மணிகள் விவசாய மன்னர்கள் தமது பணியைச் செவ்வனே செய்து வாழ்ந்த வாழ்கின்ற இடம். சாவகச்சேரி கல்வயல் மீசாலை எனும் ஊர்களில் சைவத்தின் பெருமையை உணரலாம். விவசாயத் தால் முன்னேற்றமடைந்த இடங்களும் அவையே. இயற்கையாக வாழை, பலா, மா மரங்களின் வளர்ச்சியும் அதன் பருவகாலங்களில் கனிவர்க்கங் களின் தொகையும் பயனும் அங்கே காண முடியும். இவ்வகைப் பல வளங்கள் பெருகும் கல்வயல் மீசாலைப் பகுதிகளில் விநாயகர் ஆலயங்களுக்குக் குறைவில்லை. எங்கு பார்த் தாலும் பிள்ளையார் கோவில்கள். எனினும் மீசாலையின் மத்திய பகுதியில் அடியார்களுக்குத் திருவருள் பாலித்துக் கொண்டு வேண்டிய அடியார்கட்கெல்லாம் விக்கினம் தீர்த்து வேண் டிய வேண்டியாங்கு வரங்களைக் கொடுத்துக் கொண்டு வீற்றிருந்தருளுகின்றார் அருள்மிகு நீல கண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார். பெயருக் கேற்ப தலவிருட்சங்களாக ஆலயத்தின் சூழலில் மாமரங்கள் செழித்து அமைந்துள்ளன. பழம் பெரும் ஆலயம் கோபுரவாயிலில் ராஜகோபுரத் தோடு கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. ஆலய சிற்பக் கலைக்கமைய மூலஸ்தானத்திலிருந்து கோபுர வாயில்வரை பிரமாணத்திற்கமைந்த மண்டபங்கள் விநாயகரைச் சுற்றி உட்பிர காரத்தில் வலமாகச் சந்தானகோபாலர் முருகப் பெருமான் வைரவப்பெருமான் என ஆலய பரிவார மூர்த்திகள் வடக்கே பூந்தோட்டம், தெற்கே அன்னதானமடம் என இவ்வண்ணம் தெய்வீகச் சிறப்புடன் ஆலயம் அழகுடன் மிளிர் கிறது. மூலாலயத்தில் வீற்றிருக்கும் விநாயகர் மூர்த்தி சிறிதானாலும் அவர் திருவருட்கீர்த்தி பெரிதும் அளவிறந்ததுமாகும். ஆலயத்தின் நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடை பெறு வது வழமை. அத்துடன் எமது நாட்டின் பாரம் பரியமான கந்தபுராணக் கலாசாரத்திற்கேற்ப சித்திரைமாதம் முதல் மூன்று மாதங்கள் கந்த புராணம் படிக்கப்பட்டு அதன் சிறப்புப் படலங் களுக்கு நைமித்திய விழாவாகச் செய்து புராண படலம் நிறைவுசெய்யும் மரபு இன்றும் நடை பெறுகிறது. அது மட்டுமல்லாமல் விநாயக விரதம் இருபத்தொரு நாட்கள் பிள்ளையார் கதை படிக்கப்பட்டு அடியார்கள் விரதமனுஷ்டித்து வழிபடுவார்கள். திருவெம்பாவை நாட்களில் திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்படும். இவைகளை ஏன் நினைவுபடுத்து கிறேன் என்றால் ஆலயத்தில் கலை, கலாச்சாரம் பௌராணிகம் என்பவற்றை அனுசரித்தே நம் முன்னோர்கள் ஆலயத்தை நடாத்தினார்கள். இந்த நடைமுறை மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவி லிலும் இதுபோன்ற பெரும் ஆலயங்களிலும் நடைபெறுவதையிட்டுப் பெருமையடைகிறோம். மகோற்சவம் அதாவது கொடியேற்ற விழா நடை பெறும் காலங்களில் மீசாலைப் பகுதி மக்கள் எங்கிருந்தாலும் விநாயகப்பெருமானை நினைத்து இவ்விடம் வந்து விரதமிருந்து வழிபடுவார்கள். தேர்த்திருவிழாவன்று வரும் அடியார்கூட்டமும் காவடிக் காட்சியும் எண்ணிலடங்கா. இவ்வகைத் தெய்வீகச் சிறப்புமிக்க ஆலயத்தின் நித்தியபூசை வழிபாடுகள் சிறந்த சைவக்குருமார் பரம்பரை யினரால் நடாத்தப் பட்டு வருகின்றன. நைமித்தி யங்கள் உற்சவங்கள் என்பவற்றை எமது மைத் துனர் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் அவர் புதல்வர் ஆகியோர் பக்தி சிரத்தையுடன் நடாத்தி வருகின்றார்கள். இதைவிட வழிபடும் அடியார் களின் பெருக்கமும் பெருமையும் ஆலயத்தின் அற்புதத்தையும் பெருமானின் திருப்பெருங் கருணையையும் பறைசாற்றுகின்றன. இவ் வண்ணம் பலவகைகளிலும் தெய்வீகச் சிறப்பு மிக்க அருள்மிகு வெள்ளைமாவடிப் பிள்ளை யாருக்குசென்ற 04-06-2010 வெள்ளிக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெற்றதறிந்து பெரு மானை மனக்கண்ணிலிருந்தி மனமுருகி வழிபட் டேன். மட்டுவிலில் வதிந்த காலத்தில் அப்பெரு மானின் மகோற்சவவிழாவை நடாத்தக் கிடைத்த வாய்ப்பை இன்றும் தெய்வீகப்பேறாக நினைத் துப் பெருமையடைகிறேன். இங்கே எழுதியது வரலாறு அல்ல. என் மனத்தில் பதிந்ததை எழுதி யுள்ளேன். அப்பெருமானின் திருவருள் மீசாலை வாழ் சைவமக்களுக்கும் ஏனைய சைவப்பெருமக் களுக்கும் என்றும் கிடைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விநாயகர் பாதம் பணிந்து பிரதம சிவாச்சாரியாரின் கழல் பணிந்து வாழ்த்தி அமைகின்றேன்.

வாழ்க வளர்க வணக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் வழிபாடு

சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள்
பிரதம குரு, அருள்மிகு இலஞ்சியாரணியம்
சோலை அம்மன் கோவில்.

நாம் எக்கருமங்களைத் தொடங்கும் போதும் அக்கருமங்கள் எதுவித இடையூறுமின்றி வெற்றி பெறுவதன் பொருட்டு முதலில் விநாயகப் பெருமானை வழிபட்டபின்பே தொடங்குவது தொன்றுதொட்டுவரும் வழக்கமாகும். விநாய கப்பெருமானை இந்துக்கள் மட்டுமல்லாது பௌத்தர்கள், ஜைனர்கள் ஆகியோர் களும் போற்றி வணங்குகின்றார்கள்.

பௌத்த மதம் நன்கு வேரூன்றியுள்ள பர்மா, தாய்லாந்து, கம்போடியா நாடுகளிலும் கணபதி வழிபாடு காணப்படுகின்றது. தாய்லாந்து நாட்டில் இரு கரங்களுடன் யானைமுகக் கணபதி மற்றும் சிவலிங்க வழிபாட்டின் சின்னங்கள் "நசொன் சீ தம்ராட்" என்னும் நகரில் காணப்படுகின்றது. வேதகாலத்தில் மஹாபாரதக் கதையை வியாச மஹரிசி கூற விநாயகர் தனது ஒடித்த தந்தத்தைக் கொண்டு எழுதியதாக வரலாறு கூறுகின்றது. இருக்கு வேதத்திலும் "கணானாம் த்வாம் கணபதிம் ஹவாமஹே" என கணாதிபதின் போற்றப்படுகின்றார். பிரணவம் என்பது ஓங்காரமாகும். உலகத் தோற்றத்திற்கு மூல காரணமாக இந்த ஓங்கார நாதம் விளங்கு கின்றது. இந்த ஓங்காரமாகிய பிரணவம் விநாயகர் வடிவமே. என்பதற்குப் பிள்ளையார் சுழியே ஆதாரமாகும். உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் தோன்றும்போது ஓங்கார வடிவாகவே படைக் கப்பட்டுப் பின்னர் இருவினைக் கீடாகப் பல்வேறு உயிரினமாகப் பரிணமிக்கின்றது. பூத கணங்கள் அனைத்திற்கும் பதியாக விளங்குவதால் நாம் விநாயகரைக் கணபதி , கணாதிபன், என்று போற்றுகின்றோம். மேலும் அறுவகைச் சமயங் களில் முதலாக "காண பத்தியம்" காணப் படுகின்றது. கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் காணாபத்தியம் என அழைக்கப் படும்.

ஔவை மூதாட்டியும் தனது மூதுரைக் கான காப்புச் செய்யுளில் பின்வருமாறு கூறியுள் ளார்.

> *"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்*
> *நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு*
> *துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்*
> *தப்பாமற் சார்வார் தமக்கு"*

விநாயகக் கடவுளைப் பூசித்துப் பக்தியுடன் வழிபடுபவர்கட்கு சகல கலைஞானங்களும், அன்பு அறங்கள், அருள், அறவழியான நன்நோக் கங்கள், விருப்பு செயலும், கைகூடிவரும். அஷ்ட ஐஸ்வரியங்களும் இலட்சுமி கடாக்ஷமும் பேறும் கிட்டும். புவன போகங்களும் நோயற்ற நீண்ட வாழ்வும் உண்டாகும் என ஔவையார் வழி காட்டியுள்ளார். அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரந்தும் வியாபித்து நிற்கும் இறைவனாக விளங்குபவர் விநாயகப்பெருமான். இவ்வாறாக விநாயக வழிபாடு எமது சைவசமய மரபில் வேரூன்றியுள்ளது. இவ்வாறு பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட விநாயகர் பார்ப்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவசங்கொள்ளும் அற்புதமான திருவடி வத்தைத் தாங்கிக் காட்சியளிக்கின்றார். மேலும் விநாயகர் ஞானக்கடவுளாவார் இதன் காரண மாகவே ஒருவருக்கு வித்தியாரம்பம் செய்யும் போது முதலில் விநாயகப்பெருமானை வழி பட்டே செய்வது தொன்றுதொட்ட மரபாக உள்ளது. இற்றைக்கு 6000 வருடங்கட்கு முந்திய திருமந்திரத்தில் திருமூலநாயனார் "நந்தி மகன் தன்னை ஞானக்கொழுந்தினை" எனக் குறிப் பிடப்படும் அடிகள் விநாயகரை அறிவுத் தெய்வ மாகக் காட்டப்படுவது ஆழ்ந்து நோக்கத் தக்க தாகும். இவ்வாறு பல்லாண்டு காலமாக நமது மூதாதையர்கட்கும் இரிஷிகள், சித்தர்கள், ஞானவான்கட்கும் இஷ்ட சித்திகளை நல்கி ஆட்கொண்ட விநாயகப்பெருமானது திருவடி களை நாமும் வணங்கி அவரது அருளுக்குப் பாத்திரராவோமாக. சுபமஸ்து.

"சர்வ ஜனஹா சுகிநோ பவந்து"

உ
விநாயகர் துணை

**ஆலய மணியகாரர்கள் / முகாமையாளர்கள் வரிசை**

1. கேயரத்தின முதலியார்
2. பச்சிலைப்பள்ளி மணியகாரன் கணபதிப்பிள்ளை
3. சரவணமுத்து நொத்தாரிசு
4. பிளளையார் எனப்பட்ட ஏரம்பர்
5. விநாசித்தம்பி
6. சபாரத்தினம்
7. த. தம்பிராசா
8. இராமலிங்கம் (தற்போது பணியில்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்முகமைந்துளான்

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்,
மு.திருஞானசம்பந்தபிள்ளை
தலைவர், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்.

*விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்*
*- தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து.*

விநாயகப் பெருமானே எமது கொடிய வினைகளையெல்லாம் வேரோடு நீக்க வல்லவர் விநாயகப் பெருமானே எமது விருப்பங்களை நிறைவு செய்து முத்தியை அளிக்க வல்லவர். விநாயகப் பெருமானே அனைவருக்கும் மேலான தலைவர். இப்படிப்பட்ட விநாயகப் பெருமானைக் கண்களில் நீர் ததும்ப உள்ளம் உருகிப் பக்தியுடன் நீவிர் அனைவரும் வழிபடுங்கள்.

விநாயகப் பெருமானுடைய யானை முகத்தையும் தும்பிக்கையையும் சேர்த்து வைத்துப் பார்த்தால் ஓங்காரமாகிய பிரணவத்தின் தோற்றம் தெரியும். ஆகையால் விநாயகன் பிரணவ சொரூபியே. உலகின் முதல் ஒலி, சூரிய ஒளி தோன்றியபோதே தோன்றியது. அதுவே ஓங்கார ஒலி, பிரணவ ஒலி, பிரணவமே முதல் ஒலி ஆகவே பிரணவ சொரூபியான விநாயகனே முதற்கடவுள். பரம்பொருளின் முதற்தோற்றம். முதல் உருவம்.

அவ்வுருவத்திருமேனி கொண்ட முதல்வனாகிய விநாயகன் அடியவர்கள் நினைத்த மாத்திரத்தில் எளிதில் உருவம் கொண்டு நிற்பவன்.

மஞ்சளைப் பிடித்து வைத்தாலும் பசுவின் சாணத்தில் பிடித்து வைத்தாலும் "பிள்ளையார்" நானே என்று முன்னிற்பவன். இத்தகயை எளிவத் தருளும் உரு வேறு எந்தத் தெய்வத்திற்கும் விதிக்கப்படவில்லை. எனவே கணபதியே முதற்பதி. பதி என்றால் தலைவன். வேதங்கள் அவரைக் கணநாதன் எனப் புகழ்கின்றன. உலக உயிர்கள் எனும் கணங்களுக்கு அதிபதியாக தலைவனாக விளங்குபவன் கணபதியே என்கின் றன புராணங்கள்.

மும்மூர்த்திகளும் முறையே பணிந்தருள் பெற்ற மூலாதாரக் கடவுளே விநாயகர்.



"பிரணவப் பெருந்தகை
- ஐங்கரன்"
"ஞானமுதல்வன்"
"ஞானக் கொழுந்து"
என நூல்கள் அவரைப் போற்றுகின்றன.
பிரணவம் "ஓம்" எனப்படுவது
ஓம் = அ + உ + ம்

ஒருமுறை உச்சரித்த மாத்திரையே உயர்ந்த கதியிற் சேர்ப்பதால் ஓங்காரம் எனப்படும்.

எல்லா உயிர்களையும் இறைவனிடம் சேர்ப்பிப்பதால் பிரணவம் எனப்படும்.



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரணவம் வியட்டிப் பிரணவம், சமட்டிப் பிரணவம் என இருவகைப்படும். வியட்டிப் பிரணவம் அகர, உகர, மகரங்களாகும். சமட்டிப் பிரணவம் அம் மூன்றும் சேர்ந்த "ஓம்" என்பதாம். அண்டசராசரங்களெல்லாம் அம்மூவகையினுள் அடங்கும். அதன்கண் அடங்காதது ஒன்றுமில்லை. எனவே பிரணவத்துள் எல்லாம் அடங்கும். இவ்வகையில் பிரணவ சொரூபியாகிய விநாயகக் கடவுளே பரப்பிரமமாகவும் வைத்தெண்ணப்படுகிறார்.

*ஐந்து கரத்தனை யானை முகத்தனை*
*இந்தினிளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்திமகன்றனை ஞானக்கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே*

\- திருமந்திரம்



விநாயகருடைய ஐங்கரங்களிலும் தாய்தந்தையரைப் பூசிக்கும் முகமாக கங்கை நீர் நிரம்பிய கலசத்தை ஒரு கரத்திலும், தேவர்களைக் காத்திடுவதற்காகத் தந்தப் படையினை (முறித்த கொம்பு) ஒரு கரத்திலும், பக்தரைத் தாக்கும் ஆணவத்தை அறுத்து இடையூறுகளைத் தகர்த்துக் காக்க இருகரங்களில் அங்குச பாசங்களையும் தாங்கிக் காட்சிதரும் ஐங்கரன் ஒரு கரத்தில் மோதகத்தை தாங்கிக் காட்சியளிப்பது உயிர்களுக்குப் பேராவின்பத்தை அளிப்பவரும் தாமே என்பதை உணர்த்தும் குறிப்பே ஆகும்.

சைவசமயம் சிவபெருமான் ஒருவரையே முழுமுதற்கடவுளாகக் கொண்டுள்ளது. எனவே சிவபெருமானே விநாயகக் கடவுளாக எழுந்தருளியிருக்கிறார் என்பது கருத்து.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய

"பிடியதனுருவுமை கொளமிகுகரியதன்
\- வடிகொடு"

என்ற தேவாரப் பாடல் இதனையுணர்த்துகின்றமை தெளிவாகும்.

மேலும் "தனதநற்றோழா சங்கரா..." என்ற திருவிசைப்பா அடிகளில் "அநகனே குமர விநாயக சனகவம்பலத்தமர சேகரனே..." என்று அருளியபடியும் விநாயகக் கடவுள் சிவனே எனத் தெளிவாகின்றது.

சிவபெருமானை "முக்கண்ணன்" எனக் குறிப்பிடுவது போல விநாயகரையும் "முக்கண்ணன்" என்று குறிப்பிடுவது வழக்கம். இடுகுறி காரணப் பெயர்களுக்கு இலக்கணகாரர் இவ்வுதாரணத்தை எடுத்தாள்வார்.

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள், பத்துத் திருக்கரங்கள், பதினைந்து திருக்கண்கள் ஐம்முகக் கடவுள் என்றால் சிறப்பாகச் சிவபெருமானையும் "ஐங்கரக் கடவுள்" என்றால் விநாயகரையுமே குறிக்கும். ஆனால் விநாயகர் சிவ அபேதப்படி விநாயகர் ஐந்து திருமுகங் கொண்டருளும்போது "பஞ்சமுக விநாயகர்" எனச் சிறப்பிக்கப்படுகிறார்.

பஞ்சமுகவிநாயகருக்குத் தனியாகப் பத்துத் திருக்கரங்கள், ஐந்து துதிக்கைகளோடு சேர்த்து பதினைந்து திருக்கரங்களும் பதினைந்து திருக்கண்களும் உண்டு.

ஈசானம் தற்புருடம், அகோரம் , வாமதேவம், சத்தியோசாதம் ஆகிய செப்பமான திருமுகங்களும், பத்துக்கரங்களில் முறையே வலது பக்கத்தில் சூலம், மழு, வாள், வச்சிரம், அக்னி என்பனவும், இடதுபக்கத்தில் அபயம், பாசம், மணி, சர்ப்பம் அங்குசம் ஆகியன பலவுங்கொண்ட சிவரூபம் இருப்பது போல் பஞ்சமுகவிநாயகர் தோற்றம் அமைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப் பெருமான் தோற்றம் பராக் கிரமம் ஆகியன பற்றி விநாயக புராணம் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கும்.

இம் மூர்த்தியின் மகிமையை கச்சியப்ப முனிவர்

*"அகரமென அறிவாகி உலகமெங்கும்*
*அமர்ந்தகர உகரமகரங்கள் தம்மால்*
*பகருமொரு முதலாகி வேறுமாகிப்*
*பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு*
*புகரில் பொருள் நான்கினையும் இடர் தீர்ந்தெய்தப்*
*போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லார்க்கும்*
*நிகரில் மறக்கருணைபுரிந்தாண்டு கொள்ளும்*
*நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாய்"*

எனப் பாடிப் பரவியுள்ளார்.

எத்துணைக் காலமும் கற்கினும் தித்தித்துத் தெவிட்டாத கந்தபுராணத்தை தந்தருளிய கச்சியப்ப சிவாச்சாரியார்.

*"திகடசக்கரச் செம்முகமைந்துளான்*
*சகடசக்கரத் தாமரைநாயகன்*
*அகடசக்கரவின் மணியாவுறை*
*விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"*


எனச் சிவவிநாயக அபேதத்தை நுட்ப மாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

பஞ்சமுக விநாயகரின் தோற்றத்திற்கு ஒருகதையுண்டு "திரிபுராசுரனால் துன்புற்ற தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட சிவ பெருமான் யுத்தத்திற்கு முன் விநாயகரைத் தியானிக்க விநாயகர் சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களினின்றுந் தோன்றிப் பஞ்சமுக விநாயகராகக் காட்சியளிக்கின்றார் சிவபெரு மான் திரிபுராசுரனை அழித்தார்"

இக்கதை விநாயகபுராணத்தில் காணப் படுகிறது.

விநாயகப்பெருமானது சகஸ்ரநாமத் தோத் திரத்தில் "பஞ்சக்கராய, பஞ்சாட் சராத்மாய, பஞ்சதாலாய, பஞ்சவர்ணாய, பஞ்சப் ராணக மாத்ராய, பஞ்சபாணாய, பஞ்சபாணிநி வாரி தாய, பஞ்சக்ருத்யாய, பஞ்சாக்ஷர பாராயணாய, பஞ்சசிவாத்மகாய, பஞ்சபட்சிப் பிரியாய, பஞ்சாதாராய"

என்று வருவது கவனிக்கப்பட வேண்டிய தாகும்.



ஐந்தொழிலைச் செய்கின்றவரும், ஐம் பொறிகளை அடக்கி ஐந்தெழுத்தோதும் அன்பர் களை ஆட்கொண்டருளுகின்றவரும், ஐந்து மூர்த்திகளுக்கும் அதிபரான பரம்பொருள் தாமே என்பதையும் குறிப்பதாக பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் அமையும்.

எமது உடலின் ஆறு ஆதாரங்களுள் மூலா தாரத்துக்கு அதிதேவதை விநாயகர். குய்யத் திற்கும் குதத்திற்கும் நடுவில் குண்டலினி எனுஞ்சக்தி வட்ட வடிவாக இருக்கும். அதன் நடுவில் முக்கோணம் இருக்கும். அதில் வ, ச, ஷ, ஸ என்னும் நாழிதழ்க் கமலம் இருக்கும். அதன் நடுவில் "ஓம்" எனும் பிரணவம் விளங்கும். மூலாதாரம், குண்டலினி, முக்கோணம், கமலம், பிரணவம் என்னும் இவ்வைந்தின் அமைப்பே பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் எனினும் அமையும். நான்கு எழுத்துக்களும் நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுகங்களாகவும் உச்சிமுகம் "ஓம்" என்னும் எழுத்தாகவும் அமைந்துள்ளது போன்று பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் காணப் படுகிறது எனவும் கூறலாம்.

விநாயகக் கடவுள் பிரணவசொரூபி எனச் சொல்லப்பட்டது. பிரணவம் முத்தியை விரும்பு வோர்களால் தியானிக்கப்படுவது.

"அஷ்டாங்கஞ்ச சதுஷ்பாதம் திருஸ்தானம் பஞ்சதைவதம்" என்ற வேதவாக்கின்படி பிரணவம் எட்டு அங்கங்களையும், நான்கு பாதங்களையும், மூன்று தானங்களையும், ஐந்து தேவதைகளையும் உடையது. இதன்படிக்கு பிரணவ தேவதைகள் ஐந்தும் விநாயகருக்கு பஞ்சமுகங்களாக அமைந்து பஞ்சமுக விநாயக ராகக் காட்சியளிப்பது நாம் ஈடேறவே.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்ற நாவலர்பெருமானின் வாக்கிற்கமைய பஞ்சப்பொறிகளின் வயப் பட்டுப் பஞ்சமாபாதகங்களையும் செய்யாது பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலுண்டாகிய உலக உடற் பற்றுக்களைவிட்டு பஞ்சப்புலன் வழியே ஓடாது உரன் என்னுந் தோட்டியால் ஓரைந் தினையும் அடக்கி பஞ்சதொழிலினுக்கும் அதி பரும் பஞ்சாட்சரத்தின் உட்பொருளாய் விளங் கும் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கர னாம் **செம்முகமைந்துளானாம்** விநாயகப் பெரு மானின் பாதங்களைத் தஞ்சமென அடைந்து ஒன்றியிருந்து நினைந்து கசிந்துருகி வழிபட்டுப் பேராவின்பப் பெருவாழ்வு அடைவோம்.

**"வேழமுகத்து விநாயகனைத் தொழ**
**வாழ்வு மிகுத்து வரும்"**

நட்சத்திரம் :-

நாண், தாரகை, விண்மீன் ஆகிய சொற்கள் நட்சத்திரத்தைக் குறிப்பவை. சோதிடக்கலையில் நட்சத்திரத்திற்கு மிகச் சிறப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஒரு குழந்தை பிறந்த நாளுக்குரிய நட்சத்திரத்தினைக் கொண்டு அக்குழந்தையின் சிறப்பியல்புகளையும், அதன் எதிர்காலம் பற்றியும் ஓரளவு கூறமுடியும். திருமணத்திற்கு ஆண், பெண் இருவருடைய நட்சத்திரங்களை வைத்து திருமணப் பொருத்தம் பார்க்கப்படுகின்றது. அதேபோன்று தொடங்க , வீடுகட்ட, கல்விப்பயிற்சி செய்ய ஏற்ற நட்சத்திரங்கள் பார்க்கப்படுகின்றன.

நட்சத்திரங்கள் 27 எனக் கணக்கிட்டுள்ளனர். வானத்தில் இவற்றுக்குரிய அமைப்பும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அச்சுவினி | | குதிரைத்தலை. | 14. | சித்திரை | | முத்து. |
| 2. | பரணி | | அடுப்பு. | 15. | சுவாதி | | பவளம். |
| 3. | கார்த்திகை | | தீக்கதிர். | 16. | விசாகம் | - | தோரணவாயில் |
| 4. | உரோகிணி | | சக்கரம். | 17. | அனுசம் | - | கையில் பிடித்த குடை. |
| 5. | மிருகசீரிடம்- | | மான்தலை. | 18. | கேட்டை | - | ஈட்டி. |
| 6. | திருவாதிரை | | தீக்கொள்ளி | 19. | மூலம் | - | பாயும்சிங்கம். |
| 7. | புனர்பூசம் | - | ஓடம். | 20. | பூராடம் | - | இரட்டைச்சதுரம். |
| 8. | பூசம் | - | புடலம்பு. | 21. | உத்தராடம் | - | கட்டில்கால். |
| 9. | ஆயிலியம் | - | சக்கரம். | 22. | திருவோணம் | - | மூன்றரைஅடி. |
| 10. | மகம் | - | நுகத்தடி. | 23. | அவிட்டம் | - | மத்தளம். |
| 11. | பூரம் | - | கட்டில் கால்கள். | 24. | சதயம் | - | வட்டம். |
| 12. | உத்தரம் | - | யானைத்தோற்றம். | 25. | பூரட்டாதி | | கட்டில்கால். |
| 13. | அஸ்தம் | - | கைத்தலம். | 26. | உத்தரட்டாதி | | கட்டில்கால். |
| | | | | 27. | ரேவதி | | மீன். |

**நன்றி - இந்துக்கலைக் களஞ்சியம்**
**தொகுதி ஒன்பது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயக வழிபாட்டின் தொன்மை


பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்
ஓய்வுநிலை தகைசால் பேராசிரியர்.
தலைவர், இராமநாதன் நம்பிக்கை நிதியம்,
தலைவர், இந்து சமயப் பேரவை.


இந்துக்கள் மத்தியில் விளங்கும், வழிபாட்டுக்குரிய தெய்வங்களில் முதன்மையான இடத்தை விநாயகர் பெற்றிருக்கின்றார் என்றால் மிகையாகாது. விநாயகர் என்பதன் பொருள், இவருக்கு மேலான தலைவர் ஒருவரில்லை என்பதாகும். கணபதி, கணேச என்ற நாமங்களும் இவருக்குண்டு. "கணங்களின் தலைவர்" என்பதே இதன் பொருள். சிவன்கூட, கணங்களின் தலைவன் என்ற வகையில், "கணேச" என மகா பாரதத்தில் விளிக்கப்படுகின்றார். பக்தர்களுக்கு வரும் துன்பங்களை நீக்குவதால், இவர் "விக்னேஸ்வரன்" எனவும் அழைக்கப்படுகின்றார். இன்று வீட்டுக்கிரியைகளென்றால் என்ன, ஆலயக் கிரியைகளென்றாலென்ன விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகிறது வழக்கமாகி விட்டது. ஆனைமுகக் கடவுளான இவரின் வழிபாடு, தனித்துவமான வழிபாடாக வளர்ச்சி பெற்றுப் பின்னர் இந்து சமயக் கடவுள்களோடு இணைந்தது. இந்துமதப் பிரிவுகளிற் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணபத்தியம் ஆகிய தனித்தனி வழிபாட்டு மரபுகளாகக் காணப்பட்டாலும்கூட, ஈற்றில் இவையெல்லாம் இணைந்தன எனலாம். இவ் வகையில் விநாயகர்கூட, சிவனின் 25 வடிவங்களில் ஒன்றாகக் கருதப்பட்டு, சிவனிலிருந்து வேறுபட்டவர் அல்லர் என்ற கருத்துக்கூட நிலவுகிறது. இதனால் சிவனின் மூத்த மகனே இவரென்றும், இவருக்கு இளையவர்தான் முருகன் என்றும் கருதப்படுகிறார்.

எவ்வாறாயினும், இந்துக் கடவுளரின் வழிபாட்டு மரபுப் பின்னணியை நோக்கும்போது, விநாயகரின் வரலாறு, இத்தெய்வங்களின் வரலாற்றைப் போல், தொன்மையானதாக அமையவில்லை. இதனால் இவ்வழிபாட்டு மரபில், பின்னர் இணைந்த முன்னிலைபெற்ற ஒருவராகவே, விநாயகரை அறிஞர்கள் கருதுகின்றனர். எனினும், மற்றைய எல்லாக் கடவுளர் வழிபாட்டு இடங்களிலும், விநாயகரது திருவுருவம் காணப் படுவது, இவ்வழிபாட்டிற் குரிய சிறப்பம் சமாகும்.

இந்தியாவில் மட்டு மன்றி, இந்தியாவுக்கு வெளி யேயும் செல்வாக்குள்ள கடவுளாக, இவர் காணப்பட்டதற்கான சான்றுகள் உள. ஆப்கானிஸ்தான், நேபாளம், திபெத், சீனா, யப்பான் போன்ற நாடுகளில் மட்டுமன்றி ஈழம், தென்கிழக்காசிய நாடுகளான பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் விநாயகருக் குரிய திருவுருவங்கள் காணப்படுகின்றன. இந்தியாவைப் பொறுத்த மட்டில், தற்கால வழிபாட்டிற்குரிய விநாயகரின் திருவுருவம், கி.பி 400 ஆம் ஆண்டளவிலேதான் முதன்முதலாகச் சிலை வடிவில் காணப்படுகிறது. குப்தகலை மரபில் அமைந்த, வடஇந்தியாவிலுள்ள இத்தகைய சிற்பம், பூமார என்ற இடத்திலுள்ளது. இந்தியாவிற்கு வெளியிலே, ஆப்கானிஸ்தானில், அண்மைக்காலத்தில் பழமைவாய்ந்த இரு சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கபூலின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கே பத்துமைல் தொலைவிலுள்ள சகர்தர் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலை, இந்தியாவில் பூமாரவிலுள்ள சிலைக்கு, காலத் தால் முற்பட்டது என்று கொள்ளப்படுகிறது. அப்படியாயின், இச்சிலைதான் உலகிலே காணப் படும் மிகப்பழைய சிலையாகும்.

எவ்வாறாயினும், காணபத்தியத்தின் தோற்றத்தைப்பற்றி ஆராய்ந்துள்ள அறிஞர்கள், இந்தியாவில் இவ்வழிபாடு, கி.பி. 5ஆம் நூற் றாண்டிற்றான் தோன்றியது எனக் கூறினாலும் கூட, இவ் வழிபாட்டின் தோற்றத்தை உற்று நோக்கும்போது, பண்டைய உலக நாகரிகங்க ளான சுமேரியா, எகிப்து, சிந்துவெளி ஆகியவற் றின் பின்னணியிற்றான் இதனை ஆராயவேண்டி யுள்ளது. இத்தகைய நாகரிகங்களில் மனித முகமும் மிருக உடம்பும், மிருகத் தலையும் மனித உடம்பும் உள்ள சிற்பங்கள் உள. இத்தகைய சிற்பங்கள் மனித, மிருக வழிபாட்டின் சங்கமிப் புக்களாகவே காணப்படுகின்றன. இதனால், வேதங்களிலோ அன்றி இதிகாசங் களிலோ, இவ் வழிபாட்டுக்குரிய தடயங்கள் காணப்படாவிட் டாலும்கூட, தென்னாசியாவின் பழைய வழி பாட்டு நெறிகளான மிருக வணக்கம், யக்ஷ (உருவ) வழிபாடு ஆகியவற்றின் பின்னணி யில் நோக்கும்போதுதான் இதன் தொன்மை புலப்படு கின்றது.

சிந்துவெளி நாகரிகம் தொட்டு இற்றை வரை, பல்வகையான மிருகங்கள் வழிபாட்டு நெறிகளாக, முதன்மைபெற்றுக் காணப்படுவதை அவதானிக்கலாம். மிருகங்கள் மட்டுமன்றிப் பறவைகளும் வழிபாட்டுச் சின்னங்களாக விளங்கியமை புலனாகிறது. இவ் வரிசையிற் பசு, எருது, யானை, குதிரை, சிங்கம் மட்டுமன்றி மயில், கருடன்போன்றவற்றோடு, ஊர்வன வரிசையில் உள்ள நாகமும் சிறப்புப்பெறுகின் றது. தென்னாசியாவின் கி.மு. 6ம் நூற்றாண்டைச் சேர்ந்த, பண்டைய நாணயங்களான முத்திரை நாணயங்களில் எருது, யானை, குதிரை, சூரியன், பிறை, கருடன், சக்கரம், சுவஸ்திகா, மீன், மரம், நாய், சிங்கம், மயில் ஆகியன சித்திரிக்கப் பட்டுள்ளன. சமய வளர்ச்சியின் ஆரம்ப நிலை யைக் குறிக்கும் இயற்கை வழிபாட்டிற்குரிய இலட்சினைகளாக இவற்றைக் கொண்டாலுங் கூட, பிற்பட்ட காலத்தில் இந்து சமயக் கடவுள ரோடு இவை நெருக்கமான தொடர்பைக் கொண் டுள்ளன. எருது இரண்டு நிலைகளில் இந்நாண யங்களிற் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஒன்று எரு தாகிய நிலை, மற்றையது இதன் குளம்பாகிய "நந்தி பாதம்" வழிபாட்டுப் பொருளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளநிலை. சிவனின் வாகன மாகப் பின்னர் எருது விளங்குவதும் குறிப் பிடத்தக்கது. யானைகூடப் பிற்பட்ட காலத்திற் பல தெய்வங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. யானை முகத்தினையுடைய விநாயகரோடு இது தொடர்புபடுத்தப்பட்டுள்ளதோடு இந்திரன், முருகன், ஐயனார் போன்றோரின் வாகனமாகவும் பிற்பட்ட காலத்தில் இது சித்தரிக்கப்பட் டுள்ளது. இவ்வாறே கஜலக்ஷ்மி உருவங்களிலும் யானை முக்கியம்பெறுகிறது. யானைகூட மழை வளத்தின் பலத்தின் சின்னமென ஐதீகம் உண்டு.

சிங்கம் துர்க்கைக்குரிய வாகனமாக அமைந் துள்ளது. குதிரை ஐயனாரின் வாகனமாகும். தீங்கு விளைவிக்கும் சக்திகளை விரட்டும் தன்மை நாய்க்கு இருப்பதால் அதுவும் இங்கே சித்திரிக்கப் பட்டுள்ளது எனக் கொண்டாலும்கூட இம் மிருகம் ஐயனார், வைரவர்போன்ற தெய்வங் களுடன் இணைத்துக் கூறப்படுவதும் அவதானிக் கத்தக்கது. கருடன் விஷ்ணுவோடு இணைந் துள்ளது. இவ்வாறே விஷ்ணு வணக்கத்துடன் சக்கரமும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. மயில் கந்தனுக்குரியது. சூரியன், சந்திரன் ஆகியோர் ஆரம்பத்தில் தனித்தனித் தெய்வங்க ளாக வழி படப்பட்டனர். பின்னர் சிவவணக்கத்துடன் பாம்பையும் இணைத்ததும் குறிப்பிடத்தக்கது. சுவஸ்திகாகூடப் பிற்பட்ட காலத்தில் பௌத்தத் தோடு இணைக்கப்பட்டாலும் சூரிய வழி பாட்டுச் சின்னமாகவே ஆரம்பத்தில் இது கொள்ளப்பட்டது. மீனுக்கும் மச்ச அவதார மெடுத்த விஷ்ணுவுக்கும் உள்ள தொடர்பு ஆராயப்படத்தக்கது. மரங்கள் செழிப்பின் சின்ன மாகும். மரம் வழிபாட்டுப் பொருளாகவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது. இத்தகைய கருத்தையே மிகப் பழைய யக்ஷி உருவங்கள், மரக்கிளைகளைத் தொட்டு நிற்கும் பாவனையிலுள்ள சிற்பங்கள் ஆகியன எடுத்தியம்புகின்றன. மிருகங்கள் கலைச் சின்னங்களாக கிறிஸ்தாப்த காலத்திலே முதன்மை பெற்றதற்கான தடயங்களும் உள. கி.மு. முதலாம் நூற்றாண்டுக்குரிய வட இந்தியா விலுள்ள சாஞ்சி தாது கோபுரத்தின் மேற்கு வாசலாக அமைந் துள்ள தோரணத்தில் யானை, பன்றி, எருமை, ஆடு, குதிரை, சிங்கம் ஆகியன சித்திரிக்கப் பட்டுள்ளன. இத்தகைய மிருகங்கள் நாட்டார் கலையின் எச்சங்களாகச் சுடுமண் பாவைகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய சான்றுகள் இயற்கை வழிபாட் டின் எச்சங்களாக மிருகம், பறவை, ஊர்வன, மரம் போன்றன விளங்கியதை எடுத்துக் காட்டும் அதே நேரத்தில்; மிகப்பழைய வழிபாட்டு மரபான இவற்றுடன் பின்வந்த உருவ வழிபாடு இணைத்து இவற்றை ஆட்கொண்ட நிலையையே எடுத்துக் காட்டுகின்றன. இந்தியா, ஈழம்போன்ற நாடு களில் உருவ வழிபாட்டின் எச்சசொச்சமாக விளங்குவது யக்ஷ, யக்ஷி உருவங்களாகும். இவற்றின் தோற்றம் கி.மு. 4ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதெனக் கொள்வர். யக்ஷ என்றால் இராட்சதர் வெறுக்கத்தக்கவர் என்ற பொருளில் இன்று நோக்கப்பட்டாலும்கூட, ஆரம்பத்தில் வணங்குதல், வணக்கத்திற்குரியவர், பூசிக்கத் தக்கவர்கள் என்ற பொருளையே இது தந்துள்ளது என்றும், பிற்காலத்திற்றான் எதிர்மாறான, கருத்தினை இது தந்துள்ளது எனப் பரணவித் தானா எடுத்துக் காட்டியுள்ளதும் ஏற்புடைய கருத்தாக அமைந்துள்ளது. இத்தகைய மனித உருவங்கள் வழிபாட்டுப் பொருட்களாக வட இந்தியாவின் பல பகுதிகளிலும் விளங்கியதைக் கூறும் ஆனந்த குமாரசுவாமி விநாயகரின் உடலமைப்புக்கும் இவ்யக்ஷ உருவங்களுக்கு மிடையேயும் இளைவிட்டோடும் தொடர்பினை எடுத்துக்காட்டி இவ்யக்ஷ உருவங்கள்தான் விநாயகரின் உடலமைப்புக்குப் பின்னணியாக விளங்கின எனவும் கூறியுள்ளார். இவ்யக்ஷ உருவங்களே கணங்கள் அல்லது பூதங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. விநாயகர் மட்டுமன்றிப் பழைய இந்துக் கடவுளரின் உருவங்கள்கூட ஆரம்பத்தில் யக்ஷ உருவங்களின் தோற்ற உருவைப் பெற்றிருந்ததும் அவதானிக்கத்தக்கது. உதாரணமாக: ஆந்திரமாநிலத்திலுள்ள குடி மல்லத்திலுள்ள மிகப்பழைய சிவனுடன் கூடிய லிங்க உருவத்திற் காணப்படும் சிவனின் உருவத்திற்கூட யக்ஷ உருவங்களின் தோற்ற அமைப்புள்ளதை அறிஞர்கள் எடுத்துக் காட்டி யுள்ளனர்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரிய அமராவதிச் சிற்பத்தில் (படம்-1) கணங்களில் ஒன்று யானைமுகத்துடன் காணப்படுவது ஆனந்த குமாரசுவாமியினால் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. விநாயகரின் மிகப் பழைய சிற்பமாக இது அமையலாம் எனவும் அன்று அவர் கருதினார் எனினும், இச்சிற்பத்தில் யானை முகம் மட்டுமே காணப்படுகிறது. தும்பிக்கையோ



படம் 1

அன்றித் தந்தமோ காணப்படவில்லை. இவ்வாறே வட இந்தியாவிலுள்ள மதுரைக் கலைக்கூடத்திற் கண்டெடுக்கப்பட்ட சிற்பத்திலும் யானைமுகக் கடவுளின் யானைமுகத்திலுள்ள தும்பிக்கை வளைந்து காணப்பட்டாலும் இதன் வலது பக்கத் தந்தம் மட்டுமே உளது. இச்சிற்பத்தில் எதுவித அலங்கார அணிகலங்கள் காணப்படாததும் இதன் பழமையை எடுத்துரைக்கிறது.

எவ்வாறாயினும் வடமேற்கிந்தியாவில் ஆட்சி செய்த கிரேக்க வம்சத்தவரால் வெளி யிடப்பட்ட நாணயம் ஒன்றை எடுத்துக்காட்டும் பேராசிரியர் நரையின் கி.மு முதலாம் நூற் றாண்டிலே இவ்வழிபாடு முதன்மை பெறத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியதை விளக்கியுள்ளார். இந்நாணயம் பிரித்தானிய நூதனசாலையிலுள்ளது. இதனை வெளியிட்ட மன்னனின் பெயர் கேமயூஸ் ஆகும். இதன் முன்பக்கத்தில் மன்னன் உருவமும், கிரேக்க மொழியிலுள்ள வாசகமும் காணப்பட இதன் பின்பக்கத்தில் யானை முகக் கடவுள் சித்தரிக்கப் பட்டுள்ளது. இதன் வலது கரம் அபய முத்திரை பாவனையிற் காணப்பட இடது கரம் செங் கோலுடன் (சூலத்துடன்) சித்தரிக்கப்பட்டுள்ள தோடு இவ்வுருவத்தைச் சுற்றிக் கரோஷ்டி மொழியில் வாசகமும் உளது. இதனால் கணேச வழிபாட்டின் மிகப்பழைய எச்சமாக இந் நாணயப் பொறிப்புக் கொள்ளப்படுகிறது.

இச் சந்தர்ப்பத்தில் தமிழகத்தின் இதன் தொன்மைபற்றி ஆராய்வதும் பொருத்த மாகிறது. வட இந்தியாவைப் போன்றே சம காலத்தில் (கி. பி.5ம் நூற்றாண்டளவில்) இவ்வழி பாட்டிற்குரிய எச்சங்கள் இங்கு காணப் படுகின் றன எனக் கருதப்பட்டாலும்கூட, சில அறிஞர்கள் இவ்வழிபாட்டின் தோற்றத்தைக் கிறீஸ்தாப்த காலத்திற்கு முன்னருள்ள நிகழ்ச்சி எனக் கொள்வர். இவர்களில் வரலாற்றறிஞரான சுப்பிரமணியன் சங்க இலக்கியங்களில் "விநாய கர்" பற்றிய குறிப்புக் காணப்படா விட்டாலும் கணேச வழிபாட்டின் யக்ஷஉருவ அமைப்புப் பின்னணியை மையமாகக் கொண்டு தமிழகத்தில் வழக்கிலிருந்த பூத (கணங்களின்) வழிபாட்டில் விநாயக வழிபாட்டின் தோற்றத் தினை இனங் காண முயல்கிறார். சேர நாட்டின் தலை நகரான வஞ்சியிற் காணப்பட்ட பெருஞ் சதுக்கத்துப் பூதந்தான் இவ்வழிபாட்டைக் குறிக்கிறது என்பதும் இவரது கருத்தாகும். கையில் பாசத்துடன் காட்சி தரும் இப்பூதம் விக்கினேஸ் வரனைப்போன்று தவறுசெய்வோரைத் தண்டி த்து நல்லோரைக் காப்பாற்றும் இயல்புடையது. பெரும்பாலும் சந்திகளில் இப்பூதம் வழிபடப் பட்டதால் பூதநாதன் எனவும் இது அழைக்கப் பட்டது. விநாயகரின் நாமங்களின் ஒன்றாகிய கணநாதன் அல்லது கணபதியைப் பூதநாதன் என்ற பதம் ஒத்திருப்பதும் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. சேரமன்னனான இளஞ்சேரல் இரும்பொறைதான் பெருஞ் சதுக்கத்துப் பூதவழி பாட்டை தனது தலைநகரான வஞ்சியில் ஏற் படுத்தியதோடு பழைய வழிபாட்டு மரபிலிருந்து மாறுபட்ட மந்திர வழிபாட்டு மரபை இப்பூத வழிபாட்டிற் புகுத்தியதாகவும் சிலப்பதிகாரம் குறிப்பிடுவதும் இவரால் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் "கணபதி" "பூதநாதன்" போன்ற பதங்கள் காணப்படா விட்டாலுங்கூட சங்கப் புலவர்களில் ஒருவர் "பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார்" எனப் பெயர் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

சங்கநூல்களில் விநாயகர் பற்றிய குறிப்புக் காணப்படாவிட்டாலுங்கூட பிற்கால விநாய கருக்குரிய வழிபாட்டம்சங்களைக் கொண்ட கடவுள் பற்றிய குறிப்புக் காணப்படுவதால் விநாயகவழிபாடும் இக்காலத்தில் இங்கு நிலவி இருக்கலாம் என வேறுசிலரும் கருதுகின்றனர். இதற்கு ஆதாரமாகச் சங்க இலக்கிய நூல்களிற் புறநானூற்றில் எருக்கலம் பூ பற்றி வரும் குறிப்பு எடுத்துக்காட்டப்படுகிறது. எருக்கலம் அழிவின் அறிகுறி என்றும், வீட்டில் இம்மரம் வளர்ந்தால் வீட்டையே அழித்துவிடும் என்ற ஐதீகம் உண்டு. ஆனால் எருக்கலம் பூ சிவனுக்கும் கணபதிக்கும் மிகவும் பிரியமானவையாகக் கருதப்படுகிறது. தேவாரத்தில்கூடச் சிவனின் சடாமுடியிற் காணப் படும் எருக்கலம் பூ பற்றிய குறிப்புள்ளது. கம்பராமாயணத்தில் **"சிவன் வெள்ளெருக்கம் சடை முடியோன்"** எனக் குறிப்பிடப்படு கின் றான். கணேச ஆகமத்தில்கூட கணபதி மந்திரங் களை உபாசித்துப் பிரதிஷ்டை செய்யப்படா விட்டாலுங்கூட வெள்ளெருக்கம் மரத்தின் வேரில் உறைகின்றான் என்றும் இவனை இவ்வாறு உபாசிப்பதன்மூலம் ஒருவன் பெரிய புண்ணியத்தைத் தேடிக்கொள்கின்றான் என்ற குறிப்பும் காணப்படுகிறது. இதனால் எருக்கலம் மலரில் அன்றி எருக்கலம் வேரிலும் கணபதி உறைகிறான் என்ற ஐதீகம் உண்டு. விநாயக சதுர்த்திக் காலத்தில் இதன் பயன் நன்றாக உணரப்படுகிறது. எருக்கலம் வேரில் விநாயக உருவம் செய்யப்பட்ட விநாயகர் வழிபடப் படுகிறான் . இதனால் வெள்ளைப் பிள்ளையார் என்று விநாயகர் அழைக்கப்படுவது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட பின்னணியிற்றான் சங்க இலக்கியமாகிய புற நானூற்றில் (106ஆம் பாடல்) எருக்குப் பற்றிவரும் குறிப்பு ஆராயப் பாலது. இப்பாடல் கபிலராற் பாரிமீது பாடப்பட்டுள்ளது. இதன் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

"நல்லவுந் தீயவுமல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்கு மாயினு முடையவை
கடவுள் பேனே மென்னா வாங்கு
மடவர் மெல்லியா செல்லினும்
கடவன் பாரி கைவண்ணமே."

இதன் பொருள் பின்வருமாறு அமைந்துள்ளது.

"நல்லனவென்றும் தீயனவென்றும்
சொல்லப்படுவன சூடும்
பூவாதலால்அவை இரண்டினும் வைத்து
எண்ணப்படாத
குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய
இலையையுமுடைய
எருக்கம் பூவாயினும் ஒருவனுடையனவவற்றைத்
தெய்வங்கள்
விரும்பேமென்னா: அதுபோல் யாதும்
அறிவில்லாத தாரும்
புல்லிய குணங்களையுடையாரும் சொல்லினும்
பாரிகை
வண்மை செய்தலைக்கடப் பாடாகவுடையவன்"

மேற்கூறிய செய்யுளிற் கடவுள் ஏற்கும் மலராக எருக்கலம் பூ கூறப்படுகிறது. கணபதிக்கு ஏற்புடைய மலராகவும் இலையாகவும் எருக்கலம் விளங்குவதால் இதிற் கணபதி என்ற குறிப்பு இடம்பெறாவிட்டாலும் "கடவுள்" என்பது கணபதியையே சுட்டி நிற்கிறது எனவும் கூறப்படுகிறது.

எனினும் ஈழத்தைப் பொறுத்தமட்டில் கணபதி வழிபாடு கிறிஸ்த்து பிறப்பதற்கு முன்னருள்ள காலப்பகுதியில் வழக்கிலிருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றது. ஈழத்திலும் இந்தியாவைப்போல் யானை மிகப் பழைய நாணயங்களான முத்திரை நாணயங்களில் மட்டுமன்றிச் சுடுமண் பாவைகளிலும் காணப்படுகிறது.



படம் 2

அத்துடன் யக்ஷ, யக்ஷி உருவங்களும் இங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும் மிகவும் உறுதியான சான்றாக விளங்குவதுதான் ஈழத்தின் பழைய தாதுகோபுரங்களில் ஒன்றாகிய கண்டக சேத்தியத்தின் அலங்காரப் பொருளாக விளங்கும் கணபதி சிற்பமாகும். (படம் 03) இச்சிற்பம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதலாம் நூற்றாண்டுக்குரியதென்று பரணவித்தானா கருதுகிறார். இச்சிற்பத்தில் பல்வேறு பாவனைகளில் கணங்கள் சித்தரிக்கப் பட்டுள்ளன. இவற்றிற் குதிரை பன்றி, யானை முகங்களுடன் கணங்கள் காணப்படுகின்றன. யானைமுகத்துடன் காணப்படும் கணத்தை கணபதியின் உருவமே எனலாம். (படம்03)



படம் 3

தும்பிக்கையுடனும் இரு கரங்களுடனும் காணப்படும் இக்கணத்தை கணங்களின் பதியாகிய கணபதியே என எல்லாவலவும் இனங்கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கணபதி வழிபாட்டை உணர்த்தும் மேற்கூறிய சிற்பத்தினை விடக் கிறிஸ்த்து பிறப்பதற்கு முன்னருள்ள காலப் பகுதியாகிய கி.மு 3/2 ஆம் நூற்றாண்டுகளுக்குரிய ஈழத்தின் மிகப் பழைய கல்வெட்டொன்றில் கணபதி பற்றிய குறிப்புள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்வெட்டு அநுராதபுர மாவட்டத்திலுள்ள வனசிம்உற விகாரையில் (201) உளது. இதில் "கணஸ லெணெ ஸகஸ" என்ற குறிப்புக் காணப் படுகிறது. இதனை மொழிபெயர்த்த பரணவித் தானா "ஸகஸ" என்றால் தானமாக வழங்கப்பட்ட குகை என அதற்கு விளக்கமளித்துள்ளார். இக்காலத்தில் வியாபாரக் குழுக்கள் இயங்கிய மைக்குச் சான்றுகள் காணப்பட்டாலுங்கூட, பரணவித் தானா கூறிய வியாக்கியானத்தைவிட இது கண வழிபாட்டில் ஈடுபட்டுள்ள ஒருவன் அளித்த குகைத்தானத்தையே குறிக்கிறது எனலாம். கணங்களின் நாதன்தான் கணநாத னாகிய கணபதியாகும். ஈழத்திலுள்ள இதே பிராமிக் கல்வெட்டுக்களில் சிவன், முருகன், உமை, விஷ்ணு, லக்ஷ்மி ஆகியோரது வழி பாட்டில் திளைத்திருந்தோர் இத்தகைய பெயர் களைச் சூடியிருந் ததை நோக்கும்போதும், "சிவ" என்ற பெயர் பல்வேறு வகையில் இக்கல்வெட்டு களில் எடுத் தாளப்பட்டுள்ளதை நோக்கும் போதும் கணங்களின் வழிபாட்டின் வழிவந்த கணபதியையே மேற்கூறிய கல்வெட்டுக் குறிக்க லாம் என்பதை மிகுந்தலையிலுள்ள கண்டாக சேத்தியத்திலுள்ள கணபதியின் சிற்பம் உறுதி செய்கிறது எனலாம். மேற்கூறியவற்றை தொகு த்து நோக்கும்போது விநாயகர் வழிபாட்டின் தொன்மைக்கான ஆதாரங்கள் மற்றைய வழிபாட்டு நெறிகளோடு ஒப்பிடும்போது மிக அருகிக் காணப்பட்டாலுங்கூட இவ்வழி பாட்டின் அம்சங்களை ஒருங் கிணைத்துப் பார்க்கும்போது தொன்மையான வழிபாட்டு நெறிகளான யானை யக்ஷ (உருவ) வழிபாடு ஆகியவற்றை உள்வாங்கி வளர்ச்சி பெற்ற தொன்றாகவே காணப்படுகிறது. இதனால் இதனை ஆரியருக்கு முந்திய வழிபாட்டு நெறி யாக அறிஞர்கொள்வர். இதன் தொடர்ச்சியை வரலாற்று ரீதியில் கி.பி.5ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் ஒரு வரலாறாகப் படைக்கமுடியா விட்டாலுங்கூட மேற்கூறிய சான்றுகள் இந்தியா ஈழம்போன்ற நாடுகளிற் கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே இவ்வழிபாடு வேரூன்றியிருந்தமை எடுத்துக் காட்டுகின்றன என்றால் மிகையாகாது.

## உசாத்துணை நூல்கள்


1. Narain.A.K, 'On the earliest Ganesa", senarat Paranavitana commemoration Volume (ed), Prematilleke Leelananda,et.al.(Leiden), 1978. page 142-144
2. Paranavitana,S.'Pre-Buddhist religious beliefs in Ceylon',J.R.A.S.C.B.,Vol.XXX1, No.82,1929, page 302-327
3. Coomaraswamy, Ananda Yaksas, (Reprint-Delhi),1971,page7
4. மேற்படி.
5. Narain, மு.கூ.க, பக். 142-144
6. Subrahmanian,N,Sangam Pality, (Madurai),1980, page.375-376
7. சாமிநாதையர்.உ.வே, புறநானூறு மூலமும் உரையும் (சென்னை),1935 பாட்டு 106
8. Paranavitana.S,Archaeolegical Survey of Ceylon,Annual Report for 1935.
9. Ellawala.H.,Social History of Early Ceylon, (Colombo),1969,g.159.
10. Paranavitana.S., Inscriptions of Ceylon,Vol. 1Brahmi Inscriptions, (Colombo)1970 கல். இல 201
11. சிற்றம்பலம். சி.க. ஈழத்து இந்து சமய வரலாறு பாகம்1 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு (திருநெல்வேலி), 1996
12. Sitampalam,S.K., 'The Brahmi Inscriptions as a source for the study of Puranic Hinduism in Ancient Sri lanka.' Ancient Ceylon,Vol 1 - No.7. 1990
13. Majumdar. R.C., The Vedic Age (lend) - 1957, ப.165




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் தத்துவமும் வழிபாடும்


டாக்டர் மா. வேதநாதன். M.A,Ph.D.,
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.


**அறிமுகம்**

விநாயகர் வழிபாடு மிகவும் புராதன மானது. தனிப்பெருஞ் சிறப்புடைய இவ்வழி பாடு சிந்துவெளி நாகரிகத்தில் நிலவியதை அறிஞர் குறிப்பிடுகின்றனர். இருக்கு வேதத்தில் விநாயகர் "கணபதி" என்ற சொல்லினால் சுட்டப்பட்டுள்ளார். தேவாரங்களிலும் அவர் "கணபதி" என்ற சொல்லால் சுட்டப்படுவது இங்கு நோக்குதற்குரியது. விநாயகர் வழிபாட்டி னைக் "கணபதி வழிபாடு" என்றும் வழங்குவர். விநாயகரைப் பரம்பொருளாகக் கொள்ளும் அவரின் தத்துவம் "காணாபத்தியம்" எனப்படும். விநாயகரின் திருவடிவங்களும், திருவுருவங்களில் காணப்படும் ஆயுதங்களும், அவர் சத்தியுடன் விளங்கும் திருக்கோலங்களும், அவர் எழுந்தருளி யிருக்கும் வாகனங்களும், அவரின் திருநாமங் களும், விநாயகர் வழிபாட்டு முறைகளும். அறிவார்ந்த தத்துவப்பொருளை உணர்த்துபவை யாக விளங்குகின்றன. அவற்றை எடுத்துக் காட்டு வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**விநாயகர் வடிவங்களின் தத்துவநிலை**

விநாயகர் ஒருவரேயாயினும் **"நிறுத்திடு வன் நினைத்த உரு நிமலன் தானே"** என்ற சித்தாந்த சைவ தத்துவ அடிப்படையில் அவர் அவ்வவ் போது பற்பல வடிவங்கள் கொண்டதைச் சமய சாத்திர நூல்கள் நன்கு புலப்படுத்துகின்றன. அகோர சிவாசாரியாரர் பத்ததி பதினாறு வகையான விநாயகர் வடிவங்களைக் குறிப்பிடு கின்றது. ஸ்ரீ தத்துவ நிதி என்ற சிற்ப நூலில் விநாயகரின் முப்பத்திரண்டு வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. கணபதி ஹ்ருதயம் என்ற நூல் விநாயகரின் ஐம்பத்தொரு பேதங்களைச் சுட்டு கின்றது. ஸ்ரீ தத்துவநிதி கூறும் விநாயகரின் முப்பத்திரண்டு திருவடிவங்களின் தத்துவநிலை பற்றி முதலில் நோக்குவோம்.

**1. பால விநாயகர்**

இவர் குழந்தை வடிவத்தில் உள்ளவர். யானை முகத்தோடும் நான்கு திருகரங்களோடும் விளங்குகின்றார். மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் ஆகிய முக்கனிகளையும் கரும்பை யும் தனது நான்கு திருக் கரங்களில் ஏந்தியுள்ளார். துதிக்கையில் ஒரு மோத கத்தைத் தாங்கியுள்ளார். இவர் இளம் சூரியனை ஒத்த நிறமுள்ளவர். பால விநாயகர் ஒரே இடத்தில் உட்காராமல் ஓடி விளை யாடும் இயல்பினர். ஆரம்ப நிலையில் ஞானத்திற்குச் சலனம் உண்டு என் பதையே இத்திரு வடிவம் உணர்த்துகின்றது.



**2. தருண விநாயகர்**

இவர் இளம் பருவத் தோற்றம் உள்ளவர். யானை முகத்தையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுத்திருக்கரங்களையும் கொண்டவர். பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த கொம்பு, நெற்கதிர், கரும்பு என்பவற்றைத் தனது எண் கரங்களிலும் ஏந்தியுள்ளார். இவர் சிவந்த சூரியனின் நிறம் உடையவர்.

### 3. பக்தி விநாயகர்

இவர் யானை முகத்தையும் நான்கு திருக் கரங்களையும் உடைவர். தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், சர்க்கரைப் பாயாச பாத்திரம் ஆகியவற்றை தனது நாற்கரங்களிலும் ஏந்தியவ ராகக் காட்சி அளிப்பார். இவர் சரத்கால சந்திரனைப்போன்ற தூயவெண்மையான நிறம் உடையவர்.

### 4. வீர விநாயகர்

இவர் யானை முகத்தையும் பதினாறு திருக்கரங்களையும் உடையவர். கத்தி, வாள், வில், அம்பு, கேடயம், சம்மட்டி, தடி, அங்குசம், பாசம், சூலம், பரசு, குந்தம், வேதாளம், கதை, கொடி, சக்கரம் ஆகிய பதினாறையும் பதினாறு திருக்கரங்களில் ஏந்திநின்ற கோலத்தில் பதினாறு பேறுகளையும் தருபவராக விளங்கு கின்றார். உணவுப் பொருட்கள் இல்லாமல் ஆயுதங்கள் மட்டும் ஏந்தியுள்ள வீரத் திருவுருவம் இது ஒன்றே ஆகும்.

### 5. சக்தி விநாயகர்

இவர் யானை முகத்தையும் எட்டுக் கரங் களையும் உடையவர். தனது எட்டுக் கரங்களிலும் கிளி, மாதுளம்பழம், தாமரை, மணி, பொன்னால் செய்த நீர்ப் பாத்திரம், அங்குசம், பாசம், கல்பசாத்திரம் (மூப்பு வராமல்செய்யும் மருத்துவ நூல்) ஏந்தியவராய் விளங்குகின்றார். பச்சைத் திரு மேனியுடைய தேவியை இடுப்பில் கைகொடுத் துத் தழுவிக்கொண்டுள்ள நிலையில் காட்சி தருகின்றார். இவர் அந்திவானம் போன்ற செம்மை நிறமுடையவர்.

### 6. துவிஜ விநாயகர்

நான்கு திருக்கரங்களிலும் முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். நான்கு யானை முகங்களை உடையவர். மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன் போல வெண்மையானவர்.



### 7. சித்தி விநாயகர்

இவர் மாம்பழம், பூங்கொத்து, கரும்புத் துண்டு, எள்ளுருண்டை, பரசு என்பனவற்றைத் தனது ஐந்து கரங்களிலும் தரித்தவரும், பொன் கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குகின் றார்.

### 8. உச்சிஷ்ட விநாயகர்

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும், நீல நிறத்திருமேனி உடையவருமாக விளங்கு பவர். பிறிதொரு நிலையில் இவர் பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காம மோகிதராகவும், நீலவர்ணம் உடையவராகவும் விளங்குகின்றார். உச்சிஷ்டம் என்பதற்கு ஒருவர் உபயோகித்த பின் ஒதுக்கிய அசுத்தமான பொருள் என்பது கருத்து ஆகும். எச்சில் என்றும் அர்த்தம் உண்டு. சுத்தமான நிலையை மட்டு மன்றி அசுத்தமான நிலையினையும் கடந்து நிற்கும் நிலையே எமது வாழ்வின் குறிக்கோளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும். அசுத்தமான பொருள்களும் செடி, கொடிகளுக்குப் பசளையாகி எமக்கு நலன் பயக்கின்றது. இவ்வாறு "அழுக்கை அழுக்காகக் கருதக் கூடாது அவையும் நன்மை செய்யும்" என்ற தத்துவத்தை உச்சிஷ்ட விநாயகர் வடிவம் சுட்டி நிற்கின்றது. சிற்றின்பம் தெய்வீக நோக்குடன் அமையும்போது பேரின்பம் பெறப்படும் என் பதும் இத்திருவடிவத்தின் நுண்பொருள் ஆகும்.

**9. விக்ன விநாயகர்**

சங்கு, கரும்புவில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களை யுடையவராகவும், ஆபரணங்களை நிரம்பத் தரித்தவராகவும் பொன் மேனியுடை யவராகவும் விளங்கு கின்றார்.



**10. ஷிப்ர விநாயகர்**

தந்தம், கற் பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்கு சம் இவற்றை ஏந்திய வர். செவ்வரத்தம் பூப்போன்ற அழகிய மேனியர். செந்நிற மானவர்.

**11. ஹேரம்ப விநாயகர்**

அபயம், வரத மாகிய கைகளையுடையவர். பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகம் ஐந்துடையவர். பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்.

**12. இலட்சுமி விநாயகர்**

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம் பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப் பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.

**13. மஹா விநாயகர்**

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர்போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர், பிறை முடியர். மடிமீது எழுந்த ருளியிருக்கிற-தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப் பெற்றவர்.

**14. விஜய விநாயகர்**

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

**15. நிருத்த விநாயகர்**

இவரைக் கூத்தாடும் பிள்ளையார் என அழைப்பர். மோதிரங்களணிந்த விரல்களை யுடைய கைகளால் பாசம் அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் என்பவற்றைத் தரித்தவர். பொன்போன்ற நிறமுடைய திருமேனியர்.

**16. ஊர்த்துவ விநாயகர்**

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன் வண்ண வண்ணர். பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.

**17. ஏகாட்சர விநாயகர்**

செந்நிறமானவர். செம்பட்டாடையர். செம்மலர், மாலையர், பிறை முடியர், முக் கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர், மாதுளம் பழம் பாசம், அங்குசம், வரதம், இவை தாங்கிய கரங்களையுடையவர். யானை முகவர் பது மாசனத்திருப்பவர். பெருச்சாளி வாகனர்.

**18. வர விநாயகர்**

செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண்ணர், பாசம், அங்குசங்களைத் தரித்தவர். தேன்நிறைந்த கபாலத்தை உடையவர். பிறைமுடியர்.

**19. திரயாஷ்ர விநாயகர்**

அசைகின்ற செவிகளாகிய சாமரையணிந் தவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைத்தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

**20. ஷிப்ரபிரசாத விநாயகர்**

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம் பழம், தாமரை, தருப்பை, விடரம் இவற்றை தரித்தவர். திருவாபரணங் களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.

**21. ஹரித்திரா விநாயகர்**

மஞ்சள்நிறமானவர். நான்கு கரங்களை உடை யவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம், இவற்றைத் தரித்திருப்பவர். பக்தர் கட்கு அபயமளிப்பவர்.



**22. ஏகதந்த விநாயகர்**

பேழைவயிற்றுடன் நீலமேனியர் கோடரி, அட்ச மாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.

**23. சிருஷ்டி விநாயகர்**

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தை யுடையவர் சிவந்த திரு மேனியர்.

**24. உத்தண்ட விநாயகர்**

நீலம், தாமரை, மாதுளம் பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்ன கலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக்கை களை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பச்சைமேனியாளாகிய தேவியால் தழுவப் பெற்றவர். சிவந்த மேனியுடையவர்.

25. ரணமோசன விநாயகர்.

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்கு போன்ற மேனியர் செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

**26. துண்டி விநாயகர்**

அட்சமாலை, கோடரி, ரத்னகலசம், தத்தம் இவற்றை ஏந்தியவர்.

**27. துவிமுக விநாயகர்.**

தந்தம், பாசம், அங்குசம் ரத்ன பாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர். பசுநீலமேனியர் செம்பட்டாடையும் ரத்தின கிரீடமும் அணிந் தவர். இருமுகம் உடையவர்.

**28. மும்முக விநாயகர்**

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சய மாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம் இவற்றை உடையவர். பொற்றாமரையாசனத்தின் நடுப் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளி யிருப்பவர். புரசம் பூப்போன்ற சிவந்த நிறம் உடையவர்.

**29. சிங்க விநாயகர்**

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்னகலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடதுகைகளையுடையவர். வெண்ணிறமான மேனியர், யானைமுகர், சிங்கவாகனத்தில் எழுந் தருளியிருப்பவர்.

**30. யோக விநாயகர்**

யோக நிலையில், யோக பட்டம் தரித்துக் கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக் கொண்டு, பாசம் அட்சமாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

**31. துர்க்கா விநாயகர்.**

சுட்ட பசும்பொன்னிறம், எட்டுக்கை, பெரியமேனி, அங்குசம், பாணம், அட்ச மாலை, தந்தம் இவைகளை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி நாவற்பழம் இவைகளை இடது கைகளில் உடையவர். செந்நிற ஆடையர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32. சங்கடஹர விநாயகர்**

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பக்கத் தொடையில் சத்தியை உடையவராக விளங்குகின்றார். சக்தி பசியமேனியளாக நீலப்பூவினை ஏந்தியவளாக இருப்பாள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீலநிறமான ஆடையணிந்தவர்.

மேலே காட்டப்பட்டுள்ள விநாயகரின் திருவடிவங்களை நோக்கும்போது அவர் பொதுவாக யானை முகம்கொண்டவராகவும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற எண்ணிக்கை உடைய திருமுகங்களை உடையவராகவும், நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினாறு என்ற திருக்கரங்களைக் கொண்டவராகவும், அவற்றில் வெவ்வேறு ஆயுதங்களைத் தரித்துள்ளவராகவும், செம்மை, வெண்மை, மஞ்சள், கருநீலம், நீலம் ஆகிய நிறங்களை உடையவராகவும், தேவி அற்ற திருமேனியராகவும், ஒரு தேவியை உடையவராகவும், இரு தேவியர்களுடன் விளங்குபவராகவும், எலி, சிங்கம் ஆகிய வாகனத்தில் எழுந்தருளியிருப்பவராகவும் விளங்குகின்ற தத்துவ நிலை தெரியவருகிறது. மேலும் விநாயகர் படிமங்கள் நின்ற கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும், ஆடற்கோலத்திலும் அமையும் மெய்மையும் புலப்படுகின்றது. நின்ற கோலத்தில் இயற்றும்போது ஆபங்கம் அல்லது சமபங்கத்தில் விநாயகரின் படிமம் அமைதல் வேண்டும். அமர்ந்த கோலத்தில் அமைக்கும்போது உடலையும் தலையினையும் நேரியதாக அமைத்து வலது காலை ஆசனத்தில் தொடையுடன் சேர்த்து மடக்கி ஊன்றி இடது காலைக் கிடத்தியதாயிருத்தல் வேண்டும். இல்லங்களில் வைத்து வழிபடுவதற்கும். கோயில்களில் பிரதிட்டை செய்வதற்கும் அமர்ந்த விநாயகர் கோலப் படிமமே ஏற்றதாகும். உற்வசங்களுக்கு அமர்ந்த கோலம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் நின்ற கோலமுடைய விநாயகரே விஷேடமென்பது தத்துவமாகும்.

**விநாயகரின் திருவுருவத் தத்துவம்**

விநாயகர் திருவுருவத்தின் தத்துவ நிலை பரமரகசியமானதாகும். அவரின் தத்துவத்தையும் அவரின் வீரதீரச் செயல்களின் உட்பொருளையும் சிறப்பாகப் புலப்படுத்துவது **"விநாயக புராணம்"** ஆகும். ஔவையார் பாடியருளிய **"விநாயகர் அகவல்"** விநாயகர் உருவம் பற்றியும் அவ்வுருவம் சுட்டும் தத்துவப் பொருளையும் விளக்கி நிற்கும் சைவத்தமிழ் இலக்கியமாகும். இவ்விலக்கியத்தில் விநாயகரின் திருவுருவத்தில் சிலம்பு அணிந்து விளங்கும் திருவடிகள். பொன்னால் செய்யப்பட்ட இடைக்கொடி, பெருவயிறு, ஒற்றைக்கொம்பு, சிவந்த குங்குமப் பொட்டு, ஐந்து கரங்கள், அங்குசமும் பாசமும் தரித்த கைகள், நீலமேனி பெரியவாய், நான்கு திருத் தோள்கள், சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று திருக்கண்கள் கன்னமதம், கைம்மதம், கோசமதம் என்னும் மதங்களைப் பொழிதலால் உண்டாகும் தழும்புகள் இரண்டு பெரிய காதுகள், பொன்னால் செய்யப்பட்ட கிரீடம், திரண்டு மூன்று வடமாக விளங்கும் பூணூல், பெருச்சாளி வாகனம் என்பன திகழ்வதையும் அவர் சொல்லும், பொருளும் கடந்த தத்துவப் பொருளாக விளங்குவதையும் தன் அடியவர்களுக்கும் தமது தத்துவப் பெருநிலையைக் கொடுத்து ஆட்கொள்ளும் பேரருட் திறத்தையும் தத்துவார்த்த ரீதியாக விளக்குகின்றது. இதனை ஔவையார் விநாயகர் அகவலில்

*"சீதக் களபச் செந்தா மாரைப்பூம்*
*பாதச் சிலம்பு பல இசை பாடப்*
*பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்*
*வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்*
*பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்*
*வேழ முகமும் விளங்குசிந் தூரமும்*
*அஞ்சு கரமும் அங்குச பாசமும்*
*நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்*
*நான்ற வாயும் நாலிருபுயமும்*
*மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்*
*இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்*
*திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்*
*சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அற்புதம் நின்ற கற்பகக்களிறே*
*முப்பழம் நுகரும் மூசிக வாகன*
*தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட*
*வித்தக விநாயகர் விரைகழல் சரணே"*

என்று குறிப்பிடுவதனால் அறியலாம். திருமூலரும் விநாயகரின் திருவுருவத்தை "ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை" என்று திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். அருணந்தி சிவாசாரியரும் விநாயகரின் திருவுருவத் தத்துவத்தை,

*"ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்*
*நால்வாய்ஐங் கரத்தன் ஆறு*
*தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்*
*தரும் ஒருவாரணத்தின் தாள்கள்"*

என்று மொழிவர். விநாயகர் தனது திருக்கையொன்றில் மோதகம் ஏந்தி விளங்குவதை ஆதிசங்கரர் தனது கணேசபஞ்சரத்தின் முதற் பாடலில் "முதாகராத்த மோதகம்" என்று சுட்டுவதால் அறிய முடிகின்றது.

விநாயகரின் திருவுருவ உறுப்புக்கள் உணர்த்தும் மறைஞான தத்துவப் பொருளை இங்கு நோக்குவோம்.

**ஐந்து கரங்கள்**

விநாயகர் நான்கு கரங்களுடன் தும்பிக்கையையும் சேர்த்து ஐந்து கரங்கள் உடையவராக விளங்குகிறார். பாசம் தரித்துள்ள கரம் படைத்தற்றொழிலைக் குறிக்கின்றது. அங்குசம் ஏந்திய கரம் அவரின் அழித்தற்றொழிலை அறிவிக்கின்றது. உயிர்களுக்கு அபயம் அளித்துக் காக்கும் அபயகரம் அவரின் காத்தற்றொழிலைச் சுட்டி நிற்கின்றது. மோதகம் ஏந்தி நிற்கும் வலது கரம் உயிர்களுக்கு அருள்புரியும் அருளற் றொழிலைப் புலப்படுத்துகின்றது.

தும்பிக்கை எனப்படும் துதிக்கை உறு உணர்ச்சி, மணம் அறிதல், உணவை எடுத்தல் என்ற முத்திறங்களை உடையது. அத்துதிக்கை காட்டியும் மறைத்தும் நிற்கும் திரோதானம் ஆகிய மறைப்புத்தொழிலை உணர்த்தி நிற்கின்றது. இங்ஙனம் விநாயகரின் ஐந்து திருக்கரங்களும் படைத்தல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்து தொழிலுக்கும் அவரே அதிபதி என்பதையும், இதனால் அவர் அளவில் ஆற்றல் உடையவராக விளங்குகின்றார் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன.

**யானை முகம்**

விநாயகர் யானைமுகம் உடையவராக விளங்குவது, அவரே "ஓம்" என்ற பிரணவப் பொருள் என்பதைச் சுட்டி நிற்கின்றது. அவர் ஓங்கார வடிவினன் என்பது, அவரின் அட்டோத்திர சத நாமங்களில் "ஓங் காராய நம" என்று அவர் துதிக்கப்படுவதனால் உணரலாம். யானைக்கு நினைவு வன்மை, காண்டல், கேட்டல், ஊறு, ஒன்றையும் ஒரு காலத்தும் மறவாமை, மிக்க வலிவு உடைமை, அளப்பரும் சாந்தமுடைமை, இதம் செய்பவர்களுக்கு வசமாய் உதவுவது ஆகிய இவை அருங்குணங்களாக உள்ளன. அதனாலேயே இக்குணங்களெல்லாம் ஒருங்கே அமைந்த விநாயகருக்கு யானைமுகம் அமைந்து விளங்குகின்றது.

**கொம்புகள்**

விநாயகரின் திருமுகத்தை நோக்கும் போது ஒரு பக்கம் யானைத் தந்தமாகிய கொம்பு காணப்படுகின்றது. இது ஆண்வடிவின் அடையாளமாகும். மறுபக்கம் யானைத் தந்தமாகிய கொம்பு காணப்படவில்லை. இந்நிலை பெண் வடிவைச் சுட்டி நிற்கின்றது. இந்நிலையானது விநாயகர் ஆண்பாலா பெண்பாலா என்று கேட்பவர்களுக்கு அவர் எப்பாலுங்கடந்த அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் இயல்பினர் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. ஒடிந்த கொம்பு அபரஞானமாகிய விந்துவைக் குறிக்கும். மற்றைய ஒற்றைக்கொம்பு இறைவனை உணர்வதற்கு வாயிலாகவுள்ள பரஞானத்தைச் சுட்டிநிற்கின்றது. விநாயகரின் திருவுருவத் தில் காணப்படும் கொம்புகளைப் பதிஞானம், பாசஞானம் என்று கூறுதலும் உண்டு. வலது கொம்பாக விளங்கும் ஒடிக்கப்பெற்ற கொம்பு பாசஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆகும். பாசஞானம், உணர்வரிய கலை ஞான மாகிய சிவ ஞானத்திற்கு வாயி லாக விளங்கும் தன் மையது ஆகும். அதன் காரணமா கவே அது பாரதம் எழுத உதவிய எழுத் தாணியாக உதவி யது. இடதுகொம்பு பதிஞானத்தைச் சுட்டி நிற்கின்றது. அதனாலேயே அது விநாயகரைப் பொருந்திப் பிரிவின்றி இருக்கின்றது.

**மூன்று கண்கள்**

சூரியன் சந்திரன், அக்கினி என்ற முச்சுடர் களையும் கண்களைக் கொண்டு அவற்றிற்கு ஒளியைக் கொடுத்து நிற்பவர் விநாயகர் என்ற தத்துவத்தை அவரின் மூன்று கண்கள் சுட்டி நிற்கின்றன. பகலில் சூரியன் என்ற கண்ணாலும், இரவில் சந்திரன் என்ற கண் ணாலும், அக்கினி என்ற கண்ணால் எந்நேரமும் அறியும் ஆற்றல் உடையவர் என்பதே விநாயகரின் மூன்று கண்கள் புலப்படுத்தும் தத்துவமாகும்.

**மும்மதம்**

விநாயகர் அறிவு, இச்சை, தொழில் என்ற மூன்றும் உடையவர் என்பது மும்மதம் என்ற சொல்லால் சுட்டப்படும். உவமையிலாக் கலை ஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் திருப் பெருகுசிவஞானம் என்ற மூன்று ஞானங்களும் மும்மதங்களாக சுட்டப் பெறுவதில் உண்டு. இத னடிப்படையில் இந்த மூன்று ஞானங்களையும் உணர்த்துகின்றவர் விநாயகர் என்பதே மும்மதம் என்பதன் தத்துவப் பொருளாகும்.

**பெருவயிறு**

விநாயகரின் பெரு வயிறானது (பேழை வயிறு) எல்லா உலகங்களும் தம்முள் அடங்கி யுள்ளன என்ற தத்துவத்தைச்சுட்டி நிற்கின்றது.

**பாம்பாபரணம்**

விநாயகர் பாம்பை ஆபரணமாக அணிந்து விளங்குவது அவரின் திருவுருவத்தில் குண்டலினி சத்தியின் தரிசனத்தைக் காட்டி நிற்கின்றது. பாம்பு குண்டலினி சத்தியின் குறியீடாக விளங்கு வது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இங்கு "இருத்தியே நாகரூபம்" என்று குறிப்பிடுவது நோக்குதற்குரியது. இருத்தி என்பதற்கு நல்ல செல்வம், ஐஸ்வரியம், மேலாந்தன்மை என்பது பொருளாகும். இதனடிப்படையில் நோக்கும் போது இவைகளை உடையவர் விநாயகர் என்பது மட்டுமன்றி அடியவர்களுக்கு அவற்றைத் தருபவர் விநாயகர் என்பதையும் அவர் அணிந் துள்ள பாம்பாபரணம் புலப்படுத்துகின்றது. விநாயகரின் பூணூலும், அரைநாணும் பாம்பாக வும் விளங்குவது உண்டு.

**பிறை**

விநாயகர் பிறை சூடியிருப்பது, அறி யாமை அகன்று மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்ற உயிர்களை உயர்நிலைக்கு உயர்த்தி உய்விப்பவர் என்பதையும், அவர் ஞானமே வடிவினர் என்பதை யும் உணர்த்துகின்றது.

**பூணூல்**

விநாயகர் பூணூல் அணிந்துள்ளமை, அவர் பிரம்மஞான உபதேசத்திற்குரிய பிரம்ம ஞானி என்பதையும், அவர் முப்புரிநூல் தரித் துள்ளமையானது பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற முப்பெரும் கடவுளர்களும் அவருள் உறை கின்றனர் என்ற பெரும் தத்துவத்தையும் சுட்டி நிற்கின்றது. எங்கும் நிறைந்த அக்கினி வடி வானவர் என்பதையும் சுட்டி நிற்கின்றது.

**மோதகம்**

விநாயகர் மோதகம் ஏந்திய திருக்கை யானது அனைத்து உலகங்களும், அவ்வுலகத் திலுள்ள அனைத்துப் பொருள்களும் விநாய கரிடத்தில் அடங்கியுள்ளன என்பதை உணர்த்து கின்றது. மோதகம் பூரணப் பொருளின் ஓர் அடையாளமாகும். மேலும் அடியார்கள் பசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்

ஞானத்தைக் கவள மாக மோதக வடி வில் படைக்கின்றனர் என்பதையும் அவர் அதை உண்டு தமது பேழை வயிற்றைத் திறந்து சிவஞானத்தை அவர்களுக்கு வழங்குகிறார் என்பதையும் உணர்த் தவே கவள உண வாகிய மோதகத்தை அவர் கையில் கொண்டு காட்சி தருகின்றார் என்பது தத் துவமாகு ம். மேலும் விநாயகரின் திருக்கரத் தில் காணப்படும் மோ தகம் அவருக்கு மோதகம் மீதுள்ள விருப் பத் தைப் புலப்படுத் துகின் றது. அவருக்கு மோதகம் படை த்து வழிபட்டால் அவ்வடியார்களு க்கு அவர் பேரி ன்பமாகிய முக்திப் பேற்றினைக் கொ டுப்பார் என்பதை உணர்த்தவே ஆதி சங்கரர் தனது கணேச பஞ்சரத் தினத்தில் நுட்ப மாக "முதாகராத்த மோதகம் ஸதாவி முத்தி சாதகம்" என்று அவரைப் பாடியுள்ளார் எனலாம்.



**திருத்தாள்கள்**

விநாயகரின் திருவுருவமும் திருத்தாள் களும் ஞானத்தின் அடையாளங்களாகும். விநாயகர் ஞானக் குழந்தையாக விளங்குவதை "ஞானக் கொழுந்து" என்ற திருமந்திரக் குறிப்பால் அறிய முடிகின்றது. சிவபெருமானை ஞானத் திருவுருவாகக் காட்டும் குமரகுருபர அடிகள் அவரின் திருவடிகளும் ஞானம் என்பதைச் சுட்ட "ஞானம் திருவடி" என்றே குறிப்பிடுகின்றார். தத்துவ நோக்கில் உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களை இயக்கி அருமையின்பத்தை அளிப்பது ஞானமாகும். இந்த ஞானம் ஏற்பட்ட தும் உயிர்கள் விளக்கம் பெறுகின்றன என்பது சைவ தத்துவ முடிவாகும். இவ்வகையில் உயிர் களை உய்வித்து அவ்வுயிர்களுக்குப் பேரின்பப் பேற்றை அளிக்கும் சித்தாந்த சைவ தத்துவத்தைச் சுட்டி நிற்பதாக விநாயகரின் திருத்தாள்கள் விளங்குகின்றன.

**விநாயகர் ஏந்தியுள்ள ஆயுதங்களின் தத்துவம்**

விநாயகர் பிரணவ தத்துவ வடிவமாவார். அவர் தமது திருக்கரங்களில் பல வகையான ஆயுதங்களை ஏந்தியவராக விளங்குகிறார். அவ் வாயுதங்கள் நல்லவர்களைக் காப்பாற்றவும், தீயவர்களை அழிக்கவும், தம்மை வழிபடுகின்ற அடியவர்களின் இடையூறுகளைப் போக்கவும் பயன்பட்டதை விநாயகரின் தெய்வீக வரலாறு பற்றிய கதைகள் நன்கு புலப்படுத்துகின்றன.

தனது அடியவர்களுக்கு ஆன்மீக அழகுப் பொருட்களாகவும், அபயம் அளிக்கும் கருவிக ளாகவும் காட்சியளிக்கும் அவ்வாயுதங்கள் தீயவர் களுக்கு அச்சத்தைக் கொடுப்பனவாகவும் விளங்குகின்றன.

விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி யுள்ள ஆயுதங்களைக் கூர்ந்து நோக்கினால், அவர் வாழ்வில் வெற்றியீட்டித் தரும் வீரம்மிகு கடவு ளாக விளங்குவது புலப்படுகின்றது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் அவர் ஒரு வெற்றித் தெய்வம் என்ற விநாயக தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் சுட்டும் தத்துவப்பொருளை ஈண்டு நோக்கு வோம்.

**பாசம்**

இது விநாயகருக்குரிய சிறப்பான ஒரு போர்க் கருவியாகும். கயிறு என்றும். இதனை வழங்குவர். தீயவர்களின் கை கால்களைக் கட்ட இது பயன்படுகின்றது. இது மூன்று வடமாக வுள்ள கயிற்றை வளைத்துப் பிடித்த அமைப் பாகும். எளிதில் அவிழக்கூடிய முடிச்சாக முறுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அமைப்பர். சுருக்கு இடாமல் வளைய மாகவும் இது அமைதல் உண்டு. விநாயகருக்குச் சிறப்பான ஆயுதமாக அமையும் நாகமே, பாசமாக அமைவதும் உண்டு. இதனை "நாக பாசம்" என்பர். இது நான்கு வகைப்படும். யானை யைப் பாசத்தால் கட்டுவதுபோல் ஆன்மாக்களின் ஆணவமலத்தைக் கட்டி, அதனை வலிகுன்றச் செய்ய உதவும் கருவி பாசம் ஆகும். மூன்று வடமாகவுள்ள பாசக் கயிறு "பாசத் திரவியம்" என்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் குறிக்கும். விநாயகர் உயிர் களுக்குப் போகங்களைக் கொடுத்து, அதனோடு கட்டுண்டிருக்கச் செய்யும் கருத்தைப் பாசம் என்ற கயிறு சுட்டுகின்றது. பாசமாகிய பற்று அறுத் தலையும் பாசம் என்பது புலப்படுத்துகின்றது.

**அங்குசம்**

விநாயகர் தாங்கியிருக்கும் சிறந்த கருவி களில் அங்குசமும் ஒன்றாகும். இது யானையை அடக்கப் பயன்படுகிறது. யானைப்பாகன் இதனை யானையின் காதிலே மாட்டித் தொங்க விட்டிருப்பான். உயிர்களைப் பாதிப்படையச் செய்யும் ஆணவமலத்தை பாசக்கயிற்றால் கட்டி அங்குசத்தில் அதனை அடக்கி மறைத்தல் என்னும் அருளைப் புரிபவர் விநாயகர் என்பதை அங்குசம் என்ற கருவி உணர்த்துகின்றது. இது வயப்படாத பொருளை வயப்படுத்தும் ஆயுத மாகும். இது உயிர்களின் சித்த மலமாகிய ஆணவத்தை அடக்கி இறுதியில் உயிர்களைத் தன்வயப்படுத்துதலை உணர்த்தும் தத்துவத்தைச் சுட்டுகின்றது.

**தந்தம்**

இது ஒடிந்த யானைக் கொம்பு ஆகும். வேதவியாசர் மகாபாரதத்தை எடுத்துரைத்த போது, அந்த இதிகாசம் அழியாது அதனை அனைவரும் படித்துப் பயன் பெறும் பொருட்டு விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அதையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதி வைத்தார். அந்த எழுத்தாணியே அவரது திருக்கரத்தில் விளங்கும் ஒடிந்த ஒற்றைக் கொம் பாகிய தந்தம் என்பதன் விளக்கம் ஆகும். இக்கொம்பானது "எழுத்தறிவித்தவன் விநாய கரே" என்ற விநாயக கல்வித் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.

மேலும் விநாயகர் தந்தத்தைக் கையில் வைத்திருப்பது பிறிதொரு தத்துவ விளக்கத்தை யும் தருகின்றது. ஓர் அசுரன் தனக்கு எந்த ஆயுதத்தினாலும் மரணம் நேரக்கூடாது என்ற வரத்தைப் பெற்றிருந்தான். வரம்பெற்ற காரணத் தினால் நல்லவர்களுக்கெல்லாம் சொல்லொண்



ணாத் துயர் விளைவித்தான். ஆயுதப் பிரயோகம் இன்றி அக்கொடிய அசுரனைக் கொல்வதெப்படி என்று தேவர்களெல்லாம் அஞ்சி நின்ற வேளை யில் விநாயகர் தமது தந்தங் களில் ஒன்றை முறித்து அதனால் அசுரனைக் கொன்ற தத்துவப் பொருளை நினைவுபடுத்துவ தாகவும், அவர் திருக்கரத்தில் திகழும் ஒடிந்த கொம்பாகிய தந்தம் விளங்குகின்றது.

**வேதாளம்**

அச்சமும் அருவெறுப்பும் தரத்தக்க தசை நாரில்லாத பூதவடிவாக இது விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைவர்களை விழுங்கச் செய்ய இது ஏவப்படும். வீர விநாயகரின் ஒரு கரத்தில் இது இருக்கிறது.

**சக்தி**

இதனை வேலாயுதம் என்பர். இது முருகனுக்கும் சிறப்பாக அமைந்த ஓர் ஆயுதம் ஆகும். ஆறு கூரிய பகுதிகளை உடையது. தகட்டு வடிவானது விநாயகர் வீர கணபதியாக விளங்கும் போது இதனைத் தாங்கியிருப்பார். இது எதிரியை எறிந்து அழிக்க உதவும் ஒரு போர்க்கருவியாகும். இதனை நடுவில் பிடித்து எறியலாம். இரு பக்கமுங் குத்தும் இயல்பு இவ்வாயுதத்திற்கு உண்டு. இவ்வாயுதம், மூன்று சாய் சதுரங்களின் சோடிகள் ஒன்றோடொன்று நெருங்கியிருக்கு மாறும் வரிசையாகவும் அமையப் பெற்று அப்பகுதி ஒரு தண்டத்தின் நுனியில் பொருத்தப் பட்ட நிலையிலும் அமையலாம். இதன் மேற் பகுதி இச்சாசக்தியையும், நடுப்பகுதி ஞான சக்தியையும், கீழ்ப்பகுதி கிரியா சக்தியையும் குறிக்கும். இதனடிப்படையில் நோக்கும் போது இச்சை, கிரியை, ஞானம் ஆகியமூன்று சக்தி களும் விநாயகருள் அடங்கும் என்பது இவ்வா யுதத்தின் தத்துவப் பொருளாகும்.

**அம்பு**

இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப்பெறுங் கருவி, நுனி கூரிய முள்போன்றது. நுனி மட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால்ப் பக்கத்தில் கழுகின் இறகுகளையும், மற்றப் பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும் பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே இறகு கட்டப்படுகின்றது.

**வில்**

இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில், சிலையென்னும் மரம் முதலான வளையக்கூடிய நார் மரத்தால் செய்யப் பெறுவது. இந்த வில்லில் தோல் அல்லது நார்க் கயிற்றானி என்ற நாண் கட்டப் பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக் கட்டி அதன் நடுவில் அம்பை வைத்துவிடுவது வழக்கம். எவ்வளவுக் கெவ்வளவு வில்லின் வலிமையும் நாணின் உறுதியும், இழுத்து விடுபவனின் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அம்பின் வேகமும், தைக்கும் வன்மை யும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தேய்த்து வைத்தலும் வழக்கம். அம்பின் நுனி பிறைமதிபோலக் கவர் பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.

**சக்கரம்**

இது விநாயகருக்கும் விஷ்ணுவுக்கும் உரிய சிறப்பான ஆயுதம் ஆகும். விஷ்ணுவின் சக்கரத்திற்குச் "சுதர்சனம்" என்று பெயர். இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. அதில் இருவகையுண்டு. ஒன்று தேருருளை போன்றது. மற்றது வளையம் போன்றது. இது வட்ட வடிவமாகவும், நான்கு திசைகளில் தீச்சுடர் களைக் கொண்டதாகவும் விளங்கும் சக்கரம் தர்மத்தின் அடையாளம் ஆகும்.

**கத்தி**

இது இன்று அறவே மறந்துபோன ஒரு கருவி. தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி. இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படுவது. தலைப் பக்கம் ஒரு மண்டை ஓடு போலவும் கம்பி முழங் கால் எலும்பாகவுங்கூட அமைந்திருப்பதுண்டு. இதனைக் குத்துக்கத்தியாகிய பிச்சுவா என்பாரும் உளர்.

**கேடயம்**

இது கத்தி வெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகையானாலும், வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை, காண்டா மிருகம் இவற்றின் தோலாலும் செய்யப்பெறும். சதுரம், நீள்சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பலவடிவங்களிற் செய்யப்பெறும். இன்னல், இடையூறுகள் என்பவற்றைத் தடுத்து நிறுத்தும் கேடயம் என்ற கருவி தர்மத்தின் ஓர் அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சம்மட்டி**

இது இரும்பாலியன்ற கனத்த தலைப் பகுதியை உடையது. இதன் நடுவில் தொளை யிடப் பெற்றிருக்கும். இதில் கைபிடிக்கும் சிறு கழியைக் கோத்திருப்பார்கள். இதுவும் உடைய வன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப்பெறும்.



**கதை**

குண்டாந்தடி, இதில் பலவகைகள் காலாந் தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொருக்கப் பயன்படுவது. கையைவிட்டு அகலாத படி, காவலாக இருந்து, உடையவனைப் பாது காப்பது.

**நாகபாசம்**

பாசவகைகளுள் "நாகபாசம்" என்பதும் ஒன்றாகும்.

**சூலம்**

இது மூன்று நுனிகளையுடையது. விநாயகர் தரித்திருக்கும் இவ்வாயுதம் சிவபெரு மானுக்கும் சிறப்பாக உரியது. கரைவரையிலும் எஃகு இரும்பாற் செய்யப் பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோக்கப் பெற்றிருக்கும். இதனை மூவிலை, நெடுவேல், முத்தலைவேல் என்றும் கூறுவர். இதன் மூன்று நுனிகளும் ஆரணி, ஜெனனீ, ரோதயித்ரி என்ற முச்சத்திகளைக் குறிக்கும். ஜெனனீ ஆக்கலையும், ஆரணி அழித்தலையும், ரோதயித்ரி காத்தலையும் குறிக்கும் பிரம்மா, விஷ்னு, உருத்திரன் என்ற மும்மூர்த்திகளையும், சாத்துவிகம், ராஜசம், தாமசம், என்ற முக்குணங்களையும் சுட்டி உணர்த்துவதாகவும் இவ்வாயுதம் திகழ்கின்றது.

**குந்தாலி**

இன்று, வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலைக் கனத்துக்குரிய நுனியோடு இருக்கும். இரும்பானியன்ற கருவி இது. இதில் பல வகைகள் உண்டு.

**மழு**

இன்று மரங்களை வெட்டப் பயன் பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்கு கின்றது. மிகக் கூர்மையானது "வாய்ச்சி" என்னும் மரஞ்செதுக்கும் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பமான கருவி. விநாயகரின் சத்தியம் என்ற உயர் குணத்தைச் சுட்டும் கருவி மழு ஆகும்.

**கொடி**

கொடி வெற்றிக்கு ஓர் அடையாளம் ஆகும். துணியாலியன்றது, அடையாளம் எழுதப் பெற்றது. இதனையும் விநாயகப் பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.

**தண்டம்**

இது நீளமான கைத்தடி ஆகும். மரத்தா லானது, மரணத்தையும் தண்டனையையும் இது சுட்டிக்காட்டுகின்றது.

**கமண்டலம்**

நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் உண்டானது. முனிவர்கள், அந்தணர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் நாட்கடன்களைக் கழிப்பதற்காக அதனை வைத்திருப்பார்கள். இது ஆயுதமாக இல்லாவிட்டாலும், திருவுரு நிலையை அறிந்த கொள்ள உதவும் கருவி ஆகும். பரந்த ஞானம் தம்முள் நிறைந்தவர் என்பதைக் கமண்டலம் சுட்டி நிற்கின்றது.

**பரசு**

இது சற்றேறக்குறைய மழுப்போன்ற கருவி ஆகும். ஆனாலும் மழுவின்வாய் சதுரமாக இருக்கும். இதன்வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப்பெற்றுப் பயன்படுத்தப்பெறும் கருவியாகும். விநாயகரின் சத்திய குணத்திற்கு இது ஓர் அடையாளமாகும்.

**கரும்புவில்**

கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும், காமேஸ்வரியாகிய காமாட்சியும் இதனைத் தாங்கியிருப்பர்.

**சங்கு**

இது விநாயகருக்கு மட்டுமன்றி விஷ்ணுவுக்கும் சிறந்த ஆயுதம் ஆகும். இது வெற்றியை அளிக்கும் கருவியாகும். பகைவர்கள் இதன் ஒலி கேட்டதுமே ஒடுங்குவர். இது ஓர் அச்சக் கருவியாகும். இதிலும் பல வடிவங்கள் உள்ளன. சங்கு வலம் சுழித்ததாகவோ இடம் சுழித்ததாகவோ இருக்கலாம். சங்கிலிருந்து விநாயகரின் வடிவத்தைச் சுட்டும் ஓங்கார ஒலி எழும்புவதால் இது ஆக்கல் தொழிலைக் குறிக்கும் தத்துவச் சின்னத்தின் குறியீடு எனலாம்.

**புஷ்பபாணம்**

இது தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களால் இயன்ற பாணம் ஆகும். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். இதனைப் போக நிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு. காமத்தை எரிப்பவர் என்பது புஷ்ப பாணத்தின் நுண் பொருள் ஆகும்.

**கோடரி**

மரம் பிளக்கப் பயன்படும் கருவியைப் போன்று பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படும். இக்கருவி இரும்பால் ஆனது.

**அட்சமாலை**

இது உருத்திரா அட்சமாலை ஆகும். இது தனித் தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவது உண்டு. மிகப் பழமையான திருவுருவங்களில் இது ஒராயுதம் போல் இருப்பதைக் காணலாம். அட்சமாலை கால தத்துவத்தின் ஓர் அடையாளம் ஆகும்.

**சாமரம்**

இது கவரிமானின் வால் மயிரால் ஆனது ஆகும். இது ஓர் ஆயுதம் அன்று. இருந்த போதிலும் விநாயகருடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுத வரிசையில் இதுவும் இடம் பெற்றிருக்கின்றது.

**கட்டுவாங்கம்**

இது ஓர் நீளமான கத்தியாகும். போரில் பகைவர்களை வெட்டப் பயன்படுகின்றது. இதில் ஒருமுனையுடையதும் இருமுனையுடையதும் என இரு வகையுண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனியை உடையதாகவும் இது விளங்கும். இது உயிர்களின் மீது படிந்துள்ள பாசங்களை அறுக்கும் கருத்தைச் சுட்டிநிற்கிறது.

**தீ அகல்**

இது ஓர் தீப்பிழம்பு ஆகும். தீ அகலாகிய மழுவின் வடிவும் இதைப் போன்றே இருக்கும். இது விநாயகரின் அழிக்கும் ஆற்றலை குறிக்கும் உயிர்கள் மீது படிந்துள்ள பாசங்களைச் சுட்டு உயிர்களைத் தூய்மைப்படுத்துகின்ற இறைவனின் ஆற்றலைக் குறிக்கும் ஓர் அடையாளமாகும்.

**வீணை**

இது ஓர் இசைக் கருவி ஆகும். போர்க் காலங்களில் தளர்ச்சியடைந்திருக்கும் படை வீரர்களுக்கு உணர்ச்சி ஊட்ட இக்கருவி பயன்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் தரித்திருக்கும் மேற் கூறப் பட்டுள்ள ஆயுதங்கள் சிவன், அம்பிகை, விஷ்ணு, முருகன் ஆகிய கடவுளர்களின் திருக்கரங்களிலும் விளங்கக் காணலாம். சிவனின் திருக்கரத்தில் திகழும் மழு, பரசு, சூலம் என்பன: அம்பிகை கைகளில் ஏந்தியுள்ள அங்குசம், பாசம், அட்ச மாலை, கரும்புவில், கத்தி, வாள், வீணை ஆகியவை: விஷ்ணுவின் கரங்களில் விளங்கும் சங்கு, சக்கரம் என்பவை. முருகன் திருக்கரங்களில் தரித்துள்ள சத்தி வேல், வில், அம்பு, தண்டம் போன்றவை விநாயகரின் திருக்கரங்களிலும் திகழ்வதைக் கண்டு மகிழ முடிகின்றது. "கடவுள் ஒருவரே அவ்வப்போது பற்பல வடிவங்கள் எடுக்கிறார்" என்ற ஓர் இறை தத்துவத்தை, கடவுளர் எல்லோரிடத்திலும் ஒரே விதமாகக் காணப்படும் சிறப்புமிகு ஆயுதங்கள் நுட்பமாகப் புலப்படுத்துகின்றன எனலாம்.

**விநாயகர் வடிவங்களில் சத்தி தத்துவம்**

விநாயகர் வடிவங்களில் சத்தி இடம் பெற்றிருப்பதும் விநாயகரே சில இடங்களில் பெண்வடிவத்தில் காட்சி தருவதும் விநாயகரின் தத்துவச்சிறப்பை நன்கு புலப்படுத்துவதாக வுள்ளது.

தமிழகத்திலும் ஈழத்திலும் விநாயகரைப் பெரும்பாலும் பிரம்மச்சாரியராகவே வழிபடு வது பிரசித்தமாக வழிபாட்டு மரபாகக் காணப் படுகின்றது. "பவன் பிரமச்சாரி" என்ற சைவ சித்தாந்த தத்துவம் இங்கு நினைவு கூரத்தக்க தாகவுள்ளது. தமிழகம், ஈழம் போன்ற இடங் களில் விநாயகரைப் பிரமச்சாரியின் கோலத்தில் வழிபடுவதே சிறப்புற்றிருப்பினும், தமிழகத்தில் விநாயகர், வல்லபை என்ற சக்தியுடன் கூடிய நிலையிலும் "சித்தி, புத்தி" என்ற இரு சக்தி களுடன் சேர்ந்த கோலத்திலும் தொழப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வட இந்தியாவில் விநாயகர் பெரும்பாலும் சத்தியுடன் சேர்ந்த நிலையிலேயே விளங்குகின்றார். இவ்வடிவத்தை அவர்கள் "லட்சுமி விநாயகர்" என அழைக்கின் றனர்.

தமிழகத்திலும் ஈழத்திலும் "வல்லபை" என்ற சக்தியுடன் விளங்கும் விநாயகரை "வல்லப விநாயகர்" அல்லது "வல்லப கணபதி" என்று வழங்குகின்றனர். வல்லபை என்ற சத்தியை விநாயகர் தனது இடது பக்க மடியில் அணைத்து வைத்திருக்கும் அமைப்பில் வல்லபை விநாயகர் படிமம் காணப்படுகின்றது. சிவாகமங்கள் விநாய கரின் சத்தியாக வல்லபையைக் குறிப்பிடுகின்றது. வல்லபம் என்பதற்கு வல்லமை என்பது பொரு ளாகும். வல்லமை என்றால் ஆற்றல் என்பது கருத்தாகும். எனவே ஆற்றலின் ஓர் அடை யாளத்தைச் சுட்டி நிற்பதாக விநாய கருடன் வல்லபை என்ற சத்தி விளங்குகின்றாள் எனலாம்.

உமாதேவியின் அம்சமான இவள், யமுனை ஆற்றின் அருகேயுள்ள ஒரு தடாகத்தில் ஒரு தாமரை மலரில் பெண்வடிவமாக அவதரித்து மரீசி முனிவரால் வளர்க்கப்பட்ட தெய்வீக சத்தியாவாள்.

விநாயகர் சித்தி, புத்தி என்ற இரு சத்திகளு டனும் "சித்தி விநாயகராக" விளங்குகின்றார். சித்தியும், புத்தியும் பிரமதேவனது புத்திரிக ளாவர். விநாயகர் சித்தி, புத்தி எனும் இரண்டு சத்திகளுடன் விளங்குவது பெரும் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது. சித்திதேவி கிரியா சத்தியின் வடிவமாவார். புத்திதேவி இச்சா சத்தியின் அம்சமாவார். விநாயகர் பிரம்ப ஞான வடிவ முடையவர். இச்சையும், கிரியையும் இருந்தால் தான் ஞானத்தின் மூலம் ஒரு காரியத்தைச் செய்ய முடியும் என்ற தத்துவத்தைச் சுட்டவே விநாயகர் சித்தி, புத்தி எனும் இரு சத்திகளுடன் விளங்கு கிறார். இந்நிலையில் இவர் இல்லற ஞானியாகத் திகழ்கின்றார் எனலாம். பிரபஞ்சம் ஒடுங்கும் போது இச்சை, கிரியை எனும் இரு சத்திகளை விநாயகர் தன்னுள்ளே ஒடுக்கிக் கொண்டு, தாம் ஞானவடிவமாகத் திகழ்கின்றார். அப்போதே விநாயகர் பிரம்மச்சாரியாக விளங்குகின்றார்.

உலகில் அவ்வப்போது அஞ்ஞானத்தின் உருவமாகச் சில அரக்கர்கள் தோன்றி தர்மத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்து அதர்மத்தை மேலோங்கச் செய்து உலகில் பெரும் கொடுமைகளைச் செய்ய முற்படும்போது விநாயகர் சித்தி, புத்தி எனும் தேவிகளின் பிரம்மச்சாரிய வடிவமாக தாம் மட்டுமே ஞான வடிவமாக நின்று, அதர்மம் செய்பவர்களை அழிக்கின்றார் என்று அவர் பற்றிய தெய்வீக வரலாறுகள் அமைந்து விளங்குகின்றன. அவருடன் பெண் அம்சமான சத்திகள் இருக்குமாயின் சத்தியின் இயல்பாக கருணை எண்ணமே மேலோங்கி நிற்கும். இதனால் அதர்மத்தை அழிக்க முடியாத நிலை ஏற்படும். தீயவர்களை அழித்து நல்லவர்களை காப்பாற்ற வேண்டிய வேளைகளில் கருணையின் அடையாளமாக சத்திகளின்றி தாம் தனியாகவே பிரம்மச்சாரியாக அவர் விளங்குகின்றார். துட்ட நிக்ரஹ சிட்ட பரிபாலனம் செய்ய வந்ததே பிரம்மச்சாரிய விநாயகர் ஆவார். மேலும் விநாயகர் திருமாலின் புத்திரிகளான மோதை, பிரமோதை, சுமநசை, சுந்தரி, மநோரமை, மங்கலை, கேசினி, காந்நை, சாருஹாலை சுமத்தியமை, நந்தினி, சாமதை என்ற பன்னிருவரை மணந்தார் என்றும் சமய நூல்கள் குறிப்பிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சத்தியுடன் விளங்கும் விநாயகர் படிமங்களாக சக்தி விநாயகர். லட்சுமி விநாயகர், மஹாவிநாயகர், ஊர்த்துவ விநாயகர். உத்தண்ட விநாயகர். ஸ்ரீசங்கட ஹர விநாயகர், வல்லப விநாயகர், சர்ப்பா பரண விநாயகர் என்போர் காட்சி தருவது கண்டு களித்தற்குரியதாகும்.

மஹாவிநாயகர், சித்திவிநாயகர், சத்தி விநாயகர், மோட்ச விநாயகர், வித்யா விநாயகர் என்ற ஐந்து விநாயகர் வடிவங்களின் அரிய இணைப்பாகக் காட்சி தரும் "பஞ்சமுக விநாயகர்" வடிவம் விநாயகரின் சத்தி தத்துவத்தை மேலும் பெருமைப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறு விநாயகர் சத்தியுடன் சேர்ந்த நிலையிலும் சத்தியுடன் சேராத நிலையிலும், சத்தியாகவே விளங்குகின்ற நிலையிலும் காணப்படும் விநாயக தத்துவநிலை வியக்கத்தக்கதாகவுள்ளது.

**விநாயகரின் வாகனத்தத்துவம்**

விநாயகர் நான்கு யுகங்களிலும் நான்கு வாகனங்களில் விளங்குகின்றார். அவர் கிருத யுகத்தில் சிங்க வாகனத்திலும், திரேத யுகத்தில் மயில் வாகனத்திலும், துவாபரயுகத்தில் எலி வாகனத்திலும், கலியுகத்தில் குதிரை வாகனத்திலும் விளங்குவதாகச் சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. நந்தி ,பூதம், கருடன் என்பனவும் விநாயகருக்கு வாகனங்களாக விளங்கக் காணலாம். விநாயகரின் சிறப்பான வாகனம் மூஷிகம் ஆகும். இன்றைய கால கட்டத்தில் விநாயகர் மூஷிக வாகனத்தில் விளங்குவதையே பெரிதும் காண முடிகின்றது.

**மூஷிகவாகனம்**

விநாயகருக்கு மூஷிக வாகனன் என்று ஒரு பெயர் உண்டு. மூஷிகம் என்பது எலி. பெருச்சாளி என்பனவற்றைக் குறிக்கும் வடமொழிச் சொல்லாகும். பென்னம் பெரிய விநாயகர் சின்னஞ் சிறிய மூஷிகத்தை (எலி, பெருச்சாளி) வாகனமாகக் கொண்டது. பெருந்தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. நல்லவர்களைக் காப்பாற்றுதல், தீயவர்களை அழித்தல் என்ற இறை தத்துவத்தைச் சுட்டி நிற்பதே விநாயகர் எழுந்தருளியிருக்கும் மூஷிக வாகனமாகும்.

நல்லவர்களாகிய தேவர்களின் துயர் களைந்து, அவர்களைக் காப்பாற்றும் பொருட்டாகவே அசுரனாக விளங்கிய கஜமுகாசுரனை விநாயகர் அழித்தார். அசுரனாகிய கஜமுகாசுரனை அழித்தபோது அவன் பெருச்சாளி வடிவம் (எலி) பெற்று விநாயகருக்கு வாகனமாயினன் என்பது விநாயகரின் தெய்வீக வரலாற்றுக் கதைகளால் அறியப்படும் செய்தி யாகும். இக்கதை ஓர் அரிய சித்தாந்த சைவதத்து வத்தைப் புலப்படுத்துகின்றது.

ஆணவ மலத்தின் அடையாளமாக விளங்கிய கஜமுகாசூரன், அம்மலம் வலிகுன்றிய நிலையில் சின்னஞ்சிறிய பெருச்சாளியாக விளங்க அதனை விநாயகர் வாகனமாக கொண் டார் என்பது தத்துவமாகும். இவ்வகையில் நோக்கும் போது மூஷிகவாகனம் ஆணவமலத்தின் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீடாக விளங்கும் தத்துவம் என்பது நன்கு புலப்படுகின்றது.

பாற்கடலில் தோன்றிய ஆணவமாகிய பெரும் விஷமானது சிவபெருமானின் திருமிடற்றிலடங்கி முதல் கெடாது வலிகெட்டு நிற்பதைச் சுட்டுவது போலவே ஆணவமல வடிவமாகிய கஜமுகாசுரனும் முதல்கெடாது வலிகெட்டு மூஷிக வடிவில் (எலி) விநாயகரின் வாகனமாக விளங்குவது புலப்படுகின்றது.

**சிம்ம வாகனம்**

விநாயகர் ஐந்து முகங்களுடன் விளங்கும் நிலையில் அவர் ஏரம்ப விநாயகர் என வழங்கப் படுகின்றார். ஏரம்ப விநாயகரின் வாகனம் சிம்ம வாகனம் ஆகும். விநாயகரின் திருநாமங்களுள் சிம்மவாகஹனாயக என்பது ஒன்றாகும். அம்பிகை காளியாக விளங்கும் நிலையில் அவள் சிம்மத்தை வாகனமாகக் கொண்டு விளங்குவாள் இதனால் அவளுக்குச் "சிம்மவாஹினி" என்ற பெயர் உண்டு. மிகக்கொடிய சிங்கத்தை அடக்கி ஆள்வதை சிம்ம வாகனம் காட்டுகின்றது. மிகக் கொடிய ஆணவ மலம் அழியாது அடக்கப் பட்டிருத்தலையே விநாயகரின் சிம்ம வாகனம் சுட்டி நிற்கின்றது.

**யானை வாகனம்**

யானை முகக் கடவுளாகிய விநாயகருக்கு யானை வாகனம் அமைந்து விளங்குவது பொருத்தமாக உள்ளது. திருச்செந்தூர் ஆவுடையார் குளக்கரையிலுள்ள அரசாள்வார் விநாயகர் முன்பும், ஸ்ரீவில்லி புத்தூர் (காமராசர்) மடவார் வளாகம் வைத்தியநாதசுவாமி கோயில் நுழை வாயிலில் உள்ள கல்யாண விநாயகர் முன்பும் யானை வாகனம் காணப்படுகின்றது. யானை ஆணவ மலத்தின் ஓர் அடையாளமாகும். அதனை அடக்குவதைக் காட்டுவதே யானை வாகன விநாயகர் சுட்டும் தத்துவமாகும்.

**மயில் வாகனம்**

திருச்சியிலுள்ள திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி கோயிலில் காணப்படும் ஓவியத்தில், விநாயகர் மயில் வாகனத்தில் உள்ளார். பாண்டிச்சேரி மலைக்குகை விநாயகர் கோயிற் சுவரிலுள்ள கதைச் சிற்பத்திலும் விநாயகர் மயில் மீது காட்சி தருகின்றார். அருப்புக்கோட்டை தாதன் குளவிநாயகர் கோயிலிலும் மயில் வாகனம் உள்ளது. மயிலும் ஆணவ மலத்தின் குறியீடாகும். மயில் வாகனம் இதையே சுட்டி நிற்கின்றது.

**குதிரை வாகனம்**

குதிரையானது மூன்று விதமான கோலங் களில் வாகனமாகக் கொள்ளப்படும். நின்ற கோலம், பாய்ந்து நிற்கும் கோலம், நாட்டியக் கோலம் ஆகியவை அம்மூன்று கோலங்களாகும். குதிரை யோகத்தின் ஓர் அடையாளம் ஆகும். குதிரைகள் திசைகளையும் புலன்களையும் குறிக்கின்றன. கடலூர் வட்டம் சென்னப்ப நாயக்கன் பாளையம். மலையாண்டவர் விநாயகர் கோயிலில் குதிரை வாகனம் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் குருபதேசிக கவுண்டர் விநாயகர் கோயிலிலும் குதிரை வாகனம் உள்ளது.

**நந்தி வாகனம்**

நந்தி தர்மத்தின் அடையாளம் ஆகும். சுசீந்திரம், வில்லி புத்தூர் மடவார்வளாகம், இராசபாளையம் முதலிய இடங்களில் உள்ள விநாயகர் கோயில்களில் நந்தி வாகனம் உண்டு.

**பூதவாகனம்**

மதுரை திருப்பரங்குன்றம் பழைய சொக்கநாதர் கோயில் முன் மண்டபத்தூணில் போருக்குப் புறப்படும் நிலையில் விளங்கும் சிற்பம் ஒன்றைக் காணலாம்.

**கருட வாகனம்**

விநாயகர் விஷ்ணுவின் அம்சமாகவும் விளங்குவதால் அவருக்கு முன் கருடனை நிறுவலாம் என்று விஸ்வக்சேன சம்ஹிதை குறிப்பிடுகின்றது.

**விநாயகரின் நாம தத்துவம்**

விநாயகருக்குப் பல நாமங்கள் உள்ளன. அவற்றுள் அவரின் அருட் பேராயிரத்தைக் கூறும் "ஸ்ரீமஹா கணபதி ஸஹஸ்ரநாமாவளி"யும் முந்நூறு நாமங்கள் கொண்ட "த்ரிசதீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமாவாளி" யும் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் வரும் திருநாமங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தத்துவப் பொருளை புலப்படுத்துகின்றன. விநாயகரின் முக்கிய திருநாமங்கள் சுட்டும் தத்துவப் பொருள் பின்வருமாறு அமைகின்றது.

**விநாயகர்**

விநாயகர் என்ற பெயர் பல தத்துவப் பொருள்களை தந்து நிற்கின்றது. விநாயகர் என்பதற்கு தமக்கு மேலொரு நாயகரும் (தலைவரும்) இல்லாதவர் என்பது பொருளாகும். அதாவது தலைவரற்றவர் என்பது பொருளாகும். இதனை வி + நாயகர் = விநாயகர் - நாயகன் இல்லாதவர் என்று நோக்கி அறிய முடிகிறது. (வி +மலன் = விமலன் மலமில்லாதவன் எனப் பொருள்படுவது போல) ஆதி சங்கரர் தனது கணேச பஞ்சரத்தினத்தின் முதலாவது சுலோகத் தில் "அநாயகைக நாயகம்" என்று விநாயகரைக் குறிப்பிடுகின்றனார். இந்த "அநாயகைக நாயகம்" என்பது அநாயக, ஏகநாயகம் என்ற இரு சொற்க ளால் ஆனது. இதன் பொருள் "தனக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும் எல்லா நாயர்கட்கும் நாயகராகிய நிலையிலும் உள்ளவர் என்பதாகும். மேலும் "வி" என்றால் கல்வி நாயகர் என்றால் தலைவர். இதன்படி தன்னை வணங்கு பவர்களுக்குக் கல்வியை தருபவர் என்பது பொருளாகும். இதனையே உமாமதி சிவாசாரி யரும் "நற்குஞ் சரக் கன்று நண்ணில் கலைஞானம் கற்கும் சரக்கன்று காண்" என்று திருவருட்பயன் ஆரம்பத்தில் குறிப்பிடுகின்றார். அடுத்து "வி" என்றால் திசை என்றும் நாயகர் என்றால் தலைவர் என்றும் பொருள் கொண்டு "எத்திசைக்கும் தானே தலைவர்" என்றும் விநாயகர் என்ற சொல்லுக்குப் பொருள் கூறலாம். விநாயகர் எனும் பெயரின் ததத்துவப் பொருள் விநாயக புராணத்தில்

*"விக்கின முழுது நீக்கி வேண்டிய வரங்கணல்கி*
*மக்கள் விண்ணவர்கள் யாரும் வழிபடு தெய்வமாகி*
*யெக்கடவுளர்க்கு முன்னர்ப் பூசனையேற்பாராகி*
*மிக்கவரின்மை தோன்ற விநாயக ரெனும் பேர் தாங்கி"*

என வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**வக்கிரதுண்டவிநாயகர்**

பிரளய முடிவில் தோன்றி பிரமன் விஷ்ணு உருத்திரன் என்ற மூவர்களைப் படைத்தல், காத்தல், அழித்தல், என்ற முத் தொழில்களைக் கற்பித்தமையால் "வக்கிர துண்ட விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**சிந்தாமணி விநாயகர்**

கபிலருடைய சிந்தாமணியைக் கவர்ந்து சென்ற கணராஜனை வென்று அதனை மீட்டு அவர்க்கு அளித்தமையால் "சிந்தாமணி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**கஜானன விநாயகர்**

பிரமதேவனின் கொட்டாவியினின்றும் தோன்றிய சிந்தூரரனைக் கொன்று தேவர்களைக் காத்தமையால் "கஜானன விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

**விக்கினராஜ விநாயகர்**

காலரூபனென்கின்ற விக்கினனை அழித்து உலகத்தைக் காத்தமையால் "விக்கின ராஜ விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**மயூரேச விநாயகர்**

பிரமதேவனிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து சென்ற கமலாசுரனையும், தேவர்களைச் சிறை வைத்த சிந்தாசுரனையும் கொன்று ஏனைய அவுணர்கள் செய்த மாயையினை ஒழித்து மீட்டும் அவ்வேதங்களைப் பிரம தேவனுக் கீந்து தேவர்களை மீட்டு உலகுக்கு இதஞ்செய்தமை யால் "மயூரேச விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**பாலசந்திர விநாயகர்**

யமனிடத்தினின்றும் உதித்த அனலா சுரனை ஒரு சிறு பிராமணப்பிள்ளை போல் சென்று அவ்வசுரனை விழுங்கித் தேவர்களைக் காத்தமையால் "பால சந்திர விநாயகர்"எனும் பெயர் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணபதி விநாயகர்**

கஜமுகாசுரனைக் கொன்று விஷ்ணுவின் சாபம் தீர்த்தமையால் "கணபதி விநாயகர்"எனும் பெயர் பெற்றார்.

**தூமகேது விநாயகர்**

மாதவராசனுக்கும் அவர் மனைவியாகிய தமதைக்கும் தீங்கு செய்த தூபராசனைக் கொன்று அவ்விருவரையும் காப்பாற்றியமையால் "தூமகேது விநாயகர்" என்று பெயர் பெற்றார்.

**கணேச விநாயகர்**

தன்னிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்ற பெபி என்ற ஓரசுரன் மூவுலகங்களையும் அழிக்க முற்பட்டபோது தேவர்கள் விநாயகரை வேண்டுதல் செய்ய அவர் ஐந்து முகங்களோடு தோன்றி அவ்வசுரனை அழித்து தேவர்களைக் காப்பாற்றியதால் "கணேச விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**மகோற்கட விநாயகர்**

நராந்தகனையும், தேவாந்தகனையும் நாசம் செய்து காசிராஜனுக்கு முத்தி அளித்தமை யால் "மகோற்கட விநாயகர்" என்றும் பெயர் பெற்றார்.

**துண்டி விநாயகர்**


துராசதனை வென்று திவோதரசன் மனத்தைக் மகிழ்வடையச் செய்து விஸ்வநாத மூர்த்திக்குக் காசிமாநகரை அழித்தமையால் "துண்டி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**கணபதி**

விநாயகருக்குக் "கணபதி" என்பதே தொன்மையான பெயராக உள்ளது. கணபதி என்பதற்கு பிரமகணம், தேவகணம், பூதகணம், அசுரகணம், மனிதகணம் முதலிய எல்லாக் கணங்களுக்கும் தலைவர் என்பது பொருளாகும். "கணபதி" என்ற பெயரில் உள்ள "க" என்பது புத்தி "ண" என்பது ஞானம். "பதி" என்பது தலைவர். இதனடிப்படையில் நோக்கும்போது "கணபதி" என்பதற்குப் புத்திக்கும் ஞானத்திற்கும் தலைவர் (அதிபதி) என்பது பொருளாகின்றது. இதனால் புத்தியையும் ஞானத்தையும் வளர்த்துக் கொள்ளுதலே உண்மையான கணபதி வழி பாட்டின் தத்துவப்பொருள் என்பது புலப்படு கின்றது.

**விக்கினேஸ்வரர்**

விக்கினேஸ்வரர் என்பதற்கு விக்கினங் களை (இடையூறுகளை) ஆக்கவும், நீக்கவும் வல்லவர் என்பதே மெய்ப்பொருளாகும்.



**பிள்ளையார்**

விநாயகரைப் பொதுவாக எல்லோரும் "பிள்ளையார்" என்றே அழைப்பர். சிவசக்திக்கு முதற்பிள்ளை என்பதால் முதலில் "பிள்ளை" என்னும் பெயர் பெற்றார். மரியாதைக்காக "பிள்ளை" என்பதுடன் "யார்" என்ற விகுதி சேர்க்கப்பட்டு பிள்ளையார் என்று பின்னர் அவர் அழைக்கப்பட்டார். பிள்ளை என்றால் "குழந்தை" என்ற எண்ணமே முதலில் வருகின்றது. இதனைக் கருதியே அவரை "ஞானக் கொழுந்து" என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். பொதுவாக ஒரு கிராமத்திலோ அல்லது சிற்றூர்களிலோ இருக்கும் பெரிய குடும்பத்துப்பிள்ளை, எல்லோ ருக்கும் குழந்தையாகவே செல்வாக்கின் கராணத் தால் செல்லமாகக் கருதப்பட்டு அழைக்கப் படுவதைக் காண்கிறோம். இவ்வாறே அனைத்து உலகங்களுக்கும் தந்தையான சிவபெருமானின் முதற்பிள்ளை என்ற கராணத்தால் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையும் அனைவராலும் "பிள்ளை" என்றே அழைக்கப்பட்டு பின்னர் மரியாதைக்காக "யார்" என்ற அடைமொழி சேர்க்கப்பட்டு "பிள்ளை யார்" என அழைக்கப் படுகின்றார். எனக் காஞ்சிப் பெரியவர் குறிப்பிடுவதும் இங்கு எண்ணி மகிழ்வதற் குரியது. பிள்ளைச் செல்வத்தை வழங்கும் தெய்வம் என்பதாலும் "பிள்ளையார்" எனும் பெயர் பெற்றார்.

### நவக்கிரக விநாயகர்

விநாயகரை வணங்கினால் நவக்கிரக வழிபாடும் நிறைவுறுமென்பது நவக்கிரக விநாயகர் சுட்டும் தத்துவமாகும். இதனைப் புலப்படுத்தும் விதத்தில் விநாயகரின் திருவுரு வத்தில் ஒன்பது நவக்கிரகங்களும் அமைந்து விளங்கக் காணலாம். இத்தகைய வியத்தகு விநாயகர் வடிவத்தினையே "நவக்கிர விநாயகர்" என அழைக்கின்றனர். இவ்வாறான நவக்கிரக விநாயகரின் திருவுருவத்தில் அவர் தனது நெற்றியில் சூரியனையும், நாபிக்கமலத்தில் (தொப்பூழ்) சந்திரனையும், வலது தொடையில் செவ்வாயினையும், இடது தொடையில் கேது வையும் வலது மேற்கையில் சனியையும், வலது கீழ் கையில் புதனையும், இடது மேற்கை யில் இராகுவையும், இடது கீழ்க்கையில் வெள்ளியை யும் தலையில் வியாழனையும் கொண்டவராகக் காட்சியளிக்கிறார். நவக்கிரக தோசம் உடைய வர்கள் விநாயகரை வழிபடுவதன் மூலம் தோச நிவிர்த்தி பெறுவர் என்பது நவக்கிரக விநாயகர் வழிபாட்டின் தத்துவநிலை ஆகும். தமிழகத்தி லுள்ள சில விநாயகர் ஆலயங்களில் நவக்கிரக விநாயகர் வடிவத்தை ஓவிய வடிவத்தில் கண்டு வணங்க முடிகின்றது.

### விநாயகரின் வழிபாட்டுத் தத்துவம்

விநாயகரின் வழிபாட்டுத் தத்துவத்தில் விநாயகர் விரதங்கள், அறுகம்புல்லினால் அர்ச் சித்தல், தோப்புக்கரணம் போட்டு வழிபடல், சிதறு தேங்காய் உடைத்தல் என்பன தத்துவப் பொருள் உணர்த்துகின்றனவாக விளங்குகின்றன.

### விரதங்கள்

விநாயகர் வழிபாட்டிற்குரிய விரதங் களில் ஆவணிச் சதுர்த்தியும் மாசிச் சங்கடஹர சதுர்த்தியும் விசேடமானவை ஆகும். குற்றம் செய்கின்றவர்களை மன்னித்து அவரவர் விரும்பிய போக மோட்சங்களை விநாயகர் அளிக்கின்றார் என்பதே ஆவணி மாத விநாயகர் சதுர்த்தியின் உட்பொருளாகும்.

### அறுகால் அர்ச்சித்தல்

விநாயகரை அறுகு மற்றும் வன்னிப் பத்திரங்கள், மந்தாரைப் பூ என்பவற்றால் அர்ச்சித்தல் வழக்கமாயினும் அறுகம்புல் அர்ச்சனை மிகு சிறப்புடையதாகும். எனக் கூறப்படுகின்றது. அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்ததால் இடபம், கழுதை, புலைச்சி என்போருக்குச் சாலோக முத்தி கிடைத்ததாக விநாயக புராணம் குறிப்பிடுகின்றது. எனவே அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்தால் பெறுதற்கரிய முத்திப் பேரின்பம் கிடைக்கு மென்பது அறுகம்புல்லின் தத்துவச் சிறப்பாகும். அறுகு ஓரிடத்தில் முளைத்துக் கொடிபோல் நீண்டு ஆறிடங்களில் வேரூன்றிப் படர்ந்து கொண்டே போகும் இயல்புடையது. அங்ஙனமே மூலாதார மூர்த்தியாக விளங்கும் விநாயகர் மூலாதாரம். சுவாதிட்டானம், மணி பூரகம், விசுத்தி, அநாகதம் ஆஞ்ஞை என்ற ஆறிடங்களிலும் பரந்து விளங்கி சகஸ்ரதளத்தில் விளங்கி அருளுகின்றார் என்பது அறுகம்புல் உணர்த்தும் தத்துவப் பொருளாகும். ஆறிடங் களில் படர்ந்து வேரூன்றும் இயல்பு அறுகுக்கு மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் இருப்புத்தன்மை உறுதியானது என்பதையே "அறுகுபோல் வேரூன்றி" என்ற பழமொழியும் சுட்டி நிற்கின்றது.

### தோப்புக்கரண வழிபாட்டு முறை

விநாயகரை வழிபடுகின்றவர்கள் முதலில் தோப்புக்கரணம் போட்டு அவரை வழிபடத் தொடங்குவர். வலக்கையால் இடக் காதின் கீழ்ப்பகுதியினையும், இடக்கையால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலக்காதின் கீழ்பகுதியினையும் பிடித்துக் கொண்டு நின்ற நிலையில் மூன்று முறை அல்லது பலமுறை உட்கார்ந்தும் எழுந்தும் வழிபடுவர். தோர்பி, கர்ணம் என்ற இரண்டு சொற்களும் இணைந்தே தோப்புக்கரணம் என மருவி வந்துள்ளது. தோர்பி என்றால் கைகளினால் என்றும், கர்ணம் என்றால் காது என்றும் பொருளாகும். எனவே தோர்பிகரணம் எனின் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது என்பது கருத்தாகும். இதுவே மருவி தோப்புக் கரணம் என வழங்குகின்றது. தோப்புக் கரணம் போட்டு விநாயகரை வழிபடும் வழிபாட்டு முறையானது உடலின் நரம்பு மண்டல நல்லியக்கத்திற்கு வழி வகுக்கும் ஆன்மீக தத்துவ சாதனை முறையாக விளங்குகின்றது.

**சிதறு தேங்காய் உடைத்தல்**

விநாயகரை வழிபடும் முறைகளுள் "சிதறு தேங்காய் உடைத்தல்" சிறப்பிடம் பெறுகின்றது. சிதறு தேங்காய் உடைத்தல் என்பது ஒன்று அல்லது பல தேங்காய்களை எடுத்து அது பல சிறுதுண்டுகளாகச் சிதறுமாறு விநாயகர் ஆலய முகப்பில் உள்ள ஒரு கல்லில் அல்லது அதற்குரிய இடத்தில் எறிந்து உடைத்தல் எனப் பொருள் படும். சிதறு தேங்காய் உடைத்தல் என்பதே இன்று எல்லோரும் செய்யும் விநாயகர் வழி பாடாக விளங்கக் காணலாம். உயர்வு தாழ்வு எதுவும் இன்றி எவரும் செய்கின்ற விநாயகர் வழிபாட்டு முறையாக இது நடைபெறுகின்றது. சிதறு தேங்காய் உடைக்கும் வழிபாட்டு முறை பற்றிய தத்துவ விளக்கம் பின்வறுமாறு அமை கின்றது.

விநாயகர் ஒருமுறை தன் தந்தையாகிய சிவனிடம் சென்று அவரது தலையைத் தனக்குப் பலியாகத் தரவேண்டும் என்று கேட்டாராம். "மூன்று கண்கள் உடைய எனது தலையைத் தானே வேண்டும்" என்று சிவன் விநாயகரிடம் கேட்டபோது. விநாயகர் அதற்கு "ஆம்" என்று பதில் கூறினார். இதன் பிரகாரம் சிவனே மூன்று கண்களை உடைய தேங்காயை எறிந்து உடைத் தார். இந்த விளக்கத்தின் பிரகாரம் சிதறு தேங் காய் உடைத்தல் என்பது. ஒருவன் தனது கண்கள் உள்ள தலைப் பகுதியை இறைவனுக்குத் தியாகம் செய்யும் மாபெரும் வழிபாட்டுத் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது. இது பலி வழிபாட்டின் ஒரு வளர்ச்சி நிலையாகும். இன்று விநாயகர் ஆலயங் களிற் சிதறு தேங்காய் உடைத்து வழிபடும்முறை காணப்படுகின்றபோதும் ஈழத்தில் உள்ள "திருமுறிகண்டி விநாயகர்" கோயிலில் நாளாந்தம் ஆயிரக்கணக் கில் சிதறு தேங்காய் உடைத்து வழிபடும் மரபு சிறப்பாக நடைபெறுகின்றது. தமது பிரயாணம் தங்கு தடையின்றி நடைபெற வேண்டும் என்பதற் காக இவ்வாலய வீதியாற் செல்லும் பயணிகள் சிதறுதேங்காய் அடித்து முறிகண்டி விநாயகரை வழிபட்டு வருகின்றனர். சிதறு தேங்காய் உடைத்தல் என்பது மக்களின் உளநலத் தத்துவ வெளிப்பாடாகவே விநாயகர் ஆலயங்களில் சிறப்பாக நிகழ்த்தப்படுகின்றது.

**முடிவுரை**

இவ்வாறாக விநாயகர் வியக்கத்தக்க விதத்திற் பற்பல திருவுருவங்களைக் கொண்டு திகழ்வதையும், அவரின் திருவுருவ உறுப்புக் களும், அவர் தனது திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்களும், அவரின் திருநாமங்களும், அவர் எழுந்தருளும் வாகனங்களும் மற்றும் அவரின் வழிபாட்டு முறைகளும் விநாயகர் தத்துவத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்பதையும் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நூல்கள்


1. ஏகாம்பரநாதன் , ஏ.,"கோயிலும் இறை வழிபாடும்", திருநெல்வேலி,தென்னிந்திய சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிட்டெட், சென்னை.1986
2. கணபதி ஸ்தபதி. வை, "சிற்பச் செந்நூல்", தொழில் நுட்பக் கல்வி இயக்க வெளியீடு, சென்னை - 1978
3. கல்யாணசுந்தரம் ந., "தமிழ்நாட்டில் கணபதி வழிபாடு". திருக்குமரன் பதிப்பகம், திருச்செந்தூர் - 1994
4. சுவாமி சித்பவானந்தர் "கடவுளின் வடிவங்கள", திருச்சி -1956
5. சுப்பையா .மு , "பிள்ளையார்", பாரி அச்சகம்,சென்னை - 1975
6. செந்தில் துறவி , "காணாபத்யம்" (கணபதி வழிபாடு),சாஸ்தா பதிப்பகம். சென்னை
7. தண்டபாணி தேசிகர் ச, "கணபதி" , திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை - 1992
8. நடராஜன்.எஸ், "கணபதி ஹ்ருதயம", பிரதிபா பிரசுரம்,சென்னை - 1978
9. பிள்ளை கா.சு , "தமிழர் சமயம்", சென்னை - 1969
10. மறைமலையடிகள் "தமிழர்மதம்" சென்னை - 1958
11. வடிவேலன் சு, "கணபதி வரலாறு", திருவாவடுதுறை ஆதீனம்,திருவாவடுதுறை -1984
12. "வெற்றிக் கடவுள் பிள்ளையாா" , திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட் சென்னை - 1976
13. ஜெயா. பி, "விநாயகர் வழிபாடு", நாகர் கோயில் - 1972
14. Ramasubramaniam. V, "The origin and Development of Ganapatyam" Sankara and Shanmata, Madras -1969


**அட்டதிக்கு பாலகர்:-**

| | | |
|---|---|---|
| கிழக்கு | - | இந்திரன் |
| தென்கிழக்கு | - | அக்கினி |
| தெற்கு | - | யமன் |
| தென்மேற்கு | - | நிருதி |
| மேற்கு | - | வருணன் |
| வடமேற்கு | - | வாயு |
| வடக்கு | - | குபேரன் |
| வடகிழக்கு | - | ஈசானன் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32 விநாயகர் வடிவங்கள்


## பெயரும் விளக்கமும்

### பக்தி கணபதி
### *Bakthi Ganapathi*



தேங்காய், வாழைப்பழம், மாம்பழம்,
பலாப்பழத்துடன் சரத்கால சந்திரனின்
வெண்ணிற மேனியரான பக்தி கணபதி.

### பால கணபதி
### *Bala Ganapathi*



வாழைப்பழம், மாம்பழம், கரும்பு, பலாப்பழம்
ஆகியவற்றுடன் இளஞ்சிவப்பு நிறத்திற்
பால கணபதி.

### துவிமுக கணபதி
### *Dvi Muka Ganapathi*



பாசம், தந்தம், ரத்ன பாத்திரம், அங்குசம்
இவற்றைக் கைகளில் ஏந்தி
மயில் நீல வண்ணத்தில் ரத்ன கிரீடமணிந்த
துவிமுக கணபதி.

### துண்டி கணபதி
### *Dhundi Ganapathi*



அட்சமாலை, கோடரி, ரத்ன கலசம், தந்தம்,
இவற்றுடன் கூடிய துண்டி கணபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்கா கணபதி
## *Durga Ganapathi*



அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம்,
பாசம், வில், கொடி, நாவற்பழம் ஆகியவை
தாங்கி எட்டுக் கரங்களுடன்
துர்க்கா கணபதி.

## த்விஜ கணபதி
## *Dhvija Ganapathi*



ஏடு, கமண்டலம், ஜபமாலை, தண்டம்
ஆகியவற்றுடன் கங்கணம்
முதலான ஆபரணங்கள் அணிந்து தோன்றும்
த்விஜ கணபதி.

## ஏக தந்த கணபதி
## *Ekadhanta Ganapathi*



பேழை வயிற்றுடன் நீல மேனியராக, கோடரி,
அட்சமாலை, லட்டு, தந்தம்
இவற்றை உடைய ஏகதந்த கணபதி.

## ஏகாட்சர கணபதி
## *Ehakshara Ganapathi*



பிறை முடியும், முக்கண்ணும்,
செந்நிற மேனியும், குறுகிய வரதமும்,
பாசம், அங்குசம், மாதுளம்பழம்
ஆகியவை ஏந்திய ஏகாட்சர கணபதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரித்திர கணபதி
*Harithira Ganapathi*



மஞ்சள் நிற மேனியுடன் பாசம், அங்குசம்,
தந்தம், மோதகம் ஆகியவற்றைத்
தரித்திருக்கும் ஹரித்திர கணபதி.

ஹேரம்ப கணபதி
*Heramba Ganapathi*




அபய வரத முத்திரைகளுடன் பாசம், அங்குசம்,
கோடரி, அட்சமாலை, தந்தம், முத்கரம்,
மோதகம், பழம் ஆகியவற்றுடன் சிம்ம
வாகனத்தில் ஐந்து முகங்களுடன் ஹேரம்ப கணபதி.

க்ஷிப்ர கணபதி
*Kshipra Ganapathi*



அங்குசம், பாசம், கற்பகவிருட்சம்,
ரத்ன கலசம் ஆகியவற்றுடன்
சிவந்த அழகிய தோற்றமுடைய க்ஷிப்ர கணபதி.

க்ஷிப்பிர பிரசாத கணபதி
*Kshipra Prasadha Ganapathi*



அங்குசம், பாசம், கற்பகக் கொடி, மலர்,
மாதுளம்பழம், தந்தம்,
துதிக்கையில் தாமரை, ஆகியவற்றுடன்
தோன்றும் க்ஷிப்பிர பிரசாத கணபதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லக்ஷ்மி கணபதி
## *Lakshmi Ganapathi*



பிரகாசிக்கின்ற சோதியாகிய அமிர்தப்
பிரவாகத்தையுடையவரும்,
இரு தேவிகளை இரு பக்கத்திலும் கொண்டவரும்
வரத ஹஸ்தத்துடன் கூடிய லக்ஷ்மி கணபதி.

## மகா கணபதி
## *Maha Ganapathi*



மாதுளை, கரும்பு, கதை, வில், சக்கரம், தாமரை,
பாசம், நீரோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்ன கலசம்
இவற்றுடன் பிறையும் முக்கண்களும் தோன்ற
தேவியுடன் செங்கதிர் நிறத்தில் தோன்றும் மகா கணபதி.

## நிருத்த கணபதி
## *Nirutha Ganapathi*



அங்குசம், பாசம், கோடரி, தந்தம்
ஆகியவற்றுடன் காட்சிதரும் நிருத்த கணபதி.
(வேறு தியானத்தில் ஆயுதங்கள் மாற்றம் இருக்கும்)

## ரணமோச்சன கணபதி
## *Renamochana Ganapathi*



அங்குசம், பாசம், தந்தம், நாவற்பழம்
இவற்றைத் தரித்து பளிங்கு நிற மேனியுடன்
ரணமோச்சன கணபதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சக்தி கணபதி
### Sakthi Ganapathi



நற்திய கால நேரத்தின் சிவந்த மேனியும், பாசம்,
பூமாலை, அபய முத்திரை
ஆகியவற்றைக் கொண்டு அம்மையுடன்
தோன்றும் சக்தி கணபதி.

### சங்கடஹர கணபதி
### Sankatakara Ganapathi



இளஞ் சூரியனின் நிறத்தோடு இடது
தொடையில் அம்மையை உடையவரும்
நீல நிற மேலாடை அணிந்தவருமான
சங்கடஹர கணபதி.

### சிருஷ்டி கணபதி
### Shristi Ganapathi



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம்,
இவற்றைக் கரங்களில் ஏந்தி
பெருச்சாளி வாகனத்தை உடைய
சிருஷ்டி கணபதி.

### சித்தி கணபதி
### Siddhi Ganapathi



பரசு, பூங்கொத்து, கரும்புத்துண்டு, மாம்பழம்
இவற்றைத் தாங்கிய
பொன்கலந்த பசுமை நிறமுடைய
சித்தி கணபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்க கணபதி
## *Singha Ganapathi*




வீணை, சிங்கம், கற்பகக்கொடி, வரதம் இவை வலது கரங்களிலும், தாமரை, ரத்ன கலசம், பூங்கொத்து, அபயம் இவை இடது கரங்களிலும் கொண்ட வெண்ணிற மேனியரான சிங்க கணபதி.

## திரயாக்ஷ்ர கணபதி
## *Thrayakshara Ganapathi*



நான்கு கரங்களிலும் அங்குசம், பாசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றுடன் துதிக்கையில் மோதகம் தாங்கிய திரயாக்ஷ்ர கணபதி.

## மும் முக கணபதி
## *Mum Muka Ganapathi*



வலது கைகளில் அங்குசம், அட்சமாலை, வரதம் உடையவர். இடது கைகளில் பாசம், அமுதம், அபயம் ஆகியவற்றுடன் மும்முக கணபதி.

## உச்சிஷ்ட கணபதி
## *Uchishta Ganapathi*



கைகளில் வீணை, அட்சமாலை, மாம்பழம், நெற்கதிர், நீரோத்பலம் ஏந்தி, தேவியுடன் தோன்றும் உச்சிஷ்ட கணபதி.
(இவருக்கு மற்றொரு தோற்றமும் உண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்த்துவ கணபதி
## Urduva Ganapathi



சக்தியை இடப்பாகத்தில் வைத்து நெற்கதிர்,
கரும்பு,வில், தாமரை, நீரோத்பலம், தந்தம்,
அம்பு, அங்குசம், பாசம் ஆகியவற்றைத் தமது
எட்டுக் கரங்களில் ஏந்திய ஊர்த்துவ கணபதி.

## உத்தண்ட கணபதி
## Uthanda Ganapathi



நீலத்தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம்,
கரும்புவில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர்,
மாலை இவற்றை ஏந்திய பத்துக் கரங்களுடன்
சிவந்த மேனியரான உத்தண்ட கணபதி.

## வரத கணபதி
## Varatha Ganapathi



செவ்வண்ணமானவர், முக்கண்ணர்,
பிறை முடியர், பாசம், அங்குசம்
தரித்திருப்பதுடன் தேன் நிறைந்த கபால
பாத்திரத்தை ஏந்திய வரத கணபதி.

## வீர கணபதி
## Veera Ganapathi



வேதாளம், சக்தி ஆயுதம், அம்பு, வில்,
சக்ராயுதம், கத்தி, கட்வாங்கம், முத்கரம்,
கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், தந்தம்,
மழு, த்வயம் தரித்திருக்கும் வீர கணபதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்ன கணபதி
## Vigna Ganapathi




சங்கு, கரும்பு வில், புஷ்ப பாணம், கோடரி,
பாசம், சக்கரம், தந்தம், பூங்கொத்து மாலை
ஆகியன ஏந்திய
பொன்மேனி ரூபமான விக்ன கணபதி.

## விஜய கணபதி
## Vijaya Ganapathi



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம்
இவற்றைத் தரித்தவர்.
பெருச்சாளி வாகனத்திற் காட்சி தரும்
விக்ன கணபதி.

## யோக கணபதி
## Yoga Ganapathi



யோக நிலையில் யோக பட்டம் தரித்து,
இளஞ் சூரியனது நிறத்தோடு ஒளிர்ந்து; பாசம்,
அங்குசம், யோக தண்டம், கரும்பு
இவற்றை ஏந்திய யோக கணபதி.

## தருண கணபதி
## Tharuna Ganapathi



கைகளில் பாசம், அங்குசம், அபூபம்,
விளாம்பழம், நாவற்பழம், தந்தம்,
நெற்கதிர், கரும்பு ஆகியவற்றைத் தாங்கிய
தருண கணபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் பெருமை


செல்வி. அம்பாலிகா தம்பாப்பிள்ளை
உதவி விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.


இந்துமதத்திற்குரிய கடவுளர் பலருள் விநாயகர் முதன்மையும், சிறப்பும் மிக்கவர். இந்துமதத்தவர் அனைவரும் எந்தச்செயலையும் தொடங்கமுன்னர் விநாயகரை வழிபட்டே ஆரம்பிப்பார்கள். விக்கினங்களை விலக்குபவர் விநாயகர்.

ஓம் என்ற பிரணவத்தில் இருந்து வேதங்கள் தோன்றின. அப் பிரணவமே எல்லாத் தேவதை கட்கும் பிறப்பிடம். உலகத்தின் தோற்றத்துக்கும், ஒடுக்கத்துக்கும், பிரணவ மந்திரமே காரண மாகும். பிரணவ சொரூபமாகத் திகழ்பவர் விநாயகர்.

இத்தகைய வித்தக விநாயகரின் உருவமும் பெரிது; அவருடைய மகிமையும் பெரிது; அவர் புரியும் கருணையும் பெரிது. எல்லாம் பெரிது எனவுணர்க.


*"உருவம் பெரிததனில் உள்ளம் பெரிது*
*ஒருநல்வரமும் பெரிதே - பருவமதில்*
*பெய்யும் மழைபோல் பெய்கருணைதான் பெரிதால்*
*ஐய! பெரிதுன் அருள்."*

கந்தபுராணத்தில் வருகின்ற தட்ச காண்டத் திலே, கஜமுகன் உற்பத்திப் படலத்திலே ஒரு பாடலில் "மூலமாம் எழுத்து இவை முயங்கி மால்கரிக்கோலமாய் புணர்வது என்" கூறுக என்றாலும் ... ஓம் என்ற பிரணவ எழுத்து இரண்டாகப் பிரிந்து பின் இரு கூறுகளும் ஒன்றாகச் சேர்ந்தபோது விநாயகர் தோன்றினார் என்பது வரலாறு.

மூலதாரமூர்த்தியாக முழுமுதற் பொருளாக விளங்குபவர் விநாயகர். அவரை வழிபட்டால் எல்லாக் கருமங்களும் எளிதில் முடியும். அவர் கருணைக் கடல், கிருபாநிதி, தயானந்தம்.

இந்து மதத்தின் சண்மதப்பிரிவுகளில் ஒன்றாக காணாபத்தியம் காணப்படுகின்றது. விநாயகரையே பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணாபத்தியம் எனப்படும். விநாயக வழிபாடு இந்துமதத்தினரால் மட்டு மல்ல பௌத்தம், சமணம் போன்ற மதத்தவர்க ளாலும் பின்பற்றப்படுகின்றது.

விநாயகரது அருள் பெற்ற அருளாளர்க ளாக ஔவையார், நம்பி யாண்டார்நம்பி, கௌதம புத்தர், மெய்கண்டார், கச்சி யப்பர் போன்றோர் விளங்கு கின்றனர்.



விநாயகரின் திருவுரு வத் தத்துவத்தை நோக்கி னால் விநாயகரின் உருவம் தியானிப்போரைப் பரவசத் தில் ஆழ்த்தும் அற்புத வடி வானது. விநாயகரின் திரு மேனி தத்துவம் பொருந் தியது. இப் பெருமானின் திருவுருவம் யானை முகமும், மூன்றுகண்களும், இருசெவி களும், ஐந்துகரங்களும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவயிறும், குறுகிய இருதிருவடிகளும் கொண்டது. யானைமுகம், விநாயகர் பிரணவ ஸ்வரூபி என்பதை விளக்குகிறது. ஐந்து கரங்களும் பஞ்சகிருத்தியத்தைச் (ஐந்தொழிலை) செய்யும் ஆற்றலுடையவை என்பதை உணர்த்து கின்றது. சோமசூரிய அக்கினியை முக்கண்கள் உணர்த்து கின்றன. விசாலமான இருசெவிகளும் ஆன்மாக் களை மலவாதனை ஆட்கொள்ளாமல் காத்து, வினை வெப்பத்தைப் போக்கியருளக் கூடியவை, உண்மைக்கோர் விளக்கமாக விநாயகரின் பெரு வயிறு, அண்டங்கள் அனைத்தையும் உயிர்களை யும் தன்னகத்தே அடக்கியிருக்கிறது. இங்ஙனம் தத்துவ வடிவம்கொண்டவரே விநாயகர்.

விநாயகப் பெருமானுக்கு அறுகு மிகவும் பிரியமானது என்பதைப் பின்வரும் கதைமூலம் அறியலாம். விநாயகப்பெருமானை இடையறாது வழிபடுகின்ற மகாமுனிவர் கவுண்டின்யர். இவருடைய மனைவி ஆசிரியை. ஆசிரியை தன் கணவனைப் பார்த்து "ஓர் அறுகு தந்த திரிசிரனுக் கும் விரோசனைக்கும் மலையளவு செல்வத்தை விநாயகர் வழங்கினாரே, நாம் மலைபோல் குவித்து அறுகினால் பிள்ளையாரை வழிபடு கின்றோமே, நமது வறுமை தீரவில்லையே இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டாள்.

கவுண்டியமுனிவர் அறுகின் பெருமையை ஆசிரியையும், மற்ற ஏனையவர்களும், வானோரும் உணர்ந்து உய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டார். அன்புடன் உள்ளம் உருகி, ஆனைமுகப்பெருமானுக்கு அர்ச்சனை புரிந்து, ஓர் அறுகை எடுத்து மனைவியிடம் தந்தார். "நீ சென்று எல்லாச் செல்வங்களையும் படைத்த இந்திரனிடம் இந்த அறுகுக்கு நிறைவான செல்வத்தைபபெற்று வா" என்றார்.

ஆசிரியை, அந்த அறுகை எடுத்துக் கொண்டு தேவலோகம் போய் அமரர் கோமானைக் கண்டாள். இந்திரன் அந்த அம்மையாரை வரவேற்று வழிபாடு செய்தான். ஆசிரியை "தேவர் கோவே! என் கணவனார் இந்த அறுகின் நிறைக்கு ஏற்ற நிறையுள்ள பொன்னை, உன்னை வேண்டிப் பெற்று வருமாறு என்னை அனுப்பினார்" என்றாள். இந்திரன், அவரை இறைஞ்சி "இது குபேரனாற்றான் ஆகும். அங்கு போய்ப் பெறு வீராக" என்று கூறித் தன் தூதருடன் அனுப்பி னான். இந்திர தூதர்கள் குபேரனிடம் சென்று "ஐயனே! அம்மையா ருடைய கரத்தில் உள்ள அறுகை நிறுத்து, அதன் நிறைக்குப் பொன் தருமாறு அமரேசன் என்னை அனுப்பினான்" என்றார்கள்.



குபேரன் அறுகைக் கண்டு அலட்சியமாக, "இந்த அறுகின் நிறைக்கு ஏற்ற பொன்னைப் பெறுவதற்கா இவரை இந்திரன் என்னிடம் அனுப்பினான். மிகவும் நன்று" என்று புன்னகை புரிந்தான். துலாக்கோலை எடுத்தான். அறுகை ஒரு தட்டில் வைத்தான். மற்றொரு தட்டில் ஒரு பொற்காசை வைத்தான். நிறை சரியாகவில்லை. பற்பல பொற்காசுகளை வைத்தான். தனது செல்வம் அனைத்தையும் வைத்தான். நிறை சரியாகவில்லை. நவரத்தினங்கள், பட்டாடை கள், வெள்ளி முதலிய எல்லாவற்றையும் வைத்தான். அறுகின் தட்டு மேலே எழவில்லை. குபேரன் அறுகின் பெருமையை உணர்ந்தான். "இந்த ஓர் அறுகுக்கு என் நவநிதிகளும் ஈடாக மாட்டா. இனி என் குடும்பத்துடன் துலையில் ஏறுவேன் என்று விநாயகரைத் தியானித்துத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்துடன் துலையில் ஏறினான். அப்போதும் தட்டு சரியாகவில்லை.

இந்திரன் அப்போது அங்கு வந்தான். குபேரன் "இந்திரபகவானே! நான் உமக்கு என்ன தீங்கு செய்தேன்? இந்த ஒரு புல்லுக்கு என் நிதியமும் நானும் நிகராகவில்லை என்று எல்லோரும் இகழுமாறு செய்தீரே?" என்றான்.

இந்திரனும் துலையில் ஏறினான். ஏனைய தேவர்கள் யாவரும் துலையில் ஏறினார்கள். அறுகின் தட்டு உயரவில்லை. எல்லோரும் நாணினார்கள். தங்கள் அரிய செல்வங்கள் யாவும் விநாயகருக்கு அர்ச்சனை புரிந்த ஓர் அறுகம் புல்லுக்கு நிகராகவில்லையே? என்று எண்ணி, அகந்தையடங்கினார்கள்.

அங்கே சிவபெருமான் இடபத்தின் மீது வந்து காட்சியளித்தார். "இந்திராதி இமையவர்களே! அறுகின் அருகில் ஒன்றும் இணையாகாது. எல்லோரும் தட்டைவிட்டு உங்கள் செல்வச் செருக்கை விட்டுவிட்டு, இறங்குங்கள். கவுண்டின்ய முனிவரிடம் போவோம்" என்றார். சிவ பெருமானோடு இந்திரன், குபேரன், மற்றைய தேவர்கள், எல்லோரும் கவுண்டின்ய முனிவரிடம் வந்தார்கள். முனிவர் பயபக்தியுடன் சிவமூர்த்தியை பணிந்தார்.

அரனார் "அருந்தவமுனிவா! உனக்கும், உன்வழிபாட்டின் அறுகுக்கும் மூவுலகமும் நிகராகமாட்டா? உனக்குச் சகல செல்வங்களையும் வழங்கினோம். உனக்கு நிகர் நீதான்! உனது விநாயகபூசை சமானமில்லாதது. உன் புகழ் வாழ்க" என்று திருவருள் புரிந்து மறைந்தருளினார். அமரர்கள் அவரை அஞ்சலி செய்தார்கள்.

காமதேனுவும் கற்பகமும் கவுண்டின்ய முனிவரிடம் குறிப்பறிந்து சகல செல்வங்களையும் வழங்கிக் கொண்டிருந்தன.

ஆசிரியை கணவனைத் தொழுது, "என் உயிர்த்துணைவரே! இன்று நான் கணேசருடைய பெருமையையும், அறுகின் அருமையையும் நன்கு உணர்ந்தேன்" என்று கூறித் தொழுதாள்.

அறுகின் பெருமையை அனைவரும் அறிந்து அறுகினால் விநாயகரை வழிபட்டு எல்லா நலன்களையும் பெற்றார்கள்.

விநாயகரை வழிபடுவதனால் திருவாக்கும் செய்கருமம் கைகூடும், செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும், நமது துன்பங்களுக்கெல்லாம் காரணம் வினைதான். மற்ற மூர்த்திகளை வணங்கினால் வினைகள் தீரும். ஆனால் விநாயகரை வணங்கினால் வினைகளின் வேரையே களைந்தெறிவார்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான் எனக் கவிதேவநாயனார் மொழிகின்றார். மூவரும் தேவரும் ஏவரும் போற்றும் தனிப்பெருந் தெய்வம் விநாயகர். விநாயகருடைய விரதங்களில் ஒன்றானது சதுர்த்தி விரதம். முன்னொரு கால் திருகைலாய மலையில் பூதகணங்கள் சேவிக்க விநாயகர் எழுந்தருளி இருந்தார். அடியார்கள் அன்புடன் பெருமானுக்கு அப்பம், மோதகம், அவல், பழம் முதலியவற்றை நிவேதித்தார்கள். அடியார்கள் படைத்த அனைத்தையும், ஆனைமுகக் கடவுள் தும்பிக்கையினால் ஒரு கவளமாக எடுத்து விழுங்கிவிட்டார். சந்திரன் அதுகண்டு ஏளனமாகச் சிரித்தார். விநாயகர் வெகுண்டு என்னைப் பரிகாசம் செய்த காரணத்தினால் உலகம் ஒளியின்றி மறைந்து போகக் கடவாய். உன்னைப் பார்த்தவர்களும் துன்ப மடையக்கடவர் என்று சபித்தார். சந்திரன் ஒளி குன்றி விண்ணில் உலாவாது துன்பமடைந்தான். தேவர் கோமானாகிய இந்திரன் விநாயகரைப் பணிந்து சந்திரன் அறியாது செய்த பிழையை பொறுத்தருள வேண்டுமென மன்றாடினான். மனமிரங்கிய விநாயகப்பெருமான், சந்திரன் இனி ஒளியுடன் உலாவுவான். நான் முன்பு கூறியபடி ஆவணிச்சதுர்த்தி அன்று சந்திரன் தோஷமுள்ளவனாகிறான். அன்றைய தினம் சந்திரனை யாரும் பார்க்கக்கூடாது. பார்த்தால் வறுமை, நோய் முதலிய பல துன்பங்களை அடைவார்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கேள்வியுற்ற சந்திரன் "சர்வசித்தி" என்ற தலத்தில் இருபத்திரண்டு ஆண்டுகள் "ஓம் கணேசாய நம" என்ற திருமந்திரத்தை ஓதி அரிய தவம் செய்தான். விநாயகர் தண்ணருள் புரிந்து சந்திரன் முன்தோன்றி திங்களே! ஒவ்வொரு மாதத்திலும் வரும் சதுர்த்தியில் நோன்பிருந்து என்னை வழிபடுவோர் எல்லா நலன்களும் பெறுவர். அன்று மாலை உன்னையும் என்னையும் வணங்குவார்களாக. ஆவணிச்சதுர்த்தியில் மட்டும் உன்னைப் பார்க்காதிருப்பார்களாக அன்று நீ தோஷமுடையவனாக இருக்கிறாய் என்று கூறி அருளினார். இப்படியாக சதுர்த்தி விரதங்களுக்குரிய புராணக் கதைகள் பல உள்ளன.

இத்தகைய சிறப்புக்களையுடைய விநாயகப்பெருமானை நாம் வணங்கினால் நினைத்தவை கைகூடும். அறிவாற்றல் ஓங்கும். நற்பேறும் கிட்டும்.

எமது திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையாரின் மகிமையும், கருணையும் பெரியது. அவரை வழிபட்டுச் சகல சௌபாக்கியங்களும் பெறுவோமாக.

நன்றி

## சிவகணம்

சிவகணம் எனில் சைவசமய முழுமுதற் கடவுளாகிய சிவபிரானுடைய கணம் எனப் பொருள்படும். கணம் எனும் பதம் - குழு, கூட்டம், தொகுப்பு, பரிவாரங்கள், படை எனப்பொருள்படும். இங்கு சிவபெருமானுடைய பரிவாரங்கள், அல்லது அவரைப் பின்பற்றுவோர் அல்லது அவரின் சேவகர்கள் என்னும் கருத்துக்களிலும் இப்பதம் வந்துள்ளது. கணங்களுக்குத் தலைவர் கணபதி. அவர் சிவபிரான், பார்வதி ஆகியோரின் மூத்த திருக்குமாரனாகவும், கணங்களின் தலைவராகவும் சிறப்பாகப் போற்றப்படுகின்றார். சிவபிரானின் மிகச்சிறந்த பக்தர்களிலொருவரான நந்திதேவர் அல்லது நந்திகேஸ்வரர் சிவகணங்களில் முதன்மையானவராகவும், சிவகணங்களின் நேரடித்தலைவராகவும் சிவபிரானின் வாகனமாகவும் சிறப்பாகக் கூறப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முழுமுதற்பொருளானவர் கணபதி

சிவதொண்டன் நா. முருகையா
ஆத்மஜோதி தியான மணிமண்டபம்,
ஏழாலை.

இவ்வுலகம் பஞ்சபூதங்களால் ஆனது. இந்த ஐந்துக்கும் அதிபதியான பரம்பொருள் ஐந்து ரூபங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார் என்று ஆகமசாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஆகாயத்திற்கு விஷ்ணு, அக்கினிக்கு துர்க்கை, காற்றுக்கும் பூமிக்கும் சூரியன், நீருக்கு கணேசன் அதிபதிகள் என்று கூறப்படுகிறது. இவர்களைத்தான் பஞ்சதேவதைகள் என்று கூறுவர். இந்த ஐவரில் கணபதி சப்த (ஒலி) பிரம்ம சொரூபம் ஓம் காரத்திற்கு அடையாளம். அதனால்தான் எல்லா மந்திரங்களுக்கும் முன் ஓம் இருப்பதைப்போல் எல்லாப் பூஜைகளுக்கும் முன் கணபதி பூஜை நடைபெறுகிறது. உண்மையில் கணேசன் யாருடைய மகனும் அல்ல. அவர் பரப்பிரம்ம சொரூபம். சிவனின் மகனாகப் பிறந்த கணேசன் அந்த பரப்பிரமனின் ஓர் அவதாரம் தான். சாட்சாத் சிவபெருமானே கணேசனை பூஜை செய்ததாக புராணங்களில் பார்க்க முடிகிறது. எல்லா உலகங்களுக்கும் பதி என்பதால் கணபதி- கண + ஈசன் = கணேசன் கண (உயிர்கள்) மயமான இவ்வுலகத்திற்கு ஈசன் (அதிபதி) ஆகையால் கணேசன் இவரே எல்லாம் என்பதால் விநாயகர் விக்கின கணபதய அதர்வ சீர்ஷத்தில் கணேசனின் உருவத்தைப்பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. ஒரேஒரு தந்தத்துடன் நான்கு கைகளில் பாசம் அங்குசதந்தம் வர முத்திரைகளுடன் காட்சியளிப்பார். அவருடைய கொடியின் மேல் எலிச் சின்னம் இருக்கும். சிகப்பு நிறத்துடன் பிரகாசிக்கும் அவர் பானை போன்ற வயிறுடன் தென்படுவார். முறம்போன்ற பெரிய காதுகளுடையவர். வெள்ளை அல்லது சிகப்பு நிற உடைகள் அணிந்தவர். உடலில் சிகப்பு சந்தனத்தை பூசிக்கொண்டிருப்பவர். சென்நிறம் மற்றும் வெண்ணிறப் பூக்களால் பூசை செய்தால் சந்தோஷப்படுவார். கணேசன் பத்மபுராணத்தில் வேத வியாசர் கணேசனை விதவிதமாக வர்ணித்துள்ளார். கறுப்புநிற யானையின் தோலினை உடையாகத் தரித்த கணேசன் நாகயக்ஞோப வீதத்தை (பூணூல்) அணிந்துள்ளார். அவருடைய நெற்றியில் (பிறை) பாலசந்திரன் பிரகாசிக்கின்றார். பலவிதமான ரத்தினங்களையும் அற்புதமான மாலைகளையும் சூடியிருப்பவர். காம, ரூப, தரம், தேவம், வக்தேஹம், கணநாயகம் என்று வியாசர் சொல்கிறார் அதாவது கணேசன் தான் விரும்பிய ரூபங்களை தரிக்கக்கூடியவர் என்று பொருள். ஸ்ரீதத்துவநிதி மந்திர மஹோததி மந்திரரத்னாகரம் சில்பரத்தினம், அம்சுமத் பேதாகமம், சுப்ரபேதாகமம் போன்ற நூல்களில் கணேசனின் பலவிதமான ரூபங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவர் சதுர்புஜன் (நான்கு தோள்களையுடைவர்) என்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட் டாலும் அவர் விபுஜன், ஷோடா, சுபுஜன், அஷ்டபுஜன், ஷட்புஜன் என்றும் போற்றப் படுகிறார்.

ஒரு வர்ணனையில் அவர் காலைப் பொழுதின் சூரியனைப்போல் பிரகாசிப்பார் என்றும் மற்றொரு வர்ணனையில் சந்திரனைப் போல் வெண்மையாகப் பிரகாசிப்பார் என்றும் கூறப்படுகிறது. ஹேரம்மகணபதியும் மாதங்க கணபதியும் ஐந்துமுகங்களுடன் கணேசனின் கைவிரலுக்கு மரகதமணி பதிக்கப்பட்ட அணி சேர்ப்பதாகவும் கணேசனின் புராணத்தில் கூறப் பட்டுள்ளது. அவருடைய இடுப்பில் நாகபந் தணம் இருப்பதாக வர்ணிக்கப்பட்டுள்ளது. கணேசனை நினைத்தவுடன் ஓம்காரம் போன்ற அவருடைய உருவம் நம்முன் தோன்றும். அவர் லம்போதரன் அதாவது பானையைபோன்ற வயிறுடன் காட்சியளிப்பவர். இதைப்பற்றி ஒரு கதை பிரம்மபுராணத்தில் இருக்கிறது. தாய் பார்வதியிடம் பால்குடித்துக் கொண்டிருக்கும் கணேசன் பால்குடித்த திருப்தி ஏற்பட்ட பிறகும் கார்த்திகேயனுக்கு இடம்தராமல் குடித்துக் கொண்டேயிருப்பாராம். இதைப்பார்த்த சிவன் மகனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே குழந் தையே! உனக்கு நிறையப் பால்வேண்டு மல்லவா! அதனால் உனக்கு பானை போல் பெரிய வயிறு இருக்க வேண்டும்! ஆசி கூறியதுடன் செல்லமாய் லம்போதரன் என்றழைத் தாராம். கணபதியின் கைகளில் இருக்கின்ற ஆயுதங்கள், பொருட்கள் பற்றியும் பல வர்ணனை கள் இருக்கின்றன. தருண கணபதியைப்பற்றி சொல்லும்போது அவ ருடைய கைகளில் பாசம் அங்குசங்களுடன் நாவற் பழம் கரும்பு இருப்பதாகச் சொல்லப்பட்டுள் ளது. திரிபுராசுர சம்ஹார சமயத்தில் நாரத முனிவரின் யோசனைப்படி சிவபெருமான் கணேசனை வேண்டி தவம்செய்து அவரது அருளைப் பெற்றுக்கொண்டார். அப்போது தோன்றிய கணபதிக்கு ஐந்து முகங்கள் பத்துக் கைகள் இருந்தனவாம். பத்து கைகளில் வைரம், சக்தி, தண்டம், கட்கம், பாசம், அங்குசம், கதை, திரிசூலம், பத்மம், சக்கரம் போன்றவை யோடு மட்டுமின்றி அவர் வஜம், பாணம், தனுசு, கமண்டலம், கரும்பு, முத்தரம் போன்றவையும் உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. கணபதிக்கு கொழுக்கட்டை என்றால் பிரியம் அவருடைய கைகளில் கொழுக்கட்டைகள் அமுதத்தினா லானவை கணபதிக்கு சித்தி புத்தி என்று இரண்டு மனைவிகள் இருப்பதாகவும் அதனால் தன்னை வேண்டியவர்களுக்கு சித்தியுடன் நல்புத்தியும் வழங்குவார் என்றும் புராணம் சொல்கிறது. பக்தர்கள் நேசிக்கும் கணபதிக்கு சதுர்த்தி திதி மிகவும் பிடித்தமானது. பிரம்மதேவனுக்கு ஏற் பட்ட சிக்கல்களை அகற்றுவதற்கு விநாயகர் தோன்றிய நாள் இதுதான். அதனால் கணபதியை வழிபட்டால் எல்லாத் துன்பங்களும் தீரும். வாழ்க்கையில் அமைதி நிலவும்

**"ஓம் கம் கணபதியாயே நம"**

இதை காலையில் ஒன்பது (9) முறை சொல்லவும்.

## நவக்கிரகங்களும் அவைக்குரிய தானியமும்

1. சூரியன் - கோதுமை
2. சந்திரன் - நெல்
3. செவ்வாய் - துவரை
4. புதன் - பயறு
5. வியாழன் - கடலை
6. வெள்ளி - மொச்சை
7. சனி - எள்ளு
8. இராகு - உழுந்து
9. கேது - கொள்ளு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புராணங்களில் வழிபடப்படும் புண்ணியன் விநாயகன்

பிரம்மஸ்ரீ பரமானந்த சர்மா சனாதனசர்மா B.B.A (Spl)
"பங்கஜ வாசம்"
கல்வயல், சாவகச்சேரி.

வேதங்கள், ஆகமங்கள், இலக்கியங்கள், திருமுறைகள், புராணங்கள் என விநாயகப் பெருமான் போற்றப்படாத இடமே இல்லை எனலாம். இறைவழிபாட்டு மரபிலே, இலகுவான வழிபாடு விநாயக வழிபாடு எனலாம். அதே போற் கூப்பிட்ட குரலுக்கு உடனே வருபவரும் விநாயகன் தான். எப்படியாயின், மண்ணிலே கூட விநாயகனைப் பிடித்து விநாயகா, பிள்ளையாரே என்று கூப்பிட்டுவிட்டால் உடனே வந்து காப் பவர் விநாயகரே. எமது சமயமானது ஞானத் திலே, பல கோணத்திலே, நல்ல கானத்திலே, அன்னதானத்திலே எல்லாம் சிறப்புடையது. இச்சிறப்புக்குரிய சாதனமாக இருப்பவை புராணங்கள் எனலாம். அந்தவகையில், விநாயக புராணம், பெரியபுராணம், கந்தபுராணம் போன்றவை முதலில் விநாயகனுக்குக் காப்புச் சொல்லும் வழமையைக் கொண்டுள்ளன.

பிருகு முனிவரினாலே வடமொழியிற் பாடப்பட்டுப் பின்னர் கச்சியப்ப முனிவரினாலே தமிழிற் பாடப்பட்டது விநாயகர் புராணம். இப் புராணத்தில் இடம்பெற்றுள்ள விநாயகர் வாழ்த்து என்னும் பகுதியிலே,

*"அகரம் என அறிவாகி உலகம் எங்கும் அமர்ந்து*
*அகர உகர மகரங்கள் தம்மால்*
*பகரும் ஒரு முதலாகி வேறுயிராகி*
*பல்வேறு திருமேனி தரித்துக்கொண்டு*
*புகரிர் பொருள் நான்கினையும் தீர்த்து எய்தப்*
*போற்றுநருக்கு அறக்கருணை புரிந்த அல்லார்க்கு*
*நிகரில் மறக்கருணை புரிந்து ஆண்டு கொள்ளும்*
*திருமலனைக் கணபதியை நினைத்து வாழ்வாம்"*

எனக்குறிப்பிட்டுள்ளார். அதாவது, விநாயகர் ஆனவர் உலகம் எங்கும், அகரம் என அறிவாகி அமர்ந்துள்ளார். அகர, உகர, மகரம் எனப்படும் "ஓம்" எனும் பிரணவ மந்திரத்தின் மூலப் பொருளாக உள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பொருட்களையும் இடர் ஏதும் இன்றிப் பெறுவதற்கு விநாயகப் பெருமானை வழிபட வேண்டும். அவ்வாறு வழிபடுபவர் களுக்கு அறக்கருணை புரிகிறார். அல்லாதோர் களுக்கு மறக்கருணை புரிந்து ஆட்கொள்கிறார். இத்தகைய விநாயகரை எண்ணி வாழ்வோம் என்று பாடியுள்ளார்.

மேலும், விநாயகர் புராணத்திலே விநாய கரை வழிபட்டு வரம்பெற்ற தெய்வங்களாக; உமாதேவி, சண்முகர், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், இந்திரன், பரசுராமன் மற்றும் அகத்தியமுனிவர் போன்றோரைக் குறிப் பிட்டுள் ளதுடன் விநாயகர் சதுர்த்தி விரதங்கள், ஆவணிச் சதுர்த்தி விரதம் போன்றவற்றின் மகிமை, அவற் றின் பலாபலன்கள், விநாயகரை அர்ச்சிக்கும் அறுகு, வன்னி, மந்தாரை போன்ற அர்ச்சனைப் பொருட்கள், சித்தி, புத்தி, தேவியர் வரலாறு, மும்மூர்த்திகளுக்கு விநாயகர் காட்டிய விஸ்வரூப தரிசனம், தீராத நோய் கொண்ட சோமகாந்தன் என்பவனுக்கு விநாயகர் புராணம் பாடி நோய் நீங்கியமை, விநாயகரின் திருநாமங் கள், அவற்றை ஓதுவதன் பலன்கள், விநாயகரின் திருமேனி வடிவங்கள், பன்னிரு அவதார தத்துவம், விநாய கனும் சிவனும் ஒன்று என்ற கருத்துக்கள், விநாயகர் புராணத்தை வீட்டில் வைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பவர்களுக்கு உண்டாகும் நன்மைகள் எனப் பலவும் எடுத்துக் கூறப் பட்டுள்ளன.

சதுர்த்திவிரத மகிமையை விநாயகபுராண மானது,

*"அரும்பிய விடரெல்லாம் அறுக்கத் தக்கது*
*பெரும்பிணி முழுவதும் பெயர்க்கத் தக்கது*
*பெரும்பகை வலிகளும் போக்கத் தக்கது*
*விரும்பிய பொருளெலாம் விளைக்கத் தக்கது"*

எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது, அறம், பொருள், இன்பம், வீடு முதலான நால்வகைப் பயன்களையும் தரவல்லது, துன்பங்களை நீக்கக் கூடியது, வலியவரும் பகைகளைப் போக்கக் கூடியது, தாம்விரும்பும் பொருட்கள் அனைத் தையும் பெறக்கூடிய மேன்மையானது எனக் கூறப்படுகிறது.

பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான்:

***"எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்***
***நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்***
***தடக்கை ஐந்துடை தான்செவி நீள்முடி***
***கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்"***

இப்பெரிய புராணம் இன்றமிழ்ப் பாடல் களை இனிதாக நிறைவேற்றி உலகிற் பொருந்திய மேன்மையை நமக்கு அருள்செய்யும் பொருட்டு ஐந்து பெரிய கைகளும், தாழ்ந்த காதுகளும் கொண்டுள்ள களிறுபோன்ற விநாயகனை எமது உள்ளக்கருத்தில் வரவழைத்து நினைவு கொள் வோம் என்று பாடியுள்ளார்.

இதேபோன்று, மதுரை மீனாட்சி சுந்த ரேஸ்வரர் கோவிலில் தேவியைப் போற்ற வந்த குமரகுருபரர் தமது பிள்ளைத்தமிழ் நூலில் மதுரைத் திருக்கோவில் விநாயகருக்காகப் பாடிய பாடலில்,

*"சித்திவிநாயகன் இசையைப் பழிச்சும்...*
*முத்தமிழ் தேர்தரு மதுரை தலத்துறை*
*முத்தள மேவுபெண் அரசைப் புரக்கவே"*
எனப்பாடியுள்ளார்.

இதேபோன்று யாழ்ப்பாணக் கலாசாரம் எனப் போற்றப்படும் கந்தபுராணத்திலே,

*"திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்*
*சகட சக்கர தாமரை நாயகன்*
*அகட சக்கர வின்மணி யாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்"*



திகழ்கின்ற பத்துத்திருக்கைகளும் செம்மை யான ஐந்துதிருமுகங்களும் கொண்ட சிவனின் தேர்ச்சக்கரமாகி நின்ற தாமரைக்குத் தலைவ னான சூரியனைத் தன் வயிற்றில் ஒளிவீசும் வட்ட மணியாகக் கொண்டுள்ள விகடசக்கர விநாய கனின் மெய்த்திருவடிகளை இந்நூல் இனிது முடித்தற்பொருட்டு வணங்குவோம் என்று பொருள் கொண்டுள்ளது. இதேபோல் "உச்சியில் மகுடம் மின்ன" என்ற பாடலும் விநாயகனைப் போற்றியுள்ளது.

இவ்வாறு, விநாயகனைப் போற்றாத புராணங்கள் இல்லை என்ற அளவிற்கும் விநாய கனின் பெருமைகளைப் புராணங்கள் எடுத்தி யம்புவதாகவும் உள்ளதென்பது கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணபதி வழிபாட்டு நெறி

சந்திரலேகா வாமதேவா
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கணபதி வழிபாட்டு நெறிபற்றிப் பேசும் போது இந்தியா முழுவதிலும் மட்டுமன்றித் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் பரவிச் செறிந்துள்ள ஒரு வழிபாட்டுநெறி பற்றியே பேசுகிறோம் எனலாம். கணபதி என்ற தெய்வத்தை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அதன் காரணமாக காணாபத்தியம் என்று அழைக்கப் படும் இப்பிரிவு இந்தியாவிலே தோன்றி வளர்ந்து ஒரு சமயமாக முழுமை பெற்றது. நேபாளம், சீனத்துருக்கி, ஜாவா, போர்ணியோ ஆகிய நாடுகளில் கணபதியின் செல்வாக்கு பரந்தது. ஜப்பான், இந்தோசீனா, சீனா, சீயம், பர்மா, திபெத் ஆகிய நாடுகளும் அவனது வழிபாட்டை அறியாதிருக்கவில்லை. பல்வேறு நாடுகளில் மட்டுமன்றி இந்தியாவிற் தோன்றிய அவைதிக மதங்களான பௌத்தம், சமண போன்றவற் றிலும் அவனது செல்வாக்குப் பரந்தது குறிப் பிடத் தக்கது. இந்து தெய்வங்களுள் இவ்வாறு பல் வேறு நாடுகளிலும் பல்வேறு மதங்களிலும் செல் வாக்குப் பெற்றவன் கணபதி ஒருவன் மட்டுமே என்று கூறலாம்.

இந்தியாவில் இமயமலையிலிருந்து கன்யா குமரி வரை கணபதி சிறப்புப் பெற்றுள் ளான். சகல இந்துக்களும் ஒவ்வொரு மங்கள காரியத் தின் ஆரம்பத்திலும் இவனை வழிபடுவர். எழுத ஆரம்பிக்கும் போதும் பிள்ளையார் சுழியிட்டு கணபதியை வழிபட்டே ஆரம்பிப்பர். சிறப்பாகத் தமிழ் நாட்டில் கணபதிவழிபாடு மக்களது வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது எனலாம். அங்கு ஏறக்குறைய ஒவ்வொரு வீதியிலும் ஆல மரங்களின்கீழோ அன்றிச் சிறியகோயில்களிலோ இவனைத் தரிசிக்கலாம். காணபத்தியம் இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளுள் ஒன்றாகவும் இடம் பெற்றுள்ளது. இந்து சமய சிந்தனையில் கணபதி என்ற யானைமுகக்கடவுள் பெற்றுள்ள முக்கியத் துவத்தையே இவை குறித்து நிற்கின்றன எனலாம்.

இந்தியாவிலே கணபதி ஆரம்பத்தில் ஒரு திராவிடத் தெய்வமாகவே இருந்தான் என்றும் சூரியனை வழிபட்ட இந்தியாவின் தொல்பழங் குடி மக்களால் வழிபடப் பட்டான் என்றும் எலி வாகனத்தில் உள்ள அவனது உருவம் பண்டைய தெய்வீக வரலாற்றியலில் இரவின் சின்னமாகிய மிருகத்தைச் சூரியதெய்வம் வெற்றிகொள்வதையே குறிக்கிறது என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். தொல்குடித் தெய்வீக வரலாற்றியலிலிருந்து அவன் எடுக்கப்பட்டிருக்கலாம் என்பதை அவனது யானைத் தலையும் எலியில் அவன் ஏறியமர்ந்திருக்கும் நிலையும் புலப்படுத்துகின்றன என்றும் அவன் ஆரம்பத்தில் ஒரு மிருக வழிபாட்டு நெறியைச் சேர்ந்தவனாயிருந்திருக்க லாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் வேறு சில அறிஞர்கள் கருதுகின் றனர். (Crooke. w. popular religion and folk lore of northern India London. 1896.P287) ஆயினும் அவனது பண்டைய திராவிடப் பண்பு குறித்த பெயர் என்னவென்பது தெரியவரவில்லை. யானையின் பல் அல்லது தந்தத்தைக் குறிக்கும் திராவிடச் சொற்களான பல்லு பெல்ல ஆகிய வற்றிலிருந்து தோன்றிய அவனது பண்டைய பெயரின் திரிபே தற்போது தமிழில் அவனைக் குறிக்க வழங்கப்படும் பிள்ளையார் என்று கருதப் பட்டபோதும் இன்றைய வடிவில் அச்சொல் தந்தத்தைக் குறிக்காது பிள்ளையைக் குறிக்கிறது என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிதே (Alice Getty. Canese, Oxford, University Press,1936P.J) ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன் அங்கு நிலவியதெனக் கருதப்படும் சிந்து வெளி நாகரிகத்துக்குரிய சின்னங் களிலே யானை பொறித்த முத்திரைகளும் கிடைத்துள்ளன. இதனையும். இங்கு கிடைத்த வெவ்வேறு சின்னங் களிலே பொறிக்கப்பட்டுள்ள வேறு மிருகங் களையும் பிற்காலத்தில் இந்துக்கடவுளருக்குரிய தாகக் கூறப்படும் வாகனங்களுடன் தொடர்பு படுத்தும் முயற்சி காணப்பட்ட போதும் அதனை நிறுவுவதற்குப்போதிய ஆதாரங்கள் கிடையாது. வெவ்வேறு விலங்குகளின் உருவங்கள் பொறிக் கப்பட்டிருப்பது இனக் குழுக்களின் மரபுச் சின் னங்களைக் குறிப்பதாகலாம் என்று சில அறிஞர் கள் கருதுவது ஓரளவு பொருத்தமாகக் காணப் படுகிறது. (அன் தோவா. கொ. அ. போன்காரத்-லேவின் கி.ம.இந்தியாவின் வரலாறு பகுதி1 முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ,1987.பக்.34) சிந்துவெளி நாகரிகத்திற்குரிய எழுத்துக்கள் வாசித்து விளங்கிக்கொள்ளப்படும்வரை இவ் யானை உருவத்தைக் கணபதி வழிபாட்டுடன் இணைப்பது பொருத்த மற்றது என்றே கூறலாம். உண்மையில் கணபதி என்ற தெய்வத்தின் தோற்று வாய்பற்றி அறிவதற்கு நிச்சயமான சான்றுகள் கிடைக்கவில்லை என்றேகூற வேண்டும். இத்தெய்வம் பற்றிய கருத்து உருவாகுவதற்கு மிருகத் தலைகளுடனும் மனித உடல்களுடனும் காணப்பட்ட றோம் நாட்டு ஜேனூஸ் எகிப்திய ஜேநேய் ஆகிய தெய்வங்கள் பற்றிய கருத்துக்கள் உதவியிருக் கலாம் (Alice Getty, முற்கூறிய நூல், பக்13,14).

வடமொழி இலக்கியங் களைப் பொறுத்த வரையில் கணபதி என்ற தெய்வத்துடன் தொடர் புடையன எனக் கருதக் கூடிய சில ஆதாரங்கள் மிக ஆரம்ப கால இலக்கியங்களிலேயே காணப் படுகின்றன. இருக்கு வேதத்தில் இடம்பெற்றுள்ள பிரஹ்மணஸ்பதி பற்றிய பாடலிலும் (11.23.1) இந்திரனைக் குறித்துப் பாடப்பட்ட பாட லொன்றிலும் (x.112.9) காணப்படும் சில அடை மொழிகள் பிற்காலத்தில் கணபதிக் குரியனவாகக் கூறப்பட்ட இயல்புகளுடன் ஒத்துக் காணப் படுகின்றன. "கவின் கவினாம்" கவிஞர்களுட் சிறந்த கவிஞன் அல்லது ஞானிகளுட் சிறந்த ஞானி "ஜ்யேஷ்டராஜா" அரசர்களுள் மிகப் பிரதானமானவன் அல்லது மூத்தவன் போன்ற அடைமொழிகள் கணபதிக்கும் பொருத்த மானவையே.

கிருஷ்ணயசுர் வேதத்திலுள்ள சதருத்தி ரீயம் (45.41) வாஜசனேயி சம் ஹிதை (22.30) ஆகியவற்றிலும் கணபதி பற்றி சில குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. சதருத்திரீயம் "கணபதிக்கு வணக்கம்" என்று உருத்திரனையே வணங்கு கிறது. உருத்திரன் கணங்களின் தலைவனாக இங்கு கூறப்பட்டபோதும் புராணங்களில் இவ்வி யல்பு கணபதிக்குரியதாகவே குறிப்பிடப்படுவ தால் இதனை இங்கு கணபதியுடன் தொடர்பு படுத்தி நோக்குவதிற் தவறில்லை எனலாம்.

தைத்திரீய ஆரண்யகத்திற் கணேஷன் பற்றிய தவறில்லாத குறிப்பொன்று காணப் படுகிறது. இந்த கணேஷகாயத்திரி மந்திரம் தந்தத்துடன் கூடிய தெய்வத்தை நோக்கிப் பாடப் பட்ட ஓர் அனுபூதி நிறைந்த பிரார்த்தனையாக அமைந்துள்ளது.

*"தத்புஷாய வித்மஹே வக்ரதுணடாய தீமஹி*
*தன்னே தந்தி: பிரசோதயாத்"* (x1.5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மந்திரம் கார்த்திகேயனும் நந்தியும் விளிக்கப்பட்டுள்ள ஒரு மந்திரத்தொகுதியுள் இடம்பெற்றிருப்பதாலும் இவர்களுடன் புராணங்களில் மட்டுமன்றி மிகப்பழைய சிற்பங்களிலும் கணபதி இணைந்திருப்பதாலும் பிற்காலத்திற் தந்தத்துடனும் துதிக்கையுடனும் தொடர்புடைய பெயர்களை அவன் பெற்றிருப்பதாலும் தந்தி வக்கிரதுண்டன் ஆகிய பெயர்களைக்கொண்ட இப்பாடல் கணபதியை நோக்கியே பாடப்பட்டுள்ளது என்று கொள்ளலாம். (Alice Getty, மேற்படி பக் 2) மாணவ்ய கிருஹ்ய சூத்திரத்தில் நாலு தெய்வங்கள் இணைந்த குழுவாக விநாயகர் குறிப்பிடப்படுகிறார். (2.14) அதர்வசிரஸ் உபநிடதம் உருத்திரனை விநாயகனுடன் அடையாளம் காண்கிறது. கணபதியைக் குறிப்பதாகக் கருதப்படும் இத்தகைய சில குறிப்புக்கள் வேத இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்பட்ட போதும் வேத தெய்வக்குழுவில் கணபதி என்ற பெயரிலோ அல்லது அவனுக்குரிய வேறு எந்தப் பெயரிலோ தனித்தெய்வமாக அவன் இடம் பெறவில்லை என்பது கவனத்திற்குரியது. மனுதர்ம சாஸ்த்திரத்தில் இடம் பெற்றுள்ள குறிப்பொன்று சிவனைப் பிராமணர்களின் தெய்வமாகவும் கணேஷனை சூத்திரர்களின் தெய்வமாகவும் கூறுகிறது. இவ்வாறு கணபதி முக்கியமற்ற கிராமத் தெய்வமாக கீழ் வகுப்பினரால் வழிபட்டவனாக இருந்தாற் போலும் அவன் வேததெய்வக் குழுவில் தனியாக இடம்பெறவில்லை.

கணபதி, இதிகாசங்கள் கூறும் தெய்வக் குழுவிலும் இடம்பெறவில்லை. அவற்றிற் காணப்படும் "கணேஷ", "கணேஷ்வர" ஆகிய பெயர்களும் சிவனையே குறித்தன. புராணங்களில் அறியப்படும் மிக முந்திய குறிப்பில், அவன் கணபதி விநாயகன் என்று குறிப்பிடப்படுகின்றான். "சரியான முறையில் இணக்குவிக்கப் படாவிடின் தடைகளையும் கஷ்டங்களையும் உருவாக்குவான். என்ற இயல்பு அவனுக்கு வழங்கப்பட்டது. புராண இலக்கியங்களில் கணபதியின் படைப்புத்தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. ஸ்கந்தபுராணம் பார்வதியை மட்டும் அவனது படைப்புடன் தொடர்புபடுத்திக் கூறும் கருத்தைக் கொண்டுள்ளது. ஆனால் பிரமவைவர்த்தம்போன்ற புராணங்களில் சிவன் பார்வதி ஆகிய இருவரும் கணபதியின் படைப்புக்குக் காரண கர்த்தர்கள் என்று கூறப்பட்டுள்ளது. இமய மலைச் சாரலில் ஓர் ஆண் யானையும் பெண்யானையும் இணைந்து இன்பம் அனுபவிப்பதை கண்ணுற்ற சிவனும் பார்வதியும் யானைகளாக மாறிக் கூடியதாலேயே யானைத்தலையுடன் கணபதி பிறந்தான் என்று கூறப்படும் புராணக் கதைதான் பொதுவாக பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் அவனது படைப்பு பற்றிய கதையாகும். கணபதியின் பிறப்பு கணங்களின் தலைவனாதல் பிரணவ மந்திரத்தின் வடிவமாதல் கஜமுகாசுரனை வதம் செய்தல்போன்ற வீரதீரச்செயல்கள் போன்ற அவனைப்பற்றிய பல விஷயங்களைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன.

கணபதி புராணத் தெய்வீகவரலாற்றில் மட்டுமன்றி கி.பி.5ஆம் நூற்றாண்டிலிருந்து பிராமணிய பௌத்த அனுபூதி மந்திர நூல்கள் பலவற்றிலும் குறிப்பிடப்படுகிறான். அவனைப் புகழும் நோக்கிற் பல தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டன. தந்திர சாதனைகளில் அவன் போற்றப்பட்டுள்ளான். சாரதா திலக தந்திரத்தில் அவன் அனுபூதி முறையில் முக்கோணங்களுடனும் வட்டங்களுடனும் இணைந்துள்ளான். இவனை நோக்கிப் பாடப்பட்ட சிறிய பாடல்கள் மந்திரப்பண்பு வாய்ந்தனவாக கருதப் படுகின்றன. மற்றைய தெய்வங்களுக்குரியது போல கணபதிக்கும் "கண்" (gan) என்ற தாந்திரிவீஜம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேதங்களிலிருந்து இவ்வாறாகக் கணபதியை பற்றிய பல இலக்கியச் சான்றுகள் கிடைத்துள்ளபோதும் கி.பி.5ஆம் நூற்றாண்டிற்கு முன் இந்தியாவில் அவனுக்குரிய வழிபாட்டு முறை இருந்ததென்பதற்கு எவ்வித வரலாற்று ஆதாரங்களும் கிடைக்கவில்லை. கல்கத்தா நூதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையில் வைக்கப்பட்டுள்ள ஹீவிஷ்கனின் நாணயத்தின் இயல்புகள் வின்சன்ற் சிமித் நம்புவதுபோல கணபதியைக் குறிக்கும் பண்டைய பிராமியாக இருப்பின் "கணேஷ்" என்ற பெயரில் அவன் குறைந்தது கிறீஸ்தவ சகாப தத்தின் ஆரம்பத்திலிருந்து அறியப் பட்டிருக் கலாம் என்பதற்கு முடிவான ஆதாரமாக அது விளங்கும். ஆனால் நாணயத்தில் உள்ள உருவம் சிவனுடையதே. எனவே அதிலுள்ள பெயரும் அவனையே குறித்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. கி.பி.4ம் நூற்றாண்டின் நடுப் பகுதிக்குரிய அலகபாத் தூணில் உள்ள குப்த கல் வெட்டில் "கணபதி" என்ற பெயர் காணப்படு கிறது. (Fleet J.F.ced Gupta Inscriptions P6) அதில் கணபதி நாகன் என்ற அரசனை பூண்டோடழித்த தாக சமுத்திரகுப்தன் குறிப் பிடுகிறான். கணபதி என்ற பெயரில் ஓர் அரசன் அழைக்கப்படுவது இதுவே முதற்தடவை. பின்னர் 19ம் நூற்றாண் டிற்குப் பின்னர்வரை இப்பெயர் இடம்பெற வில்லை. கி.பி 5ம் நூற்றாண்டிலிருந்து அவனது செல்வாக்குக்கு சிற்ப ஆதாரம் காணப்படுகிறது. குப்தர் காலத்தின் பின்வரை கணேஷன் அல்லது கணபதி தெய்வப் பெயராகக் குறிப்பிடப்பட்ட தற்குக் கல்வெட்டு சான்றுகள் இல்லை.

குப்தர் காலத்திலிருந்து கணபதியின் இன்றுவரை அவனை அடையாளம் காணும் வடிவுடன் அல்லது அவனது ஒப்புக்கொள்ளப் பட்ட மேம்பாடுடைய வடிவுடன் கூடிய சிற்பங் கள் கிடைக்கின்றன. இலங்கையில் மிஹிந் தலைக்கு அருகில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தூபி யில் அமராவதி பாணியை ஒத்த சிற்பங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றுள் ஒருருவம் யானை முகம், தந்தம் துதிக்கை ஆகியவற்றுடன் கூடிய தாக அருகில் இருபுறமும் இரு கணங்கள் உடனி ருக்கக் காணப்படுகிறது. இது ஒரு தந்தத்தை மட்டும் கொண்டிருப்பதால் பரணவி தான என்ற அறிஞர் இவ்வடிவம் வரலாற்றுக்கு முற்பட்ட விநாயக வடிவமாயிருக்கலாம் என்று கருதுகி றார். அப்படியாயின் இப்போது கண்டு பிடிக்கப் பட்டுள்ள விநாயக வடிவங்களுள் இதுவே மிகப் பழமையானதாக இருக்க வேண்டும். இவ்வடிவம் கண்டுபிடிக்கப்பட்ட சையித்தியம் முதலாம் இரண்டாம் நூற்றாண்டுக் குரியது என்று அதன் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்பட்டுள்ளது. அங் குள்ள சிற்பங்கள் பிந்திய காலத்திற்குரியவை எனின் இவ்வடிவம் கிறிஸ்து சகாப்தத்தின் முதல் நூற்றாண்டுக்குரியது என்று கூறலாம் (Alice Getty, முற்குறிப்பிட்ட நூல் -பக் 27).

5ஆம் நுற்றாண்டுக்குரியதாகக் கூறப்படும் புமாரா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலையொன்று மிகவும் தனித்துவமானது. அதன் துதிக்கையின் நுனி முறிந்துள்ளது. வட்டவடிவ மணிகள் கொண்ட மாலையொன்று மார்பின் குறுக்காகத் தொங்குவது இவ்வுருவின் தனித்துவ மான அம்சமாகும். கரண்ட தலையலங்காரத் திலும் கையணியிலும் வீரக்கழலிலும் மணி அணிகலங்கள் காணப்படுகின்றன. இவ்வடிவம் கோவிலின் வாயிற்காவலனாக அமைக்கப்பட் டது. ஆனந்தகுமாரசாமி இவ்வடி வத்துடன் வைசாலியில் ஒரு யக்ஷன் மலைவடிவமாக மணியுடன் நின்று எதிரிகளிடம் இருந்து அம்மக் களைக் காப்பாற்றிய தீபெத்தியக் கதையைத் தொடர்புபடுத்துகிறார். 6ஆம் நூற்றாண்டுக் குரியது என்று நம்பப்படும் இன்னொருரா மாவைச் சேர்ந்த கணபதிசிலை இடது இடையில் பற்றிய சக்தியுடன்கூடியது. 6ஆம் நூற்றாண் டில் சாக்தம் செல்வாக்குப் பெற்றுக் காணப்பட்ட தால் கணபதியுடன் சக்தியை இணைக்கும் மரபு தோன்றிற்று.

கி.பி.5க்கும் 8க்கும் இடைப்பட்ட நூற் றாண்டுகளுக்குரியதாக தக்கணத்திலும் சாளுக் கிய நாட்டிலும் கண்டுபிடிக்கப்பட்ட கணபதி சிலைகளில் அவன் தனித்துக்காணப்படாது முக்கிய தெய்வங்களுடனோ அல்லது சிறிய தெய்வக் குழுக்களுடனோ இணைந்து காணப் பட்டான். சாளுக்கிய கோயில்களில் சப்த மாதர் களுடன் அவர்களது இடதுபக்க எல்லையில் கணபதி காணப்படுவார். லக்கண்டி என்ற இடத் தில் உள்ள காசிவிஸ்வேஸ்வரா கோவிலில் சப்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர்களுடன் கணபதி காணப் படுகின்ற மைக்கு ஒரு சிறந்த உதாரணம் காணப்படுகிறது. பண்டைய அரசர்களின் தலைநகரான பாதாமி யில் உள்ள சைவக்குகைக் கோவில் ஒன்றில் வெளியே தூண்கள் நிறைந்த மண்டபத்திற்கு இடதுபுறம் காணப்படும் சிவதாண்ட வத்தின் குவி ஓவியம் ஒன்றில் அவனது காலடியில் கணேஷனின் சிறிய வடிவம் காணப் படுகிறது. தக்கணத்தில் 5ம் நூற்றாண்டுக்குரிய கோவில் களில் சப்த மாதர்களுடன் இணைந்து கணேஷன் காணப்படுகிறான். 5ம் நூற்றாண் டிற்கும் 10ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவை என்று கருதப்படும். எல்லோரா குகைக் கோவில் களில் சப்தமாதர்களுடன் இணைந்து கணபதி சிற்பங் கள் நான்கு காணப்படுகின்றன.

குஜராத்திலும் சப்தமாதர்களுடன் கணபதி காணப்படுவதுடன் அவன் விருப்புகந்த தெய்வ மாயிருந்ததால் சண்டோர்போன்ற ஜைனக் குகைக் கோயில்களிலும் இடம் பெற்றுள் ளான். மத்திய இந்தியாவில் ஜபல்பூருக்கு அருகில் பேரா கட் என்ற இடத்தில் 16ம் நூற்றாண்டுக் குரிய கௌரிசங்கரரின் கோயிலில் சிறிது நடனமாடும் நிலையிலுள்ள கணபதியின் குவி ஓவியம் ஒன்று உள்ளது. நவக்கிரகங்களுடன் கூடியதாகக் கணபதி செதுக்கப்பட்டுள்ள கற்பாளம் ஒன்று கங் கண்டீகி என்ற இடத்தின் பண்டைய இடிபாடுகளுக் கிடையில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இவ்வா றான சிற்பங்கள் ஒரிஸியன் கோவில்களிலும் தென்னிந்திய, வங்காளக் கோவில்களிலும் காணப்பட்டன. ஜோட்பூருக்கு அருகில் கட்டி யாலா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தூண் ஒன்றின் மேற்பகுதியில் நான்கு திசைகளை நோக்கிய வண்ணம் நான்கு கணபதி சிலைகள் செதுக்கப் பட்டுள்ளன. 11ஆம், 12ஆம் நூற் றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்துக்குரிய கணபதி சிலை ஒன்று 30 அடி உயரமுள்ளதாக அமைக்கப் பட்டுள்ளது. இது வங்காளத்தில் திரிபுரா என்ற இடத்தில் காணப்படுகின்றது. ஹம்பி என்ற இடத்தில் 20 அடி, 30அடி உயரம் கொண்ட இரு கணபதி சிலைகள் காணப் படுகின்றன. எலி பென்றா குகையிலும் இவ்வா றான பிரமாண்டமான சிலை உள்ளது.

திருச்சியில் வல்லம் என்ற இடத்தில் 7ம் நூற்றாண்டுகளுக்குரியவை என்று நம்பப்படும் கணபதியின் புடைப்புச் சிற்பங்கள ' காணப் படுகின்றன. டாக்காவில் 11 அல்லது 12ம் நூற் றாண்டுக்குரிய ஐந்து தலைகள் கொண்ட கணபதி யின் மிக அரிதான வடிவமொன்று காணப் படுகின்றது. இவ்வாறாக கி.பி.5ம் நூற்றாண்டி லிருந்து கணபதியின் பல்வேறு நிலையிலுள்ள சிற்பங்கள் ஓவியங்கள் என்பன இந்தியா முழுமை யும் காணப்பட்டன. இதிலிருந்து அவன் ஒரு பிரதேசத்திற்குரியவனாகவன்றி இந்தியா முழுமையும் வழிபடப்பட்டான் என்பது புலனா கிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கணபதி வழிபாட்டுமுறை ஆரம்ப காலங்களில் இடம்பெறாதபோதும் பல்லவர் காலத்தின் பின் ஓரளவு சிறப்புப் பெறுவதையும் காலப்போக்கில் தமிழ் மக்களது வாழ்வுடன் இரண்டறக் கலப்பதையும் காணலாம். சிறுத்தொண்டராகிய பரஞ்சோதியே தமிழ் நாட்டிற்குக் கணபதி வழிபாட்டை அறிமுகப்படுத்தியதாக பொது வாக நம்பப்படுகிறது. நரசிம்மவர்மன் வாதாபிச் சாளுக்கியரை கி.பி. 7ம் நூற்றாண்டிலே வென்று திரும்பியபோது அவனது சேனாதிபதியாகிய பரஞ்சோதி ஒரு கணபதிசிலையைக் கொண்டு வந்ததாகவும் அச்சிலையைத் தனது சொந்தக் கிராமமான திருச்செங்காட்டங்குடியில் தாபித்து வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது. இத்தகைய கருத்தினை தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கொண்டிருந்தபோதும் (மீனாட்சி சுந்தரனார் தெ.பொ, பிறந்தது எப்படியோ? சென்னை,1971 ப 1-8) தண்ட பாணிதேசிகர் இக் கருத்தினை மறுத்து அதற்கு முன்னரே தமிழ்நாட்டில் விநாயக வழிபாடு இடம்பெற்றுள்ளது என்று கூறியுள்ளார். (தண்டபாணிதேசிகர் கணபதி திருவாவடுதுறை ஆதீனம் 1956) வீரராஜேந்திரன் கல்யாணியைவென்று அங்கிருந்து துவார பாலகரைக் கொண்டுவந்ததற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளதுபோல, பரஞ்சோதி கணபதியைக் கொண்டு வந்ததுக்குக் கல்வெட்டாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அவர் வாதாபியிலிருந்து, பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும் மின்னெவெண்ணிலகவர்ந்தேயிகலரசன் முன் கொணர்ந்தார்" (சிறுத்தொண்டர் புராணம், 6) என்று கூறும் சேக்கிழார் அவற்றுடன் கணபதி சிலையைக்கொண்டு வந்ததைக் குறிப்பிட வில்லை என்பதும் கவனத்திற்குரியது. சம்பந்த ரால் போற்றப்படும் கணபதீச்சரம் அக்காலத்தில் மிகப் பழக்கப்பட்ட பெயர்போல காணப்படுவ தாகவும் பரஞ்சோதி ஏற்கனவே தான் அறிந்த தொரு வழிபாட்டிற்குரிய சிலை ஒன்றையே கொண்டு வருவாரன்றி முற்றிலும் புதிய தொன்றைக்கொண்டு வந்திருக்கமாட்டாரென வும் கூறப்படுகிறது. ஆயினும் பல்லவர் காலத்தின் முன் தமிழ்நாட்டில் கணபதி அறியப்பட்டான் என்பதற்கு எவ்விதமான ஆதாரமும் கிடைக்க வில்லை. அத்துடன் புராணங்களின்மூலம் கணபதி பற்றிய விபரங்களை பரஞ்சோதி அறிந்தி ருந்து வாதாபியில் அவனது சிலைகளைக் கண்ணுற்றபோது அவற்றில் ஒன்றைக் கொண்டு வந்திருக்கலாம் என்று கருதுவதிலும் தவறில்லை. வாதாபியில் கணபதி வழிபடப்பட்டது, ஏற் கனவே நோக்கப்பட்டது. மற்றும் சம்பந்தர் கணபதீச்சரத்தில் கணபதியையன்றிச் சிவனையே போற்றுகின்றார். அங்கு கணபதிசிலை இருந் திருப்பின் அதுபற்றி அவர் குறிப்பிடுவதற்குச் சாத்தியம் அதிகமுண்டு. ஆயினும் சம்பந்தர் தமது வேறுசில தேவாரப் பதிகங்களில் கணபதியைப் போற்றியுள்ளார். மற்றைய நாயன்மாரும் குறிப் பிட்டுள்ளனர். எனவே, இவர்களது பாடல்களில் இடம்பெறும் குறிப்புக்களே தமிழில் கணபதி பற்றியுள்ள நிச்சயமான ஆதாரங்கள் என்று கூறலாம் போலுள்ளது. இத்தேவாரப் பதிகங் களில் கணபதி பற்றியுள்ள குறிப்புக்கள் அவன் "சிவனின் மகன் என்பதையும், யானைமுக முடையவன்" என்பதையுமே பெரிதும் குறிப் பிடுகின்றன எனலாம். சம்பந்தரின் பிடியதனுரு வுமை என்றாரம்பமாகும் பாடலே அவனது பிறப்புப் பற்றியும் விக்கினங்களை நீக்குபவன் என்பது பற்றியும் மேலதிகமான சில விபரங் களைத் தருகின்றது.

தேவார காலத்தின் பின்னர் தமிழ் நாட்டிற் கணபதி பற்றிய கருத்துக்கள் தொடர்ச்சியாக ஆங்காங்கே இலக்கியங்களில் இடம்பெற்றுள் ளன. தேவாரங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் சோழ அரசன் ஈடுபட்டிருந்தபோது திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையாரே அவற் றின் இருப்பிடம்பற்றி நம்பியாண்டார் நம்பிக்கு உணர்வூட்டியவர் என்று நம்பப்படுகின் றது. இவ்விபரத்தை திருமுறை கண்டபுராணம் கூறு கிறது. மேருவின் உச்சியில் தமிழில் பாரதத்தை விநாயகரே எழுதியதாக அருணகிரிநாதர் தனது திருப்புகழில் குறிப்பிடுகின்றார். விநாய கரில் மிகுந்த பக்திபூண்ட ஔவையார், விநாயகர் அகவல் என்ற தனது பாடலில் அனுபூதிநிலை யில் கணபதியைப் போற்றுகின்றார். சகல இலட் சியங்களுடனும் செயற்பாடுகளுடனும் கூடிய யோகசாத்திரங்களின் வடிவாக எவ்வாறு கணபதி உள்ளார் என்பதனை இந்நூல் விளக்குகிறது. கபில தேவரின் மூத்த பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை நெஞ்சையுருக்கும் பக்திப்பாடல் களைக் கொண்டது. இது பதினொராம் திருமுறை யில் இணைக்கப்பட்டுள்ளது. குமரகுருபரரும் துண்டி விநாயகரைப் போற்றிப் பாடியுள்ளார். கி. பி, 8 ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த ஆதி சங்கரர் சண்மதங்களைத் தாபித்ததுடன் கணபதியைப் போற்றி "கணேஷபஞ்சரத்தினம்" என்றழைக்கப் படும். வடமொழியிலமைந்த தோத்திரப் பாடல் களையும் பாடியுள்ளார்.

தமிழ் நாட்டில் முருக வழிபாடு போன்று கணபதி வழிபாடு சிறப்புப் பெறாவிடினும் தமிழ் மக்களது வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ளது எனலாம். எக்காரியத்தையும் கணபதியை வழிப டாது தமிழ் மக்கள் ஆரம்பிக்கமாட்டார்கள். தமிழ் எழுத்தான "ஓம்" விநாயகனது வடிவை ஒத்துள்ளது. அவனது விருப்பத்திற்குகந்த மோதகம் தமிழ் நாட்டிற்கு மட்டுமுரிய தின் பண்டமாகும். "கவவு" என்ற பெயரில் மோதகம் பற்றிய குறிப்புக்கள் மிகப் பண்டைய தமிழ் இலக்கியங்களில் உண்டு. தமிழ் நாட்டிலுள்ள முக்கிய கணபதி கோயிலாகத் திருச்சியிலுள்ள உச்சிப் பிள்ளையார் கோவிலைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய கோயில்களில் பெரும்பாலானவற்றில் கணபதி ஒரு முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளான். காஞ்சிகாமாட்சி கோயிலில் பல்வேறு பெயர்களுடன் பல்வேறு கணபதி வடிவங்கள் காணப்படுகின்றன. தேர் வடிவில் அமைந்துள்ள ராமேஸ்வர சங்கர மண்டபத்தின் எண்கோண வடிவில் அமைந்த மண்டபத்தின் ஒவ்வொரு மூலையிலும் இவ்விரண்டு கணபதிகளாக "சோடச கணபதிகள்" எனப்படும் 16 வடிவங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

கணபதியை உயர் தெய்வமாக வழிபடும் சமயம் காணாபத்தியம் எனப்படும். இப்பெயரில் தமது வழிபாட்டை நிறுவியோர், மற்றையோரிலிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டும் நோக்கத்துடன் தமது நெற்றியில் ஒரு சிவப்பு வட்டமிடுவர். மும்மூர்த்திகளைவிட உயர்ந்தவனாக இவர்களது தோத்திரப்பாடல்களில் கணபதி போற்றப்படுகின்றான். "நீயே பிரம்மா, நீயே விஷ்ணு, நீயே உருத்திரன், நீயே மும்மூர்த்திகளிலும் மேம்பட்டவன். ஓம் கணபதியே உன்னைப் போற்றுகிறோம். இவன் ஒலியின் நுண்ணிய வடிவமாகிய பிரணவத்தின் உருவமாகக் கணிக்கப்படுவதால், ஓங்காரத்தைக் குறிக்கும் எழுத்தினை வடித்து எடுத்தது போன்ற உடலமைப்பைக் கொண்டுள்ளான். இவனது வழிபாட்டில் ஓம் என்ற பிரணவ மந்திரம் முக்கிய இடம்பெற்றுள்ளது. அ, உ, ம் என்ற மூன்றெழுத்தும் இதிலுள்ளன. "அ" பிரம்மாவையும், "உ" விஷ்ணுவையும், "ம்" சிவனையும் குறிப்பதாகக் கருதப்படும். இது சமஸ்கிருத என்ற அடையாளத்தால் குறிக்கப்படும்.

உயர்ந்த பிரமம் எப்போதும் பால் வேறுபாடற்றது. கணபதி தனது வலது தந்தம் உடைந்த நிலையில் வலது பக்கத்தால் பெண்மைக் கோட்பாட்டையும் இடது பக்கத்தால் ஆண்மைக் கோட்பாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறான். இவனது மகாகணபதி வடிவில் ஒரு பகுதியிலுள்ள ஐந்து கரங்களும் விஷ்ணு, சிவன், வராஹ, மன்மதன், கணபதி ஆகியோருக்குரிய ஆயுதங்களை ஏந்த, மறு பக்கத்திலுள்ள ஐந்தும் அவர்களின் துணைவியரின் ஆயுதங்களை ஏந்துகின்றன. இதேபோல மிருகத்தின் முகமும் மனிதனின் உடலும் கொண்டவனாகவும் அமைந்து விளங்குகின்றான்.

கணபதி ஐந்து தொழில்களையும் செய்கின்றான். அவன் ஏந்தியுள்ள பாசம் படைத்தலையும், தந்தம் காத்தலையும், அங்குசம் அழித்தலையும், மோதகம் அருளலையும், துதிக்கை முத்தொழிலையும் குறிக்கிறது. இதற்கு வேறாக முறிந்த தந்தம் சம்ஸாரத்திலிருந்து முற்றிலும் ஒழிந்த நிலையைக் குறிக்கின்றது. மோதகம் பிரமத்தின் பூரணத்தை உருவகமாகக் குறிக்கின்றது. மோதகத்தினுள் இருக்கும் இனிக்கும் பருப்புக்கலவை பூரணம் என்றே அழைக்கப்படுகின்றது. எனவே கணபதி உலகியல் வாழ்வை முறித்து பூரண நிலையடைதலைக் குறித்து நிற்கிறான் என்று கொள்ளலாம்.

கணபதி பிரமாச்சாரிய தெய்வமாகும். அவனது சக்திகளான வல்லபை, நீலசரஸ்வதி, சித்தி பற்றிக் கூறப்பட்ட போதும் அவன் பிரம்மச்சாரி என்பதே பிரபல்யமான கோட்பாடாகும். மூலாதாரத்திற்குத் தலைவனாக இருப்பதால் மூலாதாரத்தில் இணைந்துள்ள சக்தியை வீணாக்குவதை அவனது உபாசனை தடுக்கிறது.

இவ்வாறு உயர்ந்த தெய்வமாக அவன் கூறப்பட்டபோதும் அவனை வழிபடுதல் மிகவும் இலகுவானது. வெல்லம், மஞ்சள், பசுஞ்சாணம் ஆகியவற்றில் ஒன்றின் உருண்டையில் அறுகம் புல் சூட்டி அவனை எங்கும் வழிபடலாம். இது அவனது எளிமையான இயல்பினைக் காட்டுகிறது. தலையின் இரு பக்கங்களிலும் கைகளால் குட்டுதல், தோப்புக்கரணம் போடுதல், தேங்காய் உடைத்தல் ஆகியன அவனை வழிபடும் முறைகளில் முக்கியமானவை. தலையைக் குட்டுதல், தோப்புக்கரணம் போடுதல் ஆகியவற்றால் மனிதனின் ஆத்ம ஞானம் தூண்டப்படுவதாகவும் சிரட்டைபோன்ற ஞானத்தின் தடித்த கோதுகளை உடைப்பதன்மூலம் உணர்வு என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருப்பையும் அறிதல் என்ற இளநீரையும் அருந்த முடியும் என்பதைத் தேங்காய் உடைத்தல் குறிப்ப தாகவும், இவற்றிற்குத் தத்துவ விளக்கம் கூறப்படுகிறது.

கணபதியை அடைதல் மிகவும் இலகுவானது என்பது பூமியிற் கிடைக்கும் மிகச் சாதாரண பொருட்களை அவன் விரும்புவதிலிருந்து நிரூபணமாகிறது. மலர், புல், இலை என்பன அவனது விருப்பத்திற்குகந்தன. ஆகமங்களில் குறிக்கப்பட்டுள்ள 21 இலைகளால் அவனை வழிபாடு செய்வதன் மூலம் 21 பலன்களைப் பெறலாம் என்று கூறப்பட்டுள்ளது. தர்மம், செல்வம், மகிழ்ச்சி, மங்களம், கல்வி, மேம்பாடு, உலகியல், ஆன்மீகப் பலன்கள், அழகு பேராண்மை, வெற்றி, கவரும் சக்தி, கெடு முடிவு அல்லது தோல்வியை நீக்குதல், நல்ல சந்ததி, பலதுறைப் புலமை, புகழ் உள்ளச் சமநிலை, மங்களமல்லாவற்றை அழித்தல், வாதத்திறமை, கோபத்தை சாந்தப்படுத்தும் சக்தி, கெட்ட மந்திரங்களை நீக்குதல், சகல துன்பங்களையும் அழித்தல் ஆகியனவற்றை அவனது வழிபாட்டின் மூலம் பெறலாம்.

கணபதிக்கு குறிப்பிட்ட வடிவம் கொடுக்கப்பட்டுள்ள போதும் அதில் தலைகள், கைகளின் எண்ணிக்கை, கைகளில் ஏந்தியுள்ள அடையாளங்களின் வேறுபாடு, தலை ஆடை அலங்காரங்களின் மாறுபாடுகள் ஆகியவற்றால் அவனுக்குப் பல்வேறு வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன. தியாகங்களில் கணபதி தலையுடன் கூடியவனாகவே போற்றப்படுவான். உடலின் முழு நீளத்தின் 1/5 பாகமாகத் தலை அமைந்திருக்க வேண்டுமென்று கூறப்படுகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு, மூன்று, நான்கு அல்லது ஐந்து தலைகள் உள்ள வடிவங்களும் காணப்படுகின்றன. இரு தலை வடிவங்கள் கணேஷ ஜயந்தி எனப்படும். பம்பாயில் கணேஷ விழாவின்போது இவ்வாறான வடிவம் வழிபடப்படுகின்றது. மூன்று தலையுடன்கூடிய வடிவம் இந்தியாவிற் காணப்படவில்லை. ஆனால் ஜப்பானில் உள்ளது. நான்கு தலையுடன் கூடிய வடிவம் இந்தோசீனாவிலும் ஐந்து தலைகளுடனான கணபதி நேபாளம், இந்தியா ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றது. ஒரு தந்தம் முறிந்து காணப்படும் துதிக்கை, நேராகத் தொங்குவதாக அல்லது வலது பக்கம் நுனியை நோக்கித் திரும்பியதாக அமைதல் வேண்டும். ஆனால் இடதுபுறம் திரும்பி பின்னர் நேரே தொங்குவதற்கும், தோள்வரை உயர்த்தியதற்கும் உதாரணங்கள் உண்டு. இடதுபுறம் திரும்பியிருப்பின் இடது கையிலுள்ள மோதகப் பாத்திரத்திலிருந்து ஒன்றை எடுப்பதுபோலவும் அமைந்திருக்கும். பொதுவாக இரு கண்களே காணப்படும். ஆனால் சில வடிவங்கள் மூன்றாவது கண்ணை நெற்றியில் கொண்டு அமைந்திருக்கும். இது நீண்டு மெல்லிதாக அக்கினி வடிவமுள்ளதாக அதிக புடைப் புள்ள தாகக் காணப்படும். தலையானையின் தலை போல அமைந்திருக்கும். ஆனால் காஷ்மீரி லும், நேபாளத்திலும் நீண்ட மெல்லிய தட்டை யான முகமாகவிருக்கும். ஜாவாவில் மனித அம்சம் அதிகம்கொண்ட முகமாகவுள்ளது. காதுகள் பெரியனவாகவும் அகலமானவை யாகவும் அமையவேண்டும். கணபதியின் வழமையான தலையலங்காரம் கரண்ட மகுடத்தைத் தரிப்ப தாகும்.

கணபதி வழிபடப்படும் வடிவங்களில் இரண்டு அல்லது நான்கு கரங்கள் கொண்டிருப்பான். ஆனால் அவனது சிக்கல் நிறைந்த சில வடிவங்களில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட கரங்கள் காணப்படும். இக் கரங்களில் இவனுக்கே மட்டும் உரியனவான உடைந்த தந்தம், நாரத்தம் பழம், ஜம்பு, எழுது கருவி, முள்ளங்கி, தின்பண்டம் நிறைந்த பாத்திரம், ஒரு மோதகம் ஆகியவற்றுள் சிலவற்றை ஏந்தியிருப்பான். ஆனால் அவன் மழு, புத்தகம், வாள், பாம்பு, பாசம் ஆகியவற்றையும் ஏந்தலாம். அவனது வயிறு மிகப் பரந்த அண்டவெளியையும், பிரபஞ்சத்திலுள்ள சகல மனித உயிரையும் குறிக்கும். ஆயிரக்கணக்கான மோதகங்களைக் கொள்ள ஏற்றது என்பதை உருவக ரீதியாகக் குறிக்கும் வகையில் மிகப் பெரியதாக அமைந்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி வழமையாக அமர்ந்திருக்கும் நிலையிலேயே சித்தரிக்கப்படுவான். அவ்வாறா யின் "மஹாராஜலீலா" எனப்படும் செயலோய்வு நிலையில் வலது முழந்தாள் உயர்த்தப்பட்டு, மற்றது ஆசனத்தில் உடலுக்குச் சமாந்திரமாக வைக்கப்பட்டுக் காணப்படும். நிற்கும் நிலையி லாயின், நேராகவோ அல்லது இரு வளைவுகள் உள்ளதாகவோ, மூன்று வளைவுகள் உள்ள தாகவோ அல்லது நடனமாடும் நிலையிலோ காணப்படுவான். பொதுவாகப் பல அணிகலன் கள் அணிந்த நிலையிற் காணப்பட்டபோதும் சிலவற்றில் அணிகலன்களின்றிக் காணப்படு வான். சிலவற்றில் இவற்றிற்குப் பதிலாகப் பாம்புகள் அல்லது மண்டையோடுகள் இடம் பெறும். இடுப்புக்கு மேலே வெறுமையாகவும் கீழே உள்ள ஆடை இடுப்புப் பட்டியால் கட்டப் பட்டும் காணப்படும். ஆடை இடத்திற்கு இடம் மாறுபடும். இந்தியாவில் வேட்டியும், சீனத் துருக்கியில் பிஜாமாவும், நேபாளத்தில் விறைத்த சுருக்கப்பட்ட ஆடையும் அணிந்திருப்பான்.

இவ்வாறான அவனது பொதுவான வடிவம் அமைந்துள்ள போதும் இவற்றில் ஏற்படும் சிற்சில மாற்றங்களினால் அவன் பல்வேறு பெயர் களைப் பெறுகிறான். கி. பி. 20ம் நூற்றாண்டில் காணபத்தியம் தாபிக்கப்பட்டபோது அவர்கள் வழிபடும் கணபதியின் வடிவம், நிறம், மந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் 6 பிரிவாகப் பிரித்தனர். சிவந்த நிறமுடைய உச்சிஷ்ட கணபதியை வழிபடுபவர் ஒரு பிரிவினர், மற்றவர் சிவப்பு நிறமுடைய மகாகணபதியையும், அடுத்த வர் மஞ்சள் நிறமுடைய ஊர்த்வ கணபதியையம், 5 வது பிரிவினர் மஞ்சள்நிறமுடைய பிங்கள கணபதியையும், 6 வது பிரிவினர் வெள்ளை நிறமுடைய லஷ்மி கணபதியையும் வழிபடுபவர். அவர்கள் அனைவரும் கணபதியை வழிபடும் 2 வழிகளை உருவாக்கினர். அவற்றில் ஒன்று அனுபூதி நிறைந்த தியானத்தால் வழிபடும் முறை, மற்றது தியானமின்றி பக்தி பூர்வமான நடை முறைகளால் வழிபடும் முறை.

கணபதிக்குப் பல்வேறு வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன. 4 யுகங்களுக்கும் 4 வெவ் வேறு வடிவங்களை அவன் ஏற்பதாக நம்பப்படு கின்றது. கிருத யுகத்தில் சிங்கத்தை வாகனமாகக் கொண்டு 10 கரங்களுடன் கூடியவனாக விநாயகன் என்ற பெயரிலும், திரேதா யுகத்தில் மயிலை வாகனமாகக் கொண்டு 6 கரங்களுடன் தூய வெள்ளை நிறத்தில் மயூரேசன் என்ற பெயரிலும், துவாபரயுகத்தில் சிவந்த நிறமுடைய வராக 4 கைகளுடன் எலியை வாகனமாகக் கொண்டு கஜானனன் என்ற பெயரிலும், கலியுகத்தில் புகை நிறமும் 2 கரங்களுமுடையவ ராய் குதிரையை வாகனமாகக் கொண்டு தூமகேது என்ற பெயரிலும் தோன்றுவார் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. கணபதிக்கு 51 வடிவங்கள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ள போதும் முதல் 32 வடிவங்களே முக்கியமானவை.

அவை வருமாறு:

1. பால கணபதி
2. தருண கணபதி
3. பக்த கணபதி
4. வீர கணபதி
5. சக்தி கணபதி
6. த்வஜ கணபதி
7. சித்தி அல்லது பிங்கள கணபதி
8. உச்சிஷ்ட கணபதி
9. விக்னராஜ கணபதி
10. ஷிப்ர கணபதி
11. ஹேரம்ப கணபதி
12. லக்ஷ்மி கணபதி
13. மகா கணபதி
14. விஜய அல்லது புவனேச கணபதி
15. நிருத்த கணபதி
16. ஊர்த்வ கணபதி
17. ஏகாக்ஷ்ர கணபதி
18. வர கணபதி
19. த்ரியக்ஷ்ர கணபதி
20. க்ஷிப்ர பிரசாத கணபதி
21. ஹரித்ர கணபதி
22. ஏகதந்த கணபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ஸ்ருஷ்டி கணபதி
24. உத்தாந்த கணபதி
25. ரிணமோக்ஷ் கணபதி
26. த்விமுக கணபதி
27. த்ரிமுக கணபதி
28. சிம்ஹ கணபதி
29. யோக கணபதி
30. துர்க்கா கணபதி
31. சங்கடஹர கணபதி

இவற்றுள் முதல் 16 வடிவங்களுமே முக்கியம் வாய்ந்தவை. இவை சோடஸ கணபதி எனப்படுகின்றன. பொதுவாக அவனுக்குப் பல்வேறு பெயர்களும் வழங்கப்படுகின்றன. கணங்களின் தலைவன் அல்லது வழியினதும் முடிவினதும் தலைவன் என்று பொருள்படும். கணபதி, மேலான தலைவன் என்று கருதப்படும். விநாயகன் தடைகளின் தெய்வம் என்பதால் விக்கினேஸ்வரன், திருகப்பட்ட துதிக்கையுடைய தால் வக்ரதுண்டன், யானைமுகம் கொண்டதால் கஜானனன், முழு வயிறுடையவன் என்பதால் லம்போதரன், ஒரு தந்தம் உடையவனாதலால் ஏகதந்தன், பாதுகாப்பவன் என்பதால் ஹேரம் பன், இருவிதமான உடலுடையவனாதலால் த்விதேஹ என்று அழைக்கப்படுகின்றான். அவனது வழிபாட்டில் இப் பெயர்கள் முக்கியம் வாய்ந்தவை.

இக்கணபதி வழிபாடு இந்தியாவில் மட்டுமன்றித் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றி லும் செல்வாக்குப் பெற்றது. ஜப்பான், சீனா ஆகிய நாடுகளில் கணபதியின் இருவிதமான வடிவங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று இந்தியாவிற் காணப்படுவதைப் போன்றது. மற்றைய வடிவில் எதிரெதிராக ஒன்றையொன்று பார்த்தபடி நிற்கும் இரு யானைத் தலைத் தெய்வங்கள் காணப்படுகின்றன. ஜப்பானியர் இத்தெய்வங்களை நல்லதிஷ்டத்துடனும் காதலு டனும் தொடர்புபடுத்துகின்றனர். அவர்கள் அதனைக் கொன்கிடென் என்று அழைக்கின்ற னர். 13 ஆம் நூற்றாண்டின் பின்யாவாவில் மக்கள் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றத் தொடங்கிய போதும் கணேசன் தனக்குரிய செல்வாக்கை இழக்கவில்லை. இங்கு காணப் படும் இருக்கும் நிலையில் உள்ள கணபதியின் அமைதி சமாதியில் உள்ள மனிதனின் நிலையைப் பிரதிநிதித்துவப் படுத்தகிறது. இந்தியாவில் அவனுடன் இணைந் துள்ள பானைவயிற்றை யாவாவிலுள்ள கணபதி வடிவங்களில் காணுதல் முடியாது.

கணபதி வழிபாடு இலங்கையில் வைதீக சமயத்தினூடாகவும் பௌத்த சமயத்தினூ டாகவும் பரவியது. மிஹிந்தலைக்கு அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட சிற்பங்களில் யானை முகத்துடன்கூடிய ஓர் உருவம் இடம்பெற் றுள்ளது. கண்டாக சைத்தியத்தில் "வாகல்கட" எனப்படும் வாசற்புறத் தூணிற் காணப்படும் கணங்களைக் குறிக்கும் சிறபங்களிடையே இது காணப்பட்டது. இத்தூபி கிறிஸ்து சகாப்தத்தை ஒட்டிக் கட்டப்பட்டதாக அதிலுள்ள கல்வெட் டுக்களிலிருந்து தெரியவந்துள்ளது. சிற்பங்கள் பிந்தியதாயினும் கி. பி. 1ஆம் நூற்றாண்டுக் குரியதாகலாம். 1938ஆம் ஆண்டுவரை அநுராத புரத்தில் வெள்ளரச மரத்திற்கு முன்னால் காணப்பட்ட கணபதிசிலைக்கு பௌத்தர்கள் பாற்சோறு படைத்து வழிபட்டு வந்தமை குறிப் பிடத்தக்கது. (Navaratnam C. S. A Short History of Hinduism in Ceylon, Jaffna 1964 P. 71) இது மிக அண்மைக் காலம்வரை பௌத்தத்துடன் இவ்வழி பாடுகொண்ட தொடர்பைச் சுட்டி நிற்கிறது எனலாம்.

சிவமுருக வழிபாடுகளைக் குறிக்கும் பெயர்கள் காணப்பட்டதைப் போன்று கணபதி வழிபாட்டைக்குறிக்கும் பெயர்கள் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்படாமை யால் இவ்வழிபாடு பிற்பட்ட காலத்திலேயே அதிக செல்வாக்குப் பெற்றுள்ளது என்பது புலனாகிறது. அநுராதபுரக் காலத்திலே சிறப்பாக நகரின் வடபகுதியிற் பல இந்து ஆலயங்கள் காணப்பட்டதாகத் தொல்பொருட் சான்றுகள் சுட்டுகின்றன. அவற்றில் கணபதிக்குரிய கோவி லொன்று பாவற்குளத்திற்கு வடக்கே குளத்தின் மடைக்கு அருகே கல் அடித்தளத்தில் அமைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்ததாகத் தெரிய வருகிறது. (இந்திரபாலா கா. ஆதி இலங்கையில் இந்துமதம், வைரவிழா நினைவு நிலை ஐயரத்தினம் உருவச்சிலை திறப்பு விழாச் சிறப்பு மலர், தெல்லிப்பளை 1978 பக் 20) வன்னிப் பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் விநாயகர் கோயிலுக்குரிய அழிபாடுகள் காணப் பட்டன.

கி. பி. 15 ஆம் நூற்றாண்டிலே தேவிநுவர வீவாவில் ஒரு விநாயகராலயம் அமைக்கப்பட்ட தற்குச் சான்றுகளுண்டு. யாழ்ப்பாண மன்னர் காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் பல முக்கிய கணபதி கோயில்கள் காணப்பட்டன. இவற்றுள் நல்லூரிலுள்ள வெய்யிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாச பிள்ளையார் கோயில், மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் என்பன முக்கியமானவை. இவை அந்நியரின் ஆதிக்கத் தில் அழிக்கப்பட்டபோதும் பின்னர் கட்டப் பட்டு இன்றும் சிறப்புடன் விளங்குகின்றன. இவற்றுடன் மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளை யார் கோயில், முறிகண்டி விநாயகர் ஆலயம் ஆகியன சிறப்பு மிகுந்தவை.

இக் கோயில்களைவிட 12 ஆம் நூற் றாண்டிற் கருணாகரத் தொண்டமானால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் கருணாகரப் பிள்ளையார் கோயில், 15 ஆம் நூற்றாண்டில் 6ஆம் பரராஜசேகரனால் கட்டுவிக்கப்பட்ட பல விநாயகராலயங்களுள் திருநெல்வேலியிலுள்ள தலங்காவற்பிள்ளையார் கோயில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் என்பனவும் சிறப்புடையன. வெய்யி லுகந்த பிள்ளையார், கைலாயபிள்ளையார் கோயில்களும் இவனாலே கட்டப்பட்டன. இவற்றைவிட நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார், சுழிபுரம் பறாளை விநாயகர் கோயிலும் சிறப்பு வாய்ந்த விநாயகர் கோயில்களாகும்.

இவற்றை விடச் சிறிதும் பெரிதுமாகப் பல பிள்ளையார் கோயில்கள் இப்போது காணப் படுகின்றன. சித்திவிநாயகர் என்ற பெயரில் குரும்பசிட்டி, பருத்தித்தித்துறை, புன்னாலைக் கட்டுவன், புற்றளை, கல்லடி, உப்போடை, வேலணை கிழக்கு, நோர்வூட், மன்னார் உப்புக் குளம் போன்ற இடங்களிலும், கற்பகப்பிள்ளை யார் என்ற பெயரில் காரைநகர், பன்னாலை, வரணி, ஊரெழு, கோப்பாய் போன்ற இடங் களிலும், வீரகத்தி விநாயகர் என்ற பெயரில் விடத்தற்பளை, வில்லூன்றி, கரம்பன், புங்குடு தீவு, நல்லூர் ஆகிய இடங்களிலும் மகாகணபதி என்ற பெயரில் அளவெட்டி, கோண்டாவில், வேலணை மேற்கு ஆகிய ஊர்களிலும் உடுவில், சங்குவேலி ஆகிய இடங்களில் சிவஞானப் பிள்ளையார் என்ற பெயரிலும் விநாயகர் கோயில் கள் காணப்படுகின்றன. ஊரின் பெயருடன் இணைந்தும் பல கோயில்கள் காணப்படுகின்றன. இவ்வாறு எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படும் கோயில்கள் விநாயகர் வழிபாடு தற்போது இலங்கையிற் பெற்றுள்ள செல் வாக்கையே குறித்து நிற்கின்றன எனலாம்.

பௌத்தத்திலும் கணபதி வழிபாடு செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இம்மதத்தி னூடாக இவ்வழிபாடு இலங்கை, சீயம், கம்போடியா, நேபாளம், திபெத், வியட்னாம், சீனா, ஜப்பான், போன்ற நாடுகளில் பரவியுள்ளது. "கணபதி ஹ்ருதயம்" எனப்படும் கணபதியைப் புகழும் மந்திரம் ராஜகிருகத்திஹ் புத்தரால் ஆனந்தவுக்குப் போதிக்கப்பட்டதாக பௌத்தர்க ளால் நம்பப்படுகிறது. அவர்கள் மந்திரத்திற்கு மனிதவுரு கொடுத்துக் "கணபதி ஹ்ருதயா" என்ற பெண் தெய்வத்தின் வடிவமாகக் கருதுகின்றனர். அதனைப் பெரும்பாலும் கணேஷனின் சக்தி யாகவே அவர்கள் கருதுவதாக பட்டாச்சாரியா என்பவர் கருதுகிறார். (Bhattacharya. Indian Buddhist Iconography London 1924 P. 157) இம்மந்திரம் அவனது வழிபாட்டிற் பயன்படுத்த வேண்டிய சாதனையையும் கொண்டுள்ளது. அதில் அவன் சிவப்பு நிறமுடையவனாகவும் நடனநிலையில் நிற்பவனாகவும் 11 கரங்களும் அவற்றிற் தந்திரச் சின்னங்களை ஏந்தியவனாகவும் இரண்டு தந்தங்கள், மூன்றாவது கண் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைக் கொண்டவனாகவும் கருதப்படுகின்றான். பௌத்தத்தில் பௌத்த தெய்வமாக மட்டுமன்றி கணபதி இந்து அசுரனாகவும் நோக்கப் படுவதைக் காணலாம்.

இவ்வாறாக இந்தியாவிற் தோன்றி வளர்ந்த கணபதி வழிபாட்டு நெறி இந்தியாவில் மட்டுமன்றி வேறும் பல்வேறு நாடுகளிலும் பரவியது. இந்தியாவைப் பொறுத்த வரையில் இது தனியான வழிபாட்டு நெறியாக ஏனைய முக்கிய வழிபாட்டு நெறிகளான சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம் போன்று அதிக சிறப்பும் பிரபல்யமும் பெறாத போதும், எல்லாப் பிரிவுகளுடனும் கலந்து மக்களின் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்று கூறுவதில் தவறில்லை. அவனை வழிபடாது எக்கிரியையோ, வழிபாடோ, காரியமோ ஆரம்பமாகாது. மஹா நிர்வாண தந்திரத்தின்படி கணேஷனை முதலில் வழிபடாது "பிரஹமா காயத்திரி" என்ற ஒரு மந்திரமே உச்சரிக்கப் படலாம். எனவே அனைத்தும் அவனது வழி பாட்டின்றித் தொடங்காது. அவன் இடையூறுகளை வழங்குபவனும் தீர்ப்பவனும் என்பதாலேயே இவ்வாறு வழிபடப்படுகிறான்போலும்.

### உசாவியவை:


1. Alice Getty, Ganesa Oxford University Press, 1936.
2. Nadarajan S., Vinayaka abroad and his rare forms Sankara and Shanmata, Madras, 1969.
3. Ramasubramaniam V., The origin and development of Ganapatyam, Sankara an. Shanmata, Madras, 1969.
4. Sankara Kinkara, Ganapathy, Sankara and Sanmada, Madras - 1969.
5. *தண்டபாணிதேசிகர் ச., கணபதி திருவாவடுதுறை, ஆதீனம் -1956.*
6. *மகாதேவன், ரி.எம். பி., காணாபத்திய நெறி: இந்து சமயத் தத்துவம், சென்னை -1964, பக், 166-171.*
7. *சிவசாமி வி., "காணாபத்தியம்" வரலாறும் சிறப்பும்: கற்பக விநாயகன், குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகராலய புனராவர்த்தன கும்பாபிஷேக, சங்காபிஷேக மலர் -1973 பக், 23-31.*


**நன்றி:** புங்குடுதீவு - ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மகா கும்பாபிஷேக மலர் / வேலணை மேற்கு மகாகணபதிப் பிள்ளையார் ஆலயம் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் 11.04.1990.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையாரின் மகத்துவம்

பேராசிரியர் வி. சிவசாமி

ஆதிகாலம்தொட்டு மனிதன் தன்னைப் பற்றியும், பிற மனிதர், பிராணிகள், தான் வாழ்ந்த சூழல் பற்றியும் ஏதோ வகையிற் சிந்தித்துத் தொடர்புகொண்டு வந்துள்ளான். இயற்கை அமிசங்களான வானம், சூரியன், சந்திரன் நக்ஷத்திரங்கள், இடி, மின்னல், பூமி, மலை, கடல், ஆறு, காடுகள் முதலியனவற்றை வியப்புட னும், அச்சத்துடனும் முதலிலே பார்த்தான். பின்னர் அவற்றைத் தெய்வங்களாக உருவகித்து, வழி பட்டு, இவ் இயற்கை அமிசங்களை மகிழ் வித்துத் தனது அபிலாஷைகளை நிறைவேற்ற முயன்றான். காலப்போக்கில், இவற்றிற்கு அப்பாலும் ஒரு பெரிய சக்தி / பரம்பொருள் கடவுள் இருப்பதாக உணரத்தொடங்கினான். உலகின் பல பாகங் களிலும் வெவ்வேறு காலங்களில் இத்தகைய உணர்வு தோன்றச் சமயங்களும், வழிபாட்டு முறைகளும் தோன்றின. அந்நாடுகளின் தட்ப வெப்பநிலை, சமூக நிலை முதலியவற்றிற்கு ஏற்பச் சமயங்கள் உருவாகின. தென்னாசியாவிலே (இன்றைய இந்தியக் குடியரசு, பாக்கிஸ்தான், வங்களாதேசம், நேபாளம், இலங்கை முதலியன) தோன்றிய சமயங்களில் இந்து சமயமே மிகப் பழமை வாய்ந்ததாகும்.

இந் நாடுகளிலே தொன்றுதொட்டுத் தொடர்ந்து வளர்ந்து நிலவிவரும் இந்து சமய வாழிபாடு, தத்துவ முறைகளிற் பல தெய்வ வழிபாடு, பல தரிசனங்கள் நிலவிவந்தாலும் அடிப்படையில் அவை அனைத்தும் ஒரே தெய்வ வணக்கத்தினை உள்ளடக்கியவையே. இக்கருத்தினை இருக்கு வேதம் "உண்மைப் பொருள் ஒன்றே" ஞானிகள் இதனைப் பலவாறு கூறுவர் (ஏகம் ஸத்விராபஹூ தாவதந்தி) எனவும், முக்கியமான சைவசித்தாந்த நூல்களில் ஒன்றான சிவஞானசித்தியார் "யாதொருதெய்வம் கொண் டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம்வருவார்" எனவும் ஆணித்தரமாகக் கூறி யுள்ளன.

இந்து சமயத்திலே கடவுளை அருவம், அருவுருவம், உருவமாக வழிபடும் முறைகள் உள்ளன. சாதாரணமக்கள் உருவவழிபாட்டின் மூலமே பரம்பொருளை எளிதில் விளங்கிக் கொள்வர். இறைவனை எப்பெயராலழைத்தாலும் அவரை அருவமாகவோ உருவமாகவோ, அருவுருவ மாகவோ (லிங்கத் திருவுரு வம்) வழிபட்டு உய்தி பெறு வர். பெரும் பாலான மக்க ளுக்கு உருவ வழி பாடே உகந்ததாக அமைந்துள்ளது. எனவே, குணம், குறி, உருவம் இல்லாத பரம் பொருளுக்கு உருவங்களும் குணங்களும் ஞானிகளால் கூறப்பட்டுள்ளன. இதனால் இறைவனுக்குப் பலபெயர் களும், சிறப்புகளும் கூறப் படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமயத் தெய்வங்கள் பலர் ஒரே குடும்பத்தை - சிவகுடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே போற்றப்படுகின்றனர். சிவபெருமானுடைய சக்தியாக மனைவியாகப் பார்வதி விளங்குகின்றார். பிள்ளையார் அல்லது விநாயகர் அவர்களுடைய மூத்ததிருக்குமாரனாகவும், முருகன் இளைய திருக்குமாரனாகவும், திருமால் சக்தியினுடைய மூத்த சகோதரனாகவும் மிளிர்கின்றனர். மேலும் வைரவர், வீரபத்திரர், ஐயனார் ஆகியோரும் சிவபிரானின் திருக்குமாரர்களாகவே கூறப்படுகின்றனர். ஒரே பரம்பொருளாகிய சிவபெருமானே உலகின் நன்மைக்காக பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பல்வேறு காலகட்டங்களிலே பல்வேறு திருவடிவங்களைத் தாங்கி வந்துள்ளார். தீமைகளைக் களைந்து, நன்மையையும் அறத்தினையும் நிலை நாட்டுவதற்காகவே இறைவன் பல திருக்கோலங்களை மேற்கொண்டுள்ளார். ஆகவே ஒவ்வொரு திருவுருவத்திற்கும் குறியீடான கருத்துக்களுக்கும் தத்துவார்த்த விளக்கங்களும் உள்ளன. இக் கட்டுரையிலே பிள்ளையார் அல்லது கணேசரின் மகத்துவம் பற்றி சுருக்கமாக கூறப்படும் கணேசர் அவர்களுடைய செல்லப்பிள்ளை. பொதுவாக மூத்த பிள்ளையிலேயே கூடுதலான விருப்பம் ஏற்படுவது இயல்பே. அவர்களுடைய இல்லற வாழ்வில் முதல் அன்பின் பெறுபேறான மூத்த பிள்ளையில் இத்தகைய விருப்பம் ஏற்படலாம். மேலும் குடும்பத்திலே பெற்றோருக்கு அடுத்த நிலையில் முக்கியத்துவம் பெறுபவரும் இவரே. இவற்றை விட பிள்ளையாரின் திருக்கோலமும் அதாவது அவரது புஷ்டியான அழகிய தோற்றமும் குறிப் பிடத்தக்கது. அவருக்குரிய பெயர்களில் ஹேரம்ப, (தமிழில் ஏரம்ப) என்பதுதாயின் செல்லப் பிள்ளை எனவும் பொருள்படும். அவர் தன் பெற்றோருக்கு மட்டுமன்றி, அன்பர்களினது செல்லப்பிள்ளையாகவும் விளங்குகின்றார். இந்து சமய மரபிலே மமுருகப்பெருமானை மட்டுமன்றி பிள்ளையாரையும் குழந்தைத் தெய்வமாகவும் (பால கணேச) பாவனை செய்யும் மரபு உள்ளது. சிவபெருமானின் கணங்களுக்கு தலைவராக கணநாதகணபதி, கணேச, கணேஸ்வர எனவும் இவர் அழைக்கப்படுகிறார்.

இவருக்குரிய பெயர்களிலே தனக்கு மேலான ஒரு தலைவன் இல்லாதவன் எனப் பொருள்படும். "விநாயகர்" என்பது நன்கு குறிப் பிடற்பாலது. இவர் இறைவனின் திருவடிவங்கள் அனைத்திற்கும் முதன்மை வாய்ந்தவர். அனாதி யான பரம்பொருளாக; ஆதி, அந்தம் அற்றவர். எவருக்கும் ஏற்படக்கூடிய இடையூறுகளின் தலைவனாகவும் (விக்னேஸ்வர, விக்னராஜ) அவற்றை நீக்குபவனாகவும் திகழ்கின்றார். இந்த வகையில் எக்காரியத்தை எவர் செய்யினும் அதற்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை நீக்கும் வண்ணம் முதலில் விநாயகரே வணங்கப் படுகின்றார். எனவேதான், இந்து சமயக் கிரிகைகளின் தொடக்கத்தில் "சுக்லாம்பரதம் விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம், பிரஸன்ன வதனம் த்யாயே, ஸர்வவிக்னோப சாந்தயே" (இடையூறுகள் அனைத்தும் நீங்கும் வண்ணம் வெண்ணிற ஆடை தரித்தவரும் எங்கும் நிறைந்திருப்பவரும், சந்திரன் போன்ற (வெண்) நிறமுடையவரும் நான்கு திருப்புயங்களை உடையவரும், மகிழ்ச்சி பொங்கும் இனிய திருமுகத்தையுடையவருமான விநாயகப்பொரு மானைத் தியானிக்கின்றேன்). எனும் சுலோகம் இடம்பெறுதல் நன்கு கவனித்தற்பாலது.

அனைத்திற்கும் மூல காரணமாக விளங்கும் விநாயகப் பெருமானின் பெருமை களையும் உயிர்களிடத்து அவர் கொண்டுள்ள இயல்பான அன்பு பற்றியும் வடமொழியிலுள்ள இதிஹாஸங் கள், புராணங்கள், தோத்திரங்கள் முதலியனவும், தமிழிலும் மற்றும் இந்திய மொழிகளிலும் உள்ள பக்தி பாடல்களும் பிறவும் குறிப்பிடுகின்றன.

கணேசருக்கான காயத்திரீ மந்திரம்

*"தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி*
*தந்நோதந்தி ப்ரசோதயாத்"*

எனத் தைத்திரீய ஆரணியகத்தில் வந்துள்ளது.

இவரின் திருவவதாரம் பற்றிப் பல கதைகள் உள்ளன. அவற்றுள் ஒரு முக்கியமான கதையின் படி யானை முகத்தினையுடையவனும், உலகத் தினைத் துன்புறுத்தியவனுமான கஜாசுரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குவதற்காகவே இவர் திருவவதாரம் செய்தார் என்பதாகும். தம்மை எதிர்த்து கடும் போர் செய்த யானைமுகத்தை உடைய கஜாசுரனை அவர் கொன்றிலர். அவனுடைய கருவத் தினை அடக்கி அருள் புரிந்து தமது ஊர்தியாக்கினார். ஆன்மாக் களை பந்தித்துள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் உருவமாகவே அசுரர் கூறப்படுகின்றனர். எனவே இறைவன் அவற்றின் மலங்களை நீக்கி சத்திநிபாதம் (ஆன்மாமீது திருவருள் விழுதல்,திருவருள் பாலித்து) ஏற்படச் செய்கிறான் எனும் கருத்தே குறியீடாக இக் கதை மூலமாக புலப்படுத்தப் படுகின்றது. அறியாமை யாலே தன்னை எதிர்த்த அசுரனை அழிக்காது அவன் மீது இரக்கம் கொண்டு, அசுரத்தன் மையை நீக்கி அவனுக்கு அருள்பாலித்தார் என்பது குறிப்பிடற்பாலது. இறைவன் எந்த கொடியவனையும் அழிக்காது அவனை செம்மைப் படுத்திச் சீராக்குவார். ஆன்மாக்களுக்குத் தந்தை, தாய்போன்ற இறைவன் எப்பொழுதும் பிள்ளை களிடத்தே பெற்றோரைப்போல எல்லையற்ற இரக்கம் உடையவராகவே இலங்குகிறார்.

வேதங்களின் சாரமாகவும், முடிவாகவும் உள்ள ஓங்காரத்தின் (பிரணவத்தின்) வடிவ மாகவே விநாயகப்பொருமான் விளங்குகின்றார். பிரணவத்தின் தனிச் சிறப்பினை கடோபநிஷத் "எல்லா வேதங்களும் எப்பதத்தினை அடையத் தகுந்ததாகப் பரமதாற்பரியத்துடன் உபதேசிக் கின்றனவோ, தவங்கள் யாவும் எதை உத்தேசித் தது எனக் கூறுகின்றனவோ, எதனை விரும்பி பிரம்மசரியத்தைப் பின்பற்றுகிறார்களோ, அதனைச் சுருக்கமாகக் கூறுவேன் அதுவே ஓங்காரமாகும்" என யமன் நசிகேதனுக்குக் உபதேசித்ததாகக் கூறுகின்றது. இந்து சமய கிரிகைகளிலும், புனித நூல்களைப் படிக்கும்போதும் தொடக்கத்திலும், முடிவிலும் "ஓம்" கூறப்படும். ஏற்கனவே குறிப் பிட்டவாறு துதிக்கையுடன்கூடிய விநாயகரின் திருவுருவம் ஓங்காரத்தையே குறிக்கின்றது. ஓங்காரத்திலுள்ள அகாரம், உகாரம், மகாரம் (அ,உ,ம்) ஆகிய மூன்று ஒலிகளும் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்தி களையும் குறிக்கும் என்பர். எனவே விநாயகர் மும்மூர்த்திகளின் வடிவமாகவே விளங்குகிறார். மேலும் பிள்ளை யார் சுழியிலுள்ள (உ) வட்டமும் நீட்டமும் உலகத் தோற்றத்திற்கு காரணமான பிந்துவையும், நாதத்தையும் சுட்டும் என்பர். மேலும் இறைவன்! இறைவிக்குச் செய்யப்படும் தூப, தீப ஆராதனைகளும் ஓங்கார வடிவப் பாவனையில் அமைந்து விளங்கும்.

விநாயகப் பெருமானின் திருவுடம்பில் உலகிலுள்ள அனைத்தும் உள்ளன என்பதை திருமுருக கிருபானந்தவாரியார் "விநாயகரு டைய திருமேனி இடையின் கீழே பூதவுடம்பு, இடைக்கு மேல் கழுத்துவரை தேவ உடம்பு, தலை மிருகத்தலை, ஒரு கொம்பு ஆண் தன்மை, கொம்பில்லாத பகுதி பெண்தன்மை, யானைத் தலை அஃறிணை, தெய்வ சரீரம், உயர்திணை இவ்வாறு எல்லாம் ஆய திருவுருவம் விநாயகரது வடிவம், பூதமாய், தேவராய், விலங்காய்,



ஆணாய், பெண்ணாய், உயர் திணையாய், அஃறிணையாய் எல்லாமாய் விளங்குவர் விநாயகர்" எனக் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு கவனித்தற்பாலது.

விநாயகரைப் பற்றி வடமொழியிலுள்ள செய்யுள் ஒன்றின்படி அனைத்திற்கும் மூலப் பொருளாக விளங்கும் பரம்பொருளாகிய விநாய கரின் திருவுருவத்திலே நாபி : பிரமா, முகம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால், கண்: உருத்திரன், இடது பாகம்: சக்தி, வலதுபாகம் : சூரியன் (அவ்யாகிருதப்ரஹ மனோ கணேசஸ்ய சரீரே நாபிர்ரஹ்மா முகம் விஷ்ணு நேத்ரம் ருத்ரஹ வாமபாகச்சக்திர் தக்ஷிணம் சூர்யஹ ஆத்மஸ்திதாமயஹ) எனக் கூறப்படு கின்றது. இதிலிருந்து விநாயகரே தெய்வங்கள் அனைவரினதும் திருவுருவமாக விளங்குகிறார் என்பது புலப்படும்.

இப்பெருமானின் திருவுருவங்கள் 16,32,51 எனப் பல வகைப்படும். எனினும் பொதுவாகக் காணப்படும் திருவுருவம் ஒன்றிலே பக்தி விநாயகத் திருவடிவம் வலது பக்கத்திலுள்ள இரு திருக்கரங்களிலும் அங்குசமும் (அபயமாகவுள்ள திருக்கரத் திலே) ஒடித்த கொம்பும், இடது பக்கத் திலுள்ள திருக்கரங்களிலே பாசமும் மோதகமும் (அல்லது லட்டு, கனி) காணப்படும். இக் கரங்களுக்கு இடையிலே துதிக்கை விளங்கும். எனவே அவர் ஐங்கரனாக, ஓங்கார வடிவினராக இலங்குகின்றார். அங்குசம் தீமைகளை அழிப் பதைக் குறிக்கும் மோதகம் (லட்டு, கனி) இனிமையாக இருப்பதால் இது பேரின்பத்தைக் குறிக்கும் எனவும் கருதப்படுகின்றது. ஒருசாரார் இது பிரபஞ்சத்தைக் குறிக்கும் என்பர். வேறு சிலர் இது அமிர்த கலசம் எனக் கூறுவர். பாசம் தீயனவற்றைத் தடுக்கும், அபயமாகவுள்ள திருக் கரத்திலுள்ள ஒடிந்த மருப்பு வியாசரின் வேண்டு கோளின்படி மகாபாரதத்தை எழுதுவதற்கு விநாயகர் தமது ஒரு கொம்பினை ஒடித்து எழுதுகோலாக பயன்படுத்தியமையை நினை வூட்டுமெனக் கூறப்படுகின்றது. இது மட்டுமன்றி கஜாசுரனை வெல்லுவதற்கும் இது பயன்படுத்தப் பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இறைவன் தம்முடைய அன்பருக்கு எதையும் செய்யத் தயங்கமாட்டார் என்பதையே இது சுட்டும். மேலும் பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும், ஒற்றைக்கொம்பு காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளுதலையும் குறிக்கும் எனவும் ஒரு சாரார் கருதுகின்றனர். எனவே, தந்தையாராகிய சிவபெருமானைப்போலவே, இவரும் ஆன்மாக் களின் ஈடேற்றத்திற்காகப் பஞ்சகிருத்தியங்களை (ஐந்தொழில்களை)ச் செய்துகொண்டிருக்கின் றார். தந்தையைப் போலவே இவரும் இளம்பிறை, பாம்பு முதலியனவற்றை அணிந்திருக்கின்றார். ஐந்து திருமுகங்கள் இவருக்கும் உள்ளன.


இதுவே பஞ்சமுகவிநாயக வடிவமாகும். இதுவும் இவர் தந்தையாரைப் போலப் பஞ்ச கிருத்தியங்கள் புரிந்துகொண்டிருப்பதைக் குறிக் கும். நாலுதிசைகளை நோக்கியும், மேல் நோக்கியு முள்ள இத்திருமுகங்கள் இறைவனின் எல்லை யற்ற ஆற்றலைக் குறிப்பன. ஏற்கனவே குறிப் பிட்டவாறு இவருடைய திருவுருவத்திலே யானைத்தலையும் மனிதஉடம்பும் பிறவும் கலந்து விளங்குகின்றன. யானை மதிநுட்பமும் கம்பீரநடையும், அழகும் வாய்ந்த மிருகமாகும். அவர் கருணை எனும் மதநீரைப் பொழிந்த வண்ணம் இருக்கிறார் எனவும், அவருடைய துதிக்கை மும்மலமாகிய காட்டினை அழித்து ஆன்மாக்களுக்கு நம்பிக்கையையும், ஆன்ம ஈடேற்றத்தினையும் அளிக்கிறதெனவும் ஞானிகள் கருதுவர். யானை தனது துதிக்கையினால் எத்தகைய தடைகளையும் எளிதில் நீக்கி முன் னேறுவதுபோல, விநாயகரும் ஆன்மாக்களின் இடையூறுகளை எல்லாம் நீக்கியருளுவார். அவருக்குரிய 16 (ஷோடஷ), 21 (ஏகவிமசதி), 108 (அஷ்டோத்தரசத), 1000 (ஸஹஸ்ர நாமாவளி கள்) பெயர் வரிசைகள் குறிப்பிடற்பாலன. இவற்றிலே அவரின் பலவிதமான சிறப்புக்களும் உள்ளன. இவர் காதல், அழகு ஆகியனவற்றின் தெய்வமான மன்மதனையும் வென்ற திருமேனி யர் (ஜிதமன்மத விக்கிரஹ) அழகு நிறைந்தவர். (சௌந்தர்ய மண்டித) சொந்த அழகு (ஸ்வலா வண்ய) உடையவர் எனப்பலவாறு போற்றப் படுகிறார்.

இவருடைய திருவுருவத்திற்கும் வாகனத் திற்கும் இடையிலே பெரிய வேறுபாடு காணப் படுவது போலத் தென்படும். இவரின் பருத்த திருமேனியும், தோற்றப் பொலிவும் கம்பீரமும் ஒருபுறமிருக்க வியத்தக்கவகையில் இவரின் வாகனமாகிய மூஷிகமோ மிகச் சிறியதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு புறத்தோற்றமன்றி அகவுணர்வே பிரதான மாகும். அதாவது கடவுள் சிறிய பிராணிக்கும் வல்லமையளித்து பெரியனவற்றையும் தாங்கச் செய்வார். மலங்கள் குறிப்பாக ஆணவம் வலுவிழந்த சத்திநிபாதம் பெற்ற ஆன்மாவையே மூஷிகம் குறிப்பாகச் சுட்டுகிறது எனக் கருதப்படு கின்றது.



தமிழர் மத்தியிலே நிலவிவரும் சைவ மரபிலே, பிள்ளையார் என்ற பெயரே பரவலாக வழக்கிலுள்ளது. இவ்வழிபாடு தமிழகத்திலும் இலங்கையிலும் பல நூற்றாண்டுகளாக நிலவி வருகின்றமை இலக்கியம், தொல்லியல் சான்றுக ளாலே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்துக்கள் மட்டுமன்றிப் பௌத்தர்களும் இவரை வழிபட்டு வந்துள்ளனர். தமிழ்மக்களைக் கவர்ந்துள்ள தெய்வங்களில் விநாயகரும் பிரபல்யமானவர்.

விநாயகர் அறிவுத்தெய்வமாகவும் விளங்கு கின்றார். இவர் ஞான வடிவமுடையவர் (ஞான முத்ராவத்) திருமூலர் இவரை ஞானக்கொழுந்து எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, வித்தியாரம்ப வேளைகளிலே பிள்ளையாருக்கு முதலிட மளிக்கப்படுகின்றது. தமிழகத்திலிவர் பொது வாகப் பிரமச்சாரியாகக் கொள்ளப்படினும் மந்திரங்களிலும், சிற்பங்களிலும் வல்லவர் அல்லது கணேசானி என்னும் ஒரு சக்தியுடனும் அல்லது சித்தி, புத்தி எனும் இரு சக்திகளுடனும் போற்றப்படுகின்றார். ஆனால், தமிழகத்திற்கு வெளியேயுள்ள இந்தியப் பிரதேசங்களில் மேற் குறிப்பிட்டவாறு இவர் போற்றப்படுவது நன்கு குறிப்பிடற்பாலது. தமிழகத்திலே நக்கீரர் தாம் எழுதிய பிள்ளையார் அகவலில்

*"அல்லல் வினையறுத்திடு ஞான*
*வல்லபை தன்னை மருவிய மார்பா"*

எனக் குறிப்பிட்டிருப்பது குறிப்பிடற்பாலது.

வல்லபா என்னும் பதம்: அன்பு, காதல் முதலிய பொருள்படும். சிவபிரானைப் போலவே உலக ஈடேற்றத்திற்காக இவரும் சக்தியுடன் விளங்குகிறார். இறைவனைப் போலவே இறைவி யும் அன்பு வடிவினள். கணேசர் கல்வித்தெய்வம், இடையூறுகளை நீக்கும் தெய்வமாக மட்டுமற்றி காதல் தெய்வமாகவும் விளங்குகின்றமை ஈண்டு கவனித்தற்பாலது. தம்முடைய தம்பியாகிய முருகன் வள்ளியைச்சேர உதவிய கதையுமிக்க கருத்தினைப் புலப்படுத்தும். விநாயகர் காதல் தெய்வமாக யப்பானில் இன்றும் போற்றப் படுகின்றார். பௌத்தம் ஊடாகவும் விநாயகர் வழிபாடு அங்கும் பரவியிருக்கலாம். இவருடைய இரு சக்திகளிற் சித்தி காரியசித்தி வெற்றியையும்; புத்தி விவேகத்தையும் குறிக்கும். எக்காரியத்தை யும் செய்வதற்கு இவ்விரண்டும் அவசியமாகும். எனவே இடையூறுகளை நீக்கி இஷ்டசித்தி களைத் தரும் இறைவனுக்கு இவ்விரு சக்திகளும் மிகப் பொருத்தமாகவே உள்ளனர்.

சிவபெருமானைப் போலவே பிள்ளை யாரும் கலைகளிலே, குறிப்பாக: இசை, நடனப் பிரியராக இலங்குகின்றார். சாமகோஷப்பிரிய, "லாஸ்யப்பிரிய" போன்றவை இவரின் நாமாவளி களிலே இடம் பெற்றுள்ளன. நர்த்தன வடிவி லான இவரின் சிற்பங்கள் இந்தியாவிலும், இலங்கையிலும், தென்கிழக்காசியாவிலும் உள்ளன. இவர் நாதப்பிரியர்: முரசுக்குரிய தெய்வ மாக மிளிர்கின்றார்.

இவரை எவரும் எளிதில் வழிபாடு செய்து அருளைப்பெறலாம். இவரை வேத, ஆகம முறைப்படி மட்டுமன்றி, அதற்குப் புறம்பான எளிமையான வழிபாட்டு முறையினாலும் வழி படலாம். திருவுருவம் இல்லாது மஞ்சள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுஞ்சாணம், மண் ஆகியனவற்றுள் ஏதேனும் ஒன்றினால் உருண்டை செய்து அதில் அறுகம் புல்லினைச் சொருகி இவரைப் பாவனை செய்து வழிபடலாம்.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு இந்து சமயக் கிரியைகளில் இவருக்கு முதலிடம் அளிக்கப் படும். இவரை வணங்கிய பின்னரே ஏனைய தெய்வங்களுக்கு வழிபாடுகள் நடைபெறும். உலகியல் சார்பான விடயங்களைத் தொடங் கும் போதும் முதலில் இவருக்கே வழிபாடு செய்யப் படும். ஏனைய இந்துக் கோவில்களிலுமிவருக்கு முக்கியமான இடம் உள்ளது. இவர் கோவிலின் முற்பகுதியிலிருப்பார். உட்பிராகாரத்தின் தென் மேற்குமூலையிலே பரிவார தெய்வமாக அமர்ந்து வலம் வருவோரின் முதலாவது பிராத்தனை யினைப் பெறுகின்றார். வைஷ்ணவர் இவரைத் தும்பிக்கை ஆழ்வாரெனப் போற்றுவர். இவரை வழிபடும் சிறப்பான முறை பிற தெய்வங் களுக்கான வழிபாட்டு முறைகளிலிருந்து வேறு பட்டது. இதன்படி ஒருவர் தனது இரு கைகளை யும் முஷ்டியாகப் பிடித்துக்கொண்டு தலையின் இருபக்கங்களிலும் மூன்று அல்லது ஐந்து தடவை மாற்றிக் குட்டிக் கொள்வர். பின் இருகரங்க ளாலும் இருசெவிகளையும் மாறிப்பிடித்துக் கொண்டு மும்முறை இருந்து எழுந்து வழிபடுவர். இது தமிழிலே **தோப்புக்கரணம்** எனக் கூறப் படும். இரண்டு காதுகளையும் பிடித்துச்செய்தல் என்பது வடமொழியில் **"துவாப்யாம்கர்ண"** எனக் கூறப்படுவதன் திரிபே இதுவாகும். விநாய கப்பெருமான் வென்ற கஜமுகாசுரன் தேவர்களை இவ்வாறு தனக்கு வழிபாடு செய்யுமாறு பணித் தான் எனவும், அவனை அடக்கிய அப்பெருமா னைத் தேவர்கள் பின்னர் இவ்வாறு வழிபடலா யினர் எனவும் புராணங்கள்கூறும். சில நூல்களி லேதான் தெரியாது செய்த பிழையினை மன்னித் தருளுமாறு இராணவன் இவ்வாறு வழிபட்டான் எனவும் கூறப்படுகின்றது. ஆனால், இவ்வழி பாட்டு முறைக்குச் சமய ஞானரீதியிலே வேறு வகையான விளக்கம் கூறப்படுகின்றது. அதாவது, இவ்வாறு செய்வதன் மூலம் மனிதனின் ஆத்ம ஞானசக்தி தூண்டப்பட்டு ஆன்மா இறை வனிடம் ஒன்றுபடுகின்றது என்பதாம்.

விநாயகர் அன்பருக்கு எளியர். அவர்கள் விரும்பியவற்றை வாரி வழங்குபவர். அவர் குருவடிவாகிக் குவலயம் தன்னில் எழுந்தருளி அனைவரினதும் துன்பங்களை நீக்கி இன்பம் அருளுபவர். கணபதி வழிபாடு இந்துசமயத்தில் மட்டுமன்றிச் சமணம், குறிப்பாக பௌத்தம் ஆகிய அவைதிக சமயங்களிலும் இடம் பெற்றுள்ளது.

முற்காலத்தில் இவ் வழிபாடு இந்தியா, இலங்கை மட்டுமன்றி மத்திய ஆசியா, தென்கிழக் காசிய நாடுகள் சீனா, யப்பான், முதலிய நாடு களிலே இந்து சமயம் மட்டுமன்றிப் பௌத்தம் மூலமும் பரவி நிலவி வந்துள்ளது. இன்று உலகளாவிய ரீதியிலே இவ் வழிபாடு மேற்குறிப் பிட்ட நாடுகளில் மட்டுமன்றி மேற்குலக நாடு களிலும், அவுஸ்ரேலியாவிலும் நிலவுகின்றமை குறிப்பிடற்பாலது. அவரை ஒருவன் தன்னுடைய மனம், வாக்கு, காயம், ஆகிய மூன்றினாலும் வழிபடுவதால் எல்லாவகையான இகபர இன்பங்ளையும் பெறுவான்.

*வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்*
*நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு*
*துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்*
*தப்பாமல் சார்வார் தமக்கு.*

-வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகரின் திருக்கரங்களில் விளங்கும் ஆயுதங்கள்

நீர்வைமணி கு. தியாகராஜக்குருக்கள்

*"ஏத்தியே என்னுள்ளம் நின்றுமால் எப்பொழுதும்*
*மாத்தனி வெண்கோட்டு மதமுகத்துத் - தூத்தழல்*
*செக்கர்த் திருமேனிச் செம்பொன் கழலங்கை*
*முக்கட் கடாயானை முன்"*


என்று கபிலதேவரால் போற்றப்படும் விநாயகர் எளிமையே உருவான தெய்வம். பிள்ளையார் என்று பெயர்பெற்ற பெருமான். திருச்சிராப் பள்ளி மலையிலே உச்சிப்பிள்ளையார் என்றும் திருக்கடவூரில் கள்ளவாரணர் என்றும், சிதம்பரத்தில் திருமுறைசுட்டிப்பிள்ளையாராக வும், முக்குறுணி விநாயகராகவும் திருநறை யூரில் பொல்லாப்பிள்ளையாராகவும் சிருச்செங்காட் டங்குடியில் வாதாபிகணபதியாகவும் திருவலஞ் சுழியில் வெள்ளைப்பிள்ளையாராயும் பிள்ளை யார்பட்டியிற் கற்பகக்கணபதியாயும் இப்பெரு மான் எழுந்தருளியுள்ளார்.

தவிர, செல்லக்கதிர்காமத்தில் மாணிக்க விநாயகக் கடவுளாயும், தமிழகத்தின் நாகப் பட்டினத்தில் பஞ்சமுக விநாயகராகவும் மாவடிப் பிள்ளையாராகவும் காட்சி தருவதுடன் இலங்கை யின் யாழ். மீசாலையிலும் வெள்ளை மாவடிப் பிள்ளையாராகவும் அருளாட்சி செய்கின்றார். யாழ்ப்பாணத்தரசர் காலத்திலேயே யாழ்ப் பாணத்திற் பிள்ளையார் வழிபாடு மேலோங்கி இருப்பதை அரசகேசரி, பரராஜசேகரன், கருணாகரன் ஆகிய தமிழரசர்கள் ஸ்தாபித்த பிள்ளையார் ஆலயங்கள் வெளிப் படுத்துகின் றன.

கல்லுக்கு உயிர் கொடுத்து கற்பனையை அதில் செலுத்தி, அதிற் கலைக்கடலாம் கணபதியை கண்டனர் நம்முன்னோர். இத்தகு கணபதியின் திருக்கரங்களிற் பல்வேறு ஆயுதங் களை நாம் காணலாம். பஞ்சமுக விநாயகராகப் பெருமான் எழுந்தருளுகையில் இவற்றை தெளி வுறத் தரிசிக்கலாம்.

**பாசம்**

விநாயகரின் திருக்கரத்தில் நாகமே பாசமாக மாறி "நாகபாசம்" ஆகவுள்ளது. இது கயிறு. பகைவரின் கைகளையும் கால்களையும் கட்டிச்செயற்பட இயலாமற் செய்யும். இது பிள்ளைத் தெய்வமான இக்கடவுளுக்கேயுரிய அற்புத ஆயுதம்.



**அங்குசம்**

யானையை அடக்க இரும்பாற் செய்யப்பட்டு வளைந்த மூக்கும் கூர்மையும் உடையதாயிருக்கும் அங் குசம் யானைமுகப் பெரு மானின் அஸ்திரதேவராய் வலது திருக்கரத்தில் விளங் கும்.

**தந்தம்**

ஒடிந்த யானைக் கொம்பு. வேதவியாசரின் விநய விண்ணப்பத்தை ஏற்று மகாபாரதத்தைத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைத் தந்தத்தை உடைத்து எழுதினார் விநாயகர். ஆக எழுத்தாணியாக இந்தத் தந்தம் பயன்படுகின்றது. போருக்கும் இது பயன்படும்.

**வேதாளம்**

அச்சம் தரவல்ல பூத வடிவம். வீரவீர கணபதியினுடைய திருக்கரமொன்றில் இது வுள்ளது. பகைவரை இது கொன்று தின்னும் உயிருள்ள ஆயுதம்.

**அம்பு**

கூரிய நுனியுடையது. பின்அந்தத்தில் விரைந்துசெல்லக் கழுகின்இறகு கட்டப்பட் டிருக்கும் வில்லை வளைத்து அதில் வைத்து எய்தப்பெறும் கருவி.

**வில்**

மூங்கிலைப் போன்று வளையவல்ல மரத் தால் செய்யப்பெற்று அம்பு எய்தப் பயன்படுவது. வில்லின் இரு முனைகளும் நார்க்கயிறால் உறுதி யாகக் கட்டப்பெற்றிருக்கும். பிள்ளையாரின் திருக்கரங்களில் வில், அம்பு இடம்பெறக் காண லாம்.

**சக்கரம்**

திருமாலின் மருகரான விநாயகர்; விஷ்ணு வுக்கே உரிய சக்கரத்தைத் தாங்கியிருப்பார். காஞ்சியில் விகடசக்கரன் என்ற பெயருடன் இவர் விளங்குவார். கந்தபுராணக் காப்புச் செய்யுளில் இதை அவதானிக்கலாம் (விகடசக்கரன் மெய்ப் பதம் போற்றுவாம்).

**கதை**

பீமனுக்கும் பிள்ளையாருக்கும் திருமாலுக் கும் சிறப்பாக உரியது. குண்டாந்தடி என்றும் கூறுவர். பகைவரை அடித்து நொருக்கப் பயன் படும்.

**கொடி**

துணியால் வெற்றியைக் குறித்து அமைக்கப் பெற்ற "துவஜம்" என்ற கொடி விநாயகர் கரத்தில் விளங்குகின்றது.

**சாமரம்**

இது கவரிமான்வால் மயிரால் ஆக்கப் பெறுவது. ஆயுதம் அன்று. விசேட உபசாரமாக விநாயகரின் திருக்கரத்தில் உள்ளது.

**மோதகம்**

பூரணத்துவத்தைக் குறிக்கும். பிள்ளை யாரின் திருக்கரம் மிசை உள்ளது. முழுமையைக் குறிப்பது. பிள்ளையார் தனது கரத்தில் வைத் திருப்பது தான் உண்ண அல்ல. அனைவருக்கும் பகிர்ந்தளிக்க. அனைத்து உயிருக்கும் உணவிட்டு உயிரளிக்கும் தெய்வம் தானே என்று விளக்க.

இவற்றைவிட வஜ்ஜிரம், குத்துக்கத்தி, சம்மட்டி, சூலம், குந்தாலி, மழு, தண்டம், கமண்டலம், பரசு, சங்கம், புஷ்பபாணம், கோடரி, ஜெபமாலை, தீ (நெருப்பு), வீணை, போன்றவற்றையும் விநாயகருடைய கரங்களிற் காணலாம். நம்மிடர்களையும் நீக்க விக்னவிநாய கருக்கு இவ்வாயுதங்கள் அவசியமே.

மேலும் நம்மவருள் சிலரின் "நன்றாக உணவுப் பண்டங்களை விரும்பி உண்ணும் தொந்தி வயிறுடைய கடவுள்" என்ற எண்ணத்தையும் இது மாற்றும். பிள்ளையார் குழந்தைத் தெய்வம் என்றும் உற்சாகமான கடவுள். வீரத்தின் விளைநிலம். நன்றாகச் சாப் பிட்டுவிட்டு தூங்குபவரல்லர். அவரது தொந்தி வயிறு அழகானது. இந்தப் பிரபஞ்சத்தை அடக்கி வைத்திருப்பது.

கஜமுகன், விரசை, உதத்தன், நக்கிராசுரன், கிருத்திராசுரன், குசலன், குரூரன், பாலாசுரன், சிந்து அசுரன், அனலாசுரன் என்று பிள்ளை யாரால் அழிக்கப்பெற்ற கொடியவரின் தொகை அதிகம். இது அவரது பராக்கிரமத்தைக் காண் பிக்கும்.


ஓங்கார வடிவமான உருவமுடைய பிள்ளை யாரை வழிபட்டாற் கல்வி, கலை, ஞானம், மேலோங்கும். இதற்கு நம்பியாண்டார் நம்பியடி களின் வரலாறே சாட்சி. இத்தகு பெருமைமிக்க வெள்ளைமாவடிப் பிள்ளையார் நம் இன்னல் களை, கூடாத குணங்களைக் களைந்து நம்மெல் லோரையும் நலமே வாழ அருள் புரிய வேண்டு வோம்.

*"அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே! அப்பம்*
*இடியவலோடு எள்ளுருண்டை கன்னல்-வடி சுவையில்*
*தாழ்வானை ஆழ்வானைத் தன்னடியார் உள்ளத்தே*
*வாழ்வானை வாழ்த்தியே வாழ்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகரின் கருவிகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயிகள் தினமும் மேற்கொள்ள வேண்டிய சத்தியப் பிரமாணங்கள் (உறுதி மொழிகள்)

நவ சீலங்கள்

1. போதையை ஏற்படுத்தும் எவ்வகையான பொருளையும் நுகரமாட்டேன் - எவரையும் நுகருமாறு தூண்டமாட்டேன் - எவரும் நுகர்வதற்கு உதவி செய்யமாட்டேன்.

2. கொலை செய்யமாட்டேன் - எவரையும் சொலை செய்யுமாறு தூண்டமாட்டேன். கொலை செய்வதற்கு எவருக்கும் உதவி செய்யசெய்யமாட்டேன்.

3. திருடமாட்டேன் - திருடுமாறு எவரையும் தூண்டமாட்டேன் - திருடுவதற்கு எவருக்கும் உதவி செய்யமாட்டேன்.

4. பொய்யுரைக்கமாட்டேன் - பொய்யுரைக்குமாறு எவரையும் தூண்டமாட்டேன் - பொய்யுரைக்க எவருக்கும் உதவி செய்யமாட்டேன்.

5. தவறான வழிகளில் காமசுகம் அனுபகிக்கமாட்டேன் - அனுபவிக்குமாறு எவரையும் தூண்டமாட்டேன் - எவரும் அனுபவிப்பதற்கு உதவி செய்யமாட்டேன்.

6. எதிர்பாலாரிடையே காமக் கிளர்ச்சியை ஏற்படுத்தத்தக்க அரைகுறை ஆடைகளை அணியமாட்டேன்.

7. சூதாடமாட்டேன் - எவரையும் சூதாடுமாறு தூண்டமாட்டேன் - எவரும் சூதாடுவதற்கு உதவி செய்யமாட்டேன்.

8. புறங்கூறல், வெற்றுவார்த்தை, இழிசொல் (தூஷணவார்த்தை) பேசமாட்டேன் - பேசுமாறு எவரையும் தூண்டமாட்டேன் - பேசுவதற்கு எவருக்கும் உதவி செய்யமாட்டேன், பிறமத நிந்தனை செய்யமாட்டேன்.

9. எவரையும் துன்புறுத்தமாட்டேன் - எவரையும் துன்புறுத்துமாறு தூண்டமாட்டேன் - எவரும் துன்புறுத்துவதற்கு உதவி செய்யமாட்டேன்.

தசாவதானி அமரர் சரவணமுத்து ஆறுமுகம்.
மீசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தென் - தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும்


பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்.

**ஆய்வுப் பிரச்சினை பற்றிய அறிமுகம்:**

குழும அளவு முறையினூடாகப் பேணப் பட்டுக் கையளிக்கப்பட்ட நம்பிக்கைகள், இலச்சினைகள், குறியீடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு வாழ்வியக்கத்தினைக் குறிக்கும் பருவத்தை நாம் மிருகவாழ்வு அல்லது Animism என்ற பதத்தினாற் குறிப்பிடுகிறோம். மனிதப் பரிமாணத்தின் ஒரு கட்டத்தில் மக்கள் காடுகளில் அலைந்து திரிந்து வேட்டையாடித் தமது ஜீவனோபாயத்தினை முன்னெடுத்துச் சென்ற போது ஐந்தறிவு ஜீவன்களின் ஆதாரம் ; பயனும் - பயமும் ஒன்றாகி உணர்வாகி உயர்வாக நின்றதன் பின்னணியிலேயே Animism என்ற உணர்வு வெளிப்பாடு வழிபாட்டு முறையாயிற்று. பின்னர் நாகரிகம் தோன்றிய நிலையிலும் Animism என்ற பண்பு மக்களின் சமய வாழ்விற் பங்கெடுத் திருந்தமையைப் பல்வேறு உதாரணங்களைக் கொண்டு காண்கின்றோம். இதே பண்பினைத் தென்னாசிய,தென்கிழக்காசிய சமயவாழ்விலும் நன்கு தரிசிக்கின்றோம். தென்னாசியாவில் இந்து நதிப்பள்ளத்தாக்கு மாந்தரின் நாகரிக வாழ்வி னூடாகவும் Animism பண்பின் தொடச்சியையும், வளர்ச்சியையும் கண்டுகொள்கின்றோம்.

தென்னாசியாவைப் பொறுத்தவரையிற் பசுபதி, நரசிம்மம், சடாயு, காமதேனு (காராம் பசு), சூரபத்மம், மஹிஸம், ஆனைமுகன் போன்ற ஜதீகவுருக்கள் இப்பிராந்தியத்தில் குழும வாழ் வியக்கத்தினூடாகப் பிரதான மதநீரோட்டத் துடன் இணைந்து கொண்டிருந்த Animism என்ற குலக்குழுமத்தின் வெளிப்பாடாக இருந்து வருவதனைக் காணலாம். ஆனால், தென்கிழக் காசிய நாடுகளில் இத்தன்மையானது தென்னாசி யாவை விடவும் அதிகரித்துக் காணப்பட்டமைக் குரிய காரணியானது அங்கு குலக்குழும வாழ்வின் தொடர்ச்சியானது இற்றைவரைக்கும் தொடர் ந்து வளர்ச்சிபெற்று வருவதனாலாகும். இக் காரணத்தினாலேயே ஆனைமுகன் என்ற கணபதி மரபு அங்கு வேரூன்றி விருட்சம் பெற்றுத் தென்கிழக்காசிய மக்கள் வாழ்வில் கலந்ததோடு மட்டுமல்லாது, பிறமத வாழ்வியலுடனும் இணைந்து கொண்டிருந்த தன்மையை சிற்ப, ஓவியச் சான்றுகளினூடாகக் காண்கிறோம்.

ஆனால் இன்றைய நிலையில், தென்கிழக்காசியா வின் சமய பண்பாட்டுப் பரப்பில் கணபதி வழிபாடு இயைந்து - நசிந்தும் அழிந் தும் செல்கின்ற வரலாற் றையே நாம் காண்கின் றோம். அந்தவகையில் தென்-கிழக்காசிய நாடுகளி னைக் களமாகக் கொண்டு, கணபதி வழிபாட்டு மரபின் தொன்மையினையும், தொடர்ச்சியினையும் அம் மரபின் பின்னணி யிலுள்ள சமூக, பொருளாதார விழு மியங்களையும் ஆராய்வ தாகவே இக்கட்டுரை அமை கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி : "குலக்குழுமத்தின் தலைவன்"

"கணம்" என்ற சொல் கூட்டம், குழுமம், சந்தர்ப்பம், குடி / குடிகள், வாணிபக் கூட்டம் எனப்பல பொருட்குறித்த ஒரு சிறப்புப் பதமாக உள்ளது. படை என்ற பொருளிலும் அது வழங்கப்பட்டு வந்தது. இந்து ஆகம தத்து வார்த்தப் பின்னணியிற் "கணங்களுக்குத் தலைவன்" என்ற பொருளில் அச்சொல் வழங்கப் படுகின்றது. தேவகணம், அசுர கணம் என்ற இரு நிலைகளிலும் கணபதி தலைமை வகித்தமையால் "கஜமுக" நிலையில் வைத்துப் போற்றப் பட்டி ருக்க வேண்டும். (கண: மோட்சம்; பதி ஞானம்) இதுவே குலக்குழுமத்தினுடைய இலச்சினை யாகவும் கொள்ளப்பட்டிருந்தமையின் பின்னணி யில் அசுரர்களுக்கும் தலைமை தாங்கும் சக்தி யைக் கணபதி பெற்றிருத்தல் வேண்டும்.

**கணபதி வழிபாட்டின் தோற்றம்:**

தென்,தென்கிழக்காசிய நாடுகளிற் கணபதி வழிபாட்டின் தோற்றம் பற்றிப் பல்வேறு வகையான கருத்துநிலைகள் காணப்படுகின்றன. காடுகளில் அலைந்து திரிந்து, வேட்டையாடி, உணவு சேகரித்து தமது ஜீவனோபாயத்தினை முன்னெடுத்துச் சென்ற குலக்குழுமங்களின் - கணங்களின் பதியாகத் தோற்றம்பெற்ற இக்கணபதி எவ்வாறு நிலையான நெல்லுற்பத்தி வாழ்க்கை முறையில் ஒரு செழிப்புத் தெய்வமாக (Fertility) பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டார் என்பது ஒரு நீண்ட ஆய்வுக்குரியதாகும். இலங்கையிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் புராதன நெல்லுற் பத்திமையங்களினூடாகவே கணபதியினுடைய முக்கியத்துவமும் வழிபாட்டுமரபும் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வந்தமையைத் தொல் லியல் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

"சிவனேகூட பூதேஸ்வரன் எனவும், கணபதி கணநாதன் எனவும் அழைக்கப்படுவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த அனுராதபுரத்தில் மிகுந்தலையில் உள்ள கண்டாக ஸ்தூபியில் காணப்படும் கணங்களின் சிற்பமும், யானை முகத்தினையுடைய இருகைகளையுடைய ஒரு கணத்தின் சிற்பமும் ஈழத்தில் அன்று கணபதி வணக்கத்திற்கும், பூதவணக்கத்திற்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றன என H. Ellawalla என்பவர் குறிப்பிடுகின்றார்" என சி.க சிற்றம்பலம் பண்டைய ஈழத்து யக்ஷநாக வழிபாடுகள் பற்றிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் நாட்டிற் கூட கணபதி வணக்க முறையானது பூத வணக்கத்திலிருந்துதான் தோன்றியது என N. சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார். இப் பூதவழி பாட்டின் தோற்றத்தினைப் பெருங்கற்காலத்தி லிருந்து காணமுடியும் என B.Narasimhaiah குறிப்பிடுவதிலிருந்தும், அம்மரபானது பெருங் கற்காலத்து ஈம அடக்க மையங்களை அண்மித்த பரப்பில் ஆள் போன்ற தோற்றத்தில் உருவகிக்கப் பட்டிருந்தது எனக் குறிப்பிடுவதிலிருந்தும் கணபதி வழிபாட்டு மரபிற்கும்,பெருங்கற்கால மக்களது (Megalithic people) வாழ்வு வழிபாடு முறைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.

மிகவும் அண்மைக்காலங்களில் இலங்கை யிற் கந்தரோடையிலிருந்தும், இந்தியாவில் தமிழகம், உத்தரப்பிரதேசம், ஆகிய இடங்களில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியற் சான்றுகள் கணபதி வழிபாட்டு மரபின் தொன் மையை விளக்கும் மூலாதாரங்களாகின் றன. கந்தரோடையிலிருந்து கிடைக்கப்பெற்ற மூன்று வகையான தொல்லியல் எச்சங்கள் ஆதிக்கணபதி வழிபாடு பற்றித் தெளிவாக எடுத்துக்காட்டு கின்றன. அவையாவன :

1. சுடுமண்ணாலான கணபதி உருவங்கள் (Teracotta Figures of Ganapati, from Megalithic Burial site) கட்டுரையாசிரியரிடம் உள்ளது.
2. உலோகத்தாலான மிகப்புராதன கணபதி வடிவம் (From Megalithic Burial site) கட்டுரை யாசிரியரிடமுள்ளது.
3. வரலாற்றுக் காலக் கணபதி வெண்கல உருவம். யாழ்ப்பாண அரும்பொருளகத்தில் உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மூன்று கணபதி வடிவங்களும் முதலிரண்டு வகையைச் சேர்ந்தவை பெருங்கற் கால மக்களது வாழ்வுப் புலத்திலிருந்து முகிழ்த்து, வெளிப்பாடடைந்தவை என்பதிற் சிறிதும் சந்தேகம் எழமுடியாது. பெருங்கற்காலச் சவ அடக்கமையங்களில் அம்மக்கள் பின்பற்றி யிருந்த Sarcophaguse என்று குறிப்பிடப்படும் ஈமப் பேழை முறைமைகளில் யானைத் தலையை யுடைய உருவிற் பேழை வயிற்றுப் பாகம் பயன் படுத்தப்பட்டு வந்தமையின் பின்னணியிலேயே கஜமுகன் வழிபாட்டு மரபு தோற்றுவிக்கப்பட் டிருக்க வேண்டும். வடமராட்சி, தென்மராட்சி எல்லையில் உள்ள வரணியில் உள்ள கமத் தொழில் சேவைநிலையக் கட்டிடத்துக்கும்கீழ் அன்னவடிவிலமைந்த பெருங்கற்கால Sarcopha guse என்று குறிப்பிடப்படும் ஈமப்பேழை (Animated Coffin) ஒன்று காணப்படுவதனை இங்கு குறிப்பிடுவதும் பொருத்தமாகும்.

தமிழகத்தில் வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள மேட்டூர் என்ற கிராமத்தில் (திருவண்ணா மலையிலிருந்து மேற்காக 25கி.மீ.) கண்டு பிடிக்கப்பெற்ற டொல்மன் வரிசையில் மனித உருவில் அமைந்த (Anthropomorphic stone slab) "ஓ"ங்கார வடிவம் தொனிக்கத்தக்கவகையில் அமைந்த டொல்மனை தொல்லியலாளர் எடுத் துக் காட்டியுள்ளமை இங்கு நோக்கத் தக்கது. இந்த டொல்மன் வடிவம் "மனித உருவின் முற் பட்ட வடிவம்" எனக்குறிப்பிடப்பட்டபோதும் அதுவே கணபதி உருவவியலின் உருவாக்கத்திற்கு அடிப் படையாக விளங்கியிருந்தது என்பதனை கந்த ரோடையிலிருந்து எமக்குக் கிடைத்த உலோகத் தாலான கணபதி வடிவத்தினை ஒப்பிட்டு நோக்கும்போது புலனாகிறது. இதனை யொத்த வகையிலேயே உத்தரபிரதேசத்தில் உள்ள Copper Hoard Culture பிராந்தியத்தி லிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட செம்பினா லான உருவ அமைதிகள் கணபதியின் மிகப்புரா தனம் வாய்ந்த உருவவியலை வெளிப்படுத்தி நிற்பதனைக் காண்கின்றோம்.

வடஇந்தியாவைப் பொறுத்தவரையில் தைத்திரீய ஆகமத்தில் தந்தின் / தந்திரன் என்ற பெயர்க் குறிப்பொன்று இடம்பெற்றுக் கொள் வதிலிருந்து கணபதி வழிபாட்டு மரபின் தோற்றத் தினை ஆகமமரபில் எடுத்துக்காட்டுவர். தந்தத் தினையுடையவர் தந்தின்/தந்திரன் எனப் பொருள் கொள்ளப்பட்டே அவ்வாறு கணபதியை அப்பதம் குறித்து நிற்கின்றது எனக் குறிப் பிடுவர் ஆய்வாளர். இந்திய இதிகாச மரபில் மகாபாரதத் தினைத் தனது வலது தந்தத்தினை முறித்து வரைந்தவராகக் கணபதியை எடுத்துக்காட்டும் மரபு வழங்கிக் கொண்டிருப்பதனைக் காண் கிறோம். தமிழகத்தில் காவேரி என்ற நதியை உருவாக்குவதற்கு உதவியிருந்தவர் கணபதியே என்ற ஐதீகம், காகம் கமண்டலத்தினை கவிழ்த்த கதைவடிவில் இற்றைவரைக்கும் சொல்லப் பட்டுக்கொண்டு வருவதனைக் காண்கின்றோம். அகத்தியருடைய தென்னாட்டு வருகையின் போதே அவரது கமண்டலத்தினுள் அமுக்கி வைக்கப்பட்டிருந்த "கங்கா தேவியை" அக்க மண்டலத்தினைத் தட்டிச் சரித்துவிடுவதன் மூலம் காவேரியாக ஓடச் செய்தவர் இக்கண பதியே என்பது ஒரு வகையான செழிப்புத் தெய்வக் கோட்பாட்டையே (Fertility cult) வெளிப்படுத்துவதாக அமைந்தது எனலாம். தமிழ்நாட்டை பொறுத்தவரையில் நரசிம்ம பல்லவ மன்னனே கி.பி. 7ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பாதாமிச்சாளுக்கியர்மீது படையெடுத்துச் சென்று வெற்றியுடன் திரும்பி வரும்போதே வாதாபி கணபதியைக் காஞ்சிக்கு கொண்டுவந்ததாக அறிகின்றோம். இலங்கைத் தீவினை பொறுத்தவரையில் மிகுந்தலை கண்டச் சேத்தியத்தில் உள்ள அளியடைப்பு வரிசையில் யானைகளின் முகப்பட்டங்களின் நடுவே கணபதி யின் உருவம் காணப்படுவதாக கா. இந்திரபாலா உட்பட இலங்கையின் வரலாற்றறிஞர்கள் பலர் கருது வதனையும் ஏற்றுக் கொள்ளமுடியாது என ஆய்வாளர் குறிப்பிட்டுளமை நோக்கத்தக்கது. இருப்பினும் அந்த அளியடைப்பு வரிசையிலுள்ள யானைகளின் முகப்பட்டங்களின் சிற்பக் கலைப் பாணியானது கி.பி. 1ஆம் நூற்றாண்டிற் குரிய ஆந்திரக் கலைமரபு என்பது இங்கு குறிப்பிடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கதாகும். இலங்கையின் தொடக்க காலப் பௌத்தக்கலைப் பாணியில் மிகக் கூடுதலான செல்வாக்கினை ஆந்திரக்கலைமரபே செலுத்தி யிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**பௌத்த - இந்துமரபிற் கணபதி வழிபாடு:**

பல்லவர் ஆட்சிக்காலத் தமிழகத்தில் பௌத்த சிற்பக்கலை மரபுகளுடன் இணைந்த வகையிற் கணபதி வடிவங்களும் செதுக்கப் பட்டிருந்த முறைமையைத் தெளிவாகக் காண முடிகின்றது. மாமல்லபுரத்திற் பூதக்குகை என்ற வொரு பாறைச்சிற்ப வடிவம் ஒன்று கணபதி வடிவின் ஆரம்பத் தோற்றமாகக் கருதப்படு வதனைக் காண்கின்றோம். மாமல்லபுரத்திலுள்ள பெரும்பாறைச் சிற்பத்தொடரிற் கணபதியின் வாஹனமாகக் கருதப்படும் மூஷிகத்தினை (எலியினை)க் காண்கிறோம். பௌத்த நிறு வனங்களில் கணபதி காவல் தெய்வமாகவும், கருவளத் தெய்வமாகவும் கருதப்பட்டு வந்தமை யைக் காண்கின்றோம். அரசமரத்தடிப் பிள்ளை யார், கேணியடிப்பிள்ளையார், குளத்தடிப் பிள்ளையார் எனப் பிற்காலத்தில் கணபதியின் உறைவிடங்களைக் அமைத்து கொண்டமைக்கும் இப்பௌத்தமதப் பின்னணியே காரணம் என லாம். இலங்கையிலுள்ள கந்தளாய்ப் பிள்ளை யார் கோவில் இதற்குச் சிறந்த எடுத்துக் காட் டாகும்.

இந்து வைதீக மரபிற் கணபதி முதல் அவி பாகத்தை ஏற்கும் தெய்வமாகவே இற்றைவரைக் கும் கருதப்படுவதனைக் காணலாம். இம்மரபில் அமைந்த சகலவிதமான சடங்குகளின் தொடக்க நிலையைக் கணபதி என்ற மெய்ப்பொருள் ஒருங்கிணைக்க உதவுவதனை உணரலாம். அத்தகைய முதனிலைக்கான காரண காரியக் கோட்பாடானது நிலையான வாழ்வு முறை இங்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒரு கால எல்லையில் மக்களால் உணரப்பட்ட வகையில் ஏற்படுத்தப் பட்டதாகலாம். விக்கினங்களை உடன் அறுப்ப வன் (மூஷிகம்), தடைகளை உடைத்து வழியை ஏற்படுத்துபவன் (யானையின் செயல்), ஐந்தாவது கரத்தினை உடையவன் (தும்பிக்கை, நம்பிக்கை, வலிமை), காதலன் (அகன்ற காது களையுடைய வன் - அன்பு செலுத்துபவன்) ஆகிய சிறந்த குணாதிசயங்களுக்காகக் கணபதிக்கு அந்நாமங் கள் சூட்டப் பட்டமையோடு, பிரதான கடவுளு ளர்களுடைய வழிபாட்டுக் கிரிகைகளோடும் இணைப்பதற்காக வேண்டி, கணபதி யின் பல்வேறுபட்ட நாமங்களுக்குரிய தத்துவக் கோட்பாடுகளையும் அப்பிரதான கடவுளர் களுடன் இணைந்த வகையில் உருவாக்கியிருந்த னர். இந்நிகழ்வானது வடஇந்தியாவைப் பொறுத்தவரையில் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட நிலையிலும், தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் பிற்பட்ட நிலையிலும் சம்பவித்தது எனலாம்.

தைத்திரீய ஆகமத்தில் தந்தின் அல்லது தந்திரன் என்ற சொற்பதமானது கணபதியைக் குறிக்கப் பயன்படுத்துவதனை உணரலாம். தந்தத் தினைக் கொண்டிருப்பதனால் அப்பெயர் பெற் றமைக்குரிய காரணமாகச் சொல்வர். வலதுபக்கத் தந்தத்தினை வலதுமேற்கரத்தினால் முறித்து, எழுத்தாணியாகப் பயன்படுத்தியிருந்த காரணத் தினாலும் தந்தின் அல்லது தந்திரன் என்ற பெயர் வழங்கியதாகக் குறிப்பிடுவர். "மகாமேரு மலை யில் இருந்தவண்ணம் வேதவியாசர் சொல்ல விநாயகர் மகாபாரதக்கதையைத் தனது வலது பக்க தந்தத்தினை உடைத்து எழுத்தாணியாகக் கொண்டு எழுதிமுடித்தார்" என்றவொரு மரபும் நிலவுவதனைக் காணலாம்.

இந்திய மரபில் விநாயகர் பற்றிய சிந்தனை அறிவின் மையப்பொருளாக, ஒலியின் நாதமாக, கூர்மையின் செம்மையாக உருவமைக்கப்பட்டுள் ளமையைக் காண்கிறோம். குறியீட்டு வடிவில் " ஓ " என்ற குறியானது ஒலிவடிவமாகிய ஓங்கார (0) நாதமாகவும், வரிவடிவம் விந்து வாகவும் கற்பிக்கப்படுகின்றது. விலங்குத்தலை அஃறிணை யாகவும், தேவஉடம்பு உயர்திணையாகவும், மனித உடம்பு மாயையாகவும் உருவகிக் கப்பட்ட வகையில் விநாயகர் வடிவத்தின் பேராற்றல் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எங்கும், எதிலும் அழிவற்ற - சார்பற்ற நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குவதே ஓங்காரம் என்றழைக்கப்படும் அணுக்களுடன் மோதுண்டு மேலும் ஓங்காரத்தின் எதிரொலியாக மாறு கின்றது எனக்குறிப்பிடுவர். இந்துத் தத்துவ வியலாளர்கள் ஐந்துகரங்களுடன் அங்குசம் அழித்தலுக்கும், தும்பிக்கை மறைத்தலுக்கும், மோதகம் அருளலுக்குமாக குறியீட்டு வடிவம் பெறுகின்றது என்பர். அகன்ற காதுகள் இரண் டும் கர்மவினைப் பயன்களுக்கும் (நல்வினை தீவினை), முக்கண்கள் முறையே இச்சை, கிரிகை, ஞானம் என்ற நிலைகளுக்குமாகவே வடிவம் பெற்றுள்ளது என்பர். சரப ஆபரணம் குண்ட லினி சக்தியைக் குறிப்பதாகக் கொள்வர். மாயை என்னும் நிலையை நன்குணர்ந்து அதனை இயக்குவதில் வல்லவர் என்ற காரணத்தினால் விநாயகர் மனிதஉடலையும் கொண்டுள்ளார் என்பர்.

வைஷ்ணவ, சமண, பௌத்த மதத்தினரும் விநாயகரை வணங்குவது மரபாக உள்ளது. விஷ்ணுபுராணம், கூர்மபுராணம் போன்ற நூல்களிலும், திவ்வியாவதான போன்ற பாளி இலக்கியங்களிலும், விநாயகர் வழிபாடு தொடர்பான பல செய்திகள் காணப்படுகின்றன. இருக்கு வேதத்தில் விநாயகர் வழிபாடு இடம்பெற்றதற்கான குறிப்பு ஒன்று உள்ளது என்பர். கி.பி.6ஆம் நூற்றாண்டில் காணாபத்தியம்போன்ற மதப் பிரிவுகள் தோற்றம் பெறுவதற்கு முன்னரே வடஇந்தியாவிலும், தென்னிந்தியாவிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் விநாயகர் வழிபாட்டு மரபு நிலவி வந்தமைக்கான தொல்லி யற் சான்றுகள் கிடைத்துள்ளன. சித்தி, புத்தி ஆகிய இருதேவியருடன் இணைந்த விநாயகர் வழிபாடு வட இந்தியாவிற் காலத்தால் முற்பட்டதாக இருந்து வந்துள்ளது.

மகாகணபதி, உச்சிட்டகணபதி, லக்ஷ்மி கணபதி, நர்த்தனகணபதி, நாராயணகணபதி, மகிஷகணபதி, கோஷ்டகணபதி எனப் பலவாறாக விநாயகரது உருவலக்ஷணம் வரையறை செய்யப்படுவதைக் காணலாம். கோஷ்டகணபதி முப்புரங்களை எரிக்கச் சென்ற சிவனது செருக்கினை அடக்குவதற்கு எடுத்த வடிவம் எனவும், சிவனது தேர் அச்சினை உடைத்த கணபதி வடிவம் அது எனவும் குறிப்பிடப்படுகின்றது. கபாலகணபதி தென்கிழக்காசிய நாடுகளிற் குறிப்பாக இந்தோனேசியாவில் காணப்படும் சிறப்பு வடிவமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இச் சிற்ப வடிவமானது முழுமையான வகையில் வளர்ச்சியுற்ற நிலையிற் காணப்படுவது Cannibalism என்ற நிலையிலிருந்து மக்களை மீட்டெடுத்து உற்பத்தி முறைக்குள்ளான வாழ்வு முறையை ஏற்படுத்துவதற்குக் காரணமானது என ஆய்வாளர் குறிப்பிடுவர். காணாபத்திய நாடு என இந்தோனிசியா அல்லது யாவா அழைக்கப்பட்டு வந்தமையின் பின்னணி யில், கணபதி வழிபாட்டு மரபின் உச்சவளர்ச்சியே அடிப்படையாக விளங்கியது எனலாம். மணிமேகலையில் வரும் “நாகநாடு நடுக் குற்றாற் பவள்” என்ற தொடரில் வரும் நாகநாடு என்பது யாவா என்ற தீவினையே குறித்து நிற்கின்றது என்பதும் நோக்கத்தக்கது.

கஜமுககாசுர வடிவில் விநாயகர்; பெருச்சாளி அல்லது மூஞ்சூறு வடிவம் எடுத்து அசுரரை அடக்குவதற்காக எடுத்த ஒருவடிவம் எனப்படுகின்றது. விலங்கு + மனித + ஆயுதத்தோற்றங்களுடன் கஜமுகாசுரவடிவ விநாயகர் எடுத்துக் காட்டப்படுகின்றார். இவ்வாறு பல வடிவங்களிற் போற்றப்பட்ட விநாயகர் வடிவம் இந்து, பௌத்த விக்கிரஹவியலின் ஓர் உப பிரிவாக அதன் வெண்கலச் சிற்பமரபு அமைந்துள்ளமையைக் காண்கின்றோம். கருங்கல், சலவைக் கல், பளிங்கு, யானைத்தந்தம், வெள்ளெருக்கு ஆகிய மூலப்பொருட்களில் விநாயகர் வடிவத்தினை உருவமைக்கும் மரபு இந்திய தென்கிழக்காசிய மரபுகளில் வளர்ச்சி பெற்றிருந்தமையைக் காண்கின்றோம். தாய்லாந்தில் முள்முருக்க மரத்தின்கீழ் அமர்ந்திருக்கும் விநாயகர் கருவளத்தினை வழங்கும் (Fertility) கடவுளராக சித்தரிக்கப்பட்டுள்ளார். இதே வடிவ மொன்றினை மைசூரில் உள்ள நஞ்சன்கூடு என்ற நகரிற் கட்டப்பட்டுள்ள நஞ்சுண்டேஸ்வரர் கோவிலில் உள்ள விநாயகர் சிற்பமொன்றிற் காண்கின்றோம். கி.பி. 10ஆம் நூற்றாண்டிற் சோழப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரரசனால் நஞ்சுண்டேஸ்வரர் கோவில் கட்டி முடிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கணபதி வழிபாட்டு மரபில் சமூகப் பின்னணி**

ஆரிய வழிபாட்டு மரபிலும், திராவிட சமய மரபுகளிலும் இரண்டறக் கலந்துவிட்ட கணபதி வழிபாடு, தென், தென்-கிழக்காசிய நாடுகளிற் பல சவால்களை எதிர்கொண்டு, அப்பிராந்திய மக்கள் வாழ்விற் பங்கெடுத்திருந் தமையை சிற்ப ஓவிய மரபுகள் அடிப்படையில் காணமுடிகிறது. தென்னாசியப் பண்பாட்டு மரபில் வர்த்தகத் திற்கும், காதலுக்கும் கொடுக்கப் பட்ட முக்கியத்துவத்தினைப் பிரதிநித்துவம் செய்கின்ற ஒரு கடவுளாக கணபதி போற்றப் பட்டுவந்த தன்மையின் சமூக பொருளாதாரப் பின்னணிக்கும், தென்கிழக் காசிய குடியேற்ற பண்பாட்டு முறைப்படுத்தும் (From Cannibalism to agriculturalization) நிலையில் கணபதி போற்றப்படும் தன்மையின் சமூக, பொருளாதார நிலைக்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் காணப்படுகின்றன. தென்கிழக்காசியாவில் வர்த்தக வாணிபமரபில் கணபதி வழிபாடு போற்றப்பட்டு வந்திருக் கப்பட்டிருக்குமாயின் அங்கு முஸ்லீம்களது வாணிபப் பாரம்பரியத்திற் குள்ளும் அவ்வழிபாட்டு மரபானது சிறியளவி லேனும் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். தென் கிழக்காசியாவில் முஸ்லீம்களது குடியேற்றவாதப் பரம்பல் ஏற்படுவதற்கு முன்னரேயே மகாயான பௌத்த மதத்தின் செல்வாக்கின் பின்னணியில் கணபதி வழிபாடு அது அங்கு முன்னர் வகித் திருந்த பங்கினை இழந்ததோடு மட்டுமல்லாது மகாயான பௌத்த மதத்தினால் நசுக்கப்பட்டும் வந்தமைக்கான சான்றுகளைக் காண்கின்றோம். இப்பின்னணியில் நோக்கும்போது, வாணிப மரபில் கணபதி வழிபாட்டுக்கான பகைப்புலம் தென்கிழக்காசியாவில் இணைந்திருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

தென்னாசிய மரபில் கணபதி வழிபாட்டு மரபானது பெருமளவிற்கு உலக வாழ்வியலுடன் அதாவது உலோகாயுத வாழ்வுடன் இணைக்கப் பட்டிருந்தமையைக் காண்கின்றோம். "ஆத்மீகம்" என்ற ஒரு "மறைவான" வாழ்வு நெறிக்கு அப்பால், உலகவாழ்வியலில் மக்கள் எதிர்நோக்கும் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைகளை அனுபவிக்கும் பிராந்தியங்களில், கணபதி வழிபாடு மிகவும் ஆழமாக வேரூன்றியிருப்பதற்கான சான்றுகளைக் காண்கின்றோம். உலகியலில் காதலும் வாணி பமுமே அடிக்கடி தடைகளையும், எதிர்பாப்புக் களையும், எதிர்கொள்கின்ற இருபிரதான வாழ்வு முறைகளாகும். அந்த வகையில், தடைகளையும், எதிர்ப்புக்களையும், அறிவின்மையையும் வெற்றி கரமாக நீக்கக்கூடிய ஒரு வடிவமாக இருநிலை முனைப்புடைய ஒரு தோற்றப்பாடாக (Anthropo mophiasm & animism) விக்னேஸ்வர் தோற்றிவிக் கப்பட்டார் என்று கூறில் அது மிகையான கூற்றா காது. எந்தவிதமான விக்கினங் களையும், தடை களையும் கடந்து, வென்று, வாழ்வின் இன்பத் தினையும், செழிப்பினையும் கொடுப்பவர் என்ற வகையில் யானையையும், எலியையும் தனது வாஹனங்களாகக் கொள்வதற் குரிய வரத்தினை விநாயகர் பெற்றிருந்தார். ஜேர்மானிய அறிஞர் பலர் தென்னாசிய கணபதி வழிபாட்டு மரபு தொடர்பாக ஆய்வு செய்தமையின் பின்னணி யிலேயே யானை வாகனத்தினதும், மூஷிகவாஹ னத்தினதும் தடைதாண்டும் சிறப்புகள் வெளிப் படுத்தப்பட்டன. தடைகளை நீக்கி, வெற்றியைக் கொடுப்பதற்கு இவ்இரண்டு மிருகங்களும் தமக்குத்தாமே நிகர் என்பது நாம் அறிந்த ஒன்றே யாகும். தடையைத் தாண்டிச் செல்லவேண்டி யிருந்த ஒரு தேவையானது குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் வாழ்ந்த மக்களுக்கு இன்றியமை யாததாகக் காணப்பட்டது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

**பண்பாட்டு நகர்ச்சியின் தலைமைத்துவம்**

தென்னாசியாவின் பண்பாட்டுப் பரப் பினை அவதானிக்கும்போது, அது பிராந்திய ரீதி யில் தனித்துவமான குணாதியசங்களைக் கொண்டு விளங்கியமையைக் காணலாம். அதா வது பிராந்திய ரீதியான வகையிற் பரப்பப்பட்ட பண்பாடுகளுக்கென ஒரு தலைமைத்துவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை செயற்பட்டிருந்த வகையினைக் காண லாம். விசுவாமித்திரர் தலைமையில் இராமாயண சமூகமும் பரத்துவாச முனிவரின் வழிகாட்டலில் பாரத சமூகமும், புலம்பெயர்ந்து சென்று, தடைகளைத்தாண்டி, அடர்ந்த அடவிகளினூடாக எதிர்ப்பட்ட எதிர்ப்புக்களை எல்லாம் முறியடித்த வகையிற் தத்தம் சமூகப்பரப்பினை விஸ்தரித்துச் சென்றமையைக் காண்கிறோம். தக்கணத்திற்கு தெற்கேயும் அகத்தியனுடைய தலைமையிலும், நக்கீரனுடைய தலைமையிலும் பண்பாடு தடைகளைத்தாண்டிப் பரந்துசென்று, ஓங்கி வளர்ச்சி பெற்றமையினை புராதனங்கள் வாயிலாக அறிகின்றோம். இந்நிலையிற் இப்பிராந்தியத்தில் கணபதியினுடைய தலைமைத்துவம் எப்பகுதியில், எக்காலத்தில் முதலில் தோன்றி பண்பாட்டு பரம்பலுக்கு தடையாக விளங்கிய வற்றை விளக்குவதற்கு வழி சமைத்திருந்தது என்பது இன்னும் தெளிவாக்கப்படவில்லை. வளங்களை ஒர் அணிப்படுத்துகின்ற முகாமைத்துவத்தில் விசுவாமித்திரன் பங்கும், பரத்துவாச, அகத்திய முனிவர்களின் பங்கும் தெளிவாக அமைந்திருந்தமை போன்று, கணபதியினுடைய பங்கும் பணியும் அமைந்திருக்க வேண்டும் என மட்டுமே கொள்ளலாம். தீபகற்ப இந்தியாவிற்குத் தெற்கே முகாமைத்துவ - கணக்கியல் முறையின் சிந்தனையுடன் கணபதி மரபு இனைக்கப்பட்டிருந்த முறைமையினை புராணீக ஆதாரங்கள் வாயிலாக காண்கின்றோம். பொல்லாப் பிள்ளையார் பற்றிய கணபதி மரபினை இக்கருத்தமைவிற்குச் சிறந்த உவமையாகக் கொள்ளலாம்.

எனவே "ஈழத்துணவும் காழகத்தாக்கமும்" தீபகற்ப இந்திய சமூகத்திற் கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்திலிருந்து, பின்னர் சோழப் பெரும் பேரரசர்களது பேரரசமுகாமைத்துவம் ஈறாக வாணிப மார்க்கத்தினை வழிப்படுத்தி நின்ற முறையில், இப்பிராந்தியத்திற் கணபதி வழிபாடு உலகியல் வாழ்க்கை மரபுகளுடன் இருமுறைப்பட்ட வகையிற் கலந்து, தமது தனித்துவமான பரிமாணமொன்றை அடைந்திருந்தது. தரைவழியாகவும், கடல்வழியாகவும் கணபதி வழிபாடு தென், தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையேயான மக்களின் உலகியல் வாழ்விற், பொருளியல் வாழ்வில், பண்பாட்டு வாழ்விற் பங்கெடுத்திருந்த நிலைகளையே தொல்லியற்சான்றுகள் இன்று எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், நாம் கணபதி வழிபாடு தொடர்பாக இன்று எதிர் நோக்கியுள்ள பிரச்சினை என்னவென்றால், தென்னாசியாவைவிட, தென்கிழக்காசியாவிலேயே கணபதி வழிபாட்டு மரபின் காலத்தால் முற்பட்ட சுவடுகளைக் காணமுடிவது என்பதாகும்.

ஏனெனில், பர்மா, சீயம், யாவா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளின் விளைவாக கணபதி வழிபாட்டு மரபின் தொன்மை தொடர்பான பல புதிய தகவல்கள் கிடைத்துள்ளன.

அதாவது, நெற்பயிர்ச் செய்கையின் பின்னணியில் உருவான மோதக மரபுடனான கணபதி மரபே தென்கிழக்காசிய நாடுகளில் உருவானதாகவும், மாம்பழ மரபுடனான கணபதி வழிபாட்டு மரபே தென்னாசிய நாடுகளில் உருவானதாகவும் கொள்ளப்படுவதற்கேற்ற தொல்லியற்சான்றுகள் தற்காலத்திற் கிடைத்துள்ளன. தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் விளைவாக அங்கு நெற்பயிர்ச் செய்கை மரபானது இற்றையிலிருந்து 7000 வருடங்களுக்கு முட்பட்டிருந்தது என்ற செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ளமுடிந்தது.

இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையிற் பெருங்கற் பண்பாட்டின் பின்னணியிற் கணபதி வடிவங்கள் கிடைத்திருப்பினும் அவை மோதகப் பண்பாட்டிற்கோ, அல்லது மாம்பழப் பண்பாட்டிற்கோ உரியவை எனத் தீர்மானிப்பது கஷ்டமாக உள்ளது. ஆனால் இலங்கையில் கிடைத்த வரலாற்றுக்கால கணபதியினுடைய வெண்கல விக்கிரகங்களில் மாம்பழம் மட்டுமே காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இருந்தும் இலங்கைத் தீவில் வடகிழக்கு தென்கிழக்கு கடற்கரை ஓரமாக வளர்ச்சி பெற்றிருந்த கணபதி வழிபாட்டு மரபில் தென்கிழக்காசியாவின் செல்வாக்குநிலை ஏற்பட்டிருந்தது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. வடமராட்சியின் கிழக்கில் காணப்படும் மண்டலாய் பிள்ளையார், துளாயில் பிள்ளையார், தில்லையம்பலப் பிள்ளையார் போன்றவை மோதகப் பிள்ளையாராகவே சித்தரிக்கப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். மண்டலாய் என்ற பெயர் அடியானது தாய்லாந்திலுள்ள ஒரு பௌத்தமையம் என்பதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது.

**முடிவுரை:**

"பரந்த இந்தியா" அல்லது "அகன்ற இந்தியா" எனக்குறிப்பிடப்பட்டு வந்த வரலாற்று மரபானது அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியற் கண்டு பிடிப்புக்களின் விளைவாக இந்தோசின, இந்தோனேசிய நாடுகளில் ஏற்பட்டுக்கொண்ட தனித்துவம் வாய்ந்த சுதேசிய பண்பாட்டு அடையாள கட்டுமானத்துடன், பலம் இழந்தும், கருத்துக் குன்றியும் வருவதனை காண்கின்றோம். இதுவரை காலமும் இந்தியப் பண்பாட்டு ஊற்றுக்களே தென்கிழக்காசிய நாடுகளின் பண்பாட்டுக் கட்டுமானத்திற்கு அடிப்படையை இட்டுக்கொடுத்திருந்தன என நம்பப்பட்டு வந்தது. ஆனால் அக்கருத்து நிலையானது. அண்மைக் காலங்களில் தென்கிழக்காசிய சுதேசிய வரலாற்று, தொல்லியல் ஆய்வாளர்களால் பலவீன நிலைக்குட்படுத்தப்பட்டு வருவதனைக் காணலாம். அவ்வாறான ஒரு கருத்துருவப் பின்னணியிலேயே தென்கிழக்காசியாவில் கணபதி வழிபாடு பற்றிய தொன்மை, தோற்றம் பற்றிய வாதப், பிரதிவாதங்கள் அமைவதனைக் காண்கின்றோம் நேபாளம், தீபெத், சீனா, கொரியா, யப்பான், தைவான், இந்தோனேஷியா, மலேசியா, தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ், கம்பொடியா ஆகிய நாடுகளில் புராதன காலத்தில் கணபதி வழிபாடு மேன்மையுற்றே காணப்பட்டது. ஆனால் இன்று யாவாவிலும், பாலித்தீவிலுமே அம்மரபானது புராதன தொடர்ச்சியான பண்பாட்டுப் பகைப்புலத்துடன் கூடியதாக அழியாமல் பாதுகாக்கப்பட்டு கொண்டிருக்கின்ற நிலமையைக் காண்கின்றோம். பிறமதத் தாக்கத்தினால் தனித்துவமான கணபதி வழிபாடு பாதிப்பிற்குட்படுத்தப்பட்டமையின் காரணத்தினாலேயே வழிபாட்டிற்குப்பின் கணபதியை கடலிலே எறிந்துவிடும் மரபு விநாயகர் சதுர்த்தியைத் தொடர்ந்து நிகழ்வதனைக் காணலாம். ஒல்லாந்தர்கால இலங்கையில் கோமயமும் அறுகம் புல்லுமே கணபதியின் குறியீடாக உருவகிக்கப்பட்டு தலைவாசற்படியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள மரபினையும் காணமுடிந்தது.

நன்றி: "பத்மம்" -
Felicitation volume of Prof. S. Pathmanathan. Both Birthday Celebration

## இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்ட நூல்களும் கட்டுரைகளும்

1. Dr. S.S. சர்மா, 1992: "காலத்தை வென்றுநிற்கும் சமயம்", நவசக்தி விநாயகர் அநாவர்த்தன மகாகும்பாபிஷேகம், சிறப்பு மலர் சீசெல்சு இந்துக்கோயிற்சங்கம், PP160-169 (SEYCHELLES HINDU KOVIL SANGAM)
2. செ.கிருஷ்ணராசா 1990: "இந்திய தென்கிழக்காசியத் தொடர்புகளும், இந்துப் பண்பாடு பற்றிய சில பிரச்சினைகளும், ஒருவரலாற்றுக் குறிப்பு, சிந்தனை Vol. IV, No. I pg 68 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீட வெளியீடு.
3. A.L Bassam (Ed); A Cultural History of India, Oxford Uni. pul, p.442
4. Marg; A Special Volume of the Journal of Asian Art.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் ஆதரவில், வரலாற்றுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கத் தொடரில் இக்கட்டுரையாசிரியரால் 13ஆம் Feb. 1998 நிகழ்த்திய சொற்பொழிவின் கட்டுரை வடிவமே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயக வழிபாட்டின் தொன்மை

P. உதயசாந்தினி
வருகை விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

நம் வாழ்வோடு பின்னிப்பிணைந்த அம்சங்களுள் சமயமும் ஒன்றாகும். மனிதர்கள் ஒவ்வொருவரும் தம் பாரம்பரிய மரபுகளிற்கும் நம்பிக்கைகளிற்கும் ஏற்ற வகையிற் சமயத்தைக் கடைப்பிடித்த எல்லாம் வல்ல இறைவனை பல்வேறு வடிவங்களில் வணங்குகின்றனர் இவ்வகையில் இந்து மதத்தவர்களால் சிறப்பாக வழிபடப்படும் தெய்வங்களுள் ஒன்றாக விநாயகர் நிகழ்கின்றார். எந்தச் செயலையும் செய்யத் தொடங்குமுன் விநாயகரை வணங்கியே செய்யும் மரபு நீண்டகாலமாக மக்களிடையே நிலவி வருகின்றது. விநாயகர் சாணம், மஞ்சள், அறுகம்புல் போன்ற பொருட்களால் எளிய முறையில் எழுந்தருளக்கூடியவராகவும், ஆலமரத்தடி, அரசமரத்தடி, ஆற்றங்கரைச்சந்தி, சாலைகள் என எங்கும் எழுந்தருளுபவராக இருப்பதனால் மக்களால் விரும்பித்தொழப் பெறுகின்றார். காணாபத்திய சமயத்தவர்களால் விநாயகர் முழுமுதற் கடவுளாக வணங்கப்படுகின்ற அதேவேளை ஏனைய இந்துமதப் பிரிவினருக்கும் பொதுமையான தெய்வமாகக் காணப்படுகின்றார். மேலும் சமண சமயத்தவர் "அருகநாயகர்" எனவும் பௌத்தர் "கணபதி தெய்யோ" எனவும் வணங்குகின்றார்கள். இவ்வகையில் இந்த மதத்தவர்மட்டுமல்ல சமண, பௌத்த மதத்தவரும் வழிபடும் தெய்வமாக விநாயகர் விளங்குகின்றார். இத்தகைய சிறப்புப்பெற்ற விநாயக வழிபாட்டின் தொன்மை பற்றி நோக்கல் சிறப்புக் குரியதாகும்.

பிள்ளையார் வழிபாடு நம்நாட்டில் மட்டுமேயன்றி இந்தியா, பர்மா, சீயம், ஜவா, சுமத்ரா, போர்னியோ, கம்போடியா, இந்தோனேசியா, சம்பா, திபெத், துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம், கேர்மான், மங்கோலியா, ஜப்பான், மெக்சிக்கோ, பெரு, எகிப்து, கிரேக்கம், இத்தாலியம்,முதலிய பல நாடுகளிலும் வெவ்வேறு பெயர்களில் பல நூற்றாண்டுகளாக நிலவியமைக்குரிய சான்றுகள் காணப்படுகின்றன. நம் நாட்டிற்கு அண்மையிலுள்ள இந்தியாவில் நரசிம்மவர்மன் (கி.பி.630-663) எனும் பல்லவ மன்னன் சாளுக்கிய அரசர்களைப் போரில் தோற்கடித்து வாதாபி என்னும் நகரத்திலிருந்து பிள்ளையாரைக் கொண்டுவந்தான். அதன் பின்னர்தான் பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் பரவுவதாயிற்று என சில ஆராய்ச்சியாளர்கள் கூறி வந்ததன் பின்னணியில் தமிழகத்திற்கு விநாயகர் வழிபாடு பல்லவர் காலத்திற்றான் புகுந்தது என்ற கருத்து பல காலமாக நிலவி வந்தது. ஆனால், விநாயக உருவத்திலுள்ள "யக்ஷ" அம்சங்களைக் கண்ட ஆனந்தகுமாரசுவாமி இது மிகப் பழைய வழிபாடு என எடுத்துக் காட்டியுள்ளார். வடநாட்டில் கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட நாணயங்களில் விநாயகர் உருவம் பொறிக்கப்பட்டிருப்பதை அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். (Narain.A.K. 1978) யானைமுகத்தினையுடைய கடவுளின் உருவங்கள் பழந்தமிழகத்திற் காணப்படாவிட்டாலும்கூட ஆந்திர மாநிலத்திலுள்ள அமராவதிச்சிற்ப அழிபாடுகளிடையே யானைமுகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் சிற்பம் காணப்பட்டுள் ளமை குறிப்பிடத் தக்கது. (Coomaraswamy A.K. *1971: 7)* சிவனுக்கும், "கணேச" அதாவது கணங்களின் தலைவன் என்ற விருதுப்பெயர் மகாபாரதத்திற் காணப்பட்டாலும்கூடப் பொதுவாக கணேசன் என்ற பெயர் விநாயகருக்கே உரித்தானது.

சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலும் விபரிக்கப்படும் பூத வழிபட்டிலிருந்து தோன்றியதே விநாயகர் வழிபாடு என அறிஞர் வாதிடுவதால் விநாயகர் வழிபாட்டின் தோற்றத்தினைச் சங்க இலக்கியத் திலே காணலாம் என்று கொள்வது தவறாகாது (Subramanian.N *1966)* தமிழகத்தின் அண்டை மாநிலமாகிய ஆந்திர தேச்த்திலுள்ள அமராவதிச் சான்றுகளும் இதனையே உறுதிசெய்கிகன்றன.

ஈழத்தில் இத்தகைய பழமையுடைய வழிபாடு "கணேச வழிபாடு" என்பதனை உறுதிப் படுத்தும் கல்வெட்டுச் சான்றோடு சிற்பங்களும் அவற்றுக்கான தடயங்களாக அமைந்துள்ளன. இத்தகைய சான்றுகள்கூட பண்டைய ஈழத்தின் நாகரிக மையங்களில்லொன்றாகிய அநுராதபுர மாவட்டத்திற்தான் காணப்படுகின்றன. இதற் குரிய கல்வெட்டுச் சான்றாக அம்மாவட் டத்திலுள்ள வனசிம்ஹ விகாரைக் கல்வெட்டு (201) அமைகின்றது. இக்கல்வெட்டில் "கணஸ லெதன" என்ற குறிப்புக் காணப்படுகின்றது இதனை மொழி பெயர்த்த பரணவித்தான "ஸகஸ" என்றால் தானமாக வழங்கப்பட்டது என்பதைக் கூறி ஒரு குழுவாற் (கணம்) தானமாக வழங்கப்பட்ட குகை என அதற்கு விளக்கமளித் துள்ளார். இக் காலத்தில் வியாபாரக் குழுக்கள் இயங்கியமைக்குச் சான்றுகள் காணப் பட்டாலும் கூட பரணவிதானா கூறும் விளக்கம் போது மானதாக அமையவில்லை. பூதகணம் என்ற பதமே இக் கல்வெட்டில் "கண" என குறுக்க மடைந்திருக்கிறது எனவும் ஊகிக்கலாம். இப் பூதங்கள் எல்லாவற்றிலும் தலைவனே கணேச அல்லது கணபதியாகும் (சி.க. சிற்றம்பலம் *1996).*

இத்தகைய ஊகம் சரியானதே என்பதை மகிந்தலையில் கண்டக சேத்தியத்திலுள்ள கணங் களின் சிற்பங்களும் உறுதி செய்கின்றன. "எல்லாவல" கிறிஸ்தாப்தத்திற்கு முன்னரே கணபதி வழிபாடு ஈழத்தில் நிலைத்திருந்ததைக் கண்டக சேத்தியத்திலுள்ள கணங்களின் உரு வங்கள் உறுதி செய்கின்றன என எடுத்துக்காட்டி யுள்ளார். (Ellawala. H. *1969:158-159)* இத்தகைய கருத்தையே பரணவிதானவும் கொண்டிருந்தார். பல்வேறு பாவனைகளில் இக்கணங்கள் சித்தரிக் கப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமானவை குதிரை, பன்றி, யானை முகங்களுடன் காணப்படும் கணங்கள்ஆகும். மேலும் இவற்றுள் சிறப்பானது யானை முகத்துடன் காணப்படும் கணத்தின் உருவமாகும். தும்பிக்கையுடனும் இரு கரங்களுடனும் உள்ள இக்கணத்தினால் சூழ வேறு கணங்களும் காணப்படுகின்றன. இத் தகைய வழிபாடு ஆரியருக்கு முன்னுள்ள வழி பாடென்பது அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. பின்னர்தான் ஆரியரின் இலக்கியங் களில் கணபதிபற்றிய ஐதீகங்கள் எழுச்சி பெற்றன. (Majumthar, R.C*1987:198 )*

துர்அதிஷ்டவசமாக இவ் வழிபாட்டின் விபரங்கள் தமிழகத்திலோ அன்றி ஈழத்திலோ காணப்படவில்லை. இதுபற்றிய விபரங்கள் பல்லவர் காலத்திற் பின்னர்தான் காணப்படுவ தாலும் சங்க இலக்கியங்களில் கணபதி என்ற சொல் காணப்படாததாலும் அறிஞர்கள் இவ்வழி பாடு பிற்பட்டதென்ற கருத்தினை முன்வைத் துள்ளனர். இக்காலத்தில் சிவன், முருகன், மாயோன்போன்ற தெய்வங்கள் போன்றுபிர தான நிலையை விநாயக வழிபாடு பெறவில்லை. எனினும் இன்றும் இந்து சமய வழிபாட்டு மரபில் விநாயகர் முன்னிலை பெறுவதும் ஈழத்து இந்து சமய வரலாற்றில் விநாயகர் வழிபாடு பெற்றி ருக்கும் செல்வாக்கினை எடுத்தியம்புகின் றது என்றால் மிகையாகாது. (சி. க. சிற்றம்பலம் *1996 ).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் விநாயக வழிபாடுபற்றி நோக்கும் போது இருக்கு வேதத்தில் "கணனாம் த்வாம் கணபதிம் " எனும் குறிப்பு உண்டு. யசுர் வேதத்திலுள்ள சதருத்திரியம், வாஜனேயசம் ஹிதை என்பவற்றிலும் கணபதி பற்றிய குறிப் புக்கள் உண்டு. கணபதி தைத்திரிய ஆரணியத்தில் "தந்தின்" என்றவாறு தந்தத்தை உடையவர் என்று சுட்டப்படுகின்றோம். கணபதி உபநிடதம் "ஓம் கணபதியே வணக்கம் நீயே காணும் உண்மை. நீயே படைப்பவனும் காப்பவனும் அழிப்பவ னாய் நீ இருக்கின்றாய். நீயே, எல்லாமாயுள்ள பிரமம். நீயே என்றுமுள்ள ஆன்மா என்பதில் ஐய மில்லை. உன்னிடம் இருந்தே பிரபஞ்சம் தோன்று கின்றது. இப்பிரபஞ்சம் எல்லாம் உன்னிடமே ஒடுங்கின்றது. நீயே பிரமன் விஷ்ணு ருத்திரன் எனக் குறிப்பிடுகின்றது.

இற்றைக்கு சுமார் மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் மக்களின் பழம் பெரும் நூலாகிய தொல்காப்பியத்தில் விநாயகர் வழிபாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இக்காலத்தில் சித்திரையை முதல் மாதமாகக் கொண்டு ஓர் ஆண்டு கணிக்கப் பெறுகிறது. இங்ஙனம் இன்றி மிகப் பழங்காலத்தில் ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு ஓர் ஆண்டு கணித்தல் பண்டை அறிஞர்களின் வழக்கமாக இருந்து வந்தது. சூரியனுக்குரிய ஓரை (ராசி) சிங்ஓரை (சிம்ம ராசி) என்றும் அதற்குரிய மாதம் ஆவணிமாதமாதலின் ஆவணி தொடங் கியே மாதங்களை எண்ணுதல் முறையென்றும் பண்டையோர் கொண்டிருந்தனர். இவ்வுண்மை " "காடும்மலையும் முல்லை எனவரும்" தொல் காப்பிய சூத்திரத்தில் நாச்சினார்க்கினியர் எனும் சிறந்த உரையாசிரியரால் குறிப்பிடப்பட் டுள்ளது.

இவ்வாறு ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு கணிக்கும்முறை சுமார் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வழக்கத்தில் இருத்தல் வேண்டும் என வானநூல் ஆராய்ச்சிவல்லோர் (Astronomers) கூறுகின்றனர். ஆவணி மாதம் ஆண்டின் முதல் மாதமாக கணிக்கப் பெற்று வந்த இப்பண்டைக்காலம் முதலே பிள்ளையார் வழிபாடும் தோன்றி நிலவி வந்திருத்தல் வேண் டும். பிள்ளையார் சதுர்த்திவிழா ஆவணி மாதத் தில் இன்றும் கொண்டாடப்பட்டு வருவத னால் இவ்வுண்மை அறியப்படும். இதனால் விநாயகர் வழிபாட்டின் பழமையும், பெருமையும் யாவர்க் கும் இனிது விளங்கும்.

விநாயகர் வழிபாடு பற்றிய ஒருவகைக் குறிப்பு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திரக்குறளிலும் காணப்படுவதாக தோன்று கின்றது. திருவள்ளுவர் தம் திருக்குறளை எல்லாச் சமயத்தவர்களுக்கும் பொதுவாக இயற்றி இருப் பதனால், மற்றைய நம் சமய ஆசிரியர் களைப் போல பிள்ளையாரை முதற்கண் குறிப்பிட்டுத் துதிக்கவில்லையாயினும் அவர்தம் முதற் குறளில் ஆதிபகவன் என்றது. பிள்ளையாரைக் கூடக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஒரு செயலைத் தொடங்குவதற்குமுன் அதன் தொடக்கத்தில் முதலில் முன்னர் தொழப்பெறுபவர் பிள்ளையார் "முன்னனே யானை முகத்தவனே" என இராமலிங்க வள்ளலாரும் பாடியிருத்தலைக் காணலாம். திருவள்ளுவர் ஆதிபகவன் என்றது பிள்ளையாரைக் குறிக்கின் பிள்ளையார் வழிபாடு பண்டைக்காலம் முதலே இருந்து வந்தமை தெளியப்படும்.

கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் விநாய கரை கணபதியாக கருதி வழிபடும் முறை வடஇந்தி யாவில் வழங்கியது. சமுத்திரகுப்தனின் அலகாபாத் சாசனம் "கணபதிநாகன்" எனும் அரசன் ஒருவனைப் பற்றி குறிப்பிடுகின்றது. இந்தியாவிலுள்ள கணபதியின் மிகப் புராதன படிமங்கள் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுக் குரியவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். கர்நாட கத்தில் வாதாபி கணபதிபடிமம் கிடைக்கப் பெற் றுள்ளது. தக்கணதேசத்தில் சாளுக்கியர் காலத்தில் சப்த மாதர்களோடு விநாயகரின் படிமம் அமைவு பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திக் கலம்பகத்தில் கடவுள் வாழ்த்திலே கணபதியை

"கரியின் முகவனை
அரியின் மரகனை
உருகி நினைப்பவர்
பெருமை பெறுபவரே"

எனப் போற்றுகின்றது.

மேலும் தேவாரங்களிலும் "கணபதீச்சரம்" பற்றிய குறிப்புக்கள் உண்டு. உதாரணமாக "அங்கமும் வேதமும்... " என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

இவற்றைவிட விநாயகரின் தோற்றம் பற்றியும் பெருமை பற்றியும் எடுத்துக் கூறப்படும். கதைகள் விநாயகரின் தொன்மையைக் காட்டு கின்றன எனலாம். விநாயக புராணம், கந்த புராணம் ஆகியனவற்றில் விநாயகர் தோன்றி யமை பற்றிய கதைகள் கூறப்படுகின்றன. மேலும் விநாயகர் பற்றி சிவமகா புராணம், பிரமகைவர்த் தன புராணம், மச்சய புராணம் முதலியவற்றில் இழிந்த பல கதைகள் இடம்பெற்றுவிட்டன. அக்கதைகள் பிற்காலத்தில் இடைச் செருகல்க ளாகப் புகுத்தப்பட்டிருக்கலாம். பிள்ளையாருக்கு யானை முகம் அமையநேர்ந்தமைக்கு உரிய காரணத்தை விளக்க நினைத்து அப்புல்லிய இழிந்த பொருந்தாக் கதைகள் புனையப்பட் டுள்ளன. பிள்ளையாருக்கு யானைமுகம் அமைந் தமை அரிய பெரிய தத்துவநுட்பக் கரத்தை உட்கொண்டதாகும். பண்டைய பாரதநாட்டுத் தவமுனிவர்கள் ஒசை ஒலிகளுக்கு எல்லாம் மூல முதலாக விளங்குவது பிரணவம் என்னும் ஓங்கார என்பதனை அருளாலும் அநுபூதியினாலும் கண்டறிந்து ஓங்கார மந்திரத்தின் உருவத்தினை நினைப்பிக்கும் ஒரு வடிவமாகவே தும்பிக்கை அமைந்துள்ளது எனக் கூறுகின்றனர்.

விநாயகரின் பெருமையை உணர்த்தும் வரலாற்றுக் கதைகளும் பிள்ளையாரின் தொன் மையை எடுத்துக்காட்டுகின்றன எனலாம். விநாயகர் மாம்பழம் பெற்றகதை, வியாசர் சொல்ல விநாயகர் மகாபாரதத்தை எழுதியகதை, சிவன் முப்புரங்களை எரிக்கச் சென்றகதை, ஔவையாரை, விநாயகர் அகவல் பாடச்செய்து கைலை சேர்த்தகதை, அகத்தியரது கமண்ட லத்தைக் காக வடிவில் வந்து கவிழ்த்து காவிரி நதியை உண்டாக்கியகதை, கஜமுகாசுரன் கடுந்த வம் புரிந்து சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்று தேவர்களைத் துன்புறுத்திய போது தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட அவர் கணபதியிடம் கஜமுகாசுரனை அடக்கி தேவர் களிற்கு அருள் புரியுமாறு கட்டளையிட கணபதி கஜமுகாசுரனுடன் பெரும்போர் புரிந்து மெய் யறிவு புகட்டி அருள்புரிந்தகதை, அடியார்களை துன்பத்தளையிலிருந்து காத்தருள விநாயகர் "அனலாசுரன்" எனும் கொடியவரை உண்டார். அப்போது எல்லா உயிரினங்களினதும் வயிற்றில் கொடிய வெப்பம் உருவாகி துன்பம் அடைந்தன. அப்போது ரிஷிகள் விநாயகரைக் குளிரச் செய் வதற்காக அறுகம்புல்லை மாலையாகச் சொரிய விநாயகரது வெப்பம் தணிய உயிரினங்களினது வெப்பமும் தணிந்து மகிழ்வு பெற்றகதை என்பன விநாயகரின் தொன்மையை எடுத்துக் காட்டு கின்றன.

எங்கள் நாட்டிலே பிள்ளையார் கோயில் இல்லாத ஊரே இல்லை என்று சொல்லி விடலாம். ஆற்றங்கரையிலும் , குளக்கரையிலும், மருதமரத்தடிகளிலும் என எங்கும் விநாயகர் எழுந்துருளியுள்ளார். நம் நாட்டில் விநாயகப் பெருமானின் புராதன ஆலயங்கள் பலவற்றின் அழிபாடுகள் வன்னிப் பகுதியிலும், பூவரசம்குளப் பகுதியிலும், புராதன அநுராதபுரம், பொல நறுவை, களுத்துறை, தெய்வந்துறை முதலிய இடங்களிலும் கிடைக்கப்பெற்றுள்ளன. நாடெங் கிலும் பரந்த விநாயக வழிபாட்டை இவை காட்டுகின்றன.

இன்றும் பொலிவோடு விளங்கும் பிள்ளை யார் ஆலயங்கள் பல இருக்கின்றன. நல்லூரிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம் இலங்கைப் பரராசசேகரனாற் கட்டப்பட்டப் பட்டது. கருணாகரத் தொண்டமானால் உரும்பி ராயில் அமைக்கப்பட்ட கோயில் இன்றும் கருணாகரப் பிள்ளையார் கோயில் என வழங்கப் படுகிறது. இரகுவம்சத்தைத் தமிழிலே தந்த அரிசகேசரியினால் நீர்வேலியில் அமைக்கப் பெற்றது. அரசகேசரிப் பிள்ளையார் கோயில், சுழிபுரத்திலே கண்ணைக்கோதிக் காக்கைப் பிள்ளையார் ஆலயத்தை அழிக்க வந்த அந்நிய தளபதியின் கண்ணைக் கோதிய அற்புத வரலாற்றி னை பறாளை விநாயகப் பள்ளின் மூலம் அறிந்து கொள்கின்றோம். மானிப்பாயில் மருதடி விநாய கர் ஆலயமும் சிறப்பாக குறிப்பிடத்தக்க தாகும். யாழ்ப்பாண இராட்சிய ஆரியச்சக்கர வர்த்திகள் காலத்திற்கு முன்பே இக் கோயில் இருந்ததாக கூறப்படுகின்றது. தொடர்ந்து போத் துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களிலும் செல்வாக் குப் பெற்று விளங்கியது.

நாட்டின் கிழக்குப் பகுதியிலே அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயில் புகழ் பெற்றது. வடக்கே கீரிமலை போன்று கிழக்கே ஆடி அமாவாசையன்று பிதிர்க்கடன் தீர்க்கும் புண்ணிய தலமாக இது சிறப்புப் பெறுகின்றது, மலையகத்தில் விஜய நகர நாயக்கர் காலத்தே சிறப்புப் பெற்ற கட்டுக் கலை செல்வ விநாயகர் ஆலயமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். மகோற்சவச் சிறப்புக்களோ மாபெரும் கோயில் அமைப்புக்களோ இல்லாமல் மகிமை பெறும் முறிகண்டிப் பிள்ளையார் கோயிலும் வடம ராட்சி வரணிப் பகுதியிலுள்ள தில்லையம் பலப் பிள்ளையார் கோவிலும் சிறப்பாகக் குறிப் பிடப்படவேண்டும்.

நம் நாட்டில் உள்ள அரசடி, மருதடி ஆற்றங் கரைப் பிள்ளையார் கோவில்களும் இன்று குடமுழுக்குப் பெற்ற கோயில்களாக மாறி விட்டன. இவ்வகையில் நம்நாட்டில் உள்ள விநாயகர் ஆலயங்களின் தொகை அதிகமாகக் காணப்படுவதால் விரிவஞ்சி தென்மராட்சிப் பிரதேச விநாயகர் ஆலயங்களின் விபரங்களைக் கூறிக்கொள்ளலாம்.

1. ஸ்ரீ பரமானந்த பிள்ளையார் கோயில்:
   தாவளை, இயற்றாலை,
   போத்துக்கேயர் காலத்திற்கு முற்பட்டது.

2. சப்பச்சி மாவடிப்பிள்ளையார் கோயில்:
   சாவகச்சேரி, 200 வருடங்கள் பழமை வாய்ந் தது.

3. ஸ்ரீவேதவனப் பிள்ளையார் கோயில்:
   கல்வயல், சாவகச்சேரி, பல வருடங்களிற்கு முன் வேதாரணியத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

4. குளக்கட்டுப் பிள்ளையார் கோயில்:
   கொடிகாமம் 180 வருடங்களிற்கு முற்பட்ட ஆலயம்.

5. கேசரப்பிட்டி பிள்ளையார் கோயில்:
   தாவளை, இயற்றாலை, சாவகச்சேரி.
   200வருடங்களிற்கு முற்பட்ட ஆலயம்.

6. ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்:
   நாவற்குழி, கைதடி,
   ஏறக்குறைய 200 ஆண்டுகளிற்கு பழமை வாய்ந்தது.

7. கற்பித்தார் பிள்ளையார் கண்ணகை ஆயலம்:
   பெரிய நாவலடி, கொடிகாமம், ஒல்லாந்தர் காலக் கோயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஸ்ரீ செல்வப் பிள்ளையாகோயில்:
சிவன்கோயில் வீதி, மட்டுவில், சாவகச்சேரி.

9. ஸ்ரீ சிதம்பர விநாயகர் கோயில்.:
சரசாலை வடக்கு சாவகச்சேரி.

10. ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்:
பனையடி, மட்டுவில் வடக்கு சாவகச்சேரி.

11. ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்:
புராணக் கேணி, மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

12. பிள்ளையார் கோயில்:
கும்பாவெளி கொடிகாமம், சாவகச்சேரி.

13. தோட்டத்துப் பிள்ளையார் கோயில்:
மந்துவில், கொடிகாமம்.

14. குருக்கள் மாவடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார்
கோயில்: மிருசுவில், சாவகச்சேரி.

15. சித்தன் மாவடிப் பிள்ளையார் கோயில்:
கல்வயல் வடக்கு, சாவகச்சேரி.

16. வள்ளக்குளம் ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார்
கோயில்:
மறவன்புலோ, சாவகச்சேரி.

17. புலுட்டையன் ஆலடிப் பிள்ளையார்
கோயில்:
கல்வயல், சாவகச்சேரி.

18. கொம்புதட்டி ஸ்ரீ பிள்ளையார் கோயில்:
கரம்பைக் குறிஞ்சி கிழக்கு, சாவகச்சேரி.

19. ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில்:
கும்பிட்டான்புலம் வரணி வடக்கு.

20. ஆரியர் கறுக்காய் ஸ்ரீ சித்தி விநாயகர்
கோயில்:
வரணி வடக்கு, சாவகச்சேரி

21. அரசடிப் பிள்ளையார் கோயில்:
மிருசுவில், சாவகச்சேரி.

22. கொல்லங்கிராய் பிள்ளையார் கோயில்:
நுணாவில், சாவகச்சேரி.

23. ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர்
கோயில்:
பெருங்குளம், சாவகச்சேரி.

24. ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்:
இத்தியடி, சங்கத்தானை, சாவகச்சேரி.

25. திருநீலகண்ட வெள்ளைமாவடிப்
பிள்ளையார் கோயில்:
புகையிரதவீதி, மீசாலை.

26. புலுட்டையன் பிள்ளையார் கோயில்:
நுணாவில், சாவகச்சேரி.

27. மருதடி பிள்ளையார் கோயில்:
நுணாவில், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

28. வீரகத்திப் பிள்ளையார் கோயில்:
நுணாவில், சாவகச்சேரி.

29. மணங்குளாய் பிள்ளையார் கோயில்:
நுணாவில், சாவகச்சேரி.

30. சம்ப பிள்ளையார் கோயில்:
சம்பாதவளி விடத்தற்பளை, மிருசுவில்.

இன்று கோயில்களில் குடமுழுக்குப் பெற்ற கோயில்களாக மாறிவிட்டன. இருந்த போதிலும் எங்கள் கிராமிய வழிபாட்டு முறையும் கோயில் களிலும் நின்று நிலவுகின்றன. மோதகம் அவித்து மடை பரவி அப்பனை வணங்கும் அந்த அற்புதக் காட்சி அன்பு மிகுந்தது அருள் நிறைந்தது.

இவ்வகையில் இந்த மதத்தவர் மட்டுமல்ல சமண, பௌத்த மதத்தவரும் கடைப் பிடிக்கும் விநாயக வழிபாடானது மிகத் தொன்மையானதெனக் கொள்ளலாம். நாம் எந்தச் செயலையும் செய்யத் தொடங்கு முன்விநாயகரை வழிபடும் அளவுக்கு விநாயகர் வழிபாடு மக்கள் வரிழ்வோடு இணைந்திருக்கும் பின்னணி. விநாயக வழிபாட்டின் தொன்மையைக் காட்டு கின்றது. தமிழகத்தில் பல்லவ காலத்தில்தான் விநாயகர் வழிபாடு புகுந்தது எனக் கூறினாலும் அதற்கு முன்பே விநாயக வழிபாடு நிலவி யிருக்கும் என கருத இடமுண்டு. மேலும் விநாயகரின் தோற்றம், பெருமை பற்றிக் கூறப் படும் கதைகள் விநாயக வழிபாட்டின் தொன் மையைக் காட்டுகின்றன. நம் மிகத் தொன்மை வாய்ந்த இந்து சமய வரலாற்றில் விநாயக வழிபாட்டின் தொன்மையும் நிச்சயம் நிலவி யிருக்கும். இன்றும் பல விநாயகர் ஆலயங்கள் தொடர்ச்சியான வளர்ச்சியாக சிறப்புப் பெறுகின்றன. தென்மராட்சியில் மீசாலையில் எழுந்தருளியிருக்கும் திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கும்பாபிஷேக மலரில் விநாயகரின் தொன்மை பற்றியும் தென்மராட்சி யிலுள்ள விநாயக ஆலயங்களின் விபரமும் குறிப்பிடுதல் மிகப் பொருத்தமானதாகும் என எண்ணுகின்றேன்.

## உசாத்துணை நூல்கள்


1. சி.க சிற்றம்பலம் — ஈழத்து இந்து சமய வரலாறு
பாகம்-1
1996-திருநெல்வேலி
பக்கம்:-347-349

2............ — இலங்கைத் திருநாட்டின்
இந்துக் கோயில்கள்
இந்துசமய திணைக்களவெளியீடு
1994. பக்கம்:-142-148




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3........ "கோபுரம்"
பிள்ளையார் பெருமை
2003, கொழும்பு

4. வை. அநவரதவிநாயகமூர்த்தி
சிவநெறிச் சிந்தனைகள்
கொழும்பு, 2000
பக்கம்:-1-3

5. மஹா கும்பாபிஷேக மலர்
அருள்மிகு கற்பித்தார் பிள்ளையார் கண்ணகை ஆலயம்
2010, கொழும்பு
பக்கம்-10-12

6. ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான புதிய சித்திர தேர் வெள்ளோட்ட சிறப்பு விழா மலர்
1998, யாழ்ப்பாணம்
பக்கம்:-20

**நடராஜர் :-** சைவத்தின் பரம் பொருளான சிவனுக்கு ஆயிரம் திருநாமம் பாடியும், திருவுருவங்களைப் படைத்தும் போற்றி வழிபடுவது சைவமரபு. சிவனது திருவுருவங்களில் தலையானதும், பிரசித்தி பெற்றதும் மிகையான தத்துவ விளக்கங்களைக் காட்டுவது நடராஜர் வடிவம் என்பது குறிப்பிடப்பாலது.

**நடராஜர் தாண்டவம் :-** நடராஜரின் தாண்டவங்களின் வகைகளை நோக்கும் போது, அவை பஞ்சகிருத்தியங்களை வெளிக்காட்டுகின்றன. சைவ சமய மரபின்படி நடராஜர் ஆடாவிட்டால் பிரபஞ்ச இயக்கமே நின்றுவிடும் என்பது நம்பிக்கையாகும்.

| ஏழுவகைத் தாண்டவங்களும் | | ஐந்தொழில்களும் |
|---|---|---|
| 1. காளிகா தாண்டவம் | - | படைத்தல். |
| 2. கௌரி தாண்டவம் | - | காத்தல் |
| 3. சந்தியா தாணடவம் | - | காத்தல். |
| 4. சங்கார தாண்டவம் | - | அழித்தல். |
| 5. திரிபுர தாண்டவம் | - | மறைத்தல். |
| 6. ஊர்த்துவ தாண்டவம் | - | அருளல். |
| 7. ஆனந்த தாண்டவம் | - | ஐந்தொழில்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறுவகைச் சமயங்களில் காணாபத்தியம்

திரு. சு. வீரசுதாகரன்
(B.A, P.G.D. in Edu, P.G.D. in Popu, Dip in Fishers)
ஆசிரியர், (இலங்கை திறந்த பல்கலைக்கழக பகுதிநேர விரிவுரையாளர்)

**காணபத்தியம்**

மரபுரீதியாக இருந்து வருகின்ற சண் மதங்களிலே வைதீக வழிபாட்டு மரபுகள் கணபதி வழிபாடு முக்கியமானதொன்றாகும். இன்று இந்துக்களின் வாழ்வியலில் அறுவகைச் சமயங்கள் ஒன்றியைந்து காணப்படுகின்றது. இச் சமயங்கள் தோற்றம் பெற்ற இடமாக பாரத பூமி விளங்குகின்றது. சமயங்களை இரு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். வேதங்களை முதனூலாக ஏற்றவை ஒரு பிரிவாகவும் வேதங்களை ஏற்காதவை மற்றொரு பிரிவாகவும் வகுத்துள்ளனர். இதில் வேதங்களை ஏற்றவை வைதீக சமயம் எனவும் வேதங்களை ஏற்காதவையே அவைதீக சமயம் எனவும் பிரித்துள்ளனர். வைதீக சமயங்கள் ஆறும் வேதங்களை பொது நூலாகவும் ஆகமங்களை சிறப்பு நூலாகவும் கொண்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அவையாவன காணபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் என்பவை அறுவகைச் சமயங்கள் ஆகும்.

அறுவகைச் சமயங்களை வடமொழியில் சண்மதங்கள் என பொருள்படும் இதன் கருத்து (சட் - ஆறு, மதம் - சமயம்) இதனையே அறுவகைச் சமயம் என்பர். அறுவகைச் சமய தோற்றம் பற்றி திருமுறைகளிலும் மெய்கண்ட சாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது. அவை சைவத்தோடு ஓரளவு ஒத்தும் முரணியும் நிலவிய புறப்புற, புற, அகம்புற அகச்சமயங்களில் (இவை ஒவ்வொன்றும் ஆறு தனிப் பிரிவுகளை கொண்டவை) காணப்படுகின்றன.

*"முன்னமிரு மூன்று சமயங்கள் அவையாகிப்*
*பின்னையருள் செய்த பிறையாளன்"*
*எனத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும்*
*"ஆறுசமயத் தலைவராய் நின்றவருக்கன்பராய்*
*மறுசமயச் சாக்கியர்தம் வடிவினால் வருந் தொண்டர்"*

எனச் சேக்கிழாரும் குறிப்பிடுகின்றனர்.

இதனால் சண்மதங்கள் சிறப்புப் பெறுகின்றன. சண்மதங்கள் என்பது ஆய்விற்குரியதாகும். அவைதீக சமயங்களாக பௌத்தம், உலகாயுதம், சமயணம், சாக்கியர் முதலிய சமயங்கள் அடங்கும். காணபத்திய நெறி என்பது கணபதியை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் சமயமே காணபத்தியமாகும். என சண்மத பிரதித் தாபகர் என்னும் ஏகான்மவாதியாகிய ஸ்ரீ சங்கராச்சாரியார் தமது காலத்தில் நிலவிய வைதீக சமயங்களான காணபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் ஆகிய மதங்களை மீள் தாபிதம் செய்துள்ளார்.

தமிழ் நாட்டில் புறக்கோட்டை மாவட்டம் பிள்ளையார் பட்டுக் கோயிலிற் காணப்படுகின்ற கணபதி சிற்பமும், வேலஞ்சேரி, உத்தரமேரூர்ப் புடைப்புச் சிற்பத் தொகுதியும் கணபதி வழிபாடு கி.பி 5ம், 6ம் நூற்றாண்டுகளில் நிலையாமைக்குச் சான்றுகள் என்பர். கி.பி 7ம் நூற்றாண்டில் அறிமுகமாயிற்று என்பதும் ஒன்று. (நரசிம்மபல்லவன் வடக்கே வாதாபிக் கரையை வென்று அங்கு நிலவிய விநாயகர் வணக்கத்தால் கவரப்பட்டு, அதனை தமிழ் நாட்டிலே அறிமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தான் என்பர்) 7ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழிலக்கிய நூல்களிலோ தோத்திரங்களிலோ விநாயகர் பற்றிய செய்திகள் கிடைக்காததா லேயே இவர்கள் இம்முடிவுக்கு வந்திருக்க லாம். ஆனால் இருக்கு வேதத்திலேயே கணபதி பற்றிய செய்தியுண்டு என்பது அறிஞரின் முடிபு.

இருக்கு வேதத்தில் "கணங்களின் தலைவர்" (கணபதி), ஞானிகளின் ஞானி அல்லது "கவிஞர்களின் கவி" (கவீனாம்கவி), "அரசர்களின் அரசர்" (ஜ்யேஸ்டராஜா) என்று போற்றப்படு பவர் கணபதியே என்பர். ஆனால் அவருக் கேயுரிய யானைமுகம் கூறப்படாமை யால் இக்கூற்றினைத் திட்டவட்டமாகக் கொள்ளல் இயலாது. ஆனால் தைத்திரீய ஆரணியகத்தில் தந்தத்தை உடையவர் எனக் கூறப்படும் கடவுள் கணபதியே என்பதில் ஐயம் இல்லை. காயத்திரி மந்திரத்திலும் "தந்தத்தை உடையவர் எமது சிந்தனைகளை வழிப்படுத்துக" என்று கூறியுள் ளமையும் கவனிக்கத்தக்கது.

இஃது எவ்வாறாயினும் இதிகாச காலத்தில் கணபதி விநாயகராக, தமக்குமேல் தலைவர் இல்லாதவராக ஆகி விட்டார். விக்கினங்களை தீர்த்தமையினால் விக்கினேசுவரன் என்ற திருப் பெயர் கணபதிக்கு உண்டு. விக்கினம் - தடை, ஈசுவரன் - இறைவன், ஆன்மாக்கள் ஆணவத் தாலே மூடப்படாமல் இருக்க, அவற்றிற்குத் தடைகளை உண்டாக்கி, ஈற்றில் அருள் புரிபவர் என்பதே இத்திருப்பெயருக்குப் பொருள். பரம் பொருளின் வெளிப்பாடு ஓசையினின்றே ஏற்படு வதாகும். "ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே" என அப்பர் சுவாமிகளும்.

கணபதியினுடைய தும்பிக்கை ஓங்கார மாகிய பிரணவ வடிவமானது அதற்கு அடை யாளமாக "உ" எனச் சுழியிடுவதும் வழக்கம். இதில் வட்டமாக இடும் சுழி விந்து ஆகிய சக்கரத்தையும் கீறாகிய கோடு, நாதமாகிய சிவத்தையும் குறிப்பதால் சக்தி, சிவம் ஆகிய இரண்டினதும் உள்ளடக்கமாகப் பிள்ளையார் சுழி அமைந்தது. அகர, உகர, மகரச் சேர்க்கையா லாகும் "ஓம்" எனும் பிரணவத்தைக் கணபதியி னுடைய தும்பிக்கை குறியீடாகப் புலப்படுவதும் எனக் கொள்ளலாம். "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" விநாயகப் பெருமான்.

சிவபெருமான் ஆண், பெண் என்ற இருபால்களும் ஓர் உருவாய் அமைந்தவர் என்பதற்கு அவரின் இடப்பாகத்தைச் சக்தியாகிய உமையின் பாகமாய்க் (அர்த்தநாரி - அர்த்தம் - பாதிரிநாரி - பெண்) காட்டுதல் உண்டு. கணபதி யின் தந்தம் முறிக்கப்பட்ட வலப்பாகம் பெண் மையையும், இடப்பாகம் ஆண்மையையும் கொண்டதாய்க் கூறுவர். மகாகணபதிக்குப் பத்துக் கரங்கள் குறிக்கப்படும். அவற்றுள் ஒரு பக்க ஐந்துகரங்களும் முறையே விட்டுணு, சிவன், மன்மதன், வராகம், தாம் (கணபதி) ஆகிய ஐவரையும் குறிக்கும். மற்றைய ஐந்து கரங்களும் இலக்குமி, பார்வதி, இரதி, பூதேவி, வல்லபை ஆகிய ஐவரையும் குறிக்கும். பிரமம் விலங் காகவும், மனிதனாகவும் தோற்றுவதென்பதைக் காட்ட அவருக்கு யானை முகமும் மனித உடலும் உள்ளன.

கணபதிக்கு கிருதயுகத்தில் தீ போன்ற நிறத்துத் திருமேனியும் சிங்க வாகனமும் பத்துத் திருக்கரங்களும் கொண்டு விநாயகர் என்ற திரு நாமத்தோடு விளங்குவார். திரேதயுகத்தில் ஆறு திருக்கரங்களும் வெண்ணிறத் திருமேனியும் மயில் வாகனமுங் கொண்டு மயூரேசர் என அழைக்கப்படுவர். துவாபார யுகத்தில் இவருக்கு நான்கு திருக்கரங்களே இருக்கும். இக்காலத்தில் இவர் திருநாமம் கஜானனர், மேனியின் நிறம் சிவப்பு, கலியுகத்தில் புகைநிறம் (கபிலநிறம் - இதனால் கணபதிக்குக் கபிலன் என்ற திருநாமம் வழங்கும்) பூண்டு தும்ரகேது என்ற நாமத்தோடு இரு திருக்கரங்களும் குதிரை வாகனமும் உடையவராய் விளங்குவார். (இது காணப்பத்தி யர் கருத்து ஆனால் நான்கு திருக்கரங்களோடு தும்பிக்கையும் சேர்ந்து அவரை ஐங்கரனாகவே மூர்த்தம் அமைத்து வழிபடுகின்றோம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை முகமும் பருத்த வயிறும் மோதகம் ஏந்திய திருக்கரமும் கணபதியின் இன்பமே வடிவான பரிபூரணத் தன்மையைக் காட்டுவதாகவும், பூரணப் பிரமத்தின் உருவகமே இந்தத் திருக்கோலம் எனவும் காணபதர் கொள்வர். எலியாகிய ஆன்மாவை வாகனமாகக் கொண்டு, அண்டசராசரங்களையும் தமது திருவயிற்றினுள்ளடக்கிக் கருணையாகிய மதநீரைப் பொழிந்த வண்ணம் விநாயகப் பெருமான் விளங்குகிறார். கன்னமதம் முருகியல் ஞானம் எனவும், கபோலமதம் (கபோலம் - கழுத்து) ஆன்மஞானம் எனவும் பீஜமதம் பிரமஞானம் எனவும் கொள்ளப்படும்.

*"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்*
*கற்குஞ் சரக்கன்று காண்"*

(திருவருட்பயன் - காப்பு)

கணபதிக்கு ஐந்து திருக்கரங்கள் உள்ளன என முன்னரே கூறப்பட்டது. இவ்வைந்து கரங்களும் ஐந்து தொழில்களையும் புரிவன வாகும். பாசம் ஏந்தியகை படைத்தலையும், தந்தம் ஏந்திய கை காத்தலையும், அங்குசம் ஏந்தியகை அழித்தலையும், தும்பிக்கை மறைத் தலையும், மோதகம் ஏந்தியகை அருளலை யும் குறிப்பன என்பர்.

கணபதி பிரமசாரி என்றே நாம் கொண்டு வழிபடுகின்றோம். ஆனால் கணபதியாரோ வல்லபை, நீலசரதவதி, சித்தி, புத்தி ஆகிய நான்கு சக்திகள் உளர் எனக் கொண்டு வழிபாடாற்றுவர். வடமொழியில் உள்ள எழுத்துக்கள் 51. இந்த ஐம்பத்தோரெழுத்துக்களினதும் மூலமாய், பிரணவமாய் நின்றொலிக்கும் கணபதிக்கு ஐம்பத்தொரு மூர்த்தங்கள் உண்டு. அவற்றுள் பாலகணபதி, தருணகணபதி, பத்தகணபதி, வீரகணபதி, சக்திகணபதி, துவஜகணபதி, சித்திகணபதி, அல்லது பிங்கல கணபதி உத்கிருஷ்டகணபதி, விக்கினராஜகணபதி, கூரிப்ர கணபதி முதலாக முப்பத்திரண்டு மூர்த்தங்கள் வணக்கத்திற்குரியன. தமிழ் மக்கள் பிள்ளையார் என்ற திருநாமத்தோடு இதுவரை ஆலயங் களிலும், ஆறு குளக்கரைகளிலும், அரச மரங்களின் கீழும் எழுந்தருளப்பண்ணி வழிபாடாற்றுகின்றனர். க்ஷணிகலிங்கம் (மா, சர்க்கரை முதலியவற்றால் உடனுக்குடன் சிவலிங்க வடிவைச் செய்து வழிபடுவதற்கான முறைமை) போன்று சாணத்தால் பிள்ளையார் செய்து அறுகம்புல்லை உச்சியில் குத்தி வைத்தும் மஞ்சட்பொடியால் அவ்வாறு செய்தும் வைத்து வழிபடலும் உண்டு. காணபத்திய மதம் மகாராஸ்டிர தேசத்திலே (பம்பாய்) முதன்மையான மதமாக நிலவி வருகின்றது.

தோபிகரணம் - (தோப்புக்கரணம்) இட்டும், சிதறு தேங்காய் அடித்தும் விநாயகர் சந்நிதியிலே வழிபாடு நிகழத்துவர். செவிகளை மறுகைகளால் பற்றி இருந்து எழுந்தும் நெற்றியில் குட்டியும் வழிபடலே தோபிகரணம் என்ப தாகும். ஆணவத்தை முற்றாகத் தகர்த்துப் பரஞானத்தைப் பெறுவதனைக் குறியீடாகக் காட்டி நிற்பதே சிதறு தேங்காய் அடித்தல், ஸ்கந்தபராணம், காஞ்சி புராணம் முதலான நூல்களிலே கணபதியின் திருவவதாரம் கூறப்படும்.

பொதுசன நூல

*"பிடியத னுருவுமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்*
*கடிகண பதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"*

என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கணபதி தோற்றத்தினை அழகாகப் பாடி யுள்ளமை யாவரும் அறிந்ததே. வாதுளாக மம், கணபதி சிவபெருமானின் கண்டத்திலிருந்து தோன்றியதாகக் கூறப்படுகின்றது. விநாயகர் புராணம் விநாயகரின் தோற்றம், அவர் கஜமுகா சுரனை வதைத்தமையாகிய செய்திகளை விரிவாக எடுத்துரைக்கும். அதன் சுருக்கம் வருமாறு.

ஒரு காலத்திலே கஜமுக (யானைமுக) அசுரன் சிவபெருமானை நோக்கிப் பெருந்தவஞ் செய்து அளவில்லாத பல வரங்களையும் பெற்றுக் கொண்டான். தனது வர மகிமையாலே செருக் குற்ற அவன் தேவர்களைப் பெரிதும் வருத்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னான். "என்னைக் காணும் போதெல்லாம் கரங்களைப் பொத்திப் பிடித்து மூன்றுமுறை குட்டி, கைகளை மாறிச் செவிகளைப் பிடித்து மூன்றுமுறை இருந்தெழுதல் வேண்டும்" என்று தேவர்களுக்கு கட்டளையும் இட்டான். தேவர்கள் அவன் கட்ளைப் படியே நடந்து வந்தனர். நாட் செல்லச் செல்லக் கஜமுகாசுரனின் அக்கிரமங்கள் அளவுகடந்தன. அவற்றை ஆறாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறை யிட்டனர். சிவபெருமான் அவர்களின் முறை யீட்டுக்கு இரங்கி "உங்கள் துயரை விரைவில் துடைப்போம்" என்று உறுதியளித்தருளினார்.

ஒருநாள் சிவபெருமானும் உமாதேவி யாரும் திருக்கைலாசத்திலே பூங்காவில் அமர்ந்திருந்தனர். இருவரின் திருவிழிகளும் அங்குள்ள சித்திர மண்டபத்தை நோக்கின. சுவர்ப்புறத்திலே "ஓம்" எனும் பிரணவம் ஆண், பெண் வடிவுகள் கொண்ட இரு யானைகளாகத் தோன்றின. உமாதேவியார் அவற்றின் அழகிலே திருநோக்கம் செய்தருளினார். அந்த அருட் பார்வையால் சுவரோவியங்களான களிறும் பிடியும் உயிர்பெற்றுக் கூடின. அந்தக் கூட்டத் தின் பயனாக விநாயகர் தோன்றியருளினார். அம்மையும் அப்பனும் விநாயகர் மீது அருணோக்கம் செய்து, முதலிலே தோன்றியமை யால் அவருக்கு "மூத்த பிள்ளை" என்ற திருநாமத்தை வழங்கினார். சிவபெருமான் "நீ ஆன்மாக்களின் விக்கினங்களைப் போக்கி யருள்வாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். பின்னரும் "தேவர்களை வருத்தும் கஜமுகா சுரனை வதைத்து ஆட்கொண்டு தேவர்களின் இடர் போக்கு" என்று பணித்தருளினார். தந்தையின் பணிப்பை ஏற்றுக் கணபதி கஜமுகாசுரனோடு போராடி அவன் ஆணவத் தினை ஒடுக்கியருளினார். அவன் எலி வாகனமாகி அவரைச் சுமந்திடும் பேறடைந்தான். தேவர் களும் தமது துயரம் நீங்கப்பெற்றனர்.

இது விநாயகபுராணம் கூறும் கதை, கஜமுகாசுரன் தேவர்களைத் தனக்கு மும்முறை தோப்புக்கரணமிட்டு வணங்குமாறு பணித்தான். எனவே விநாயகப் பெருமானுக்கும் மும்முறை தோப்புக்கரணமிட்டு வழிபடுவது கஜமுகா சுரனை வழிபடுவதையே ஒக்கும் எனவும், விநாயகருக்கு ஐந்து முறை தோப்புக்கரணமிட்டு வழிபடலே சிறந்ததென்றும் சைவப் பெரியார் ஒருவர் கூறியது இவ்விடத்தில் நினைவுகூரற் குரியது. விநாயகர் சிவபெருமானின் வேறல்லர். இருவரும் ஒருவரே என்பதைக் கந்தபுராணம் போல விநாயகபுராணமும் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கதே இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, திவ்யன், சுபர்ணன், கருத்மான் முதலிய பல பெயர்களால் அறிவாளிகள் கடவுளைச் சொல்கிறார்கள். ஆயினும் கடவுள் ஒருவரே எனும் இருக்குவேத மகா வாக்கியத்தை இவ்விடத்தில் உளங்கொள்வது பொருத்தமாகும். ஆதலால் விநாயகர் முதலியோரும் அவருடைய திருவருட்சத்தியாம், சக்தியும், சிவமும் நெருப்பும் அதன் சூடும் போல ஒன்றானவை. ஆகவே சிவபெருமான், உமாதேவியார், விநாயகர் என்று பல பெயர்கள் இருந்தாலும் பதி ஒரே பொருளாம். அப்பர் சுவாமிகள் "ஒருவர் தாம் பல பேருளர் காண்மினே" என்றார்

நம்பியாண்டார் நம்பி, ஔவையார் ஆகிய தமிழ் புலவர் பெருமக்கள் கணபதியாகிய விநாயகரை இட்ட தெய்வமாக வழிபட்டு மேன்மைகளை அடைந்தார்கள். விநாயகரை வழிபட்டதால் சுந்தரர், சேரமான் பெருமாள் ஆகியோர் முறையே வெள்ளானையிலும், குதிரையிலும் திருக்கைலாசம் செல்ல, ஔவை யாரோ விநாயகரின் தும்பிக்கையால் தூக்கப் பட்டு இவர்களுக்கு முன்பே திருக்கைலா சத்திலே சேர்க்கப்பட்டார் என்பர். நம்பியாண்டார்நம்பி விநாயகப் பெருமானின் அருளாலே, குருவிடம் சென்று கற்காமலே கலைஞானம் பெற்றதோடு, அவரின் வழிகாட்டலிலே திருமுறைகளையும் சிதம்பரத்திலே பெற்று, தொகுத்துச் சைவ உலகத்திற்கு அளித்தருளினார். சைவர் எக்கருமத தையும் விநாயக வணக்கத்துடனேயே தொடங்கு வார். எழுதத் தொடங்கும்போது பிள்ளையார் சுழி இடுவது சைவ மரபு. எள்ளு ருண்டை, மோதகம், அப்பம், அவல், நெற்பொரி ஆகியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிக்கு உகந்த நிவேதனப் பொருள்கள் என்பார் அருணகிரியார். அறுகு, நந்தியாவர்த்தம் பூ, விநாயகருக்குகந்த பத்திரபுஷ்பங்கள்.

விநாயகர், லம்போதரர் (பெருவயிரர்), கஜானனர் (யானை முகத்தார்), சூர்ப்பகர்ணர் (சுளகுக் காதர்), விக்நராசர், மூஷிக வாகனர் (எலியை வாகனமாகக் கொண்டவர்) முதலாகப் பல திருநாமங்களை அளித்துக் கணபதியினை வழிபடுகின்றோம். மகாராஷ்டிரத்திலே, மயூரக் கிராமத்திலே (மோர்க்கஓன்) எழுந்தருளிய கணபதியை பூமரேசர் என்ற பெயரால் வழிபடுவது வழக்கமாயிருந்து வருகிறது.

பௌத்தர்களும் சமணர்களும் கூடக் கணபதியை வழிபடுவர், இலங்கையிலுள்ள சில பௌத்த விகாரைகளிலே "கணபதி தெய்யோ" என்ற பெயரிட்டு விநாயக விக்கிரகத்தை வைத்து இன்று வழிபடுகின்றனர். அநுராதபுரத்திலுள்ள தொல்பொருளகத்தில் விநாயகர் மோதகத்திற்குப் பதிலாக மாங்கனி ஒன்றை கையில் வைத்திருக்கும் விக்கிரகம் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது. இது விநாயகரும் முருகனும் சிவபிரானிடமிருந்து மாங்கனி பெறப் போட்டியிடும் கதையை நினைவூட்டுவதாகும். ஜாவாவிலும் விநாயக வழிபாடு நிலவியமைக்குச் சான்று, அங்கு கிடைத்த விநாயகர் விக்கிரகங்க ளாகும். அண்மைக் காலத்தில் கபால விநாயகர் (மண்டையோடு தரித்த விநாயகர்) விக்கிரகம் பர்மாவில் கண்டுபிடிக்கப் பட்டது. அதனை இலங்கைக்கு கொணர்ந்து யாழ்ப்பாணத்திலும் தரிசனத்திற்கு வைத்தமை நினைவு கூரத்தக்க தாகும். ஆவணி மாதத்துச் சதுர்த்தி, கார்த்திகை மாதத்துச் சட்டி, சுக்கிர வாரம் (வெள்ளிக்கிழமை) ஆகியன கணபதிக் குரிய விரத தினங்கள் ஆகும்.

**கணபதி வழிபாட்டு வளர்ச்சி**

வைதீக மரபிலே கணபதி வழிபாடு தொடர்பான மேலதிகமான குறிப்புக்கள் எதுவும் கிடையாது. உருத்திர கணங்களுடன் தொடர்புடையதாகவே கணபதி வழிபாடு இடம்பெற்றுள்ளதை அவதானிக்க முடியும். சிவமகா புராணத்திலே சக்தியானவள் அவளுடைய முழு ஆற்றலையும் ஒன்றுதிரட்டி தோற்றுவித்த பிள்ளையே கணபதி என்று கூறப்பட்டுள்ளது. வட இந்தியாவில் குப்தர் காலத்திலே கணபதி வழிபாடு சிறப்பாக இடம்பெற்றுள்ளதற்கு சான்றுகள் கிடைத்துள்ளன. அபராபதிபாணியிலே கண்டுபிடிக்கப்பட்ட சிற்பங்களிலே ஓர் உருவம் யானைமுகம் தந்தம் துதிக்கை என்பவற்றுடன்கூடிய வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை மிகவும் பழமையானதாகக் கொள்ளப் படுகின்றன. மேலும் இக்காலத்தில் கணபதி என்ற பிரயோகம் கல்வெட்டுக்களில் காணப்படுவதையும் அவதானிக்க முடியும். மேலும் இக்காலமளவில் அமைந்த பஞ்சாயிதன கோயில்களிலே விநாயகருக்கும் ஆலயம் அமைக்கப்பட்டதனை அவதானிக்கலாம். கி.பி 5ம் நூற்றாண்டிலிருந்து விநாயகர் படிமங்கள் பெருமளவிலே கிடைக்கின்றன. இதிகாச மரபிலே விநாயகர் மகாமேரு மலையிலே மகாபாரதத்தை வரைந்தார் என்ற வரலாறு இந்துக்கள் மத்தியிலே விநாயகரைப் போற்றுவதற்கு வழிசெய்தது. இதனைச் சுட்டுகின்ற வகையிலே ஆலயங்களிலே சிற்பங்களும் ஓவியங்களும் திகழ்வதை இன்றும் காணலாம்.

புராணங்களில் விநாயகருடைய உற்பத்தி தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. ஸ்கந்த புராணத்தில் சிவனும் சக்தியும் நாரதீய புராணத்தில் சங்கட நாசனம் எனும் பகுதியில் நாரதர் துதி இடம்பெறுகிறது அதிலே விநாயகர் பற்றிய பல குறிப்புக்கள் இடம்பெறுவதை அவதானிக்கலாம். கி.பி 6ம், 7ம் நூற்றாண்டிலே தட்சண தேசத்துக் குகைக் கோயில்கள் சிலவற்றில் கணபதி சிலைகள் உண்டு. இங்கு விநாயகர் சிலைகள் சப்த மாதர்களோடும் காணப்படுதல் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தக்கணதேசத்து சாளுக்கிய மன்னனாட்சிக் காலத்திலே வாதாபியில் விநாயகர் வழிபாடு பெரு வளர்ச்சி பெற்றதை தொல்லியல் சான்றுகளும் இலக்கியக் குறிப்புக்களும் கூறுகின்றன. மேலும் தக்கண தேசமானது விநாயக வழிபாட்டைத் தமிழ் நாட்டிற்கு பரப்பியதிலே அதி முக்கிய இடம் பெறுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமிழ்நாட்டிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி வழிபாடு மிகவும் தொன்மையானது என்பதற்கு பல குறிப்புக்கள் கிடைத்துள்ளன. ஔவையாருடன் தொடர் புடைய கதைகளிலே அவரும் விநாயகர் பாடிய தும் பூசை செய்தலும் தொடர்பான கதைகள் சிறப்பானவை விநாயகர் அகவலை சொந்த வரலாறும் கணபதி காலமாக இருந்து வருகிறது.

தமிழகத்திலே பிள்ளையார்பட்டி என்ற இடத்திலே செய்யப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் கி.பி 5ம் நூற்றாண்டுக்கு முன்பே கணபதி வழிபாடு அங்கு சிறப்பாக இருந்ததென்று கூறப்படுகிறதென அறியமுடிகிறது. தேவாரப் பாடல்களில் கணபதிபற்றிய குறிப்புக்கள் கிடைத்துள்ளன. உதாரணமாக சம்பந்தருடைய "பிடியதனுருகுமை கொளமிகு கரியது..." என்ற பாடல் கணபதியின் உற்பத்தியைச் சுட்டி நிற்கின்றது. மேலும் கணபதீஸ்வரம் பற்றிய குறிப்புக்கள் கணபதி வழிபாடு இருந்ததற்கு ஆதாரமாகும். சாளுக்கியருடன் போராட வாதாபிக்கு சென்ற பரஞ் சோதியார் (சிறுத்தொண்டர்) திரும்பி வரும்போது கணபதீஸ்வரத்திலே விநாயகர் வழிபாட்டை பிரபல்யமாக்கினார் என்று கூறப்படுவதுமுண்டு.

தமிழிலக்கியத்தின்படி கி.பி 8ஆம் நூற்றாண்டில் இருந்து தென்னிந்தியாவில் விநாயக வழிபாடு மிகவும் பிரபல்யம் பெற்றுக் கொண்டதாக அறியமுடிகிறது. நந்திக் கலம்பகத்தில் இடம்பெறும் குறிப்புக்கள் சுட்டிக்காட்டத் தக்கன. "கரியின் முகவனை அரியின் மருகனை உருகி நினைபவர் பெருமை பெறுவரே" என்று வருதல் சிறப்பானதாகும்.

தமிழ் நாட்டுடன் தொடர்புடையதாகவும் பொதுவாகவும் பல அற்புதக் கதைகள் உண்டு. அவை கணபதி வழிபாட்டு வளர்ச்சியில் பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கின்றது.

உதாரணம் :-

- ஔவையார் கதை
- அகத்தியரின் கமண்டலத்தை காகமாக வந்து தட்டிய கதை
- நம்பியாண்டார் நம்பிக்கு அருள் செய்த கதை
- சந்திரனுக்கு அமிலம் கொடுத்த கதை
- திருமுறை காட்டிய கதை
- மாம்பழக் கதை
- மெய்கண்டருக்கு அருளிய கதை

கணபதி வழிபாட்டிற்குரிய பிரமாண நூல்கள்

- எரம்ப உபநிடதம்
- கணபதி உபநிடதம்
- விநாயகர் புராணம் (பார்க்கோ புராணம்)
- மகாநிர்வாண தந்திரம்
- கணபதி தோத்திரம்
- ஔவையாருடைய விநாயகர் அகவல்
- சங்கரருடைய கணேச பஞ்சதந்திரம்
- பிள்ளையார் கதை (வரத பண்டிதர்)
- நம்பியாண்டார் நம்பியினுடைய விநாயகர் நான்மணிமாலை
- காரிய சித்தி மாலை
- விநாயகர் கவசம்
- பிற்கால தோத்திரப் பாடல்கள்
- விநாயகர் திருவகவல் - நக்கீரர்

**வழிபாட்டு முறைகள்**

☞ கணபதி வழிபாடு ஆரம்பத்தில் வைதீக மரபில் இடம்பெறாதபோதும் வைதீக சார்புடையதாகக் காணப்படுகிறது.

☞ மிகவும் இலகுவான எளிமையான வழிபாடாக இது காணப்படுகிறது. இலகுவில் எழுந்தருளக்கூடிய தெய்வம் கணபதியே ஆகும். கோமயம், மஞ்சள்மா, அரிசிமா, முதலியவற்றில் பிள்யைார் பிடித்து அறுகம் புல் குற்றியவுடன் அவர் எழுந்தருளி விடுவார்.

☞ கணபதி வழிபாடு எல்லாக் கிரியைகளிலும் முதன்மையிடத்தைப் பெறுகிறது. பூர்வக் கிரியை, அபரக்கிரியை, ஆலயக் கிரியை எல்லாவற்றிலும் கணபதி பூசையே முதலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் பெறுகிறது. கணபதிக்கு வழிபாடு செய்யாது எந்தக் காரியம் தொடங்கினாலும் அது இடை யில் தடைப்படும் என்பது மரபாகும்.

☞ கணபதி வழிபாட்டை ஆகமமுறை சார்ந்த தாகவும், ஆகமமுறை சாராததாகவும் இருப் பதைக் காணலாம். சிவாலயங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் விநாயகரை மூலமூர்த்தியாகக் கொண்டு ஆகம முறைப் படி அமைக்கப்பட்ட ஆலயங் களிலும் சிவாகமங்களிற்கேற்ப வழிபாடு நடைபெறு கிறது. அது ஆகம முறைப்பட்ட வழிபா டாகும். இவ்வாறான ஆலயங்களில் நித்திய, நைமித்திய ஆகம கிரியைகள் ஆகமமுறைப் பட்டதாகவே வழிபடப்படுகின்றன.

☞ ஆகம முறைப்பட்ட வழிபாட்டிலே மந்திரோபாசனை அதாவது கணபதிக்குரிய பல மந்திரங்களைக் கூறி அர்ச்சித்து வழிபடு தல் காயத்திரி மந்திரமும் கணபதி வழிபாட் டிலே முக்கியமானது. விநாயகரை மூல மூர்த்தியாகக் கொண்ட ஆலயங்களிலே உலக நன்மைக்காக கணபதி கோமம் செய் யப்படுவதையும் அவ தானிக்கலாம்.

☞ ஆகம முறைப்படாத வழிபாடாக கிராமங் கள் தோறும் மருது, அரசு, ஆல் போன்ற விருட்சங்களின்கீழும் ஆறு, குளம்போன்ற தீர்த்தக் கரைகளிலும் மருத மரத்தின் மத்தியி லும் பிள்ளையாரை வைத்து வழிபடுதல் பொங்கலிட்டு மோதகம், அப்பம், கடலை, எள்ளுப் பொரி, கரும்பு, இளநீர், அவல், தேன்போன்ற அவருக்கு விருப்பமான பல பண்டங்களைப் படைத்து வழிபாடு செய்கி றார்கள்.

☞ கணபதி வழிபாட்டு முறையிலே விரத அனுட்டானங்களாக விநாயகர் சதுர்த்தி முக்கியமான விரதமாகிறது. ஆவணிமாதம் சதுர்த்தியிலே விரதத்தைத் தொடங்கி ஒவ் வொரு மாதங்களிலும் வருகின்ற சதுர்த்தி விரதத்தை அனுட்டித்தல் வேண்டும். இதை விட சங்கடசதுர்த்தி விரதமென்பதும் கணபதி வழிபாட்டாளர்களால் மேற்கொள் ளப்படுகின்றது.

☞ விநாயகர் சஷ்டி விரதமும் முக்கியம் பெறுகின்றது. இதனை பிள்ளையார் கதை, பெருங்கதை என்றும் குறிப்பிடுவர். கார்த் திகை மாதத்தில் வளர்பிறை அனுட்டிக்கத் தொடங்கி 21 நாட்கள் அனுட்டிக்கப்படும். ஆடவரும் மகளிரும் 21 இளை கொண்ட காப்பை கட்டி இவ்விரதத்தை நோற்பர்.

☞ வழிபாட்டில் செந்நிற மலர்களும் திரு வாத்தி, மந்தாரை என்பது முக்கியம் பெறு கின்றது. பத்திரமாக அறுகு, வன்னி, பிரதான இடத்தைப் பெறுகின்றது.

**பிரதிமா இலட்சணம்**
**திருவுருவங்கள்**

◈ ஆசன நிலை விநாயகருடைய ஆசன நிலையை நோக்கும் போது
நிற்கும் நிலை (சமபக்கம்)
நடனமாடும் நிலை (நந்தனநிலை)
என்பவை கொண்டு விளங்குவர்.

◈ கால்கள் குறளமானவை.
உதரம் வயிறு லம்போதரம்

◈ முகம் - யானைமுகம் அதிலே ஒடிந்த கொம்பு, ஒற்றைக் கொம்பு, தும்பிக்கையின் அமைப்பு அகன்ற காதுகள் முகங்கள் என்பவை முக்கிய மாக விளங்குகின்றன.

◈ செந்நிறம் கொண்டவராக விளங்குவார் திருவடி கொண்ட மகுடமாக விளங்குவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ தும்பிக்கையின் அமைப்பு
வாய்க்கு மேலாக அமைந்திருக்கும் பல வளையங்களைக் கொண்டது மிகவும் நுண்மையான பொருளை எடுக்கவல்லது நீண்டதூரம் வளரக் கூடியது பெரும்படி இடப்பக்கம் வளைந்திருக்கும்.

◈ ஐந்துகரமுடையவர் பாசம், அங்குசம், அட்சமாலை, அமுதகலசம், மோதகம் கொண்டிருத்தல் சில திருவடிகளில் முறிந்த கொம்பையும் திருவுருவம் தாங்கி நிற்கும்.

◈ உபவேதம் அணிந்திருப்பார் (பூநூல்)

◈ அரையிலே ஆதிசேடனை அணிந்திருப் பார்.

◈ விநாயகருடைய திருவுருவம் மிருக முகம், தேவ உடல், மனித உடல் என்பவை நன்று சேர்ந்த திருவுருவமாகும்.

◈ பௌத்தர்களும் இவ்வுருவத்தை வழிபடும் தன்மைக்கேற்ப இத்திருவுருவம் அமைந்துள்ளது.

**விநாயகருடைய பிரதிமா இலட்சணங்கள் குறிக்கும் தத்துவங்கள்**

◈ பஞ்சகிருத்தியம் / ஐந்தொழில் தத்துவங்களை விநாயகருடைய திருவுருவம் கொண்டிருக்கிறது.

பாசம் - படைத்தல்
தந்தம் - காத்தல்
மோதகம் - அருளல்
அங்குசம் - அழித்தல்
துதிக்கை - மறைத்தல்

துதிக்கை முத்தொழில்களைக் குறிக்கும் எனவும் கொள்வர்.

◈ விநாயகருடைய திருமுகம் பிரணவத்தைக் குறிக்கும் மோதகம் பூரணத்தைக் குறிப்பதுமுண்டு. லம்போதரம் உலகத்தைக் குறிக்கும். அதில் கட்டப்பட்டுள்ள ஆதிசேடன் எனும் நாகம் உலகத்தை தரு எல்லையில் இயங்க வைப்பதை உணர்த்துகிறது. அகன்ற காதுகள் கூர்மையான பருத்த கேள்வி ஞானத்தைக் குறிக்கும். ஒடிந்த கொம்புப் பகுதி பெண்மைத் தன்மையையும் ஒடியாத கொம்புப்பகுதி ஆண்மையையும் உணர்த்துகிறது. முக்கண்களில் வலது கண் சூரியன், இடதுகண் சந்திரன், நெற்றிக் கண் அக்கினியை குறிக்கின்றது. இத்திருவுருவமானது உயர்திணை, அஃறிணை என்பவற்றையும் கடந்த பெருமாள் விநாயகர் என்பதை உணர்த்துகிறது. அமிர்தக் கலசம் சாகா வரமாகிய மோட்சத்தை / அமுதத்தை வழங்குகின்ற பெருமான் என்பதைக் குறிக்கின்றது.

**கணபதி வழிபாடு தொடர்புடைய சமயக் கோட்பாடுகள்**

விநாயகருடைய பெயர்களும் அவற்றுக்கான விளக்கங்களும் காணபத்திய சமயக் கோட்பாட்டை விளங்க வைப்பதாக அமைந்துள்ளது.

◈ விக்கினேஸ்வரன் - விக்கினங்களைத் தீர்ப்பவன்
◈ கணபதி - பூத கணங்களுக்குப் பதி ஆனவர்
◈ ஞானகரியர் - சித்தி புத்தி போன்ற அறிவை வழங்குபவர்.
◈ ஓங்காரன் - பிரணவ வடிவத்தை உடையவர்.
◈ வக்கிரதுண்டன் - கொடிய மாயையைத் துண்டிப்பவர்.
◈ லம்போதரன் - பானை வயிற்றைக் கொண்டவர்.
◈ ஐங்கரன் - ஐந்து கரங்களை விசேடமாகக் கொண்ட வர்.
◈ ஏகாந்தன் - ஒற்றைக் கொம்பு உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ◈ ஆகுரதர் | - பெருச்சாளி வாகன முடையவர். |
| ◈ கர்ப்பகர்ணர் | - சுளகு போன்ற காது களையுடையவர். |
| ◈ விநாயகர் | - தனக்கு மேலே தலைவன் இல்லாதவர். |
| ◈ கணேசன் | - சிவனுக்கு சமமாகின்ற இறைவன். |
| ◈ ஆனைமுகத்தான் | - யானை முகத்தை உடையவர். |

இவற்றின் பின்னணியில் கணபதியின் கோட்பாடுகள் விரிவடைகின்றன.

**சமுதாயச் செல்வாக்கு**

- இந்துக்களுடைய சமுதாயத்தில் எந்த வழி பாடுகள் நடைபெற்றாலும் முதலிலே விநாயகரை வழிபடுதல் தோத்திரம் செய்தல் வேண்டுதல்கள் செய்தல் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

- பிள்ளையார்சுழி போட்டு காரியங்களை ஆரம்பித்தல் காரிய சித்திகளையும் விக்கினங் கள் தடைகளை நீக்குவதற்கும் எல்லோரும் கணபதியை வழிபடுவர்.

- எந்த இறைவனுடைய சந்நிதானத்திலும் விநாயகருக்கு ஒரு பதம் வகுக்கப்பட்டு முதலிலே வழிபாடுகள் செய்தல் விநாயகர் ஆலயங்களிலே அவர் மூலமூர்த்தியாக இருப் பார்.

- பூர்வக் கிரியை, அபரக்கிரியை போன்ற எல்லாக் கிரியைகளிலும் அவருக்கு முக்கிய செல்வாக்கு அளிக்கப்படுகிறது.

- மிகவும் எளிமையாக எழுந்தருளக்கூடிய தெய்வம் என்பதாலும் சமுதாயத்தில் அதிக செல்வாக்குப் பெறுகின்றது.

- சமயம் சார்ந்த இலக்கியங்கள் நூல்கள் அச்சிடுதல் தோத்திரங்கள் பஜனைபடித்தல் ஆகியவற்றிலே முதலில் காப்புப்படித்தல், அவருக்குத் தோத்திரம் படிக்கின்ற மரபு.

சடங்குகள் - திருமணவீடு, அறுவடை

பௌத்த சமுதாய காலத்தில் கூட விநாயகர் வழிபாடு முக்கியம் பெறுகிறது.

**சைவசமயத் தொடர்பு**

- தென்னிந்தியக் கோயில்களில் விநாய கருக்கு பதம் வகுக்கப்பட்டு அவருக்கு முதல் பூசையுடன் முதலிடம் கொடுக்கப்படுதல் சைவமக்கள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டபோதும் விநாயகரையே முதலி டத்தில் வைத்து வழிபாடு செய்கி றார்கள்.

- சிவனுடைய மூத்த மகனாகக் காட்டப் படுகின்றார். இதனாலும் சைவமக்கள் அவருக்கு முக்கியம் கொடுக்கிறார்கள். மேலும் மாங்கனிபெற்ற கதை சிவனுடன் தொடர்புபட்ட கதையாக விளங்குகிறது.
  விநாயகர் அம்மயப்பரை வலம்வந்து அவர் களையே உலகமாகவும் பரம்பொருளாகவும் காட்டியது. மேலும் சிவலிங்கப் பெருமானை விநாயகர் வழிபட்டதான கதைகள் அதிக மாக விளங்குகின்ற வகையிலே ஆலயங்களில் காணப்படும் ஓவிய சிற்பங்கள் கணபதி வழிபாட்டை சைவசமயத் துடன் தொடர்பு படுத்துகின்றன.

- ஞானகரன் சித்தி, புத்திகளைத் தருபவன், ஓங்காரன், விக்கினங்களை நீக்குபவர் என்ற வகையிலே கணபதியை சைவமக்கள் முக்கி யப்படுத்தி வழிபடுகின்றனர்.

- இன்று சைவர்களால் விநாயகருடைய விரதங் களாக சதுர்த்தி, விநாயக சஷ்டி (பிள்ளை யார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை)போன்ற விரத அனுட்டானங்களை பின்பற்றி வருவதைக் காணலாம்.

* மேற்குறிப்பிட்ட வகையிலே விநாயக வழிபாடானது குறிப்பிட்ட காலப்பகுதிகளிலே இக் காலப் பகுதிகளிலே சைவசமயத்துடன் கலந்து சங்கமமாகிவிட்டதை அவதானிக்கலாம்.

* பிள்ளையார் சுழி குறிக்கும் தத்துவம் ஓங்காரத்தின் சுருங்கிய வடிவம் நாதம், விந்து, வரி வடிவங்களிற்கு ஆதாரமாகும்.

குட்டிக் கும்புடுதல், தோப்பிக்கரணம் போடுதல் என்பவற்றின் தத்துவமாக குட்டிக் கும்பிடுதல் ஆன்மாவினுடைய குண்டலி சக்தியைச் செயற்பட வைத்தலைக் குறிக்கிறது. தோப்பிக்கரணமானது விநாயகருக்கு முன்னிலை யில் ஆணவம், பொறாமை, வஞ்சனை, பஞ்சமா பாதகங்கள் போன்ற கெட்ட குணங்களை தோற்றுவித்தல் அல்லது நீக்கிக்கொள்ளுதலைக் குறிக்கும். சிதறு தேங்காய் அடித்தலின் தத்துவ மானது இறைவனுடைய சன்னிதானத்தில் சிதறு தேங்காய் அடிக்கும்போது ஆன்மாவைச் சூழவுள்ள வலிமையான ஓடாகிய ஆணவ மலம் உள்ளடக்கப்பட்டு வெண்மையான தேங்காய் தெரிவது போல ஆன்மாவின் சுயப்பிரகாசத்தை வெளிப்படச் செய்தல் குறிப்பாக மல நாசத்தை விளக்குகின்றது.

இன்று இந்துக்களின் வழிபாட்டிலும் சடங்கு முறைகளிலும் விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்டு தமது கருமங்களை ஆற்றி வருகின்றனர். அத்துடன் வைதீக சமயத்தவர் மட்டுமன்றி அவைதீக சமயத்தவர்களும் இன்று முக்கிய இடத்தினை வழங்கிவருவதைக காண முடிகின்றது. அத்துடன் நின்றுவிடாது கோயில்களை அமைத்து நித்திய, நைமித்திய காமிய கிரியைகளையும், கும்பாபிஷேகம் என்பவற்றையும்செய்து இறையருளை பெறுகின்றனர்.

## உசாவியவை


1. க.சொக்கலிங்கம் இந்து நாகரீகம். யாழ்ப்பாணம் - 2009
2. ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில் மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர் - 2009
3. இந்துக் கலைக் களஞ்சியம் பாகம் 1 - 1994
4. இரண்டாவது உலக இந்து மகாநாடு மலர் - 2003
5. சைவபோதம் இரண்டாம் புத்தகம்
6. கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் - இந்துப் பண்பாட்டு மரபுகள் வித்தியா வெளியீடு யாழ்ப்பாணம் - 1992
7. இரத்தின சபாபதிப்பிள்ளை.மா, விநாயகர் உண்மைப் பொருள் விளக்கம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை திருநீலகண்ட
வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேக மலருக்கு
எங்கள் வாழ்த்துக்கள்



# கணேசா
# ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்




உங்களுக்குத் தேவையான
சகல கட்டிடப் பொருட்கள், உபகரணங்கள், தீந்தை வகைகள்
அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## GANESHA HARDWARE STORES

கண்டி வீதி, சாவகச்சேரி. KANDY ROAD, CHAVAKACHCHERI


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலை திருநீலகண்ட
வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

கும்பாபிஷேக மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்



ஆலய வேலைகள் யாவும் உரிய ஆகம விதிப்படி அமைப்பதற்கும்
இராஜகோபுர, ஸ்தூபி சிற்பங்கள், கருங்கல் விக்கிரகங்கள்,
ஆசனங்கள், தீர்த்தக் கோமுகை போன்றவற்றின்
சிறந்த உருவாக்கத்திற்கும்
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய ஸ்தாபனம்......

# நாகலிங்கம் சிற்பாலயம்
# Nagalingam Sitpalayam

அராலியூர் சிற்பாசாரியார்
**கந்தசாமி கோபாலசிங்கம்**
[கட்டிட ஒப்பந்தக்காரர்]
நாகம்மாள் கோவிலடி,
அராலி மத்தி, வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம், இலங்கை.

*Araliyoor Sitpasariyar*
**KANDASAMY GOPALASINGAM**
(BUILDING CONTRACTOR)
Nagammal Kovilady,
Araly Center, Vaddukkoddai,
Jaffna, Sri Lanka.

Tel : 077 7111121, 021 7900311

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாகம் 4

# பொது



Digitized by Noolaham Foundat
noolaham.org | aavanaham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் திருமுறைகளும் நம்மவர் செல்நெறியும்

'சிவத்தமிழ்ச் சொல்லழகர்'
ச. லலீசன் M.A. (தமிழ்). M.Ed.
விரிவுரையாளர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

### அறிமுகம்

தமிழ் வேதம் எனப் போற்றப்பெறும் திருமுறைகள் இறையன்பை மேம்படுத்தவல்ல திருப்பாடல்களாக விளங்குகின்றன. திருமுறை என்பதற்குத் தெய்வத் தன்மை பொருந்திய நூல் எனப் பொருள் கொள்ள முடிகின்றது. (முறை நூல்)

பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழும் தேவாரம் என்னும் பெயரை உடையவை. தேவாரம் என்றால் தெய்வத்திற்கு மாலை எனப் பொருள் கொள்ளலாம். (தே - தெய்வத் தன்மை, ஆரம் - மாலை) தே என்பதைத் தெய்வத் தன்மை எனப் பொருள் கொண்டு வாரம் என்பதற்கு அன்பு எனப் பொருள்கொண்டால் தெய்வ அன்புப் பாடல் எனப் பொருள்கொள்ளலாம். முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடல்களாகவும் அடுத்துவரும் மூன்றும் திருநாவுக்கரசர் பாடல்களாகவும் ஏழாம் திருமுறை சுந்தரர் பாடல்களாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், திருக்கோவையார் என்பன எட்டாம் திருமுறைப் பாடல்களாகவும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாம் திருமுறைப் பாடல்களாகவும் திருமந்திரம் பத்தாம் திமுறையாகவும் காரைக்கால் அம்மை, சேரமான் பெருமாள் உள்ளிட்டோர் பாடிய பாடல்களின் தொகுதி பதினோராம் திருமுறையாகவும் சேக்கிழாரின் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் கொள்ளப்படுகின்றன.

### திருமுறைத் தொகுப்பு

முதலாம் இராச இராச சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார் திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்தார் எனத் திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது. சோழர் காலத்தில் பாடப்பட்ட பெரியபுராணம் பின் னாள்களில் பன்னிரண்டாம் திருமுறையாகக் கொள்ளப்பட்டது.

### வடமொழி மந்திரங்களுக்கு ஈடானவை

திருமுறைகள் வடமொழி வேத, ஆகம மந்திரங்களுக்கு ஈடான சக்தி படைத்தவை. இதனாலேயே தேவாரம் வேதசாரம் எனவும் திருவாசகம் உபநிடதசாரம் எனவும் திருமந்திரம் ஆகமசாரம் எனவும் குறிப்பிடுகின்றனர்.



திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பெற்ற கதவைத் திருநாவுக்கரசர் தேவாரம் பாடித் திறப்பித்தார் எனவும் திருஞானசம்பந்தர் மீண்டும் தேவாரம் பாடிக் கதவைப் பூட்டினார் எனவும் அறிகிறோம். வேதங்களால் பூட்டப்பட்ட கதவு தேவாரத்தால் திறக்கப்பட்டது என்றால் தேவாரங்கள் வடமொழி மந்திரங்களுக்கு ஈடானவை என்பதே பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவனுக்குப் பிடித்தவை**

திருமுறைப்பாடல்களில் இறைவன் மிக்க விருப்புடையவர். தன்வாயினாலேயே விருப்பத்தை அவர் தெரிவிக்கும் சந்தர்ப்பங்கள் பற்றிய இலக்கிய ஆதாரங்கள் உள்ளன.

*"நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க*
*அர்ச்சனைப் பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல்*
*- நம்மைச்*
*சொல் தமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்"*

(பெரிய புராணம் - 216)

எனச் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட சிவபெருமான் கூறியதாகப் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. மேலும், சுந்தரருக்குப் பித்தா என்றும் சேக்கிழாருக்கு உலகெலாம் என்றும் இறைவனே அடியெடுத்துக் கொடுத்துள்ளார். திருவாசகப் பாடல்களை இறைவன் தன் கைப்பட எழுதியுள்ளார்.

இவ்வாறு பெருமை பெற்றுள்ள திருமுறைப் பாடல்கள் இன்று எத்தகைய நிலையை எதிர்கொள்கின்றன?

**திருமுறைகள் - இன்றைய நிலை**

இறைதன்மை பொருந்திய திருமுறைப் பாடல்கள் நம்மவர்களது அறியாமையாலும் அலட்சியப் போக்கினாலும் முக்கியத்துவம் குறைந்த நிலையை எய்திவிட்டன.

அ) பாடும்போது விடப்படும் தவறுகள்

பாடசாலைகள், ஆலயங்கள் போன்ற பொது இடங்களில் திருமுறை பாராயணம் மேற்கொள்ளும் சிலர், தாம் ஓதும் பாடல்களில் பிழைகளை ஏற்படுத்திப் பாடும்நிலையை அவதானிக்க முடிகின்றது. பிழையான வார்த்தைப் பிரயோகங்கள் திருமுறைகளின் பெருமைக்குப் பங்கம் ஏற்படுத்துவதோடு தீயபலன்கள் ஏற்படவும் காரணமாகிவிடுகின்றன. அன்றாட வாழ்வியலில் நாம் பிழைவிடும் பிரயோகங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

- அங்கமும் வேதமும் ஓதும் நாவர் என்ற பாடலில் ஓதும்நாவர் என்பதற்குப் பதிலாகச் சிலர் ஓதும் நால்வர் எனப் பாடுதல்.
- திருஞானசம்பந்தர் பாடிய மங்கையர்க்கரசி என்ற பாடலை மங்கையற்கரசி எனப் பாடுதல்.
- இடரினும் தளரினும் என்ற தேவாரத்தில் "இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன் றெமக்கில்லையே அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே" என்பதில் இதுவோ... அதுவோ... என்பதை இதுபோல்... அதுபோல்... எனப்பாடுதல்.
- முத்திநெறி அறியாத என்ற மிகப் பிரபலமான திருவாசகப் பாடலில் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி..." எனப்பாடு வதற்குப் பதிலாக "சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி... எனப்பாடுதல்.
- சிவபுராணத்தில் "கோகழி ஆண்ட குருமணி தன்தாள் வாழ்க" என்ற அடியில் குருமணி தன் என்பதற்குப் பதிலாகக் குருமனிதன் எனப்பாடுதல்.
- பாலுக்குப் பாலகன் எனத்தொடங்கும் திருப்பல்லாண்டுப் பாடலில் "ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாக..." என்ற அடியில் தில்லைச் சிற்றம்பலமே இடமாக என தில்லை என்ற சொல்லைச் சேர்த்துப் பாடுதல்.
- கடையவனேனைக் கருணையினால்... எனத் தொடங்கும் திருவாசகப் பாடலில் "கடையவனே எனைக் கருணையினால்..." எனப் பதம் பிரித்துப் பாடுதல்.

முதலிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடலாம். மேற்குறிப்பிட்டவை இக்கட்டுரையாளர் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்தில் கண்ட தவறுகளாகும். இதைவிட இன்னும் பல சந்தர்ப்பங்கள் இருக்கலாம்.

ஆ] பிழைகள் ஏற்படக் காரணமானவர் யார்?

இவ்வாறான பிழைகள் ஏற்படக் காரணம் யாது? அல்லது காரணமானவர் யார்? என்பதில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. இளமையில் கல்வி சிலையில் எழுத்து", "கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்" முதலிய வாசங் களை இங்கு நாம் நினைத்துப் பார்க்கமுடியும். நாம் அறிந்து வைத்திருக்கின்ற திருமுறைப் பாடல்களிற் பெரும்பாலானவை நமது இளமைக் காலத்தில் எம்மால் அறியப்பட்டவை. இங்கு அறிதல் முறையில் ஏற்பட்ட தவறே பிரதான மானது. ஒரு விடயத்தை எவ்வாறு மனனஞ் செய்கின்றோம் என்றால், செவிவழியாகப் புகுந்த செய்தியை மூளையில் பதித்து வைக்கின்றோம். அல்லது கண்களால் புகுந்த செய்தியை மூளை யில் பதித்து வைக்கின்றோம். பெரும்பாலும் செவிவழியாகக் கேட்பவையே எமக்குரிய அனு பவங்களாகும். பெரும்பாலான சினிமாப் பாடல் களையும் இவ் அனுபவத்தினூடாகவே நாம் ஞாபகத்தில் வைத்திருக்கின்றோம். செவிக ளில் சேரும் வடிவம் பிழையாயின் பின்னர் வாய் மூலம் பாடப்படும்போது பிழையான வெளிப்படுத் துகையே பெறப்படும். கேள்வி ஞானத்தில் பாடும் பழக்கம், "பற்றித்தொடரும் பிழைகளை" ஏற்படுத்திவிடுகின்றது.

பாடல்களைப் பொருளுணர்ந்து பாடும் போது இத்தகைய பிழைகள் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை. நூல்களின் துணையுடன் பாடல்களைப் பாராயணம் செய்தால் இவ்வாறான பிழைகள் ஏற்படுவதைக் கணிசமான அளவு குறைக்கலாம். இவை பற்றிய விடயங்களில் சமயபாடம் கற்பிக் கும் ஆசிரியர்களும் கவனஞ்செலுத்த வேண்டும்.

இ] கிரியைகளில் திருமுறைகள்

பஞ்சபுராணம் என்ற வகையில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் ஆகிய பாடல்கள் பாடப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும். ஆயினும் பல ஆலயங்களில் தேவாரம், புராணம் என இரு பாடல்களுடன் திராவிட வேத கானம் பாடுதல் நிறைவு பெற்றுவிடுவதை அவதானிக்க முடி



கின்றது. கோவிற் பூசகர்களின் அவசரமும் நேரமின்மை என்ற குற்றச்சாட்டும் இவ்வாறு இருபாடல்களுடன் பஞ்சபுராணம் நிறைவுபெறக் காரணமாக அமைகின்றது.

கோவிற் பூசகர்கள் திருமுறைகளை அலட் சியப் படுத்துகின்றார்களோ? எனவும் எண்ண வைக்கின்றது. பூசைக்கிரமங்களில் வேதபா ராயணம், திருமுறைப்பாராயணம், ஆசீர்வாதம் என்ற ஒழுங்கைச் சிலர் கைக்கொள்கின்றனர். பலர் வேதபாராயணத்தை அடுத்து ஆசீர்வாதத்தை மேற்கொண்டபின் திருமுறைபாடுமாறு கிரியை செய்கின்றனர். பூசைகள் யாவும் நிறைவுபெற்று ஆசீர்வாதமும் இடம்பெற்ற பின்னர் திருமுறை பாடுவதற்கு இடம்வழங்கப்படுதல் திருமுறை களை அலட்சியப்படுத்துவதாகவே நோக்கப்பட வேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிடத் திருமுறைபாடும் நேரத்தில் தாமும் சேர்ந்து வழிபாடாற்றுவதை விட்டுவிட்டு அதனை ஒரு இடைவேளை நேரமாகக் கருதும் பூசகர்மார் பலர் உள்ளனர். திருமுறை பாடும் வேளையில் அலட்சியமாக அந்த இடத்தில் இருந்து விலகிச் செல்லுதல் அல்லது அர்ச்சனை முதலான செயற்பாடுகளில் ஈடுபட்டு ஏனைய அடியவர்களையும் திருமுறையின்பால் ஈடுபாடு ஏற்படாமற் செய்தல் முதலிய செயற்பாடுகளில் இந்துக் குருமார் சிலர் ஈடுபடுவதையும் இங்கு வேதனையோடு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. இதனால் கூடியிருக்கும் அடியவர்களும் திருமுறைகளுக்கு உரிய மதிப்பு வழங்கத் தவறிவிடுகின்றனர்.

பெரியபுராணம் பாடப்பட வேண்டிய வேளையில் வேறு புராணப் பாடல்களைப் பாடும் நிலையையும் இங்கு தவறுகளுள் ஒன்றாகச் சுட்டிக்காட்ட முடியும். இவ்வாறு பெரிய புராணம் என்ற போர்வையில் நாம் பாடும் வேறு புராணப் பாடல்கள் சில வருமாறு:

- பரமனை மதித்திடாப் பங்கயாசனன் (கந்தபுராணம்)
- வான்முகில் வழாது பெய்க... (கந்தபுராணம்)
- ஆறிரு தடந்தோள் வாழ்க... (கந்த புராணம்)
- அருவமும் உருவமாகி... (கந்த புராணம்)
- திருவாக்கும் செய்கருமம்... (11 ஆம் திருமுறை)

எமது ஆலயங்களில் வீற்றிருந்து அருளாட்சி நல்கும் இறை மூர்த்தங்கள் யாவற்றினதும் அடிப்படை, சிவாம்சமாக உள்ளமையால் எத் தெய்வத்தின் முன்னும் திருமுறைப்பாடல்களை ஓதுவதில் தவறில்லை.

திருமுறைகளைப் பண்ணுடன் (இராகத்துடன்) பாடுவோர் தொகையும் அருகி வருகின்றது. இவ்வாறு இராகமின்றி ஜனரஞ்சக மற்ற முறையில் பாடுவதும் திருமுறை பாடும் போது மற்றவர்கள் உரிய மரியாதை கொடுக்கத் தவறுவதற்குக் காரணமாக அமைகின்றது. சில ஆலயங்களில் குறிப்பிட்ட ஒரு சிலர், தாமே "வாணாள் ஓதுவார்" எனக் கருதி மற்றவர்கள் பாடுவதற்குரிய சந்தர்ப்பங்களை மடக்கித் தாமே எப்போதும் பாடிக்கொள்வர். இளையவர்களை வளர்த்துவிடும் மனோபாவம் இத்தகையவர்களிடம் இல்லையாதலால் இவர்களுடைய காலத்துடன் திருமுறைகளைச் சீராகப் பாடக் கூடியவர்கள் அருகிவிடுகின்றனர்.

### ஈ) பொது நிகழ்வுகளில் திருமுறைகள்

பொது நிகழ்வுகளில் திருமுறைகள் படும் பாடுபற்றிச் சொல்லவேண்டியதில்லை. விழாக்கள், கூட்டங்கள்போன்ற பொதுநிகழ்வுகள் திருமுறைப் பாராயணத்துடன் ஆரம்ப மாவது வழமை. இதன்போது எழுந்து நின்று மரியாதை கொடுக்கும் வழக்கம் காணப்படுகின்றது. ஆனால் கைகூப்பி வணங்கும் வழக்கத்தைப் பலரிடம் காணமுடிவதில்லை. திருமுறைப் பாடல்களைப் பாடும்போது ஏதோ ஒப்புக்கு எழுந்து நிற்பவர்களைப்போலவே பலர் எழுந்து நிற்கின்றார்கள். பெரும்பாலான பாடசாலைகளில் இந்நிலையே காணப்படுகின்றது. திருமுறைகளுக்கு மதிப்பளிக்கும் அடிப்படை பாடசாலைக்காலத்திலேயே கட்டி வளர்க்கப்பட வேண்டும். ஆனால் பாடசாலைகளில் திருமுறைப் பாராயணம் இடம்பெறும்போது எத்தனை ஆசிரியர்கள் முன்மாதிரியாகக் கைகூப்பித் தொழுகின்றனர்?

பாடசாலையில் இருந்து சமூகத்திற்கு வரும் போது இந்நிலை இன்னும் விசாலிக்கிறது. பொது நிகழ்வுகளில் இறைவணக்கம் என்ற செயற்பாட்டை சம்பிரதாயத்திற்காகச் செய்கிறார்களோ? என எண்ணத் தோன்றுகின்றது. மன ஈடுபாட்டுடன் இறை வணக்க நிகழ்வில் பங்கேற் போரைக் காண்பது அரிதாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணச் சடங்குகள் போன்ற நிகழ்வுகளில் சம்பளத்திற்குத் திருமுறைபாடும் ஓதுவார்மார் பலர் உளர். இவர்களில் பலர் உரத்துப் படிக்க வேண்டும் என்பதைக் காரணம் காட்டி மது அருந்திவிட்டுத் திருமுறைகளைப் பாடித் தொலைக்கின்றனர். புனிதமில்லா வாய்களால் புனிதமான பாடல்களைப் பாடுவதே பிழையான காரியம். இதைவிட இவர்களில் அநேகர் பிழைவிட்டுப் பாடுவதையும் இக்கட்டுரையாளர் நேரடியாகத் தரிசித்திருக்கிறார்.

சிலவிடயங்கள் தமக்குத் தெரியாதவை எனக் கூறிக் கொள்வதைப் பெருமையாகக் கருதும் வேடதாரிகளும் நம்மிடையே இருக் கின்றனர். வேட்டி கட்டத் தெரியாது. சேலை உடுக்கத் தெரியாது என்ற வரிசையில் தேவாரம் பாடத் தெரியாது என்பதும் அவர்கள் நினைக்கும் கௌரவமாக உள்ளது.

உ] புலம் பெயர் நாடுகளில் திருமுறைகள்

புலம் பெயர் நாடுகளில் உள்ள சைவர்கள் திருமுறைப் பாடல்களை தமது வாரிசுகளிடம் கையளிக்கும்போது ஆங்கில மொழி வடிவத்தி லேயே கையளிக்க வேண்டியநிலையில் உள்ள னர். நேரடியாக தேவாரத்தை ஆங்கில வார்த்தை களில் உச்சரித்துப் பாடும்போது உரிய சொற் களுக்கான சரியான உச்சரிப்பு அமைகின்றதா என வழிப்படுத்தவேண்டிய தேவை உள்ளது. இதே வேளை திருமுறைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச்செய்து பரப்பவேண்டிய தேவையும் உள்ளது. இப்படி ஆங்கிலத்தில் எழுதியாவது பாடுகிறார்களே என்று ஆறுதல்பட வேண்டிய நிலையே உள்ளது. ஆயினும் திருமுறைப் பாடல்களின் இறுவட்டுக்களை (CD) வைத்துச் சரியான உச்சரிப்புக்களைக் கையாண்டு பிள்ளை களை வழிப்படுத்துவது ஆரோக்கியநிலைக்கு வழிவகுக்கும்.

**திருமுறைகளின் எண்ணிக்கை தொடரப்பட வேண்டுமா?**

திருமுறைகளின் எண்ணிக்கை பன்னிரண் டாகும். திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பி தனது காலத்தில் பதினொன்று என்றே வகுத்தார். பின்னர் பெரிய புராணம் பன்னிரண் டாவது திருமுறையாகச் சேர்க்கப்பட்டது. எனவே சோழர்காலத்தில் திருமுறைகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தியமையால்



தற்காலத்திலும் இவ்வெண்ணிக்கையை அதிகரிக் கலாமேயென அறிஞர்கள் சிலர் வாதிடுகின்றனர்.

பஞ்சபுராணம் பாடவேண்டிய சந்தர்ப் பங்களில் ஆறு, ஏழு பாடல்களைப் பாடும் வழக்கத்தையும் சிலர் கொண்டுள்ளனர். திரு முறைக்குள் அடங்காத திருப்புகழ், அபிராமி அந்தாதி, வள்ளலார் பாடல் போன்றவற்றைப் பாடும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றோம். எனவே திருமுறைகள் தொடரப்படுவதில் தப்பில்லை. ஆனால் இதனை நடைமுறைப் படுத்தும் தகுதி யாரிடம் உள்ளது என்பதே இங்கு தொக்கு நிற்கின்ற வினாவாக அமைந்திருக் கின்றது.

பஞ்சபுராணம் என்ற ஒழுங்கிலும் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. ஈழத்தில் பிரபலமான தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் கோவிலில் தேவாரம், பெரியபுராணம், அபிராமி அந்தாதி ஆகிய மூன்று பாடல்களையே திராவிட பாராயணம் என்ற நிலையில் பாடும் வழக்கம் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி காலத்திலிருந்து உள்ளது. இவ்வாறான மீளாய்வுகள் மேலும் அலசி ஆராயப்பட வேண்டி யனவாக உள்ளன.

**பண்ணிசைப் பயிலகங்கள் தேவை**

திருமுறைகள் பெருமை பெறுவதற்குப் பண்ணிசைப் பயில்நெறி வளர்க்கப்பட வேண் டும். பண்ணிசை பாடவல்லவர்களைக் கௌர வித்தல், பண்ணிசைப் போட்டிகளை நடாத்து தல், வகுப்புக்களை நடாத்துதல் போன்ற செயன்முறைகள் திருமுறைகள் வளர்வதற்கு ஆதரவாக அமையும். கோவில்களில் இசைத் தட்டுக்கள் மூலம் பக்திப் பாடல்களை ஒலிபரப்பு வதற்குப் பதிலாகத் திருமுறைப் பாடல்களை ஒலிபரப்புவதும் சாலச்சிறந்தது.

**நிறைவுரை**

திருமுறைகள் நமக்கு அளிக்கப்பட்ட அரும்பெருஞ் செல்வங்களாகும். அவற்றை போற்றுவதும் பாதுகாப்பதும் நம்மவர் கடனன்றி வேறில்லை. கோவில்களின் கருவறை வரை செல்லத்தக்க திருமுறைகளை நம் உயிராகக் கருதிச் செயற்படுவோம்.

## பௌர்ணமியின் சிறப்பு

பௌர்ணமிகளின் சித்ராபௌர்ணமி தினத்தன்று மாதத்தின் பெயரும், நட்சத்திரத்தின் பெயரும் ஒன்றாகி சித்திரை மாதத்தில் சூரியன் உச்சபலம் பெறுகிறார். சந்திரன் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கின்றார்.

கார்த்திகை மாத பௌர்ணமி தினத்தன்று சூரியன் கார்த்திகை மாதத்திலும் சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்திலும் சஞ்சரிப்பர். அன்று சந்திரன் உச்ச பலம் பெறுவார்.

வைகாசி மாதம் வரும் பௌர்ணமி விசாக நட்சத்திரத்தில் வரும். அன்று முருக்கடவுள் அவதரித்த தினமாகும்.

மார்கழி மாதத்தில் வரும் பௌர்ணமி திருவாதிரை நட்சத்திரத்தில் வரும் அது பரமசிவனின் திரு நட்சத்திரமாகி ஆருத்ரா தரிசனம் காண பாபங்கள் தொலைந்து விடும். அன்று ஆனந்த நடனமாடுகிறார் நடராஜப்பெருமான்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# இந்துப் பண்பாட்டு மரபில் பசுவின் பெருமை

ப. கணேசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் -I
இந்து நாகரிகத்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

உலக நாடுகளில் வாழ்ந்த மக்கள் இயற்கையின் ஒவ்வொரு கூறுகளையும் தெய்வீக நிலைப்படுத்தி வழிபட்டு வந்ததை அறியமுடிகின்றது. மக்கள் இயற்கையில் ஒவ்வொரு கூறுகளையும் தெய்வீக நிலைப்படுத்தி வழிபட்டு வந்தமைக்கும் தற்பொழுதும்கூட வழிபட்டு வருவதற்கு பிரதான காரணங்களாக தேவையும் பயமும் அமைகின்றன. இந்து மக்கள் காலந்தோறும் பயம், தேவை என்ற இரண்டினையும் பிரதான அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு வழிபாடியற்றி வருவதைக் காணலாம். பயம் என்பது இயற்கையின் சீற்றம் மற்றும் செயற்கையாக நிகழும் நிகழ்வுகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். தேவை என்பது மனிதன் உயிர்வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள் என்பன இன்றியமையாதவையாகும். காலத்தின் மாறுதலுக்கு ஏற்ப தேவைகளும் மாறுபடுகின்றன.

தென்கிழக்காசிய, தென்னாசிய, மேற்குலகம் ஆகிய நாடுகளில் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த, தற்பொழுது வாழ்ந்து வருகின்ற மக்கள் இந்து சமயக் கடவுளர்களான சிவன், சக்தி, விஷ்ணு, முருகன், விநாயகர், பிரமன், சூரியன் ஆகியோர்களுக்கும் மற்றும் தேவ-அரசர்கள், அகத்தியர், காரைக்கால் அம்மையார், இறந்தோர்கள் (மூதாதையர்கள்) மரம் (விருட்சம்), நாய், பாம்பு, பசு (இடபம்) உயிரினங்கள், இயற்கைக்கூறுகள் ஆகியவற்றுக்கும் கலைத்துவம் வாய்ந்த திருக்கோயில்களை நிறுவி வழிபாடாற்றியதையும், இன்று வரை வழிபாடாற்றி வருவதையும் அங்கு கிடைத்த சான்றுகளிலிருந்தும், வழிபாட்டு நடைமுறைகளிலிருந்தும், அறிந்து கொள்ளமுடிகின்றது.

மனிதன் தன்னைப்போல் தன் இனத்தைச் சார்ந்த மனிதரை மட்டுமன்றி, விலங்குகளையும், விருட்சங்களையும் நேசித்ததாகச் சமய நூல்களும் சரித்திர நூல்களும் கூறுகின்றன. இத்தத்துவத்தைத் தற்பொழுதும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக மனிதன் மிருகங்கள் மேல் வைத்திருக்கும் விருப்பம் அளப்பரியது. சில மிருகங்கள் மனிதனில் தங்கிவாழும் தன்மை கொண்டு, மனிதனின் அன்புக்கு பாத்திரமாக வாழுகின்றன. மக்களினம் எந்த மிருகங்களிலிருந்து தோன்றியதோ அந்த இனமரபுச் சின்னமாகவுள்ள மிருகங் களை வழிபடுகின்றனர். இவ்வுண்மையை உலகிலுள்ள ஆதியான மனித சமுதாயங்களில் காண்கின்றோம். அவர்கள் தாம் அந்த மிருகங்களுடன் தொடர் புடையவர்கள் என்றோ அல்லது அம்மிருகங்களினாலே தாம் ஆட்கொள்ளப்படுகின்றனர் என்றோ கருதுகின்றார்கள். உதாரணமாக அவுஸ்திரேலியாவின் முதற்குடி மக்கள் அந் நாட்டுப் பெரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவையையும், பாம்பையும், புழுக்களையும் பயபக்தியுடன் வணங்குகின்றார்கள். ஆதிகால எகிப்தியர் முதலை, பாம்பு, ஆகியவற்றைத் தெய்வமாக வழிபட்டனர். நியூகினியின் அன்மற் பிரிவினர் கும்பிடு பூச்சிகளை தம்மோடு தொடர் புடையனவாகக் கருதுகின்றனர்.

இந்துக்கள் ஒரு சில மிருகங்களையே தொன்றுதொட்டு வணங்கிவருகின்றனர். அவற்றை அவர்கள் வணங்குவதற்கான காரணம் தாம் அம்மிருகங்களுடன் தொடர்புடையவர்கள் அல்லது அம்மிருகங்களிலிருந்து தோன்றிய வர்கள் என்பதல்ல. அம்மிருகங்களின் குணாதிச யங்கள், பயன்கள் அவையுணர்த்தும் தத்துவங்கள் அம்மிருகங்களைப்பற்றிய புராண இதிகாசங் களில் கூறப்படும் உயர்கருத்து ஆகிய காரணங் களைக் கருத்திற் கொண்டே அம்மிருகங்களை இந்து மக்கள் வணங்குகின்றார்கள் என்று கருதுதல் பொருந்தும்.

இந்துப் பண்பாட்டு மரபில் பசு புனிதமான பயன்தரும் தெய்வீகமான பிராணியாக விளங்கி வருகின்றது. பசுவினை மாடு என்றும் சுட்டுவர். மாடு என்றால் செல்வம் என்பது பொருள். “ஆ” என்றும் “கோ” என்றும் “தேனு” என்றும் இந்துக்கள் போற்றி வளர்ப்பர். மாடு (பசு) சிந்துவெளி நாகரிக காலந்தொட்டு இன்றுவரை யிலும் நன்கு முக்கியத்துவம் பெற்று, சிறப்புப் பெற்று விளங்கி வருவதைக் காணலாம்.

உலகத்திலுள்ள மிருகங்கள் யாவற்றிலும் பசு ஒன்றே இந்துக்களால் தொன்று தொட்டு வணங்கப் பெற்று வருகின்றது. எகிப்து, கிரேக்க நாடு, ரோமாபுரி போன்ற தேசங்களில் எருதுகள் மதிப்பிற்குரியனவாகவும் , வணங்குவதற் குரியன வாகவும் போற்றப்பட்டு வருகின்றன. இதே போல் ஸ்பெனின் தேசத்திலும் சண்டையிடும் எருதுகளும் பெருமதிப்புள்ளவையாக இருக்கின் றன.

சாந்தம், அழகு, பொறுமை ஆகிய குணங் களையுடையதாக பசு திகழ்கின்றது. அது ஒரு தாவர பட்சிணியாகும் . மேலும் பசுவிடமிருந்தே இறைவனுக்கு அளிக்கப்படும் பஞ்சகௌவிய மான பால், தயிர், நெய், சாணம் (கோமயம்), சிறுநீர் (கோசலம்) ஆகியவற்றை நாம் பெறுகின் றோம். தெய்வத்திற்கான நிவேதனப் பொருட் களைப் பசுவிடமிருந்து பெறக்கூடியதாக இருப் பதனாலும் மனிதனுக்கு வேண்டிய அடிப்படை தேவைகளும் பெரும் பயன் தருபவையான பால், தயிர், நெய், முதலியவற்றையும் விவசாயத்திற்கு இன்றியமையாததான பசளை முதலிய பொருட் களையும் மனிதனுக்கு கொடுப்பதனாலும் மேற் குறிப்பிட்ட விசேட நற்குணங்களைக் கொண்டி ருப்பதாலும் இந்துக்கள் பசுவை வணங்குவதற் குரிய ஒரு மிருகமாக கருதுகின்றனர் எனலாம். மேலும் சிவனுக்கு பசுபதி எனும் ஒரு பெயர் தொன்றுதொட்டு வழங்கிவருவது சிந்தனைக் குரியதொன்றாகும்.

பசு சாதுவான பிராணி அது பால் சுரந்து எமை வளர்ப்பது பெற்ற தாய் பால் ஊட்டியபின் பசுவே பால் சுரந்து ஊட்டுவதால் அது கோமாதா எனப் போற்றப்படுகின்றது. இந்துக்கள் பசுவைத் தெய்வமாக பூசிப்பர். பசுவின் பால், தயிர், நெய், அதன் சாணம், சலம் எனும் ஐந்தும் பஞ்ச கௌவியம். இவை அபிசேகத்திற்குரிய புனித மான திரவியங்கள். பசுவினை காத்தல் சிறந்த அறமாக போற்றப்படுகின்றது. பசு இனத்தில் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பன தெய்வாம்சமானவை. பசுவைத் தானமாகக் கொடுத்தல் கோதானம் எனப் பெருமைபெற்றது.

பசுவினைப்பற்றி வேதங்கள் கூறுகின்றன. வேதத்தில் முதற்பகுதியாயுள்ள இருக்கு வேதத் தில் பசுவைப்பற்றிப் பாடிய முனிவர் “அதற்கு எவரும் தீங்கு செய்தலாகாது என்றும், அது உருத்திரனின் அன்னை, வசுக்களின் பிள்ளை, அமுதத்தின் மையம், ஆதித்தியனின் சகோதரி அனைவருக்கும் அதிதி. பாவம் அறியாதபிராணி” என்றெல்லாம் அறியத்தருவர். மேலும் வேதங் களுள் ஒன்றான சாமவேத சுலோகங்கள் பரிசுத்த மான பசுவினத்தைப் போற்றுகின்றன. “நீவீர் புண்ணியமானவர்கள் நீங்கள் நன்றாக வாழுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நன்றாகப் பாலைப்பொழியுங்கள் காலையும் மாலையும் பால் தரும் நீவீர் கன்றுகளுடனும் காளைகளுடனும் இன்னும் பொலிவீராக. இங்கே உள்ள புல்வெளி உமக்கு போதுமான தாகுக, இங்கேயுள்ள நீர் நிலைகள் உமக்கு வற்றாத ஊற்றாகுக, நீவீர் இங்கே மகிழ்ச்சியாய் வாழ் வீராக, வளம்பெருக்குவீராக" என அந்த வேண்டு தல்கள் அமைகின்றமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

பசுவின் சிறப்பினையும் முக்கியத்துவத் தினையும் சைவ நாயன்மார்கள் நன்கு போற்றி வந்ததை அறியமுடிகின்றது. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் பசுக்கள் வாழ்க எனப் பாடி யருளியவர். பசுக்களுக்கு துன்பம் வராமல் காத்தவருள் விசாரசருமர் என்னும் சண்டேசுர நாயனார், ஆனாய நாயனார், திருமூல நாயனார் முதலானோர் மிகப் பெரியவர்கள். சைவ நெறி யில் விதிக்கப் பெற்ற எண்வகையான ஸ்தானங் களுள் மாருதஸ்தானம் என்பதும் ஒன்றாகும். அது பசுவின் காலில்பட்ட தூசி நம் உடம்பில் படுதலாம். பசுவின் கால் தூசியில் இலட்சுமி கடாட்சம் உண்டு. திருநீற்றை நிறையப் பூசுதல் ஆக்கிநேயஸ்தானம் எனப்பெறும். திருக் கோவிலில் கிடைக்கும் பெரும் பிரசாதமாய் திருநீறு பூசுதல் பார்த்திபஸ்தானம் என்பதாம்.

பசுவின் உயர்வு கருதியே சைவசித்தாந்தம் ஆன்மாக்களைப் பசு எனக் கூறுகின்றது. பசுக் களுக்குத் தலைவர் என்ற முறையில் சிவபெரு மான் பசுபதி எனத் திருநாமம் பெற்றவர். சைவ சமயத்தின் முதல் நூலான வேதத்திற்கும் பசு என்னும் பெயரும் உண்டு.

பசு இல்லாத வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்சம், கீர்த்தி இல்லையாம் என்றும், பசு இல்லா வீட்டில் இலட்சுமி தரித்து இருக்க மாட்டாள் என்றும், பசு இல்லாத நாடு காட்டிற் குச் சமமாகும் என்று ஈழத்துச் சிதம்பரபுராணத் தில் நவாலியூர் சோ. இலி முருகனார் பாடியுள் ளார்.

பசுவின் உறுப்புக்களெங்கும் தேவர்கள் முதலான பெரியவர்கள் வதிகின்றார்கள் என்பதால் பசு புண்ணிய பிறவி என்பதோடு புனித மானதும் வழிபாட்டுக்குரியதுமாம் என்னும் கருத்தையும் ஈழத்துச் சிதம்பர புராணத்தில் நவாலியூர் சோ. இலி முருகனார் நன்கு போற்றிப் பாடியிருக்கின்றார்.

*"ஆக்களி நூறுப் பெலாம் அமரர் வைகுவார்*
*ஆக்களே இம்மையில் அமுத தேனுவாம்*
*ஆக்களே இறைவனுக்கு ஐந்து நல்குமற்(று)*
*ஆக்களே பூதியும் அளிக்கும் அன்பினால்"*

பசுவின் தலையுச்சியில் சிவனும், நெற்றியில் சக்தியும், மூக்கு நுனியில் முருகனும், கொம்பு களில் பிரம்மாவும், விஷ்ணுவும், கண்களில் சூரி யனும் சந்திரனும் இன்னும் இதர உறுப்புக்களில் ஏனைய தெய்வமூர்த்திகளும் இருப்பதாக எண்ணி வழிபடுவர்.

பசு தெய்வீகமானது பசுவின் அங்கங்கள் ஒவ்வொன்றிலும் தெய்வங்கள் சாநித்தியம் கொண்டு விளங்குகின்றன. இத் தெய்வங்கள அவை எவை என்பதனையும் பசுவின் அங்கங் களில் எங்கெங்கு வீற்றிருக்கின்றன என்பதையும் அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவரது பாடல் கள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன "பசுவின் புலம்பல் (2001)" என்ற நூலில் அருட்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பசுவின் அங்கலட்சணம்" என்ற பகுதியில் நன்கு விபரித்துள்ளார்.

திருக்கோயில் வழிபாட்டிலும் பசு (கோமாதா) முக்கியம்பெற்று விளங்குகின்றது. திருக்கோயில் கிரியைகளில் கும்பாபிஷேகம் முக்கியமானது. இக்கிரியையில் படிமங்களின் கண் திறப்பு நிகழ்ந்து கோதரிசனம் (பசு தரிசனம்) நிகழ்வது மரபாக உள்ளது. கோயில்களில் விக்கிரகங்களின் கண்திறந்தவுடன் விக்கிரகம் முதலில் தன்னைத்தானே பார்க்கவேண்டும் என்பதற்காக கண்ணாடியைக் காட்டுதல் வேண்டும். பசுவின் பின்பாகத்தையும் காட்டுதல் மரபு. பசுவுடன் கன்றும் இருத்தல் வேண்டும். இது "கோதரிசனம்" எனப்படும். கோதரிசனம் அல்லது கண்ணாடி தரிசனம் மட்டும் காட்டி சுருக்கமாக செய்வதும் மரபாகக் காணப்படுகின்றது. மேலும் சிவாலயங்களில் நித்திய பூஜையின்போது கோபூஜை நிகழ்ந்து வருவதை அவதானிக்கலாம். தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்களுள் ஒன்றான திருக்கேதீஸ்வரம், நல்லூர் ஆதீனம் ஆகியவற்றில் இன்றும் கோபூஜை நிகழ்த்தப்படுகின்றன.

பசுவினை இந்துக்கள் திருக்கோயில்களில் மட்டுமல்லாது தத்தம் வீடுகளிலிலும் வைத்து வளர்த்து போற்றி வணங்கிவருவதைக் காணலாம். இந்துக்களது விவசாய செயற்பாடுகளுக்கு மிகவும் இன்றியமையாத மிருகவலுவாக பசு விளங்குகின்றது. உழவர்கள் சிறப்பாக பசுவினையும் எருதுவினையும் போற்றி வழிபட்டு வருகின்றனர்.

இந்துக்களது தைத்திருநாள் அதாவது தைப்பொங்கல் (சூரியப் பொங்கல்) தினத்தின் மறுநாட் கொண்டாடப்படுவது பட்டிப்பொங்கலாகும். இதனை கோபூஜை, பட்டிப்பொங்கல், கன்றுப்பொங்கலெனவும் வழங்கப்படும். பசுவில் எல்லாத்தேவர்களும் இருப்பதாலும் எல்லாக் கிரியைகளும் முடிந்த பின்னர் பசுவிற்கு வணக்கம் செய்து அதனைப் பூசித்து உண்ணவேண்டுமெனச் சமயசாத்திரங்கள் கூறுகின்றன. அதனால் வருடத்தில் ஒரு நாளாவது கோபூசை செய்ய வேண்டும். அதுவும் உத்தராயண புண்ணிய கால ஆரம்பத்தில் செய்வது உத்தமம் என்பதனாலேயே மறுநாள் இதனைக் கொண்டாடி வருகின்றனர். உழவர்களுடைய உழைப்புக்கும், உவகைக்கும், உறுதுணையாக இருந்த மாடு, கன்றுகளையும் கூட அவர்கள் மறந்துவிடுவதில்லை. அவர்களுக்குப் பெருந் துணையாக விருந்த அவைகளுக்காக ஒரு நாளை தனியாக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அந்த நாளை அவர்கள் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்கள்.

மாட்டுப்பொங்கலன்று உழவர்கள் மாடுகளை மிகவும் விஷேசமாகப் போஷிக்கின்றார்கள் அவற்றின் கொம்புகளையும், குழம்புகளையும் சீவிச் சுத்தப்படுத்துவர். நன்கு தேய்த்துக் குளிப்பாட்டுவர். மஞ்சள், சந்தனம், குங்குமம், முதலான மங்கலப் பொருட்களணிந்து பூசித்து மகிழ்வர். பின்னர் சுத்தஞ் செய்யப்பட்ட மாட்டுத் தொழுவத்திலே அவற்றைக் கொண்டு சேர்ப்பர். அங்கு பொங்கல் பொங்கிய பொங்கலை மாடுகளை புசிக்கச்செய்வது வழமையாக உள்ளது.

பொங்கல் புது நாளில் தாம் குதூகலமாக இருந்ததுபோல் மாடுகளும் இருக்கவேண்டும் என்பது உழவர்களின் விருப்பமாகும். எனவே அன்று மாலை நேரத்தில் அவற்றை அலங்கரிப்பர். மலர்களினாலும் இலை, குழைகளினாலும் மாலைகள் புனைந்து அவற்றின் கழுத்திலே அணிந்து சலங்கை, வெண்டயம், மணிகள் என்பன கட்டி அலங்கரிப்பர். கிராமப் புறத்திலே கொண்டு சென்று சவாரி செய்வர். இது மாட்டுச் சவாரி எனப்படும். மாடுகளும் உழவனோடு சந்தோசத்தை அனுபவித்துத் துள்ளிக் குதித்து விளையாடுகின்றன. பிறந்தநாள் முதல் சிறந்த பால்தரும் பசுக்களையும்கூட உழவர் மறப்பதில்லை. சந்தனத்தால், குங்குமத்தால் முகத்தை அலங்கரித்து பல வர்ண மாலைகள் அணிந்து மகிழ்வதைக் காணலாம்.

காளைகட்டும் திருவிழா என்றும் ஒரு விழா உண்டு. இந்தியாவிலே சில பழைய கிராமங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் இம்முறை நடந்து வருகின்றது. தம் வீட்டுக் கன்னிப்பெண்களுக்கென ஒரு காளையை வளப்பர். பெண்களும் அதனை அன்புடன் போஷித்து வருவர். மாட்டுப்பொங்கலன்று அக் காளையை மந்தைவெளியிலே கட்டவிழ்த்து விடுவார்கள். அந்தக் காளைகளை (மாடுகளை) இளங்காளைகள் - இளைஞர்கள் அடக்கிப் பிடிப்பர். எந்தக்காளையை ஒருவன் அடக்கிப் பிடிப்பானோ அந்தக்காளைக்குரிய கன்னியை அவனுக்கு மணம்முடித்து வைப்பர். இப் பண்டிகையைக் கொண்டாடும் முறையிலே தேசங்கள் தோறும் சிறுசிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனினும் யாவருக்கும் அடிப்படையான நோக்கம் பொதுவானதே யாகும். மாட்டுக்கு "ஏர்" என்றும் ஒரு பெயர் உண்டு. எரின் சிறப்புப் பற்றிக் கம்பர் "ஏரெழு பது" என்னும் நூலில் நன்கு விளக்கியுள்ளார்.

பசுவினது பிரயோசனங்கள் இந்து மக்க ளால் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பிரயோசனங்களுள் சாணம் சிவசின்னங் களுள் ஒன்றான விபூதியைத் தயாரிப்பதற்கும், கோசலம், கோமயம் (சாணம்) என்பன சாண எரிவாயுவையும், உற்பத்தி செய்வதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்கு சிறந்த உரமாகவும் பயன்பட்டுவருவது யாவரும் அறிந்த ஒன்றாகும்.

சிவசின்னங்களாக விபூதி (திருநீறு) உருத்தி ராக்கம், பஞ்சாக்ஷரம் ஆகியன விளங்குகின்றன. விபூதி என்றால் மேலான செல்வம் எனப் பொருள்படும். பசுவினது பஞ்சகவ்வியங்களுள் ஒன்றாக கோமயம் (சாணம்) விளங்குகின்றது. பசுவின் சாணத்தை நன்றாக காயவிட்டு எரித்து வந்த நீற்றினை உரலிலிட்டு பால் பன்னீர் முதலானவைகளை விட்டு நன்றாக இடித்தபின் நல்ல துணியினால் அரித்து எடுக்கப்பட்டதே திருநீறாகும்.

திருநீறு வெண்மை நிறமானது. வெள்ளை நிறத்திருநீறு அணியத்தக்கதாகும். திருநீற்றிற்கு விபூதி, பசிதம், பசுமம், இரட்சை, ஷாரம் என்ற பெயர்கள் சுட்டி வழங்கப்படுகின்றது. திருநீற் றினை நாம் நீர் கலவாது தரிப்பது தூளனம் எனப் படும். நீர் கலந்து மூன்று குறியாகத் தரிப்பது திரிபுண்டரம் எனப்படும். இங்கே நீறாக எடுத்துக் கொள்ளும் சாணம் ஆன்மாவையும் சாணத்தி லுள்ள அழுக்குகள் ஆன்மாவோடு உள்ள மலங்களையும் நெருப்பு திருவருளையும் எரிதல் திருவருள் பதிதலையும், எரிந்தபின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும் என விளக்கப் படுகின் றது. திருநீற்றின் பெருமையினை சைவ நாயன் மார்கள் தமது திருப்பதிகங்களில் நன்கு போற்றித் துதித்துள்ளார்கள்.

அந்நியர்களின் ஆட்சிக் காலங்களின்போது பசுவினை வதை செய்யும் கொடூரமான பாதகச் செயல்கள் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் நிகழ்ந்ததை அறிய முடிகின்றது. இக் கொடூரமான செயல்களை இந்து சமயப்பொரியார்கள், சைவ சமய அறிஞர்கள், மற்றும் இந்துசமய நிறுவனங் களும் அவ்வப்பொழுது கண்டித்தும், பேசியும், எழுதியும், துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டும் அந்நியர்களுக்கெதிரான போராட்டங்களை நடாத்தி வந்ததை அறிய முடிகின்றது.

போத்துக்கீசர் (பறங்கியர்) ஆட்சிக் காலத் திலே இந்து சமயம் பல சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்தது. இக்காலத்திலே வாழ்ந்தவர் திருநெல்வேலி சுவாமி ஞானப்பிர காசர். இவர் அக்காலத்து ஆட்சியாளர்களது பசுவதையைக் கண்டித்து குரல் கொடுத்தவர். பறங்கியர் மச்சமாமிசம் உண்டு மதுபானம் பருகுவதில் பழகியவர்கள். அவர்கள் மாட் டிறைச்சி உண்பதில் விருப்பமதிகமுள்ளவர்கள். அவர்களின் உணவுக்காக அவர்கள் கோடிக்கரை யில் இருந்து ஆயிரக்கணக்கான மாடுகள் இறக்கு மதி செய்து உண்டபின் பசுந்தீவு என வழங்கிய நெடுந்தீவிலிருந்தும் களவாக மாடுகளைக் கொண்டுவந்து கொன்று உண்டனர். இவ்வாறு அவர்களுக்கு இறைச்சிப் பஞ்சம் உண்டான போது அவர்கள் கூசாது கொடுங்கோல் செலுத் தத் துணிந்தார்கள். முன்னர் பகாசுரன் விதித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் தினமும் ஒவ்வொரு வீட்டுக்காரரும் போர்த்துக்கேய அதிகாரிக்கு ஒரு பசுவாயினும் கொடுத்தல் வேண்டும் என பறையறைந்தார்கள். ஒவ்வொரு வீட்டாரும் தவறாமல் பறங்கி அதிகாரிக்குப் பசு கொடுத்தல்வேண்டும் என்பது அரச கட்டளையானமை கேட்டு மக்கள் பதைத்தார்கள். யாழ்ப்பாணத்தை கைப்பற்றி கொடுங்கோல் செலுத்திய பறங்கியர் தலைவனின் உணவுக்காக எம்மவர்கள் நாள்தோறும் பசு மாடு கொடுத்து வந்த காலத்தில் திருநெல்வேலியில் வாழ்ந்த பழங்குடி மரபினரான காராளபிள்ளை என்பவரின் மைந்தன் ஞானப்பிரகாசர் என்னும் பெரியவரின் முறை வந்தது. அடுத்த நாட்காலை பசுவைக் கொடாமல் தவிர்ப்பதற்கு என்ன செய்யலாம் என்று இரவெல் லாம் சிந்தித்த பெரியார் நாட்டைவிட்டு வெளி யேறுவதே சாலச்சிறந்த வழியெனக் கருதி எவருமறியாமல் இராப்பொழுதிலேயே நடந்து சென்று வடகரையில் தோணியேறி வேதாரணி யத்தை அடைந்தார். சுவாமி ஞானப்பிரகாசர் இந்தியா தமிழகம் வடநாடு சென்று பல சமய தத்துவ சமூகப் பணிகளை ஆற்றியதை அறிய முடிகின்றது. சிதம்பரத்திலே குளம் அமைத்தமை இக் குளத்தினை இன்று வரையும் "ஞானப்பிரகாசர் குளம்" எனச் சுட்டப்பட்டு வருவதைக் காணலாம். இச் செயலானது பசுவதையினை முற்றாக எதிர்ப்பதனைக் காட்டுவதாக அமைகின்றது.

தொகுத்து நோக்கில் இந்துப்பண்பாட்டு மரபில் பசு (மாடு) சிந்து வெளி நாகரிக காலம் முதல் இற்றை வரையிலும் நன்கு போற்றி வணங்கப்படுகின்றது. பசுவின் பிரயோசமான பஞ்சகவ்வியங்கள் இந்துக்களது வாழ்வியலில் மிகவும் இன்றியமையாதவையாக விளங்குகின்றன. பசு தெய்வீகமான மிருகமாக விளங்கி வருகின்றது. இதனை இந்துக்கள் பல்வேறு தேவைகள் கருதி வழிபட்டு வருவதைக் காணலாம். எனவே இந்துப் பண்பாட்டு மரபில் பசுவின் பெருமை நன்கு புலப்படுகின்றது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் "பாப்பாப் பாட்டு" என்ற பகுதியில்

*"பாலைப் பொழிந்து தரும் பாப்பா! அந்தப்*
*பசுமிக நல்லதடி பாப்பா!"*

என நன்கு போற்றிப் பாடியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பசுவை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்.

**நவநிதி :**

நவநிதி என்பது ஒன்பது வகையான செல்வங்கள். நவநிதிகளின் அதிபதியாக விளங்குபவன் குபேரன்.

**நவநிதிகள் :**

கச்சபநிதி
கற்பகநிதி
சங்கநிதி
பதுமநிதி
நந்தநிதி
நீலநிதி
மகாநிதி
மகா பதுமநிதி
முகுந்தநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலயங்களில் இசை


செல்வி கலாஜினி, B.A. (Hons)
உதவி விரிவுரையாளர் (தற்காலிகம்)
சமஸ்கிருதத்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஒரு நாட்டின் சமுதாய வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் ஆலயங்கள் சான்றாக விளங்கு கின்றன. மனித குலத்தின் உயர்வுக்கு ஆலயங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன. ஆன்மாக்கள் இறைவனோடு லயிக்கின்ற இடம் ஆலயமாகும். இறைவன் இசை வடிவினன். நாதப்பிரம்மம் இசை வடிவில் உருவம் பெறுகின்றது. ஒளிமய மாகிய அகக் காட்சியைக் கண்ட பின்னரே ஒலிமயமாகிய சொல் வெளிப்படுகின்றது.

இசைக் கலைக்கு மூலாதாரமாக விளங்கு வது நாதம். இசை என்றால் இசைவிப்பது என்பதாகும். ஒன்றோடு சேர்த்து வைப்பது என்று பொருள். இறைவனோடு நம்மை இசைவிப்பது இசை. அதனாற்றான் இசை வளர்ச்சிக்கு ஆலயங்கள் பெரும் பங்காற்றுகின்றன. ஆலயங் கள் வெறும் வழிபாட்டு தலங்களாக மட்டு மன்றிக் கலைகள் வளர்ச்சியுற்ற பீடங்களாகவும் இருக் கின்றன.

வைதீக இலக்கியங்களிலே இசை, நடனம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நால் வேதங் களிலும் ஐதரேய உபநிடதம், சாந்தோக்கிய உபநிடதம், சதபதபிராம்மணம், காடக சூத்திரம், பாவை சூத்திரம் போன்ற இலக்கியங்களிலும் இசை நடனம் பற்றிய செய்திகள் காணப் படுகின்றன.

சங்கீதக் கலை மோஷசாதனமானது. இதனைக் கேட்பவர்களும் அப்பியாசம் செய்பவர்களும் ஆனந்தம் அடைவதற்கு சாதன மானது சங்கீதக் கலை என யாக்ஞ வல்லிய ஸ்மிருதி கூறுகின்றது. மேலும் தேவ பூஜைக் காகவே நிருத்தியசாஸ்திரம் உண்டாக்கப்பட்டது எனவும் பக்திமான்கள் நிருத்தத்தினால் சந்தோஷ மாக என்னை ஆராதிப்பார்கள் என்றும் நிருத்தம், கீதம், வாத்தியம் இவைகளைப் பகவானுக்கு அளிப்பவர்கள் சகல அபீஷ்டங்களையும் அடை யக்கூடிய உயர்ந்த வேள்வியின் பயனை அடை வார்கள் எனவும் யாக்ஞவல்லிய ஸ்மிருதியில் கூறப்படுகிறது. கவி காளிதாஸரும் நிருத்தம், கீதம், ஆகிய இவ்விரண்டும் கண்ணைக் கவரும் வேள்விகள் என்றார். வேதங்களிலே கீதம்-வாய்ப் பாட்டு, வதித்ரம், வாத்திய இசை என இருவகை யாக சங்கீதம் பேசப்படினும் பின் இவை இரண்டும் ஒன்றாக பேசப் பட்டதனை சாந் தோக்கிய உபநிடதம் "கீதவாதித்ர" என குறிப்பிடு வதிலிருந்து அறியமுடிகின் றது. விஷ்ணுதர் மோத்ரத் தில் மார்க்கண்டேயரிடம் வஜ்ர என்பவர் கேட்ட கேள்வி உரையாடல் வடி வான கதையில் சிலைகளை அமைக்கும் முறை பற்றிய விளக்கத்தில் வாய்ப்பாட்டு இசையின் முக்கியத்துவம் புலப்படுத்தப்படுகின்றது.







ஆலயங்களில் காணப் படும் சிற்பங்கள், கற்றூண் கள் கல்வெட்டுக்கள் நாயன் மார்களால், ஆழ்வார்க ளால் பாடப்பட்ட பாசுரங் கள் என்பவற்றின் வாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாக இசை ஆலயங்களில் வளர்ச்சியுற்ற மையையும் ஆலயங்களில் வாசிக்கப்பட்ட இசைக் கருவிகள்பற்றியும் அறியக் கூடியதாக வுள்ளது. ஆலயங்களில் பயன்படுத்தப்பட்ட பல இசைக் கருவிகள் இன்றும் வழக்கத்தில் இல்லை. சிற்பங்களிலும் ஓவியங்களிலும் காணப்படுகின்ற பல கருவிகள் என்னவென்று கண்டுபிடிக்க முடியாமல் உள்ளன. ஆயினும் ஆலயங்களில் உள்ள பல மண்டபங்கள் வாத்திய மண்டபம், வீணா மண்டபம், நிருத்த மண்டபம் ஆகியனவும் அடங்கும் இதன் வாயிலாக ஆலயங்களில் கலைகளுக்கு கொடுக்கப்பட்ட சிறப்பிடத்தை அறியக் கூடியதாகவுள்ளது. திருக்கோயிலின் தளவாட அறிக்கைகளின் வாயிலாக அக்கோயில்களில் இருந்த இசைக் கருவிகள்பற்றி அறியக் கூடியதாக வுள்ளது.

இந்திய இசைவரலாற்றிலே தேவார காலத்தை (கி.பி7ஆம், கி.பி8ஆம் நூற்றாண்டு) தமிழரின் இசையெழுச்சிக் காலமாக குறிப்பிடலாம். இக் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களின் பாசுரங்களில் இசைக்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

திருஞானசம்மந்தர் "இசை பக்திமையார் பாடுதலும்" எனக்கூறுவதன் மூலம் தேவாரம் இசையோடு பாடவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். சுந்தரமூர்த்தி நாயனாரும் தமது தேவாரப் பாடல்களிலே இறைவனை இசை என்றும் இசைப்பயன் என்றும் குறிப்பிட்டு போற்றுவது நோக்கத்தக்கது. அப்பரும் இசை உணர்வுமிக்கவர் என்பதை **"பாடுவார் பணிவார் பல்லாண்டிசை கூறும் பக்தர்கள்"** எனக்கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது. இத்தகைய மகான்களால் பாடப்பட்ட தேவாரங்கள் ஆலயங்களில் பூசைவேளையில் பாடப்படுகின்றது. பல்லவர் காலத்தில். அதாவது கி.பி 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் மக்கள் இசையை இறைவணக்கத்துடன் இசைத்து இசைக்கு புனிதத் தன்மையை அளித்ததை காணமுடிகிறது.

இடைக் காலத்தில் இசை வாக்கேயகாரர்களாகிய தீக்ஷிதர், தியாகராஜ சுவாமிகள் கோயில்களை அடிப்படையாகக் கொண்டே இசைப் பாடல்களைப் பாடியுள்ளனர். எடுத்துக்காட்டாக அவர்களியற்றிய கொத்துக் கீர்த் தனைகளாகிய கமலாம்பா நவாவர்ணம், மாயூரம் அபயாம் பாவர்ணம், பஞ்சலிங்க ஸ்தலகிருதி, கோவூர் பஞ்சரத்தினம் ஆகியவற்றைக் கொள்ள லாம். சுவாமி புறப்பாடுகளின்போது இசைக் கலைஞர்கள் பாடுவதும் ஆடற் கலைஞர்கள் ஆடுவதும் இன்று வரை நடைபெற்று வருகின்ற நிகழ்வுகளாகும். ஆலயங்களில் இசை நடனக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றார்கள். 15ஆம் நூற்றாண்டில் பஜனைபாடும் முறை ஆலயங்களில் வளர்ச்சியுற்றது. விசேட தினங்களில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து பஜனைப் பாடல்களைப் பாடி இறைவனை வழிபட்டனர். கண்பார்வை அற்றவர்கள்கூட இசைப் பயிற்சி பெற்று கோயில்களில் பாடிப் பணிசெய்த செய்தியை திரு ஆமார்த்துக் கல்வெட்டின் மூலமாக அறியமுடிகின்றது. பஜனை பாடும் வழக்கம் இன்றும் ஆலயங்களில் இடம் பெறுவதை காணமுடிகிறது.

திருவிழா தடையின்றி நடைபெற வேண்டும் பொருட்டு பிரம்மா, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் ஆகிய திசைக்காவலர்களை பூஜித்தலே நவசந்தி கவுத்தும். இதன் அமைப்பு தற்கால இலட்சண கீதத்தை ஒத்தது. முதலில் ஜதியும் பின்பு ஸாகித்திய ரூபமாக அந்தந்த தேவர்களைப் புகழ்ந்து அன்னாருக்குப் ப்ரீதியான இராகம், தாளம், வாத்தியம், ஆரோஹண, அவரோகணம், நிருத்தம், ஹஸ்தம், பண் என்னென்னவன்று விளங்கக் கூறி இறுதியில் ஜதிச் சொற்கட்டுடன் முடிவடைகிறது. முதலில் ஆலயங்களில் இது இசை வடிவமாக இருந்து பின்னரே நாட்டிய வடிவம் பெற்றதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

எந்தவொரு ஆலயத்திலும் மணியோசை இல்லாமல் வழிபாடு நிகழாது. எனவே இனிய ஓசை இறைவழிபாட்டிற்கு இன்றியமையாத அங்கம் வகிக்கின்றது. மணியோசையின் பின் வாதத்தியங்கள் வாசிக்கப்படுகின்றன. வழமையாக ஆலயங்களில் அதிகாலையில் வெண்சங்கு ஊதப் பெறும். பின் திருச்சின்னம் என்ற காற்றுக் கருவி ஒலிக்கப்பெறும். நாதஸ்வரம் இன்று ஆலயங்களில் வாசிக்கப்படுகின்ற காற்றுக் கருவியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள இசை என்று போற்றப்படும் நாதஸ்வர இசையோடுதான் திருக்கோயில்களில் இறை வனின் நித்திய கால பூஜைகள் நடை பெறும். நாதஸ்வர கலைஞர்கள் அதிகாலையில் திருக் கோயிலின் கொலு பீடத்தில் வந்தமர்ந்து கொலு மேளம் வாசிப்பார். அதிகாலை இராகங்க ளாகிய பூபாளம், பௌளி போன்ற இராகங்கள் வாசிக்கப்படும். பின் கோயில் திறக்கப்பட்டு பூஜா காலம் தொடங்கும்.

இதனைத் தொடர்ந்து காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை "உஷக் காலைப் பூஜை" நடைபெறும். இந்த நேரத்தில் மலயமாருதம், கேதாரம் போன்ற இராகங்களும் கீர்த்தனைகளும் வாசிப்பார். பின்பு 8.00மணி முதல் 9.30 மணி வரை "காலைச் சந்திப் பூஜை" நடைபெறும். இதில் பிலஹரி இராகம் வாசிப்பார். பின் மாலை 4.30 மணிமுதல் 5.30 மணிவரை "மாலைக் கொலு மேளம்" வாசிக்கப்படும். இதில் மந்தாரி, பூர்வி, கல்யாணி, பைரவி, சங்கராபரணம் போன்ற இராகங்களும் கீர்த்தனைகளும் வாசிக் கப்படும். பின் இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை "இரண்டாம் ஜாமப் பூஜை" நடைபெறும். இதில் சண்முகப்பிரியா, ஹரஹரப்பிரியா, பவப் பிரியா போன்ற இராகங்களும் அதனைத் தொடர்ந்து 9.00 மணி முதல் 10.30 மணி வரை நடைபெறும் "அர்த்த சாமப் பூஜை" யில் நாதஸ்வரமும் ஒத்தும் மாத்திரம் சேர்ந்து ஆனந்த பைரவி, கானடா, அடாணா, பேகடை, நீலாம்பரிபோன்ற இராகங்கள் மாத்திரம் வாசிக் கப்படும். பின் பள்ளியறைப் பூஜை முடிந்து திருக் கோயிலின் கதவு சாத்தும் பொழுது "கதவடிப் பாட்டு" வாசிக்க வேண்டும் இதுவே மரபாகும். கான காலத்திற்கேற்ப இராகங்கள் வாசிக்கப்படும் முறைமை இன்றுவரை ஆலயங்களில்தான் வழக் கத்தில் உள்ளது எனக் கூறினால் மிகையாகாது.

இவ்விதமாக தெய்வீக் கலைகளான நிருத் தம், கீதம் என்பன ஆலயங்களில் கிரியைகளில் பயன்படுத்தப்படும் முறைமைபற்றி ஆகமங்கள் கூறுகின்ற சில விபரங்களை நோக்கும் போது, அவற்றின் சிறப்பம்சம் மேலும் வெளிப்படு கின்றது. வைதீக இலக்கியங்களில் ஆதானம் என்ற வேள்வியின்போது கானம் இசைக்கப்பட்டமை சதபதப்பிராம்மணத்தில் விவாஹ காலத்தில் கீதமும் விவாஹத்திற்கு முன்பு நாடீ என்ற இசைக்கருவியும் சீமந்தத்தின்போது வீணையும் இசைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளமை யும் காணலாம். மேலும் இருக்கு வேதத்தில் மகா விரதம் என்கிற யாகம் பெரிய இசை விழாவாக விளங்கியமை பற்றியும் மந்திரப் பாடல்களூடாக பலவித வாத்தியங்கள் இசைக் கப்பட்டமை பற்றியும் குறிப்பிடப் படுகின்றது. இம்மரபின் தொடர்ச்சியாகவே ஆலயக் கிரியை களிலும் நடனம், இசை என்பன சிறப்பாக அமைந் துள்ளன.

காரணாகாமம் ஸ்தோத்திரம், நிருத்தம் இவைகள் உபசாரத்தின் போது நிகழ்த்தப்பட வேண்டிய கால அளவு பற்றி கூறுகின்றது. நிருத்தம் முப்பத்து ஆறு நாழிகை அளவு எனவும் இவற்றின் பலன் பற்றிக் கூறும் போது நாட்டியம் இல்லையேல் துக்கம் எனவும் கூறுகிறது. பதினாறு வகை உபசாரத்தில் பதினான்காவதாக பாட்டு, வாத்தியம் என்பனவும் அடுத்து நாட்டிய மும் கூறப்படுகின்றது. சுங்க, உபாங்க, பிரதியங்க என கூறப்படும் மூவகை பூஜையில் பாட்டு நாட்டியம் இவைகளுடன் கூடியது உபாங்க பூஜையாகும். மேலும் இறைவனுடைய ஈசானம் முதலான பஞ்சமுகங்களில் சத்யோஜாத முகத்தில் கானமும் நடனங்களும் செய்யப்படுதல் வேண் டும் எனவும் கூறப்படுகின்றது.

காமிகாமத்தில் உபசாரத்தில் மந்திரகானம், வீணாநாதம், வேதாத்யனம், சாஸ்திரபாடம் முதலியவற்றில் ஒன்றைச் செய்தல் வேண்டும். பின்பு கௌடபாஷைமுதலியவற்றில் தூப முடிபு வரை கானத்தையும் பின் தமிழ் பாஷையினுடைய கானத்தை நர்த்தனத்தோடு கூடியதாகவும் பின் அநேக ஸ்வரங்களோடுகூடிய சம்ஸ்கிருத பாஷ கானம் அத்துடன் பதினெண் பாஷகானங்களை யும் தேசபேதத்திற்கு ஏற்றதான நாட்டியங் களையும் செய்தல் வேண்டும் எனவும் கூறப் படுகிறது.

சுப்பிரபேதகாமத்தில் வாத்திய ஒலிக ளோடும் சங்கின் ஒலிகளோடும் இருபத்து நான்கு வகையான தந்தி வாத்தியங்களின் ஒலியோடும், முப்பத்துநான்கு வகையான வாத்தியங்களோடு அழகும் இளமையும் பொருந்திய பெண்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடன உபசாரத்தோடும் மூன்று காலங்களிலும் உபசாரமாக பூஜை நிகழ்த்தப்பட வேண்டும் என நஷிஷ்யவிதி படலத்தில் கூறப்பட்டுள்ளது.

ரௌரவாகமத்தில் பலவிதமான வாத்ய ஒலிகளோடும் பாட்டு, நடனம் முதலிய உபசாரங் களுடனும் உற்சவம் நிகழ்த்தப்படுதல் வேண்டும் என கூறப்படுகின்றது. மேலும் சுப்பிரபேதாகமத் தில் உற்சவத்தின்போது சிவனின் முன்பாக கடகம், மத்தளம், தாளம், பேரி, பணவம், சல்லரி, வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், ஜர்ஜரி முதலியவற்றின் ஒலிகள் செய்யப்பட வேண்டும் என சிவோத்ஸவ விதி படலத்தில் கூறப்படுவ தனையும் காணலாம்.

அறுபத்திநான்கு உபசாரங்களில் தந்தி வாத்தியங்கள், துளை வாத்தியங்கள், வெண்கலத் தினாலான தாளம் முதலியவை நிருத்தம், கீதம் என ஐந்து வகையான உபசாரங்கள் கூறப்பட்டுள் ளன. பஞ்ச உபசாரங்களில் மணி, கீதம், முக வீணை முதலிய ஆகாச சம்பந்தமான உபசாரங் கள் செய்யப்பட வேண்டும் எனவும் கூறப்படு கின்றது. மேலும் வாத்தியங்களை இசைப்பதால் ஏற்படும் பலன் பற்றிக் கூறும்போது மத்தளத்தி னால் சுகமும், தாளத்தினால் துக்கத்தை நீக்கு தலும், படகம் எனும் வாத்தியத்தினால் பாபத்தை போக்குதலும், பேரியினால் புஷ்டியும், டாக்காவி னால் சந்தோஷமும், காகளீனால் சௌக்கியமும், கும்ப வாத்தியத்தினால் சத்துரு நாசமும், நர்த்தன வாத்தியத்தினால் ஆயுளும், நர்த்தனத்தினால் தானியங்களின் விருத்தியும் ஏற்படுகின்றது என நித்திய பூஜை- இலக்ஷண சங்கிரகம் எனும் நூல் குறிப்பிடுகின்றது.

சாதகன் ஒருவன் மனத்திலே எவ்விதமாக சிந்திக்கிறானோ அவ்விதமே அவன் மனதில் தோற்றம் பெறுகின்றான் எம் இறைவன் என்பதை "யேநயேநஹிருபேண ஸாதகஸ்ஸம்ஸ்மரேத்தா தஸ்ய தந்மயதாம்யாதி சிந்தாமணிரிவேஸ்வர" என வேதங்கள் போற்றியுள்ளமை நோக்கத்தக்க தாகும்.

இவ்விதம் வேத இலக்கியங்களிலும் ஆகமங்களிலும் சிறப்பாக கூறப்படுகின்ற இசை மரபானது இறைத் தன்மைக்கு ஒப்பான சிறப்புடையது. இவற்றிலிருந்து இறைவழி பாட்டுடன் இசை மரபின் இணைந்த தன்மையை யும் மேன்மையையும் உணரக் கூடியதாகவுள்ளது. அருங்கலையாகிய இசை ஆலயங்கள் மூலமாக ஆலய வழிபாட்டு அடிப்படையில் முழு வளர்ச்சி பெற்றுள்ளது. இன்று இசைக் கலையின் ஏற்றத்திற்கு மூலகாரணம் ஆலயமாகும். இசை வளர்ச்சி மட்டுமல்லாது இசைக் கருவிகள், இசைவரலாறு ஆகியவற்றின் பொக்கிஷமாகவும் ஆலயங்கள் விளங்குவதனை அறியமுடிகின்றது.

## உசாத்துணை நூல்கள்


- நித்ய பூஜா லஷணசங்கிரகம் - தருமையாதீனப் பதிப்பு 1951
- வேதம் போற்றும் கீதம் - இராமானுஜதாதாசாரியார்.
- ஆலய வழிபாட்டில் இசைக் கருவிகள் - முனைவர் ராம. கௌசல்யா
- தமிழிசை மரபு - பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன்
- இந்தியாவில் இசையும் பாண்பாட்டு மாற்றமும் - (கலைஞர் கண்ணோட்டத்தில் அழகியற் கலைகள்) ஆங்கில மூலம் - கலாநிதி நாராயண மேனன், தமிழாக்கம் - கலாநிதி வி. சிவசாமி.
- Musical tradition of Tamil Nadu- M.Arunachalam.
- காமிகம்.
- காரணாகமம்.
- சுப்பிரபேதாகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞானத்தின் படிநிலைகள்-தசகாரியம்

பொ. சந்திரசேகரம்
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


சைவசித்தாந்தம் கூறும் தசகாரியம் அல்லது ஞானத்தின் படிநிலைபற்றிய விளக்கத்தைச் சிவப்பிரகாசம், உண்மைநெறி விளக்கம், துகளறுபோதம், பண்டார சாத் திரங்கள் மற்றும் சிவஞானபாடியத்தின் வாயிலாக அறியலாம். திருவாவடுதுறை ஆதீனப் பண்டாரசாத்திர நூல்களில் பதினான்கில் மூன்று நூல்கள் தசகாரியம் பற்றி விளக்குகின்றது. அவை அம்பல வாணதேசிகர் தசகாரியம், தட்சிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம், சுவாமிநாததேசிகர் தசகாரி யம் என்பன.

சைவசித்தாந்த மெய்யியலில் சரியை முதலிய நாற்பாதங்களில் ஞானமே வீடுபேற்றிற்கு வாயில், ஞானம்- பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என மூவகைப்படும். இந்த ஞானத் தின் படிநிலைகளைச் சித்தாந்தம் வேறொரு வகையில் பத்தாகப் பகுத்துத் "தசகாரியம்" என்று குறிப்பிடும். இது "ஞானச்செய்தி" என்றும் வழங்கப்பெறும். "ஞானம்" என்பதற்கு "அறிவு" என்பது பொருள். ஆயினும் தத்துவ நூல்களில் அது "பொருளியல்பை உள்ளவாறு உணரும் உணர்வுக்கே" குறியீடாக வழங்கும். அறிதல் என்னும் அளவில் சரியை, கிரியை, யோகம் என்பனவும் ஞானமேயாயினும் சைவசித்தாந்தம் இவற்றை ஞானம் எனக் கொள்ளாது பொருளி யல்பை உள்ளவாறு உணரும் உணர்வை - தத்துவ உணர்வையே "ஞானம்" எனக் கூறுதல் இக்கருத்து பற்றியே யாகும்.

*விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்*
*அரும்புமலர் காய்கனிமேல் அன்றோ பராபரமே!*

என்ற தாயுமானவர் பாடல் அடிகள் சரியை முதலியவற்றையும் "மெய்ஞ்ஞானம்" என்றது, மெய்ப்பொருளை ஒருவகையில் அறியும் பொதுமைபற்றியேயாகும் என்பது நோக்கத் தக்கது.

பிறப்பு நிலையில் உள்ள உயிர், உடம்பை யும் உலகையும் பற்றிநின்று, உலகப்பொருள் களைத் தனித்தனிச் சுட்டி அறிந்துவரும் உணர்வு, பாசஞானம் எனப்படும். தன் அறிவைக் கட்டுப் படுத்தும் பாசமாகிய தத்துவ தாத்துவிகங்களால் விளங்கித் தனக்கு வேறான பொருள்களைப்பற்றி நிக ழும் ஞானம் அது. தத்துவம் - உயிரின் விளக்கத் திற்கு உதவும் மாயையின் அடிப் படைக்கூறு; தாத்து விகம் - அதன் காரியம். மெய்ப் பொருளைத் தலைப்பட்டு உணர விரும்புவோன், முதற் கண் தன்னைப்பற்றி "நான் ஆர்?" என உள்நோக்கி உணர்தல் வேண்டும். அவ் வாறு உணரும்போது தன்னைப் பரு உடம்பு, நுண் உடம்பு முதலியவற்றின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறாக, "இது நான் அல்லேன்", "இது நான் அல்லேன்" எனக் கழித்துச் செல்லும் ஆராய்ச்சி உணர்வு நிகழும். அவ்வாறு தத்துவங்களைத் தனக்கு வேறாகக் கண்டு கழித்து மேம்படும் உணர்வு, தத்துவக் கட்டுப்பாட்டின் நீங்கி, வியாபகமாய் விளங்கும் நிலை பசுஞானம் எனப்படும். "காதலினால் நான் பிரமம் என்னும் ஞானம் கருது பசுஞானம்" திருவருளின் உண்மையை உணர்தல் பதிஞானம் எனப்படும். தலைவனின் அருளைச் சார்தல் பற்றி விளங்கும் ஞானம் பதிஞானம். இதனை "சத்துடன் இச்சை மேவித் தரிப்பது சிவஞானந்தான்" என அம்பல வாணதேசிகர் தசகாரியம் குறிப்பிடுகின்றது. இச் சிவஞானம் ஒருவன் உணர்வில் விளங்கும்போது, முன்விளங்கிய பசுஞானம் அறியாமையாய்க் கழியும். இம்மூவகை ஞானம்பற்றிய விளக்கத்தை சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரத்தில் கண்டு தெளியலாம்.

இவ்வாறு வரும் மூவகை ஞானநிலை களிலும் ஆன்மா மெய்யுணர்வு எய்துதற்கண் நிகழும் உணர்வு மாற்றங்களைப் பத்து வகையில் வைத்துக்கூறும் முறை தசகாரியம் எனப்படும். தசம் - பத்து, காரியம் - செயல், ஞானச்செய்தி. உயிர்கள் உணர்வு, பொருள்களை முன்னர்ப் பொதுவாகப் பருநிலையில் கண்டு பின் அவற் றைச் சிறப்பாக நுணுகி உணர்ந்து, அவற்றின் பொருண்மையைப் பற்றும். இதனை நூல் உணர்ந்தோர் கண்டதைக் கொண்டு காணாத திற்குச்செல்வது என்றும், படிமுறையில் அறிவு நுணுகி வருதல் என்றும் குறிப்பர். இது பொதுவில் நின்றும் சிறப்பிற்குப் போதல் எனக் குறிப்பிடலாம். தூலாருந்ததி நியாய முறையிலே இதனை விளக்கலாம். அதாவது வானத்தில் உள்ள மீன்களில் அருந்ததி மீன் மிகச் சிறியது அதனை ஒருவனுக்குப் புலப்படுத்த வேண்டின் அதற்குப் பக்கத்தில் உள்ள பெரிய மீனைக் காட்டிப் புலப் படுத்துவதுபோன்றது. மேலேகூறிய முறையில் பாசஞானம் நீங்கிப் பசுஞானம் விளங்கப் பெறு தலையும், பின்னர் அதுவும் நீங்கிச் சிவஞானம் விளங்கப் பெறுதலையும் பத்து வகையில் வைத்து விளங்க உணர்த்தும் முறை தசகாரியம் எனப் படும். தசகாரியம் என்பதனை நாம் இவ்வாறு வரைவுக்கு உட்படுத்தலாம். தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சார்ந்து, சரியையாதிகளில் முறையே நின்று சிவனருள் விளக்கம் குருமூர்த்தியின் திருவருள் நோக்கால் வாய்க்கப்பெற்றுப் பரிபாகமுற்ற ஆன்மா, தன் னின் வேறாக உலகத்தைக் காண்டலும், தன்னைத் தானாகக் காண்டலும் சிவமாகக் காண்டலும் அழுந்தி அனுபவித்தலும் ஆகிய மூன்றுவகை நிலைகளைப் பத்து அவத்தைகளாக நுகரும் அனுபவத்தை அறிவிப்பதாம்.

சைவசித்தாந்தம் கூறும் முறையில் பொருளி யல்புகளை உணர்வதே உண்மை ஞானமாகும். அது பொருளின் எண்ணிக்கை வகையால் மூன்று என்றும், இந்த ஞானமே கேட்டல் முதலிய நான்காகுமிடத்துப் பத்தாகி விரியும். இவை: தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், "சிவ போகம்" என்பனவாகும். துகளறு போதம் முதலிய சில நூல்களில் இவை முப்பது என்று இன்னும் விரிவாக விளக்கப் பெறுகின்றன. தசகாரியத்துள் "ரூபம்" மூன்றும் சிந்தித்தலில் அடங்கும். தத்துவசுத்தி, ஆன்மசுத்தி, சிவயோகம் என்னும் மூன்றும் தெளிதலில் அடங்கும்; சிவபோகம் நிட்டையில் அடங்கும்.

*ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்*
*தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு*
*அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.*

என்பது சிவஞான போத 8ம் சூத்திரம். இதில் "விட்டு" என்றும் "செல்லும்" என்றும் மெய்கண் டார் கூறும் இரு செயல்களே "தசகாரியம்" எனப்படுகின்றன. இவற்றுள் "விடுதல்" பாசக் கூட்டத்தையும் பசு போதத்தையும் ஆகும். "செல்லுதல்" சிவத்தினிடத்திலாகும். உப தேசத்தைப் பெற்றோர் அனைவர்க்கும் விடுதலும் செல்லுதலும் ஒரு வகையாகவே நிகழ்தல் இல்லை; அவரவரது தன்மைக் கேற்ப மெல்லவும் விரையவும் நிகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவம், ஆன்மா, சிவம் என்ற மூன்று பொருள்களும் பாசம், பசு, பதி எனப்படும். ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகைப் பாசங்களுள் மாயையின் காரியமாகிய தத்துவம் ஒன்றே கூறப்பெறுகின்றது. மூவகைப் பாசங் களில் மாயையை மட்டிலும் கூறியதற்குக் காரணம் ஏனைய எல்லாவற்றையும் விடப் பருப் பொருளாய் நின்று உயிரை மயக்கித் தனக்கு வேறாய் உள்ளபொருளை நோக்காது தன்னையே நோக்கும், தனக்குமேல் வேறொரு பொருள் இல்லையென்று எண்ணும் எண்ணத்திற்கும் காரணமாய் நிற்கும். ஆகவே, முப்பொருளின் இயல்பை உள்ளவாறு உணரும் நிலை வேறு பாடே இங்கு "தசகாரியம்" எனப்படுகின்றது.

இனி தத்துவங்களைப்பற்றியும் ஆன் மாவைப் பற்றியும் கூறுமிடத்தில் "ரூபம், தரிசனம், சுத்தி" என்று சுட்டப்பெறும். இவற் றுள் "ரூபம்" என்பது பொதுவாய் (நிருவிகற்ப மாய்) அறிதல் என்றும், "தரிசனம்" என்பது ஐயமாக அறிதல் என்றும், "சுத்தி" என்பது தெளிவாக அறிதல் என்றும் சிவஞானமுனிவர் தமது பாடியத்தில் குறிப்பிடுகின்றார்.


ஆன்மா ஐம்பொறி, மனம் முதலிய தத்துவங்களோடு கூடி அவற்றின் செயலே தன் செயலாகக் கண்டுவரும் உணர்வு நிலையே பாசஞானநிலை எனப்பட்டது. அதை நீக்கிக் கொள்ளுதற்கு முதற்கண் தத்துவங்களின் இயல்பைச் சுட்டி உணர்தல் வேண்டும். பின்னர் அவற்றின் நீங்குதற்கு அத்தத்துவங்களால் நமக்கு விளங்கும் அறிவிச்சை செயல்களின் விருத்திகளை இன்ன, இன்ன என முன்னர் உணர்தல் வேண்டும். அங்ஙனம் உணர்தல் தத்துவ ரூபம் எனப்படும். பின் அவை தாமே அறிவனவல்ல; கண்ணுக்கு முகத்தைக் காட்டும் கண்ணாடிபோல, உயிர்க்குப் பொருள்களைக் காட்டும் அறிவில் பொருள்களே அவை என்று உணர்தல் வேண்டும். அவ்வாறு உணர்தல் தத்துவ தரிசனம் எனப்படும். அதன் பின்னே நமக்கு அன்றாடம் நிகழும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், தன்வசம் அழிதல் நிலை களில் வைத்து, அத்தத்துவங்கள் ஆன்மா வினின்றும் நீங்குவனவாயிருத்தலையும் சுட்டி உணர்தல் வேண்டும். இது தத்துவசுத்தி எனப் படும். இதனை

*மண்முதற் சிவமதீறாய் வடிவு காண்பதுவே ரூபம்*
*மண்முதற் சிவமதீறாய் மலஞ்சடம் என்றல் காட்சி*
*மண்முதற் சிவமதீறாய் வகை அதில் தான் நிலாது*
*கண்ணுதல் அருளால் நீங்கல் சுத்தியாய்க் கருதலாமே*

(உண்மை நெறி விளக்கம், 1)

*தத்துவம் அனைத்தும் நோக்கித் தனித்தனிச்*
*செயல்கள் காண்ட*
*ஒத்ததன் உருவமாகும் ஒன்றையொன்று உணராது*
*இது*
*சத்தியமஞ் சடமே எனத் தான் அறிந்திடுதல் காட்சி*
*நித்தியம் அன்று சில நாள் நீங்குதல் என்றல் சுத்தி*

(அம்பலவவாணதேசிகர் தசகாரியம்) எனவும் குறிப்பிடுதல் காணலாம்.



தத்துவங்களின் இயல்பை நூல்களில் அறிந்து கொள்வதுபோல் "தத்துவங்களோ அல்லது அவற்றின் கூட்டமோ ஆன்மா அல்ல; ஆன்மா வேறு" என்பதையும் அதன் இயல்பு களையும் நூல்களில் கூறியவாறு அறிந்து கொள்ளுதலே ஆன்மரூபம். அதாவது தத்துவ சுத்தி என்னும் பாசத்தைப் பற்றிய தெளிவுக்காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்திய ஆன்மா, அக்காட்சி பற்றிப் பாசத்தின் நீங்கித் தன் வியாபக நிலையைத் தலைப்பட்டுத் தானே முதல் என நிற்கும். இங்ஙனம் தன்னை உணர்தலே ஆன்மாவின் இயல்பைப் பொதுப் படக்காண்டல். ஆதலால் உட்காட்சி ஆன்ம ரூபம் எனப்படும். அதன்பின் அவற்றைத் தன் அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்தலே ஆன்மதரிசனம் ஆகும்.

இவ்வாறு ஆராய்ந்தபொழுது ஆன்மா தத்துவங்கள் போல சடமாகாது சித்தே என்றாலும், பிறிதொன்றன் துணையின்றித் தனித்து நின்று அறிய இயலாது. ஆதலின் அதற்கு எப்பொழுதும் துணையாய் உடன்நின்று உணர்த்தி வருவது முதல்வன் திருவருளே என்பது இனிது விளங்கும். ஆதலின் அவ்விளக்கத்தின் வழித் தனக்கென ஒரு செயலுமின்றி, எல்லாம் முதல்வன் செயலாக உணர்ந்து தன்செயலற்று இருத்தல் ஆன்மசுத்தி ஆகும்.

*தேசுற மருவும் ஆன்ம தரிசனமும் ஆன்ம சுத்தி*
*ஆசு இலா ஆன்மலாபம் ஆக மூன்றாகு மூன்றும்*
*பாசமது அகல ஞானம் பற்றல் தான் பணியை நீத்தல்*
*ஏசில் நேயத்தழுந்துதல் எனும் இவற்றுள்*
*- அடங்குமன்றே.*
(சிவப்பிரகாசம், 71)

ஆன்மதரிசனம் - பாசமானது நீங்க ஞானத்தைத் தரிசித்தல்
ஆன்மசுத்தி - தன்செயலை விடுதல்
ஆன்மலாபம் - நேயத்தழுந்துதல்

தன்செயலைவிடுதல் அல்லது தான்பணி நீத்தலாவது ஆன்மாவின் இச்சா, ஞானக், கிரியைகளின் தொழிற்பாடின்றி, நிகழ்வனவெல்லாம் சிவபெருமானது இச்சா ஞானக் கிரியைகளின் நிகழ்ச்சியே எனக்கண்டு திருவருள் வியாபகத் துள்ளாக ஆன்மா அடங்கி நிற்றலாம்.

கலாதி தத்துவங்களால் வரும் ஏகதேச அறிவின் இயல்பை உணர்ந்து, அவ்வேகதேச அறிவுக்குக் காரணமான மலங்கள் நீங்கப்பெற்ற அருள்நிலையில், அம்மலங்களின் வாசனை தாக்காதபடி அவ்வருள் வியாபகத்துள்ளாக ஆன்மா அடங்கிச் சிவத்தோடு ஏகநாகிநிற்பின் அதன் வியாபக அறிவு விளங்கத்தோன்றும்.

நேயத்தழுந்துதல் அல்லது ஏகனாகி நிற்றலாவது ஆன்மா தானென வேறுகாணப்படு மின்றிச் சிவனோடு ஒன்று பட்டு நிற்றல். இதுவே ஆன்மலாபமாகும். அதாவது ஆன்மா கலாதி தத்துவங்களால் வரும் ஏகதேச அறிவின் இயல்பை உணர்ந்து அவ் ஏகதேச அறிவிற்குக் காரணமாகிய மலங்கள் நீங்கப் பெற்ற அருள் நிலையில் அம்மலங்கள் தாக்காதபடி அவ்வருள் வியாபகத்துக்குள் ஆன்மாவடங்கி சிவத்தோடு ஏகனாக நிற்பின் அதன் வியாபக அறிவு விளங்கத் தோன்றும்.

*இந்நிலை தன்னின் மன்னி எய்திடுங் கலாதி*
*போதந்*
*தன்னளவு அறிந்து நிற்குந் தகவிலா மலங்கள் நீத்த*
*அந்நிலை கரணம் ஆகாவகை அதில் அறிவு அடங்கி*
*மன்னிட வியாபியாய வான்பயன் தோன்று அன்றே.*

(சிவப்பிரகாசம் 78)

தத்துவங்களின் இயல்பு, ஆன்மாவின் இயல்பு இவற்றை நூல்களில் கூறியவாறே கொள்ளுதல்போல் சிவத்தினது பொது இயல்பு (தடத்த இலட்சணம்), உண்மை இயல்பு (சொரூப இலட்சணம்) நூல்களில் சொல்லியவாறு அறிந்து கொள்ளுதல் சிவரூபம் ஆகும். வேறொரு வகையில் கூறினால் ஆகாயத்தின் அளப்பருந் தன்மையைக் காணும்போது, அங்கு காணப் படுவது வெறும் வெளி மட்டுமன்றி அவ்வெளி யின் அளப்பருந்தன்மையைக் காட்டிநிற்கும் ஞாயிற்றின் ஒளியும் ஆகும். அவ்வொளி பற்றியே ஆகாயத்தின் பரப்பு உணரப்படுகின்றது. அது போல, ஆன்ம வியாபகம் உணரப்பட்டது, அதற்குச் சார்பாய்யாங்கனும் நிறைந்துள்ள திருவருள் ஒளி இருத்தல் பற்றியே எனத் திருவருளின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைப் பொதுவாக உணர்வதே சிவரூபம் எனப்பட்டது.

பின்னர் அவற்றைத் தன் அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்தல் சிவதரிசனம். சிவதரிசனத்தால் சிவமாய்க் காணும் காட்சியும், அக் காட்சியால் சிவானந்தவிளைவும் உண்டாகும். ஆகவே, இந்நிலையே சிவத்தை உண்மையில் காணும் சிவதரிசனம் ஆதல் அறிந்து தெளியப் படும்.



*பித்தாய் உள்ளத்தில் நின்ற பிரிவு இருள் அகல ஞான*
*வித்தாய் நிற்கும் வீரம் விட்டருள் இச்சை மேவ*
*வைத்தது ரூபமாகும் வரும் அருட் செயலதாக*
*ஒத்தது காட்சியாகும் உயர் சிவமதற்குத் தானே.*
*(அம்பலவாணதேசிகர் தசகாரியம், 33)*

ஆணவப் படலமானது ஆன்மாவை விட்டு நீங்க ஆன்மா ஞான மயமாய் (ஞானவித்தாய்) நிற்கும், அந்த வீரத்தையும் விட்டு சிவனருளின் இச்சை மேவவைத்தலே சிவரூபம் என்பதும், எல்லாவற்றையும் திருவருளின் செயலாகக் காண்டலே சிவதரிசனம் என்பதும் தெளியப்படும்.

சிவதரிசனம் வாய்த்த பொழுதும் பழைய வாசனை பற்றி "யான் செய்தேன்; பிறர் செய்தார்; என்னுடையது; பிறருடையது" என்று எண்ணும் தற்போதம் அல்லது சிவபோதம் எழும். இதனை அச் சிவதரிசன முறையில் சிந்தித்து அடக்கித் தன் செயலற்றுச் சிவத்தில் ஒன்றி இருத்தலே சிவயோகம் ஆகும். இதுவே உண்மை யோகம். ஏனைய யோகம் பொதுயோகமே என்பது புலப்படும் . சிவம் "தானும் தனது சக்தியும்" என இரு கூறுபட்டு நிற்கும். ஆதலின் முதற்கண் சக்தியை அறிந்தே பின் சிவத்தை அறியும் நிலை உண்டாகும். இவற்றுள் சக்தியைத் தெளிவாக அறியும் நிலையே "சிவயோகம்" எனப்படும். சிவத்தைத் தெளிவாக அறியும் நிலையே "சிவபோகம்".

சிவயோகத்தில் ஆன்மா நிலைத்து நிற்கும் பொழுது சிவானந்தம் தோன்றும். ஆதலின் அதனை நுகர நுகர அது ஒரு பாலைக்கொருகால் மிகுந்து பெருகி ஆன்ம அறிவைத் தன்னுள்ளே விழுங்கிக்கொள்ளும். இந்நிலைக்குமேல், திருவருளுக்கு முதலாகிய சிவத்தை மெய்யன்பாற்றலைப் பட்டு அன்பே இன்பமாய் அமரும்நிலை சிவ போகம் எனப்படும். இதுவே பிறவியின் முடி நிலைப் பெரும்பயன் ஆதலால், இது ஆன்ம லாபம் எனப்படும். இந்நிலை இப்பிறவியில் இப்பொழுதே பெறக்கூடியது. (here and now). இது நின்மல துரியாதீத ஆனந்தநிலை எனவும் இன்புறுநிலை எனவும் கூறப்படும்.

*சத்தியின் செயல்கள் எல்லாந் தற் சிவம் அதனுக்கு இன்றாய்*
*ஒத்திடல் உணர்வளித்தல் உயர் சிவயோகமாகும்*
*பித்தது வாகிச் சற்றும் பின்னம தற்றுத் தன்னுள்*
*வைத்துயிர் போகமாக வளர்தல் ஆராமை தானே*

*(அம்பலவாணதேசிகர் தசகாரியம், 34)*

சிவத்தைப்பற்றிக் கூறுமிடத்தில் "ரூபம்", "தரிசனம்" என்பனவே கூறப்பெறும் ஆயினும், தத்துவத்தைப்பற்றியும் ஆன்மாவைப் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக அறிதலைச் "சுத்தி" என்று சொல்வது போலச் சிவத்தைத் தெளிவாக அறிதலைச் "சுத்தி" என்று சொல்வதில்லை. ஏனெனில், தத்துவத்தைப்பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் தெளிவாக அறிதலின் பயன் அவற்றுள் வரும் மயக்கத்தினின்றும் நீங்குதலேயாகும். ஆதலின், அவை "சுத்தி" எனப்படுகின்றன. சிவத்தைப்பற்றித் தெளிவாக அறிதலின் பயன் அதனைவிட்டு நீங்காது அதன்கண் அழுந்தி இன்புறுத லேயாதலின் அது "சுத்தி" எனப்படுதல் இல்லை.

இங்ஙனமாகக் கூறப்பெற்ற தசகாரியங்கள் மேற்கூறியவாறு முறையாகக் கூறப்பெற்றன வாயினும், அவை ஒன்று நிகழ்ந்து முடிந்த பின்னர் தான் மற்றொன்று நிகழும் என்று கூறமுடியாது. முப்பொருளும், வேறுவேறு பிரிந்து நில்லாமல், ஒன்றோடொன்று பின்னிக் கலந்து பிரிப்பின்றி உடன் நிற்பவை ஆதலால், மேலே கூறிய பத்து ஞானச் செய்திகளும் ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாக நிகழாமல், அவற்றுள் சில உடன் நிகழ்வனவாம். குறிப்பாகத் தத்துவ தரிசனத்தால் தத்துவ ரூபம் நிலைபெறும். ஆன்மரூபத்தால் தத்துவ தரிசனம் நிலைபெறும்.

மேலும் சிவரூபம் ஆன்ம தரிசனத்தைப் பயத்தலால் அது அதில் அடங்கும். அவ்வாறே சிவதரிசனம் ஆன்மசுத்தியில் அடங்கும். ஆன்மசுத்தியும் சிவயோகமும் ஒருநிலையே ஆகும். பின் நிகழும் சிவயோகம் ஆன்மலாபம் எனப்படும். இவ்வாறாதலின், ஆணவத்தின் நீங்கிய நின்மல சுத்தாவத்தையை ஐந்தவத்தை யென வைத்து உணரும் பொழுது தசகாரியங் களைத் (1) தத்துவரூபம், (2) தத்துவதரிசனம், (3) தத்துவசுத்தி, (4) ஆன்ம ரூபம், (5) ஆன்ம தரிசனம், (6) ஆன்மசுத்தி, (7) ஆன்மலாபம் என ஏழு அவதாரங்களாக உணர்த்தி இவற்றுள் ஆன்ம ரூபம் வரையுள்ள நான்கும், நின்மல சாக்கிரம், எனவும், ஆன்மசுத்தி நின்மலதுரியம் எனவும், ஆன்மதரிசனம் நின்மல சொப்பனம் எனவும், ஆன்மலாபம் நின்மலதுரியாதீதம் எனவும் நான்கு அவத்தையுள் அடக்கிக் கூறுவது துறைசையா தீனஞான அநுபவமரபாக உள்ளது. இங்கு நின்மல சுழுத்தி என்றொரு அவத்தை இங்கு கூறப்படுவதில்லை. அது ஆன்மா தனக்கு எல்லாச் செயலும் உள்ளன என உணரும் அளவில் தோன்றிப் பின் மறைவது எனக் கொள்ளப் பெறுகிறது. ஆதலால், சுத்த நிலையில் நான்கு அவத்தைகளென கூறப்படுகின்றன. எனினும் திருவாவடுதுறை ஆதீனமரபில் நின்மல நிலையில் நிகழும் பல்வேறு அவத்தைகள் கூறப் பெறுகின்றது. குறிப்பாக நின்மல சுழுத்தி நிலையினை அம்பலவாணதேசிகர் அவர்கள்

*இருந்திடும் அகம் அது ஆக எழுந்திடும் நினைவடக்கித்*
*தெரிந்திடுந் தனை இழந்து திருவருள் இச்சை கூரப்*
*பொருதிடல் அருளின் இச்சை பூண்டது சுழுத்தி ஆகும்*
*திருந்திட அதனிற் செய்தி செய்திட வேண்டும் ஏற்கே.*

(அம்பலவாண தேசிகர் தசகாரியம். 28)

நான் என்று எழுகின்ற நினைவினை அடக்கி, தான் ஒரு பொருள் என்பதையும் இழந்து திருவருளின் நோக்கமுற்று, அத் திருவருளினைக் காமிப்பதாகிய இந்நிலை சுழுத்தி அவஸ்தை யாகும். தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள் தலைவன் தாளே என்கின்ற நிலையாகும். இவ் வகையான படி நிலைகளில் சாக்கிராதீதம் மிக உயர்ந்தது. மெய்கண்டார் போன்றவர்களின் நிலை சாக்கிராதீதமாகும். இந் நிலை என்பது கருவிகள் முப்பத்தாறும் பொருந்தி சகல நிலைப்படாமலும், அறியாமைக்கு உட்பட்ட கேவலப்படாமலும், தன்னிடத்தே தோன்றி நின்ற மேலான ஞானசக்தியின் அனுக்கிரகத்தால் தற்போதச்சேட்டை ஒழிந்து நிற்க அப்போது தோன்றுகின்ற சிவத்தோடு ஏகனாகி நிற்றல் சாக்கிராதீதமாம். இதனைச் சிவப்பிரகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொற்புறு கருவி யாவும் புணராமே அறிவிலாமைச்*
*சொற் பெறு அதீதம் வந்து தோன்றுமே தோன்றி நின்று*
*சிற்பர அதனால் உள்ளச் செயலற் உதிக்குந்*
*தற்பரமாகி நிற்றல் சாக்கிராதீதந் தானே.*

(சிவப்பிரகாசம், 80)



எனக் குறிப்பிடுகின்றது. சிவப்பிரகாச உரையாசிரியர் திருவிளங்கம் ஆன்மரூபத்தை நின்மலசாக்கிரம் எனவும், ஆன்தரிசனத்தை நின்மல சொப்பனம் எனவும் ஆன்மசுத்தியை நின்மல சுழுத்தி எனவும் குறிப்பிடுதல் காணலாம்.

சிவஞானபோத அவையடக்கத்தில், "தம்மைஉணர்ந்து தமை உடைய தன்னுணர்வார்" என்று கூறப்பட்டது. இதனால் தம்மை உணர்ந் தன்றித் தலைவனை உணர்தல் கூடாது என்பது பெறப்படுகிறது.

சிவப்பிரகாசத்தில் 72, 78ஆம் செய்யுள்களில், "தன்னாலேதனை யறிந்தால் தன்னையும் தானே காணும்" எனவும், "அதில் அறிவடங்கி மன்னிட வியாபியாய வான் பயன் தோன்றும்" எனவும் கூறப்படுகின்றன. இவற்றின் பொருள் ஆன்மா தன்னுடைய இயற்கை அறிவினாலே எதனையும் அறியும் இயல்பு தனக்கு இல்லையாயினும், தன்னுடைய அறிவினாலே அறிந்து அனுபவிப்பவனாகக் கருதிப் போகங்களை அனுபவிக்கும், சிவஞானத்தாலே அந்த ஞானத்தை அறிந்தால் தான் கருவிகளோடு கூடி நின்று போகங்களை அறியும் முறையை உணரும் என்பதும் "இறைவனில் ஆன்மாவின் அறிவு அடங்கி நிலைபெற்றால் தான் எங்கும் நிறைந் துள்ள - வியாபகத் தன்மையாகிய உயர்ந்த பயன் ஆன்மாவிற்கு விளங்கும்" என்பதும் ஆகும். இவற்றால் சிவப்பிரகாசம் "தலைவனை உணர்ந் தன்றித் தம்மை உணர்தல்கூடாது" என்னும் கருத்தைத் தெரிவிக்கின்றது. இவற்றை நோக்கும் போது சிவப்பிரகாசம் சிவஞான போதத்தோடு மாறுபடுவதாகத் தோன்றும். அம்மாறுபாடு இல்லை என்பதைச் சிவஞானமுனிவர் தசகாரியங்களிலும் வைத்து விளக்குகிறார்.

சிவஞானபோதத்தில் கூறியது ஆன்ம சுத்தியின் பின் உளதாகும் சிவப்பேற்றைப் பற்றியது. சிவப்பிரகாசத்தில், "தன்னாலே தனையறிந் தால் தன்னையும் தானே காணும்" என்பது சிவரூபத்தால் ஆன்ம தரிசனம்கிடைக்கும் என்பதைக் குறிக்கின்றது. "அதிலறி வடங்கி மன்னிட வியாபியாயவான்பயன் தோன்றும்" என்றது சிவதரிசனத்தால் ஆன்மசுத்திகிடைக்கும் எனப்பொருள் ஒருமை காண்கின்றார்.

"அரன் தன்னாலே தன்னையும் கண்டு தமைக் காணார்" எனச் சிவஞானபோதத்தில் ஒன்பதாம் சூத்திரத்து முதல் அதிகரணத்தில் வரும் தொடர் சிவரூபத்தில் ஆன்ம தரிசனம் கிடைக்கும் என்பதையும் அவ்விடத்தே குறிக்கின்றார்.

எட்டாம் சூத்திரம் ஆன்ம தரிசனம் பற்றிக் கூறுகின்றது, ஒன்பதாம் சூத்திரம் ஆன்ம சுத்திபற்றிக் கூறுகின்றது. எனினும் சிலர் சிவப்பிரகாசம் "தான் பணியை நீத்தலே ஆன்ம சுத்தி" என்று 71வது பாட்டில் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கருத்து "ஏகனாகி இறை பணி நிற்க" எனப் பின்வரும் பத்தாம் சூத்திரத்தில் தான் உள்ளது. எனவே பத்தாம் சூத்திரம்தான் பாசநீக்கமாகிய ஆன்மசுத்தியைக் கூறுகின்றது, ஒன்பதாம் சூத்திரம் "பதியை நாடி" எனவும் "தண்நிழலாம் பதி" எனவும் சிவதரிசனம் கிடைக்கும் முறையைக் குறிக்கின்றது எனக்குறிப்பிடுவர்.

இக்கருத்தை விளக்கும் சிவஞான முனிவர் சிவதரிசனம் நிகழ்ந்து முடிந்த பின்புதான் ஆன்மசுத்தி நிகழும் அன்று ஒளிவருதலும் இருள் நீங்குதலும் ஒரேகாலத்திலே உடன் நிகழ்வது போல சிவதரிசனம் நிகழும் போதே ஆன்ம சுத்தியும் உடன் நிகழுவதாகும். அது பற்றியும் ஆன்ம சுத்தியை முற்ற முடித்துக் கூறும் அடுத்த சூத்திரத்தோடு இச்சூத்திரத்திலுள்ள வேறுபாடு சிறிதே ஆதலின் இரு சூத்திரங்களும் ஒரு பொருளையே இரு வேறுபடுத்திக் கூறுகின்றது என்கின்றார்.

தொகுத்து நோக்கும்போது இந்திய மெய்யியலில் தசகாரியம் பற்றிய விளக்கம் சைவசித்தாந்த மரபிற்கு சிறப்பாக உரியதாகும். தசகாரியம் பற்றிய அறிவைச் சாத்திர நூல்களில் மட்டுமன்றி திருவாசகம் முதலிய நூல்களிலும் காணலாம். தசகாரியத்தை ஞானத்தின் படிகள் என்று கூறும்போது ஆன்மசுத்தி, சிவதரிசனம் முதலியவை பெறுபேறாக இருந்தாலும் முடிவான பெறுபேறாக சிவபோகம் காணப்படுவதாலும் அதற்கு மேல் எவ்வகை நிலைகளும் இல்லை. ஆகையால் அதனை ஒரு படிமுறையாகக் கொள்வது இடர்பாட்டிற்குரியதாகின்றது. எனவே இதனை நவகாரியம் என அழைக்கலாம் என்பர் சிலர். முன்னர் காட்டப் பட்டது போலச் சிலர் சிவதரிசனம் முதலியவற்றை ஆன்மலாபமாகக் கூறித் தசகாரியத்தை ஏழு என்பர். எவ்வாறாயினும் ஆன்மசுத்தி உட்பட்ட யாவையும் ஆன்மலாபம் என்று வரையறுக்கலாம். இவை பற்றிய விடயங்களை ஞான மரபில் நின்ற சமயகுரவர்கள், அருணகிரிநாதர் போன்றோரின் பாடல்களுடன் ஒப்பிட்டு ஆராய்கின்றபோது மேலும்பல உண்மைகள் புலப்படும்.

## உதவிய நூல்கள்


1. திருவாவடுதுறை ஆதீனப் பண்டாரசாத்திரம் தசகாரியங்கள், திருவாவடுதுறை ஆதீனம், 1959.
2. திருவிளங்கம், மு., (புத்துரை), **சிவப்பிரகாசம்,** யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், 1974.
3. ஆனந்தராயன், டாக்டர்.ஆ., **தசகாரியம்,** அருள்நந்திசிவம் அருட்பணி மன்ற வெளியீடு, திருநெல்வேலி, 1993.
4. அருணை வடிவேலு முதலியார், சி., **சிவஞானபோத** மாபாடியம் - பொருள்நிலை விளக்கம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1991.
5. வச்சிரவேல் முதலியார், க., இராதாகிருக்ஷ்ணன், டாக்டர். எஸ். **சிவஞானபாடியத் திறவு,** சென்னைப் பல்கலைக் கழகம், 1977.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலக
யாழ்ப்பாணம்.



# உள நெருக்கீட்டுக்கான பரிகாரங்களில் ஆலயங்கள்

செல்வி. சந்திரராஜினி கணபதிப்பிள்ளை B.A.
இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் - தென்மராட்சி, சாவகச்சேரி.

மக்களின் உள நெருக்கீட்டுக்கான பரிகார முறைகளில் ஆலயங்கள் முக்கியஇடம் வகிக்கின் றன. உளவியல் என்பது மனிதன் எப்போது தனது உள்ளம் பற்றிச் சிந்திக்கவும் சிரத்தை கொள்ளவும் தொடங்கினானோ அப்போதிலிருந்தே உளவியல் பற்றிய வழக்கு எழுந்தது எனலாம். மனிதன் சிந்தனை பற்றியும், நடத்தைப் போக்குப் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தமையை மெய்யியல் முதன் முதல் எடுத்துக்காட்டியது. உளவிய லானது PSYCHOLOGY என ஆங்கிலத்தில் கூறப்படு கிறது. இது psyche என்ற கிரேக்க அடிச் சொல்லிலிருந்து எழுந்ததாகும். Psyche என்பது உள்ளம், அது பற்றிய இயலே உளவியல் என பொதுவில் தற்போது எடுத்தாளப்படுகின்றது. இவ்வரை விலக்கணமானது ஏறத்தாழ 19ம் நூற்றாண்டு வரை பெரிதும் ஏற்புடையதாக இருந்தது.

ஒரு சமுதாயத்தில் உளவியல் சார்ந்த பிரச்சனைகள் பல வகையாக எழுகின்றன. உள நெருக்கீடு கீழ்மட்டத்தில் இருந்து மேல்மட்ட மக்கள்வரை பரவலாகக் காணப்படுகிறது. இதனுடைய விளைவுகள் மிகச் சாதாரணமான நிலையிலிருக்கும்போது அதனால் பாதிக்கப் படுபவர்கள் நித்திரையின்மை, மனக்குழப்பம், இயலாமை, தலைவலி, செயற்றிறன் குன்றுதல், உறவுகளிடையே புரிந்துணர்வற்ற தன்மை, மதுப் பாவனை என்பன போன்றவை ஏற்படலாம். ஆயினும் இதனால் தீர்வு ஏற்பட்டுவிடப்போவ தில்லை. இவற்றுக்காக அநேகம்பேர் வைத்திய சாலைகளில் மருந்து மாத்திரை பெறச்செல்வது மில்லை. பொதுவாக உடல் உபாதை களுக்கே வைத்திய சாலைகளுக்குச் செல்வார்கள். இந்த இடத்தில் இந்து சமயத்தில் ஆலயங்கள் தீர்வுக்கான ஓர் ஊடகமாக விளங்குகின்றன.

தீராத பிரச்சனைகளுடன் மக்கள் ஆலயங் களுக்குச் சென்று அப்பிரச்சனைகளை இறை வனிடம் விண்ணப்பித்து முற்றாகச் சரணடை கின்ற தன்மையினைக் காணமுடிகின்றது.

"அவனருளாலே அவன் தாள் வணங்கி..."

என்ற அருள்வாக்குக் கேற்ப இறை சிந்தனை களே இறுதியில் மனோபலத்தை வழங்குவதைக் காண முடிகிறது.



வளர்முக நாடுகளில் குறிப்பாக பாரம்பரிய நடை முறைகள், சமய நம்பிக்கை கள், பழக்க வழக்கம், மத வழிபாட்டு முறைகள், சடங் குகள், ஆசாரங்கள், சமய விழாக்கள், விரதங்கள் போன் றவை மன நெருக்கீட்டைக் குறைப்பதற்கு பெரும் பங்கு ஆற்றுகின்றன. புராதன சமய பாரம்பரிய முறைகள் பயனு ள்ளதும், உறுதியான நம் பிக்கை தரக்கூடியன என விஞ்ஞான ஆய்வுச் சான்று கள் உறுதிப்படுத்தி உள்ளன. அவ்வாறே மேலைத்தேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ முறைக்களைப் பயன்படுத்தி மக்களுக்கு உதவிசெய்வதற்காக பல நிறு வனங்கள் கணிச மான பங்காற்றி வருகின்றன. எனினும் மக்கள் இறைவனிடம் நம்பிக்கை வைத்து ஆலய பூஜை, ஆலய தர்சனம்போன்றவற்றில் ஈடுபட்டு சுபீட்சம் பெறுகின்றனர். அதாவது "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற வகையில் உளநெருக் கடிக்கான தீர்வுகளில் ஆலயங்களே சிறப்பிடம் வகிக்கின்றன.

வாழ்க்கையில் கஷ்டம் வரும்போதெல் லாம் மக்கள் ஆலயங்களுக்கு செல்வதும், பிரார்த் தனையில் ஈடுபடுவதும் நல்லவை நடக்கவேண்டு மென வேண்டுதல் செய்வதும் மக்கள் கடவுளின் மேல் வைத்துள்ள நம்பிக்கையே ஆகும். ஆலயங் களில் ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறையினை நகர்ப்புற மக்கள் பெரிதும் கடைப்பிடிக்கின் றனர். கிராமப்புற மக்கள் ஆகமம்சாராத கிராமிய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கின் றார்கள். மக்கள் தமது இன்னல்களைப் போக்கு வதற்காக மனம் உருகி இறைவனை நோக்கி தீ மிதித்தல், கரகம்எடுத்தல், காவடிஎடுத்தல், பாற்குடம் எடுத்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், மடை பரவுதல்போன்ற நேர்த்திகளை நிறை வேற்றி மனச் சாந்தி அடைகின்றனர். மற்றும் சிறு பிள்ளைகளுக்கு துன்பங்கள், துயரங்கள் ஏற்படும் இடத்து ஆலயங்களுக்குச் சென்று குழந்தையை விற்று வாங்கல், குழந்தைகளுக்கு மொட்டை அடித்தல் போன்ற செயற்பாடுகள்மூலம் மன நெருக்கீடுகளைத் தீர்த்து சாந்தியும் சமாதானமும் அடைகின்றனர்.

குடும்பத்தில் இறப்பு முதலிய துன்பங்கள் நிகழ்ந்து விட்டால் வீட்டில் உள்ள உறவினர்கள் இறந்தவருக்குரிய இறுதிக்கிரியைகளை சமய குரவர்கள் மூலம் ஆற்றுகின்றனர். பின்னர் இறந்த திதியில் மாசிகம், சிராத்தம், சாந்தி கிரியைகள், ஞாபகார்த்த ஆராதனைபோன்ற சடங்குகளை நடாத்துவதன்மூலம் மனதில் ஒரு அமைதியை யும் ஆறுதலையும் மக்கள் அடைகின்றனர். உதாரணமாக, எமது நாட்டில் கீரிமலையில் பிதிர் கடன் நிறைவேற்றுவது சிறப்பம்சமாக விளங்கு கிறது.

இத்தகைய கிரியை வழிபாடுகள் முறைப் படி ஆலயங்களிலும், இல்லங்களிலும் நடைபெறாது போனால் சிக்கலான உளவியல் சமூகப் பாதிப்புகள் வீட்டிலும் உறவுகளிடை யேயும் உருவாக அதிக வாய்ப்புக்கள் ஏற்படு கின்றன. உதாரணமாக தற்கால நாட்டு நிலைமை, காணாமல்போதல், இறந்த சடலங்கள் கிடைக் காதுவிடல், போன்ற காரணத்தினால் மனச் சாந்தி யும் சமாதானமும் ஏற்படும் வகையில் ஆலயங் களுக்குச் சென்று பூர்வஅபரக் கிரியைகளை நிறை வேற்றுவதன்மூலம் மனக்குழப்பங்களிலிருந்து சற்று விடுபடுவதற்கு அவ்வாலயங்கள் துணை புரிகின்றன.

இந்துக்களின் வாழ்வில் விநாயகர் ஆலயங் கள் சிறப்பிடம் பெறுகின்றன. இந்துக்களைப் பொறுத்தளவில் விநாயகர் முதல் வணங்கும் கடவுளாகச் சிறப்பிக்கப்படுகிறார். எந்த ஒரு காரி யத்தையும் தொடங்குவதற்கு முதலில் விநாயகர் வணக்கம் செய்வது இந்து முறையாகும்.

சாதாரண மக்களின் வாயில் "அப்பனே பிள்ளையாரே" என்ற கூற்று மிகச் சர்வ சாதாரண மானது. விநாயகரின் வழிபாட்டு முறையும் மிக எளிதானது. விக்கினங்களையும் போக்கும் கடவுள் விநாயகரே என்பது ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒன்று.

இந்த வகையில் பிரதேச மக்களின் வாழ்வு இறைபணியுடனும் இறையாட்சியுடனும் வளம்பெற வேண்டும் என்பதற்கு அமைவாக **"திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயம்"** அமைந்து அருட்பணி செய்துவருகி றது. குறிப்பாக தென்மராட்சி மக்களின் வாழ்வில் மன அமைதியையும், உற்சாகத்தையும் நல் லொழுக்கத்தையும், வேண்டிய வளத்தையும் பெற்று வாழப் பெரிதும் துணையாக இருந்து வருகிறது என்பதில் ஐயமில்லை.

*"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"*

நன்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டில் குடும்பங்களின் பங்களிப்பு

பேராசிரியர் மா. சின்னத்தம்பி
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### அறிமுகம்

பிள்ளைகளின் கல்வி முன்னேற்றங்களில் பாடசாலைகள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்ற எதிர்பார்க்கை வலுவானது ஆனால் பாடசாலைகள் கற்பிக்கும் அனைத்து மாண வருக்கும் அதே பாடங்களை அதேமாதிரியில் - சில சமயங்களில் சற்றுப் பலவீனமான முறையில் - வழங்கும் ஏற்பாடுகளாக தனியார் கல்வி நிலையங் கள் செயற்படுவதை எவரும் சட்டபூர்வமாக எதிர்க்கவில்லை. இத்தகைய மாற்றுக் கல்வி வசதிகளை வழங்கும் நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகள் விரிவாக்கம் பெற்றுச் செல்வதற்கு பல காரணங்கள் உள்ளன. எனினும் அத்தகைய காரணங்களில் குடும்பங்களின் பங்களிப்பு குறைந்து சென்றமையும் மிகமுக்கியமானதென்ப தால் அத்தகைய அம்சம்பற்றியே இக்கட்டுரை ஆராய்கிறது.

### குடும்பம் முதல்நிலை நிறுவனம்

பிள்ளைகள் குடும்பங்களின் ஊற்றுக்கள், குடும்பங்களின் சொத்துக்கள், குடும்பங்களின் விளைபொருள்கள் குடும்பங்களில் பிறந்து வளர்ந்து சமூகத்தில் பலவற்றைக் கற்று மற்றொரு குடும்பத்தை உருவாக்குவதன்மூலம் சமூக விருத்தியையும் சமூக நிலைப்படுத்தலையும் உறுதிப்படுத்துபவராக காணப்படுபவர்களே குழந்தைகள்.

குடும்பங்கள் பிள்ளைகள் தாமாக கற்பதற்கு வழிகாட்டுகின்றன. தாய் மொழியை கேட்கவும் புரிந்துகொள்ளவும், பேசவும் குடும்பம் அடிப் படையில் துணைசெய்து வருகிறது. தாயிடம் தொடங்கி சகோதரர்கள், மூத்தோர் போன்றோர் பலரிடமும் இதனைக் கற்றுத் தெளிகின்றனர். பாடசாலை ஒழுங்குபடுத்தி பல மறுவாய்ப் புக்களை வழங்கி மொழிவிருத்திக்கு உதவுகின் றனர்.

அன்றாட வாழ்வியல் பழக்கங்கள் குடும் பங்களினால் அனுபவமுறைகளாக கற்பிக்கப் படுகின்றன. ஒழுங்கு, சுத்தம், நம்பிக்கை, தொடர், செயல், நேரமுகாமைபோன்ற பலவும் குடும்ப பழக்கங்களிலிருந்து வடிவமைக்கப்படுகின்றன. உடை, உணவு, ஒழுங்குக் கிரமங்கள் கடவுள் வழி பாடு, கற்கும் நேரங்கள் போன்ற பல விடயங்களை யும் அவைபற்றிய உணர்வு களையும் நடத்தை களை யும் குடும்பம்தான் போதி த்து வந்திருக்கிறது.



சமயப் பழக்கங்கள் குடும்பங்களினால் வளர்க் கப்படுவது வழமை. சில குடும்பங்களில் வலுவான சமய ஆசாரங்கள் பிள்ளை களின் நடத்தை மாதிரி களின் தன்மையை கூர்மை யாக நிர்ணயித்து வருவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டு. சமயகுருமார், போதகர்கள் ஓதுவார்கள் இசைக்கலைஞர்கள் போன்றோரின் பிள்ளைகளிடம் விசேடித்த கற்றல் மற்றும் பயிற்சியை குடும்பங்கள் வலியுறுத்திவருவதையும் காண்கிறோம். பொலிஸ் அதிகாரிகள் இராணுவ உயர் அதிகாரிகள் போன்றோரின் பிள்ளைகளிடமும் செயல் ஒழுங்குகளும் கட்டுப்பாடான நடத்தைகளும் தீவிரமாக வலியுறுத்தப்படுவதை நன்கு அவதானிக்க முடியும்.

வீட்டுக்கு வெளியே தொழிலின் நிமித்தம் செல்லாத தாய்மாரின் பிள்ளைகள் பலவகை அறிவையும், திறன்களையும், தேர்ச்சிகளையும், மனப்பாங்கையும் முறையில் மாதிரியில் கற்றுத் தேர்வதை வரலாற்று ரீதியாக அவதானித்து வந்துள்ளோம். சமைத்தல், உடைகளை பராமரித்தல், தைத்தல், வீட்டுத்தோட்டப் பராமரிப்பு, கால்நடை வளர்ப்பு போன்ற பல்வகைத் திறன்களையும் தாய்மாரிடமிருந்து பெண் பிள்ளைகள் கற்றுவந்தனர். தொழில் பார்க்கும் தேவை தாய்மாருக்கு கட்டாயமானபோது இப் பணிகளிலிருந்து மெல்ல மெல்ல தாய்மார் தம்மை விடுவித்தனர். வேலையாட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அவை கையளிக்கப் பட்டன. இது சமூக வளர்ச்சியின் ஒருபடி முறைதான். பெண் விடுதலையின் முதன்மை மிக்க பரிமாணம்தான். இதனால் பிள்ளைகள் தாயிடமிருந்து முன்பு கற்றுக்கொண்ட பலவற்றை இன்று இழந்துவிட்டனர்.

இதேபோல் மரபுவழித்தொழில்கள் பல வசிப்பிட வீடுகளுடன் இணைக்கப்பட்ட தொழிற்கூடங்களில் மேற்கொள்ளப்பட்டபோது தொழில்சார் கண்ணோட்டம், தொழில் ஈடுபாடு, தொழில்மகத்துவம்போன்ற பலவற்றையும் உணர்ந்து கொண்டதோடு கருவிகளைக் கையாளும் திறன்கள், தொழிற்தேர்ச்சி போன்றவற்றையும் கற்றுக்கொண்டிருந்தனர். தொழில் அடிப்படையில் முன்னேற்றகரமான மேல்நிலைத் தொழில்கள் நோக்கி நகர்வதை இவை தடுத்துவிட்டன என்ற குற்றச்சாட்டு சமூகவியல் நோக்கில் முன்வைக்கப்படுவதையும் நிராகரிக்க முடியாது. தொழில் அடிப்படையிலான சாதி முறை, சாதிமுறை சார்ந்த வளர்ச்சி வாய்ப்புக்களிலான பாரபட்சம், புதிய திறன்களை குடும்ப மாதிரியில் நிராகரிக்கும் நடைமுறைகள்போன்றனவே இளம் பருவத்தில் இயல்பாகவே குடும்பத் தொழில்களைக் கைத்தொழில்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை ஆண் பிள்ளைகளுக்கு இல்லாமற் செய்துவிட்டன என்பதும் வருத்தம் தரும் உண்மையாகும்.

குடும்ப விழுமியம், தொழில், மானிடதிறன் விருத்தி என்பன தொடர்பாக வரலாற்றுக் காலத்தில் செய்துவந்த பங்களிப்பு கைவிடப் பட்டுவிட்டது.

கல்வி-தொழில்-வாழ்க்கை என்ற தொடர் ஒழுங்கு முறையிலான வாழ்வை குடும்பங்களிலிருந்து பிள்ளைகள் பெற்றுவந்த வாய்ப்பு பெரிதும் கைநழுவிப் போவதை நன்கு அவதானிக்க முடியும். இது வருத்தம் தருகின்ற மாற்றம்தான்.

**தாயின் கண்காணிப்பில் கற்றல்**

பிள்ளைகள் விடலைப்பருவத்தை அடையும்வரை தாயின் நிழலில் மகிழ்ச்சியுறுபவர்கள் அதில் வளருபவர்கள் அவர்கள் அதிகம் நேசிக்கும் நபராகவும் நம்புகின்ற நபராகவும் வாழ்பவர்கள் அன்னையர்தான். இது உயிரியல் முறைசார்ந்த உறவுதான். எனினும் எமது சமூக வாழ்வு அதனைப் பலமடங்கு வலிமைப்படுத்தியுள்ளது.

எமது பண்பாட்டின் வலிமையும் பாதுகாப்பும் இதுதான். இது தான் எமது சிறார்களின் கற்றலில் தாய் என்பவர் அன்புரிமை மிக்க மேற்பார்வையாளராக, கண்காணிப்பாளராக, வழிகாட்டியாக செயற்படுவதற்கு வழிவகுத்தது.

மிகவும் வறிய எழுத்தறிவற்ற தாய்மார் நீங்கலாக ஏனையவர்கள் மாலை வேளைகளில் பிள்ளைகளின் கற்றலை ஒழுங்குபடுத்திவந்தனர். இது நாளாந்த குடும்ப மாலை நிகழ்ச்சி நிரலாக இருந்துவந்தது. இதில் தாய்மார் பின்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரிகளில் பங்களிப்பை மேற்கொண்டிருந்தனர்.

1. பிள்ளைகள் பள்ளியில் பயன்படுத்தும் பயிற்சிப்புத்தகங்களை பார்வையிடல்.
2. பிள்ளைகளை கடவுள் வழிபாட்டின் பின் பள்ளியில் படித்த பாடங்களைப் பயிலுமாறு பணித்தல், மேற்பார்வை செய்தல், தம்மாலியன்றளவு உதவுதல்.
3. பிள்ளையின் பள்ளிக்கூட வாழ்வு பற்றி உசாவுதல்-அதாவது பிள்ளையின் நண்பர்கள், ஆசிரியர்கள், பள்ளிக்கூட நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைப் பற்றிக் கேட்டறிதலும், அபிப்பிராயம் உருவாக்கலும், வழிகாட்டலும்.
4. பரீட்சைக்கால அடைவுப்புள்ளிகள்பற்றி கலந்துரையாடல் விசாரித்தல், வலியுறுத்தல், முதன்மையை உணரச் செய்தல் மீள் ஊக்கங்களை வழங்குதல்.

இந்த மேற்பார்வை வகி பங்குதான் மாலை வேளையில் பிள்ளைகள் கற்றலை குடும்பப் பண்பாடாக மாற்றியிருந்தது. பிள்ளைகள் நிறைய கற்றார்கள் கருத்துபரிமாற்றம் செய்தார்கள் தாயின் ஈடுபாடுபற்றி வகுப்பில் சகபாடிகளுடனும் ஆசிரியர்களுடனும் தேவைக்கேற்ப உரையாடி மகிழ்ந்தனர்.

தற்போது இந்த மாலை வேளை குடும்ப மட்ட கற்றல் மேற்பார்வை முறை கைவிடப்பட்டுவிட்டது. இதற்குப் பல காரணிகள் பொறுப்பாக உள்ளன.

1. பெரும்பாலான பெற்றோர் தொழிலின் நிமித்தம் வீட்டுக்கு வெளியே செல்லுதல், அதிகதூரம் பயணம் செய்தல், வேலைக்களைப்புடன் வீடு திரும்புதல், இரவு நேர வீட்டுவேலைகளில் பரபரப்புடன் ஈடுபடுதல்.
2. பிள்ளைகள் பாடசாலை விட்டபின் ரியூசன் வகுப்புக்கு சென்று- அதிக மாணவருடன் அமர்ந்து பாடம்கேட்டல் (கிரகிக்கின்றனரா என்பது உறுதிபடுத்தப்படவில்லை) அதனால் அதிக உடற்களைப்புடன் வீடுதிரும்புதல், ஓய்வுத் தேவை உணர்வுடன் வீட்டிற்கு வருதல்.




3. நடுத்தர வருமானம் உள்ள குடும்பங்களின் மாலை வேளை பொழுதுபோக்கு எஜமானாக தொலைகாட்சி தொடர் நாடகங்களும், பிற கலைநிகழ்ச்சிகளும் அமைந்திருத்தல், இதில் 50% நேரம் விளம்பர மோகியினியின் மின்னியல் அட்டகாசத்தின் ஆதிக்கத்தில் குடும்ப அங்கத்தவர் அனைவரும் கட்டுப்படுதல், இது இரவு 11.00 மணி வரை நீண்டு செல்லுதல். குடும்பத்தில் எல்லா வயதினர்மீதும் இந்த செலவு மிக்க மின்னியல் பொழுதுபோக்கு அரக்கனின் ஆதிக்கம் மேலாண்மையுடனிருத்தல்.
4. தாயும் களைத்து, பிள்ளைகளும் களைத்து வீடு திரும்பும் நகர்மய குடும்ப வாழ்வு பொறிமுறையில் தாய்-பிள்ளைகள் மட்டத்திலான உணர்வுப் பரிமாற்றம் தகவல் பரிமாற்றம் கற்றல் மதிப்பீடு, கற்றல் உறக்கம் என்பன அடிபட்டுப் போய்விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய குடும்ப நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட புரள்வு-பாதகமான திசை நோக்கிய குடும்ப செயலாற்ற அசைவானது பிள்ளைகளின் சுய கற்றலை பெரிதும் பாதித்துவிட்டது. பிள்ளையின் படிப்புப்பற்றிய பெற்றோர் இடை வினையுறவை மிக மோசமாக சிதைத்து விட்டது.



இத்தகைய குடும்ப செயல் முறைகளில் ஏற்பட்டுள்ள கிடையான அசைவியக்கமானது பிள்ளைகளில் கற்றல் தொடர்பான குடும்ப ஈடுபாட்டை வெட்டிப் பிரித்துவிட்டது.

**குடும்ப வாசிப்பும் அதற்குதவும் நூல்களும்**

இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு யாழ்ப் பாணப் பிரதேச வீடுகளில் எல்லோரும் பொது வாக வாசிப்பதற்கான நேரமும் பழக்கமும் காணப் பட்டன. குடும்பசஞ்சிகைகள் பல இந்தியாவி லிருந்து அதிகளவில் வந்து சேர்ந்தன. அவற்றில் வெளிவரும் படைப்புகளின் இலக்கு வாசிப்பாளர் குடும்பத்துப் பெண்கள்தான் என வலுவாக நம்பப்பட்டது. அதில் உண்மையுமிருந்தது.

மென்மையான முறையில் பண்பாடு மிக்க உரையாடல்களும் முதிர்ச்சி பெற்ற கதாபாத்தி ரங்களும் யதார்த்த சம்பவங்களும் தொடர்பு படும் பல புனைவுகளை அந்த நூல்கள் தாங்கி வந்தன. இதனால் குடும்பத்தில் எல்லோரும் வாரா, வாரம் காத்திருந்து போட்டி போட்டு வாசித்தனர். இதனால் வாசித்தல் என்பது குடும்பத்தினரின் இன்றியமையாத கடமைக் கூறுகளில் ஒன்றாகியது. இந்த நூல்களே குடும்ப அங்கத்தவரிடையில் உறவுகளை ஒன்றிணைக்கும் அறிவுச்சங்கிலிகளாகவும் விளங்கின. இதனால் மொழியறிவும் வாசிப்புத் தேர்ச்சியும் வளர்ந்த தோடு பண்பட்ட உணர்வுகளும் செம்மைப் படுத்தப்பட்ட குணச்சித்திரங்களும் வளர்க்கப் பட்டன. இது உபகற்றல் செயற்பாடாக விளங்கி யது. இது பிள்ளைகளிடமும் வாசிப்பு நாட்டத் தையும் வாசிக்கும் ஆசையையும் உருவாக்கி யிருந்தது.

இத்தகைய நூல்களையும் வாசிப்புக்களை யும் சுற்றி வளர்ந்த பிள்ளைகளின் கற்றல் கலாசாரம் தேய்ந்து மறைந்துபோய்விட்டது. இது குடும்பங்களில் ஏற்பட்ட கல்விசார் தேய்மானம்தான், தோல்விதான். தொலைக் காட்சிகள் இந்த நூல்களைப் பதிலிடுவதாகக் கூறுவது பூந்தோட்டங்களுக்குள் உலாவுவதற்குப் பதிலாக இரைச்சல் மிக்கதும் ஆபத்து ஏற்படுத்து வதுமான இரசாயனத் தொழிற்சாலையில் உலாவு வதுபோலானதே. நூல்கள், பத்திரிகைகள் வாசிக் கும் பழக்கம் குடும்பப் பண்பாடாக உயிர்ப்புடன் இல்லாமல் போனதால் பிள்ளை களின் வாசிப்புத் திறன் தேய்ந்து போய்விட்டது என்பது பேருண் மையாகும்.

**கதை சொல்லும் பாட்டிகள் காணாமல் போன தெப்படி**

முன்பெல்லாம் குடும்பம் குதூகலப் பூந்தோட்டமாக இருந்தது. சகோதரர், அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா என்ற குடும்ப உறவுகளி னால் பிணைக்கப்பட்ட உயிர்ப்புள்ள இல்லங்க ளாக அவை விளங்கின.

முதியோரின் அறிவுரை, ஆலோசனை, அதிகாரமும், அன்புரிமையும் இணைந்த கட்டுப் பாடு, கடமை மீதூரப் பெற்ற கண்காணிப்பு என்றவாறு அனுபவ வழிகாட்டல்கள் இருந்தன. பிள்ளைகளும் மதித்தல், கட்டுப்படுதல், கடமைசெய்தல் என்ற வாழ்வியல் மாண்புகளை மூத்தோரிடமிருந்து பெற்று வளர்ந்தனர். அனுப வங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட அறிவையும் செயலாற்றங்களையும் பாட்டிமார் இரண்டாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையினரான பேரப்பிள்ளைகளுக்கு கை மாற்றிவந்தனர். இந்த வாழ்வியல் கல்வி பிள்ளை களின் கற்றல் உன்னதங்களை உறுதிப்படுத்தின. அவற்றுக்கு உரமூட்டின.

மாலை மற்றும் முன்னிரவுகளில் பிள்ளை கள் பாட்டியைச்சுற்றி உலாவருவர். கதை சொல்லும் மானிடத் தொலைக்காட்சியாக பாட்டி இருந்தார்.

*"ஒரே ஒரு ஊரில் ஒரு இராசா இருந்தார்..."*
*"ஒரு நாள் அவர்.."*



இவ்வாறு "ஒரு" மைய கதைத் தொடர் களை கூறினார்கள். ஆவலைத் தூண்டும் வகையில் கதைகளை நிறுத்திவிட்டுப் பிள்ளை களிடம் கேள்விகளை மதிப்பீட்டு வினாக்களாக கேட்பார்கள்.

*"காட்டில் இராசா எதைக் கண்டார்"*
*"அந்த குரங்கு முதலைக்கு என்ன சொன்னது"*

இந்த மாதிரி வினாக்களை எறிந்து விட்டு பாட்டி ஓய்வெடுத்தார். பிள்ளைகள் ஞாபகத்தை உறுதிப்படுத்தினார்கள், கலந்துரையாடினார்கள். திரும்பவும் சொல்லியதையே சொல்லும்படி கெஞ்சிக் கேட்பார்கள். இப்படிப் பிள்ளை களுக்கும் பாட்டிக்குமான அன்புரிமை அறிவுத் தேடலை வளர்ப்பதாகவே பாட்டி கதை சொல்லும் கலாசாரம் உயிருடனிருந்தது.

இன்று வீடுகளில் பாட்டி மார் இல்லை, அவர்கள் வயோதி பர் இல்லங்களில், பிள்ளைகள் பச்சை இரத்தம் சொட்டும் வன்முறைக் காட்சி களைக் கொப்பளிக்கும் தொலைக் காட்சிகள் முன்னால்.

பாட்டிகள் இருந்தாலும் பலருக்கு கதைகள் தெரியாது அல்லது அவர்களும் தொலைக் காட்சிப் பெட்டிகளின் கைதிகளாக விட்டி ருப்பர்.

இந்த குதூகலம் நிறைந்த- உயிரோட்ட மான இரண்டு தலைமுறையினரிடையிலான தொடர்பாடல்கள் கற்றல் திறன்களை வளர்த்தன, அறிவை மேம்படுத்தின, மானிட உணர்வுகளின் மேன்மையை உணர்த்தின. குதூகலக் குடும்பங் களில் பிள்ளைகள் முறையில் கல்வியால் மேம் பாடடைந்தனர்.

இந்தக் கலாசாரத்தை தொலைத்து விட்ட தால் வீட்டில் கற்றல் சூழல் காணாமல் போய் விட்டது எங்கோ தொலைந்துபோய்விட்டது.

**முடிவுரை**

இப்படி குடும்பங்களின் கட்டமைப்பு மாற்றங்களினால் கற்றல் வாய்ப்புக்களும் ஊக்கமும் குறைந்து போய்விட்டது.

தாய்மாரின் பங்களிப்பும், பணிநிலையும் மாறிப்போனதால் அவர்களின் உதவியற்ற அநாதைகளாகிப் போனார்கள் குடும்பப் பிள்ளை கள்.

அனுபவச் சுரங்கங்களான மூத்தோரை இழந்துவிட்டு தொழில் நுட்பக் கருவிகளினாலும் பணப்பசியுடன் அலையும் வணிகமயப்பட்ட கல்வி நிறுவனங்களினாலும் பள்ளிப் பிள்ளைகள் சிறைப்பிடிக்கப்பட்டு விட்டார்கள்.

பொருள்தேடல் முனைப் பும், போட்டி நிலை அந்தஸ்துணர்வும் குடும்பத்தவர்களை பணம்தேடும் இயந்திரங்களாக்கிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தம்பிள்ளைகளை அடைப்பதற்காக சரணாலயங்களாக புதிய பள்ளிகளைத் தேடி யலைகின்றனர்.

குடும்பங்களின் கட்டமைப்பும் இலக்கும் குலைந்ததால் பிள்ளைகள் கற்றல் ஊக்கங்களை வெளியுலகில் பணம் கொடுத்து தேடிக் கொண்டிருக்கின்றார்கள். உணர்வுகளும் விழுமியங்களுமற்ற சடங்குமுறைக் கல்வி வழங்கும் நிறுவனங்களில் பொறிமுறையில் செயற்படும் ஆசிரியர்களைத் தேடி அலைகின்றார்கள். இதுவே இன்றைய பிள்ளைகளின் கற்றல் வாழ்க்கையாகும்.

குடும்பங்களிலிருந்து கல்வித்தேவைக்காக குடும்பங்களைவிட்டு அதிக தொலைவிற்கு பிள்ளைகள் போய்விட்டார்கள். அவர்களை திரும்பவும் அழைக்க முடியுமா? குடும்பங்கள் உண்மையானவர்களை உருவாக்குமா? சமூகம் தான் விடைகாண வேண்டும்.

**ஆடிப்பூரம் :-**

ஆடிமாதத்திலே பூர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்போது கொண்டாடப்படுவது ஆடிப்பூரம் எனும் விழா. இது தேவிக்குரிய திருநாள். மானிடத்தை இன்னல்களில் இருந்து மீட்பதற்கு உலகன்னை இப்பூவுலகில் தோன்றிய நாள் ஆடிப்பூரம் எனக் கருதுவர்.

**ஆருத்ரா :-**

மார்கழி மாதத்திலே வரும் திருவாதிரைத் திருநாளே ஆருத்ரா தரிசனநாள் எனப்படுவது. திருவாதிரை சிவனுக்கு உரிய நட்சத்திரம். திருவெம்பாவை விரதத்தின் இறுதிநாள் திருவாதிரை. எனவே மார்கழி திரவாதிரை சிவனுக்குரிய புண்ணியநாட்களில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. இந் நாளிலே நடேஷர் அபிஷேகத் திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவும் தமிழும் பரதமும்

பேராசிரியர் சபா. ஜெயராசா

தமிழர்களுடைய தொன்மையான கூத்து வடிவங்களில் இருந்தும், ஆடல் முறைமைகளில் இருந்தும் படிமலர்ச்சி கொண்ட பரத நடனம் நெந்நெறி ஆடலாக முகிழ்த்தெழுகையில் சமயச் சார்புகளை முழுமையாக உள்வாங்கிய ஆற்றுகை நிறைவைப் பெற்றுக் கொண்டது. முருகப் பெருமான் ஆடிய குடைக்கூத்து, துடி, சிவபிரான் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம், கண்ணபிரான் ஆடிய அல்லியம், மல், குடக்கூத்து, கொற்றவை ஆடிய மரக்கால், இந்திராணி ஆடிய கடையம், காமன் ஆடிய பேடு, திருமகள் ஆடிய பாவை என்றவாறான இறைசார்ந்த ஆடல் மரபுகளில் பரதநடனம் தடம் பதிக்கலாயிற்று. இறையியல் இணைப்பு செந்நெறியாக்கத்துக்குரிய அடிப்படைப் பரிமாணமாயிற்று.

தமிழகத்து ஆலயங்களில் ஆடப்பெற்ற திருக்கோவை ஆடல்கள், நிலவுடைமை அழுத்தங்களினால் "சதிர்" என அழைக்கப்பட்ட வேளை அந்நடனத்தின் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட இ.கிருஷ்ணஐயர் பரத நாட்டியம் என்ற பெயரைப் பிரபலப்படுத்தினார். "பண்ணும் பரதமும்" என்றவாறு திருக்கோவை ஆடலைக் குறித்துரைக்கும் மரபு குமர குருபரரின் "சகலகலா வல்லிமாலையிற் காணப்படுதல் குறிப்பிடத்தக்கது" திருக்கோவை ஆடல் என்பது ஆடல் வல்லானாகிய சிவபிரானின் நடனத்தைச் சுட்டிக் காட்டியது. இறைபுகழ் பாடும் பண்ணோடு இணைந்த ஆடல் பிற்காலத்தில் பண்ணின் இணைப்பை இழந்து கர்நாடக இசையுடன் வலிமையான தொடர்பைப் பெற்றுக்கொண்டது.

பண்ணுக்கும் பரதத்திற்குமுள்ள நீண்ட தொடர்புகளைப் பக்தி இலக்கிய நீட்சியுடன் இணைத்துப்பார்க்க முடியும்.

*"ஆனந்தம் ஆடரங்கானந்தம் பாடல்கள்*
*ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்*
*ஆனந்தமாக அதில சராசரம்*
*ஆனந்தமானந்தக் கூத்தனுக்கே"*

என்பது திருமூலர் திருமந்திரப் பாடல்களில் ஒன்று. தழிழ் மரபில் எழுந்த பக்தி அறிகையும் அனுபவமும் வடமொழி மரபில் நந்திகேஸ்வரனின் அபிநய தர்பணத்தில் இடம் பெறும் தியான சுலோகம் அல்லது கடவுள் வாழ்த்தில் பின்வருமாறு பின்னப்பட்டுள்ளது.



*"ஆங்கிகம் புவனம் யஸ்ய*
*வாசிகம் சர்வ வாங்மயம்*
*ஆகார்யம் சந்திரதாராதி தம்*
*நுமஹ சாத்விகம் சிவம்"*

பண்ணும் பரதமும் இணைந்த அழகியற் காட்சிகள் நாயன்மார்களது பக்தி அறிகையிலே மிகையாகச் சித்தரிக்கப்பட்டுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளன. "அண்ணலார் ஆடுகின்ற அலங் காரமே" "ஆடலில் லயம் உடையார்", "கணம் ஏத்த ஆடிய அழகனே" "மன்னுமா நடமாடியுகப் பான்" "ஆடலையுகந்த எம்மடிகள்" என்றவாறு திரு ஞானசம்பந்தரின் அனுபவங்கள் பல தளங்களிலே வெளிப்படுகின்றன. "பண்ணின் மிசை நின்று பலபாணியாடவல்லான்" என்று சம்பந்தர் மேலும் விளக்குதல் பரதத்திற்கும் பண்ணுக்கு முள்ள தொடர்பை மீளவலியுறுத்துகின்றது.



"குட முழுவச் சதியழியே அனல் கையேந்தி கூத்தாட வல்ல குழகனாகி" என்றும் "அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாததோர் கூத்து" என்றும் திருநாவுக்கரசரின் பண்ணமைந்த பாடல்களிலே இறைவனின் ஆடற்காட்சிகள் தரப்படுகின்றன. "மண்ணார் முழவும் குழலும் இயம்ப மடவார் நடமாடும் மணியரங்கு" என்றும் பண்ணார் மொழிப் பாவையர் ஆடும் துறையும்" என்றவாறு பல சந்தர்ப்பங்களிலே சுந்தரமூர்த்திநாயனாரால் பண்ணோடிணைந்த திருக்கோவை ஆடல் விளக்கப்படுகின்றது.

*"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை", "தென்பாலுகந்து கூத்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்"*

என்றவாறு பண்ணோடிணைந்த திரு நடனத் தொடர்புகள் பலநிலைகளிலே மணிவாசகரால் விளக்கப்பட்டுள்ளன.

திருமூலர், காரைக்காலம்மையார், சைவ நாயன்மார்கள், அவர்களைத் தொடர்ந்து வந்த சைவசித்தாந்த ஆசிரியர்கள் முதலியோர் உரு வாக்கிய சைவசித்தாந்தத்திற்கும் ஆடலுக்கும் பண்ணுக்குமுள்ள இணைப்பு பின்வந்த இசை நடன ஆசிரியர்களால் மேலும் வலிதாக்கப் பட லாயிற்று. "நிருத்தஞ்செய்தாரே ஐயர் சதானந்த நிருத்தஞ்செய்தாரே" என்றும் "ஆட வெடுத்த பாதம் எமை ஆளவெடுத்த பாதம்" என முத்துத்தாண்டவரால் பல சந்தர்ப்பங்களிலே விபரிக்கப்பட்டது. "காலைத்தூக்கி நின்றாடும் தெய்வமே யென்னைக் கைதூக்கியாள் தெய் வமே" என மாரிமுத்தாப்பிள்ளையால் முன் னெடுக்கப்பட்டது. "நடனமாடினார் ஐயர் வெகு நாகரிகமாகவே கனகசபையில் ஆனந்த நடன மாடினார்" என்று கோபால கிருஷ்ண பாரதியார் தமிழிசை மரபையும் பரத நடன மரபையும் ஒன்றிணைத்தார். "ஆனந்த நடமிடும் பாதன் பொன்னம்பலவாணன் சிதப்பரநாதன் என தமிழ் மரபிலே தியாகராஜர் என விபரிக்கப்பட்ட பாபநாசம் சிவன் புனைந்து வழங்கினார்.

சிவநெறி வளர்ச்சி, தமிழிசை வளர்ச்சி, திருக்கோவை ஆடலாம் பரதநடன வளர்ச்சி ஆகியவற்றிற்கிடையே உள்ள இங்கிதமான இணைப்பை "பண்ணும் பரதமும்" என்றதொடர் அறிகை நிலையிலும், பக்தி நிலையிலும் புலப்படுத்தி நிற்கின்றது. ஆனால் இருபதாம் நூற்றாண்டிலே பரதநடன மீட்பு நடவடிக்கை யில் ஈடுபட்டோர் பரத நடனத்தின் தமிழ்த் தடயங்களையும், சுவடுகளையும் நழுவவிட்டமை ஆய்வுகளின் வழியாக மேலெழும் முடிவுகளாக வுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# வடமொழியும் தென்தமிழும்

பேராசிரியர் இ. குமாரவடிவேல்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(இந்து சாதனம் பிரமாதிவருட தை மாத இதழுக்கு எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம்)

ஆலய பூஜையில் தமிழ் வேதமாகிய திருமுறைகளுக்கு அளிக்கப்பட வேண்டிய இடம் குறித்து அயன்மை நோக்கும் அசிரத்தைப் போக்கும் வளர்ந்து வருவதை அதானிக்கக் கூடிய தாயுள்ளது. இது கவலைக்குரியது. இதுபற்றிப் பலரும் சுட்டிக்காட்டி வந்துள்ளனர். முதுபெரும் சைவ அறிஞர் ஏழாலையூர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்கள் இதுபற்றிப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன் எழுதிய கட்டுரையொன்று இவ்விதழை அலங்கரிக்கிறது.

திருமுறைகளின் பெருமையை இச் சிறு தலையங்கத்தில் அடக்கி விடமுடியாது.

*"தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் -கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லு
மொருவா சகமென்றுணர்"*

என்ற ஔவை வாக்கும்

*"வேதம் பசுவதன் பால் மெய்யாகமம் நால்வர்
ஓதுந்தமிழதனி னுள்ளுறு நெய் -போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண் டான்
செய்ய தமிழ் நூலின் திறம்"*

என்ற ஆன்றோர் மொழியும் தமிழ் வேதமாம் திருமுறைகளும் எழுதாமறையாம் வேதங்களும் ஆகமங்களும் சமச் சிறப்புவாய்ந்தன என்பதையும் திருமுறைகள் வேதசாரம் என்பதையும் ஐயந்திரிபற எடுத்துரைக்கின்றன.

சமய நூல்களைத் தோத்திர நூல்கள், சாத்திரநூல்கள், மந்திர நூல்கள் எனப் பாகுபாடு செய்யலாம். வேதாகமங்கள் மூவகை நூலாக அமைந்துள்ளன. பன்னிரு திருமுறைகளுள் அடங்கிய திருமூலர் திருமந்திரம் தமிழில் அமைந்த மூவகை நூலாகும். பன்னிருதிருமுறைகள் சிறந்த தமிழ்த்தோத்திர நூலாகும். சிவாகமங்களிலிருந்து தமிழில் தொகுக்கப்பட்ட பதினான்கு ஆக்கங்களைக்கொண்ட மெய்கண்ட சாஸ்திரம் தமிழிலுள்ள சிறந்த சாஸ்திர நூலாகும்.

மந்திரம் என்ற சொல்லுக்கு ஓதுவோரைக் காப்பாற்றுவது என்று அறிஞர்கள் பொருள்கொள்வர்.



"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்கிறது தொல்காப்பியம் "ஒழுக்க நெறியில் நின்று வாழும் உயர்ந்த பெருமக்கள் இது இவ்வாறு ஆகுக" என்று ஆணையிட்டு மறைபொருளாகச் சொல்லிய மொழியே மந்திரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாம் பேசுகிற குறைமொழிகளையே வைத்துக் கொண்டு, அந்தக் குறைமொழிகளை நிறைமொழிகளாக மாற்றும் பேராற்றல் வாய்ந்த வர்களாக நம்முடைய முன்னோர்கள், பெரியவர் கள், ஞானிகள், தபசிகள், ரிஷிகள் முதலானோர் திகழ்ந்தனர். இவ்வாறு குறைமொழியாக உள்ள எழுத்துக் கோவைகளைச் சொற் கோவைகளைச்- சக்திபெற்ற மந்திரங்களாக மாற்றுவதைத்தான் தொல்காப்பியர் ஆணையிடுதல் என்கிறார்.

அக்ஷரங்கள் என்று சொல்லப்படுகின்ற பல மந்திரங்களுக்குப் பொருளே இல்லை. ஐம், ஹ்ரீம், க்லீம் என்ற பீஜ அக்ஷரங்கள் எந்தவித பொருளையும் தருவதில்லை. குறிப்பிட்ட அதிர் வெண்களுடைய எழுத்துக்களை ஒன்று சேர்ப் பதுமூலம் பெறப்பட்டவையே இம்மந் திரங்கள். இவ்வொலிச் சேர்க்கைகளில் தமது பேராற் றலைச் செலுத்தி செல்லுமாறு ஆணையிட்டு பின்னர் எமக்குத் தந்தவையே மந்திரங்கள். இம்மந்திரங்களை திரும்பத் திரும்ப சொல்கிற வர்கள் ஆற்றல்பெறுவார்கள்.

இம் மந்திரங்கள் ஒலிக்கூட்டங்கள் ஆகை யால், இவற்றை மொழிபெயர்ப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை. இம்மந்திரங்களும் ஏனைய தந்திரங் கள், தோத்திரங்கள், சாஸ்திரங் களும் வடமொழி வேதசிகவாமங்களில் நிறைய வுள்ளன. வேதசிவா கமங்களை மூலமொழியாகிய வடமொழியி லேயே வைத்துக்கொள்ளவேண்டுமென்பது தெளிவு.

ஒரு சிலர் வடமொழி தேவபாஷை. அதுவே உயர்மொழி; நாம் அம் மொழியில் இறைவனை ஆராதிப்பதற்கு உரியவர்கள். வேறுமொழியில் ஆராதிக்கவுரியவர்கள் அல்ல என்றவொரு மாயையில் இருப்பதைக் காணக் கூடியதாயுள்ளது. இது குறுகிய நோக்குடையது.

மதத்தைக் காட்டிலும் ஸ்வாமியைக் காட்டிலும் பாஷைதான் உயர்வென்று நினைப் பது மிகவும் தப்பு. பாஷைஎன்ற ஒரு காரணத் திற்காகமட்டும் சமஸ்கிருதம் வேண்டுமா என்றால் நான்கூட வேண்டாம் என்றே சொல் வேன். ஆனால் நம்முடைய மதத்திற்கு மூலமான வேதம், சாஸ்திரம் எல்லாம் அந்தப் பாஷையில் இருப்பதனால் வேதத்தையும் சாஸ்திரங்களையும் ரக்ஷிப்பதற்காக சமஸ்கிருத பாஷையையும் ரக்ஷிக்க வேண்டும் என்கிறேன்.



"சமஸ்கிருதம் உயர்வா? தமிழ் உயர்வா? என்று யோசனை பண்ணிப் பார்த்தேன். சமஸ்கிருதமும் தமிழும் சமம் தான்"

வேதம் வடமொழியில் இருப்பதால் தான் வடமொழிக்குக் கௌரவம். வேதத்தை வேறெந்த மொழியில் மொழிபெயர்த்தாலும் அதன் மூலம் உருமாறிப் போகக்கூடும். அதனால்தான் வேதத்தை அதன் மூலமொழியாகிய சமஸ் கிருதத்தில் அப்படியே வைத்துக்கொள்ள வேண் டும்.

மேற்கண்ட மூன்று வாக்குகளும் காஞ்சிப் பெரியவருடையவை. மூவகை(ஸ்தோத்திர, சாஸ்திர, மந்திர) நூலாகிய வேதாகமங்களை அவற்றின் மூலமொழியாகிய வடமொழியிலே வைத்துக்கொள்ள வேண்டும். அவற்றிலுள்ள மந்திரங்கள் உயர்வானவை. பூசை வழிபாட்டிற் குப் பொருத்தமானவை. ஓதப்படவேண்டியவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்திருமுறைகளும் வேதசிவாகமங்கள் போலச் சிவபிரானாலேயே அருளிச்செய்யப் பட்டவை. **"எனதுரை தனதுரையாக நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்"** என்பது ஞானசம்பந்தர் வாக்கு. சிவபிரானே ஆளுடையபிள்ளையார் முதல் சேக்கிழார் வரையிலான நாயன்மார்கள் பால் அதிட்டித்து நின்று திருமுறைகளைத் தோற்றுவித்தான்.

தமிழ் நாட்டில் வேதநெறி குன்றி மிகு சைவத்துறை சோதனைக்குட்பட்டபோது புறச் சமயங்களை ஓட்டிச் சைவசமயத்தை நிலை நாட்டியவை சைவத் திருமுறைகள். அரவம் தீண்டி இறந்த பாலகனை எழுப்பியும், எலும்பைப் பெண்ணாக்கியும், அசைவின்றி நிலைப்படுத்தப்பட்ட கதவுகளைத் திறந்தும் மூடியும், முதலையுண்ட பாலகனை உயிர்ப் பித்தும், ஊமைப் பெண்ணைப் பேசுவித்தும், பொன்னும் மணியும் துகிலும் நெல்லும் அளித்தும், அனல் புனல் வாதங்களில் வெற்றி யீட்டியும், பூழியர் கோன் வெப்பொழித்தும், ஆழிமிசைக் கல் மிதக்க வைத்தும், புத்தரொட மனை வாதில் வெற்றிபெறச்செய்தும் பற்பல அற்புதங்கள் புரிந்தவை சைவத் திருமுறைகள் சைவத் திருமுறைகளும் ஸ்தோத்திர, சாஸ்திர, மந்திரமென்ற மூவகை நூல்களே. அவற்றுள் பெரும்பாலான பாடல்கள் தோத்திரம் செய் வதற்கு பொருத்தமானதாக அமைந்திருக்கின்றன. அவை வேத ஸ்தோத்திரங்களுக்குச் சமமானவை என்பது தெளிவு.

சைவாலயப் பூசகருள் ஒரு சிலரிடம் தாம் வடதேசத்தவர் (வட இந்தியர்) தமது முதன் மொழி வடமொழி; தமிழ் தாம் வரித்துக் கொண்ட மொழி என்றதோர் மயக்கம் இருப்பதையும் காணலாம். இவர்களுள் தொண் ணூற்றொன்பது சதவீதத்திற்கு மேற்பட்டோர் வட மொழி இலிபிகளை எழுதவோ வாசிக்கவோ இயலாது கிரந்த இலிபிகளை உபயோகிப்ப வர்கள். இவர்களது வடமொழி, தென்மொழி பற்றிய எண்ணங்கள் அறியாமையிலிருந்து பிறந்தவை.

"ஆதித்தமிழகத்தின் பிராமணர்கள் தமிழ் மக்களே: இவர்கள் திராவிட பிராமணர்கள் ; தமிழர்" இது எமது கூற்றல்ல. ஜகத் குரு சங்கராச்சாரியாரது வாக்கு. (வடநாட்டிலிருந்து தமிழகம் வந்த பிராமணர்கள் "வடமர்" என இக்காலத்திலும் தமிழகத்தில் அழைக்கப் படுகின்றனர்).



ஆதி சங்கரர் பிறந்த "காலடி" என்ற கிராமம் கேரள மாநிலத்தில் உள்ளது. இன்றைய கேரளம் அன்றைய தமிழ்ச் சேரநாட்டின் ஒரு பகுதி. ஆதிசங்கரர் காலத்தில் காலடியில் பேசப்பட்ட மொழி தமிழ். ஆதிசங்கரர் ஒரு தமிழ்ப் பிராமணர். அவர் தம்மை "த்ரவிட சிசு" என்று கூறுவதில் பெருமைகண்டவர். ஆதிசங்கரர் அருளிய "சௌந்தர்ய லஹரி" யில் எழுபத்தைந் தாவது சுலோகத்தில் "த்ரவிட சிசு" (தமிழ்க் குழந்தை) யான தமக்கு அம்பாள் ஞானப்பால் ஊட்டியதாகக் குறிப்பிடுகிறார். இதனைச் சுட்டிக்காட்டிய காஞ்சி முனிவர், "சங்கரர் தம்மை த்ரவிட சிசு என்று சொல்லிக் கொள்வ தால் நமக்கெல்லாம் மகாபெருமை" என்று கூறுகிறார்.

அம்பாள் இரு சிசுக்களுக்கு ஞானப்பால் ஊட்டினாள். இருவரும் ஆதிதமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழர். ஒருவர் தம்மைத் "த்ரவிட சிசு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிப் பெருமைப்பட்டார். அவர் வாயி லிருந்து கடல் (லஹரி) போல் வெளிவந்தன வட மொழி ஸ்தோத்திரங்கள். அவர்தான் ஆதிசங் கரர்.

மற்றைய சிசு தன்னை "தமிழ் ஞானசம் பந்தர்" என்று கூறிப் பெருமைப்பட்டது. அதன் வாயிலிருந்து பிரவாகித்தது நூற்றுக்கணக்கான தேவாரத் திருப்பதிகங்கள். அவருக்கு அம்பாள் ஊட்டிய ஞானப்பால் அவரை ஆணையிட்டு பாடவைத்தது. அந்த ஆணைதான் தொல்காப் பியர் கூறும் "நிறை மொழி மாந்தர் ஆணை". ஆகவே தமிழ் ஞானசம்பந்தன் செய்தது நற்றமிழ் மந்திரமே.

யாதாயினும் ஒன்றை உயர்ந்ததாகக் காட்டுவதற்கு ஏனையதைத் தாழ்ந்ததாகக் காட்ட முயற்சிக்க வேண்டிய அவசியமில்லை. "முத்தமிழும் நான்மறையும் ஆனவனை" "செந்தமிழோடு ஆரியனை", "ஆரியத் தமி ழோடு இசையானவனை" தமிழ்ச் சொல்லும் வடசொல்லும் தாழ் நிழற் சேரப் பணித்லே கசடறக் கற்றோர் கடன்.

**அமாவாசை**

அமா என்பது ஒரு இடத்தில் பொருந்தியது. குவிந்தது அடுத்தது என்று பொருள்படுவது. ஒரு இராசியிற் சூரியன், சந்திரன் இருவரும் சேர்ந்து உறவாகும் வாசியான நாள் அமவாசி எனப்படும். திதி என்பது சூரியனுக்கும், சந்திரனுக்கம் ஒரே பார்வையில் உள்ள தூரத்தை-பாகையை குறிப்பிடுவதாகும். சூரியனும், சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேரே வரும்போது அமாவாசைத்திதி உண்டாகும்.

சூரியன் ஞானகாரகன், ஆத்மகாரகன் என்பர். ஆண்மை, ஆற்றல், பராக்கிரமம், வீரம், தீரம், தவம் என்பன சூரியனாலாயே தோன்றுகின்றன என்பர்.

சந்திரன் மனதிற்கு அதிபதி மகிழ்ச்சி, தெளிந்த அறிவு, உற்சாகம், இன்பம் முதலியவை சந்திரன் உதவியாறி பெறத்தக்கனவாம். இத்தகைய ஆற்றல் மிக்க சூரியசந்திரர் இருவரும் ஒரே இராசியில் சஞ்சரிக்கும் தினம். புனிதமானநாள் உயிர்களின் சுகபோகமாகிய மாறுதலை உணர்த்தும் நாள். மேலும் சகல தேவர்களும் அமாவாசையில் அதிபர்கள்.

இத்தகைய அமாவாசையில் புண்ணிய தீர்த்தத்திலே படிந்து பிதிர்தர்ப்பணம் செய்து அதிதகளோடும் சுற்றத்தாரோடும் உணவு உட்கொண்டு விரத நியமத்துடன் இருப்பது தீர்த்த சிரார்த்தம், எனவும் காமிய சிரார்த்தம் எனவும் பெயர் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித வாழ்வியலில் இந்துமதம் ஒரு குறிப்பு

க. தர்மசேகரம்
உளவளத்துணை ஆலோசகர்,
நல்லூர் பிரதேச செயலகம்.

மனித வாழ்வை நெறிப்படுத்தும் சாதனங்களாகவே மதங்கள் உலகில் தொன்று தொட்டு நிலவி வருகின்றன. உலகில் உள்ள மதங்கள் அனைத்துமே மனிதவாழ்வைச் சீர்படுத்தல் என்ற புள்ளியில் இணைதலானது மதங்களின் உண்மையான நோக்கத்தைத் துலக்குவதாக உள்ளது. மனித நாகரிக விருத்திப் பாதையில் மக்களின் வகிபாகம் என்பது தவிர்க்கமுடியாத காத்திரமான தன்மைகொண்டது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. குறிப்பாக இந்து மதத்தை நாம் எடுத்து நோக்குவோமாயின் நீண்ட பாரம் பரியத்தைக் கொண்டதாகவும், மனித வாழ்வை செம்மையுற அமைத்துக்கொள் வதற்கான அனைத்து வகையான அடிப்படை களையும் கொண்டிருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும். ஒரு மனிதனின் உடல், உள ஆரோக்கியத்தைப் பேணி அதனூடாக பயனுள்ள சமூகம் ஒன்றைக் கட்டி வளர்த்து நிறைவான வாழ்வை அனுபவிப் பதற்கு இந்துமதப் பாரம்பரியம் உதவு கின்றது எனக் கூறுதல் சாலவும் பொருந் தும்.

வேத, உபநிடதங்களிலும், ஆகமங் களிலும் கூறப்பட்டிருக்கின்ற இந்து வழிபாட்டு முறைகளும், வாழ்வியல் சார்ந்த கருத்தம்சங்களும் உடல், உள ஆரோக்கிய பேணுகைக்கு உதவுவனவாய் உள்ளன. ஒருவர் ஆலயத்திற்கு வழிபாடாற்றச் செல்லும் போது ஸ்நானம் செய்து, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து செல்ல வேண்டும் என்பது மரபாக இருக்கின்றது. இவ்வாறு செல்லும்போது உடலில் புத்துணர்ச்சி ஏற்படுவதையும், மனதில் அமைதி தோன்றி இறை வழிபாட்டில் ஈடுபடுவதற்கான சூழல் எமக்கு வாய்க்கப் பெறுவதை நாம் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கிறோம் அல்லவா? இதனை எமது ஆரோக்கியம் பேணுகைக்கான உதாரணமாக நாம் கொள்ள முடியும்.

ஆலயத்தில் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடத்தல், அமைதி பேணுதல், போன்ற நடைமுறைசார் அம்சங்கள் ஒழுக்க விழுமியங்கள் உடையவர்களாக மனிதர்கள் உருவாகுவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றன. ஆரம்ப காலத்தில் கிராமிய வழிபாட்டு நடைமுறைகளின் வழி வந்த பல அம்சங்கள் மனிதனின் உடல், உள ஆரோக்கியத்தை பிரதான மையமாகக் கொண்டிருந்ததைக் காணமுடிகிறது. கலை ஆடி கட்டுச் சொல்லுதல் மூலம்பிறரது பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்குகின்ற முறைமை யானது சாத்தியமான முறையியலாக முன்பு அதிகம் கடைப்பிடிக்கப் பட்டு வந்தது. தற்போதும் இத்தகைய முறையியல் நடைமுறையில் இருப்பதானது, மக்கள் இதனை ஏற்று அதனூடாக பிரச் சனைகளை தீர்க்க முடியும் என நம்புகின்றனர் என்ற செய்தியையே நமக்குத் தருவதாக உள்ளது. இதே போன்று நூல்கட்டுதல், விபூதி இடுதல் போன்ற அம்சங்களும் இன்றுவரை பேணப்படுவதானது இவற்றின் வலுவான தன்மையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியழித்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், காவடி எடுத்தல், வீழ்ந்து வணங்குதல், குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம் போடு தல், போன்ற வழிபடும் மரபுகள் உடலின் இயக் கத்தை சீராக வைத்திருப்பதற்குத் துணைபுரிய வல்லன என்பது ஆய்வுகள் மூலம் தெரியவந் துள்ளது. இது போன்றே, யோகாசனம் செய்தல், தியானத் தில் ஈடுபடுதல் போன்றவையும் உடல், உள சீராக் கலுக்குப் பெரிதும் உதவுபவையாக இருக் கின்றன. ஒருவரது ஆரோக்கியம் என்பதை வரை யறுக்கின்றபோது அவர் உடல், உள, சமூக, ஆன்மீக நிலைகளில் நன்நிலையில் இருத்தல் வேண்டுமென உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) கருதுகிறது. இவ்வரையறையில் காட்டப்பட் டுள்ள அடிப்படைகளுக்கு உதவக்கூடிய அனை த்து அம்சங்களையும் இந்து சமயம் தன்னகத்தே கொண்டிருக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

மனித வாழ்கையானது பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு படிநிலைகளுக்கு ஊடாக கடந்து செல்ல வேண்டுமென இந்து மதம் குறிப்பிடுகின்றது. விருத்தி உளவியலாளர்களும் (Developmental Psychologists) மனித வாழ்வை படிநிலைப்பட்ட ஒன்றாகவே காண விழைகின்றனர். ஒரு படிநிலை யில் பிரச்சனை ஏற்படுகின்றபோது, அது குறித்த நபரின் ஆளுமையில் பாதிப்பை உண்டாக்கும் என நம்புகின்றனர். ஒரு மனிதன் குறித்த நான்கு படிநிலைகளின் வழியூடாக தனது வாழ்வியலைக் கொண்டு செலுத்துதலே சிறந்தது என இந்து சமயம் கூறுகின்றது.

இந்துப் பண்பாட்டு மரபில் இசைக்கு முக்கியமான இடம் உண்டு. இறைவனை இசை வடிவாகவும் இசைக்கு வசப்படுபவனாகவும் காட்டப்படுகின்றது. ஆலயங்களில் தேவார பண்ணிசை ஓதுதல், பஜனை நிகழ்ச்சிகள் நடாத்துதல், பக்தி கீதங்களை இசைத்தல் என்பன போன்றவை கிரமமான முறையில் மேற்கொள்ளப் படுகின்றது. இது அடியவர்களை இறைவனின் பால் ஐக்கியமுற வைப்பதோடு அவர்களின் மனம் தளர்வான நிலையை (Mind Relief) அடைவதற்கும் உதவுவதாய் உள்ளது. தற்கால உளவியல் சார் ஆய்வுகள் இசையை ஓர் சிகிச்சை நுட்பமாக (Therapeutic Technique) பயன்படுத்துதல் தொடர் பான தமது கவனத்தைச் செலுத்துகின்றன. மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவதற்கான உபாய மாக நல்ல இசையைக் கேட்டு அனுபவித்த லானது இருக்கின்றது. ஆலயங்களில் மன அமைதியையும், பக்தி நிலையையும் ஏற்படுத்தும் சிறந்த அம்சமாக இசை பண்டைய காலம் முதல் இன்றுவரை இருந்து வருகிறது.

சோழ மன்னர்களின் ஆட்சி எழுச்சி பெற்றிருந்த காலப்பகுதியில் இந்து வணக்க ஸ்தலங்கள் பிரதான சமூக மயமாக்கப்பட்ட நிறுவனங்களாகச் செயற்பட்டன. ஆலயத்தை மையமாகக் கொண்டு வைத்திய சாலைகள், கல்வி நிலையங்கள், ஆதுலர் சாலைகள் போன்றவை இயங்கின. இது மக்கள் வாழ்வியலுடன் இந்து சமயம் கொண்டிருந்த இணைப்பின் சிறப்பைச் சுட்டி நிற்பதாய் உள்ளது. எமது பிரதேசத்தில் யுத்தநிலை நிலவிய காலகட்டத்தில் மக்களின் உளச் சமநிலையைப் பேணும் இடங்களாக ஆலயங்கள் விளங்கி இருக்கின்றன. தமது துன்ப துயரங்களையும் அவலங்களையும் கொட்டித் தீர்த்து வழிபாடாற்றுதலின் ஊடாக அவர்கள் மன ஆறுதலடைந்தார்கள். இந்நிலையானது மனித வாழ்வில் ஆரோக்கியம் பேணுகைக்கான தளமாக இந்து மதமும், ஆலயங்களும் இருக்க முடியும், இருக்கின்றன என்ற அடிப்படையைப் புரிந்துகொள்ள துணைபுரிவதாய் இருக்கின்றது.

எனவே, மதம் என்பது வெறுமனே வழி பாட்டை மட்டும் போதிப்பதாக என்றில்லாது மனித வாழ்க்கை மேம்பாட்டுடன் தொடர்பு பட்ட அனைத்து விடயங்களிலும் இணைந்ததாய் இருக்கின்றபோதே ஆரோக்கியமான பயன் பாட்டுநிலை தோன்றும். இந்து சமயத்தைப் பொறுத்தவரை மிக நீண்ட காலமாகவே இது சிறப்பான நிலையில் இருப்பதை நாம் உறுதியாக நம்ப முடியும். தற்காலத்தில் மக்கள் வாழ்விய லோடு சமய நடைமுறைகளை இணைப்பதற்கான எத்தனங்களை சமய நிறுவனங்களும், சமயப் பெரியோர்களும், அடியவர்களும் மேலும் முனைப்புடன் மேற்கொள்ளும்போது இந்து மதத்தின் வாழ்தகவு என்பது உயிர்ப்புடன் பலமுள்ளதாய் நிலைத்திருக்கும்.

நன்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் மரபுவழித் தமிழ்க்கல்வி - சில குறிப்புகள்

பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா
தலைவர், - தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஈழத்தின் தமிழ்க் கல்விப் பரம்பலுக்கும் செல்வாக்குக்கும் நிலைக்களமாக விளங்கிய பகுதிகளுள் யாழ்ப்பாணப் பகுதியும் ஒன்றாகும். ஈழத்துக்குக் கிறிஸ்தவ மிஷனரிமார் வருவதற்கு முன்பிருந்தே நீண்ட காலமாக ஒரு தமிழ்க் கல்விப் பராம்பரியம் நிலவி வந்துள்ளது. இக்கல்விப் பாரம்பரியத்தின் உச்சநிலையை யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலிருந்தே தரிசிக்கமுடிகின்றது.

அறாத்தொடர்ச்சியுடன் யாழ்ப்பாணத்திலே நிலவிய மரபுவழித் தமிழ்க்கல்வியும், மிஷனரிமாரினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன ரீதியிலான கல்வியும் சங்கமித்து ஓர் அற்புதமான தமிழ்அறிஞர் பரம்பரையை உருவாக்கிய காலப்பகுதியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டைக் கொள்ளலாம். இதனாலேதான் தமிழகத்து ஆய்வாளர்கள் "தமிழ் இலக்கிய வரலாற்றிற் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைக்கு உரியது" எனக் கூறிப் போந்தனர். இக் காலப்பகுதியின் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வியை மரபுவழித் தமிழ்க்கல்வி, நிறுவன வழிவரும் தமிழ்க்கல்வி என இருவகையாகப் பகுத்து நோக்கலாம். மரபுவழித் தமிழ்க்கல்வி பற்றிய தேடல் இன்று அத்தியாவசியம் ஆகின்றது. எனவே மரபுவழித் தமிழ்க் கல்வியின் முக்கியமான சில கூறுகளை இக்கட்டுரை கோடிட்டுக் காட்டும்.

யாழ்ப்பாணத்திலே மிக நீண்டகாலமாக மரபு வழித் தமிழ்க்கல்வி நிலவி வந்துள்ளது என்பதை இலகுவாக மறுத்துவிடமுடியாது. ஐரோப்பியர் ஈழத்திற்கு வருவதற்கு முன்னரே யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தில் தமிழ்க்கல்வி இங்கு விருத்தியடைந்திருந்தது என்பதற்கு அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களே சான்று பகர்கின்றன. தமிழ்க் கல்வியுடன் அத்தியந்த உறவுடன் வடமொழிப் பயிற்சியும் இருந்திருக்கிறது என்பதையே யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தில் தோன்றிய இரகுவமிச மொழி பெயர்ப்புக் காட்டி நிற்கின்றது. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், சரஸ்வதி பண்டாரம் (மகால்) என்னும் நூல் நிலையம் முதலியன யாழ்ப்பாண மன்னர்களால் நிறுவப்பட்டிருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.



யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் அறிவாற்றல் நிரம்பிய மரபுவழித் தமிழாசிரியர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களின் பரம்பரையின் அறாத் தொடர்ச்சியாகவே நிறுவன ரீதியாக தமிழ்க் கல்வி மரபும் வளம்பெற்று உயர்ந்தது என்று துணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறலாம். மரபு வழிக்கல்வி, பாரம்பரியக் கல்வி, திண்ணைப் பள்ளி, குரு சிஷ்ஷியக் கல்வி, குருகுலக் கல்வி முதலிய பல பெயர்களாலே இக் கல்வி மரபு அழைக்கப்படுகின்றது. தமிழ்மொழிக் கல்விக்கு மாத்திரமன்றி பல்வேறு தொழில்சார் கல்விகளும் மரபுவழியாகவே போதிக்கப்பட்டு வந்துள்ளன. சிற்பக்கலை, இசைக்கலை முதலி யனவும் பாரம்பரியமாகவே யாழ்ப்பாணத் திற் பயிலப்பட்டு வந்துள்ளன. மிகஆரம்பத்தில் தமிழ்க் கல்வியும் ஒருவகையில் "குலவித்தை" யாகவே கருதப்பட்டது. "கல்லாமற்பாதி குல வித்தை" என்று தமிழிலே ஒரு பழமொழிகூட உண்டு. தமிழ், தமிழ்க்கல்வி, தமிழ்ப் புலமைகூட முதுசொத்து, கொடை, பரம்பரை என்றெல்லாம் கருதிய ஒரு காலகட்டமும் யாழ்ப்பாணக் குடா நாட்டிலே இருந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மரபுவழிக் கல்விப் பராம்பரியத்தினை நுணுகி ஆராயும் போது அது பண்டைக் காலத்தில் இருந்து நிலவி வந்த தமிழர்களின் கல்வி மரபுடனே இயைபு பட்டுச் செல்லுகின்றமையையும் அவதானிக்க லாம். யாழ்ப்பாணத்து மரபுவழித் தமிழ்க்கல்வி முறைமை போலவே தமிழ்நாட்டு மரபுவழிக் கல்வியும் நிலவி வந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

19ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் யாழ்ப் பாணத்துத் தமிழ்க்கல்வி பரம்பரைச் சொத் தாகவே கருதப்பட்டு வந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டிலே தமிழ்ப் புலமையிற் சிறப்புற்று விளங்கிய பலரின் வாழ்க்கை வரலாற்றை ஆராயும்பொழுது இவ்வுண்மை தெரியவருகின் றது. வாய்ப்பும் வசதியும் உள்ளவர்களுக்கே பெரும்பாலும் மரபுவழிக்கல்வி வசதி கிடைக்கப் பெற்றது எனலாம். யாழ்ப்பாணத்துச் சமூக அமைப்பின் சில தன்மைகளும் இதற்குக் காரணம் எனலாம்.

19ஆம் நூற்றாண்டிலே புலமை மரபும் ஒருவகையிற் பரம்பரைச் சொத்தாகவே கருதப் பட்டது. இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது மரபுவழிக் கல்வி முறையேயென்று கருதுவதும் தவறாகாது.

அக்காலத்திற் கல்வியைத் தகப்பனிடமோ அல்லது தாய்மாமனிடமோ அல்லது பெரிய தந்தையாரிடமோதான் பெரும்பாலும் பெறுவர். இந்த மூவர் இல்லாதவிடத்து உறவினர் ஒருவரை அணுகிக்கற்பர். உறவினரும் இல்லாதவிடத்து தாய் தந்தையரது நண்பர்களை அல்லது நண்பர் களின் நண்பர்களை அணுகித் தம் பிள்ளைகளைப் படிக்க அனுப்புவர். இதனாலே ஓரளவுக்குத் தமிழ்க்கல்வி அபிவிருத்தி ஒரு குறிப்பிட்ட வட் டத்தினுள் நிற்க வேண்டியது தவிர்க்கமுடியாத தாகியது.

ஈழத்துப் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்கள் என்று கருதப்பட்ட சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை, வித்துவசிரோமணி சி.கணேசையர் உள்ளிட்ட பலரும் முறையே தமது ஆரம்பத் தமிழ்க் கல்வியைத் தகப்பனிடமும் பெரிய தகப்பனிடமும், மாமனிடமுமே பெற்றுப் பேரறிஞர்களாக விளங்கியுள்ளனர். வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளையை நாவலரின் "மருகரும் மாணாக்கரும்" என்று அழைக்கும் வழக்கம் இன்றும் உண்டு. அ.குமாரசுவாமிப் புலவர் தகப்பனிடமும், பின்னர் உறவினரான நாகநாத பண்டிதரிடம் வடமொழியையும் கற்றார். இவ்வாறே வித்துவ சிரோமணி சி.கணேசையரும் முதலில் தகப்பன் சின்னையரிட மும், பின்னர் பெரிய தந்தையார் கதிர்காமைய ரிடமும் தமது ஆரம்பத் தமிழ்க்கல்வியைப் பெற்றார் என்றும் அறிய முடிகின்றது.

19ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கல்வி ஒரு குறிப்பிட்ட வட்டத்தினுள் ஓரளவுக்கு உறவு முறை, சொந்தம் என்ற வரம்புக்குள்ளிருந்தே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிழ்த்தது என்பதையே பெரும்பாலான புலவர் வரலாறுகள் காட்டி நிற்கின்றன. மரபுவழிக் கல்வியின் அல்லது திண்ணைப் பள்ளியின் பலமாகவும் பலவீனமாகவும் இக்கருத்தே பின்னர் கணிக்கப்பட்டது.

மரபுவழிக் கல்வியின் மிக முக்கியமான அம்சங்களில் ஏடுதொடக்கல் என்ற சடங்கும் ஒன்றாகும். இம்மரபு குருகுலக் கல்வி மரபின் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் காட்டி நிற்கின்றது என்று கருதலாம். படிக்கத் தொடங்கும் ஒரு மாணவனுக்கு முறைப்படி ஏடு தொடக்கல் என்னும் சடங்கு நிகழும். ஏடு தொடக்கல் என்னும் சடங்காசாரம் இன்றும் வழங்கி வருகின்றது. எனினும் அதன் முக்கியத்துவம் 19ஆம் நூற்றாண்டிலே ஈழத்தில் நன்கு விளங்கியனுட்டிக்கப்பட்டது என்றே கருதவேண்டும். இன்று பாலர் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பிய பின்னரே ஏடு தொடக்குகின்ற வழக்கமும் உண்டு.

ஏடுதொடக்கல் என்னும் கல்விப் பிரவேசச் சடங்கு பெரும்பாலும் ஐந்து வயதளவிலேயே நடைபெறும். ஒரு நல்ல நாளில் விசேடமாக வளர் பிறையை அண்டிய நாளிலோ அல்லது விஜய தசமியிலோ, அல்லது தைப்பூசத் திருநாளிலோ, தான் ஏடுதொடக்கல் நடைபெறும். கோயிற் பூசகர், அல்லது தகப்பன் அல்லது படித்த நிறைவான ஓர் உறவினர்தான் ஏடுதொடக்கத் தகுதியுள்ளவராகக் கருதப்பட்டார். ஏடுதொடக்குமுன் பூரணகும்பம் வைத்து விளக்கேற்றி, ஒரு தட்டிலே பச்சை அரிசியைப் பரப்பி விநாயகரையும், சரஸ்வதியையும் வணங்குவர். பின்னர் தேனைத் தொட்டுப் பிள்ளையின் நாவிலே தடவிப் பிள்ளைக்கு அ, ஆ வென்னா, என்று சொல்லிக் கொடுப்பார்கள். பின்னர் வலதுகைச் சுட்டு விரலைப் பிடித்து பரப்பி வைக்கப்பட்டிருந்த அரிசியின் மேலே எழுதப் பழக்கப்படும். மங்களகரமாக நிகழும் ஒரு தொடக்கல் சடங்கு முடிந்த பின்னர் மாணவன் (பிள்ளை) தகப்பனிடமோ தாய்மாமனிடமோ. உறவினரிடமோ கல்வி கற்கத் தொடங்கும்.

பொதுசன நூ
யாழ்ப்பாண



19ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கல்வியிலே பரம்பரை செலுத்திய செல்வாக்கினைப் புரிந்து கொள்ளப் பாவலர் சரித்திர தீபகம் சிறந்த சான்றாக விளங்குகின்றது. பரம்பரை பரம்பரையாகத் தமிழ் படித்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களைக் குறிப்பிடும்பொழுது தமிழ்கல்வியில் பரம்பரை அல்லது குடும்பச் செல்வாக்கு நிலவியவற்றையும் சதாசிவம்பிள்ளை குறிப்பிடத் தவறவில்லை. சண்முகச்சட்டம்பியாரிடம் வரலாற்றைக் குறிப்பிடும்போது சதாசிவம் பிள்ளை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இவர் வாழையடி வாழையாகப் பிதா, பாட்டன், முப்பாட்டன் என மூன்று நான்கு தலைமுறைகளாக வித்துவான்களின் வமிசத்தைச் சேர்ந்தவர். இவரது பிதாவிடத்தில் இராமாயணப் பொருள் கேட்டதற்குக் கைமாறாகவே சேனாதிராய முதலியார் அதி கரிசனையோடு இவருக்குக் கல்வியமுதூட்டினார்." (பவலர் சரித்திர தீவகம்)

வித்துவான்களின் வமிசத்தைச் சேர்ந்தவர் என்று பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடுவது பரம்பரை பரம்பரையான தமிழ்க் கல்வியுடையவர் என்பதைக் குறிப்பிடவேயெனலாம். மரபுவழிக்கல்வியின் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அமிசம் கற்ற குடும்பப் பிள்ளைகள் கல்வியில் ஈடுபடுவதாகும்.

மரபுவழிக் கல்வியில் உபகாரம், நன்றிக் கடன், கைமாறு முதலிய சொற்கள் பிரயோகிக்கப் படுவதை அவதானிக்கலாம். ஆசிரியர் மாணவனுக்குக் கற்பிக்கும்பொழுது ஏதோ ஒருவகையான "உறவு" இருக்கிறது என்று கருத முடிகின்றது.

மரபுவழிக் கல்வியில் கல்வி ஓர் உபகாரப் பண்டமாகவே கருதப்பட்டது. மரபுவழிக் கல்விப் பாரம்பரியத்தினூடு சிறப்புற்று விளங்கிய கல்விமான்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது இவர் இன்னாரிடம் கல்வி "உபகாரம்" பெற்றவர் என்ற தொடர் அடிக்கடி இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

ஆசிரியர் வேதனம் பெறும் பழக்கம் மிக ஆரம்ப காலத்தில் ஈழத்து மரபுவழிக் கல்வியில் இருக்கவில்லை. இப்பழக்கம் இந்திய கல்வி மரபுக்கும் பொருந்தக் கூடியது. எனினும் ஆசிரியருக்கு மாணாக்கர் "உற்றுழி உதவியும் ஊறுபொருள் கொடுத்தும்" கல்விச் செல்வத்தைப் பெற்றனர். கூட்டுப் பொருளாதார அடிப்படையிலே ஆசிரியரின் வயல், தோட்ட வேலைகளை மாணாக்கர்களும், மாணாக்கர்களின் பெற்றோரும் செய்து கொடுப்பர். கைமாறு கருதாத கல்வி போதனையாக அமைந்திருந்தாலும் மாணாக்கர்கள் நன்றிக் கடனுடையவர்களாய், ஆசிரயருக்கு வேண்டிய "தொண்டு"களைச் செய்து வந்துள்ளனர். ஆசிரியரின் வயல், தோட்ட நடவடிக்கைகளில் அதிக கவனத்தை மாணாக்கர்களும், மாணாக்கரின் பெற்றோரும் கவனித்து வந்தமையினால் ஆசிரியருக்குப் பொருளாதாரப் பிரச்சினை இருக்கவில்லை. அத்தோடு தமக்கு வருகின்ற வருவாய்களில் ஒரு பகுதியை மாணவர்கள் குருவுக்குக் காணிக்கையாகக் கொடுத்துள்ளனர். அரிசி, நெல்லு, குரக்கன் முதலிய தானியவகைகள் ஒடியல், தேங்காய், காய்கறிவகைகள் முதலியன மாணவர்களினால் ஆசிரியருக்கு அன்பளிப்பாக வழங்கப் பட்டன. அத்துடன் ஆசிரியருக்குச் சொந்தமான ஆடு, மாடுகளையும் பராமரித்து வருவது மாணவர்களின் கடமையாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே மாடுகளுக்குப் பனையோலையைக் கிழித்து உணவாகக் கொடுப்பது வழக்கம். இரவில், நிலவிலே ஆசிரியரும் மாணாக்கர்களும் அவர்களது பெற்றோரும் "வட்டமாக இருந்து" ஓலை கிழிப்பது வழக்கம். ஓலை கிழிக்கும்பொழுது புராண இதிகாசம் பற்றிய உரையாடல்களே பெரும்பாலும் நடைபெறும். மரபுவழித் தமிழ்க்கல்வியின் மிக முக்கியமான ஓர் அம்சமாக இது காணப்படுகின்றது. இம்மரபு, இராப்பள்ளி, நிலாப்பள்ளி என வழங்கிய முதியோர் கல்வியின் ஒரு பகுதியாகவும் கருதக்கூடியது. "கேள்விச் செல்வம்" என்று தமிழிற் கூறப்படுகின்ற ஒரு வகைக் கற்றல், கற்பித்தல் முறையின் ஓர் அமிசமாக இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

மரபுவழிக் கல்வியில் திண்ணைப் பள்ளிக் கூடம் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தது என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. இரண்டு, மூன்று கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு ஓர் திண்ணைப் பள்ளிக்கூடம் விளங்கியதுண்டு. பெரும்பாலும் ஆரம்பக்கல்வியைக் குடும்பச் சூழலில் பெற்ற பின்னர் மாணாக்கர் நடந்து சென்று பாடம் கேட்பர். கூடியளவு தூரத்திலேயே திண்ணைப் பள்ளிகள் நிலவின. நடந்து செல்லக்கூடிய தூரம் என்பது குறைந்தது ஏறத்தாழ மூன்று நான்கு மைல்களாக இருக்கும்.

பெரும்பாலும் திண்ணைப் பள்ளிக் கூடங்களாக ஆசிரியரின் இல்லமே அமையும். சற்றுப் பின்னர் ஊரிலுள்ள பெரியவர்களின் வீடுகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணைப் பள்ளிகளாக விளங்கியதும் உண்டு. வீட்டின் தலைவாசலில் அல்லது கூடத்தில் நான்கு பக்கமும் திண்ணைகள் (மண்) உயரமாக இருக்கும். நன்கு மெழுகி காய்ந்த அத்திண்ணையின் ஒரு பகுதியில் பெரும்பாலும் வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாவேனும் மான்தோலில் அல்லது பலகையில் அல்லது பாயில் ஆசிரியர் அமர்ந்திருப்பார், மாணவர்கள் பெரும்பாலும் திண்ணையில் (பாய் போடுவதும் உண்டு) இருப்பார்கள். ஆசிரியர் பாடம் நடத்துவார். பெரும்பாலும் சிறுவர்களுக்கு, ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு காலையிலேயே பாடம் நடக்கும். நிலத்திலே வெண் மணலைப் பரப்பிக் கையாலேயே எழுதுவார்கள். புத்தகம், "சிலேற்", "பென்சில்" முதலியன ஆரம்ப காலத்திலே கிடைக்காது. வளர்ந்த மாணவர்கள் ஏடும் எழுத்தாணியும் பயன்படுத்துவர். 19ஆம் நூற்றாண்டின் பின்பகுதியையொட்டிப் புத்தகம், கொப்பி, பென்சில், பேனை முதலியன நடைமுறைக்கு வந்துவிட்டன.

காலப்போக்கில் திண்ணைப் பள்ளி மரபிலே மாணவர் தொகை அதிகரிக்க, அதிகரிக்க நேர மாற்றங்களும் நிகழத்தொடங்கின. காலைப்பள்ளி, மாலைப்பள்ளி, இராப்பள்ளி, நிலாப்பள்ளி எனப் பலவகையாக இக்கல்வி மரபு வளரத் தொடங்கியது.

வயது வந்தவர்களுக்கும், குடும்பத்தினருக்குமே பெரும்பாலும் இராப்பள்ளி நடக்கும். வாய்மொழி மரபாகக் கல்வி போதிக்கப்பட்டமையால் இராப்பள்ளிக்கு பெருமளவு வெளிச்சம் வேண்டியதாய் இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வி மரபிலே இராப்பள்ளியிலேதான் பெரும்பாலானோர் புராண படனத்தைப் பயின்றனர். "புராணபடனம் பழகுதல்" என்ற ஒரு சொற்றொடர் 19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்திலே நிலவியது. இப் புராணப் பயிற்சி பெற்ற பலரை மிக அண்மைக்காலம்வரை யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் காணக்கூடியதாக இருந்தது. இப் புராணபடனக்காரர்கள் உரை கூறும்போது அரும்பதப்பொருள், ஒத்தசொல், ஒப்பீட்டுச் செய்யுள்கள், இலக்கண முடிவுகள் முதலியவற்றை அறிந்தமையால் மரபுவழிக் கல்வியின் ஒரு கூறாக புராணபடனப் பயிற்சியும் தமிழ்க் கல்விப் பயிற்சியாகவே அமைந்தது எனக் கருதலாம்.

வயது வேறுபாடின்றி (தராதரத்தின்) அறிவுத் தரத்தை அடிப்படையாக வைத்தே மரபுவழிக் கல்வி போதிக்கப்பட்டது. சில பாடங்கள் படிக்கும்பொழுது ஏறத்தாழ பத்துப் பன்னிரண்டு வயது வித்தியாசம் உள்ளவர்களையும் ஒன்றாக வைத்தே தமிழ்க் கல்வி புகட்டப்பட்டது என்று அறிய முடிகின்றது.

திண்ணைப் பள்ளிகளிலே மாணவர்களின் தொகைக்கு ஏற்ப வகுப்புக்கள் நடத்தப்படுவதில்லை. மாணவர்களின் அறிவுத்தரம் (திறமைக் கேற்பவே) வகுப்புக்கள் பிரிக்கப்படும். உயர்ந்த (மேல்) வகுப்பில் கற்கும் சில மாணாக்கர்கள். கீழ் வகுப்பில் படிக்கும் மாணாக்கர்களுக்கு ஆசிரியராக அமைவதும் உண்டு. இவர்களை மாணாக்க உபாத்தியாயர் என்றும், "சட்டாம் பிள்ளை" என்றும் அழைக்கும் வழக்கம் இருந்தது என்று அறிய முடிகிறது.

மாணாக்க உபாத்தியாயருக்கு அல்லது சட்டாம்பிள்ளைக்கு ஆசிரியர் (குரு) வேறு ஒரு நேரத்தில் (பெரும்பாலும் இரவில்) பாடஞ் சொல்லிக் கொடுப்பர். பாடஞ் சொல்லிக் கொடுத்தல் என்ற பதமே மரபுவழிக்கல்வியின் தன்மைகளைப் புலப்படுத்தப் போதுமானது. செவிவழியாகக் கேட்டுணர்ந்து படித்தல் என்ற பொருளையே "பாடஞ்சொல்லிக் கொடுத்தல" என்ற பதம் விளங்குகின்றது.

திண்ணைப்பள்ளி மரபிலே பெரும்பாலான மாணவர்கள் - உயர்தரக் கல்வியைப் பெறுப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் - ஆசிரியருடன் உடனுறைந்து படிப்பதும் உண்டு. பழைய புராண இதிகாசங்களிற் காணப் படும் குருகுலவாசத்திற்கு ஓரளவு ஒத்ததாகவே இது காணப்பட்டது. மாணவனின் அறிவு, ஒழுக்கம், தோற்றம், பணிவு முதலிய அமிசங் களை மனங்கொண்டே திண்ணைப்பள்ளி ஆசிரியர்கள் மாணவனுக்கு அனுமதி கொடுப் பார்கள். வித்துவசிரோமணி பொன்னம் பலப் பிள்ளையின் திண்ணைப்பள்ளியில் தாம் அனுமதி பெற்ற வரலாற்றை கணேசையர் விரிவாகக் குறிப் பிட்டுள்ளார்.

நீதி போதனைகளை அறிந்து, படித்து, நல்ல வாழ்க்கையை வாழவேண்டும் என்பதே மரபுக் கல்வியின் பிரதான நோக்கமாக இருந்தது. அத்துடன் வைத்திய, சோதிட ஏடுகளைப் படிக்கவும், விளங்கிக் கொள்ளவும், புராண படனம் செய்யவும், செய்யுள் இயற்றவும் தமிழ்க் கல்வி பயன்பட வேண்டுமென்பதும் மரபுவழி கல்வியின் இலக்குகளாக இருந்தன. அந்த வகையி லேதான் மரபுவழி கல்வியின் பாடத்திட்டங் களும் அமைக்கப்பட்டிருந்தன.

மரபுவழி தமிழ்க்கல்வி மாணாக்கர்களை ஒழுக்க சீலர்களாக உருவாக்குவதற்கான பயிற்சியையும் கொடுத்தது. அக்காலச் சமூக பொருளாதாரக் கட்டமைப்பிலே மரபுவழிக் கல்வியில் உத்தியோகம் என்பது எதிர்பார்க்கப் படவில்லை. ஏதோ "நாலுபேர்" மதிக்கக் கூடிய தாக அறிவாளியாக வளர வேண்டும் என்பதே முக்கிய நோக்கமாக இருந்தது. புராண இதிகாசங் களைப் பதம் பிரித்து வாசிக்கவும், பொருள் விளங்கி உரை கூறவும் கூடிய பயிற்சியும் தமிழ்க் கல்வியின் முக்கியமான அமிசங்களாக இருந்தது.

19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தமிழ்க்கல்வி பெற்ற அறிஞர்கள் சமூக நன்மதிப்பைப் பெற்றவராகவும், சமூகப் பயன்பாடுடையவராகவும் திகழ்ந்தார்கள். நாள், நட்சத்திரம் பார்த்தல், கணித்தல், பஞ்சாங்கம் பார்த்தல், சாதகம் எழுதுதல் (குறிப்பு) முதலிய பணிகளையும் செய்யக்கூயாதாகவே தமிழ்க் கல்விப் பயிற்சி வழங்கப்பட்டது. தமிழ்க்கல்வி யாளர் என்று கருதப்பட்டவர் செய்யுள் இயற்றும் திறனுடையவர்கயாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

19ஆம் நூற்றாண்டிலே ஈழத்துத் தமிழறிஞர்கள் பலர் தங்கள் தங்கள் ஊரிலேயுள்ள கோயில்கள் மீது பதிகம், ஊஞ்சல், அந்தாதி, மும்மணிக்கோவை, நான்மணி மாலை முதலிய இலக்கியங்களையும் ஆக்கியுள்ளார்கள். இத்தகைய இலக்கிய ஆக்கத்திற்கு அவர்கள் பெற்ற தமிழ்க் கல்வியே உந்துசக்தியாக அமைந் தது என்று கருதலாம். 19ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வியின் முக்கிய கூறாக விளங்கிய மரபுவழிக்கல்வி குடாநாடு முழுவதும் பரவிக் காணப்பட்டுள்ளது. எனினும், சிறப்பாகத் தமிழில் உயர்கல்விப் பாரம்பரியமொன்று குறிப் பிடத்தக்க பகுதிகளிலே சிறப்புற்று விளங்கியுள் ளது. நல்லூர், தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, அராலி, வடமராட்சி முதலிய இடங்கள் தமிழ்க் கல்வியின் உயர்தள மையமாக விளங்கியுள்ளன என அறியமுடிகின்றது. யாழ்ப்பாணத்துப் புகழ் பூத்த தமிழறிஞர்களின் பிறப்பிடம், வாழ்விடம் கல்விகற்ற இடம் என்பவற்றைப்பற்றி ஆராயும் பொழுது இவ்வுண்மை புலப்படும்.

ஈழத்துக்குச், சிறப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு வலுவானதோர் மரபுவழித் தமிழ்க்கல்விப் பராம்பரியம் இருந்துள்ளது. இப்பாரம்பரியம் சைவமும் தமிழும் என்ற இரு தளங்களை உடையதாய் வியங்கியது. 19ஆம் நூற்றாண்டிலே சைவமும் தமிழும் என்ற கருத்து நிலை ஆழமாக வேரூன்ற மரபுவழித்தமிழ்க் கல்வியே பெருமளவுக்கு ஊற்றுக்காலாக இருந் தது என்று துணிந்து கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீரசைவ மரபில் பசவண்ணர்

திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

"மேன்மைகொள் சைவ நீதி" உலகெங்கணும் வாழும் சைவ மக்களிடையே விளங்கி வருகின்றது. தொன்மையும் பெருமையும் வாய்ந்த இச்சமயம் சமயாதீதப் பழம் பொருளாகிய சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டது. சைவ ஆலயங்களும் சைவசமயத்தவர்களும் பாரத தேசம் முழுவதும் பரவியுள்ள போதிலும், சைவசமயத்தை அனுட்டிப்போர் இடத்திற்கிடம் சிற்சில வேறுபாடுகளுடன் அதன்கோட்பாடு களை கடைப்பிடித்து ஒழுகுகின்றனர். சைவத்தில் பாசுபதசைவம், காஷ்மீரசைவம், கோரநாத் சைவம், சிவஅத்வைதம், சுத்தாத்வைத சைவசித் தாந்தம், வீரசைவம் என ஆறு பிரிவுகள் உண்டு. இப்பிரிவுகளில் வீரசைவம் பற்றி சிறப்பாக நோக்கலாம்.

**வீரசைவம் - பொருள் விளக்கம்**

வீரசைவம் என்ற சொல்லுக்கு வெவ்வேறு பொருள்கள் கூறப்படுகின்றன. சித்தாந்த சிகாமணி என்ற நூலில் கீழ்க் கண்ட பொருள்கள் தரப்பெற்றுள்ளன. அந்தவகையில்,

1. "வி" என்றால் சிவனுக்கும், ஜீவனுக்கும் ஐக்கியம் உண்டு என்ற ஞானத்தை விளை விக்கும் வித்யை. "ர" என்றால் ரமிக்கிற வர்கள் - திளைக்கிறவர்கள். அதாவது சீவ சிவ ஐக்கிய வித்தையில் திளைக்கின்ற சைவம் வீரசைவம் என்ற பொருளை உணர்த்துகின்றது.
2. "வி" என்றால் வித்யை. அதாவது வேதாந் தத்திலிருந்து விளையும் அறிவு. அதில் "ர" என்றால் ரமிக்கிறவர்கள் - திளைக்கிற வர்கள்.
3. "வி" என்றால் விகல்பம். (மாறுதல்). "ர" என்றால் ரஹிதம் - இல்லாதது. அதாவது மாறுதலற்ற சைவ தத்துவஞானம் அல்லது பரமார்த்தவழி. அதாவது மாறுபட்ட வேதவாக்கியங்களை இணைத்துக்காட்டி ஏற்றுக்கொண்ட சைவம் வீரசைவம்.

மேலும், வீர என்ற சொல்லுக்கு முழுமை யாக ஒன்றில் உறுதிப்பாடுடைய என்று பொருள் கொள்வதே பொருத்தமானது என தத்துவ தரிசனங்கள் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. ஆகவே வீர என்ற சொல் "உறுதியாக பரமார்த் தத்தில் ஊன்றிய கடவுள் பக்தர்" என்ற பொருளில் வழங்கப்படுகின்றது.



**வீரசைவம் - தோற்றம்**

வீரசைவத்தின் தோற்றம் பற்றி அறிஞர்களிடையே கருத்து முரண்பாடுகள் உண்டு. அந்தவகையில், வீர சைவம் பழமைமிக்கதென்றும், ஆதியில் வீரசைவத்தை தோற்றுவித்த ஆசாரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவர் எனவும் அவர்களைப் பஞ்சாசாரியர் என அழைப்பர் எனவும், அவர்கள் முறையே ஏகோராமர், பண்டிதராத்தியர், ரேவணர், மருளர், விசுவராத்தியர் ஆகிய ஐவராலும் தோற்றுவிக்கப்பட்டது எனவும், இவ் ஐவரும் சிவபெருமானின் ஐந்து தலைகளினின்றும் தோன்றியது என்றும், கி.பி 1156 இல் கலியாணிச் சாளுக்கியரிடமிருந்து ஆட்சியை கைப்பற்றிய பிச்சலகல சூரியவிச்சலர் மன்னனின் அமைச்சரான பசவர் என்பவரே இம்மதத்தை தோற்றுவித்தவர் என்றும், வீரசைவ மரபு குறிப்பிடுகின்றது. இவ்வகையில் பசவருக்கு முதல் வீர சைவம் பற்றி கருத்துக்கள் கிடைக்கப்பெற்றாலும் இந்த சம்பிரதாயத்தை ஒழுங்காக நிலைநிறுத்திய பெருமை முக்கியமாக, பஸவேசுவரர், அல்லமப் பிரபு, ஸித்தராமேசுவரர், சன்னபஸவேசுவரர், புகழ்பெற்ற பக்தப் பெண்மணி அக்கமகாதேவி ஆகியோரைச்சாரும். இவர்களுள் பசவண்ணர் பற்றி சிறப்பாக நோக்கலாம்.

### பசவண்ணர்

கன்னட தேசத்தில் - தற்காலம் பீனாப்பூர் மாவட்டம் எனப் பெயர் வழங்கும் இடத்தில் பாகவாடி என்ற ஒரு நகரம் இருந்தது. அந்த நகரத்தில் வைதீக சிவப்பிராமணர் குடும்பத்தைச் சேர்ந்த மாதரசர் என்பவர் வாழ்ந்து வந்தார். இவருடைய மனைவி மாதாம்பிகை. இவர்கள் செய்த தவப்பயனால் அவர்களுக்கு இரண்டாவது மகனாக கி.பி. 1105ம் ஆண்டு வைகாசித்திங்கள் மூன்றாம் நாள் ரோகினி நட்சத்திரம் கூடிய ஞாயிறு நன்நாளில் பசவண்ணர் உதித்தார். சைவ நெறியில் வீரம் செறிந்த போதனைகளைச் சாதனைகள் மூலம் வெளிக்காட்டிய பசவண்ணரை வசவேசர், பசவர், வசவண்ணர், வசவையா, பசவேசர் என்றெல்லாம் வாய் இனிக்கச் சொல்வதில் அவர் காலத்து மக்கள் பெருமகிழ்ச்சி எய்தினர்.

பசவண்ணர் கருவிலேயே திருவுடையவராக அவதரித்தவராகையால் மற்றக் குழந்தைகளைப்போல் அல்லாமல் வெகுவிரைவில் கன்னட மொழியில் உள்ள நூல்களை கற்றுத் தேர்ந்தார். அத்துடன் வடமொழியிலுள்ள வேதங்கள், ஆகமங்கள், காவியங்கள். புராணங்கள் முதலியவற்றையும் கற்று நல்ல புலமை பெற்றார். எட்டாம் வயதில் அவருடைய சாதிக்குரிய முறையில் பூணூல் சடங்குகள் நடைபெற்றன. காயத்திரி மந்திரம் உபதேசிக்கப்பட்டது. பள்ளியில் கல்வி பயிலும் நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் வெளியில் பல இடங்களுக்கு சென்று பொதுமக்கள் வாழ்க்கையையும் போலிமதவாதிகள், புரோகிதர்கள், பூசாரிகள், குருக்கள்மார் வாழ்க்கைகளையும் நன்கு கூர்ந்து கவனித்துவந்தார். தான் கற்றவற்றையும், பார்த்தவற்றையும் பற்றித் தனித்த இடங்களில் ஓய்வு நேரங்களில் உட்கார்ந்து சிந்தித்தும் வந்தார். இச்சிந்தனையின் முடிவாக பசவண்ணர் சமய, சமுதாய சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முனைந்தார்.

### பசவண்ணரின் சமய, சமுதாய சீர்திருத்தங்கள்

பசுவர் சமண - இஸ்லாமிய மதங்களுக்கு மதம் மாறியோரைச் சைவராக்கவும், சைவத்துக் குத்திடமான சமய நெறி வகுக்கவும், சைவர் ஒரு துறையில் சிறப்பாக வாழ வழிவகுக்கவும் முனைந்தார். மரபு வழியாகப் பேணப்பட்டு வந்த உருவ வழிபாட்டு முறையில் மாற்றம் காண விழைந்தார். வேத ஆகமக்கிரியை முறைகளை யும் பிராமண வகுப்பார் தம் அதிகாரத்தையும் மறுத்து புதியதோர் குருக்குழாத்தைத் தாபித்தார். இக்குழாத்தினர் சங்கமர் எனப்பட்டனர். யாத்திரைகளும், வேள்விகளும் பயனளிக்காது எனக் கூறினார். தம் அடியார்களிடமிருந்து விளங்கச் செய்தார். வயது வாராதோர் திருமணத்தை வெறுத்தார். பெண்களுக்குச் சம உரிமையை நல்கி கணவனை இழந்த பெண்களுக்கு மறுமணம் செய்யும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்றார். தம் அடியார்கள் கூட்டத்தில் பெண் களையும் சேர்த்துக் கொண்டார். இறந்தோரை எரிக்கும் முறையை அடியோடு வெறுத்தார். இறந்தோரை புதைத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார். இவ்வாறு அன்றைய சமுதாயத்தில் மாற்றங்களை வேண்டிநின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசவர் தனது சமய. சமுதாய நோக்குடன் வழிபாட்டில் மாற்றத்தையும் புகுத்த விழைந்தார். சிவனே முழுமுதற் கடவுளாகக் கருதப்பட வேண்டும். அவனையே வணங்கவேண்டும். சிவனில் ஆழ்ந்த பக்தியுள்ளோர் ஒவ்வொருவரும் தமக்கென தெரிவுசெய்த குருவை வணங்க வேண்டும். ஒவ்வொரு இலிங்காயத ஆணும், பெண்ணும் தம்முடன் ஒரு இலிங்க உருவை கொண்டு செல்ல வேண்டும். இவற்றை வெள்ளி அல்லது மரத்திலான பேழையிலே அசைத்துக் கழுத்தில் தொங்கவிட்டுச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்வதால் புறவுலகச்சிந்தனை குறைக் கப்பட்டு உள்ளம் முழுவதும் சிவமயமாக அமை தற்கு இது வழிவகுக்கும் என்று கருதப்பட்டது. மேலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களின் மேலாண்மையையும் கன்னட ஒருமையாளரின் கூற்றுக்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டது.

**பசவண்ணர் வாக்கமுது**

பசவண்ணர் மேற்கொண்ட செயல்களில் உயர்வு, விரிவு, அவருடைய சாதனையின் பெருமை, அடைந்த வெற்றியின் உயர்மட்டம் அவருடைய வசனங்களிலிருந்து தெரியவருகின் றது. ஆன்ம விசாரனை உள்ளத்தூய்மை, எளிமை, அடக்கம், நற்பக்தி, நல்லொழுக்கம் ஆகியவற் றுக்கு பசவண்ணர் பெருமதிப்பு அளித் திருந்ததை அவரது வசனங்களிலிருந்து அறிய முடிகின்றது. பசவண்ணர் வசனங்களிலே எண்ணிக்கையின் அளவை சரியாகக்கூறுவது இயலாது. இப்போது வெளியாகியுள்ள வசனங்களின் எண்ணிக்கை 1250 க்கும் அதிகமாகும். இவ்வசனங்களிலிருந்து வீரசைவமானது சைவத்தின் பிரிவாக அமைந்த பொழுதிலும் அது தனக்கெனத் தனியான தத்துவங்களையும், சமூகக் கோட்பாடுகளையும், தனித்துவமான வழிபாட்டு முறைகளையும் தன்னுள்ளே கொண்டுள்ளது என்பதனை அறிய முடிகின்றது.

பசவண்ணரின் நெறியின் மிகவும் முதன்மை யானது முதலில் தன்னைத்தான் சீர்திருத்திக் கொள்வது என்பதாகும். நாம் உலகின் குறை களைத் திருத்துவதற்கு முன்பு நம்மை நாமே முதலில் திருத்திக் கொள்ளுதல் வேண்டும் என்ற பசவண்ணரின் சீர்திருத்தமானது கீழ்வரும் பசவண்ணர் வாக்கமுதிலிருந்து சிறப்பாக எடுத் துக்காட்டப்படுகின்றது.

*"உலகின் குறையைத் திருத்த நீங்கள் ஏன்*
*முயல்கிறீர்கள்*
*உங்கள் உடல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள்*
*உங்கள் மனங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள்*
*அடுத்த வீட்டுத் துன்பத்திற்காக அழுபவர்களை*
*எப்படி நம்புவானையா கூடல சங்கம தேவன்."*

மேலும், இவர் தமது வாக்கில் "நாம் நமது குற்றங் குறைகளைக் களைந்து நல்லவர்களாகத் திருந்துவதற்குப் பதிலாக பிறரது குற்றங் களையும், குறைபாடுகளையும் திருத்துவதிலேயே ஈடுபட்டு அதிலேயே நம்வாழ்வில் பெரும் பங்கைச் செலவழித்து விடுகின்றோம்" எனக் கூறியவர் அதற்கு சிறந்த உதாரணமாக "கள்பா னையை வெளியில் சுத்தம் செய்தால் அதனால் என்ன பயன்" என்ற கேள்வி மூலம் சிறந்த சமுதாய சிர்திருத்த கருத்தை முன்வைத்துள்ளார்.

மேலும், பசவண்ணர் பிறர் குறைகளை விட தம்குறைகளையே அவர் அதிகமாகக் கண்டித் தார்.

*"எனது மனமோஅத்திப்பழம் பாரைய்யா*
*ஆராய்ந்து பார்த்தால் அதில் ஏதும் இல்லை*
*உலகின் டாம்பீகத்தில் என்னைஓர் ஆளாக்கி*
*நீங்கள் விட்டுள்ளீர்கள் கூடல சங்கமதேவா"*

அதாவது மனதானது அத்திப்பழம் போன்று பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் அதற்குள் ஏராளமான புழுக்கள் அடங்கியுள்ளது. மனதை தூய்மைப்படுத்துவது இன்றியமை யாதது. ஏனெனில் தூய்மையான மனதிலே இறைவன் குடிகொள்ளுகின்றான் என்ற ஆழமான கருத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நமது மனதைப்போல நம்முட னேயே இருந்து நம்மைக் கெடுப்பவர் வேறு யாரும் இல்லை என்பதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மரமேறிய மந்தியைப் போல*
*பற்பல கிளைகளில் தாவிக் கொண்டிருக் கின்றேன்*
*நொந்து கிடக்கும் நெஞ்சை நான்*
*எவ்வாறு நம்புவேன்?*
*எவ்வாறு நான் அதை விரும்புவேன்?*
*எந்தை கூடல சங்கம தேவனிடம்*
*போகவிடாதையா."*

என்று குறிப்பிட்டார்.

புதுச்சமுதாயத்தை படைப்பதற்காக பசவண்ணர் செய்த முதல் வேலை என்ன வென்றால் தமது திருக்கோயிலின் அறநெறியின் வாயில்களை உள்அறையின் வாயில்களைக் கூட எல்லோருக்காகவும் திறந்து வைத்திருந்தார். அங்கு உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனும் குல வேறுபாடுகள் இல்லை. செல்வன், வறியன் எனும் பாகுபாடு இல்லை. அவர் கற்பித்த அறநெறியும் அவ்வாறே எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தது. இதனை அவரின் வாக்கமுதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

*"திருடாதே கொலை செய்யாதே பொய் சொல்லாதே*
*சினவாதே பிறரைக் கண்டு கடுகடுக்காதே*
*தன்னைப் புகழாதே, பிறரைக் கண்டு புழுங்காதே*
*இதே அந்தரங்க சுத்தி, இதே பகிரங்க சுத்தி*
*இவையே எங்கள் கூடல சங்கம தேவதை வசமாக்கும்*
*- வழியாம்."*

மேலும்,

*"அன்பில்லாத நெறி எங்குள்ளது*
*அன்பே வேண்டும் எல்லா உயிர்களிடத்தும்*
*அன்பே நெறியின் ஆதாரமையா*
*கூடல சங்கையனைத் தவிர்த்து வேறு யாரும்*
*வேண்டாம் பாரையா"*

அறநெறி என்றால் எங்கோ எட்டாத தூரத்தில் இருக்கும் ஒரு பொருள் என்று எண்ணிக் கொண்டிருந்த சம்பிரதாயவாதிகளைப் பார்த்துக் கொண்டு அதைவிட்டு ஒதுங்கியே வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இவரது மேற்போன்ற சொற்கள் மெய்சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

பிறநெறியை தழுவியவர்கள் வீரசைவ நெறியை தழுவிய போதும் ஒன்றாக உண்ணுவதில் மட்டும் சாதி வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாமல் இருந்தார்களே தவிர திருமணம் போன்ற விஷயங்களில் சாதிப்பாகுபாட்டை கவனித்து வந்தார்கள். வருணாச்சிரம தர்மத்தின் பெயரால் இடம்பெற்றிருந்த சாதிவேற்றுமைக் கொடுமைகளை களைந்து சைவசமயத்துக்கு புத்துயிரும், புதுவளர்ச்சியும் ஊட்டுகின்ற செயல்பாடாக பசவரின் பின்வரும் வாக்கு அமைகின்றது.

*"உண்பதிலும் உடுப்பதிலும் நெறியிழந்தென்பார்கள்*
*கொள்வினை கொடுப்பனை என்றால் குலம் பார்ப்பார்கள்*
*இவர்களை நான் எப்படி ஐயா உன்பக்தரென்பேன்?*
*இவர்களை நான் எப்படி ஐயா சிறந்தவர்களென் பேன்?*
*கூடலசங்கம தேவா, கேளாய்*
*இது மாதவிடாய் உடையாள் நன்னீரில் குளித்தது போலாம்."*

சாதிபாகுபாடுகளை அழிப்பதற்கென்று தொடங்கிய இவரின் அறநெறியிலேயே புதுபுது பாகுபாடுகள் பின்வாசலின் வழியாக வந்தால் சாதிப்பாகுபாடுகளை அழிக்கும் பணியில் பயன்தான் என்ன? அதனால் பசவண்ணர் பெரிய அளவிலான செயல்களில் மட்டுமல்லாது தாம் கடைப்பிடிக்கும் சிறு சிறு செயல்களிலும் கூட பாகுபாட்டினைத் தவிர்க்க முயற்சி செய்தார்.

ஒருவன் எந்த நிலையில் இருந்தாலும் உடல் உழைப்பினால் வாழ்க்கையை நடாத்த வேண்டும் என்றும் சாதாரண வாழ்க்கை நடாத்தி எஞ்சிய நேரத்தை எல்லாம் இறைபணிக்காக தந்து விட வேண்டும் என்று கூறும் பசவண்ணருடைய உடல் உழைப்புக் கொள்கை புதியதொரு சமூகப் புரட்சியின் - ஆன்ம நெறியின் அடிப்படையாக அமைந்தது. எனவே பசவண்ணரின் கொள்கையின் படி ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்ய வேண்டும். தொழில் ஏதும் செய்யாது பிறரை சார்ந்திருப்பவனுக்கு உலகில் இடமில்லை என்பதனை வற்புறுத்திக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசவண்ணர் மேற்கொண்ட சமுதாய சீர்திருத்தத்தில் வீட்டுக்கு வந்தவர்களை உபசரிக்கும் விருந்தோம்பல் முறையையும் புகட்டுவதிலும் பின்னிற்கவில்லை. அவரது வாக்கமுதில் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தினை பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றார்.

*"எங்கிருந்து வந்தார்கள்? நலமா? என்று கேட்டால்*
*உங்கள் செல்வம் சிதறிவிடுமா?*
*அமருங்கள் என்றால் நிலம் பாழாகுமா?*
*வந்தவருடன் பேசினால் தலையும், வயிறும்*
*- வெடிக்குமோ?*
*ஏதும் தராவிடினும் குணமில்லாதிருப்பின்*
*அவர் முக்கை கூடல சங்கமதேவன்*
*அறுத்தெறியாதிருப்பனோ?"*

அதாவது வீட்டுக்கு வந்தவர்களுக்கு எதையும் கொடுக்காது விட்டாலும் அவரை வரவேற்று நல்லபேச்சையாவது பேசக்கூடாதா? என்னும் உபசரிப்பு நற்பண்பை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார்.

பசவண்ணர் இறைவனின் திருக்காட்சிக்காக பக்திநெறியைத் தழுவினார். "பக்தி" எனும் இச்சொல் இவருக்கு பிடித்தமானது. இறைவன் இசைக்கு மயங்குவதில்லை. வேதங்களைக் கற்றுத் தேர்வதினாலும் அவனை அடைய முடியாது. அவன் பக்தி வழிக்கே மிகவும் எளியவனாகக் காணப்படுகின்றான். பக்தியின் முக்கியத்துவத்தை பசவண்ணரின் வாக்கு பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றது.

*"இசைபிரியன் சிவன் என்பர்*
*இசைப்பிரியன் சிவனல்லய்யா*
*வேதப்பிரியன் சிவன் என்பர்*
*வேதப்பிரியன் சிவனல்லய்யா*
*இசைத்த இராவணுக்கு அரைவாழ்வாயிற்று*
*வேதமிசைத்த பிரமன் தலைபோயிற்று*
*இசைப்பிரியனுமல்ல வேதப்பிரியனுமல்ல*
*பக்திப்பிரியன் நம் கூடல சங்கமதேவன்."*

இவ்வகையில் பக்திநெறியின் முக்கியத்துவத்தினை பசவண்ணர் கூறுவதோடுமட்டும் அமையாது பக்தர்களுக்குள் ஏழை என்றும், பணக்காரர் என்றும் பாகுபாடு செய்வதையும் கண்டித்தார். இதனை தனது வாக்கமுதில் குறிப்பிட்டுள்ளார்.

*"அரசர் மனையில் அரசியாய் வாழ்வதிலும்*
*அடியார் மனையில் அடிமையாய் வாழ்வது உயர்ந்தது.*
*ஏனெனில் அபிசேக நீர் கொடு 'மலர் கொண்டுவை'*
*இலிங்கத்திற்கு நிவேதனம் தா' என்பர்*
*கூடலசங்கமனின் பெருமனையில்*
*அடியார் மிச்சில் உண்பாய் சேவகனே"*

என்பான்றே.

என செல்வந்தர்களின் வீட்டில் உண்மையான பக்தி இல்லை. அங்கேயிருப்பது எல்லாம் வெறும் பகட்டே. ஆனால் வறியவர்களோ உண்மையிலேயே பக்தர்கள் உண்மையில் அவர்கள் மனமா வறுமையில் வாடுகின்றது? "வீட்டைப்பார்த்தால் வறியவன் மனதைப் பார்த்தால் செல்வந்தன்" என உண்மை பக்தி எங்கு உள்ளது என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

### அறிஞர் பார்வையில் பசவண்ணர்

பசவண்ணரின் சிறந்த நற்குணங்களையும், அவரின் செயற்பாடுகளையும் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையில் நோக்கியுள்ளார்கள். அவரது இயல்பை ஆராயும்போது ஒரு தலைசிறந்த நாயகனுக்குத் தேவையான எல்லாக் குணங்களும் சரியான அளவில் இருப்பதைக் காணலாம். அதாவது, எளிமை, தியாகம், நல்லெண்ணம், மிருதுவான தன்மை, மற்றும் கடினத்தன்மை, கவித்திறன் மற்றும் சொற்றிறன், பயமின்மை, தூயமனம், தொண்டு செய்யும் மனப்பாங்கு, இவையாவும் ஒரு சிறந்த தலைவனின் குணங்கள் ஆகும். மேலும், அவர் ஒரு சிறந்த தலைவராகவும், சீர்திருத்தக்காரராகவும் இருந்தார். பசவண்ணரின் தனித்தன்மையை கண்டு பலஅறிஞர்கள் வியந்து பாராட்டியுள்ளார்கள். அவர்களில்,

மருளசங்கரன் என்பவர், "பசவண்ணர் நடந்ததே வழி, எல்லா உயிர்களுக்கும் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னதே வேதம்" என்றார். அல்லமப்பிரபு எனும் அறிஞர் "நான் பசவண்ணராக பிறக்க இயலாது போய்விட்டதே" எனக்கலங்கியவர் "சிவநெறியின் கொடிபிடித்து மனித உலகையும், சிவ உலகையும் இணைக்கும் ஏணியாக பச வண்ணர் விளங்கினார்". என்கின்றார். மேலும், மடிவான்மாசிதேவன் என்பவரின் கூற்றானது "எங்கெங்கு பார்த்தாலும் அங்கங்கு பசவன் என்னும் கொடி, எட்டிப்பார்த்தால் லிங்கத்தில் கூட்டம், நெருங்கிப்பார்த்தால் பக்தியென்னும் ரசமையா" என்று புகழ்ந்து கூறியுள்ளார். இவர்களைவிட சித்தராமன் என்பவர் "கரும யோகம் செய்பவர்களைக் கோபித்து கண்டித் தார்" என்றும், சன்னபசவண்ணன் என்பவர் "உண்மையை நடைமுறைக்கு கொண்டுவந்த குருவே" எனவும் போற்றினார். இவ்வாறு பலஅறிஞர்கள் பசவண்ணரின் சிறப்பு பற்றி பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள்.

**முடிவுரை**

வீரசைவமானது ஒரு சமுதாயத்தில் தனிப்பட்ட பிரிவினருக்கு மாறாக ஏற்பட்ட சமயம் என்பதை விட சமுதாயத்தில் எற்பட்ட எற்றத் தாழ்வுகளையும், முரண்பாடுகளையும் தவிர்த்து வேண்டாத செலவினங்களையும், காலதாமதத்தையும் நீக்கி பொதுமக்கள் எற்றுக் கொள்ளக்கூடிய சாதனைகளைப் புகட்டி அவற்றின் மூலம் பூரணமானதோர் ஆன்மிகப் பாதைக்கு வழிகாட்டும் பொது மக்கள் மதமாக எழுந்து சிறப்புற்று விளங்குகின்றது எனலாம்.

## உசாத்துணை நூல்கள்


01. இராத்தினசபாபதி. வை. - வீரசைவம், மெய்யுணர்வு மேல்நிலை கல்வி நிறுவனம், சென்னை, பல்கலைக்கழகம், 1977.

02. சித்த லிங்கய்யா.தி.ப. - பசவண்ணர் வாக்கமுது, ஸ்ரீ.பி.எல்.எஸ். பிரஸ் திருமலை, சென்னை, 24 (1972).

03. தகாரே Dr.க.வா. - சைவதத்துவம், அல்லயன்ஸ் கம்பெனி (1990).

04. பரமசாமி.சோ - வீரசைவ மரபியல், திருநெறி தமிழ் மறைக்கழகம். ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் கோயில், இணுவில், 1995.

05. சிவசண்முகம். டாக்டர்.சி. - பசவண்ணர் வாழ்க்கை வரலாறு. மொழி பெயர்ப்புத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். ஆ.இ


**இலட்சுமி கணபதி :-**

விநாகப் பெருமானின் திருக்கோலங்களில் இலட்சுமி கணபதி ஒன்றாகும். இத் திருக்கோலத்திலே கிளி, மாதுழம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கடகம், வரதம் என்பவற்றை எண்திருக்கரங்களிலே தாங்கியிருக்கிறார். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப் பூவை ஏந்திய இரு பெருந்தேவிமார்களுடன் திகழும் திருக்கோலமிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பக்தி இலக்கியம்

ஸ்ரீகலா ஜெகநாதன்
தலைவர்,
சமஸ்கிருதத்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மிகத் தொன்மையான ரிக்வேதத்திலேயே இறைவனின் அன்பு தாயன்புக்கு ஒப்பிடப் படுகிறது. "எல்லாம் கொடுத்து உதவுபவன் நீ" என்று நன்றி உணர்ச்சியை அன்பாக வெளிப் படுத்துகிறது. வேதக் கவிதையிலே ரிக்வேதத்தில் விசுவாமித்திரர் இந்திரனை நோக்கிபாடுவார்.

"இந்திரனே இங்கிருந்து போய்விடாதே! உனக்கு வேண்டுமளவுக்குச் சோமரசத்தை பிழிந்து தருகிறேன். என் பாட்டாகிய கையால் ஒரு குழந்தை தன்தந்தையின் துணியினுடைய நுனியைப் பிடித்து அழைப்பதுபோல் உன்னை நான் பிடித்துக் கொண்டு மண்டாடுகிறேன்" என்று குலசேகராழ்வார் "அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்று அவள் தன் அருள் நினைந்தே அழும் குழவி அதுவே போன்றிருந் தேனே.!" என்று பாடியவரிகள் இதனுடன் ஒப்பி டத்தக்கன.

யசுர் வேதத்திலும் இறைவன் பக்தி உணர்ச்சியுடன் பேசப்படும் இடங்கள் பல அவற்றுள் ஒன்றில், "இறைவன் நமக்கு அன்பன் நம்தந்தை, நம்மைப் படைத்தோன், நம் நிலமையை முழுவதுமாக அறிந்தோன்!" என்று வேதரிஷி பாடுவார். கீதசாரியன் "நானே தாய், தந்தை, கணவன்" என்று கூறியதை நினை வூட்டுகிறது இப் பாடல். இராமாயணமும், மஹா பாரதமும், பாகவதம் போன்ற புராணங்களும் பக்தி வெள்ளத்தை ஓடச்செய்தன.

பகவத்கீதையிலே கிருஷ்ணபகவான் உண் மையான பக்தன் நண்பருக்கும் எதிரி களுக்கும் சமமானவன் என்றும் மான அவமானம், இன்ப துன்பம், வெப்பம் குளிர், புகழ்ச்சி இகழ்ச்சி, இவற்றிலே நடுநிலை வகிப்பான் என்றும் கூறுகி றார். இன்பதுன்பங்களால் பாதிக்கப்படாத அவனே உண்மையில் தனக்குப் பிரிய மானவன் என்று கூறுகின்றார்.

முருகனும், கண்ணனும் மக்களின் பார்வையில் தீராத விளையாட்டுப் பிள்ளைக ளாக, குன்றாத இளமையுடன் பொலியும் குழந்தை தெய்வங்களாகக் காட்சியளிக்கின்றனர். இவர்களின் திருமேனி அழகிலும், வீரச் செயல் களிலும் ஈடுபட்டு பல அழகிய செய்யுட்களைத் தந்திருக்கின்றார்கள் ஆழ்வார்களும், நாயன்மார் களும். இவர்கள் திருக் கோவில்களுக்குச் சென்று இறைவனின் பெருமையை பாடி பக்தி புலனை தேக்கிச் சென்றதன் பலனாக தமிழ் நாட்டில் பல சமயப்பயிர்கள் தழைத்து வளரத் தொடங்கின. பார தத்தில் பெருமக்கள் அநே கர் தம் முழுஉணர்வுடன் இவ்வருட்பாடல்களில் ஈடு பட்டுப் பக்திச் செல்வர்கள் ஆனார்கள்.



ஞானத்தையே சிறப் பாகப் போதித்த சங்கரர் பக்தி நிரம்பிய ஸ்தோத்திரங் களை பாடி சிவ பக்தி யாகிய மகிழ்ச்சி அலை மோதும் படி செய்தார். அவற்றுள் முதன்மையானவை இரண்டு - சிவானந்தலஹரி, சௌந் தரியலஹரி (லஹரி என்றால் அலை) சிவானந்த லஹரி யில் பல அழகான விருத்தங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் அமைந்த நூறு சுலோகங்களில் சங்கரர் சிவபக்தியின் பேரெல்லையைத் தாண்டி நிற்கி றார்.

"புரவலரில் சிறந்தவன் நீ, ஏழைகளில் தாழ்ந் தவன் நான், ஆகவே உனக்கும் எனக்கும் சிறப் பான உறவு முறை அமைந்து விட்டது. அதனால் முயன்றாவது என்னை நீ காப்பற்றத்தான் வேண்டும்" என்கிறார்.

மற்றொரு பாட்டில் மனதைக் குரங்காகச் செய்து காண்பித்து அழகான ஓர் உருவம் செய்து காட்டுகிறார். "என்மனக்குரங்கு மோகம் என்ற காட்டில் அலைந்து திரிகிறது. இளம் பெண் களின் மார்பகமாகிய மலையில் நடமாடுகிறது. நொடிக்கு ஒரு முறை ஆசை என்ற கிளைக்கு தாவுகிறது. கபாலம் ஏந்தி பிச்சையெடுக்கும் சிவனே நிலையற்ற தன்மையுள்ள என் மனக் குரங்கை பக்தி என்ற கயிற்றால் கட்டி உன்வச மாக்க வேண்டும். வெறும் கபாலத்தோடு பிச்சைக்கு அலைவதை விட குரங்காட்டியாகச் சென்றால் சிவனுக்கு பிச்சை மிகுதியாக கிடைக்கும்" என்ற கருத்து இங்கே தொனிவடி வாக உணர்த்தப்படுகிறது.

பக்தி என்பதை பல உவமைகளால் சங்கரர் விளக்கிக் கூறும் சுலோகம் ஒன்றை நாம் அனுபவிக்க வேண்டும்.

"அங்கோல மரத்தின் வித்துக்கள் தாய் மரத்தையே போய் அடைகின்றன, இரும்பாலான ஊசி காந்தத்தால் கவரப்பட்டு அதனைச் சேர்கி றது, பதிவிரதை கணவனை அன்புடன் நாடுகி றாள். கொடி மரத்தையும், ஆறு கடலையும்" அடைகின்றன. இவைபோல் இயற்கையாக இறைவனை நாடுவதே பக்தி எனப்படும். மிகவும் எளிமையான பொருத்தமான உவமைகளில் பக்தியை விளக்கி யுள்ளார் சங்கரர்.

திருச்செந்தூரில் கோயில் கொண்ட சுப்பிர மணியன் மேல் சுப்பிரமணிய புஜங்கத்தைப் பாடியுள்ளார் சங்கரர். சாதாரணத் துதி போலன்றி பல சீரிய கருத்துக்கள் கொண்டு இயற்றப்பட்டது இந்த நூல். திருச்சீரலைவாய் என்ற பெயர் பெற்ற இந்த தலத்தில் கடற்கரையோரத்தில் உள்ள முருகன் திருவடிகளில் அலைகள் வந்து அடங்கு வதைக் கண்டு சங்கரர் பாடுகிறார். "இந்த உப்புக் கடலின் அலைகளும் உன்னிடம் வந்து சேவிக்கும் அன்பர்களின் துன்பங்களும் உன் அருளால் ஒடுங்கி விடுகின்றன".

இவ்வாறு வழிபட்டவர்களின் இடர் நீக்கும் தன்மையுள்ள முருகனிடம் தம் மனமும் புலன் களும் ஈடுபட்டிருப்பதை வியந்து கூறுகிறார். "கந்தனின் உருவச் சிறப்பில் கண்கள் நிலைத்து விட்டன. காதுகள் அவன் புகழ் தவிர மற்றேதும் கேட்பதில்லை, வாயும் அதையே பாடுகிறது, கையால் அவனது பூசனையையே செய்கின்றேன். உடலும் அவனது குற்றேவல் புரிவதிலேயே ஈடுபட்டுவிட்டது. என் முக்கரணங்களும் அவனிடமேயே நிலைத்துவிட்டது. வேறு எதுவும் அவற்றுக்கு இலக்காகாமல் இருக்க வேண்டும் என்பதே எனது இலட்சியம்."

புஜங்கம் என்ற விருத்தத்தை இறைவன் புகழ் பாடும் கருவியாக ஆக்கித் தந்த பின்னர் அநேக கவிகள் அவரைப் பின்பற்றி புஜங்க ஸ்தோத்திரங்களைப் பாடியிருக்கிறார்கள். ஆயினும் புஜங்கம் என்றால் சுப்பிரமணிய புஜங்கம் தான் பக்தர்களின் நினைவுக்கு வரும்.

உலகின் தாயாகிய அம்பிகை பற்றிய பேச்சு எழுந்தாலே நினைவுக்கு வருவது சங்கர பகவத்பாதரின் சௌந்தரிய லஹரியேயாகும். இதன் முதல் சுலோகத்தின் கருத்து. "தன் எல்லாக் காரியங்ளையும் செய்யும்திறமை சிவனுக்கே சக்தி யுடன் கூடியபின்தான் ஏற்படுகிறது. இல்லா விட்டால் ஓரங்குலம் தானும் நகரவும் இயலாது. உன்னை சிவனும், திருமாலும், பிரம்மனும் ஆராதிக்கின்றார்கள். அத்தகைய உன்னை எவ்வ கையிலும் புண்ணியம் செய்யாத நான் வணங் கவோ துதிக்கவோ திறமை உடைய வனா?"

இன்னொரு சுலோகத்தில் மிக அருமை யான ஒரு கருத்து அமைக்கப்பட்டது.

"முதுமையையும் மரணத்தையும் வெல்லும் திறமையுடைய அமுதத்தை விழுங்கிய பிரமனும் இந்திரனும் தேவர் குழாமும் அழிந்து போகின் றார்கள். கடலிருந்து கிளம்பிய கொடிய ஆல காலத்தை விழுங்கிய சிவபெருமான் காலத்தை வென்றுவிட்டான். இந்த முற்றிலும் முரணான நிலைகளுக்கு எல்லாம் காரணம் என்ன தெரி யுமா? உலகின் தாயாகிய தேவியின் காதுகளில் அணியப்படும் தாடங்கம் என்னும் காதணி களே."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காலத்தில் பக்தியைப் பெருக்கிய பெரியோரில் லீலாசுகரும் ஒருவர். வெறும் காமுகராக இருந்த இவரை சிந்தாமணி என்னும் தேவதாசி இறைபணியில் ஈடுபடுத்தினாள் என்று மரபுக் கதை வழங்கி வருகிறது. முந்நூறு சுலோகங்கள் அடங்கிய கிருஸ்ண கர்ணாமிருதம் என்ற அருட்கனியை வழங்கியுள்ளார். லீலாசுகருக்கு வேணு கோபாலன்மேல் தோன்றிய பக்தி பழுத்துவிட்டது. அவன் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார். ஆனால் இவருடைய நிலையை அவனிடம் போய்ச் சொல்லுவார் யாருமில்லை. "யமுனை ஆற்றங்கரையில் ஒரு மூங்கிலாகப் பிறந்திருந்தேனானாலும், கண்ணன் என்னைக் குழலாகச்செய்து தனது கனிவாயில் வைத்து பொங்கு நற்கீதம் படிப்பான். அந்தப்பேறும் நான் பெறவில்லையே" என்று பல வாறாக ஏங்குகிறார். முடிவில் கண்ணன் ஊதும் குழலையே பார்த்து இறைஞ்சி வேண்டுகிறார்.


"இனியகுழலே முகுந்தனின் வாய்ச் சுவையும் நாற்றமும் எப்போதும் உனக்குக் கிடைக்கின்றன. உன்னை நான் வணங்கிக் கேட்பது இதுதான். உன்னைக் கண்ணன் தன் உதட்டில் வைத்து ஊதும்போது உன் ஒருமுனை அவன் காதருகில் வருமல்லவா? அப்போது என் நிலையை - நான் உற்றதுயரத்தை - அவன் காதில் ஒரு வருக்கும் தெரியாமல் சொல்லிவிடு."

லீலாசகர் கண்ணனையே பரப்பிரம்மமாகக் கருதியவர். கண்ணனின் ஒவ்வொரு விளையாட்டும் அரிய பெரிய வேதக் கருத்துக்களை உள்ளடக்கியவை என்று அவர் நம்பினார். வெண்ணெய்திருடி அதற்குத் தண்டனையாக உரலில் கட்டப்பட்ட கண்ணனை வர்ணிக்கும் போது "உப நிஷத்துக்களில் உள்ளுறையும் தெய்வம் இன்று உரலில் கட்டப்பட்டுக் கிடக்கிறது" என்று வியந்து பாடுகிறார்.

*"மத்துறு கடை வெண்ணெய் களவினில்*
*உரலிடை யாப்புண்டு*
*எத்திறம் உரலினோடு இணைந்திருந்*
*தேங்கிய எழிலே"*

என்று பாடிய நம்மாழ்வார் கவிதையை இது நினைவூட்டுகிறது.

மத்துவமதத்தைப் பரப்பியவர்களுள் ஒருவரான வாதிராஜாரும் சிறந்த கிருஷ்ணபக்தர். இவரது "ருக்குமணி விஜயம்" என்ற காவியம் கண்ணனது கதையை அழகான கவிதையிலே சொல்லும். பத்தொன்பது சர்க்கங்கள் கொண்ட இந்த நூல் சமஸ்கிருத இலக்கியத்திலே மிகச் சிறந்த மகா காவியமாக அந்நாளைய பண்டிதர்களால் கருதப்பட்டது.



பொதுசன நூ
யாழ்ப்பாண

காஞ்சி காமாட்சி மேல் இயற்றப்பட்ட ஐந்நூறு பாடல்கள் "மூக பஞ்சகதி" என்று பெயர் பெறும். இதில் ஸ்துதி சாதகத்தின் தொடக்கத்தில் அளவிட முடியாத இறைவியின் திறத்தை சொல்லால் அடக்கத் தாம் முற்பட்டதை குறித்துப் பாடுகிறார்.

"நான்முகனின் வாய்ச்சொல்லால் வெளிப்படும் வேதங்களும் உன் பெருமையைக் கூறும் முயற்சியில் தம்திறனை இழந்து கர்வ பங்கம் அடைகின்றன. என் போன்றவர்களால் உன் பெருமையை எப்படிப் பாடமுடியும்? ஏன்றாலும் உன் திருவடிகளைச் சேவிக்கும் பேராவல் என்னை வாய்ச் சாலனாகச் செய்துவிடுகிறது" என்று பாடுவார். மூககவியின் பஞ்சசதியில் ஒரு பாடல் தேவியின் காலில் இருந்து எழும்பும் தூசியின் பெருமையைப்பேசும்.

சிவபெருமானின் தலையின் சடையாகிய காட்டில் வாழும் சந்திரன்மேல் இத் தூசி படிவதால் அது மாலைநேரத்து சூரியனைப்போல் சிவந்து காட்சியளிக்கும். இந்திராணியின் தலை வகிட்டிலே அது குங்குமம்போல அமர்ந்திருக்கும். அவனை வழிபடு வோரின் புண்ணி யத்தை அது பக்குவப்படுத்தும் காஞ்சியில் வீற்றிருக்கும் தாயின் - கால்தூசி எம்மைக் காக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பில் இருந்து ஊமையான இந்த மூககவி இறைவியின் அருளால் பேசும்பேச்சைப் பெற்றார். அவர் வாயில் இருந்து கவிதை வெள்ளமாகப் பெருக்கெடுத்தது.

அப்பைய தீட்சிதர் இலக்கியத்தைப் போலவே அத்வைத சித்தாந்தத்திலும் ஆழ்ந்த பற்றுடையவர். சிவன் திருமால் என்ற பேத உணர்ச்சியில்லாமல் இரு மூர்த்திகள் மீதும் பாடல்களைப் பாடியுள்ளார். இவருடைய தகப்பானாரைப் பெற்ற தாயானவர் வைஷ்ணவ குடும்பத்தைச் சேர்ந்தவர். வேதாந்த தேசிகனின் யாதவாப்யுதயத்துக்கு தீட்சிதர் சிறந்த உரையை எழுதியிருக்கிறார். தமது "பரிமளம்" என்ற நூலில் முகுந்தனின் புகழைப் பாடுகிறார். "வரதராஜஸ் தவம்" என்ற துதியைப் பாடியிருக்கிறார். சிவ பெருமானின் பெருமையும் ஆற்றலும் மற்ற அறிஞர்களுக்கு கவர்ச்சியாய் இருக்க தீட்சிதருக்கு சிவனின் மேனியழகே அவரது இதயத்தை கொள்ளை கொண்டது. தீட்சிதர் சித்தியடையும் சமயத்தில் பாடிய சுலோகத்தில் தம்மைப் பற்றிக் கூறும்போது சில நல்ல நூல்களையும் நான் இயற்றி இருக்கிறேன் என்று கூறுகிறார்.

வேதாந்ததேசிகர் இறைவனின் தயை என்பதையையே ஒரு தேவதையாக்கி அவள் மேல் ஒரு சதகம் பாடியுள்ளார். உயர்ந்த கருத்துக்கள் நிறைந்தது இச்சதகம். ஒரு பாட்டிலே "வேடர் தலைவனாகிய குகன், குரங்கரசன், சுக்கீரிவன், சபரி என்ற பெண், கூனி, குசேலர், ஆச்சிமார்கள் எல்லோரும் உன் அருள்பெற்று பெரியவர்கள் ஆனார்கள். நீ எவ்வளவு உயர்ந்தவன், அவர்கள் எவ்வளவு தாழ்ந்தவர்கள், உயர்வு தாழ்வு என்ற வேறுபாட்டை நீக்கி எல்லோரையும் சமனாகச் செய்தது உன் கருணைப் பிரவாகம் அன்றோ" என்று பாடுகிறார்.

இலங்கையைச் சேர்ந்த பலரும் பல பக்தி ஸ்தோத்திரங்களை இயற்றியுள்ளனர். மருதூர் சீத்தாராம சாஸ்திரிகள் யாழ்ப்பாணத்தில் பல சம்ஸ்கிருத அறிஞர்களை தோற்றிவித்த பெருமையுடையவர். இவர் கணேச பஞ்சரத்தினம், வல்லீ சப்பிரபோத தசகம் தேவி ஸ்தோத்திரம் முதலியவற்றை இயற்றியுள்ளார். இவை இன்று எமக்கு கிடையாமல் போனது எமது துரதிஸ்டமே. இரா.பாலகிருஸ்ண ஐயர் என்பவர் சிவன் மீது பஞ்சரத்தினம் பாடியுள்ளார். இத்தோத்திரத்திலே சிவனின் தாண்டவம், நஞ்சு உண்ட வரலாறு, முப்புரம் எரித்த வரலாறு, இராவணனுக்கு அருள் பாலித்தமை என்பன கூறப்படுகின்றன. பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் ஸ்ரீவடிவாம்பிகா பஞ்சரத்தினம் இயற்றியுள்ளார். இது சிறந்த கவிநயத்தோடு கூடியது. ஆதிசங்கரரின் சௌந்தரிய லஹரியில் அம்பாள் வர்ணிக்கப்படும் தன்மையை ஒத்ததாக வடிவாம்பாள் வர்ணிக்கப்படுகிறாள். முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகை மீது பாடப்பட்டது. இதனை "தேவியின் பாதத் தாமரையில் உள்ள மகரந்தத்தில் திளைத்த பக்த ஞானங்களாகிய வண்டுகளில் மனதில் எப்படிப் பட்ட கற்பனைகள் விளங்குகிறதோ அந்த கற்பனை, தேவியின் மனதைக் களிப்பூட்டுகின்றது. உள்ளக் கமலத்தில் வசிக்கும் தேவி தானாகவே தன் பிரவாகத்தை வெளிப்படுத்துகின்றாள்" என்று பிரம்ம ஸ்ரீ சீத்தாராம சாஸ்திரிகள் விமர்சிக்கின்றார். இத் தோத்திரம் சிறந்த பொருள் அமைதியும் கொண்டது. எடுத்துக் காட்டாக மூன்றாவது பாடல் "மஞ்சள் குங்குமத்தினால் ஆயிரம் திருநாமம் தனித்தனிக் கூறும் துதிகளால் அர்ச்சிக்கப் பெற்றவளை தத்தம் விருப்பம் கைவரப் பெறும் களிப்பும் மிகுதியுற்ற பிற சமயத்தவர்களும் ஒருங்கு கூடி பக்தியுடன் வழிபடப் பெறுபவளை உலக அன்னை வடிவாம்பிகையை நான் அனுதினமும் வணங்குகிறேன்." என்று குறிப்பிடப்படுகிறது. மட்டுவில் சம்ஸ்கிருத பண்டிதர் கி.சதாசிவசர்மா ஸ்தோத்திர பஞ்சகம் எனும் நூலை வெளியிட்டுள்ளார். இந் நூலானது குலதெய்வப் பிரார்த்தனை கணேசரஷ்டகம் ஸ்ரீபார்வதி லலிதாம்பிகை அஷ்டகம் ஆகியவற்றைக் கொண்டு அமைந்துள்ளது.

இன்னும் எத்தனையோ பக்தி எனும் பெரு வெள்ளத்தில் திளைத்த கவிஞர்களால் புனையப்பட்ட பக்தி இலக்கியங்கள் பல. இவை பக்தி வெள்ளத்தை ஓடவிட்டு இறைவன்பால் அடியார் உள்ளத்தை பிணிக்க வைத்தவை.

**உசாத்துணை நூல்கள்**


- வடமொழி இலக்கிய வழிகாட்டி (வேதம் முதல் இன்று வரை)
- A.V.சுப்பிரமணியம், ராமகிருஸ்ணமடம், சென்னை, 2003.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை திருநீலகண்ட
வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேக மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்

மீசாலை கிழக்கு
அருள்மிகு ஸ்ரீ சித்திர வேலாயுதப் பெருமானின்
திருவருளின் உருவாக்கம்

# திருப்புகழ் மண்டபம்


சகல மங்கலகரமான இந்துசமய வைபவங்களுக்குமானது





தொடர்புகளுக்கு : பரிபாலன சபை
021 221 3217, 077 5143918, 021 3737499

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேக மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்



# சரவணபவன்
## ஆபரண மாளிகை

தங்க வைர நகை வியாபாரம்

உரிமையாளர் : கே.கே.யோகநாதன்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்,
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

**கண்டி வீதி, சாவகச்சேரி**
தொ.பேசி :
**021 3737499, 021 321 3217**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை திருநீலகண்ட
வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
**கும்பாபிஷேக மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்**





உங்கள் பாவனைக்குத் தேவையான அனைத்து
பான்ஸி பொருட்களுக்கும்
அழகு சாதனப் பொருட்கள், பாடசாலைப் பைகள்,
பெண்களுக்கான கைப்பைகள், பிரயாணப் பைகள் என்பவற்றை
தரமாகவும், நவீன வடிவமைப்பிலும், மலிவாகவும்
நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்......



# சங்கரன்ஸ்
## பான்சி ஹவுஸ்

**18, நவீன சந்தை உட்புறம்,**
**சாவகச்சேரி**

---



மீசாலை திருநீலகண்ட
வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்
கும்பாபிஷேக மலருக்கு எங்கள் வாழ்த்துக்கள்



சகல விதமான கட்டடப் பொருட்களுக்கும், இரும்புப் பொருட்கள், உபகரணங்கள், தீந்தை வகைகளை
ஒரே இடத்தில் நம்பிக்கை, நாணயம், தரம் தவறாது பெற்றுக் கொள்ள....

# தர்மி ஹாட்வெயர்ஸ்




*தங்களுக்குத் தேவையான பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும்,*
*உரிய வாகன வசதி தாமதமின்றி*
*பெற்றுக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்....*



# THARMI HARDWARE

**Branch:**
**Kandy Veethy,**
**(Infront of Railway Station)**
**Meesalai.**

**A9 ROAD, MADDATHADY,**
**CHAVAKACHCHERI.**
**Tel : 021 321 2913**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பாகம் 5

## பாடல்கள், தோத்திரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளைமாவடிப் பிள்ளையார் பற்றிய வரலாறு, வாழ்த்து, அற்புதம்



## "வாழ்த்துப்பா"

நீர் வளமும் நில வளமும் நிறைந்து ஓங்கி
நிலாவுகின்ற மருதமுல்லை மீசாலையூர்
பேர்பெரிய திரு நீலகண்டன் மூலம்
பேர்ந்தெழுந்த வெள்ளை மாவடியமர்ந்த
கார்மேவுதந்தி முகக் கற்பகத்தின்
கால் மலரை மறவால் வணங்குவோரை
தார்மேவும் எம் பெருமான் தான்கண் பார்த்து
தன் குடைக்கீழ் காத்தருள்வான் சாற்றி ஏத்தீர்

மணியோசை கேட்டவுடன் மகிழ்ந்தெழுந்து
மடித்த முட்டிக் கரத்தாலே சிரசில் குட்டி
தணியாத வேட்கையுடன் தோப்புக் கரணம்
தாமிட்டுத் தாழ்ந்தெழுந்து தவஞ்செய்வாரை
பிணி முதலாம் துயர்துடைத்துப் பெருஞ்செல்வராய்
பேணியிந்த வையகத்தில் பிறங்கி வாழ
மணியான மனைவி மக்கள் சுற்றஞ்சூழ
வைத்திடுவான் வரங்கள் தந்து வாழ்விப்பானே

வன்னியுடன் அறுகு வில்வம் மந்தாரமாம்
மணமலர்கள் வெள்ளைமா வடியாற்கிட்டே
பொன்னின் முக் கனிகள் அமுது மோதகங்கள்
போற்றியன்பாய்ப் படைத்தவற்குப் பூசை செய்வீர்
சென்னியுற விழாவெடுத்து வலமாய் வந்தே
சேவடியை வணங்கி வந்தால் மாவடியான்
மன்னி மக்கள் கல்வியுடன் உத்தியோகம்
மணமுஞ் செய்ய அருளிடுவான் மறக்காதீர்காள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணியில் பூர்வபக்கச் சதுர்த்தி தொட்டே
அடுத்தடுத்து தவறாமல் விரதஞ் செய்வீர்
மாவடியா யென்று திருக் கார்த்திகை முதலாய்
மலர்ந்திருப்பான் நாள் வரையும் நோற்றிருந்து
தேவ தேவா ஐங்கரத்தின் செல்வா என்றும்
திருமூலப் பிரணவமே எனச் சட்டி நாளும்
ஆவலுடன் முறையாக நோற்பின் ஐயன்
அனைத்துந் தந்து உங்களுக்கு அருள்வான்தானே.

அன்றொரு நாள் யாழ்ப்பாண மக்களெல்லாம்
அதிகார நெருக்குதலால் இடம்பெயர்ந்து
சென்று தென்மராட்சியிலே இடம்பிடித்தார்
தேடிப் பல பதினாயிரவர் மீசாலையிலே
நன்றிதென மாவடிப் பிள்ளையார் கோவில்
நாட்டமுடன் உள்ளும் புற வீதியெல்லாம்
நின்று பிள்ளை யாரடியை வணங்கி ஏத்தி
நின்மதியாய் ஆறுமாதம் வாழ்ந்து சென்றார்

**அற்புதம் 19ஏப்ரல் 1996**

தருணமிந்தக் காலம் மக்கள் துயரை நீக்க
தந்தி முகன் அருள் வேண்டும் என்று கோயில்
கருணையுள்ள முகாமையாளர் இராமலிங்கம்
கனிந்து தினம் அடியாருடன் பசனை யாற்றி
சரணமென மாதமொன்று பாடியேத்த
சார்ந்து பிரணவ மூர்த்தி வைரவர் கோயிலுச்சி
அரணமென ஏப்ரல் பத்தொன்பதையே காட்ட
அனைவரும் ஐயனை வணங்கித் தத்தம் ஊர் சென்றாரே

**கோபுரம்**

இடம்பெயர்ந்தோர் விருந்தாய் வந்து ஏத்திச் செல்ல
ஏம்பிரான் அருளிதென்று மீசாலையூரார்
திடம்பயின்று கோயிலறக் காவலர்கள் மூலம்
தேர்ந்தொன்றாய்க் கோடி பணம் சேர்த்தே கோயில்
நடம்பயன்று கதை சொல்லும் சிற்பம் மேவும்
நன்மலைபோல் வான்தொடும் கோபுரத்தை
கடன்பயில அமைத்து குடமுழுக்கும் ஆட்டி
கையேத்தி ஐங்கரன் தாள் பணிகின்றாரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

மங்கலஞ்சேர் மீசாலை வெள்ளைமாவடிவாழ
மகா கணபதிப்பிள்ளை யார்பாதம் என்றும் வாழி.
பொங்குங் குடமுழுக்கோடு மண்டல முழுக்கும்
புரிந்து செய்யும் சிவாச்சாரி யார்களெல்லாம் வாழி
சங்கையுள்ள அறக்காவலர் தலைவருடன் வாழி
சார்ந்து பயஞ் செய்துவரும் தக்கோரும் வாழி
தங்கமான ஊரவர்கள் பண்ணிசைப்போக வாழி
தங்கசைவம் திருநீறு ஐந்தெழுத்து வாழியவே.

*குறிப்பு*

கோயில் அறங்காவலர் தலைவர் திரு.சி.இ.இராமலிங்கமும், அவரது துணைவியாரும், இடைவிடாமல் கண்ணுங்கருத்துமாகவே அதனை பார்க்கின்றார்கள். நான் சென்ற 17.06.2010ல், கோயிலைத் தரிசிக்க வந்தபோது, அவர்களிருவரும் அன்றும் முன்போலக் கோயிலிற் கண்டு வியந்து பாராட்டினேன்.

**வை. க. சிற்றம்பலம்**
முதுபெரும் புலவர்,
கலாபூசணம்
புலவர்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீசாலை, திருநீலகண்ட வெள்ளைமாவடி விநாயகராலய மான்மிய

# தோத்திரப் பாடல்கள்



### நேரிசை வெண்பா

மாவடியி லப்பனே மாமணியே உன்றனது
சேவடியே பாடிப் பணிகின்றேன் - மாவடியால்
இம்மைச் சுகம்தா இருவினையும் தீர்த்தருளும்
அம்மைச் சுகமதுவும் தா.

### ஆசிரியப்பா

உலகெலாம் மதிக்க உயர்ந்து விளங்கும்
இலங்கா புரியின் எழில்பெறு சிரசாம்
யாழ்ப்பா ணத்தில் இலங்குறும் பதிகளில்
சைவநன் மக்கள் சகசமாய் வாழும்
சாவகச் சேரியின் சார்பாய் அமைந்து
மாவும் பலாவும் வளம்பெற வளர்ந்து
கற்பக தருக்கள் கவின்பெற ஓங்கும்
மீசாலை என்னும் சீர்சால் பதியில்
முன்னொரு நாளில் முனிவர் ஒருவர்
விக்கின விநாயக வித்தக மூர்த்தியை
ஆன்ம மூர்த்தியாய் அன்புடன் வைத்து
வழிபா டியற்றி வந்திடுங் காலையில்
டச்சுக் காரர் அக்கிர மத்துடன்
கோயில் குளங்களை அழித்தொழித் திடவே
தபோதனர் தாமும் தம்மிட த்திருந்த
உபாசனா மூர்த்திக்கும் ஊறு வருமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் தளர்ந்து உரைதடு மாறி
அவ்விடம் நின்ற வெள்ளைமா அடியினில்
குழியது தோண்டிப் புதைத்து விட்டு
சிற்சில காலம் தியானத் துடனிருந்து
அண்ணல் அருளால் அவனடி அடைந்தனர்
சிற்சில காலம் சென்றதன் பின்னர்
டச்சர சாட்சியும் அழிந்தொழிந் திடவே
ஆங்கில ஆட்சி அடைந்திடு காலையில்
அந்தக் காணிக் குரியவ ரான
முகமாலை என்னும் மூதூர் வாசி
கேய ரத்தின முதலியார் என்பவர்
அவ்விடம் வந்து அயலில் வசித்த
முத்தனை நோக்கி முகமலர்வுடனே
எனது காணியிலும் கொள்ளினைக் கொத்து
இந்தா விதைமுதல் எனக்கொடுத் திட்டு
முகமாலை என்னும்தன் அகமது செல்ல
முதல்வர் சொற்படி முத்தன்என் பவனும்
கொள்ளது தன்னைக் கொத்திடும் வேளையில்
திருநீல கண்டத் தேளது ஒன்று
அங்கொரு துவாரம் வழியே உட்புக
அதுஒரு கொடிய தேளென் றஞ்சி
அவ்வழி அதனில் மறுமுறை கொத்தலும்
அந்த அடியவர் அந்த அந்நாள் மறைத்த
விநாயக மூர்த்தியின் உருவினிற் படுதலும்
குருதி கொப்பளித்து வருவதை நோக்கி
ஆச்சரி யத்தோ டற்புத வசத்தனாய்
ஆயுதம் தனையும் அவ்விடம் விட்டு
தனது குடிசையில் தனிமையிற் சென்று
ஊணுடன் உறக்கமும் ஒழிந்திட் டயர்ந்திட
கயமுகக் கடவுளும் கனவினில் தோன்றி
உன்றன் விசனம் உடனே ஒழிக

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்றனை எடுத்து நீரினில் ஆட்டி
மாவடி தன்னில் வளம்பெற நிறுத்தி
உன்றன் உணவை என்முன் வைத்து
நீரினால் தெளித்து நிரம்ப உண்கென
அயர்ந்து முத்தனும் அயர்வொழிந் தெழுந்து
கனவோ நனவோ எனக்கலங் கிட்டு
பெருமான் சொற்படி பெருமையாய்ச் செய்து
முகமாலை சென்று முதலியார் தனக்கும்
இப்பெரு நிகழ்ச்சியை இனிதாய் இயம்பிட
அவரும் உடனே அவ்விடம் வந்து
சிறுகவே குடிசையொன் றுடனே இயற்றி
அப்பெரு மானை அதிலே இருத்தி
பொங்கற் கோயிலாய்ப் புகழ்பட நடாத்தி
சிற்சில காலம் சென்றதன் பின்னர்
அயலவர் எல்லாம் அடியவ ரெல்லாம்
அற்புத மூர்த்தியின் அருளது தன்னால்
அப்பனுக் காக ஆலயம் அமைக்க
முதலியார் தன்னுடன் முயன்றிடு காலையில்
ஆலயம் தன்னை அழகுடன் அமைக்க
காடது தன்னில் மரம்தறித் திடுகையில்
மரமது தறித்ததை மாபெரும் குற்றமாய்
ஆலய மனேச்சரை அன்றே அழைத்து
நீதி பதிதான் சிறையினிற் றள்ள
அன்றைய இரவே அவர்தம் மனைவி
முடத்து நோயால் முனங்கி அழுதிட
வைத்திய முறைகளால் மாறுதல் இன்றி
அப்பரின் சூலைபோல் அதிகரித் திடவே
விக்கினேஸ் வரனின் விளையாட்டென வுணர்ந்து
தர்ம கர்த்தாவை தளையினில் நீக்கிட
சம்பந்த மூர்த்தி தடவிய விபூதிபோல்
அவரும் விபூதி அளித்த மாத்திரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்தான் நொடியிற் பறந்து விடவே
அவன்செய லெனவே அனைவரும் வாழ்த்தினர்
நீதி பதியும் நிறைவுறு மனத்தராய்
திருப்பணி அதற்கு திறம்பட உதவினர்
பட்டுக் குடையும் பரிசாய் அளித்தனர்
இன்னோரன்ன அற்புத நிலைமையில்
அடியார் எல்லாம் அணிபெறத் திரண்டு
அப்பன் ஆலயம் அழகுற அமைத்து
நித்திய பூசை நிறைவாய் நிகழ்கையில்
முதலியார் அவர்களும் சிவபதமடையவே
அவரின் வழிவழி யாக வந்த
பச்சிலைப் பளியின் மணிய காரன்
கணபதிப் பிள்ளையாம் பெருமக னாரும்
அவரைத் தொடர்ந்து அவர்மக னான
சரவண முத்துவாம் நொத்தா ரிசுவும்
படிமுறை யானே பரிபா லனம்செய்து
ஆலய மண்டபம் அனைத்துமே ஆக்கி
நித்திய பூசையொடு நைமித் திகமும்
மகோற்சவ மாகும் மாபெரும் விழாக்களும்
வளர்பிறை போல வளர்ந்து வருகையில்
அந்த நாளில் அயலில் வசித்த
ஆண்டார் என்னும் அறம்கா வலர்தான்
ஆலயம் தன்னின் அருகாய் உள்ள
தனது காணியையும் தலைவற் காக்கி
ஆங்கோர் தீர்த்தக் கேணியும் அமைத்து
சப்பறம் தேரையும் தானே செய்வித்து
சப்பற விழாவை தானே நடாத்தி
சந்ததி சந்ததி யாக நடைபெற
ஒழுங்கும் செய்து உயர்பதம் எய்தினர்
இந்த வகையில் இவ்வா லயம்தான்
பக்க ஆலயங்களை பரிவார மாக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடு நாயகமாகத் திகழ்ந்து வருகையில்
கோயிலில் மாத்திரம் களவெடுத் துண்ணும்
அம்பல வாணியாம் அந்தணன் ஒருவன்
ஒருநாள் இவ்வா லயத்தனும் புகுந்து
களவினைச் செய்து வெளியே வருகையில்
எங்கள் இறைவன் திருவருட் திறத்தால்
கண்ணொளி மறைத்து மரத்தினில் ஏற்றி
தரும கர்த்தாவை தானே நேரில்
கனவினில் கண்டு காரியம் விளக்கி
அப்பனே நீசென் றன்னவன் தன்னை
அன்பு முறையில் அகற்றி விடுகென
சரவண முத்துவாம் தர்ம கர்த்தாவும்
அடுத்த நாட்காலை ஆலயம் வந்து
கனவினிற் கண்டதை நனவிலும் கண்டு
அண்ணல் சொற்படி அவன்றனை இறக்கி
அன்புடன் விபூதியை அளித்திட் டிடவே
மறைந்த கண்களும் பார்வை பெற்றிடவே
எத்தனை கோவிலில் எடுத்தெடுத் துண்டேன்
இந்தத் தெயவமே என்னைப் பிடித்ததென்று
முன்னொரு கோவிலில் களவாய் எடுத்த
வில்வ மாலையும் இறைவற் களித்து
அன்புடை மனத்தொடும் அகன்றே போயினன்
இன்னோ ரன்ன அற்புதத் திடையே
சீருடை மனேச்சரும் விவலோ கம்செல
அவரைத் தொடர்ந்து அவர்மக னான
பிள்ளையார் எனப்படும் ஏரம்பர் அவர்களும்
அன்னவர் பின்னர் அவர்மக னான
விநாசித்தம்பி எனப்படும் வள்ளலும்
ஆலயம் தன்னை அழகுற நடாத்தி
ஏரம்ப மூர்த்தியின் இணையடி எய்த
அன்னார் தன்னின் அன்புடை மகனாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கைக் குரிய சபாரத் தினமே
அருளுக் குரிய இவ் வாலயம் தன்னை
ஆகம விதிப்படி ஆளும் நிலைமையில்
கலியுக வரதனாம் கந்தக் கடவுளும்
இங்கெழுந் தருளத் திருவுளம் கொண்டு
பக்க லாகப் பண்பாய் அமர்த்தினர்
அடியார் பக்தியை ஆழமாய்க் கொண்ட
சிதம்பர நாத தேசிகர் அவர்களும்
ஆலய முன்றலின் அண்மைய தாக
குருபூசை மடத்தைக் குணமாய் அமைத்து
நால்வர் குருபூசை நலம்பெற நடாத்தினர்
அன்பர் வேலுப் பிள்ளை அவர்கள்
வாகன சாலையை வளம்பெற அமைத்தனர்
இத்தலம் தனின் எழில்பெறு கீர்த்தியை
இவ்வொரு நாவால் இயம்பவும் போமோ
மாசம் தோறும் வருவதாம் சதுர்த்தியில்
விழாவும் பூசையும் விநயமாய் நடைபெறும்
மார்கழி மாச வளர்பிறைச் சஷ்டியின்
முன்வரு கின்ற மூவேழு நாட்களும்
அடியார் எல்லாம் அன்புறக் கூடி
காப்புக் கட்டிக் கதையினைக் கேட்டு
விரத மனுட்டித்து வரம்பல பெறுவர்
சித்திரை தொடங்கும் சிறந்த காலத்தில்
கந்த புராணப் படிப்பும் தொடங்கி
பக்தர்கள் எல்லாம் பக்தியாய்க் கேட்டு
கந்த முருகனின் கடாட்சமும் பெறுவர்
திருவெம் பாவைச் சீர்பெறு நாட்களில்
அதி காலையிலே அடியவர் கூடி
வாழ்த்தி வணங்கி வழிபட் டேத்தி
வாதவூ ரடிகள் சரிதமும் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் உருகி உவந்து பூசிப்பர்
இறுதி நாளாம் திருவா திரையில்
சிதம்பர நடேசன் திருவருட் பற்றொடு
திருவிழா எடுத்து தீர்த்தமும் ஆடி
ஊஞ்சலும் ஆட்டி உள்ளம் உருகுவர்
வெள்ளிக் கிழமைகள் மாலைகள் தோறும்
கூட்டுப் பிரார்த்தனை குணமாய் நடைபெறும்
ஆடிஅமா வாசைக் கடுத்து வருகின்ற
மகோற்சவ கால மாபெரும் நாட்களில்
தென்ம ராட்சியில் சீர்பெறும் அடியவர்
கூட்டம் எல்லாம் சிறப்புக் கூடிடும்
பாலசுந்தரம் எனும் பண்புறு புரோகிதர்
ஆலய பூசையை அழகுற நடாத்துவர்
கணித பஞ்சாங்க கார்த்தா வான
சிதம்பர நாதக் குருக்கள் அவர்கள்
கொடியேற்று விழாவைக் குணமாய் நடத்துவர்
ஆலய மனேச்சரின் அடியினில் வந்த
ஆறு முகம்எனும் அருந்தவச் செம்மல்
தெய்வானைப் பிள்ளையாம் சீர்பெறு மனையுடன்
அட்ட, மங்கலம் அழகுற வனைந்த
கொடியது தன்னை மங்கல மாக
தெய்வ வாசம் எனும்சீர்பெறு மனையில்
சங்கற்ப மூலம் பூசனை புரிந்து
அலங்கா ரத்துடன் ஆலயம் சேர்ப்பர்
தம்மிற் பின்னுமித் தொண்டு நடைபெற
ஆவணம் மூலம் ஆவன செய்தனர்
பெருமான் மீது பெரும்பக் தியினால்
ஊஞ்சலும் பாடி உதவி உள்ளனர்
அந்த விழாக்களில் அண்ணன் தன்னொடு
தம்பி முருகனும் கூடிவலம் வருவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்மூன்று திருவிழா அடியவர் நடாத்த
பூங்கா வனமும் பொலிவுற நடைபெறும்
மகோற்சவ விஷய உண்மைக் கருத்தாம்
படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல்
அருளல் என்னும் ஐம்பெருந் தொழிலையும்
கொடியேற்றம் திருவிழா தேரொடு தீர்த்தம்
மௌனோற் சவம்எனும் ஐந்தினும் கண்டு
மனம் பூரிக்க வாழ்த்தி வணங்குமின்
தம்ப விம்ப கும்பம் எனும்
மூன்றிலும் இறைவனை முன்னிலைப் படுத்தி
பண்புறப் பார்த்து பராவி வணங்குமின்
பதி பசு பாச முப்பொருள் உண்மையை
கோவில் தன்னிலும் கொடிமரம் தன்னிலும்
ஒக்க நோக்கி ஒருமனப் படுமின்
தேர்த்திரு நாளாம் நன்னாள் அதனில்
அடியவர் எல்லாம் அன்புறக் கூடி
வாழ்த்தி வணங்கி வழிபட் டேத்தி
ஆடிப்பாடி அருள்பெற் றேகுமின்
அடுத்தநல் நாளாம் தீர்த்த பூரணையில்
ஆதியில் அமைத்த அற்புத தீர்த்தத்தில்
தீர்த்தமும் ஆடிச் செவ்வனே வாழ்மின்
தென்ம ராட்சியின் திலகமாய் விளங்கிய
இப்பழம் பதிதான் பண்புடன் சிறக்க
அடியவர் பற்பலர் ஆலயம் திருத்தியும்
வசந்த மண்டபம் வளம்பெற அமைத்தும்
சுப்பிரமணியமாம் தொண்டரின் தலைமையில்
சித்திரப் புதுத்தேர் சீர்பெற இயற்றியும்
திருப்பணி செய்து சிறந்தவாழ் வடைந்தனர்
இன்ன தன்மைகள் எழில்பெறச் சிறந்த
இவ்வா லயம்தான் இன்னமும் சிறக்க
திருப்பணி வேலைகள் சிறப்புடன் ஓங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பொருட்கள் உங்களுக் குதவ
பொருள்கள் உள்ளவர் பொருளுடன் வாரீர்
அன்ன தற்றவர் அன்புடன் வாரீர்
வந்து வந்து வாழ்த்தி வணங்குமின்
சுந்தர ரேசனைச் சூழ்ந்து வணங்குமின்
அழகு முருகனை அன்பாய் வணங்குமின்
அடியார் தம்மையும் அன்புடன் பணிமின்
அன்னை தந்தையரையும் அன்பாய் பேணுமின்
பஞ்சாட் சரஜெபம் பாங்காய்ச் செபிமின்
மூலஸ் தான முடியின் நிழலினை
காலால் மிதித்து கடவா திருமின்
திரைஎன் பதுவே பாச மாகும்
பாசம் பதியை மறைத்து நிற்கையில்
சுற்றிக் கும்பிடும் வழக்கம் விடுமின்
பசுத்தான் பதியை நோக்கி நிற்கையில்
குறுக்கே போகும் வழக்கம் விடுமின்
வீண்கதை தன்னைக் கோவிலிற் பேசி
குளிக்கப் போய்ச் சேற்றை பூசாதிருமின்
குழந்தை குட்டிகளை கோவில் தன்னில்
குழப்படி இன்றி கும்பிடப் பழக்குமின்
புராணப் படிப்பு படிப்பவர்க் கல்ல
அன்புறக் கேட்டு அருளினைப் பெறுமின்
லம்போ தரன்என தன்னைப் பழித்த
சந்திரன் தனக்கு சாபம் இட்டு
அன்னவன் தன்னை அந்தநா ளதனில்
பாரா திருக்க பணித்தவா சரணம்
முன்னொரு நாளில் முழுப்பெயர் சொன்ன
அனந்தன் சாபம் அகற்றினாய் சரணம்
இன்னொரு நாளில் இளையவன் தன்னொடு
மாம்பழக் கனிக்காய் மறுதலித் திட்டு
இறைவனே உலகம் எனச்சா தித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி பெற்ற வீரனே சரணம்
ஒற்றைக் கொம்பே ஓரெழுத் தாணியாய்
பாரதம் எழுதிய பரனே போற்றி
காஞ்சிப் பதியில் கருணைபா  லிக்கும்
விகட சக்கர விநாயகா போற்றி
சிற்றம் பலத்தே சிறந்தினி திருக்கும்
கற்பக விநாயகக் கடவுள் போற்றி
கதிர்கா மத்தி  லிருந்தருள் புரியும்
மாணிக்கப் பிள்ளை மலரடி போற்றி
நம்பி யாண்டார் நம்பி தனக்கு
பாடம் சொன்ன பரனே போற்றி
எடுத்த கருமம் இடையூ றகற்றும்
விக்கின விநாயகத் தேவே போற்றி
பக்தி யுடனே பரவுவார் தமக்கு
பதினாறு பேறும் தருவாய் போற்றி
அன்புடன் நோக்கி அழுவார் தமக்கு
அட்ட ஐஸ்வரியமும் அளிப்பாய் போற்றி
மூவேழ் சுற்றமும் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி
வல்லபை சமேத மணாளா போற்றி
பிரணவப் பொருளாம் பெருந்தகை போற்றி
மூஷிக வாகன முதல்வா போற்றி
தாளி யறுகின் தாராய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
எம்தமை உய்யக் கொள்வாய் போற்றி
சித்தி விநாயகத் தேவே போற்றி
போற்றி போற்றி ஜயஜய போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை வெண்பா

சித்தி விநாயகரைத் தேர்மீ தினிற் கண்டு
பக்தியுடன் பாடுவார் பாவங்கள் - அத்தனையும்
சூரியனைக் கண்ட பனிபோல மாறுமே
காரியத்திற் கண்ணா யிரு.

சித்திபுத்தி நாயகரைத் தேர்மீ தினிற் பார்த்து
பக்தியுடன் பாடிப் பரவுவார் -இத்தலத்தில்
பல்லாண்டு வாழ்வடைந்து பாலகரைப் பெற்றெடுத்து
செல்வார் சிவலோகம் தான்

ஆடிஅமா வாசைக் கடுத்துவரும் பூரணையில்
தேடியே இத் தீர்த்தம் ஆடினால்- நாடிவரும்
துன்பங்கள் எல்லாம் தூர அகன்றுவிடும்
இன்பமே எந்நாளும் தான்

## விருத்தம்

வெள்ளை மாவடி வேழ முகத்தவனே
உள்ளந் தேர்ந்துன தன்பதை வேண்டியே
தெள்ளிதாயுன் கதையினைச் செப்பினன்
வெள்ள மாய்ப்பொழி வாயருள் தன்னையே

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

திருச்சிற்றம்பலம்

**இயற்றியவர்**
**அமரர் சு.சுப்பையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# "தும்பிக்கையானை நம்பிக்கையுடன் தொழு"



பொழில் பொங்கும் மீசாலையம்பதி வீற்றிருக்கும்;
எழிலருள் மிகும் - திருநீலகண்ட மாவடியானின்
திருத்தாளினை நம்பிக்கையுடன் தொழு!

பாரதம் எழுதும் யானை முகத்தான்
பழிவினை தீர்க்கும் நல்வித்தகன்
வேழமுகம் கொண்ட, பானைவயிறனை
நம்பிக்கையுடன் தொழு!

ஊர் பூக்க, மக்கள் உவகையுற,
பார் பூக்க, சைவப் பண்பாடு மிளிர
பச்சிலையை வெண்ணிறமாக்கிய மாவடியான்
திருத்தாளை சீலமுடன் தொழு!

வாழிய மக்கள், வாழிய சுற்றம், வாழிய ஞாலமென:
வையத்து வாழ்வாங்கு வாழவைக்க:
கைத்தலம் கொண்டு, நம்பிக்கையுடன் தொழு!

உலகமே தாய் தந்தையென்று; பெற்றோரை வணங்கி,
மாம்பழம் பெற்ற தும்பிக்கையானை தொழு!

தாய் மாமன் சக்கரவாழ்வானின் சக்கரத்தை விழுங்கி
மாமன் மருமகனை சக்கரத்தை தாவென கெஞ்ச
நடனமாடி சக்கரத்தை வாயினால் கொடுத்த
நடன நாயகன் மாவடியானை, நம்பிக்கையுடன் தொழு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு மூஷிகமதில்,
பெரிய வயிறன் சுற்றும் போது
தும்பிக்கையால், அள்ளி, அள்ளி அருளமுதம்
தரும் வல்லவனை மீசாலையம்பதியில்
வீற்றிருக்கும் மாவடியானை
நம்பிக்கையுடன் தொழு!

**நிறைவு:-**

வேண்டும் வேண்டுவன தரும் வல்லவன்
முப்புரம் எரிசெய்து அச்சிவனுறை இரதம்
அச்சது பொடிசெய்த: பிரணவ சொரூபன்
மீசாலை மாவடியானை வணங்கி:
நல் வாழ்வு, நல்லாசிகளை பெறுவோம்.

செல்வி நந்தாகினி சிதம்பரப்பிள்ளை
"புனித இருதயம்"
கல்வயல், சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மீசாலை திருநீலகண்ட
## வெள்ளைமாவடிப் பிள்ளையார்

# திருவூஞ்சல்



சீரேறு சிந்தனைச்செஞ் சடையிற் சூடும்
சிவனுமையாள் பெற்றெடுத்த செம்ம லாகிப்
பாரேறு மீசாலை நகரி னோர்சார்
பல்வளஞ்சேர் மாவடியாந் தலத்தில் மேவும்
காரேறு கயமுகமெய்ஞ் ஞானக் கன்றாம்
கருணைபொழி சித்திவிநா யகன்தன் மீதே
பேரேறு தமிழிசையால் ஊஞ்சல் பாடப்
பிறப்பறுக்கும் ஐங்கரநீ துணைசெய் வாயே.

மேருமலை பொதியமலை தூண தாக
விளங்கியபொற் கயிலைமலை விட்ட மாக
ஏருலவு நால்வேதம் கயிற தாக
இணங்கியநற் பிரணவமே பலகை யாக
நாரதனே முகன்முனிவர் வடந்தொட் டாட்ட
நானிலத்தோர் வானிலத்தோர் நாடிப் போற்ற
சீருலவு வலவையொரு பங்கில் வைக
சித்திவிநா யகதேவ ஆடீ ரூஞ்சல்.

இடையொடுபிங் கலைவிளங்கும் தூண தாக
இலங்கிடுநற் சுழுமுனையே விட்ட மாக
அடையிலெங்கும் நிறைஅன்பு பலகை யாக
ஆனந்த ஞானமதே கயிற தாக
நடைதகுநற் தருமமுண்மை பொறைமுன் நண்ணி
நற்சுருதி முறைநவின்று வடந்தொட் டாட்ட
திடமுடைய வெள்ளைமா வடியில் மேவும்
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டர்பணிந் துடனாக முனிவர் போற்ற
அருமறைகள் பிரணவம தாய்நின் றாட்ட
தொண்டர்பலர் பணிந்துன்னைப் புகழ்ந்து நாட
துகளில்எண் ணெண்கலைகள் துதித்துப் பாட
எண்திசையில் உலகதனில் யாரும் போற்ற
எழில்மேவு முகில்கள்படி சோலை சூழ்ந்தே
அண்டிநிறை நிதிமிகுமீ சாலை மேவும்
அணிசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்.

கொங்குலவு தருமலரின் மணங்கள் வீச
கோதறுசெஞ் சடைமுடிமேல் கொன்றை வாசம்
தங்குகங்கை முடிஎருக்குச் சடையி லாடச்
சாரணர்கந் தருவர்கின் னரர்கள் பாட
பொங்கொளிசேர் மேலுலகத் தரம்பை மாரும்
பொலிவுதரு மமரரும்மெய்க் கீர்த்தி நாட
சிங்கவரி யாசனம்மா வடியாய்க் கொண்ட
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.

மஞ்சனவே றொருபயனைக் கருதா ராகி
வளர்பொருளை வரையாது கொடுப்போர் நாளும்
மிஞ்சவிடு நீர்சென்று வாழை தெங்கு
மிகுகன்னல் கமுகுடனே வருக்கை சூதம்
விஞ்சிவளர் வயல்களொடு வாவி சூழும்
வெள்ளைமாவ டிஎனுமெய்த் தலத்தில் மேவும்
செஞ்சுடரோன் எனஒளிரும் மேனி யானே
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.

மங்குல்பொழி ஆற்றினது வழியால் வந்து
மடைஉடைத்து வளம்நிறைந்த கழனி பாய
தங்கியநற் செந்நெலுடன் கன்னல் ஓங்கித்
தகமைபெறு கதிரீன்று விளைந்து சாய
அங்கணுறு கழனிபுடை சூழ வைகும்
அழகுசெறி மாவடிநற் தலத்தில் மேவும்
திங்களணி சடைமுடியான் அருளால் வந்த
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டகநீ ழலிற்சங்கு முத்தம் ஈன
முழுமதியி னொளியெனச்செங் குமுதம் விள்ள
கொண்டநற வங்குதிக்கும் பதைத்து வாளை
குதித்தெழுந்து கமுகமரக் குலையிற் பாய
உண்டைசெறி துவர்க்காய்கள் சிதறி வீழும்
உயர்வளஞ்சேர் மீசாலை தன்னில் மேவும்
தொண்டர்தொழு வெள்ளைமா வடியிற் சேரும்
சுத்தசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்.

மத்தகய முகன்புரியும் இடுக்கண் எல்லாம்
வானவரும் பொறுத்தலரி தாகி வாடி
பக்தியுடன் கயிலைமலை சென்று நாதன்
பதம்பணிந்து தமதுதுயர் பலவும் கூற
அத்திமுகப் பிள்ளையுனை ஏவ வந்து
அமரருக்காய்க் கயமுகனைப் பொருது கொன்று
சித்தியொடு மீசாலைமா வடியில் மேவும்
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.

மும்முறையாத் தீக்கைபெற்ற மறையோர் நாளும்
மொழியுமறை முறைநெறியால் முன்னே வந்து
கைம்முறையால் விதிமுறையால் ஈரெட் டென்னும்
கருதுமுப சாரமுடன் கசிந்து செய்ய
இம்மையினில் நல்வாழ்வு நல்கி என்றும்
இருமையிலும் கதியுதவ இனிது மேவும்
செம்மைதரும் அடியார்கள் செறிமீ சாலைச்
சித்திவிநா யகதேவே ஆடீ ரூஞ்சல்.

சீர்மேவு சிவசமயம் என்றும் வாழி
திகழ்மறைநூல் ஆகமங்கள் புராணம் வாழி
பார்மேவும் ஆவினங்கள் மிகவும் வாழி
படிந்துமழை பொழிந்திடுமே கங்கள் வாழி
ஏர்மேவும் வேளாளர் குலமும் வாழி
எழில்மறையோர் அரசருடன் வணிகர் வாழி
ஊர்மேவும் மீசாலை உள்ளோர் வாழி
உயர்சித்தி விநாயகனே வாழி வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

திருமேவிய கரிமாமுகத் தேவே -- எச்ச ரீக்கை
தேனார்மொழி மானாமுமை செல்வா -- எச்ச ரீக்கை
கருமேவிய பாசாடவி களைவாய் -- எச்ச ரீக்கை
காங்கேயனுக் கண்ணா வருட்கண்ணா -- எச்சரீக்கை

காசார்முலை வலவைக்கொரு காந்தா -- எச்ச ரீக்கை
கழுநீர்மலர் நிகராகிய காலா -- எச்ச ரீக்கை
பாசாங்குச தரனேஉயர் பரனே -- எச்ச ரீக்கை
பாகீரதி தரவேவரு பாலா -- எச்ச ரீக்கை

மண்ணாதிய வெல்லாந்தரு வள்ளா -- எச்ச ரீக்கை
வானாகிய வாகேறிய பாதா -- எச்ச ரீக்கை
எண்ணார்தொழிற் கிடையூறுசெய் யிறைவா -- எச்ச ரீக்கை
இலங்கீசனின் சேயாகிய ஈசா -- எச்ச ரீக்கை

தீராவிட ரடியாரிடர் தீர்ப்பாய் -- எச்ச ரீக்கை
தினையார்புன மீதேமுனஞ் சென்றாய் -- எச்ச ரீக்கை
ஆராதனை செய்வோர்க்கரு ளாளா -- எச்ச ரீக்கை
அருமாவடி நீழலமர் ஆதி -- எச்ச ரீக்கை

## பராக்கு

அத்திமுகம் கொண்டவ ருளாளா -- பராக்கு
அடியார்துயர் தீர்த்தருளும் ஆதீ -- பராக்கு
சித்தியொடு புத்திபுணர் தேவே -- பராக்கு
தேவிஉமை பெற்றருளும் சிறுவா -- பராக்கு

தத்துவமெ லாங்கடந்த சாமீ -- பராக்கு
சகலகண நிரைகளுக்கும் தலைவா -- பராக்கு
சகடமுறு மச்சறுத்த சாமீ -- பராக்கு
சண்முகற்கு முன்னிளவ லானாய் -- பராக்கு

வேண்டுபவர்க் கின்பசுகந் தருவாய் -- பராக்கு
விகடகரி மாமுகனை வென்றாய் -- பராக்கு
விக்கினங்கள் நீக்கியருள் விரகா -- பராக்கு
வெள்ளைமா வடிவதியும் வீரா -- பராக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

உலகுபுகழ் ஐங்கரனே லாலிசுப லாலி
ஓங்கார வடிவினனே லாலிசுப லாலி
விலகவினை செய்பவனே லாலிசுப லாலி
வீதிசந்தி வீற்றவனே லாலிசுப லாலி

இலகுமஞ்சள் கோமயத்து லாலிசுப லாலி
இருந்தருளும் விநாயகனே லாலிசுப லாலி
திலகமுடன் நீறணிந்தே லாலிசுப லாலி
தினம்வணங்க அருள்தருவாய் லாலிசுப லாலி

தங்குமுயர் மீசாலை லாலிசுப லாலி
தானதிரு நீலகண்ட லாலிசுப லாலி
இலங்குவெள்ளை மாவடிக்கண் லாலிசுப லாலி
எழிற்பிள்ளை யாரேஓம் லாலிசுப லாலி

மங்கலங்கள் ஈங்களிப்பாய் லாலிசுப லாலி
மகாதேவன் புத்திரனே லாலிசுப லாலி
பொங்குபுகழ் அருள்தருவாய் லாலிசுப லாலி
புகழத்தி முகத்தினனே லாலிசுப லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மங்களம் ஜெய மங்களம்

மங்களம் சுப மங்களம்

மாவடிவி நாய கர்க்கு ஜெய மங்களம்
மால்மருக னான வர்க்கு சுப மங்களம்
தேவுபணி ஐங்க ரர்க்கு ஜெய மங்களம்
சித்திபுத்தி நாய கர்க்கு சுப மங்களம்

சிவகுமாரன் மூத்த வர்க்கு ஜெய மங்களம்
சிறப்பருளும் நாத னார்க்கு சுப மங்களம்
பவமறுக்க வந்த வர்க்கு ஜெய மங்களம்
பார்வதியாள் புத்தி ரர்க்கு சுப மங்களம்

ஆறுதலைத் தமைய னார்க்கு ஜெய மங்களம்
ஆறுதலைத் தருமி வர்க்கு சுப மங்களம்
ஏறுபுகழ் விநாய கர்க்கு ஜெய மங்களம்
இருமைநலம் தருப வர்க்கு சுப மங்களம்

மங்களம் ஜெய மங்களம்!
மங்களம் சுப மங்களம்!!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் பாவனையிலுள்ள மின்சார மங்கலவாத்தியமும்,
மற்றும் பாவனையிலுள்ள சில பொருட்களும்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டேஸ்வர மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடயதானம் பங்களிப்புச் செய்தோரிற் சிலர்...


பேராசிரியர்
செ.கிருஷ்ணராஜா


சைவப்புலவர்
வி.கே.சிற்றம்பலம்


திருமதி சுகந்தினி
சிறுமுரளிதரன்


செல்வி சந்திரராஜினி
கணபதிப்பிள்ளை


திரு.க.தர்மசேகரம்


பேராசிரியர்
மா.சின்னத்தம்பி


பேராசிரியர்
சி.க.சிற்றம்பலம்


திருமதி
சோ.வளர்மதி


பேராசிரியர்
சபா.ஜெயராசா


திரு.ப.கணேசலிங்கம்


சிவஸ்ரீ
கி.சோமசுந்தரக்குருக்கள்


திரு.சி.கா.கமலநாதன்


திரு.கு.தியாகராஜா
குருக்கள் (நீர்வைமணி)


திரு.அ.கயிலாய-
பிள்ளை


செல்வி சி.நந்தாஹினி


சைவப்புலவர்
சித்தாந்த பண்டிதர்
திரு.மு.திருஞானசம்பந்த-
பிள்ளை


திரு.ஈ.குமரன்


பிரம்மஸ்ரீ
பரமானந்த சர்மா


செல்வி. அம்பாலிகா
தம்பாப்பிள்ளை


சிவத்தொண்டன்
நா.முருகையா


திரு.சு.வீரசுதாகரன்

## கணினி உதவி


திரு.பூ.கோபிகிருஷ்ணா


திரு.த.பிரபாகரன்


செல்வன்
தி.கலாரூபன்

## ஒப்புநோக்கல் உதவி


செல்வன்
ப.தர்சன்

## புகைப்படக் கலைஞர்


திரு.வே.தர்சகுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

**"மாவடியான் திரு"** மலராவதற்குக் கரம் கொடுத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எல்லாம்வல்ல எம்பெருமான் திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையாரின் நிகரற்ற அருளாசி கிட்டப் பிரார்த்திக்கின்றோம். இந்நூல் உருவாவதற்கு வேராக இருந்து தகவல்கள் பல வழங்கி வழிகாட்டி உதவிய ஆலய முகாமையாளர் திரு. சி. இராமலிங்கம் அவர்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆசியுரைகள், வாழ்த்துச்செய்திகள் தந்துதவிய குருமார்கள், சமயப் பெரியோர்கள், அறிஞர்கள், அன்பர்கள் யாவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம். மேலும் கவிப்பாக்கள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் ஏனைய ஆக்கங்கள் அனைத்தையும் வழங்கி இந்நூல் செழுமையுடன் வெளிவர உதவிய அனைத்துப் பேரறிவாளர்களுக்கும் எங்கள் நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

ஆலய மூல மூர்த்தியின் தொன்மையை ஆரம்பகட்ட ஆய்விற்கு உட்படுத்தியும், நூலுக்குரிய வழிகாட்டல்களை வழங்கியும் ஒத்துழைப்பு நல்கிய யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா அவர்களுக்கும், நூல் கட்டமைப்புத் தொடர்பான கருத்துப் பகிர்வு களையும், வழிகாட்டல்களையும் வழங்கி உதவிய இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர், பா. கணேசலிங்கம் அவர்களுக்கும் எமது மேலான நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இந்நூல் உருவாக்க முன்னெடுப்புக்களின்போது கொழும்பில் இருந்து உதவிகள், ஒத்தாசைகள் வழங்கிய ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் திரு. ஆறுமுகம் வேலாயுதபிள்ளை அவர்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தக அன்பர்களுக்கும், தன்னார்வ நோக்கில் பிரத்தியேகமாக நிதியுதவி வழங்கிய அடியார்களுக்கும் எமது நன்றிகள். கூடவே கணிணி தட்டச்சு செய்துதவிய திரு. இ. தனஞ்சயன், திரு .ச. சதானந்தன் ஆகியோருக்கும், ஏனைய கணிணி வழி உதவிகள் புரிந்த திரு. பூ. கோபிகிருஷ்ணா, திரு. த. பிரபாகரன், செல்வன் தி. கலாரூபன் ஆகியோருக்கும், ஆக்கங்களை ஒப்பு நோக்கி உதவிய திரு. சி. சுப்பிரமணியம், செல்வன் ப.தர்சன் அவர்களுக்கும் எமது மேலான நன்றிகள் உரித்தாகட்டும்.

**"மாவடியான் திரு"** மலருக்கான படப்பிடிப்பு வேலைகள் செம்மையுற மேற்கொண்டு உதவிய மீசாலை "ஸ்ரார் டிஜிற்றல் விஷன்" உரிமையாளர் திரு. வே. தர்சகுகன் அவர்கட்கும் இம்மலரைச் சிறப்புற வடிவமைத்து அச்சுப்பதித்துத் தந்த யாழ்ப்பாணம் "ஹரிஹணன் பிறிண்டேர்ஸ் (தனியார்) நிறுவன" த்தினருக்கும் எமது நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

மேலும் **"மாவடியான் திரு"** மலராவதற்கான பணிகளில் கரம்கோர்த்து துணைநின்ற அனைத்து மாவடியான் அடியார்களுக்கும் எமது நன்றிகள் என்றும் உரித்தானதாகும்.

நன்றி!

**தர்மகர்த்தா சபையினர்**
**மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப்**
**பிள்ளையார் கோவில்.**

**EDITOR:**

**Mr. KANAGALINGAM SOMASEGARAM, LCGI (UK)**

**Personal:**
Solai Amman Kovilady,
Chavakachcheri North,
Meesalai.
Sri Lanka.

**Office:**
Staff Technical Officer(Mech),
Department of Physics,
University of Jaffna,
Sri Lanka.



*e-mail: somaset@yahoo.com*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 955041400-0
9 789550 414000

Phone : 0094 21 321 8037
e-mail : mtvpillaiyar@gmail.com
web : www.mavadipillaiyar.org

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org